இந்திரா சௌந்தர்ராஜன்
ஐந்தும் மூன்றும் ஒன்பது

ஐந்தும் மூன்றும் ஒன்பது

இந்திரா சௌந்தர்ராஜன்

1

உலகில் மொத்தம் ஏழு அதிசயங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். நிச்சயம் நிறைய அதிசயங்கள் இருக்கும். ஏழுதான் என்று அதிசயங்களை ஒற்றை இலக்கத்துக்குள் யார் அடக்கினார்களோ?

என் வரையில் மனித சமூகத்தின் கடவுள் நம்பிக்கையே கூட ஒரு அதிசயம்தான்!பார்க்கின்ற, கேட்கின்ற, பாதிக்கின்ற விஷயங்களால்தான் மனித மனம் வடிவம் கொள்கிறது. இந்த மூன்றாலும் ஒருவரும் இதுவரை கடவுளை நேரில் பார்த்ததில்லை.

அப்படியே ஒருவேளை கடவுள் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அவர் மனித இனத்தவர் வடிவில் இருப்பாரா என்பதே என் வரையில் கேள்விக்குறிதான்! மனிதன் அறிவாளியாக இருக்கலாம். ஆனாலும் உடலையும் உயிரையும் வென்று காலத்தால் அழிய முடியாதபடி வாழ இயலாதவனே அவன்! முயன்றால் மனித இனத்தை முற்றாக அழித்து விடவும் முடியும். எனவே, இப்படி ஒரு இனத்தவராக கடவுள் இருக்க வாய்ப்பில்லை என்பதே என் நம்பிக்கை.

இதுபோல் கடவுள் குறித்து கேட்க என்னிடம் நிறைய கேள்விகள் உள்ளன. ஆனாலும் உலகில் பெரும்பாலானோர் கடவுள் நம்பிக்கையோடு உள்ளனர். இது ஒரு அதிசயம்தானே?

-பேராசிரியர் கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அன்றைய சூரிய உதயம் மிகவே ரம்யமாக இருந்தது. காலை நேர நடைப்பயிற்சியில் அதை உணர்வதே ஒரு சுகமான அனுபவம்தான்! சீரான வேகத்தோடு நடந்தபடி இருந்தார் கணபதி சுப்ரமணியன்.

கூடவே அவர் பேத்தி ப்ரியதர்ஷினி. க.சு. எழுபது வயதைத் தாண்டிவிட்டார். இளம் வயதில் அவரைப் பார்ப்பவர்கள் ஹாலிவுட் நடிகர் சீன் கானரி மாதிரியே இருப்பதாகச் சொல்வார்கள். இதனால் அவருக்கு 'ஜேம்ஸ் பாண்ட்' என்கிற செல்லப் பெயரும் உண்டு.இன்று சீன் கானரிக்கு வழுக்கை விழுந்துவிட்டது.

ஆனால் கணபதி சுப்ரமணியனுக்கு ஒரு முடிகூட கொட்டவில்லை. ‘டை’ அடித்துக்கொண்டால் சள்ளென்று பத்து வயது குறைந்து போகும். ஆனால் செயற்கை முறை எதிலும் நாட்டமில்லாததால் அப்படியே விட்டு விட்டதில், தலைமுடியில் ஒரு நல்ல நாரை வெளுப்பு! முடியைப் பெரிதாக வாரிக் கொள்ளவும் அவருக்குப் பிடிக்காது. கோதிவிட்டுக்கொள்வது அவரது மேனரிசங்களில் ஒன்று.

சமயங்களில் பேத்தி ப்ரியதர்ஷினி எனும் ப்ரியா, மெனக்கெட்டு வாரி விடுவாள். கூடவே பவுடர் போட்டு ஸ்டிக்கர் பொட்டெல்லாம் வைத்து விடுவாள். அதை எக்காரணம் கொண்டும் கலைத்து விட்டுக்கொள்ள மாட்டார். அப்படியே தான் அட்டெண்ட் செய்யும் கல்லூரி விழாக்களுக்கும் ஆர்க்கியாலஜி டிபார்ட்மென்ட்டின் பிரத்யேக அழைப்புகளுக்கும் போய் வருவார். எல்லோரிடமும் பெருமையாக ‘‘என் பேத்தியின் மேக்கப்’’ என்று ஒரு லீட் கொடுத்து விடுவார்.

ப்ரியாவும் தாத்தா தனக்குத் தரும் இந்த லிபர்ட்டியை எண்ணி வியந்து போவாள். ‘லிபர்ட்டி’ என்கிற புழக்கத்தில் உள்ள ஆங்கிலச் சொல்லை ‘சுதந்திரம்’ என்று தமிழ்ப்படுத்தலாம்தான். ஆனால், ப்ரியா அதையும் மீறிய ஒன்றாக நினைப்பதால், வேறு சரியான வார்த்தை அகப்படவில்லை. நடைப்பயிற்சிக்குக் கூட தாத்தாவும் பேத்தியும் ஒன்றாகத்தான் போவார்கள். இதோ இன்றும்...

நடக்கும்போது பேசக்கூடாது என்பது அவர்கள் குடும்ப டாக்டரின் கண்டிப்பான உத்தரவு. இந்த மாதிரி உத்தரவுகளை மீறத்தானே நாமும் 47ல் சுதந்திரம் வாங்கினோம்!

‘‘தாத்ஸ்... இன்னிக்கு எத்தன ரவுண்ட்ஸ்?’’

‘‘வழக்கம் போல மூணு ரவுண்ட். அஞ்சு கிலோ மீட்டர்தான்..!’’

‘‘ரெண்டு ரவுண்டு போறும் தாத்ஸ்...’’

‘‘ஏன்?’’

‘‘நடந்த இடத்துலேயே திரும்பத் திரும்ப நடக்கறது பெரிய போர் தாத்தா...’’

‘‘அப்ப மாறிப்போம்...’’

‘‘லேண்ட்ஸ்கேப் எல்லா தெருவிலும் ஒண்ணு மாதிரிதான் இருக்கு. நான் ரொம்பவே டிஸ்டர்ப் ஆறேன் தாத்தா!’’

‘‘அப்ப நம்ம பங்களாவுல ஒரு ஜிம் ஃபார்ம் பண்ணி, அதுல ஒரு வாக்கர் ரன்னரை பிரதிஷ்டை செஞ்சு அதுமேல மூவாகாம நடப்போமா?’’

‘‘நடக்கறதே மூவ்மென்ட்டுக்காகத்தான்... இந்த மூவ் இல்லாத நடை, மனிதனோட குரூரக் கண்டுபிடிப்பு தாத்தா!’’

‘‘ப்ரியா! நீ ரொம்பவே கரெக்டா யோசிக்கிறே. இப்படி யோசிக்க எனக்கு ஐம்பது வயசு தேவைப்பட்டது...’’

‘‘இது பதிலா? பாராட்டா? விமர்சனமா?’’

‘‘மூணும்தான்...’’

‘‘எனக்கு பதில் வேணும்...’’

‘‘உனக்கு நம்ம சென்னை தெருக்கள் பிடிக்கலையா?’’

‘‘உங்களுக்குப் பிடிச்சிருக்கா?’’

‘‘பிடிச்சிருக்கு, பிடிக்கல... இப்ப இந்த டாபிக் எதுக்கு?’’

‘‘கோபம் வருது தாத்தா... பாருங்க, அந்த காலி சிகரெட் பாக்கெட் அதே இடத்துல நாலு நாளா கிடக்குது! கார்ப்பரேஷன்காரங்க வேலையே பாக்கலன்னு நல்லா தெரியுது. அப்புறம் தெருவுல பாதியை காரை நிறுத்தி ஆக்கிரமிச்சுட்டாங்க. அதுபோக, எவ்வளவு மேடு, பள்ளம்... ரோடு போட்டு எனக்குத் தெரிஞ்சு ஏழு எட்டு வருஷம் ஆகுது. யாருமே கேட்க மாட்டாங்களா?’’

- ப்ரியா எதனால் நடைப்பயிற்சி பிடிக்காத மாதிரி பேசுகிறாள் என்பது கணபதி சுப்ரமணியனுக்குப் புரிந்தது.

‘‘தினமும் டி.வில எவ்வளவு மேல்நாடுகளைப் பாக்கறோம்? அதுல ரோடுகளையும் பாக்கறோம். நம்ப ரோடுகளும் இப்படி ஆகணும்னு ஏன் யாரும் நினைக்கறதில்லை? அவங்களுக்காவது ஏசு... இல்ல, அல்லான்னு ஒரே ஒரு சாமிதான். நமக்கு இங்க எத்தனை சாமிங்க! அப்ப கடவுள் அருளும் கருணையும் இங்க அதிகமா இருக்குன்னுதானே அர்த்தம். அப்படின்னா நாம அவங்களவிட எல்லா விதத்துலயும் மேல இருக்க வேண்டாமா?’’

- ப்ரியா தன் சமூக அக்கறையை கடவுள் வரை கொண்டு வந்து விட்டாள். அதுதான் சாக்கென்று கணபதி சுப்ரமணியனும் கப்பென்று ஒரு பிடி பிடித்தார். எல்லாம் நடந்தபடியேதான்... அருகில் பிளாட்பாரக் கோயில் ஒன்று!

‘‘அம்மாடி... இதுல இருந்தே கடவுள் பொய்ங்கறது உனக்குத் தெரியலியா? இன்ஃபேக்ட், அவரே ஆக்கிரமிக்கப்பட்ட இடத்துலதானே உக்கார்ந்துருக்கார். பாரு, இந்தப் பாயும்புலி அம்மன் கோயிலே அதுக்கு சாட்சி...’’

‘‘பாயும்புலி அம்மன் இல்ல... வேம்புலி அம்மன்!’’

‘‘ஏதோ ஒரு அம்மன்... இவ நிஜமா இருந்தா இந்த ஆக்கிரமிப்புக் கோயிலை ஏத்துப்பாளா? தனக்கொரு கோயில் கட்டி உண்டியலையும் வச்சவனை தன் புலியை ஏவி விட்டே கடிச்சுக் குதறியிருப்பா இல்ல?’’

‘‘நீ சொல்றதும் சரியாதான் இருக்கு... ஆனா என் அம்மா, அதாவது உன் மருமகள் எப்படி இதை எல்லாம் கொஞ்சம் கூட சிந்திக்காம பக்திப்பாட்டா பாடிக்கிட்டே போறா?’’

‘‘கரெக்ட்... இது நல்ல கேள்வி!’’

‘‘பை த பை ப்ரியா... உன் அம்மா பாட்டெல்லாம் எனக்குப் பிடிக்கவே பிடிக்காதுன்னு உனக்கு நல்லா தெரியும். பெத்தவளாச்சேன்னுதான் நீயும் எதுவும் சொல்லாம இருக்கேன்னும் எனக்குத் தெரியும். உன் அப்பன் ஒரு உலகம் சுத்தி... அவனுக்கு சமயத்துல அவன் பேரே மறந்து போயிடுது. அந்த அளவு அவன் கம்பெனி அவனை ஒரு கோட் - சூட் போட்ட அடிமையா ஆக்கி வச்சிருக்கு. அப்படி இருக்கற அவனுக்கு, உன் அம்மா என்ன செய்யறாங்கறதே தெரியாது. ஆனாலும் உன் அம்மா பாடின பாடல்கள் கொண்ட சி.டி நல்லா போகுதாம்! இதை எங்க போய்ச் சொல்ல? எந்த சுவத்துல போய் முட்டிக்க..?’’

- கணபதி சுப்ரமணியன் முகத்தைச் சுறுக்கிக்கொண்டு கேட்ட அதே வேளை, ஒருவர் எஃப்.எம் ரேடியோவை தன் செல்போனில் கேட்டபடி வாக்கிங்கில் அவர்களைக் கடந்து போனார்.

எஃப்.எம்.மில் ப்ரியாவின் அம்மா பத்மாசினியின் பக்திப் பாட்டுதான் ஒலித்துக் கொண்டிருந்தது.‘‘கேட்டியா! சொல்லி வாய் மூடல... ஒருத்தன் கேட்டுக்கிட்டு போறான்!’’

‘‘ஆமாம் தாத்தா... என் கோபம் அதிகரிக்கற மாதிரியே எல்லாம் நடக்குது. ஏன் தாத்தா, இதையெல்லாம் நம்மால மாத்தவே முடியாதா?’’

‘‘ஏன் முடியாது? மாறிக்கிட்டே இருக்கறதுதானேம்மா வாழ்க்கை... வாழ்க்கைன்னா என்ன? மூவ்மென்ட்டுங்கற சலனம்தானே?’’

‘‘அப்ப பத்திரிகைல வச்சு கிழிகிழினு கிழிப்போமா?’’

‘‘கிழிக்கறவங்க கிழிச்சுக்கிட்டுதான் இருக்காங்க. ஆனா, எல்லாமே கடல் மழையா பயனில்லாமலே இல்ல போய்க்கிட்டு இருக்கு!’’

‘‘அப்ப என்னதான் தீர்வு?’’

‘‘சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே... நீ இப்ப ‘ட்ரிபிள் ஈ’ முடிக்கப் போற. அடுத்து எம்.எஸ் பண்ண யு.எஸ் கிளம்பிடு. அப்படியே அங்கேயே செட்டில் ஆயிடு. இந்த ஊர் உனக்கு

வேண்டாம். தாய்நாடு, தகப்பன் நாடுங்கற சென்டிமென்ட் எல்லாம் உன்கிட்டயும் நல்லவேளையா இல்லை!''

''அங்கேயும் நிறைய குளறுபடிகள் இருக்கு தாத்தா!''

''தெரியும்மா... மனுஷன் எங்கெல்லாம் இருக்கானோ, அங்கெல்லாம் குளறுபடி இருக்கத்தான் செய்யும். ஆனா, ஒரு மார்னிங் வாக்கிங் இங்க நம்மை இவ்வளவு உறுத்தற மாதிரியெல்லாம் அங்க கிடையாது.

எப்ப போகும்னே தெரியாத எலக்ட்ரிக் பவர், நாலு நாளைக்கும் அஞ்சு நாளைக்கும் ஒரு தடவை வர்ற கன்டாமினேட்டட் கார்ப்பரேஷன் வாட்டர், நாய்களும் மாடுகளும் திரியற தெரு, இருபத்தி நாலு மணி நேரமும் இரைச்சலா சினிமா பாட்டு ஒலிக்கற டீக்கடை, மீட்டர் போட முறைக்கற ஆட்டோ, போஸ்டர் ஒட்டறதுக்குன்னே கட்டின சுவர்னு கல்தோன்றி மண்தோன்றி அதுக்கும் முன்னால தோன்றிய மூத்த குடிகள் வாழற விசித்திர - வினோத நாடும்மா இது. என் மாதிரி கிழடுகளுக்குதான் விமோசனமில்ல... உனக்கென்ன? பேசாம பறந்துடு!''

- தாத்தா சொல்லி முடிக்கவும், 'பிருந்தாவன்' என்கிற அவர்களது பங்களா வந்திடவும் சரியாக இருந்தது.இருவரும் உள்ளே நுழையும்போது ப்ரியாவின் அப்பா அனந்த கிருஷ்ணன் ஒரு ப்ரீஃப்கேஸ், பருத்த ரோலிங் சூட்கேஸ் சகிதம் அவருக்கென அவரது நிறுவனம் அளித்திருந்த காரில் ஏறிக்கொண்டிருந்தார்.இருவரையும் கார் கதவுக்கு வெளியில் நின்று ஏற இறங்க பார்த்தார்.

''குட்மார்னிங்'' என்றாள் ப்ரியா.

‘‘லக்கேஜ் பெருசா இருக்கு... அப்ராடா?’’ - கேட்டார் கணபதி சுப்ரமணியன்.

‘‘ஆமாம்பா... சைனா போறேன்!’’

‘‘அடிக்கடி போற போல இருக்கு...’’

‘‘அங்க ஒரு பிராஞ்ச் இருக்கே..?’’

‘‘நீ ஒரு கேபிடலிஸ்ட் புரொடக்டர். சீனா புடிச்சிருக்கா?’’

‘‘ரொம்ம்ம்ப... இங்க விட எங்களுக்கு அங்கதான்பா ஹோப் ரொம்ப இருக்கு...’’

‘‘ஓ அவங்களும் கெட ஆரம்பிச்சிட்டாங்களா?’’

‘‘அப்பா...’’

‘‘சும்மா சொன்னேன்டா... ஹேப்பி ஜர்னி...’’ - கை குலுக்கினார். அவர் காரில் ஏறிட, அது மென்மையான ஓசையோடு நகரத் தொடங்கியது. ப்ரியா அவள் அறை நோக்கிச் செல்ல, கணபதி சுப்ரமணியன் மாடியில் உள்ள அவர் அறை நோக்கி நடக்க முற்பட்டபோது மெயின் கேட்டில் வாட்ச்மேன்,

‘‘அதெல்லாம் இப்ப யாரையும் பாக்க முடியாதுங்கறேன்’’ என்றான் சத்தமாக.

திரும்பினார். வாசலில் ஒரு இளைஞனும் இளைஞியும் தெரிந்தனர்.

‘‘யார் அது தங்கவேலு?’’

‘‘ஐயா, யாரோ ரெண்டு காலேஜ் ஸ்டூடன்ட்டுங்கய்யா...’’

‘‘அவங்களை உள்ள விடு!’’

அவர்கள் உள்ளே வந்தனர். இளைஞன் காபி ஆற்றுவது போல வணக்கம் சொன்னான். இளைஞி சிரிக்க மட்டும் செய்தாள்.

‘‘வாட் டு யு வான்ட்?’’

‘‘நீங்கதான் ஆய்வாளர் கணபதி சுப்ரமணியனா?’’

‘‘எக்ஸாக்ட்லி’’

‘‘நீங்கதான் சார் வேணும்...’’

‘‘என்ன விஷயம்?’’

‘‘சந்திரன்ல இருந்து எடுத்து வந்த கல் ஒண்ணு உங்ககிட்ட இருக்காமே?’’

‘‘அதுக்கென்ன?’’

‘‘அதைப் பார்த்து அதோட போட்டோ எடுத்துக்கணும்.’’

‘‘பார்றா... அது என்ன அஜித்தா... ரஜினியா... போட்டோ எடுத்துக்க?’’

‘‘அவங்க கூடவும் எடுத்துக்க ஆசைதான். இப்ப இந்த போட்டோவை காலேஜ் சாவனிர்ல போடலாம்னு...’’

‘‘வெரி சாரி! நான் பத்திரிகைக்காரங்க கேட்டப்பவே போட்டோ எடுக்க அனுமதிக்கல. உங்களுக்கும் அதுதான் பதில்!’’

அவர்கள் பேந்தப் பேந்த விழித்தனர்.

‘‘வெரி சாரி... புறப்படுங்க’’ - என்றவராக உள்ளே போக முயன்றவரிடம் வாட்ச்மேன் தங்கவேலு,

‘‘ஐயா! இந்தக் கவரை ஒருத்தர் உங்ககிட்ட கொடுக்கச் சொன்னார்’’ - என்று கொடுத்தான்.

ஆவலாக வாங்கிக்கொண்டு அவரது அறை நோக்கி மாடிப்படி ஏறினார். எதிர்ப்பட்ட வேலைக்காரி முத்தழகுவிடம் ‘க்ரீன் டீ’ என்று மட்டும் சொன்னார். அறையின் சாவி அவர் பாக்கெட்டில் இருக்க, எடுத்துத் திறந்தார். திறந்த மாத்திரத்தில் விளக்குகள் உள்ளே எரிந்தன.

பெரிய்ய்ய அறை! உள்ளே வினோதமான விஷயங்கள் நிறையவே! அறை நடுவே பெரிய மேஜை. அதன் மேல் அந்த நாளைய முதுமக்கள் தாழியில் இருந்து பலதரப்பட்ட மிருகங்களின் எலும்புக்கூடு வரை. ஒரு மனித மண்டை ஓடும் இருந்தது. கூண்டு ஒன்றில் மலேசிய வண்ணச் சிறகுள்ள பறவைகள் சில.அவர் கதவைத் திறக்கவும் அவை படபடத்தன!

அவர் எதையும் கவனிக்காமல் கவரைப் பிரித்தார். அதில் ஒரு நாளிதழ் அளவுக்கான தாள் ஒன்று, எட்டாக மடித்து வைக்கப்பட்டிருந்தது. மிகவும் பழைய தாள்! நிதானமாக அதை விரித்தார். அதில் ஒரு வினோத படம். மேலே 'காலப்பலகணி' என்கிற ஒற்றை வார்த்தை!

2

பள்ளியில் படிக்கும் காலத்திலேயே சரித்திரப் பாடத்தின் மீது எனக்கு ஒரு அலாதி ஈடுபாடு இருந்தது. நான் படித்து வளர்ந்தது திண்டுக்கல்லில். எங்கள் ஊருக்கே ஒரு பெரும் அடையாளம் ஊரின் நடுவில் அமைந்திருக்கும் மலையும் அதன் மேல் உள்ள கோயிலும் கோட்டையும்தான்! பள்ளி விடுமுறை என்றாலே அந்த மலை மேல் ஏறிவிடுவோம்.

மேலே கைதிகளை அடைக்கும் ஒரு சிறைக் கொட்டடி உண்டு. அதனுள் படுக்க முடியும், உட்கார முடியும், எழுந்து நிற்க முடியாது. நான்கடி உயரம்தான் இருக்கும். இருட்டு வேறு... சிறைவாசிகள் நிற்கவே முடியாமல் வருடக்கணக்கில் அதனுள் எப்படி இருந்திருப்பார்கள் என்று கற்பனை செய்து பார்ப்பேன். என் மனம் மிகவே கனத்து விடும்.

கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரை அங்கே சில காலம் இருந்ததாகக் கூறுவார்கள். நான் என்னை ஊமைத்துரையாக பாவித்துக்கொண்டு நண்பர்களுடன் நடிப்பேன். அவர்களும் கைதியாகவும், சிறைக் கொட்டார அதிகாரியாகவும் நடிப்பார்கள். தென்னை ஓலைதான் சவுக்கு! அதனால் அடிக்கும்போது வலிப்பதுபோல் நடிப்பதில் போட்டி போடுவோம்.

மேலேயே பாழடைந்த அபிராமி அம்மன் கோயில் இருக்கிறது. அம்மன் நின்ற இடத்தில் நான் போய் நிற்பேன். சாமி போல கையை வைத்துக்கொள்வேன். நண்பர்கள் என்னை பய பக்தியோடு கும்பிடுவார்கள். நானும் சீரியஸாக அவர்களுக்கு அருள் தருவேன். அதெல்லாம் மறக்க முடியாத நாட்கள். மேலே மாலை ஆறு மணிக்கு மேல் இருக்க விட மாட்டார்கள். கைலி கட்டிய ஒருவன் வந்து எங்களைத் துரத்தி விடுவான். இரவானால் அந்த மலை மேல் வைத்து தூக்கில் போட்டவர்களின் ஆவி உலாவத் தொடங்கி விடுமாம்!'

– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

'**கா**லப் பலகணி' என்கிற அந்த வார்த்தைக்குக் கீழே பூமி உருண்டை போல ஒரு பெரிய வட்டம்; அந்த வட்டத்துக்குள் குறுக்கும் நெடுக்குமாய் கோடுகள். வட்டத்துக்கு வெளியே 1947, 1968 என்று வருடத்தினைக் குறிக்கும் எண்கள். கோட்டின் தொடக்கத்தில் திருவள்ளுவராண்டு எண்களும், கோட்டின் முடிவில் ஆங்கில வருட எண்களும் இருக்க, ஊடாக உள்ள கோட்டின் மேல் நிறையவே குறிப்புகள். 998ம் வருடக் கோட்டின் மேல் 'சோழன் ராசராசன் வம்சாவளியில் ஆத்மஹத்தி' என்கிற வார்த்தைகள். 1034ம் வருடக் கோட்டின் மேல் 'கடல்கோள் - பெரும்பாழ்' என்கிற வார்த்தைகள். 1947ம் வருடக் கோட்டின் மேல் 'பரதமிதில் சுக்கிலவன் வெளியேற்றம்!' என்கிற வார்த்தைகள்..!

கணபதி சுப்ரமணியனின் அடர்வான புருவத்தில் வெள்ளிக் கம்பி கணக்காய், நீளநீளமான முடிகள். அவை அவர் நெற்றியைச் சுருக்கும்போது நேர்க்குத்தாக நிற்கும். அப்போதும் நின்றது.

அந்தப் பெரும் தாளோடு ஒரு கடிதம்! காலப் பலகணி என்கிற அந்தத் தாளை அப்படியே மேஜை மேல் வைத்துவிட்டு அந்தக் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினார்.

‘அய்யா அவர்களுக்கு வணக்கங்கள்!

தங்கள் கையில் இருக்கும் காலப் பலகணி 90 வருடங்களுக்கு முன்பு என் பாட்டனாராகிய உதிரமுத்து வள்ளுவர் தன் கைப்பட வரைந்த ஒன்றாகும். இது விசித்திரமானது. முன்னதாக சில தகவல்கள்... நாங்கள் வள்ளுவக்குடிகள். சோதிடம் எங்கள் குலத்தொழில். அவ்வகையில் என் பாட்டன் பெயரையே கொண்ட நானும் ஒரு சோதிடன். சோதிடன் என்கிறபோதிலும் கடவுள் நம்பிக்கை இல்லாதவன். நான் சொல்வதை நம்புவதற்கு உங்களுக்குச் சிரமமாக இருக்கலாம்.

அதைப் பற்றி கவலைப்படாமல் நான் விஷயத்துக்கு வந்து விடுகிறேன். என் வரையில் கோள்கள் வானில் உலா வருவதால் அவை உண்மை. அதில் பூமியைப் பாதிக்கும் கதிர்வீச்சுத் தொடர்புடைய ‘சனி, புதன், சந்திரன், செவ்வாய், சூரியன் சுக்கிரன், வியாழன்’ ஆகிய கோள்கள் உண்மையிலும் உண்மை. இதுபோல சாயா கிரகங்கள் என்னும் ராகுவும் கேதுவும் கூட பாதிப்பை ஏற்படுத்துவதால் அவையும் உண்மை.

இவற்றின் பாதிப்பை கணிதப்படுத்திக் கூறுவதே ஜாதகமாகும். ஆகவே, ஜாதகமும் என் வரை மறுப்புக்கு அப்பாற்பட்ட உண்மை. ஆச்சரியம் என்னவென்றால், இந்த ஜாதகத்தைக் கணிதமாக மட்டுமே கருதி நான் ஜோதிடம் கூறும்போது சிலருக்கு அது நூற்றுக்கு நூறு சரியாக இருக்கிறது. சிலருக்கு 25 சதவீதம் கூட சரியாக இல்லை. அது எதனால் என்கிற ஆராய்ச்சியில் இப்போது பெரிதும் ஈடுபட்டுள்ளேன்.

இவ்வேலையில் நான் சில ஜோதிட ஏட்டுச் சுவடிகளைத் தேடியபோது எங்கள் வீட்டு உக்ராண அறையின் கீழ் ஒரு பாதாள அறை இருப்பது தெரிய வந்தது. அந்த அறைக்குள் அந்த நாளைய கல்கத்தா டிரங்குப் பெட்டிக்குள்தான் இந்த காலப் பலகணி வரையப்பட்ட தாளும், கூடவே அந்த நாளைய ஒரு கையடக்கமான டைரி போன்ற குறிப்பேடும் இருந்தது. என்னவென்று பார்த்தேன். இந்த காலப் பலகணி நம் பாரத தேசத்தில் நடந்த அதிமுக்கிய சம்பவங்களைக் குறிப்பாகக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, 1947ம் ஆண்டுக்கான கோட்டின் மேல், ‘பரதமிதில் சுக்கிலவன் வெளியேற்றம்’ என்று உள்ளது. அது நாம் வெள்ளையர்களிடம் இருந்து பெற்ற சுதந்திரத்தைக் குறிக்கிறது.

‘சுக்கிலம்’ என்றால் ‘வெண்ணிறம்’ என்றும் பொருளுண்டு. அதன்படி பார்த்தால் 1947ம் ஆண்டு சம்பவத்தை அது குறிக்கிறது. இப்படி ஒவ்வொரு ஆண்டிலும் நடந்த அதிமுக்கியமான சம்பவங்கள் குறிப்பாக உள்ளன.

அதாவது, இதில் உள்ளபடிதான் காலத்தால் எல்லாம் நடக்கிறது. அதன்படி, 2015ல் ‘விண்ணிலொரு ரத்தினம் மறையும்’ என்று உள்ளது. இதற்கு எனக்குப் பொருள் தெரியவில்லை. இதை எழுதியுள்ள கோட்டின் மேல் கூர்ந்து கவனித்தால், 365 கணுக்கள் மிகச்சிறிய புள்ளிகளாக இருப்பது தெரியும். அந்தக் கணுக்களில் இருபதாவது கணுவின் மேல் இருந்து ‘விண்ணிலொரு’ என்கிற வார்த்தை தொடங்குகிறது. இதை வைத்து ‘ஜனவரி இருபதாம் தேதி இது நடக்கலாம்’ என நான் கருதுகிறேன். 1947ம் வருடக் கோட்டின் மேல் ‘பரதமிதில்’ என்கிற வார்த்தை, 227வது கணுப்புள்ளியில் ஆரம்பமாகிறது. அது மிகச்சரியாக ஆகஸ்ட் 15ம் நாளைக் குறிக்கிறது.

இதை வைத்தே நானும் இந்த 2015ம் வருடத்துக்கான செய்திக்குறிப்புப்படி, ‘ஜனவரி 20ம் தேதி ஏதாவது நிகழும்’ என்கிற முடிவிற்கு வந்தேன். என் வரையில் இந்த காலப் பலகணி ஒரு கணித அற்புதம்! ஒரு நாட்டுக்கே இது முன்னதாக நடக்கப்போவதைக் கூறுகிறது. ஜோதிடம் என்று இதை சாதாரணமாகக் கூறாமல், முன்கணிப்பாக இதைக் கருதலாம்.

நாட்டுக்குப் பலன் கூறும் இந்தப் பலகணி போல, பல அதிசயங்களைக் கொண்ட வரலாற்றுச் சிறப்பு மிகுந்த விஷயங்கள் பற்றி என் தாத்தா உதிரமுத்து வள்ளுவன் எழுதி வைத்திருக்கும் ஒரு குறிப்பேடும் என் வசம் உள்ளது. இதை வைத்துக்கொண்டு ஒரு ஆராய்ச்சி செய்ய எனக்கு விருப்பம்தான். ஆனால் எனக்கான

சோதிடக் கணக்கின்படி, வரும் 27ம் தேதி மாலை நான்கு மணி இரண்டு நிமிட அளவில், மூன்றாவது நிமிடத்துக்கு இடைப்பட்ட நொடிப்புள்ளிகளில் என் மூச்சுக்காற்று நிற்க இருக்கிறது.

எனவே, இதைப் பெரும் தொல்பொருள் ஆராய்ச்சியாளரும், 'பத்மஸ்ரீ' விருது பெற்றவருமான உங்கள் விருப்புக்கே விட்டு விடுகிறேன். உங்களைப் பார்த்துப் பேச வந்த என்னை உங்கள் காவல்காரர் உள்ளே விடவில்லை. உங்கள் தொலைபேசி எண்ணும் தெரியாது. அதனால்தான் இந்தக் கடிதம். இதில் என்னுடைய எண் உள்ளது.

தயவுசெய்து நான் சாவதற்குள் என்னைச் சந்தித்து என்வசமுள்ள குறிப்பு ஏட்டைப் பெற்றுக்கொள்ளவும். இந்தக் காலப் பலகணி ஜோதிடத்தை கணிதப்படுத்தும் ஆராய்ச்சிக்கும், வருங்காலத்தில் மேலும் நடக்க இருக்கும் முக்கிய சம்பவங்களைத் தெரிந்துகொண்டு எச்சரிக்கையோடு திகழவும் உதவக்கூடும்.

என் தாத்தாவுக்கு இந்த விஷயத்தில் அந்த நாளில் பெரிதாக உதவ யாருமில்லை. இருந்தும் அவர் தன் சுயமுயற்சியால் காலப் பலகணி உள்ள இடத்தைக் கண்டறிந்து அங்கே பார்த்ததையே படமாக வரைந்து எடுத்து வந்துள்ளார். நீங்கள் முயன்றால் அந்தப் பலகணியைக் கண்டு பிடித்து மேலும் பல ரகசியங்களை அறியலாம். இதற்கு மேல் உங்கள் விருப்பம்.இப்படிக்கு,உதிரமுத்து வள்ளுவன்'கடிதத்தைப் படித்த கணபதி சுப்ரமணியன், திரும்பவும் காலப் பலகணி என்னும் அந்தத் தாளை விரித்துப் பார்த்தார்.

அநேகமாக எல்லா வருடங்களுக்கும் ஒரு வளைகோடும் அதன் மேல் குறிப்புகளும் இருந்தன. 2014க்கான கோட்டின் மேல் 'மங்களம் மானமுறும்' என்கிற வார்த்தைகள். இதில் மாவன்னா தொடங்கும்

புள்ளியைக் கணித்துப் பார்த்தபோது 267வது புள்ளியாக அது இருந்தது. அதை தேதியாக மாற்ற முனைந்தபோது செப்டம்பர் 24ம் தேதி என்று வந்தது. செப்டம்பர் 24ம் தேதி என்ன நடந்தது என்பதை அன்றைக்குரிய ஆங்கில நாளிதழை எடுத்துப் பார்க்கவும், அதில் பளிச்சென்று செவ்வாய் கிரகத்துக்குச் சென்ற மங்கள்யான் எனும் விண்கலம் பற்றிய செய்தி. பாரத தேசத்தின் மிகப்பெரிய விஞ்ஞான சாதனை!

கணபதி சுப்ரமணியனிடம் ஒரு கூர்மையான உணர்வு உருவாகத் தொடங்கியது. அப்போது, ‘‘தாத்ஸ்...’’ என்றபடியே கையில் கிரீன் டீயுடன் ப்ரியதர்ஷினி, ‘‘முத்தழகுகிட்ட டீ கேட்டிருந்தீங்களா? கமான்...’’ என்று நீட்டினாள். அவரோ வெறித்தார்.

‘‘என்ன தாத்தா அப்படிப் பாக்கறீங்க...’’

‘‘சொல்றேன்... இந்த லெட்டரைப் படி! அப்படியே இந்தப் படத்தையும் பார்’’ என்று டீயை வாங்கி உறிஞ்சத் தொடங்கினார்.

ப்ரியதர்ஷினியும் ஆர்வமானாள். கடிதத்தைப் படித்துவிட்டு காலப் பலகணியையும் பார்த்தவள், ‘‘தாத்தா! ஸ்பீல்பெர்க் படம் பாக்கற மாதிரி இருக்கு. இதெல்லாம் உண்மையா?’’ என்று விழிகள் விரியக் கேட்டாள்.

‘‘அதை இனிமேதான் கண்டு பிடிக்கணும்...’’

‘‘எனக்கு இது வேண்டாத வேலை. உனக்குத்தான் இது தொழில். பை த பை, நீ ரிட்டயர்ட் கேஸ் ஆச்சே... என்ன பண்ணப் போறே தாத்தா..?’’

‘‘நிச்சயம் சும்மா விடப் போறதில்லை...’’

‘‘அப்ப அந்த உதிரமுத்து வள்ளுவனுக்கு போன் போட்டு பேசப் போறியா?’’

‘‘நேர்லயே போகப் போறேன்...’’

‘‘அப்ப உன் வரைல ஒரு இன்ட்ரஸ்ட்டான அசைன்மென்ட் தொடங்கிடுச்சு. அப்படித்தானே?’’

‘‘டெஃபனிட்டா! ஆமா, இன்னிக்கு என்ன தேதி?’’

‘‘ஜனவரி 18 தாத்தா...’’

‘‘இன்னும் இரண்டே நாள்தான் இருக்கு. ‘விண்ணிலொரு ரத்தினம் மறையும்’ங்கறதுக்கு பின்னால என்ன நடக்குதுன்னும் பார்ப்போம்...’’

‘‘அப்ப நீ இந்தப் படமும் குறிப்புகளும் உண்மைன்னு நம்பத் தொடங்கிட்டியா?’’

‘‘கடந்த கால சம்பவங்கள் அணு பிசகாம நடந்துருக்கே?’’

‘‘தாத்ஸ்... இப்பல்லாம் பிரில்லியன்ட்டா ஏமாத்தறதுதான் ஃபேஷன். மண்ணுளிப் பாம்பு, ரைஸ் புல்லிங், கோயில் கலசம், இரிடியம் மெட்டீரியல், நாகரத்னம்... இப்படி டிசைன் டிசைனா ஏமாத்தற கூட்டம் நிறையவே இருக்கு! பீ கேர்ஃபுல்...’’

‘‘இதுல என்னை ஏமாத்த என்னம்மா இருக்கு?’’

‘‘அது இப்ப தெரியாது... போகப் போக தெரிய வரலாம். நீ அடிக்கடி டி.வில பேசற ஒரு நபர். உன் புக்ஸ் உலகப் பிரபலம். இன்ஃபாக்ட், ஐதராபாத் ஏர்போர்ட் புக் ஷாப்ல உன்னோட ‘ஸ்டோன் சீக்ரெட்ஸ்’ புக்கை என் ஃப்ரெண்ட் வாங்கிட்டு, ‘நிறைய இடம் புரியல... தாத்தாகிட்ட பேசணும்’னு சொன்னான்!’’

‘‘நீ இப்ப என்ன சொல்ல வர்றே..?’’

‘‘இப்படி அநாமதேயமா வர்ற விஷயங்களை கேர் பண்ண வேண்டாம். இது நிஜமான விஷயமா இருந்தா அது நிச்சயம் தெரியும். நீ சொன்ன மாதிரி இருபதாம் தேதிக்குப் பிறகு இதைப் பத்தி யோசிப்போம். அந்த நபருக்கு போனெல்லாம் பண்ணிடாதே!’’

ப்ரியதர்ஷினி கண்டிப்பாகச் சொன்னவளாக, அங்கிருந்த ‘நிலாக்கல்’ பேழையருகே சென்று பக்கத்து சுவிட்ச்சை போட, அதன்மேல் ஃபோக்கஸ் லேம்ப் வெளிச்சம் பட்டது. பேழைக்குள் ஒரு வெல்வெட் துணிமேல் இருந்த ஒரு பேப்பர் வெயிட் அளவிலான அந்த நிலாக்கல் டாலடித்தது.

‘‘எனக்கு இதுவே ஒரிஜினல்தானான்னு சந்தேகமா இருக்கு...’’ என்று நமுட்டுச் சிரிப்போடு முணுமுணுத்தவளை முறைத்துப் பார்த்தவர், ‘‘அதை பத்து கோடி ரூபாய்க்கு இன்ஷ்யூர் பண்ணியிருக்கேன்... ஜோக்குக்குக் கூட இப்படிப் பேசாத...’’ என்று கத்தினார். அவர் இப்படி பல தடவை கூறிவிட்டார். அவளும் அதைக் கேட்டுச் சிரித்தபடியே, பக்கமாய் உள்ள ஒரு மண்டை ஓட்டைப் பார்த்தாள். அந்த மண்டை ஓடு அவரது தேடலில் ஒரு தாழிக்குள் இருந்து கைப்பற்றப்பட்ட ஒன்று. இரண்டாயிரம் வருஷத்துக்கு முன் வாழ்ந்த ஒரு மனிதனின் மண்டை ஓடு அது.

‘‘அழிந்தும் அழியாதவன்டா நீ...’’ என்கிற கமென்ட்டோடு, அவள் அடுத்தடுத்து அவரது கண்டுபிடிப்புகளைப் பார்க்கத் தொடங்கினாள். எலும்புகள், பழைய பாத்திரங்கள், சிற்பங்கள், மேல் அங்கி - இப்படிப் பல பொருட்கள்...

‘‘போதும் ப்ரியா... இடத்தை காலி பண்ணு’’ - என்றார் அவர்.

‘‘துரத்தாத தாத்தா... என் கமென்ட்ஸை ரசி...’’ என்றவள் ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பார்த்து ஒரு வினாடி திடுக்கிட்டாள். பீரோ ஒன்றின் பக்கவாட்டுச் சுவரில் ஒரு கையில் கேமராவோடு ஒரு நிழலுருவம்!

3

திண்டுக்கல் மலை மேல் ‘இரவானால் ஆவி உலாவும். எனவே ஓடிப் போய் விடுங்கள்’ என்று கூறி எங்களைத் துரத்திய நபரிடம் முதலில் எனக்கு ஒரு பயம் இருந்தது. பிறகு அது நீங்கிவிட்டது. என்னுள் எழும்பிய சில கேள்விகள்தான் காரணம். முதல் கேள்வி, ‘அந்த ஆவிகள் அவனை ஒன்றும் செய்யாதா’ என்பதுதான்... அடுத்த கேள்வி, ‘எப்பொழுதோ மன்னர் காலத்தில் தூக்கிலிடப்பட்டவர்கள் இன்னமுமா ஆவியாக சுற்றிக்கொண்டிருப்பார்கள்?’

மூன்றாவதாக ஒரு கேள்வியையும் கேட்டுக்கொண்டேன். ‘இறந்தவர்கள் ஆவியாகிறார்கள் என்றால் இந்த நாட்டில் வாழ்கிறவர்களுக்கு சமமாக ஆவிகள் நடமாடியபடி இருக்க வேண்டும். ஆனால், அப்படித் தெரிவில்லையே?’ஆவியைத் தொட்டு எங்களைத் துரத்திய நபர், இப்படி என்னுள் பல

கேள்விகள் எழும்பக் காரணமாகி விட்டான். அப்போது நாங்கள் குடியிருந்த வீடும் திண்டுக்கல் மலையின் அடிவாரத்தில்தான் இருந்தது. எனவே, நினைத்தால் மலை ஏறிவிட முடியும். மேலே போய் விட்டு கீழே வர எனக்கு பத்து முதல் பதினைந்து நிமிடங்கள் மிக அதிகம். ஒருநாள் இரவு தைரியமாக மேலேறி விட்டேன். அப்படி ஏறிய பிறகே தெரிய வந்தது... அங்கே அந்த நபர் கள்ளச்சாராயம் விற்றுக்கொண்டிருந்தான். பலர் வந்து குடித்துவிட்டு அங்கங்கே மலைப்பாறைகளின் மேலே கிடந்தனர்!

பாவிகளைத்தான் அவன் ஆவி என்று கூறிவிட்டான். மனிதன் தன் சுயநலத்துக்காக எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்வான் என்பதற்கு இதை நான் உதாரணமாக எடுத்துக் கொண்டேன். திண்டுக்கல் மலை என் மனதில் அழியாத வரலாற்றுப் பதிவாக இப்படிப் பல சம்பவங்களோடு உள்ளது. என் வரலாற்று விருப்பம் அதிகரிக்க அதுவும் ஒரு காரணம்!''

– ஆய்வாளர் கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அந்த நிழலுருவத்தைப் பார்த்த ப்ரியதர்ஷினியின் முகத்தில் அதிர்வு பரவ ஆரம்பித்தது.

‘‘தாத்தா! கொஞ்சம் இப்படி வா...'' என்றாள். அவரும் அருகில் வர, சைகையால் பீரோவின் பக்க வாட்டுச் சுவரைக் காண்பித்தாள். இந்த இடைவெளியில் அந்த கேமராவும் கையுமான நிழல் மறைந்து விட்டிருந்தது!‘‘இப்ப நீ எதைக் காட்டினே... எதுக்கு இந்த மௌன சிக்னல்?'' - என்று வாய் விட்டே கேட்டார். ஆனால் பதில் கூறாமல் சற்று ஒதுங்கி, பீரோவின் பின்புறம் பார்த்தாள் ப்ரியதர்ஷினி என்கிற ப்ரியா.

பீரோவின் பின்புறத்தில் ஒருவன் ஒளிந்து கொண்டிருந்தான்.

துணிவாக பீரோ அருகே சென்று அவனை நேருக்கு நேராகப் பார்க்கவும், அவனும் வெறித்தான். ஆனால் இருள் சூழ்ந்த அந்த நேரத்தில் எதுவும் தெளிவாகத் தெரியவில்லை.

‘‘வெளியே வாடா…’’ என்றவாறு அவன் வர இடம் கொடுத்து சற்றுப் பின்னால் வந்தார். அவனும் தயங்கித் தயங்கி வெளியில் வந்தான்.கணபதி சுப்ரமணியனுக்கு கபால உச்சியில் இருந்து உள்பாதம் வரைக்கும் ஒரு கூர்மையான கத்தி இறங்கினது போல் இருந்தது.

‘‘டேய்! யாருடா நீ… திருட்டு ராஸ்கல். இந்த ரூமுக்குள்ளே எப்படிடா வந்தே?’’ என்று பதற ஆரம்பித்தார்.அவன் முகம்

இப்போது ஓரளவு தெரிந்தது. ஒரு காதில் சிறிய வளையம் போட்டு, கையில் ஃபாஸ்ட் ட்ராக் வாட்ச் கட்டி, ஸ்டோன் வாஷ் சட்டை போட்டு, ப்ளூ ஜீன்ஸ் அணிந்திருந்தான். இன்றைய ட்ரெண்டான லோஹிப்பில் அங்குலம் இறங்கினாலும் உள்ளூறுப்பைப் பார்க்க முடிந்த அளவிலான அவனது தோற்றத்தில், அவனது குறுந்தாடியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். ப்ரியா இம்மட்டில் ஆளைப் பார்த்த நொடி ஒரு சூப்பர் கம்ப்யூட்டர் வேகத்தில் அவனைத் தெரிய முயன்றாள்.

''யாருடா நீ... லயோலாவா, பிரசிடென்சியா.... ஃபர்ஸ்ட் இயர்தானே?''- பளிச் பளிச் என்று அவனை உமிழ்ந்தாள்.

''நான்... நான்...'' - அவன் தடுமாறினான்.

''ப்ரியா, முதல்ல போலீசுக்கு போன் பண்ணு... நான் கூப்பிட்டேன்னு இன்ஸ்பெக்டர் ராகவேந்திராவை உடனே வரச்சொல். யு ஸ்கவுண்ட்ரல்... என்ன ஒரு தைரியம்? இது என்னோட உயிர் பரவிக் கிடக்கற இடம்... இங்க நான் இந்த நாட்டு பிரசிடென்ட்டைக் கூட உள்ள விட யோசிப்பேன். இதுக்குள்ள நீ எப்படிடா வந்தே?''- அவரிடம் பதற்றமும் சேர்ந்துகொண்டது.

''தாத்ஸ்! டென்ஷன் ஆகாதே... முதல்ல இங்க இருந்து வெளியே ஹாலுக்குப் போவோம். அங்க நின்னு மத்த விஷயங்களைப் பேசுவோம்!''

அடுத்த பத்தாவது நொடி அவர்கள் ஹாலில்! இந்த சத்தம், ப்ரியாவின் தாயான பத்மாசினி, சமையல்காரி என்று சகலரையும் ஹாலில் கூட்டிவிட்டது. அதில் வீட்டு வேலைக்காரி முத்தழகுவும் அடக்கம். அவள் முகத்தில் கணிசமான அளவில் பீதி!

இந்த கேப்பில் ப்ரியா அவன் கேமராவைப் பறித்துக்கொண்டு அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்து ரீவைண்ட் செய்தாள். நல்லவேளை, அவன் எதையும் ஷூட் செய்திருக்கவில்லை. அவனே அதை சொல்லவும் செய்தான்.

‘‘அக்கா! நான் எதையும் எடுக்கல...’’

‘‘அக்காவா... நானா... உனக்கா?’’ - ப்ரியாவுக்கு எது பலவீனம் என்பது அவனுக்குத் தெரிய ஆரம்பித்தது.

‘‘இல்ல, நீங்க ஃபைனல் இயர். நான் நீங்க கெஸ் பண்ண மாதிரி ஃபர்ஸ்ட் இயர் - அதுலயும் கச்சிதமா லயோலா... உங்க ஐ க்யூ ‘பின் ஷார்ப்’ மேடம்...’’ என்றான்.

‘‘மேடமா... டேய் இதுக்கு அக்கா தேவலடா!’’

‘‘சாரி... சாரி...’’

‘‘என்ன சாரி பூரி... யாருடா நீ? பேரைச் சொல்...’’

‘‘ப்ரியா! முதல்ல போலீசுக்கு போன் பண்ணு... அப்படியே வாட்ச்மேன் தங்கவேலுவைக் கூப்பிடு. அவன் எப்படி இவனை உள்ள விட்டான். கால் ஹிம்...’’

- கணபதி சுப்ரமணியன் அலறித் திமிறினார்.

‘‘சார்... சார்... வேண்டாம் சார்! என் பேர் தேசிகன். பத்மாசினி மேடத்தைப் பேட்டி எடுக்கற பத்திரிகையாளனாதான் பொய் சொல்லி

உள்ள வந்தேன். உங்க கேலரியை ஷூட் பண்ணி நெட்ல அப்லோட் பண்றது என்னோட டார்கெட். என் சீனியர்ஸ் கொடுத்த ராகிங் அசைன்மென்ட் இது. நான் ரகசியமா படம் எடுப்பேன். அது என் ஹாபி. என்னை ராக் பண்ண என் சீனியர்ஸ்தான் ‘த்ரில்லா வேல்யுபிலா எதையாவது ஷூட் பண்ணிக்கிட்டு வா’ன்னாங்க. அதுல ஒருத்தன்தான் ‘கணபதி சுப்ரமணியன்ங்கற க.சு.வோட கேலரியை உன்னால் எடுக்க முடியுமா... அந்த கேலரிலதான் மூன் ஸ்டோன்ல இருந்து சோபியா லாரனோட மேலங்கி வரை எல்லாம் இருக்கும். நாம இதை நெட்ல ஏத்தி, க.சுவை கதற வைப்போம்’ அப்படின்னான்...’’

- அந்த தேசிகன் பேச்சில் சற்று இடைவெளி விட்டு உதட்டை ஈரப்படுத்திக்கொண்டான். கணபதி சுப்ரமணியனுக்குள் காந்தலெடுத்தது. ‘‘யாருடா அவன்... எந்தக் கபோதி இப்படிச் சொன்னவன்?’’ என்று தன் பூஞ்சை மார்பை ஆவின் பால் போல சற்று பொங்கச் செய்தார்.

‘‘அது வந்து... அவன் பேர் நிக்கி. காலேஜுக்கு நீங்க ஒரு தடவை சீஃப் கெஸ்ட்டா வந்தப்போ, அவன் ஆடின டான்ஸை காக்கா வலிப்பு மாதிரி இருந்ததா கமென்ட் பண்ணீங்களாம். அதுவும் பப்ளிக்கா ஸ்டேஜ்ல... அதுல இருந்து அவனை எல்லோரும் காக்கான்னே கூப்பிடவும் அவன் உங்கமேல காண்டாயிட்டான் சார்!’’

- தேசிகன் எங்கே வருகிறான் என்பது ப்ரியாவுக்குப் புரிந்து விட்டது. உடனேயே திரும்பி உண்மையா என்பது போல தாத்தாவைப் பார்த்தாள்.

‘‘ஓ... அந்தப் பன்னாடையா? அவன் ஆட்டம் அப்படித்தானே அன்னிக்கு இருந்தது. அவனுக்கென்ன மைக்கேல் ஜாக்சன்ங்கற நினைப்பாமா மனசுக்குள்ள..?’’ - திரும்ப எகிறினார்.

‘‘கூல் தாத்தா கூல்...’’ என்ற ப்ரியா அவன் பக்கம் திரும்பி, ‘‘டேய்! நீ எப்படி பூட்டியிருக்க ரூமுக்குள்ள போனே? அதைச் சொல்...’’

‘‘நான் இப்பதான் வந்தேன். நீங்க டீயோட மாடிப்படி ஏறுறதைப் பார்த்தேன். நான் வந்து ஹால்ல உக்காந்துக்கிட்டிருந்ததை நீங்க பாக்கல. அப்படியே உங்க பின்னாலயே வந்து உள்ள பீரோ பின்னால ஒளிஞ்சிட்டேன்.’’

‘‘சரி.. ரூம் திறந்திருக்கலன்னா என்ன பண்ணியிருப்பே?’’

‘‘அதுக்குத் தகுந்த மாதிரி பிளான் பண்ணியிருப்பேன். சார்கிட்டயே பத்திரிகைக்காரன்னு அப்பாயின்ட்மென்ட் வாங்கி ஏதாவது பண்ணியிருப்பேன்...’’

‘‘அப்ப எப்படியாவது அந்த கேலரியை ஷூட் பண்ணியிருப்பே... அப்படித்தானே?’’

அவன் முகக்கோணல்களோடு அதை ஆமோதித்தான்.

‘‘சரி! இப்ப மாட்டிக்கிட்டியே... என்ன பண்ணப் போறே?’’

‘‘எங்கக்கா... சாரி! எங்க, நான்தான் எதுவும் ஷூட் பண்ணலையே?’’

‘‘ஓ... அதனால உன்ன விட்ருவோம்ங்கற நினைப்பா உனக்கு?’’

‘‘ப்ளீஸ்ங்க. ஒரு த்ரில்லுக்காக தப்பு பண்ண நினைச்சேன். இனி நான் இப்படி நடந்துக்க மாட்டேன்!’’

‘‘ப்ரியா, என்ன இது? இவன்கிட்ட போய் வளவளன்னு பேசிக்கிட்டு! கூப்பிடு இன்ஸ்பெக்டர் ராகவேந்திராவை. இவனை, அந்த காக்கா வலிப்புக்காரனைன்னு ஒருத்தரையும் விடக் கூடாது. என்ன நெஞ்சழுத்தம்டா உங்களுக்கு..?’’

- கணபதி சுப்ரமணியன் கையை நெரித்துக்கொண்டார். அதுவரை எதுவும் பேசாத பத்மாசினி இடையிட ஆரம்பித்தாள்.

‘‘ஏம்ப்பா... பேட்டிக்காக எனக்கு போன் பண்ணது நீதானே?’’

‘‘ஆ... ஆமாங்க மேடம்!’’

‘‘எந்த பத்திரிகைக்காக?’’ - அவள் கேள்வி ப்ரியாவை எரிச்சல்படுத்த, அந்த இக்கட்டிலும் அதற்காக அந்த தேசிகன் மிகச்சிறிய அளவில் ஒரு சிரிப்பு சிரித்தான்.

‘‘ஐய்யோ லூசு மம்மி... இவன் ஒரு காலேஜ் ஸ்டூடன்ட். ஹீரோயிசமா பேசறதுல இருந்தே இவங்க பிளான் தெரியலியா... எந்தப் பத்திரிகைன்னு அக்கறையா கேக்கறே? டேய் போடா... போ!’’

- பேச்சோடு ப்ரியா வாசல் பக்கம் கையைக் காண்பித்தாள்.

‘‘தேங்க்ஸ்க்கா..!’’ - அவனிடம் குபீரென்று ஒரு உற்சாகம்.

‘‘ப்ரி.. என்ன இது? போங்கறே. இவனை எல்லாம் சும்மா விடக்கூடாது’’ - கணபதி சுப்ரமணியன் பகீர் என்றாகி அலற, அவர் கையைப் பற்றி ‘‘தாத்ஸ்...’’ என்று ஒருவித ராகம் கலந்த குரலில் அவரை ப்ரியா ஏறிட, அவரும் அடங்கத் தொடங்கினார்.

அவனோ இந்த நொடிகளே நான் தப்பிவிடப் போதுமானது என்று மெயின் கேட்டைக் கடந்திருந்தான்.

‘‘என்ன குட்டி? இப்படி பண்ணிட்டே?’’ - கணபதி சுப்ரமணியன் சமயங்களில் ப்ரியாவை ‘குட்டி’ என்று செல்லமாய் அழைப்பார்.

‘‘விடு தாத்தா... அதான் எதையும் ஷூட் பண்ணலையே! அப்புறம் தாத்தா... இனிமே நீ காலேஜுக்கெல்லாம் கெஸ்ட்டா போகாதே. போனா ஸ்டேஜ் ஈவன்ட்ஸைப் பாக்காதே. பாத்தா விமர்சிக்காதே.

பண்ணித்தான் தீரணும்னா ‘எல்லாமே மைண்ட் ப்ளோயிங்’னு சும்மாவாவது சொல்லு. இப்ப இப்படி சொல்லத் தெரிஞ்சவங்களுக்குத்தான் காலம். காக்கா வலிப்பு மாதிரி இருக்குன்னு சொல்லி உன்னோட பாகவதர் காலத்துக்குப் போயிட்டியே தாத்தா! பாவம் தாத்தா அந்த காக்கா. அவனை எல்லாரும் எப்படி ஓட்டியிருப்பாங்க தெரியுமா?’’ - ப்ரியாவின் வருத்தம் கணபதி சுப்ரமணியனை ஒரு மிரட்டு மிரட்டி விட்டது.

‘‘இப்படியா குட்டி ஒரு ஸ்டூடன்ட்டா பேசுவே. நீ என் பேத்திங்கறத மறந்துட்டியா?’’

‘‘மறக்கல... அதான் ஒரு பெரிய ஆபத்துல இருந்து காப்பாத்தியிருக்கேன். இந்த தேசிகனை நாம ஒண்ணும் பண்ண

முடியாது தாத்தா. பிடிச்சு உள்ள போட்டாலும் வெளிய வந்துடுவான். ஒருவேளை பனிஷ் பண்ணாலும் ரொம்ப தப்பானவனா மாறிடுவான். இவன் மாதிரி திறமைசாலிகள் போர்னோகிராபி பக்கம் டர்ன் ஆனா என்னாகும்? யோசிச்சுப் பார்!''- ப்ரியா ஒரு புதிய கோணத்தைக் காட்டிப் பேசினாள்.

''அப்படி என்ன அந்த கேலரில இருக்கு? கேலரின்னா எல்லாரும் பாக்கறதுக்குத்தானே? அதை அலிபாபா குகை மாதிரி பூட்டிப் பூட்டி வச்சா இப்படித்தான் திருடன் வருவான்!'' - என்றபடியே பத்மாசினி விலகிப் போனாள்.

''மம்மி உனக்கு குரல் மட்டுமில்லேன்னா நீ சரியான டம்மிதான். வந்தவன் திருடன் இல்ல... ஸ்டூடன்ட்!'' என்ற ப்ரியாவின் இம்மீடியட் பதிலை ரசித்த கணபதி சுப்ரமணியன்,

''சபாஷ்... சரியா சொன்னே. யு ஆர் ரைட். நான் என் ஜாப் விஷயத்துல ரொம்ப பொசஸிவாவே இருக்கேன். இல்ல?''

- க.சு.வின் கேள்வியைப் புறந்தள்ளியவள்,''தாத்ஸ்! 'போய் அந்தக் காலப் பலகணியை கவனியுங்க. ரெண்டு நாள்ல... தட் மீன்ஸ், டே ஆஃப்டர் டுமாரோ 'ரத்தினம் விண்ணில் மறையும்'னு சொன்னது நடக்குதான்னு பார்ப்போம்!''

''அப்ப அந்த வள்ளுவன் கூட என்னை இப்ப பேச வேண்டாம்ங்கறியா?''

''ஒரு இரண்டு நாள் பொறுக்க முடியாதா தாத்தா?''

- அழகான பாவனைகளோடு ப்ரியா கேட்ட விதத்தில் க.சு.வும் அடங்கித்தான் போனார்.இரண்டாம் நாள் காலை...ப்ரியாவின் அறையில் விராட் கோலி, ஷாருக் கான், பாகிஸ்தானின் வீணா மாலிக், மல்லிகா ஷெராவத், கமல்ஹாசன் என்று கலவையாக பத்திரிகைகளில் வந்த படங்களின் கட்டிங்ஸ், அப்புறம் ஏராளமான பிள்ளையார் உருவங்கள், கிளிஞ்சல்கள்.ஒரு ஷெல்ஃப் முழுக்க கழித்துக் கட்டிய செல்போன்கள், அவற்றின் சார்ஜர்கள், அங்கங்கே தோரணம் போல தொங்கியபடி சி.டிக்கள், சிரசாசனம் செய்தபடி டெட்டி பேர். குண்டு ஜாடியில் வில்லன் முகம் கொண்ட வினோத மீன் ஒன்று. இவற்றின் நடுவே தரையோடு போடப்பட்ட ஒரு அடி உயர மெத்தை மேல் நான்கைந்து திண்டுகளும், ரஜாய் போர்வையுமிருக்க, அதன் மேல் பெப்பர் மின்ட்டுகளும், பேப்பர் பிளேட்டுகளும் கூட இருந்தன.

இன்றைய நவயுகிகளின் அறைகள் எல்லாமே இப்படியான கந்தர்வமாகவே உள்ளன. இதில் படுக்கை மேல் கிடந்த ப்ரியாவின் ஆண்ட்ராய்டில் ஆனந்தவர்ஷன் உருவம் தோன்றி ‘ஹாய் தர்ஷினி...’ எனவும் ப்ரியாவும் கவனமானாள்.‘‘சொல்லுடா...’’ - என்று தனது வளையம் தொங்கிய காதைக் கொடுத்தாள்.

‘‘என்னப்பா! சீக்கிரமாவே எழுந்துட்ட இன்னிக்கு?’’

‘‘நீ நேத்து கொடுத்த சி.டி. சரியான மொக்கை. அதான் லேப்டாப்பை மூடிட்டு படுத்துட்டேன். சீக்கிரம் படுத்ததால சீக்கிரம் எழுந்துட்டேன். தட்ஸ் ஆல்!’’

‘‘ஹாலிவுட்டோட ஹாட் கேக் சி.டி. அது. உனக்கு மொக்கையா? உன்னையெல்லாம் ‘வீராச்சாமி’கிட்ட விடணும்!’’

‘‘காலங்காத்தால காலட்சேபம் பண்ணாத வர்ஷன்!’’

‘‘சரி... சரி... டி.வி.ல நியூஸைப் பாரு! அதுக்குதான் கூப்பிட்டேன்...’’

‘‘என்ன விஷயம்... திரும்பவும் சுனாமியா?’’

‘‘இப்பல்லாம் பூமியில பெருசா பிரச்னை இல்ல தர்ஷினி. ஸ்கைல தான் எல்லாம்..!’’

‘‘என்னன்னுதான் சொல்லேன்...’’

‘‘நம்ப பாரத ரத்னாவான சயின்டிஸ்ட் பகீரதன் போன ஃப்ளைட் காணாமப் போயிடிச்சு. அவர்தான் என்னோட மென்ட்டர்னு நான் உனக்கு சொல்லத் தேவையில்லை. இன்னிக்கு விண்ணில் மறைஞ்ச ஒரு ரத்தினமா அவர் ஆயிட்டார்..!’’
- வர்ஷன் சொல்லி முடித்தான்.

ப்ரியா வரையில் காலப்பலகணிதான் பளிச்சென்று நிமிர்ந்து கூடாரம் போட்டது!

‘விண்ணிலொரு ரத்தினம் மறையும்?’

4

வரலாற்றின் மீது இயற்கையாகவே எழுந்த ஆர்வம் ஒருபுறம், அதற்கேற்ற சூழல் மறுபுறம் என்று என் இளம்பருவம் மற்ற மாணவப் பருவங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டே இருந்தது.

ஒளிந்திருப்பதைக் கண்டு பிடிப்பதில் எனக்கு ஆர்வம் அதிகமாக இருந்த காரணத்தால், நான் விளையாடியது கூட திருடன் போலீஸ் விளையாட்டாகவே இருந்தது.

இந்த விளையாட்டின்போது, யார் எங்கே ஒளிந்திருந்தாலும் நான் கண்டுபிடித்து விடுவேன். அதே சமயம் நான் ஒளிந்தால் என்னைக் கண்டுபிடிக்கவே முடியாது. இதனால் எங்கள் தெருவில் உள்ள நண்பர்கள் என்னை ‘சி.ஐ.டி’ என்று கூப்பிடுவதை வழக்கமாகக் கொண்டனர்.

கணபதி சுப்ரமணியன் என்கிற என் பெயர் உள்ளபடியே என் தாத்தாவின் பெயர். எங்கள் குடும்பத்தில் தாத்தா பெயரை பேரப் பிள்ளைகளுக்கு வைப்பது வழக்கம். இந்தப் பெயர் நீளமாக இருப்பதால் முதல் பெயராகிய கணபதியை வீட்டில் அழைப்பது வழக்கமாயிற்று. அதுவும் போய், ‘சி.ஐ.டி’ என்று என்னை தெருவில் உள்ள நண்பர்கள் அழைக்கவும், முதலில் என் வீட்டில் சிரித்தனர். இந்த நிலையில் என் அத்தை பெண்ணின் கொலுசு தொலைந்து போயிற்று. அதைத் தேடாத இடமில்லை.

அப்போதுதான் என் அத்தைப் பெண் அபிராமி, ‘நீதான் பெரிய சி.ஐ.டியாச்சே... என் கொலுசை கண்டுபிடிச்சுக் கொடேன், பாக்கலாம்’ என்றாள். நானும் அதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு தயாரானேன். உடனேயே அதற்காக மூளையைக் கசக்கிக்கொண்டு அவளைக் கேள்வியாய் கேட்கத் தொடங்கினேன். அவளும் என் கேள்விக்கெல்லாம் பதில் சொன்னாள். அப்போது எனக்கு வயது பதிமூன்று. என் அப்பா நான் அபிராமியைக் குடைவதைக் கேட்டுக் கொண்டேயிருந்தார். இறுதியில் நான் கொலுசு இருக்கும் இடத்தை யூகித்து அங்கே

சென்று பார்க்க, என் யூகம் பொய்யாகவில்லை. கொலுசு அங்கே கிடந்தது!'– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

வர்ஷன் சொன்னதைக் கேட்ட ப்ரியதர்ஷினி விக்கித்துப் போனாள். அவளால் அடுத்துப் பேச முடியவில்லை. எப்போதுமே அமானுஷ்ய அனுபவங்கள் அதற்கு ஆளாகின்றவர்களை செயலிழக்கச் செய்து விடும். அலை பாயும் மனம், 'ஃப்ரீஸ் ஆக்கப்பட்ட வீடியோ காட்சி' போல அசைவற்றுப் போகும்.தர்ஷினியும் விதிவிலக்கில்லை!

''தர்ஷினி... தர்ஷினி... என்னாச்சு! கேன் யு ஹியர் மை வாய்ஸ்?'' - என்று வர்ஷன் அவள் காதைத் தட்டினான். அவளும் மெல்ல சுதாரிப்புக்கு வந்தாள்.

''யெஸ்டா...''

''என்ன யெஸ்டா... வாய்ஸே ஒரு மாதிரி இருக்கே?''

''அஃப்கோர்ஸ்... நீ சொன்ன விஷயம் அப்படி!''

''நினைச்சேன்.... மலேசியாவுக்கும் ஏர்கிராஃப்ட்டுக்கும் இப்பல்லாம் ஏழாம் பொருத்தமாகவே இருக்கு தர்ஷினி. யாரோ பக்காவா பிளான் பண்ணி அந்த நாட்டின் எகானமியோட மோதத் தொடங்கிட்ட மாதிரிதான் எனக்கு தோணுது!''

''அப்ப இந்த ஃபிளைட்டும் மலேசியாவுலதான் டேக் ஆஃப் ஆனதா?''

‘‘ஆமா... ஆனா ஸ்டார்ட்டிங் பாயின்ட் அது இல்லை. நம்ம சென்னை! பெய்ரூட்ல விஞ்ஞானிகள் மாநாடு நடக்க இருந்தது. அதுல கலந்துக்கத்தான் பகீரதன் சார் போனார். கடைசில இப்படி ஆயிடுச்சு...’’

‘‘மிஸ்ஸிங்கா? க்ராஷா?’’

‘‘தெரியல... முதல்ல ஒரு விமானம் காணாமப் போச்சே... அதே மாதிரிதான் இதையும் நினைக்க வேண்டி யிருக்கு!’’

‘‘அப்ப தப்பா ஏதோ நடந்திருக்கு...’’

‘‘சந்தேகமென்ன... நீ டி.வி பார்... இப்பல்லாம் குரூப் டிஸ்கஷன்தானே ஃபேஷன்? உக்காந்து கதையடிக்க ஆரம்பிச்சிட்டாங்க பார்!’’

‘‘வர்ஷன்... இது சம்பந்தமா நான் ஒண்ணு சொன்னா நீ ரொம்பவே ஆச்சரியப்படுவே தெரியுமா?’’

‘‘அது என்ன தர்ஷினி?’’

‘‘இன்னிக்கு இப்படி ஒரு விஷயம் நடக்கும்னு எனக்கு இரண்டு நாளைக்கு முந்தியே தெரியும்னா நீ நம்புவியா?’’

‘‘என்ன தர்ஷினி சொல்றே நீ?’’

‘‘நான் நேர்ல விபரமா பேசறேன். நீ ஜிம்முக்கு வா. இப்ப கட் பண்ணு...’’ - என்றவள் எழுந்தாள். கவிதையாக நாட்டிய முத்திரை போல சோம்பல் முறித்தாள்.

‘‘தாத்ஸ்...’’ - என்றபடி அறை நீங்கினாள். ஹாலில் கணபதி சுப்ரமணியன் பேப்பர் பார்த்துக்கொண்டிருந்தார்.

‘‘தாத்தா...’’

‘‘யெஸ்... வெரி குட் மார்னிங்!’’

‘‘சாரி... இது பேட் மார்னிங்... பேப்பரை வச்சுட்டு டி.வியை பார்...’’ - என்றவள் ரிமோட்டை எடுத்து அமுக்கினாள்.

ஆனால், இயங்க மறுத்தது அது!

பட்பட்டென்று கையோடு அடித்துக்கொண்டு அமுக்கவும் டி.வியில் காட்சி பரவியது.

‘‘லூஸ் கான்டாக்ட் இல்லாத ரிமோட்டை எப்பதான் கண்டுபிடிக்கப் போறாங்களோ?’’ என்றபடியே நியூஸ் சேனல் பக்கம் போனாள்.

வர்ஷன் சொன்னது போல விவாதம் நடந்து கொண்டிருந்தது.

‘இது நிச்சயமா டெரரிஸ்ட்டுகளோட திருவிளையாடல்தான். இந்த விஷயத்துல உலக நாடுகள் கருத்து வேற்றுமையை மறந்து கைகோர்த்து செயல்பட்டா மட்டும்தான் ஆகாயம் நமக்கு சொந்தமா இருக்கும். இல்ல அது டெரரிஸ்ட்டுகளோட சாம்ராஜ்யமாயிடும்...’

‘உண்மைதான்... நாம இப்ப பல விஞ்ஞானிகளை இழந்துட்டோம். ஜேம்ஸ் பாண்ட் படத்துல வர்ற மாதிரி... ஃப்ளைட்டை ஏதாவது ஒரு ஆளில்லாத தீவுல இறக்கி அங்க இவங்களைக் கொண்டு ஒரு பெரிய திட்டத்தை எதிரிகள் நடைமுறைப்படுத்த முயற்சி செய்யலாம்...’- விவாதம் இப்படி பல மாதிரி சென்றபடி இருக்க, கணபதி சுப்ரமணியன் பகீரதன் மறைவால் வாயைப் பிளந்து விட்டிருந்தார்.

‘‘தாத்தா... பகீரதன் சாரை ஒரு சயின்டிஸ்ட்டா மட்டும் பாக்காதே... அவர் ஒரு பாரத ரத்னா... தெரியும்தானே?’’

‘‘ஸோ வாட்?’’

‘‘கோடு போட்டா ரோடு போடணும். உனக்கு வயசாகிப் போச்சுனு நல்லா தெரியுது...’’ என்றபடி ப்ரியதர்ஷினி அவரைக்

கிள்ளவும், கப்பென்று விஷயத்தைப் பிடித்தார். கண்களை அகலத் திறந்தார். அதிக அதிர்வை வழிய விட்டார். பின், ‘‘குட்டி... அந்த ‘விண்ணிலொரு ரத்தினம் மறையும்...’ அதுதானே?’’ என்று கேட்க, பலமாய் தலையை ஆட்டினாள்.

‘‘மை காட்... இட்ஸ் ரியலி மிராக்கிள்... இல்ல?’’

‘‘சாரி தாத்தா... மிராக்கிளா இல்லையானு அப்புறமா முடிவுக்கு வருவோம். சம்திங் டெஃபினிட்டா நீ ஆராய எதுவோ இருக்கு. அது நிச்சயம்!’’

‘‘ஏன் மிராக்கிளை சந்தேகப்படறே?’’

‘‘சந்தேகப்படணும். அதுக்குத்தான் நமக்கு ஆறறிவு கொடுக்கப்பட்டிருக்கு.’’

‘‘அப்ப காலப் பலகணி பிரடிக்ஷன்லாம்..?’’

‘‘தாத்தா... நீ போய் அந்த உதிரமுத்து வள்ளுவரைப் பார். குறிப்பை வாங்கு. பை த பை... நம் வரையில இன்னொரு மிராக்கிளான விஷயம் பாக்கி இருக்கு...’’

‘‘அந்த வள்ளுவரோட டெத் டைம்! ஆம் ஐ ரைட்?’’

‘‘எக்ஸாக்ட்லி... அந்த நபர் அந்த நேரம் சாகறாராங்கறது இப்ப நம்ப முன்னால இருக்கற பெரிய கேள்வி...’’

‘‘ஷ்யூர்... ஷ்யூர்... ஏம்மா... ஒருவேளை நிஜமா செத்துட்டா..?’’

‘‘தாத்தா! இது ரொம்ப சிக்கலான கேள்வி... நீ போய் அந்தக் காலப் பலகணி பத்தின எல்லா தகவல்களையும் வாங்கற வழியைப் பார்... நான் இது விஷயமா என் ஃப்ரெண்ட் கிட்ட டிஸ்கஸ் பண்ணிட்டு வர்றேன்...’’

‘‘சரிம்மா... இன்னிக்கு பொழுது இவ்வளவு சுவாரஸ்யமா விடியும்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கல...’’

‘‘தப்பா சொல்றே தாத்தா... நாட்டுக்கு பெரிய இழப்பு எற்பட்டிருக்கு. இது கவலைக்குரிய விஷயம். சுவாரஸ்யமான விஷயமில்ல!’’

‘‘அஃப்கோர்ஸ்... ஆனா, எந்த கவலைக்குரிய விஷயத்தை இந்த சொஸைட்டி கவலையோட பாத்திருக்கு. சுனாமியையே த்ரில்லர் மாதிரி ரசிச்சவங்கதானேப்பா நாமெல்லாம்?’’

- அவர் கேள்விக்கு ஜாடையில் ‘இதற்கு மேல் பேசாதே’ என்பதுபோல சைகை காட்டிவிட்டு பாத்ரூம் நோக்கி ஓடினாள்.

‘உப்பிருக்கா?’ என்று கேட்டு அறிமுகமான பேஸ்ட்டை வாயினுள் கொழிக்க விட்டாள். கொப்பளிக்க பைப்பைத் திறக்கவும், காற்று வந்தது.

‘‘முத்தழகு...’’ என்று நுரை தெறிக்க குழறினாள். ஓடிவந்த அந்த வேலைக்காரியும், ‘‘ஐயோ அம்மா! மேல டேங்க்ல தண்ணி தீர்ந்துடிச்சும்மா. தண்ணி லாரிக்கு போன் போட்டுருக்கு... வந்துக்கிட்டேயிருக்காங்க...’’ என்றாள்.

‘‘இப்ப நான் என்ன பண்ண?’’ என்று நுரைத்து வெடித்தாள்.

‘‘இரும்மா, கிச்சன்ல இருந்து நல்ல தண்ணிய எடுத்துட்டு வரேன்...’’ என அவள் ஓடினாள்.

ஒரு சொம்பில் வந்த தண்ணீர் அவளை முகம் கழுவ விடவில்லை. ஈரக்கையால் முகத்தில் பூசி விட்டுக்கொண்டாள். அடுத்த உலக மகா யுத்தம் தண்ணீரால்தான் என்பதன் அறிகுறி தொடங்கி விட்டதாகவும் அப்போது அவளுக்குத் தோன்றியது.

‘‘ஆமா, இன்னுமா போர் போடறவங்க வரலை..?’’ என்றபடி எதிரில் வந்தவள் முன், ‘‘எங்கம்மா... வளைச்சு வளைச்சு பக்கத்துத் தெருவுலயே போட்டுக்கிட்டு இருக்காங்க. நம்ம வீட்டுக்கு வர இன்னும் நாலு நாளாகும்மா. அதுவரை லாரித் தண்ணிதான்...’’ - என்றபடியே அவளுக்கு குடிக்க டீ தந்தாள் முத்தழகு.எதனாலோ டீ ருசிக்கவில்லை.

‘‘அப்படின்னா இப்ப குளிக்க முடியாது... அப்படித்தானே?’’

‘‘சாரிம்மா... நேத்து நைட்டே லாரிக்காரன் வர்றேன்னான். அவனுக்கு வந்த கிராக்கி... வருவேனாங்கறான். நம்ம ஏரியாவுல ஒரு வீட்ல கூட தண்ணி இல்லம்மா. எங்கம்மா மழை பெய்யுது? பெஞ்சாலும் மண்ணுல ஊற எங்க இடமிருக்கு. அதான் சிமென்ட் ரோடா போட்டு அடைச்சி விட்டோமே..?’’

- முத்தழகு கூட நீரின் அருமை புரிந்து அசலாய் வருந்திப் பேசினாள். ப்ரியதர்ஷினியும் குளிக்காமலே வர்ஷனைக் காண ஜிம்முக்குப் புறப்பட்டு விட்டாள்.

* * *

ஜிம்!

உடம்பைக் கசக்கிக் கொள்ளவும் ஒரு இடம்... கிட்டத்தட்ட தொழிற்சாலை போல்... ஆபீசுக்குள் ஏ.சிக்குள் வியர்வை வீசை என்ன விலை என்று கேட்ட அவ்வளவு பேரும் ஜிம்முக்குள் அதன் வரவுக்காக உடம்பை பாடாய்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஒரு மனித யானை, நின்ற இடத்தில் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்தது. அவர் அருகில்தான் இருந்தான் வர்ஷன். அவரை கணிசமான அளவு கேலியாகப் பார்த்தான்.

‘‘உன் பார்வைக்கு அர்த்தம் புரியுது தம்பி... அன்னிக்கு ஓட்ற சைக்கிளை ஓட்டாம ஸ்கூட்டரே கதியா கிடந்ததுக்கு, இப்ப நிக்கற சைக்கிளை ஓட்டி பரிகாரம் தேடிக்கிட்டிருக்கேன். கலியுகத்துல எல்லாம் கண்ணுக்கு முன்னஙகறது எவ்வளவு உண்மை தெரியுமா?’’ - என்று கேட்டவரிடம்,

‘‘கலியுக கதையெல்லாம் வேண்டாம் அங்கிள். கலோரிய கன்ட்ரோல் பண்ணுங்க. ‘மிஸ்டர் பீமா’ இருக்கற நீங்க ‘மிஸ்டர் பீனா’ மாறிடலாம். இதைப் போய் எதுக்கு காலத்தோட கோர்த்து கலியுகம் திரேதாயுகம்னுக்கிட்டு..? எப்பவும் ஒரே யுகம்தான்! டைம்ங்கறது ஒன்லி ட்வென்ட்டி ஃபோர் அவர்ஸ்! தட்ஸ் ஆல். நாம இப்ப வாழற இந்த டைம் மட்டும்தான் உண்மை. ஒரு செகண்டைக்கூட வேஸ்ட் பண்ணாம என்ஜாய் பண்ணி வாழணும். அதுதான் என் பாலிசி’’ - என்றபடியே டிரஸ்ஸிங் ரூம் நோக்கிச் சென்றான். வழியிலேயே அவனது கார் முன் ப்ரியா நிற்பது தெரிந்தது.

அப்படியே அவள் முன் போய், ‘‘ஹாய் வந்துட்டியா... அதுவும் இவ்வளவு சீக்கிரமா?’’ என ஆச்சரியமானான்.

‘‘காருக்குள்ள உக்காந்து பேசலாமாடா?’’ - அவள் இறுக்கமாகக் கேட்டாள்.

‘‘சீக்ரெட் மேட்டரா தர்ஷினி...’’

‘‘சிக்கலான மேட்டர்...’’

‘‘தமிழ்ப்படம் நிறைய பாக்கறேன்னு நல்லா தெரியுது. பன்ச் டயலாக் மாதிரியே பேசறே...’’ - என்றபடி கதவைத் திறக்க ரிமோட்டை இயக்க, அடுத்த நொடிகளில் இருவரும் உள்ளடங்க, எஞ்சினை ஸ்டார்ட் செய்து ஏசியை உள்பரவச் செய்தாள் ப்ரியா.

‘‘ரொம்ப ஹாட்டா இருக்க போல தெரியுதே?’’

‘‘அஃப்கோர்ஸ். வீட்ல பல் விளக்க தண்ணியில்ல. எப்படியோ வாயக் கழுவிக் கிட்டு வந்துருக்கேன். சென்னை சிட்டிக்குள்ள, பூமியில நானூறு அடி வரை தண்ணியே இல்ல வர்ஷன். இப்பல்லாம் பூமியை குடைஞ்சு தண்ணிய தேடறதுதான் பெரிய இன்வென்ஷன். எம்.இ., பி.இன்னு படிச்சுட்டு நாம சம்பாதிக்கறதெல்லாம் சுண்டக்கா. ஒரு தண்ணி லாரி இருந்தா நீதான் ராஜா இப்ப!’’

‘‘பாய்ன்ட்டுக்கு வா... தண்ணிதான் இப்ப உன் சிக்கலா?’’

‘‘தண்ணியும்...’’

‘‘அப்ப முதல் விஷயம்..?’’

அவள் காலப் பலகணி பற்றி அவனிடம் பேச ஆரம்பித்தாள். அவன் முதலில் வியந்தாலும், போகப் போகச் சிரிக்க ஆரம்பித்தான். அதிலும் பரிகாசமாக சிரிப்பதில் வர்ஷன் பிஎச்.டியே வாங்க முடிந்தவன்.

‘‘என்ன... நான் காமிக்ஸ் கதை சொன்னதா நினைப்பா உனக்கு?’’

‘‘பின்ன... இதை சீரியஸா நம்பச் சொல்றியா?’’

‘‘நம்பாம..? பகீரதன் சார் காணாமப் போய்ட்டாரே... அந்த வாசகம் கச்சிதமா பொருந்துதே..?’’

‘‘அப்ப பல நூறு வருஷத்துக்கு முந்தியே இந்த ஜனவரி 20ம் தேதி இப்படித்தான் நடக்கும்னு ஒரு மனுஷ மூளை கணக்கு போட்டுருக்கு. அப்படித்தானே?’’

‘‘வேற எப்படி?’’

‘‘லாஜிக் லாஜிக்னு ஒரு வேர்ட் இங்கிலீஷ்ல இருக்கு. டு யூ நோ த மீனிங்?’’

‘‘என்ன மண்ணாங்கட்டி லாஜிக்? லாஜிக்கே இல்லாத ஹாரிபாட்டர் புக்ஸ்தான் இப்ப சேல்ஸ்ல நம்பர் ஒன். ஸ்பைடர்மேன்தான் சினிமால நம்பர் ஒன் ஹீரோ’’ - வெடித்தாள் ப்ரியா.

‘‘கூல் பேபி... நமக்கு பிடிச்ச விஷயங்கள்ல லாஜிக் இருக்கணும்ங்கற அவசியமில்ல. இதெல்லாம் பிடிச்ச விஷயங்கள்... ஆனா நீ சொன்னது ஆராய்ச்சிக்குரிய விஷயம்!’’

‘‘நான் அதை மறுக்கலையே..?’’

‘‘மறுக்கலை சரி... நம்பறியே..?’’

‘‘சரி... நீ எதை வச்சு நம்ப மறுக்கறே? அதுக்கு எனக்கு பதில் சொல்!’’

‘‘வெரி சிம்பிள். ப்ரடிக்ஷன்கற விஷயமே ஒரு யூகம்தான். இன்னிக்கு நடந்த சம்பவம் ஒரு தற்செயலான விஷயமா இருக்கணும். இல்ல, திட்டமிட்ட சதியா இருக்கணும்!’’

‘‘ஆகாயத்துல நடந்தது சதிதான்... அதுல என்ன சந்தேகம்?’’

‘‘அதுமட்டும் சதி இல்ல. காலப் பலகணி - அதுல உள்ள குறிப்புகள்னு எல்லாமே...’’

‘‘எப்படி? எப்படி?’’

‘‘ஏர்கிராஃப்ட் காணாம போகப் போற சதிச்செயலை முன்னாடியே தெரிஞ்ச ஒருத்தன் இந்த காலப் பலகணிங்கற கான்சப்ட்டை கிரியேட் பண்ணி... அந்த சதி செயலாகும்போது அதையே இப்ப நாம நம்பற விஷயமா ஆக்கி... அதனால நம்பிக்கை ஏற்பட்டு காலப் பலகணின்னு ஒரு குப்பையை நம்பள தேட வச்சு... அதுல இன்னிக்கு நடந்த மாதிரியே இனிமே நடக்கப் போற விஷயங்களையும் நம்பள கவனிக்க வச்சு, அதன் மூலமா அவன் நினைக்கற பல விஷயங்கள சாதிச்சுக்கலாம்...’’

- வர்ஷனின் பேச்சு ப்ரியா வரையில் குழப்புவதாகவே இருந்தது. அதே சமயம் காருக்கு வெளியே இரண்டு பேர் அந்தக் காரையே வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி இருந்தனர்.

5

அபிராமி தொலைத்த கொலுசோடு நான் வந்தபோது எல்லோருமே ஆச்சரியப்பட்டார்கள். மற்றவர்கள் ஆச்சரியப்பட்டது எனக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. என் அப்பா சங்கரநாராயணன் அருகில் அழைத்து என்னை ஊடுருவிப் பார்த்தபடியே, 'எப்படி கண்டுபிடிச்சே... எக்ஸ்ப்ளைன் பண்ணு?' என்றபோது அவர் என்னைச் சந்தேகப்படுவதை என்னால் உணர முடிந்தது. என்னாலும் அதைத் தாள முடியவில்லை.

என் வீட்டுக்கு அருகில் ஒரு சோளக்காடு உள்ளது. அபிராமி திருடன் - போலீஸ் விளையாட்டு விளையாடியபோது அதனுள் போய் ஒளிந்ததை என்னிடம் சொல்லியிருந்தாள். அங்கே தேடிச் சென்று யாரும் பார்க்கவில்லை. மற்ற கண்களுக்கு புலனாகிற இடங்களில்தான் கொலுசைத் தேடியிருந்தனர்.

இதனால் அந்த இடம் என் வரையில் மிச்சம் இருந்தது. அடுத்து, அங்கே சோளக்கதிர்கள் காலில் சிக்க வாய்ப்பு மிகுதி. இதனால் கொலுசு அதில் சிக்கி விழுந்திருக்கலாம். இறுதியில் என் யூகப்படி அங்கேதான் கொலுசு கிடந்தது! இதை நான் சொன்னேன். அப்பா என் தோளை பாராட்டுவது போலத் தட்டிக்கொடுத்தார். அவர் எவ்வளவோ முறை என்னைத் தொட்டிருக்கிறார். ஆனால், அந்தப் பாராட்டு ஸ்பரிசத்தை

என்னால் மறக்க முடியாது. அப்போது அவர் ஒரு வார்த்தையும் சொன்னார்."நீ நிஜமா சி.ஐ.டிதான்டா!"

– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அந்த இரண்டு பேரை வர்ஷனோ, ப்ரியாவோ கவனிக்கவேயில்லை. அவர்கள் அந்த அளவு கவனமாக தங்களை யாரும் கவனிக்காதபடி கவனித்துக் கொண்டிருந்தனர்.காருக்குள் ப்ரியாவும் வர்ஷனும் வார்த்தைகளால் முட்டி மோதிக் கொண்டிருந்தனர்.

''வர்ஷன்... எப்படிடா நீ இவ்வளவுக்குப் பிறகும் சந்தேகப்படறே? நாம பல விஷயங்கள்ல முன்னோடிடா... தெரியுமா உனக்கு?''

''எதுல? கொஞ்சம் ஷார்ப்பா சொல்லேன்...''

''திருக்குறள் ஒண்ணு போதுமேடா... ரெண்டாயிரம் வருஷத்துக்கு முந்தியே, பேப்பரும் பேனாவும் இல்லாத காலத்துலயே ஒரு மனுஷன் ஆண்டி, அரசன், பப்ளிக்னு அவ்வளவு பேருக்கும் என்னவெல்லாம் சொல்லணுமோ அவ்வளவையும் சொல்லிட்டுப் போயிட்டான். இன்ஃபேக்ட், வள்ளுவர் சொல்லாத விஷயமில்லை.

தொடாத டாபிக் இல்லை!''

''ரைட்... ஐ அக்ரி! நானும் திருவள்ளுவர் ஃபேன்தான்! ஆனா, அவர் ரெண்டாயிரம் வருஷத்துக்கு முந்திதான் அதை எழுதினாரான்னு எனக்கு டவுட்டா இருக்கு. அடுத்து, திருவள்ளுவர்

ஒரே மனுஷனா... இல்ல, பலர் சேர்ந்து திருவள்ளுவர்னு ஒரு பெயர்ல திருக்குறளைக் கொடுத்தாங்களான்னும் எனக்குள்ள பல டவுட்ஸ் இருக்கு...''

''அடப்பாவி! நீ பேசறதக் கேட்டா, ரோஷமுள்ள தமிழன் உன்ன கல்லாலதான்டா அடிப்பான். அப்புறமா என்ன சொன்னே... நீ அவரோட ஃபேனா? டேய்... அவரை என்ன இந்த ஷாருக், சல்மான்கான் லிஸ்ட்ல வச்சுட்டியா?''

''ஏன்... ஃபேன்னு சொல்லக் கூடாதா... அதுல என்ன தப்பு?''

''தப்புதான்டா... ரசிக்கிற விஷயத்துலதான் ஒருத்தர் ஃபேனா இருக்க முடியும். மதிக்கிற விஷயத்துல - அதுலயும் உயிருக்கும் மேலா மதிக்கிற விஷயத்துல - ஒருத்தர் சிஷ்யனாவோ இல்லை பக்தனாவோதான் இருக்க முடியும்!''

‘‘சிஷ்யன்... பக்தன்... ஓ! ப்ரியா, என்ன நீ எங்கெங்கியோ போறே? இந்த வார்த்தைகள்னாலே எனக்கு அலர்ஜிங்கறது உனக்குத் தெரியாதா? திருக்குறளை நான் பெருசா மதிக்கறேன். இதோட இந்தப் பேச்ச விடு. நாமளும் டாபிக் மாற வேண்டாம். நீ ஷார்ப்பா விஷயத்துக்கு வா... முடிவா என்ன சொல்றே நீ?’’

‘‘என் தாத்தா அந்த உதிரமுத்து வள்ளுவர்கிட்ட இருந்து எந்த மாதிரி தகவல்களோட வர்றார்னு பார்ப்போம். அப்புறம் அந்த வள்ளுவன் சொன்ன மாதிரி அந்த டயத்துல அந்த ஆளோட உயிர் போகுதான்னும் கவனிப்போம்...’’

‘‘இது உனக்கே அநியாயமா படலை?’’

‘‘எது?’’

‘‘ஒருத்தன் சாகப்போறான்ங்கறதும், அதை கவனிப் போம்ங்கறதும்...’’

‘‘அதை நம்பினாதானே அவரை சாக விடாம செய்ய முடியும்..?’’

‘‘நம்பித்தான் இதை செய்யணும்னு இல்ல பேபி. சந்தேகப்பட்டாலும் செய்ய முடியும்!’’

‘‘அந்தக் காலத்து விசுவுக்கு நீ சொந்தக்காரனாடா?’’

‘‘நீ கே டி.வி.ல நிறைய தமிழ் சினிமா பாக்கறேங்கறது நல்லா தெரியுது. லுக்... அந்த உதிரமுத்து வள்ளுவரை நாம எப்படியாவது அந்த நேரத்துக்கு முந்தியே நம்ம கஸ்டடிக்குக் கொண்டு

வந்துடுவோம். என் யூகம் சரியா இருந்தா, அந்த டயத்துல அவரை யாராவது கொலை செய்யலாம். இல்லைன்னா அந்த நேரம் உயிர் போகற மாதிரி முன்னாடியே திட்டம் போடலாம். எதுவா இருந்தாலும் அந்த உதிரமுத்துவை நாம சாக விடாம தடுத்துட்டா ஒரு விஷயத்தை நிரூபிச்சிடலாம்!

இந்த பிரடிக்ஷன், காலப் பலகணி ஜோசியமெல்லாம் சரியான ராஜபக்ஷே புளுகு... என்ன சொல்றே?''

''நீ சொல்றதும் சரிதான். ஒரு மனுஷன் உயிர் போகப் போறது தெரிஞ்சு அதை வேடிக்கை பாக்க நினைக்கறதே பெரிய தப்பு. இப்படி ஏதாவது செய்து தான் பாக்கணும்...''

''ப்ரியா... நான் ஒரு குறும்படம் எடுத்து, அப்படியே ஃபிலிம் டைரக்டரா ப்ரமோட் ஆகற ஆசைல இருக்கறது உனக்குத் தெரியும்தானே?''

''அதுக்கென்ன இப்போ?''

''இல்ல... என்னை உன் தாத்தாவுக்கு அசிஸ்டென்ட் ஆக்கிடுவியோன்னு பயமா இருக்கு...''- அவள் அவனது நகைச்சுவை உணர்வை ரசித்தாள். அப்படியே அவன் கழுத்தை முதலில் பிடித்து, பின் அவன் பின்தலைமுடியை விரல்களால் சுழற்றினாள்.''ஐயோ... என் கை விரல்களும் துடிக்குதே...'' என்று அவள்முன் விரல்களை அவன் உதறிக் காட்டினான்.

''நீயும் என்ன மாதிரி பண்ணு. நோ அப்ஜக்ஷன்!''

‘‘ப்ளீஸ்! நான் முன்னால பண்றேனே...’’ என்றபடி அவளின் முகத்துக்கு முன் விரல்களை நெளித்தபடி கைகளைக் கீழே இறக்கினான்.

‘‘நாட்டி... ஒடிச்சிடுவேன் கைய!’’ என்றாள்.

‘‘அப்ப கல்யாணத்துக்கு அப்புறம்தான்னு சொல்லு...’’

‘‘கல்யாணமா...? உனக்கும் எனக்குமா..? என்னடா... ஆணும் பெண்ணும் ஃப்ரெண்ட்ஷிப்போட இருக்க முடியாதா... நான் இருந்து காட்றேன்னு பீலா விட்டியே... அதெல்லாம் அப்ப சும்மாவா?’’

‘‘அதான் நீயே பீலான்னுட்டியே... அப்புறம் நீயே இப்படி கேட்டா எப்படி?’’ - அவன் உதடுகள் பேசினாலும், விரல்கள் அந்தரத்தில் நெளிந்தபடி இருந்தன.

‘‘டேய் வர்ஷா... சீப்பா பிஹேவ் பண்ணாத! கொஞ்சம் இடம் கொடுத்தா போதுமே... இது கார் சீட்! பெட்ரூம் இல்ல...’’ - அவள் பேசிக்கொண்டே காரின் கதவைத் திறந்தாள்.

வேகமாய் இறங்கி அவனைப் பார்த்து விஷமச் சிரிப்பு சிரித்தபடி அவளது வீகோ டூவீலரை நோக்கிச் சென்றாள். அவன் வெறித்தான்...

சற்று தூரத்தில் அந்த இரண்டு பேரும்கூட வெறித்தபடிதான் இருந்தனர்!

* * *

மிடுக்காகப் புறப்பட்ட கணபதி சுப்ரமணியனை ஒரு சாரைப் பார்வை பார்த்தாள் பத்மாசினி. டி-ஷர்ட், ஜீன்ஸ் பேன்ட், தலையில் கேப், பின் காலரில் சன் கிளாஸ் என்று கணபதி சுப்ரமணியன் மிரட்டினார். இதில் மேலே ஸ்ப்ரே வாசம் வேறு!

‘‘நீங்க அலையவே கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார். ஆனா, ஏதோ பிக்னிக் ஸ்பாட்டுக்குப் போற மாதிரி இப்படிக் கிளம்பினா எப்படி?’’ என்று தோரணையாகக் கேட்டாள்.

அவர் ஒரு அலட்சியப் பார்வை பார்த்தார். பின், ‘‘போய்... உன் கர்நாடக சங்கீதத்தைப் பிடிச்சிக்கிட்டு சாதகம் பண்ற வழியப் பார். என்னை யாரும் கேள்வி கேட்டா எனக்குப் பிடிக்காதுன்னு உனக்குத் தெரியாது?’’ - அதட்டலாகக் கேட்டவர் அதே வேகத்தில் வெளியே சென்று காரை எடுத்தார். அவர் பேச்சு சமையல் கட்டில் இருந்த முத்தழகுவை சிரிக்க வைத்தது. அதை கவனித்த பத்மாசினி

‘‘என்னடி சிரிக்கறே... அவர் பேச்சு உனக்கு சிரிப்பா இருக்கா?’’- என்று அதட்டினாள்.

‘‘இல்லம்மா... இந்த வயசுலயும் சுறுசுறுப்பா அவர் செயல்படறதை நினைச்சேன். என் பையன் இன்னும் கூட படுக்கைல இருந்து எழுந்திரிச்சிருக்க மாட்டான். ஆனா பாருங்க இவரை...’’ என்றாள்.

‘‘என்னத்த பாக்கறது... இவர் பாட்டுக்கு எதையாவது தேடிப் போய் எங்கயாவது விழுந்து வச்சா அப்புறம் நீதான் பார்த்துக்கணும். பாத்துக்கறியா?’’

‘‘அப்படியெல்லாம் ஆகாதும்மா... கொஞ்சம் முந்திகூட பரண் மேல இருந்து பழைய பித்தளை காபி ஃபில்டரை எடுத்துக் கொடுக்கச் சொன்னேன். விறுவிறுன்னு ஏறி எடுத்துக் கொடுத்துட்டாரும்மா...’’

‘‘அடிப்பாவி... நீ ஏறி எடுக்கறதுக்கென்ன?’’

‘‘உள்ள ஒரே இருட்டு... பயமா இருந்திச்சு. கடைசியில அவர்தான் எடுத்துக் கொடுத்தார்!’’

‘‘என்னத்த எடுத்துக் கொடுத்தார். அந்த ஃபில்டர் இல்லேன்னா என்ன இப்போ?’’

‘‘இந்த ஃபில்டர்ல போடற காபிதான் நல்லா இருந்ததுன்னு அவர் சொன்னார்.

இதை எப்பவோ பரண் மேல தூக்கிப் போட்டதை சொன்னேன். உடனேயே பெருசா ஒரு கறுப்புக் கண்ணாடிய போட்டுக்கிட்டு பரண்மேல ஏறினவர், ஒரு நிமிஷத்துல எடுத்துக் கொடுத்துட்டார். அந்த கண்ணாடிய போட்டா கும்மிருட்டுல கூட நல்லா பார்க்க முடியுமாமே..?’’ - முத்தழகு விவரிக்க விவரிக்க... பத்மாசினிக்கு அவளோடு ஏன் பேசினோம் என்று இருந்தது.

‘‘இப்பகூட அவர் யாரோ ஒரு வள்ளுவரை பாக்கதாம்மா போறாரு. அவர்கிட்ட பெருசா ஜோசிய புத்தகமோ, பலகையோ இருக்காம்ல..?’’

‘‘இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?’’

‘‘டெல்லிக்கு போன் போட்டு யாரோ பிஸ்வஜித்னு ஒருத்தர்கூட பேசிக்கிட்டிருந்தாரும்மா. அப்ப காதுல விழுந்துச்சு...’’

‘‘பிஸ்வஜித்தா... அப்ப ஹிந்தியில இல்ல பேசியிருப்பாரு?’’

‘‘எனக்கு ஹிந்தி பேச வராதும்மா. ஆனா நல்லா புரியும். மூணு வருஷம் ஒரு சேட் வீட்ல வேலை பார்த்துருக்கேனே..?’’

பதிலுக்கு பதில் என்று முத்தழகுவும் மிரட்டினாள்.பத்மாசினிக்கு அப்போதைக்கு ‘கலங்கி நிற்கிறேன் காமாட்சி... கருணை செய்வாயே!’ என்று பந்துவராளியில் பாட வேண்டும் போல் இருந்தது.

* * *

திரிசூலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு அப்பால் உள்ள பாதையில் வெகுதூரம் போனபோது, நான்கு மலைகளுக்கு நடுவில் தொட்டில் போல் உள்ள பாகத்தில் அந்த சிவன் கோயில் இருந்தது. அந்தக் கோயில் தெருவில்தான் உதிரமுத்து வள்ளுவரின் வீடும் இருந்தது.

ஒருமுறை காதில் விழுந்தாலே போதும்... டோர் நம்பரை மறக்க முடியாது. பதிமூன்று என்கிற எண்! கண்டுபிடித்து கதவைத் தட்டவும்,

‘‘வந்துட்டீங்களா சார்... ரொம்ப சந்தோஷம்’’- என்றபடியே வரவேற்றார் அந்த உதிரமுத்து வள்ளுவர்!அறுபது வயது இருக்கலாம் எனும்படியான தோற்றம். ஒல்லியான தேகம். நெற்றியில் சந்தனப் பொட்டு, மாநிறம்... கணபதி சுப்ரமணியன் அவரை நன்றாகவே ஊடுருவினார். அப்படியே அந்த வீட்டையும்... ஒட்டுக்கூரை வீடு! மேல் பாகம் நகரத்து வீடுகள் போல தட்டையாக இல்லாமல் பிரமிடுபோல எழும்பி நிற்க, கூரை சரிந்திருந்தது. சரிந்த அந்தக்

கூரையில் ஆங்காங்கே நிறைய ஏட்டுக் கட்டுகள் செருகப்பட்டு, கூரைச்சரிவே ஒரு ரேக் போல பயன்படுத்தப்படுவதும் தெரிந்தது.

ஒரு இடத்தில் குண்டு பல்ப் ஹோல்டருடன் தொங்கிக் கொண்டிருந்தது. கீழே தரையில் கயிற்றுக் கட்டில். அதன் மேல் கறுப்பு நிற குமாரபாளையப் போர்வை... சுவற்றில் முக்கோணப் பிறை. அதை ஒட்டி ஒரு கிண்ணம். அதில் விபூதி. முக்கோணப் பிறைக்குள் ஒரு எந்திரம் கொண்ட மரச்சட்டம். அதன் முன் ஒரு அகல் விளக்கு.கணபதி சுப்ரமணியன் கண்களாலேயே படம் பிடித்து முடித்தவராக கட்டிலின் மேல் அமர்ந்தார்.

‘‘நீங்க எப்படியும் வருவீங்கன்னு தெரியும்யா. காலைல இருந்தே வெளிய வேப்ப மரத்துல காக்கா கத்த ஆரம்பிச்சிடுச்சா... உள்ள பல்லியும் அப்பப்ப ஆமாம்னுச்சி...’’ - அந்த வள்ளுவன் பேச்சு வியப்பைத் தந்தது. காக்கைக்கும் பல்லிக்கும் தன்னைப் பற்றி என்ன தெரியும்? அவற்றுக்கு அவற்றைப் பற்றியே எதுவும் தெரியாதே! கணபதி சுப்ரமணியன் மனதில் ஒரு கேலிச்சிரிப்பு.

‘‘என்னய்யா...

காக்கா, பல்லின்னு ரொம்ப கர்நாடகமா பேசறேனேன்னு சிரிப்பு வருதாக்கும்? அரிச்சந்திரன்கூட இப்ப உசுரோட இருந்தா எதுக்கு அநாவசியமா கஷ்டப்பட்டுக்கிட்டுன்னு பொய் சொல்லிடுவான்யா... இந்த காக்காவும் பல்லியும் மட்டும் சொல்லவே சொல்லாதுய்யா’’ - வள்ளுவனின் பதிலில் ஆணித்தரம்.கணபதி சுப்ரமணியன் சற்று நிமிர்ந்து அமர்ந்தார். வள்ளுவரும் அதற்கு மேல் பேசாமல் ஒரு இருண்ட அறைக்குள் போய் ஒரு தகரப் பெட்டியை எடுத்து வந்து கணபதி சுப்ரமணியன் முன் வைத்தவராக...

“இதுல எல்லாம் இருக்குய்யா… உங்க மரண தேதி உட்பட!” என்றபோது கணபதி சுப்ரமணியனுக்கே சற்று நெஞ்சை அடைத்தது!

6

அப்பா என்னை சி.ஐ.டி என்று பாராட்டியது எனக்குப் பெரிய உற்சாகத்தை அளித்தது. இளம் மாணவப்பருவம் என்பது மனித வாழ்வில் சக்தி மிகுந்த பருவம். இது அமைவதைப் பொறுத்தே பெரும்பாலும் எல்லோரது ரசனையும் ஏனைய அடிப்படைத் திறமைகளும் ஒரு முடிவான வடிவம் கொள்ளும். இந்தக் காலகட்டத்தில் உண்ணும் உணவே சாகும்வரை பிடித்த மற்றும் பிடிக்காத உணவு வகைகளைத் தீர்மானிக்கும்.

அதேபோல்தான் இக்காலகட்டத்தில் கேட்கும் இசை, காணும் காட்சி, ஏற்படும் அனுபவங்கள் என்று ஒவ்வொன்றும் ஒரு மனிதனுக்கான அடிப்படையாகத் திகழும். இது ஓர் அளவுகோலாக மாறி, இந்த அளவுகோலால்தான் நாம் வாழும் நாளில் எதையும் அளந்து பார்ப்போம். இம்மட்டில் ஒவ்வொருவருக்கும் அவரவர் சூழலுக்கேற்ப அளவுகோல்கள் அமையும்.

அளவுகோல் என்றால் அது அனைவருக்கும் பொதுவாய்த்தான் இருக்க வேண்டும். ஒரு மீட்டருக்கு நூறு சென்டிமீட்டர் என்றால் உலகம் முழுக்க இதுதான் அளவு. எங்கும் மாறாது; மாறவும் கூடாது. ஆனால் ஒரு மனிதன் தனக்குள் உருவாக்கியிருக்கும் அளவுகோல் மட்டும் ஒன்றுபோல் இருக்கவே இருக்காது.

இதை நான் இவ்வளவு விரிவாகக் கூறிட காரணம் உண்டு. இளம் மாணவப் பிராயத்தில் எனக்கேற்பட்ட அனுபவங்கள், எனக்கு வாய்த்த சூழல்கள், என் குடும்பத்தின் நிலை என்று எல்லாமே மிக வேறுபட்டவை. பல ஆயிரம் பேரில் ஒருவருக்கே என் போன்ற நிலை ஏற்பட முடியும். என் அப்பா அபூர்வமான பொருட்களைச் சேமிப்பதில் ஆர்வமுடையவராக இருந்தார். ஒரு சிவப்பு வண்ண மரத்தால் ஆன பேனாவைத்தான் அவர் பயன்படுத்துவார். அதைக் கொண்டு டைரி எழுதுவார்.

இதைக் கவனித்த எனக்குள்ளும் டைரி எழுதும் பழக்கம் தொற்றிக்கொண்டது. அப்பாவின் டைரியை ஒருநாள் எடுத்து படித்துப் பார்த்தேன். பல வரிகள் எனக்குப் புரியவேயில்லை. சில சொற்களும் எனக்கு அதில் புதிதாயிருந்தன!'- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

கணபதி சுப்ரமணியன் அந்த வள்ளுவனை மேலும் கீழுமாகப் பார்த்தார். அப்படியே பெட்டியையும் பார்க்க, வள்ளுவன் அந்தப் பெட்டியைத் திறந்து காட்டத் தொடங்கினார்.

உள்ளே ஏட்டுக் கட்டுகளுடன் சமகாலத்து டைரி ஒன்றும் இருந்தது. டைரியின் முகப்பு நீல நிறத்தில் இருக்க, அதன் மேல் 1990ம் வருட தடயம். கூடவே திசை காட்டும் கருவி ஒன்று. அதன்பின் காம்பஸ் பாக்ஸ் போல ஒரு பெட்டி. அதனுள் தூய ஸ்படிகக் கட்டிகள் பல சைஸ்களில்... கூடவே பாசிப்பருப்பளவு பருமனில் சங்கிலியோடு கட்டப்பட்ட கூரிய முனை கொண்ட ஏதோ ஒன்று இருந்தது. அப்புறமாய் எண்ணி பன்னிரண்டு சோழிகள் (அது என்ன கணக்கோ?)... கூடவே ஒரு செம்புத் தாயத்தும், வெள்ளித் தாயத்தும் இருந்தன.

‘‘இதெல்லாம்..?’’

‘‘இதெல்லாமா... என் பாட்டன் பயன்படுத்தின பொருட்கள்!’’

‘‘ஏடும் டைரியும் சரி! இதெல்லாம் கூட இருக்கே... எதுக்கு?’’

‘‘திசை காட்டி எதுக்குன்னு சொல்லத் தேவையில்லை. ஸ்படிகம் நீங்க இருக்கற இடத்துல இருக்கற பாசிட்டிவ் எனர்ஜியை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கும். உதாரணமா, இங்க ஆவியோ... இல்ல, கெட்ட சக்திகளோ இருந்தா, இந்த ஸ்படிகம் சூடாகிடும். இது பனிக்கட்டி மாதிரி இருந்தா இங்க எந்த கெட்ட சக்தியும் இல்லன்னு அர்த்தம். இந்த சோழிகள் நீங்கள் கேக்கற கேள்விக்கு பதில் சொல்லும்...’’

‘‘சோழி பதில் சொல்லுமா... எப்படி?’’

‘‘நீங்க ஒரு கேள்வி கேட்டுட்டு குலுக்கிப் போடுங்க... நான் விளக்கம் சொல்றேன்!’’

‘‘ஜோசியமா... ஐ டோன்ட் பிலீவ் திஸ் நான்சென்ஸ்!’’

‘‘அப்படிச் சொல்லாதீங்க... இப்படிப் பேசினாலே எதிர்மறை எண்ணம் கொண்டவர்னு அர்த்தம். நம்பி இதைப் புரிஞ்சிக்க முயற்சி எடுங்க...’’- பளிச்சென்ற சுருக்கமான அந்த பதிலைத் தொடர்ந்து அரைமனதாக கணபதி சுப்ரமணியன் சோழிகளை எடுத்தார்.

‘‘உங்க கேள்வி என்ன?’’

‘‘என் கேள்வி... என் கேள்வி...’’ கணபதி சுப்ரமணியன் சற்று யோசித்தார்.

‘‘கேள்விக்கா பஞ்சம்? எவ்வளவோ இருக்கும்... உதாரணமாக, வீட்ல நல்ல காரியங்கள், உங்களுக்கு ஏதாவது வியாதி, வேதனைகள், வீடு வாசல் வாங்கறதுன்னு... நடக்குமா, நடக்காதாங்கற மாதிரி எவ்வளவோ விஷயங்கள் இருக்குமே?’’

‘‘எதுக்கு அதெல்லாம்..? உங்க மரணச் செய்தியையே எடுத்துக்குவோம்...’’- கணபதி சுப்ரமணியன் அப்படிச் சொன்ன நொடி, அந்த வள்ளுவன் முகத்தில் ஒரு சலனம். கண்களிலும் கலக்கம்.

‘‘என்ன முழிக்கிறீங்க... நான் அதைப் பத்திதான் உங்ககிட்ட நிறைய பேசணும்!’’

‘‘அதுல பேச எதுவுமில்லீங்க சார். அது அவ்வளவுதான்... முடிஞ்ச விஷயம்!’’

‘‘மண்ணாங்கட்டி... ஆமா! எதை வச்சு அவ்வளவு துல்லியமா தேதி, நேரம், வினாடி சுத்தமா கணக்கு போட்டீங்க?’’

‘‘கணக்கு போடுறவன்தானே ஜோசியன்! அதுலயும் பரம்பரை பரம்பரையா இதையே தொழிலா கொண்ட எங்களுக்கு கணக்கு போட சொல்லியா தரணும்?’’

‘‘இப்படி கணக்கு போட்டு ஒருத்தர் மரணத்தை கண்டுபிடிக்க முடியும்னா இந்த பூமி இப்ப இருக்கற மாதிரியே இருக்காதே? இட்ஸ் இம்பாஸிபிள்..!’’

‘‘சரியாதான் சொல்றீங்க! ஒருவர் மரணத்தை மிகச்சரியா சொல்ற கணக்கு அஞ்சும் மூணும் எட்டுங்கற உலகம் போடற கணக்கு கிடையாது. அது அஞ்சும் மூணும் ஒன்பதுங்கற வினோத கணக்கு... எல்லாராலயும் சுலபமா போட முடியாது!’’

‘‘அஞ்சும் மூணும் ஒன்பதா... இது என்ன கூத்து?’’

‘‘கூத்தேதான்! உதாரணம் காட்டி நீங்க சொன்ன ‘கூத்து’ங்கற விஷயம் இருக்குதே... இதுதான் உலக இயக்கம்!’’

‘‘சப்ஜெக்ட் மாற வேண்டாம். நான் ‘கூத்து’ன்னு கேலியா சொன்னேன்.’’

‘‘நீங்க எப்படிச் சொன்னாலும் அதுதான் உண்மை.நடராஜ பெருமானோட கூத்து வடிவம்தான் உலக இயக்கம்!’’

‘‘சோழில ஆரம்பிச்சு கடைசில நடராஜர்கிட்ட வந்துட்டீங்களே... மிஸ்டர் வள்ளுவர்! சுத்தி வளைக்காம நேரா விஷயத்துக்கு வாங்க. இந்த சோழிகள் எப்படிப் பேசும்? அப்படிப் பேசினா அது உங்க மரணம் பற்றிய என் கேள்விக்கு பதில் சொல்லுமா?’’

‘‘இந்தப் பன்னிரண்டு சோழிகளும் பன்னிரண்டு ராசிகளைக் குறிக்குது. உங்க கேள்வியோ மரணம் பற்றியது! அதாவது என் மரணம் பற்றி நான் சொன்னது உண்மையா... இல்ல, பொய்யாங்கறதுதானே?’’

‘‘உம்... கிட்டத்தட்ட அப்படித்தான்!’’

‘‘சரி! உங்க கையால குலுக்கிப் போடுங்க...’’

‘‘போட்டால்..?

’’‘‘எந்த ஒரு உயிர் பிரியவும் ஆயுள்காரகனான சனி சம்மதிக்கணும். அந்த சனிக்குரிய எண் எட்டு. இந்த சோழில லேசா கறுப்பா இருக்கற சோழியும் சனிக்கு உரியது. இதை நீங்க மூன்று முறை அணுகலாம். இந்த மூன்று முறையும் இது நிமிர்ந்து விழாது. கூடவே எட்டு சோழிகள் கவிழ்ந்து விழும். அப்படின்னா மரணம் உறுதி. என் கணக்கும் சரின்னு அர்த்தம்!’’

‘‘ஓ... இதுக்குப் பேர்தான் சோழி பேசறதுங்கறதா?’’

‘‘ஆமாம்...’’

‘‘இதை என்னால ஏத்துக்க முடியாது. சனிக்கு எட்டாம் நம்பர்னு டிசைட் பண்ணது யாரு?’’

‘‘நீங்க நதிமூலம், ரிஷிமூலம் பார்க்கத் தொடங்கினா அது போய்க்கிட்டே இருக்கும்...’’

‘‘என்ன பேசறீங்க நீங்க? அப்படிப் பார்க்கப் போய்தான் இன்னிக்கு மனுஷன் இவ்வளவு தூரம் வளர்ந்துருக்கான். இல்லேன்னா குரங்காவே இருந்திருப்போம்!’’

‘‘சார்... நான் ஒண்ணும் விஞ்ஞானத்துக்கு எதிரி இல்லீங்க. ஒரு வகைல இதெல்லாமும் விஞ்ஞானம்தாங்க!’’

‘‘உளறாதீங்க... இந்த மாதிரி அஞ்சும் மூணும் ஒன்பதுங்கற ராங் கால்குலேஷனை எல்லாம் விஞ்ஞானம்னு சொன்னா சிரிப்பாங்க!’’

‘‘நான் உதாரணத்துக்காக அப்படிச் சொன்னேங்க... உள்ளுக்குள்ள நுட்பம் இருக்குங்க. ஒன்பதுல பாதி எவ்வளவுங்க?’’

‘‘இது என்ன அடுத்த கணக்கா?’’

‘‘என் கேள்விக்கு பதில் சொல்லுங்க...’’

‘‘நாலரை...’’

‘‘இல்லீங்க... ஒன்பதுல பாதி நாலுங்க!’’

‘‘மிஸ்டர் வள்ளுவர்... நான் உங்கள தேடி வந்ததை ஒரு வேண்டாத வேலைன்னு ஆக்கிடாதீங்க. என்கிட்ட பால்வாடி பசங்க கிட்ட பேசற மாதிரி எல்லாம் பேசக்கூடாது!’’

‘‘சார்... சத்தியமா நான் சீரியஸாதான் பேசிக்கிட்டிருக்கேன். இது ஒரு ஞானியோட கேள்வி. மேலோட்டமா பார்த்தா ஒரு விடுகதை மாதிரி விளையாட்டா தெரியும். ரோமன் லெட்டர்ல ஒன்பதை எழுதி அதை சரியா வெட்டிப் பிரிச்சா, பிரிக்கப்பட்ட இரண்டு துண்டும் நாலுங்கற ரோமன் லெட்டராயிடும். எழுதிப் பிரிச்சு பாருங்க!’’

‘‘ஓ... நீங்க அப்படி வர்றீங்களா? இட் ஈஸ் ஜிம்மிக்ஸ்!’’

‘‘ஜிம்மிக்ஸோ, பம்மிக்ஸோ... இதை நாங்க ‘குறுகு’ன்னு சொல்வோம்...’’

‘‘குறுகு..? நல்லாருக்கே! ஒரு உண்மை குறுகலா ஒளிஞ்சிருக்கு. ஐ அண்டர்ஸ்டுட்!’’

‘‘பெரிய உண்மைகள் இப்படி குறுகாதான் நம்மைச் சுத்தி ஒளிஞ்சிருக்கு. ஒண்ணு, ரெண்டுதான் வெளியே தெரிய வந்துருக்கு!’’

‘‘இருக்கலாம்... இதையும் நான் மறுக்கல!’’

‘‘பல குறுகுகளை எங்களப் போல வள்ளுவர்களால சுலபமா கண்டுபிடிச்சு கணக்குப் போட்டுப் பார்க்க முடியும். இந்த சோழி பேச்சும் ஒருவித குறுகுங்க...’’

‘‘அங்க சுத்தி இங்க சுத்தி கடைசில சோழிகிட்ட வந்துட்டீங்களே...ஆனா என்ன சொன்னாலும் நான் இதை நம்ப மாட்டேன். இதை வச்சுக்கிட்டு பல்லாங்குழி விளையாடலாம். இப்ப அதுவும் போச்சு. இது கம்ப்யூட்டர் கேம்ஸ்களுக்கான காலம். பை த பை... நான் விஷயத்துக்கு வரேன்!’’

‘‘வாங்க... அதுதான் எனக்கும் வேணும்.’’

‘‘நீங்க ‘இறந்துடுவேன்’னு நம்பறதாலதான் இதை எல்லாம் என்கிட்ட கொடுக்கறீங்களா?’’

‘‘ஆமாம்...’’

‘‘வாழ நீங்க ஆசைப்படலையா?’’

‘‘அது முடியாது...’’

‘‘அப்ப உங்களுக்கு பிளட் கேன்சர் மாதிரி ஏதாவது கொடிய வியாதி இருக்கா...?’’

‘‘எந்த வியாதியுமில்ல. அப்பப்ப வயோதிகம் காரணமா வந்து போகற சளி, இருமல் தவிர...’’

‘‘அப்ப நீங்க எப்படி சாக முடியும்?’’

‘‘அது எப்படி வேணும்னாலும் நடக்கலாம்!’’

‘‘உங்க கணக்கைக் கடந்து, உங்க உயிர் பிரிய எந்தக் காரண காரியமும் இல்லாத நிலைல, அந்தக் கணக்கை நீங்க நம்பறது உங்களுக்கு பைத்தியக்காரத்தனமா தெரியலையா?’’

‘‘உங்க இடத்துல இருந்து பார்த்தா அப்படித்தான் தெரியும். ஆனா, என் அனுபவத்துக்குத்தான் உண்மை தெரியும்!’’

‘‘என்ன பெரிய அனுபவம்? மனசைப் பத்தி நான் பல புத்தகம் படிச்சவன். தீவிரமா அது நம்பற விஷயம் நடக்கும்னுதான் விஞ்ஞானியும் சொல்றான். அப்படி நீங்க ஒருவேளை நம்பினாலும், இவ்வளவு துல்லியமா ‘இந்த நொடியில உயிர் பிரியும்’னு சொல்ல முடியாது. அது சாத்தியமேயில்லை.’’

‘‘இப்ப என் மரணம் பற்றின பேச்சு எதுக்கு? நீங்க இதைக்கொண்டு காலப் பலகணியைக் கண்டுபிடியுங்க. விஞ்ஞானிகள் ஒரு பக்கம் புதுசு புதுசா பல விஷயங்கள கண்டுபிடிச்சிக்கிட்டே இருக்காங்க. ஆனா அவங்களோட எல்லாவித கண்டுபிடிப்பையும் விட பெரிய அதிசயம் இந்த காலப் பலகணி! நம்ம முன்னோர்கள் விஞ்ஞானிகளுக்கெல்லாம் பெரிய விஞ்ஞானிகள்னு சொல்ற அற்புதம் இந்த காலப் பலகணி! என் கருத்தை நிரூபிக்க ஆதாரமான விஷயம்தான் என் மரணம்.’’

- வள்ளுவர் எந்தக் கேள்விக்கும் திணறவில்லை. கணபதி சுப்ரமணியனுக்கு அவரிடம் அடுத்து எந்தக் கேள்வி கேட்பது என்பதில் திணறல். சிறிது நேரம் இருவருக்கும் இடையே மௌனம் நிலவியது. பின் அதை கணபதி சுப்ரமணியனே உடைத்தார்.

‘‘மிஸ்டர் வள்ளுவர்! இந்த காலப் பலகணியை உங்க தாத்தா கண்டுபிடிச்சதா உங்க லெட்டர்ல எழுதியிருந்தீங்க. அவர் ஏற்கனவே கண்டுபிடிச்சத திரும்ப எதுக்கு கண்டுபிடிக்கணும்? அது எங்க இருக்குன்னு தெரியாதா?’’

‘‘நல்ல கேள்விய, சரியான கேள்விய இப்பதான் கேட்டுருக்கீங்க. என் தாத்தா பலகணி உள்ள இடத்துக்குப் போனதும், பலகணியைப் பார்த்து குறிப்புகள் எடுத்துக்கிட்டதும் மட்டும்தான் நிஜம். அந்த இடம் எங்க இருக்குன்னு அவருக்குத் தெரியாது.

அப்ப அவர், உங்களப் போல சரித்திர ஆராய்ச்சி செய்யற ஒருத்தர் துணையோட தான் போனார். குறுகு தெரிஞ்சவர்ங்கறதால அவர் என் தாத்தாவைக் கூட்டிக்கிட்டு போய் அப்பப்ப சில விளக்கங்கள் கேட்டு தெரிஞ்சிக்கிட்டார். தாத்தாவும் முதல்ல இதை நம்பல. ஒரு சுற்றுப்பயணம் போன மாதிரிதான் போனார். அதைப்பத்தி இதுல எழுதியிருக்கார்.

ஒரு ஆச்சரியமான விஷயம் என்னன்னா, யார் எங்க தாத்தாவை கூட்டிக்கிட்டுப் போனாரோ, அவர் பலகணியைப் பார்த்து குறிப்புகள் எடுத்துட்டு வந்த இரண்டே நாள்ல இறந்து போயிட்டார். அவர் அப்படி இறந்துடுவார்ங்கற தகவல் பலகணில இருந்ததாம்.

இதுக்குப் பிறகுதான் தாத்தாவுக்கே பலமான நம்பிக்கை வர ஆரம்பிச்சது. அந்தப் பலகணியில பொதுவா ஒரு குறிப்பும் இருக்கு. அதைப் பாக்கறவங்க யாரா இருந்தாலும் அதிகபட்சம் 27 நாள்தான் உயிரோட இருப்பாங்களாம். என் தாத்தா வரையிலயும்கூட அது பலிச்சிடுச்சு!''

‘‘இது என்ன... இப்படி மிரட்றீங்க? அப்ப அதைக் கண்டுபிடிச்சு என்னையும் 27 நாள்ல ‘செத்துப் போ’ன்னு சொல்றீங்களா?''

‘‘நான் அப்படிச் சொல்லல... சாகற விதி உள்ளவன்தான் அது கிட்டயே போவான். ஆனா நீங்க தான் இதை எல்லாம் நம்பாதவராச்சே...''

‘‘குழப்பறீங்களே மிஸ்டர் வள்ளுவர்...''

‘‘முதல்ல இதை எல்லாம் படிங்க. யாரையும் கூட்டு சேர்த்துக்காதீங்க. இதை ஒரு கூட்டம் வெளிய தேடிக்கிட்டு இருக்கு. இந்த தகரப் பெட்டிக்கு மட்டுமே அம்பது கோடி ரூபாய் வரை தர ஆள் இருக்கு. தங்கம், வைரம், நவரத்தினம் உள்ள புதையலை விட அதிசயப் புதையல் இந்த காலப் பலகணி.

இது அறிவுப் புதையல்! இதை நான் பணத்துக்கு ஆசைப்பட்டு விக்க விரும்பலை. உங்க மூலமா இது எப்படி வெளிப்படணுமோ அப்படி வெளிப்படட்டும். நான் பிறந்த இந்த பாரத நாடு சாமியார்கள் தேசமில்ல, சாதனையாளர்கள் தேசம்னு உலகம் நினைக்கணும். அதுதான் எனக்குத் தேவை!’’

- வள்ளுவர் கண்களில் நிஜமாகவே ஒரு ஒளி மின்னியது.

‘‘அதெல்லாம் இருக்கட்டும். நீங்க குறிப்பிட்ட அந்த நேரத்துல உங்களை சாக விடாம நான் செய்துட்டா, இதெல்லாம் பொய்யான ஒண்ணாகூட இருக்கலாம்ங்கறதை ஒத்துப்பீங்களா?’’

‘‘இப்படி ஒரு முடிவுக்குத்தான் நீங்க வருவீங்கன்னு எனக்குத் தெரியும். எனக்கு மட்டும் வாழ ஆசை இல்லையா என்ன... இப்ப நான் என்ன செய்யணும்? உங்ககூட வந்து உங்க கண்காணிப்புல இருக்கணுமா?’’ - பளிச்சென்று கேட்டார் வள்ளுவர்.

7

அப்பாவின் டைரியில் நான் கண்ட அந்த புதிய சொற்களில் ஒன்று ‘நுபுவி’ என்பதாகும். இந்த சொல்லுக்கு என்ன பொருள் என்று மண்டையை உடைத்துக்கொண்டேன். பள்ளியில் என்

தமிழ் ஐயா வேலாயுதனாரிடமும் கேட்டேன். ‘புவி என்றால் உலகம்.நுபுவி என்று ஒரு சொல்லே எனக்குத் தெரிந்து இல்லை’ என்றார்.

இருந்தும் தமிழகராதியைத் தேடி எடுத்து வந்து பார்த்துவிட்டு ‘அதிலும் இப்படி ஒரு சொல்லே இல்லை. எனவே, இந்த சொல்லே யாரோ தவறாக எழுதியதாக இருக்க வேண்டும்’ என்றார். ஆர்வம் தாளாத நான் அப்பாவிடமே பொருள் கேட்டுவிட்டேன். அவர் முதலில் திகைத்தார். பின் அவர் டைரியை நான் எடுத்துப் பார்த்ததற்காக கோபப்பட்டார்.

ஒருவரது டைரி என்பது மிக அந்தரங்கமானது. அதை எதற்காகவும் எடுத்துப் படிக்கக் கூடாது என்று புத்திமதி கூறியவர், ‘நுபுவி என்பது வணிகர்கள் தங்களுக்குள் பயன்படுத்தும் எழுத்தாகும்’ என்றார். இது ஒரு எண்மதிப்பை எழுத்தில் சொல்வதாகும். தமிழ் எழுத்துக்கள் அவ்வளவுக்கும் அவர்கள் அதன் வரிசைக்கேற்ப எண்ணை வைத்திருந்தனர். உதாரணமாக, உயிர் எழுத்துக்கள் மொத்தம் பன்னிரண்டு. இதில் முதல் எழுத்து ‘அ’வன்னா. இதன் மதிப்பு ஒன்று.

அடுத்து ‘ஆ’வன்னா… இதன் மதிப்பு இரண்டு. இப்படியே தமிழின் மொத்த எழுத்துக்கள் வரிசையாக அவற்றின் எண் மதிப்பைப் பெறுகின்றன. இந்த ‘நுபுவி’க்கு என்ன எண் மதிப்பு என்று தமிழ் எழுத்துக்கள் கொண்ட அட்டவணையைப் பார்த்து நீயே சொல் பார்க்கலாம்’ என்றார். என்வரையில் மொழியை மையப்படுத்திய ஒரு முதல் தேடலாகவும், ஆச்சரியமாகவும் இந்த விஷயம் அமைந்தது…’- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து…

உதிரமுத்து வள்ளுவர் பளிச்சென்று கேட்கவும், கணபதி சுப்ரமணியனுக்கு ஒரு நிறைவு.

‘‘யெஸ் மிஸ்டர் வள்ளுவர்... இப்பவே நீங்க என்கூட வர முடியுமா? இந்த செகண்ட்ல இருந்தே நான் உங்க வரையில ரொம்ப ஜாக்கிரதையாவும் ஒரு கேரோடவும் இருக்கறது நல்லதுன்னு நினைக்கறேன்’’ - என்றார்.

‘‘அப்ப என்னை உங்ககூட கூட்டிக்கிட்டு போகப் போறீங்களா?’’

‘‘எக்ஸாக்ட்லி...’’

‘‘கொஞ்சம் தமிழ்ல சொல்லுங்க!’’

‘‘ஏன்... எக்ஸாக்ட்லின்னா அர்த்தம் தெரியாதா உங்களுக்கு?’’

‘‘அந்த வார்த்தைக்கு அர்த்தம் தெரியும். ‘துல்லியமா’ங்கற அர்த்தத்துல அது வரும். இதுக்கு ‘ஆமாம்’னு தமிழ்ல சுலபமா சொல்லிட்டுப் போயிடலாமே... நீங்க தமிழர்தானே?’’

‘‘அப்ப நீங்க தமிழ் மொழிப் பற்றுள்ள ஒரு ‘சமேரியன்’... சாரி, ஒரு ‘உணர்ச்சியாளர்’னு சொல்லுங்க!’’

‘‘ஆங்கில வார்த்தையில்லாம உங்களால பேசவே முடியாது போல இருக்கே?’’

‘‘அதுதானே இப்ப லைஃப்ஸ்டைல்? இங்கிலீஷ் தெரியலன்னா நீங்க தமிழ்நாட்டுக்கு வெளியில ஒழுங்கா பிச்சை கூட எடுக்க முடியாது மிஸ்டர் வள்ளுவர்...’’

‘‘அதையெல்லாம் நான் ஒத்துக்க மாட்டேன். ஜப்பான்காரங்க கூடதான் இங்கிலீஷ் தெரியாதவங்க. ஆனா, அவங்கதானே உலகத்துல எதுலயும் முதல்ல இருக்காங்க?’’

‘‘இப்ப அவங்களும் இங்கிலீஷ் படிக்கறாங்க வள்ளுவர். அவங்களுக்கும் நெருக்கடி உருவாகிடிச்சு. அவங்க மட்டுமில்ல... சீனாவுலயும் ஆங்கில மோகம் உருவாகிடுச்சு. இன்னிக்கு நீங்க விரும்பினாலும் விரும்பலேன்னாலும், இங்கிலீஷ்தான் உலகத்தோட பொதுவான மொழி. சும்மா ‘தமிழ்... தமிழ்...’னு ஜல்லியடிக்கறதால புண்ணியமில்ல!’’

கணபதி சுப்ரமணியன் பேச்சோடு கண்ணாடியைக் கழற்றித் துடைத்தார். வள்ளுவரிடம் ஒரு ஆழ்ந்த மௌனம்.

‘‘என்ன மிஸ்டர் வள்ளுவர்? அமைதியாகிட்டீங்க?’’

‘‘இல்ல... ஒண்ணுமில்ல..!’’

‘‘இப்படி சொன்னாலே நிறைய இருக்குன்னுதானே அர்த்தம்! கமான், என்னன்னு சும்மா சொல்லுங்க. அப்படியே எதையாவது எடுத்துக்கறதுன்னா எடுத்துக்கிட்டு புறப்படுங்க...’’

‘‘இருங்க வந்துடறேன்...’’ - வள்ளுவர் புறப்படத் தயாரானார். ஒரு இருபது நிமிட நேர அளவில் இரண்டு ட்ரங்க் பெட்டிகள், ஒரு தோல் பை, அதுபோக, ஒரு படுக்கைக் கட்டு என்று அந்த நாளில் ரயில் பயணம் செய்பவர்கள் போல வந்து நின்றார்.

நின்ற நிலையில், ‘இனி எந்தக் காலத்தில் இந்த வீட்டைப் பார்க்கப் போகிறோம்’ என்பது போல ஒரு பார்வை பார்த்தார்.

‘‘என்ன... திரும்ப வருவோமா, மாட்டோமான்னு பாக்குறீங்களா?’’

‘‘ஆமாம்... அறுபது, எழுவது வருஷமா வாழ்ந்துக்கிட்டு வர்ற வீடாச்சே?’’

‘‘பாத்தாலே தெரியுதே... நடுவுல கூம்பு வடிவத்துல இருந்த கூரையெல்லாம்தான் இப்ப கிடையாதே? தட்டையான கூரை... அதுக்குமேல ஒரு வீடு... அதுக்கும்மேல தட்டையான கூரை...

அதுக்குமேல ஒரு வீடுன்னு மாடி மேல மாடிங்கறதுதானே இப்ப ஃபேஷன்..?''

‘‘வாஸ்தவம்தான்! ஆனா, எப்ப இந்த தட்டைக்கு நம்ம கட்டிடங்கள் மாறுச்சோ, அப்பவே வாழ்க்கையும் தட்டையாயிடுச்சு. கூம்பு வடிவ கூரை வீடு தந்த ஒரு சந்தோஷத்தையும் வளர்ச்சியையும் இந்த தட்டையான வீடுகள் தர்றதில்லங்கறது உங்களுக்குத் தெரியுமா?''

‘‘ரொம்ப பழமையான ஆளா இருக்கீங்களே... கிளம்பலாமா?''

‘‘அதான் கிளம்பிட்டேனே...''

‘‘ஆமாம், உங்களுக்கு யாருமில்லையா... தனியாளா நீங்க?''

‘‘பெரிய குடும்பஸ்தன்ங்க நான். ஒரே ஒரு மகன். என் அப்பா பேர்தான் அவனுக்கு... கஜமுத்துங்கறது அவன் பேர்...''

‘‘கஜமுத்துவா... உங்க பேர் உதிரமுத்து... பெயர்கள் எல்லாமே வித்தியாசமா இருக்கே?''

‘‘வள்ளுவக்குடிகளோட வாழ்வே வித்தியாசமானதுதாங்க. கேட்டா ரொம்ப ஆச்சரியப்படுவீங்க!''

‘‘பேசுவோம்... அதான் கூடவே இருக்கப் போறீங்களே... ஆமா, இப்ப உங்க மகன் எங்கே?''

‘‘அவனை எங்க மலைக் கிராமத்துக்கு அனுப்பிட்டேன்...''

‘‘அவருக்குக் கல்யாணம் ஆகிடுச்சா?''

‘‘பேரன் இருக்கான் சாமி... அவன் பேர் என்ன தெரியுமா?’’

‘‘என்ன... உங்க பேரா?’’

‘‘சரியா சொல்லிட்டீங்க. அவன் ஏழாம் உதிரமுத்து. என் தலைமுறையோட ஏழாவது தலைமுறை அவன்...’’

‘‘ஐ ஸீ... சரி, வாங்க! கார்ல போய்க்கிட்டே பேசுவோம். அப்புறம், இந்தப் படுக்கையெல்லாம் வேண்டாம். துணிமணி மட்டும் போதும். என் பங்களாவுல நீங்க படுத்துத் தூங்க எல்லா வசதிகளும் இருக்கு...’’

‘‘இருக்கலாங்க... ஆனா ஒரே தட்டு, ஒரே படுக்கைன்னு வாழற வாழ்க்கை என் வாழ்க்கை. நீங்க விடுங்க...’’ என்ற வள்ளுவர், ட்ரங்கு பெட்டி, தோல்பை, படுக்கையோடு கணபதி சுப்ரமணியனின் காரில் ஏற வந்தார். முன்னதாக வீட்டைப் பூட்டி சாவியைப் பக்கத்து வீட்டில் தருவதா... இல்லை, பாக்கெட்டில் போட்டுக்கொள்வதா என்று யோசித்துவிட்டு, பக்கத்து வீட்டுப் பெண்ணிடமே தரச்சென்றார்.

‘‘பெட்டி படுக்கையோட எங்க கிளம்பிட்டீங்க? உங்க மலைக் கிராமத்துக்கா?’’

‘‘இல்ல தனபாக்கியம். நான் ஆராய்ச்சியாளர் வீட்டுக்குப் போறேன். கஜமுத்து வந்து கேட்டா சாவிய கொடு...’’

‘‘சோசியம் பாக்க வர்றவங்க கேட்டா?’’

‘‘வேற நல்ல ஜோசியரை தேடிப்போகச் சொல்லு...’’

‘‘இது என்ன? பேச்சு ஒரு மாதிரி இருக்கு...’’

‘‘ரொம்ப வாய கிண்டாத. சொன்னத செய்... நான் வர்றேன்!’’

- அந்தப் பக்கத்து தனபாக்கியம் வாயை அடைத்துவிட்டு அவர் காரில் ஏறிக் கொள்ள, கார் புறப்பட்டது.

காருக்குள்...

‘‘திரும்ப வந்து இந்த வீட்ல வாழப் போறதில்லன்னு உறுதியா நம்பற மாதிரி தெரியுதே?’’

‘‘நம்பித்தானே தீரணும்... வேற வழி?’’

‘‘என்ன வழி? வழியில்லாமதான் நான் வந்திருக்கேனா... என்னய்யா நீர் சுத்த பூஞ்சையான ஆளாவே இருக்கீர்?’’

‘‘பூஞ்சையா... நானா?’’

‘‘பின்ன... நூத்தி முப்பத்தி ஆறு வயசுல தைவான் நாட்டுல ஒருத்தர் உயிரோட இருக்காரு.நூறு வயசுக்கு மேல ஆயிரக்கணக்கானவங்க உயிரோட இருக்காங்க!’’

‘‘விதி இருந்தா செத்த பிறகும் சூட்சுமமா பல நூறு வருஷத்துக்கு இந்த பூமியை சித்தர் சாமிங்க மாதிரி சுத்திச் சுத்தி வரலாம். இல்லாட்டி எமன் முன்னால, ‘உத்தரவு எஜமான்’னு கைகட்டி நின்னு கண்ணீர் விடணும். எல்லாத்துக்கும் விதி இருக்கணும் ஆராய்ச்சி சாமி...’’

‘‘விதியா... போச்சுடா! இனி உங்ககிட்ட பேச முடியாது. புத்தியால ஜோசியம் சொல்லி பொழச்சிக்கிட்டு, அந்த மதிய நம்பாம விதிய நம்பறது ஹைலி ஹிலேரியஸ். இனி உங்ககிட்ட பேசி புண்ணியமில்ல.ஆமா... உங்க டெத் டைம் எப்போன்னு சொன்னீங்க?’’

‘‘வர்ற 27ம் தேதி மாலை நாலு மணி இரண்டு நிமிஷம்... அந்த இரண்டாவது நிமிஷ அறுபது நொடிகளுக்குள்ள!’’

‘‘ரைட்... இன்னிக்கு தேதி 25. இன்னும் இரண்டு நாள் இருக்கு. அந்த 27ம் தேதி 4.02க்குப் பிறகு உங்களை உண்டு இல்லைன்னு பண்றேன். ஓகே?’’

‘‘ஆஹா... நான் இருந்தா நீங்க என்னை உங்க அடிமையா வெச்சுக்கலாம். உங்களுக்கு மலம் கழுவிவிடக் கூட நான் தயார்...’’- உதிரமுத்து பேச்சோடு பேச்சாக வெளியே பார்த்தார். திணறலான டிராஃபிக்! அதைப் பார்க்கவும் சிரிப்பு வந்தது.

‘‘என்ன சிரிப்பு?’’

‘‘ஒண்ணுமில்ல... ரெண்டு கால் நல்லா இருக்க, அதைப் பயன்படுத்தாம கார், பஸ்ஸுன்னு இந்த இரும்பு வீடுங்களை இழுத்துக்கிட்டு திரியறாங்களே... இன்னும் எத்தனை நாளைக்குன்னு நினைச்சேன்!’’

‘‘ஏன்... இதெல்லாம் எதிர்காலத்துல இருக்காதா?’’

‘‘சரியா இன்னும் பதினேழு வருஷம்தான்! இந்த அவ்வளவு கார், பஸ்ஸும் காயலான் கடைக்குத்தான் போகப் போகுது!’’

‘‘என்ன சொல்றீங்க... மனுஷன் ஹெலிகாப்டர், விமானம்னு வளர்ந்துடுவானா?’’

‘‘அது தெரியாது... ஆனா இதெல்லாம் இருக்காது. பெட்ரோல்னு ஒண்ணு இருந்தாதானே இதெல்லாமும் இருக்க முடியும்? அந்தக் கிணறு வத்திப் போயிட்டா என்ன செய்ய முடியும்?’’

‘‘மிஸ்டர் வள்ளுவர்... இன்னும் ஐம்பது வருஷத்துக்கு பெட்ரோல் கிடைக்கும்ங்கறதுதான் விஞ்ஞானிகள் தீர்மானம்!’’

‘‘இன்னிக்கு சொல்றத நாளைக்கு மாத்திச் சொல்றவங்கதானே விஞ்ஞானிங்க! நீங்க வேணா பாருங்க... தப்பா சொல்லிட்டதா சொல்வாங்க...’’

‘‘எதை வச்சு இவ்வளவு உறுதியா சொல்றீங்க?’’

‘‘பலகணியிலதான் குறிப்பா இருக்குதே!’’- வள்ளுவர் சொல்லவும், கணபதி சுப்ரமணியன் திகைக்கவும் சரியாக இருந்தது.

‘‘என்ன திகைச்சுட்டீங்க... இன்னிக்கு டில்லில ஆட்சி மாறியிருக்கு. ‘வாலுள்ளவன் வசமாகும் தலைநகரம்’னு குறிப்பு இருக்கு... அதுவும் பொருந்திப் போகுதே..?’’

‘‘வாலுள்ளவனா?’’

‘‘ஆமாம்... கெஜ்ரிவால்ங்கற பேர்ல வால் இருக்குல்ல?’’

- வள்ளுவர் கேட்க, கணபதி சுப்ரமணியனுக்கு நடுநெற்றி மேல் பூரான் ஒன்று கதகளி ஆடுவதுபோல் இருந்தது.மௌனமாகி விட்டார்!

* * *

கணபதி சுப்ரமணியனின் அருந்தவப் புதல்வன் அனந்தகிருஷ்ணனின் கார், பிருந்தாவன் பங்களாவுக்குள் நுழைந்து நின்றது. சீனப் பயணம் முடிந்த களைப்போடு உள் நுழைந்தவரை, வாட்ச்மேன் தங்கவேலு வரவேற்றான். டிக்கியில் பிதுங்கிக் கிடந்த லக்கேஜ்களை நாய் போல இழுத்துக்கொண்டு அவர் பின்னே சென்றான். புதிதாக ஒரு சூட்கேஸ். அதன்மேல் டிராகன் சிம்பல்!

‘அம்ப பரமேஸ்வரி... அகிலாண்டேஸ்வரி...’ என்று சாதகம் செய்து கொண்டிருந்த பத்மாசினி ஓடி வந்தாள். வந்தவள் புது சூட்கேஸைத்தான் பார்த்தாள்.

‘‘என்னங்க... நான் சொன்ன சைனா சில்க், ஒரிஜினல் சாரி கிடைச்சுச்சா? லாவண்டர் கலர்ல பிங்க் பார்டர்ல வேணும்னு எழுதிக் கொடுத்திருந்தேனே...’’ - என்று திடமான திவ்ய மதுர இந்தியப் பெண்ணாக பேசியவளை வெறித்தார் அனந்த கிருஷ்ணன்.

‘‘பத்மா! ஐ ஆம் ஸோ டயர்ட்... என்ன சாப்பிட்றீங்கன்னு கேட்காம எடுத்த எடுப்புல புடவையா? வாங்கிட்டு வந்துட்டேன்... போதுமா?’’ என்று எரிந்து விழாத குறையாக அவர் பேசவும், ப்ரியாவும் தன் அறை நீங்கியவளாக வந்து, ‘‘டாட்...’’ என்று சோபாவின் கைப்பிடிமேல் அமர்ந்து அவர் தோளை உரசிக்கொண்டு தலையை வருட ஆரம்பித்தாள்.

அந்த கார்ப்பரேட் அப்பாவின் தலையில் அப்போது அமிர்தம் சுரக்க ஆரம்பித்தது. அதே சமயம் வாசல்புறமாக ஒரு குடுகுடுப்பைக்காரன்! பேன்ட் அணிந்து கோட் போட்டுக்கொண்ட நவீனத்தோடு, 'இந்த பங்களாவுல ஒரு துக்கம் நடக்கப் போகுது...' என்று தன் பாணியில் தொடங்கி விட்டிருந்தான்!

8

அன்று நான் அந்த வார்த்தைக்கு எண் மதிப்பையும் கண்டுபிடித்து விட்டேன். அப்பாவிடம் அதன் மதிப்பை சொல்லவும் பாராட்டினார். அப்படியே என்னை தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்று தமிழின் இலக்கணப்பாடுகள் அறியச்செய்தார்.

எனது ஆர்வத்தைக் கண்டு தமிழின் செழுமையான நூல்களான அகத்தியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, ஐஞ்சிறுங் காப்பியங்கள், பெருங்கதை, நந்திக்கலம்பகம், கல்லாடம், வில்லிபாரதம், முத்தொள்ளாயிரம், திருமந்திரம், பெரியபுராணம், கம்பராமாயணம், நளவெண்பா, திருவாசகம், சிவஞானபோதம், திருவிளையாடற்புராணம், குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, மனோன்மணியம் என்று சகலத்தையும் நான் படிக்கும்படி செய்தார்.

என் நூலகத்தில் இன்றும் இந்த நூல்கள் பத்திரமாக உள்ளன. இதில் பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்தும்

உ.வே.சாமிநாதய்யர் என்பவரால் எவ்வாறு கண்டறியப்பட்டன என்பதையும் எனக்குச் சொன்னார். இந்த விஷயத்தில் அய்யருடைய தேடல் எனக்கு ஆச்சரியம் தந்தது.

ஒரு குக்கிராமத்தில் ஒரு தமிழ்ப் புலவர் வீட்டுப் பரண் மேல் ஏட்டுக்கட்டுகளாக இவை இருந்தனவாம். அய்யர் அவர்கள் தேடிச் சென்றபோது அந்தப் புலவர் வீட்டிலில்லை. வெளியூர் சென்றிருக்கும் அவர் திரும்பி வர இரு நாட்களாகலாம் என்னும் நிலையில் அய்யர் அவர் வரும் வரை காத்திருந்து, அங்கு கிடந்த கட்டிலில் படுத்து உறங்கி, பிற இடங்களில் சாப்பிடாதவர் என்பதால் மரத்தடியில் தானே ஒரு பானையில் சோறு பொங்கிச் சாப்பிட்டு பின் அந்த தமிழ்ப்புலவர் வரவும் அவர் அனுமதியுடன் தானே பரண் மேல் ஏறி அந்த ஐம்பெரும் காப்பியங்களை அள்ளி எடுத்தாராம்!'- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அந்தக் குடுகுடுப்பைக்காரனை வாட்ச்மேனான தங்கவேலுவும் துரத்தத் தொடங்கினான்.

''யோவ் போய்யா.... எங்க வந்து என்னத்தய்யா சொல்லிக்கிட்டிருக்கே..? போய்யா போய்யா...''

ஆனால், குடுகுடுப்பைக்காரன் அசரவில்லை.

''நான் சொல்லல... ஜக்கம்மா சொல்றா! அர்த்த ராத்திரில நான் பலன் சொல்ல வந்தப்பவே இதைத்தான் சொன்னேன். ரெண்டு நாள்தான்... எமன் வரப்போறது நிச்சயம்'' என்ற குடுகுடுப்பைக்காரன் குரல் ஓரளவு உள்ளே அனந்த கிருஷ்ணன், பத்மாசினி காதிலும்



விழுந்தது. ப்ரியா வரையில் குடுகுடுப்பைக்காரன் கேரக்டரே அவளுக்குப் புதியது.

‘‘யார் மம்மி அது... என்னென்னமோ சொல்லிக்கிட்டிருக்கான்..?’’ என்றாள்.

‘‘குடுகுடுப்பைக்காரம்மா..! அவங்க சொன்னா அப்படியே பலிக்கும்... இத்தனை வருஷத்துல இப்படி அபசகுனமா ஒரு வார்த்தை சொல்லி நான் கேட்டதேயில்லை. இப்ப எனக்கே சுருக்குனு இருக்கு. ஐயோ யார் உயிருக்கு ஆபத்தோ தெரியலியே...’’ - என்ற பத்மாசினியை அனந்தகிருஷ்ணன் சற்று ஆவேசமாக வெறித்தார். பிறகு,

‘‘ஏய்... லூசு! அறிவில்ல உனக்கு... தெருவுல எவனோ என்னத்தையோ சொன்னா உடனே நம்பிடுவியா? உனக்கு சிக்ஸ்த் சென்ஸ்னு ஒண்ணு இருக்கா இல்லையா?’’ என்று வெடித்தார்.

‘‘என்ன நீங்க பேசறீங்க... குடுகுடுப்பைக்காரங்க சொன்னா சரியா இருக்குங்க. அவங்க சுடுகாட்டுல பூஜை பண்ணிட்டு வந்து சொல்றவங்க.’’

‘‘எந்த சுடுகாட்டுல பத்மா? இப்ப எங்க இருக்கு சுடுகாடு? திரும்பின பக்கமெல்லாம் ஸ்டார் ஹோட்டல் லெவலுக்கு கிரிமிடோரியம்தான் இப்ப இருக்கு. இதுல இவன் எந்த சுடுகாட்டுக்கு போய் பூஜை பண்ணான்?’’

‘‘ஏங்க... கிராமங்கள்ல இன்னும் சுடுகாடுதானே நடைமுறைல இருக்கு..?’’

‘‘அப்ப சுடுகாட்டுல பூஜை பண்ணா இந்த மாதிரி எல்லாம் சொல்ல முடியுமா..?’’ - ப்ரியா இடையில் புகுந்து கேட்டாள்.

‘‘ப்ரியா... உங்கம்மா ஒரு படிச்ச லூசு. இவ சொல்றத நம்பி நீயும் கேக்கறியே. வேற விஷயம் பேசுங்க...’’

‘‘அம்மா லூசை விடு டாடி. ஒருத்தன் நம் வீட்டு வாசல்ல எப்படி இப்படி எல்லாம் சொல்லலாம்.இது மிரட்ற மாதிரி இல்ல... நாம ஏன் போலீசுக்கு போன் பண்ணக் கூடாது?’’

‘‘தாராளமா பண்ணு... அப்ப தான் இந்த மாதிரி ஜோசியம் சொல்லி பயத்தை உருவாக்கி அப்புறம் அந்த பரிகாரம் சொல்றேன், இந்த பரிகாரம் சொல்றேன்னு பணம் புடுங்கற இவன் மாதிரி ஆட்களுக்கெல்லாம் புத்தி வரும்.’’

-அனந்தகிருஷ்ணன் ஆமோதித்திட, தங்கவேலு உள்ளே வந்தவனாக, ‘‘அவன் போயிட்டாங்க... இப்பல்லாம் வேலை வெட்டி இல்லாதவன்லாம் குடுகுடுப்பைக்காரனாயிடறான். பாவம் அவங்க’’ என்றான்.

‘‘அப்படின்னா?’’ - ப்ரியா ஷார்ப்பாகக் கேட்டாள்.

‘‘என்னம்மா கேக்கறீங்க?’’

‘‘இல்ல, பாவம் அவங்கன்னியே..?’’

‘‘அதுங்களா...? குடுகுடுப்பைக்காரங்கன்னு ஒரு இனம்மா! குறி சொல்றதுதான் அவங்க தொழில். அமாவாசை ராத்திரி மயான பூசை செய்துட்டு வந்து வீட்டு வாசல்ல நின்னா, அவங்ககிட்ட அந்த வாசலே பேசும். அவ்வளவு பவர்! பொலபொலனு கொட்டிட்டு போயிட்டே இருப்பாங்க. இப்ப அவங்க எல்லாரும் பள்ளிக்கூடம் காலேஜ்னு போய் குலத்தொழிலை விட்டுட்டாங்க. இன்னிக்கு வந்தவன் வேலை வெட்டி இல்லாத எவனோம்மா... அதான் போடான்னதும் முறைச்சுக்கிட்டே போயிட்டான்.’’

‘‘ஓ... இப்படி வீடு வீடா வந்து ஜோசியம் மாதிரி சொல்றவங்களுக்குதான் குடுகுடுப்பைக்காரங்கனு பேரா?’’

‘‘ஆமாம்மா... பட்டணத்துக் காரங்களுக்கு இதெல்லாம் புதுசாதாம்மா தெரியும். ஆனா காலகாலமா இது நம்ம நாட்டுல இருக்கற விஷயம்மா...’’

‘‘வெரி இன்ட்ரஸ்ட்டிங்...’’

‘‘ப்ரியா, போதும், இந்த பேச்ச விடு. பை த பை நான் உயிர் தப்பி வந்துருக்கேன். எப்படின்னு கேள்...’’- அனந்தகிருஷ்ணன் டாபிக் மாறினார். தங்கவேலுவும் விலகினான்.

‘‘டாட்... என்ன சொல்றே நீ?’’

‘‘ஆமாம்மா... இன்னிக்கு நியூஸ்ல கூட ஒரு ஃப்ளைட் அப்ஸ்காண்ட்னு படிச்சிருப்பியே?’’

‘‘ஆமாமா... அதுக்கென்ன டாட்?’’

‘‘அதுல நான் போக வேண்டியது. நல்லவேளையாக டிக்கட் கன்ஃபார்ம் ஆகாம நான் வேற ஃப்ளைட்ட பிடிச்சு வந்தேன்!’’

‘‘அப்படியா?’’

‘‘ஆமாம்மா... அதுல போயிருந்தா உங்கம்மா கலர் கலரா புடவை கட்றாளே... அப்படி கட்ட முடியாத நிலை வந்துருக்கும்.’’

‘‘டாடி... ஏன் இப்படி எல்லாம் பேசறே... அதான் நல்லபடியா வந்துட்டீங்களே - அப்புறம் என்ன?’’

‘‘சொல்றேம்மா... இப்ப நினைச்சாலும் எனக்கு பகீர்னு இருக்கு. பாவம் சைன்டிஸ்ட் பகீரதன்...! நம்ப நாட்டுக்கு பெரிய இழப்பு...’’

‘‘டாடி... அவர் திரும்ப வரப்போறதில்லங்கறது உன் முடிவா?’’

‘‘வந்தா சந்தோஷம்... ஆனா இதுக்கு முந்தி மாயமான எந்த ஃப்ளைட்ட கண்டுபிடிச்சாங்க - இதைக் கண்டுபிடிக்க..?’’- அப்பாவும் மகளும் விவாதத்தில் இறங்கிவிட்ட நிலையில் பத்மாசினி அந்த

டிராகன் முத்திரை கொண்ட சூட்கேஸைத் திறக்க அரும்பாடு பட்டுக்கொண்டிருக்க... அதைக் கவனித்த அனந்தகிருஷ்ணன்,

‘‘பத்மா... அது ரிமோட் லாக்ல இருக்கு. இரு ரிமோட்ட ஆன் பண்றேன்’’ என்று பாக்கெட்டில் இருந்து தீப்பெட்டி அளவு ரிமோட் ஒன்றை எடுத்து கட்டை விரலால் அழுத்தவும் அந்த சூட்கேசிடமும் ஒரு சப்தம் கேட்டது. பத்மாவும் திறந்து பார்த்தாள். உள்ளே ஏராளமான புடவைகள்! சைனா சில்க்ஸ்... அடுத்த நொடியே இந்திய பெண்களுக்கு மோட்சத்தையும் விட மேலானவை புடவைகள் என்பதை பத்மாசினி தன் பிளந்த வாய் கொண்டு நிரூபித்தாள்.

‘‘பாத்தியா ப்ரியா உங்கம்மாவை... இந்த நாட்டுல நான் வேல பாக்கற ஆட்டோமொபைல் இண்டஸ்ட்ரியோ இல்ல ஒரு ஐ.டி கம்பெனியோ கூட பெரிய லாபமில்லம்மா. லாபம்னா நகைக்கடையும் புடவைக் கடையும்தான்..! எவ்வளவு அடிச்சாலும் தாங்கின காமெடியன் வடிவேலுவைவிட இவங்க மோசம்... எவ்வளவு ஏமாத்தினாலும் தாங்கறாங்க...’’ என்று மகளிடம் ஜாலியானார் அனந்தகிருஷ்ணன். அப்போது வாசற்புறம் கணபதி சுப்ரமணியனின் ஹாரன் சப்தம். தங்கவேலு கேட்டைத் திறக்க கார் உள்நுழைய வள்ளுவரோடு கணபதி சுப்ரமணியனும் இறங்கினார். பத்மாசினி அந்தப் பெட்டியோடு விலகிவிட்டாள்.

காரை விட்டு இறங்கின வள்ளுவர் தங்கவேலுவை ஒரு மாதிரி பார்த்தார். தங்கவேலு அவரை உள்ளே விட மறுத்திருந்தான். இப்போதோ பெட்டி படுக்கையோடு வந்து நிற்கிறார்.

‘‘என்ன பாக்கறே... நான் இப்படி கார்ல வந்து இறங்குவேன்னு நீ நினைக்கலல்ல..?’’ - அவனிடம் கேட்கவும் அவன் விழித்தான்.

‘‘நீங்க வாங்க மிஸ்டர் வள்ளுவர். தங்கவேலு, லக்கேஜை எடுத்துக்கிட்டு போய் என் ரூமுக்கு பக்கத்து ரூம்ல வச்சுடு’’ என்றார் கணபதி சுப்ரமணியன்.

இருவரும் ஹாலுக்குள் பிரவேசித்திட, ப்ரியா ஆச்சரியமாகப் பார்த்தாள்.

‘‘என்ன குட்டி பாக்கறே... இவர்தான் அந்த வள்ளுவர்!’’

‘‘ஓ... வெரி நைஸ்... ஹலோ சார்...’’

வள்ளுவர் சிரித்தார். அனந்த கிருஷ்ணனிடம் விழிப்பு!

‘‘என்னடா நீ எப்ப வந்தே?’’

‘‘ஜஸ்ட் நௌ...’’

‘‘விசிட் ட்ரிப்தான் போல இருக்கே?’’

‘‘அஃப்கோர்ஸ்...’’

‘‘ஓ.கே.... டேக் ரெஸ்ட்... மிஸ்டர் வள்ளுவர், இவன் என் ஒரே மகன் அனந்தகிருஷ்ணன். மாசம் முப்பது நாள்னா அதுல இருபது நாள் வெளிநாட்டுலதான் இருப்பான். இவ என் செல்லப்பேத்தி ப்ரியதர்ஷினி... ஆனா நான் குட்டினுதான் கூப்பிடுவேன்!’’

‘‘இனி அப்படி கூப்பிடாதீங்கய்யா...’’ - வள்ளுவர் பட்டென்று சொல்லவும் கணபதி சுப்ரமணியனின் முகத்தில் சற்று திகைப்பு. ‘‘குட்டிங்கற பேர் நல்ல பேர் இல்லங்க. ஆண் பிள்ளைகள குட்டினு

கூப்பிட்டு வளர்த்தா ரவுடிப் பயலாகிடுவாங்க. பெண்களும் திருட்டு, பொய்னு தப்பா நடக்க அஞ்சமாட்டாங்க. அதான் சொன்னேன்...''

''என்ன நியூமராலஜியா?''

''இல்லீங்க... நான் சொன்னது சப்தவிலாசங்க...''

''சப்தவிலாசமா?''

''ஆமாங்க... சப்தவிலாசம்னு ஒரு ஏட்டுக் கட்டு இருக்குது. அதுல நம்ம பேச்சைப் பத்தி விரிவா சொல்லியிருக்கு. நமக்கான பேருங்கறது ஒரு சாவி மாதிரி... அதைக்கொண்டு தான் நம்மை ஒருத்தர் திறக்கறார். ஆகையால், ஒரு வார்த்தைல நல்ல அதிர்வோட பேர் இருக்கணும்னு அதுல சொல்லியிருக்கு. பட்டு, குட்டி, ஈஸ்வரிங்கற பேரெல்லாம் அதிக அதிர்வு கொண்டவை.''

''அப்ப உங்க உதிரமுத்துங்கற பேர்?''

''ரத்தத்தை குறிக்குதுங்க... ரத்தம்கறது இரண்டாவது தாய்ப்பால். அதுவும் காலமும் ஒண்ணுங்க... காலம் நிக்காம ஓடிக்கிட்டே இருக்கற மாதிரிதான் ரத்தமும் ஓடிக்கிட்டு இருக்கு. ரத்தம் ஒருத்தர் உடம்புல நிக்கும்போது அவர் வரைல காலமும் நின்னு போயிடுது.இதை மனிதன் தன் அறிவால எல்லாம் எந்த வகையிலயும் உருவாக்க முடியாது. இது உருவாகணும்னா உயிருள்ள உடம்பு வேணும்.

உயிருள்ள உடம்புங்கறது கடவுளோட படைப்பு. அந்த வகையில ரத்தம் கடவுளோட படைப்பு. ஆகையால் இதை தானம் செய்யறதும் பெரிய விஷயம்ங்க...'' - உதிரமுத்து வள்ளுவர் சொன்ன கருத்தைக்

கேட்டு ப்ரியா, அனந்தகிருஷ்ணன், கணபதி சுப்ரமணியன் என்று மூன்று பேருமே பதில் கூற முடியாத ஒரு சிந்தனைக்கு ஆளாகியிருந்தனர்.

‘‘என்னங்க எதுவும் பேசாம வெறிக்கிறீங்க... நான் சொன்னதெல்லாம் சத்யம்ங்க... ரத்தம் காலத்தோட சம்பந்தப்பட்டதால நானும் காலம் சம்பந்தப்பட்ட ஜோசியனா இருக்கேங்க...’’

‘‘மிஸ்டர் வள்ளுவர்! உங்களை என்னால பாம்புன்னும் நினைக்க முடியல... பழுதுன்னும் நினைக்க முடியல. நீங்க சொன்ன விஷயங்கள் யோசிக்க வேண்டியவைதான். ஆனா எனக்கு இந்த நியூமராலஜிலல்லாம் நம்பிக்கை கிடையாது. அதுலயும் பேர்ல ஸ்பெல்லிங்ல ஒரு ‘ஏ’வை கூட்டிக்கறது குறைச்சுக்கறது எல்லாம் என் வரைல காமெடி!’’

‘‘காமெடியா நினைச்சா சிரிச்சிட்டு போங்க. ஆனா நீங்க சிரிக்கறதால நியூமராலஜிக்கு எந்த கேடும் வந்துடப்போறதில்ல... அத ஞாபகத்துல வச்சுக்குங்க...’’

வந்த வேகத்தில் நின்றபடியே பேசிக்கொண்டிருப்பது அப்போதுதான் தெரிந்தது.

‘‘உக்காருங்க வள்ளுவர்... எங்க அந்த முத்தழகு’’ - அவர் கேட்க, அவளும் எதிரில் வர, ‘‘யாராவது வீட்டுக்கு வந்தா குடிக்க தரணும்கற ஹாஸ்பிடாலிடி உனக்கு ஞாபகம் இருக்கா இல்லையா?’’- கணபதி சுப்ரமணியன் முத்தழகுமேல் பாய அவளும் சற்று விதிர்த்தாள்.

‘‘போ... போய் காஃபி கொண்டு வா...’’

‘‘ஐயா அந்த கருமமெல்லாம் வேண்டாங்க. மோர் போதும். முடிஞ்சா அதுல கொஞ்சம் கொத்தமல்லியை கிள்ளிப்போட்டு கொண்டுவாம்மா...’’ என்று திருத்தினார் வள்ளுவர்.

‘‘ஓ... காஃபி உங்களுக்கு பிடிக்காதோ?’’

‘‘ஆமாங்க... அதுக்கு எங்க அகராதில மலைமோகினினு பேர். மோரை நாங்க ராஜமோகினிம்போம்.

மலைமோகினி பிடிச்சா பித்தம் தலைக்கு ஏறும். சீக்கிரமே நரை விழும். கபாலம் எண்ணெய் பூக்கும். யோக விஷயங்களோட போராட வேண்டி வந்துடும். ராஜமோகினி அப்படியில்ல... சிறுநீரகமும், கணையமும் இவளால சுகமா இருக்கும். மலச்சிக்கல் வராது. குறிப்பா வியர்வை நாறாது. இந்த டி.வி விளம்பரத்துல வர்ற மாதிரி புஸ்சு புஸ்சுனு அமில திரவங்களை நாட வேண்டாம்’’

- என்றபடியே சோபாவில் அமர்ந்த வள்ளுவர், அமர்ந்த வேகத்தில் எழுந்தவராக கீழே கார்ப்பெட் மேல் சப்பணமிட்டு அமர்ந்தார்.

‘‘என்ன இது... மேல உக்காருங்க...’’

‘‘இல்லய்யா... இந்த மெத்த சுகம் உடம்புக்கு நல்லதில்ல. கால்மடக்கி உட்கார்றதுதான் சரியான பழக்கம். இந்த நாற்காலி பழக்கம் ராஜாக்களுக்கு சரி. நான்லாம் சாமான்யன்...’’ - வள்ளுவர் வார்த்தைக்கு வார்த்தை அசர அடித்தார். சாமான்யன் என்று சொல்லிக்கொண்டாலும் ப்ரியாவின் மனது ஒரு குருநாத கம்பீரம் அவரிடம் இருப்பதாகக் கருதியது.

ப்ரியாவும் அசந்துதான் போயிருந்தாள்.

அவளுக்குள் இப்போது ஒரு சந்தேகம். அதைக் கேட்கவும் செய்தாள்.

‘‘ஆமாம்... காபியை நீங்க மலைமோகினின்னு எதனால சொன்னீங்க?’’

‘‘அதுவாம்மா... மோகினின்னா மோகத்தை உண்டாக்கி ஆசையை உண்டாக்கி நம்பளை சிக்க வைக்கற ஒரு சக்தின்னு அர்த்தம். காப்பிக்கொட்டை மலைல விளையறதாலயும், நம்பள அடிமைப் படுத்திட்றதாலயும் அப்படிச் சொல்வோம். இதுல ராஜமோகினின்னு மோரை சொல்லவும் காரணமுண்டு. மோருக்கு அடிமையானா உடம்பு ராஜா மாதிரி இருக்கும். அதனால தான் அந்த பேர்...’’

-வள்ளுவரின் விளக்கம் மிக நேர்த்தியாக இருந்தது. இப்படிப்பட்டவரா இன்னும் இரண்டு நாளில் சாகப்போகிறவர்? அவரைப் பார்த்தாலும் அப்படித் தெரியவில்லை. தன் ஜோசியத்தை நம்பும் அவரிடம் பயமிருப்பதாகவும் தெரிய வில்லை. அதே சமயம் சற்று முன் குடுகுடுப்பைக்காரன் வாசலில் சொன்னது ப்ரியாவுக்குள் நினைவுக்கு வரவும் அவளிடம் ஒரு அசாதாரண மாற்றம்!

9

அன்று அவர் அள்ளி எடுத்த ஏடுகளில் பல செல்லரித்துப் போயிருந்தன. காகிதம் உருவாக்கப்படாத காலத்தில் பனையனே பதியன்! அதாவது, பனை ஏடுகளே பதிவுகளை ஏற்றுக்கொள்பவை. இதனால் பனையேறியைத் தவிர

மற்றவர்கள் பனை மரம் மீது தங்கள் கால்கள் படுவதை ஒரு பாவமாகக் கருதினார்களாம். பனைமரமே ஒரு கடவுளாகத்தான் பார்க்கப்பட்டது. அது தரும் கள், காட்டுச் சாமிகளுக்கான படையலில் இடம் பெறும். அது தரும் பதநீர், வளரும் பிள்ளைகளுக்கும், பருவத்தின் வாசலில் நிற்கும் பெண்களுக்கும் சூட்டைத் தணிக்கும்.

அதன் நுங்கு, குழந்தைகளுக்கு மிகவும் ஊட்டமான உணவு; எல்லோருக்கும் மிக ஏற்ற உணவு. பனம்பழமோ மலச்சிக்கலை இல்லாமல் செய்யும். கிழங்கு, பல் ஈறுகளுக்கு பலம். அதன் இலையோ சரஸ்வதி கையின் ஏடாகும். கூடுதலாக இதுவே 'தாலம்' எனும் தாலியாகியது! இம்மட்டில் ஒரு பனை, தென்னையை விடவே ஒருபடி கூடுதலான சிறப்புடையது. பனை உரசுவதை வைத்து காற்றின் வேகத்தையும் கண்டறியலாம்.

இப்படி ஒரு பனைமரம் சகல விதமாகவும் பயன்படுவதால் உ.வே.சாமிநாதய்யர் அவர்களும் பனைமரத்தைக் கண்டால் வணக்கம் புரிவாராம். அன்று அவர் தேடி எடுத்த ஏடுகளை காலகாலத்துக்கும் காப்பாற்றுவதற்கு ஒரே வழி, அதிலுள்ள பாடல்களை அச்சிலேற்றுவது ஒன்றுதான்! இந்தக் காரியத்தையும் அய்யர் அவர்களே செய்தார்.

அதனாலேயே 'சீவக சிந்தாமணி' நூல் வடிவம் பெற்றது. ஆனால் அது அய்யரை கடன்காரராக்கி விட்டது. இருந்தும் அய்யர் அது குறித்து கவலைப்படவில்லை. அவரது அரும்பணியைப் போற்றி ராமநாதபுரம் சேதுபதி, விலையுயர்ந்த அசல் தங்க ஜரிகையாலான பொன்னாடையைப் போர்த்தியபோது, அதை ஐந்நூறு ரூபாய்க்கு ஏலம் விட்டு, 'சீவக சிந்தாமணி' நூலுக்கான அச்சகக் கடனை அய்யர் அடைத்தாராம்.

தேடல் என்பது மனிதர்களை எப்படியெல்லாம் செயல்பட வைக்கிறது என்பதைக் கூறிய என் அப்பா, ‘நீயும் அய்யர் போல சமூகத்துக்குப் பயன்படும் விதமாக அரியவற்றைத் தேடு...’ என்று சொன்னதுதான் நான் ஒரு பெரும் ஆய்வாளராவதற்கே அடிப்படை!’ கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

ப்ரியாவின் முகத்தில் ஒருபுறம் மாற்றம் ஏற்பட, மறுபுறம் மோர் கொண்டு வந்தாள் முத்தழகு. அதை ஒரே மடக்கில் குடித்த வள்ளுவர், ‘‘மணமா இருக்கும்மா மோர்... உன் ஒரு விரல்ல சக்கர ரேகை இருக்குன்னு நினைக்கறேன்...’’ - என்றார்.

‘‘என்ன வள்ளுவரே... நியூமராலஜிக்கு அடுத்து இது கைரேகையா?’’ - சற்று கிண்டலாகக் கேட்டார் கணபதி சுப்ரமணியன்.

‘‘ஆமாங்க... ‘நடு நுனி சக்கரமானால் தொடுபொருள் படு ருசியாகும்’னு பாட்டே இருக்குங்களே...’’

‘‘எப்படி... எப்படி?’’

‘‘அதாவது நடுவிரல் நுனியில் சக்கர ரேகை இருந்தால், அவங்க தொட்டு சமைக்கற உணவெல்லாம் ருசியாதான் இருக்குமாம்...’’

‘‘இதை யார் எழுதினது?’’

‘‘யாரு... எல்லாம் எங்க முப்பாட்டன்மாருங்கதான்...’’

‘‘எங்க, நீ கைய நீட்டு…’’ - வள்ளுவர் கை நீட்டச் சொல்ல, முத்தழகுவும் நீட்டினாள். அவள் நடுவிரல் நுனியில் சக்கர ரேகை இருந்தது. ப்ரியாவும் நெருங்கி வந்து பார்த்து ஆச்சரியமானாள்.

‘‘அப்ப உங்களுக்கு கைரேகையும் தெரியும்னு சொல்லுங்க…’’

‘‘ஜோசியம்தான் ஜீவனம்னு ஆயிட்ட நிலைல கைரேகை மட்டுமா, பட்சி சாஸ்திரம், சாமுத்ரிகா லட்சணம், நிமித்திகம்னு எல்லாத்துலயும் ஞானம் இருந்தாதானே ஜோசியம் சொல்ல முடியும்?’’

‘‘இந்த ரேகைகள் என்பதெல்லாம் கருவுல குழந்தையா இருக்கைல கைய மடக்கி வச்சிருக்கறதால உருவாகற கோடுகள்னு விஞ்ஞானிகள் சொல்றாங்களே..?’’

‘‘அப்படின்னா எல்லாருடைய கைலயும் கிட்டத்தட்ட ஒரே மாதிரிதானே ரேகைங்க இருக்கணும். ஆனா அப்படி இல்லையே… அவ்வளவு ஏன்? இந்த விரல் நுனில ஒரு விரல்ல சக்கரம், ஒரு விரல்ல சங்குன்னு மாறி மாறி இருக்குதே… அது எதனால?’’

‘‘அப்ப ஏன் கைரேகை பார்த்து சொல்ற பல விஷயம் நடக்க மாட்டேங்குது. கைரேகை பாக்கறவனும் தெருத்தெருவா அலையறவனாத்தானே இருக்கான்..?’’

‘‘இந்த மாதிரி நுட்பமான கேள்விகள் நூறு இருக்கு. எல்லாத்துக்கும் சரியான பதிலும் இருக்கு. இது கலிகாலம். ஒரு நல்லதுன்னா, அதோட போட்டி போட மூணு கெட்டது இருக்கும். கெட்டது அதிகமா இருக்கறதாலேயே, நல்லது பெருசா கண்ணுக்குத் தெரியறதில்ல. இந்த நிலை இன்னிக்கு நேத்து இல்ல, ஆராய்ச்சி சாமி…ராமாயண, மகாபாரத காலத்துலயே இப்படித்தான்!’’- வள்ளுவர்

பதிலை மறுக்க முடியவில்லை. வெல்ல உருண்டையை எந்தப் பக்கம் தொட்டாலும் தித்திப்பது போல, மனிதர் எந்தக் கேள்விக்கும் பதில் தருபவராக இருந்தார். ப்ரியாவிடம் பிரமிப்பு கூடிக்கொண்டே போனது. கூடவே ஒரு கேள்வியும்...

‘‘அய்யா...’’

‘‘என்ன கண்ணு...’’- வள்ளுவர் ‘கண்ணு’ என்றழைத்தது அவளுக்கு மிகப் பிடித்துப் போனது. அதில் ஒரு வாஞ்சை கமழ்ந்தது. அது அவர் மேல் ஈடுபாட்டை அதிகமாக்கியது.

‘‘அய்யா... விரல் ரேகைக்கும் சமையலுக்கும் என்ன சம்பந்தம்? சமையல்ங்கறது எதை எதை எப்படி சேர்க்கறோம், எவ்வளவு சேர்க்கறோம்ங்கற ஒரு விஷயம். சொல்லிக் கொடுத்தா யார் வேணா சமைக்கலாம். ஆனா, இதை ரேகையோட சம்பந்தப்படுத்தறது சரியா படலையே..?’’ என்று அவள் கேட்க, வள்ளுவர் அசராமல் வாயைத் திறந்தார்.

‘‘எல்லாம் சரிதான் கண்ணு. அப்படின்னா எல்லா ஹோட்டலுமே நல்ல ஹோட்டலா, எல்லா வீட்லயும் எல்லா வேளையும் நல்ல ருசியோடதானே இருக்கணும்? ஆனா, சிலருக்கு மட்டும் ஏன் இதுல பேர்?’’

‘‘அவங்க முழுமையான ஈடுபாட்டோட செய்யறதால இருக்கும்?’’

‘‘இதைக் கூர்ந்து கவனிச்சிட்டு ஒரு கைக்கு நூறு கையால சாப்பிட்டு பார்த்திட்டு சொல். நான் கேட்டுக்கறேன். கைங்கறது உடம்போட உறுப்பு மட்டுமில்ல - இந்தக் கைலதான் எல்லாம் இருக்கு. அஞ்சு விரலும் ஒரே நீளத்துல இல்லாம, நுனில ஒரு பக்கம்

மட்டும் நகத்தோட அது இருக்கறதெல்லாம் சிருஷ்டியோட அற்புதம். இந்த கையாலதான் உழைக்கறோம்.

இதாலதான் சாப்பிடறோம். இதால உலகை அழிக்கலாம், ஒரு புது உலகத்தை உருவாக்கலாம். இதை வெறும் எலும்பா, சதையா பார்த்தா, இதோட அற்புதம் தெரிய வராது. இதுல நீ யார்ங்கற விபரம் இருக்கு. இதைவிட உனக்கு உதவி செய்யற ஒரு உறுப்பு இந்த உலகத்துல வேற கிடையாது. இதைக் கொண்டு என்ன செய்யறோம்ங்கறதுலதான் உன் உயர்வும் தாழ்வும் இருக்கு.

அதனாலதான் பெரிய ஞானிகள் கண் முழிக்கும்போதே தன் இணையில்லாத தோழனான இந்தக் கை முகத்துல முழிப்பாங்க. இந்தக் கையால நல்லதை மட்டுமே செய்வாங்க... உடம்பு களைப்படையும்போது, மனசு குழம்பும்போது, விரல்களால் முத்திரை போட்டு பிரபஞ்ச சக்தியை இழுப்பாங்க. அருள் உள்ள மனிதர்களின் கைகளைக் கண்டா, கைகுலுக்கி அந்த அருளோட இணைப்பை உருவாக்கிக்குவாங்க.

மேலான சக்தி உள்ள இடத்துல இரண்டு கையை சேர்த்து மொட்டுபோல ஒரு கூம்பை உருவாக்கி, அந்த நுனி வழியா அங்க உள்ள சக்தி உடம்புல பாயச் செய்வாங்க. இதை ‘கும்பிடுறது’ன்னு சாதாரணமா சொல்லிடறோம். கும்பிட்டாலே நல்லது தொடங்கிடும். ஒரு ரவுடிப் பயகிட்ட கூட உன் கும்பிடு பிரமாதமா வேலை செய்யும். அவன் ரௌத்திரம் செயல் இழக்கும். பதிலுக்கு அவனும் கும்பிடுவான். சிரிப்பான்... என்ன நினைச்சே இந்த கைகளை..?’’

- வள்ளுவர் பொங்கி வழிந்தார். ப்ரியா விக்கித்துப் போனாள்.

‘‘கிராண்ட்பா… இவர் ஒரு தகவல் சுரங்கம். எந்த டாபிக்கைத் தொட்டாலும் விஷயம் கொட்டுது. இவர் ஒரு அப்நார்மல் கேரக்டர் கிராண்ட் பா. இவரை நாம ப்ரொட்டக்ட் பண்ணியே தீரணும்!’’ என்று கணபதி சுப்ரமணியனிடம் பேசியவளை ஒரு அரைச்சிரிப்போடு பார்த்தார் வள்ளுவர்.

‘‘என்ன சிரிக்கிறீங்க… நான் என்ன சொன்னேன்னு தெரியுமா?’’

‘‘ஏன் தெரியாம… என்னை சாக விடக்கூடாதுன்னுதானே கண்ணு சொன்னே?’’

‘‘ஆமா… இப்ப சொல்றேன்! நீங்க அந்த டாபிக்கையே நினைக்கக்கூடாது!’’

‘‘நான் அப்படித்தாம்மா இருக்கேன். சாவுக்கு பயந்திருந்தா இப்படியா பேசிக்கிட்டு இருப்பேன்..?’’

‘‘உண்மைதான்… உங்ககிட்ட செத்துடுவோம்ங்கற பதற்றமோ, கவலையோ கொஞ்சமும் இல்லை. ரொம்பவே தெளிவா இருக்கீங்க. ஆனா செத்துடுவேன்னு நம்பறது தான் எனக்கு ஆச்சரியமா இருக்கு!’’

‘‘நான் தெளிவான கால ஞானின்னா நம்பித்தாம்மா தீரணும். இப்ப கூட நான் எனக்கான சாவை ஒரு மாற்றமா மட்டுமே பாக்கறேன்…’’

‘‘வேண்டாம்… அதைப் பற்றி இப்ப பேசவே வேண்டாம். தாத்தா இவரை ரூமுக்கு கூட்டிக்கிட்டு போய் இவர் கூடவே இருங்க. நான் வர்ஷன் கிட்ட பேசிட்டு வரேன்…’’ - ப்ரியா விலகி வெளியே

தோட்டத்துப் பக்கம் வந்தாள். கைபேசி வழியாக வர்ஷனைப் பிடித்தாள்.

‘‘எங்கடா இருக்கே?’’

‘‘என்ன ஆரம்பமே அதகளமா இருக்கு...’’

‘‘எங்க சார் இருக்கீங்க?’’

‘‘உடனே பாதாளத்துக்கு இறங்கிடுவியா?’’

‘‘ஐயோ... சொல்லித் தொலைடா!’’

‘‘கூல் பேபி... என்ன வள்ளுவர் வந்துட்ட டென்ஷனா?’’

‘‘டென்ஷன்தான்... ஆனா இது ஒரு டைப்பான டென்ஷன்!’’

‘‘டென்ஷன்ல கூட டைப்ஸா? ப்ரி... நீ எங்கயோ போய்ட்டே...’’

‘‘வர்ஷன்! நாம ஜாலியா பேசிக்கற நேரம் இது இல்ல. அந்த வள்ளுவரை நான் இப்ப என் வீட்ல பாத்து பேசிட்டு, அப்புறம்தான் உன்கிட்ட பேசறேன். தாத்தா போய் அவரை வீட்டுக்கு கூட்டிக்கிட்டு வந்துட்டார். அவர்கூட அரை மணி நேரம்தான் பேசியிருப்பேன். ஒரு லைப்ரரிக்கு போய் ஒரு பத்து, பதினைஞ்சு புத்தகங்கள் படிச்ச ஃபீல் எனக்கு. வள்ளுவர் ஒரு அப்நார்மல் கேரக்டர்! அவர்கிட்ட நாம தெரிஞ்சுக்க ஏராளமான விஷயம் இருக்கு. அவர் பொய்யானவரோ, மூட நம்பிக்கை கொண்டவரோ இல்ல. நீ கொஞ்சம் உடனே புறப்பட்டு வா. நீயும் மீட் பண்ணு... பேசு... பை த பை, அவர்

நாளை மறுநாள் தான் குறிப்பிட்ட அந்த நேரத்துல செத்துடுவோம்ங்கறதுல ரொம்பவே உறுதியா இருக்காரு!''

''அவர்கிட்ட நிறைய விஷயம் இருக்கு... மூடநம்பிக்கை இல்லை, பொய் இல்லேங்கறே... கூட்டிக் கழிச்சா அவர் செத்துடுவாருங்கற மாதிரிதானே விடை வருது!''

''மண்ணாங்கட்டி.... என் பேச்ச வச்சு முடிவு பண்ணாம கிளம்பி வாடா!''

''சரி, வரேன்... வாழ்க்கைல எப்படி எப்படியெல்லாமோ பிரச்னை வந்து பாத்துருக்கேன். ஆனா நாம சந்திக்கற இந்த சிக்கல் வினோதத்துக்கெல்லாம் வினோதம்...'' என்கிற சலிப்போடு போனை கட் செய்தான்.ப்ரியா திரும்பினாள் - எதிரில் நேர் பார்வையோடு உடை மாற்றிக்கொண்டு வந்த நிலையில் அனந்தகிருஷ்ணன்.

''என்னம்மா நடக்குது நம்ம வீட்ல... யார் அந்த பெரியவர்?'' - அனந்து கேட்க, அவர் பின்னாலேயே பத்மாசினியும் வந்து நின்றுகொண்டாள்.

''எனக்கென்னமோ நம்ம வீடு ஒரு முதியோர் இல்லமா மாறிடுமோன்னு பயமா இருக்குங்க. உங்கப்பா ரிட்டயர் ஆயிட்டாரு. ஆனா இன்னமும் தன்னை ஒரு வேட்டைக்காரன் மாதிரிதான் நினைச்சுக்கிட்டிருக்காரு...'' - என்று தூபம் போட்டாள்.

''அம்மா! நீ கொஞ்சம் சும்மா இருக்கியா? வயசாயிட்டா அவங்க மூலைல முடங்கி டி.வி. சீரியல் பாக்கணும்ங்கறதுதான் உன் எண்ணமா? டாட்... ரொம்ப இன்ட்ரஸ்டிங்கான ஒரு அசைன்மென்ட் தாத்தாவை தானா தேடி வந்திருக்கு. வந்திருக்கறவர் ஒரு பெரிய

நாடி ஜோசியர். உதிரமுத்து வள்ளுவர்ங்கறது இவரோட பேர். இரண்டு நாள்ல தான் செத்துப் போயிடுவேன்னு அவர் நம்பறார். அவர் விதி அவ்வளவுதானாம். ஆனா அவரைப் பார்த்தா ரெண்டு நாள்ள செத்துப் போயிடுறவர் மாதிரியா இருக்கு?''

''அடக் கடவுளே! அதான் குடுகுடுப்பைக்காரன் வாசல்ல வந்து நின்னு அப்படிச் சொன்னானா? ஏண்டி இப்படி வினையைத் தேடி இழுத்துக்கிட்டு வர்றீங்க..?''

''அம்மா... நீ சும்மாவே இருக்க மாட்டியா? டாட்... நீ கூட அவர் பேசறதை எல்லாம் கேட்டுக்கிட்டுதான் இருந்தே... அதுல எவ்வளவு க்ளாரிட்டி... அவர்மேல உனக்கு ஒரு மதிப்பு வரலை?''

''எல்லாம் சரி ப்ரியா! இன்னிக்கு ஒரு மனுஷனை ஒரு அரை மணி... இல்ல, ஒரு மணி நேரத்துல எல்லாம் எடை போட்டுட முடியாதும்மா. என் ஆபீஸ்ல ஒர்க் பண்ற அக்கவுன்ட்ஸ் மேனேஜர் ராமசுந்தரத்தை உனக்கு நல்லா தெரியும்தானே? நெத்தில பட்டை, கழுத்துல கொட்டை, வாயைத் திறந்தா 'சிவசிவா'ங்கற நாமம்தான்...''

''சரி, இப்ப அவருக்கு என்னப்பா?''

''ஒண்ணரை கோடி ரூபா ஸ்கேண்டல்ல மனுஷன் இப்ப அரெஸ்டாகி இருக்கார். நம்ப முடியுதா உன்னால..?''

''மை குட்நெஸ்! சரிப்பா... அதுக்கும் இந்த வள்ளுவருக்கும் என்ன சம்பந்தம்?''

‘‘மனிதர்களை வேகமா நம்பிடாதே. அப்புறம் இப்படி ஒரு எண்ணம் கொண்டவரை நம்ம வீட்டுக்கு எதுக்கு கூட்டிக்கிட்டு வரணும்?’’

‘‘அவருக்கு எதுவும் ஆகாதுன்னு சொல்றதோட, ஒரு பாதுகாப்பையும் தரத்தாம்பா...’’

‘‘ஏன்? அவரை ஒரு ஹோட்டல்ல தங்க வெச்சோ... இல்ல, அவர் வீட்லயோ அந்தப் பாதுகாப்பைத் தர முடியாதா?’’

‘‘ஏண்டி! பாதுகாப்பு தரணும்னு சொல்றியே... அப்ப இவரைக் கொலை செய்ய யாராவது தயாரா இருக்காங்களா?’’

‘‘ரெண்டு பேரும் இப்படி அநாவசியமா பதற்றப்படுறதை முதல்ல நிறுத்துங்க. அவருக்கு ஒரு எதிரியும் கிடையாது. இப்போதைக்கு அவர் வரைல எமன் மட்டும்தான் எதிரி. எமன்கூட எதிரி இல்லை. எல்லாம் அவரோட கற்பனைன்னு அவருக்குப் புரிய வைக்கறதுதான் எங்க நோக்கம்...’’

‘‘அவர் மேல ஏம்மா உங்களுக்கு இவ்வளவு அக்கறை?’’

‘‘அவர் மூலமா ‘காலப் பலகணி’ங்கற ஒரு அபூர்வமான விஷயம் தெரிய வந்துருக்குப்பா!’’

‘‘அது என்னடி பலகணி, தலகாணின்னு...’’

‘‘அம்மா! நீ போறியா? போய் உன் மாடப்புறாவை... ச்சீ, தம்புராவை எடுத்துக்கிட்டு உக்கார்றியா?’’

‘‘என்னடி... நான் சொன்னதுக்கு பதிலுக்கு பதிலா?’’

‘‘ஆமாம்... காலப் பலகணி ஒண்ணும் சாதாரண விஷயமில்ல. சயின்டிஸ்ட் பகீரதன் காணாமப் போவார்னு அது எப்பவோ சொல்லிடுச்சு. டெல்லில கெஜ்ரிவால்தான் சி.எம்.னும் அதுல சொல்லியிருக்கு. எப்ப சுனாமி வரும்? ராகுல் பிரதமர் ஆவாரா? அடுத்த வல்லரசு நாமளா...இல்லை, சீனாவா? அவ்வளவு ஏன்... உனக்கு நீ ஆசைப்படற ‘சங்கீத கலாவாணி’ விருது கிடைக்குமா, கிடைக்காதாங்கற கேள்விக்குக்கூட அதுல பதில் இருக்கு...’’ - ப்ரியா வெடித்தாள். பத்மாசினி திகைத்தாள். அனந்தகிருஷ்ணன் முகத்திலும் ஆச்சரிய அதிர்வு. அந்த நொடி வெடி வெடிப்பதுபோல் ஒரு சப்தம்... முத்தழகு அலறி அடித்துக் கொண்டு சமையல்கட்டிலிருந்து ஓடி வந்து வெளியே விழுந்தாள்!

10

நான் பள்ளியில் படித்த காலத்தில் வரலாறும், புவியியலும் தனித்தனி பாடங்களாக இருந்தன. கொடுமை என்னவென்றால், இந்தப் பாடங்களில் யாருக்குமே பெரிய ஈடுபாடு இல்லை. ஆசிரியரே கூட பெரிதாக ஆர்வம் காட்டுவதில்லை. ஒரு மாணவனை விட்டு பாடத்தைப் படிக்கச் சொல்வார். படித்து முடித்த பின், அதற்கான கேள்விகளை போர்டில் எழுதிப் போடுவார். விடையைத் தன் விருப்பத்துக்கு எங்களில் சிலரிடம் கேட்பார்.

ஒருநாள் கலிங்க மன்னன் அசோகன் பற்றிய பாடத்தின்போது, ‘யுத்த களத்தில் கிடந்த பிணங்களைப் பார்த்து, அசோகன் மனம் மாறி பௌத்த மதத்துக்கு மாறினான். அதற்கு

ஒரு பௌத்த துறவியும் தூண்டுதலாக விளங்கினார்' என்றார். அதிலிருந்து ஒரு கிளைக் கேள்வி என்னுள் எழுந்தது.

'ஒரு அரசனையே மனம் மாற்றி, மதம் மாற்றிடக் காரணமான பௌத்த மதம் இன்று ஏன் இந்தியாவில் இல்லை? இது இன்றும் இருப்பதாகக் காணப்படும் இலங்கையில் யுத்தம் என்று ஒன்று இல்லாத நாளே இல்லையே... ஏன்?' என்று நான் கேட்டேன். என் கேள்வியை அதிகப்பிரசங்கித்தனமான கேள்வி என்று அந்த ஆசிரியர் கண்டித்தார்.

நானோ அசரவில்லை.'சார்! வரலாறு என்பது அரசர்களின் வாழ்க்கை சார்ந்தது மட்டுமல்ல... அந்தக் கால மக்களின் வாழ்க்கை முறை, அவர்கள் பின்பற்றிய கலாசாரம் என்று பல விஷயங்கள் சார்ந்தது. அதை நாம் தெரிந்துகொள்வதில்தான் எல்லாம் உள்ளது. அசோகர் மரம் நட்டார், குளம் வெட்டினார், பௌத்த மதத்துக்கு மாறினார் என்பவை தலைப்புச் செய்தி போன்றவை. எனவே, விரிவான தகவல்களைத் தர வேண்டும்' என்றேன்.

அநேகமாக சரித்திர, பூகோள பாடங்களுக்காக இப்படி ஆர்வமாகப் பேசியவன் பல கோடி தமிழ் மக்களில் நான் ஒருவனாகத்தான் இருப்பேன். இந்த ஆர்வமே என்னைக் கல்லூரியில் இளங்கலையில் சரித்திரத்தை மேஜராக எடுக்க வைத்தது!'– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

முத்தழகு வந்து விழவும் சமையல்கட்டில் இருந்து புகை வர ஆரம்பித்தது. ஏதோ தீ விபத்து என்பது அனந்தகிருஷ்ணனுக்குப் புரிந்துவிட்டது.

‘‘என்னாச்சு முத்தழகு...ஃபயர் ஆக்ஸிடென்ட்டா? உனக்கு ஒண்ணும் ஆகலையே..?’’ என்று பதற்றமடைந்தவர் முன்பாக, புடவை முந்தானையை அவசரமாகச் சரி செய்துகொண்டே எழுந்தாள் முத்தழகு.

‘‘அய்யா... மைக்ரோவேவ் அடுப்புல குருமாவை சூடு பண்ண டெம்பரேச்சர் செட் பண்ணிக்கிட்டிருந்தேன். இடையில டம்முன்னு வெடிச்சுடுச்சு. பயத்துல நானும் ஓடிவந்து விழுந்துட்டேன்’’ என்றாள்.

அனந்தகிருஷ்ணன் அதைக் கேட்டபடி உள் நுழையப் பார்க்க, பத்மாசினி கத்தத் தொடங்கினாள்.

‘‘அய்யோ... நீங்க போய் எதையாவது தொட்டு ஷாக் அடிக்கப் போகுது... தொட்டுடாதீங்க!’’

‘‘கொஞ்சம் சும்மா இருக்கியா! நான் என் ஃபேக்டரில எலெக்ட்ரிகல் டிபார்ட்மென்ட்ல ஒர்க் பண்ணவன்...’’ - என்கிற பதில் காதில் விழ, ப்ரியாவும் சமையலறைக்குள் நுழைந்தாள்.மைக்ரோவேவ் செவ்வகப் பெட்டி பீஸ் பீஸாக சிதறியிருக்க, ஸ்விட்ச் பாக்ஸ் எல்லாம் வெடித்து புகை கசிந்தபடி இருந்தது. ரப்பர் வாசம் கலந்த புகையாக மூக்கைச் சிதைத்தது. அதைப் பார்த்த நொடியில் அனந்த கிருஷ்ணன் வேகமாக விலகிச் சென்று மெயின் ஸ்விட்ச்சை அணைத்துவிட்டுத் திரும்பினார்.

அதற்குள் வாட்ச்மேன் தங்கவேலுவும் உள்ளே ஓடி வந்து, ‘‘என்னய்யா வெடிச் சத்தம்? பெரியவர் ரூம்ல குண்டு கிண்டு வெடிச்சிருச்சா?’’ என்று கேட்டான். அதைக் கேட்டபடி கணபதி சுப்ரமணியனும் வள்ளுவரும் கூட வந்துவிட்டனர்.

‘‘என்னாச்சு அனந்த்..?’’

‘‘பவர் ஷார்ட் சர்க்யூட் ஆகிடுச்சுப்பா...’’

‘‘யாருக்கும் காயமில்லையே?’’

‘‘அதெல்லாம் ஒண்ணுமில்ல. மைக்ரோவேவ் அடுப்புதான் வெடிச்சிடுச்சு. நம்ம ஏரியாவே வோல்டேஜ் விஷயத்துல மோசம்பா... ஹைதர் காலத்து டிரான்ஸ்ஃபார்மரை மாத்தாமலே இருக்காங்க. ஒரு எம்.எல்.ஏவோ... இல்ல, மந்திரியோ குடியிருந்தா அவங்களுக்காக மாத்தியிருப்பாங்க. நாம சாமான்ய ஜனங்கதானே!’’ - இதுதான் சாக்கு என்று கணபதி சுப்ரமணியனிடம் சுய பச்சாத்தாபம் வேறு.

அந்த இடைவெளியில் வள்ளுவர் சமையல்கட்டைப் பார்த்தார். இப்போது புகை வடிந்து நன்றாகப் பார்க்க முடிந்தது. அவர் ஏதோ சொல்லப் போகிறார் என்று ப்ரியா யூகித்தாள்.

‘‘இன்னிக்கு இப்படி ஆனதுக்காக சந்தோஷப்படுங்க. பெரிய உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கணும். அக்னி மூலைக்கும் கன்னி மூலைக்கும் நடுவுல, எமன் நிக்கற இடத்துல அடுப்பு இருக்கு. இது எப்படின்னா, நம்ம இரண்டு கண்களும் ஒண்ணா சேர்ந்து ரெண்டு புருவத்துக்கு நடுவுல இருக்கற மாதிரி! எது எங்க இருக்கணுமோ அங்க இருந்தாதான் இயக்கம் சுலபமா இருக்கும். மாறினா அதன் பதில் விளைவைச் சந்திக்க வேண்டி யிருக்கும். இன்னிக்கு சந்திச்சுட்டீங்க...’’ - என்ற வள்ளுவரை கணபதி சுப்ரமணியன் கொஞ்சம் கேலியாகப் பார்த்துச் சிரித்த படியே, ‘‘என்ன... வாஸ்துவா?’’ என்று கேட்டார்.

‘‘ஆமாங்க...’’

‘‘ரொம்பவே முட்டாள்தனமான ஒரு விஷயம் இது மிஸ்டர் வள்ளுவர். இந்த வீடு கட்டி இருபது வருஷமாச்சு. அதுல இந்த மைக்ரோவேவ் அடுப்பு வந்து ஏழெட்டு வருஷம் இருக்கும். இன்னிக்குத்தான் இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கு. இதுக்குக் காரணம் மெயின் ரோட்ல இருக்கற பாழாப் போன டிரான்ஸ்ஃபார்மர்... அப்புறம் கூடிக் குறையற மின்சாரமும்! நீங்க என்னடான்னா நேரா வாஸ்துன்னுட்டீங்க. அதுகூட பரவாயில்லை. ஒரே தாவா எமன் நிக்கற இடம்னு எமன் வரை போயிட்டீங்க. யாருங்க இந்த எமன்?’’ - கணபதி சுப்ரமணியன் சற்று காட்டமாகவே கேட்க, வள்ளுவர் பதில் கூறாமல் சிரித்தார்.

‘‘அப்பப்ப இப்படி சிரிச்சா என்ன அர்த்தம்?’’

‘‘பின்ன... யார் இந்த எமன்னு கேட்டா நான் என்ன சொல்றது? நான் கிளம்பிப் போகும்போது முடிஞ்சா உங்களுக்கும் காட்டறேன்... ஆனா உங்களால அவனைப் பாக்க முடியாட்டி அதுக்கு நான் பொறுப்பில்ல!’’

‘‘மிஸ்டர் வள்ளுவர்! என் கேள்விக்கு தெளிவா பதில் சொல்லுங்க... பூசி மெழுகப் பார்க்காதீங்க...’’

‘‘ஆராய்ச்சியாளரே! எனக்கு இந்தப் பூசி மெழுகற விஷயமே பிடிக்காது. தெளிவில்லாதவன்தான் பூசுவான்... மெழுகு வான்... நான் அப்படியில்லை!"

‘‘என்ன அப்படியில்லை... ஒரு எமன் எப்படி ஒரே சமயத்துல ஆயிரக்கணக்கானவர் உயிரை எடுக்க முடியும்? உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் ஆயிரக்கணக்கான உயிர்கள் பிறந்துக்கிட்டும் இருக்கு, இறந்துக்கிட்டும் இருக்கு... இதெல்லாம் ஒரே இடத்துல நடக்கறதில்ல... உலகம் பூரா நடக்குது. அவ்வளவு இடத்துக்கும் எமன் ஒருத்தனால எப்படிப் போய் உயிரை எடுக்க முடியும்? கொஞ்சமாவது லாஜிக் இருக்கா உங்க பதில்ல..?’’

‘‘வாஸ்தவம்தான்... எமனை ஒரு தனி மனுஷனா நினைச்சுப் பார்த்தா, லாஜிக் இல்லாத மாதிரி தான் தெரியும். ஆனா, எமனை ஒரு மின்சாரமா கற்பனை பண்ணுங்க. அது மேட்டூர் டேம்ல உற்பத்தியானாலும் ஊர் முழுக்க வீட்டுக்கு வீடு நுழைஞ்சு தேவைக்குத் தகுந்த மாதிரி பயன்படுற தன்மையை உதாரணமா எடுத்துக்குங்க! புரியலேன்னா கோர்ட் அமீனா வீட்டை ஜப்தி பண்ற மாதிரின்னும் சொல்வேன்... கோர்ட்டார் உத்தரவுப்படி அமீனா

செயல்படுற மாதிரிதான் எமனும்...'' - வள்ளுவரின் பதில் அனந்தகிருஷ்ணனுக்கு அந்த நேரத்துக்கு ரசிக்கக் கூடியதாய் இல்லை.

‘‘அப்பா! உங்க விவாதத்தை நீங்க தயவுசெய்து உங்க ரூமுக்குப் போய் கன்டினியூ பண்ணிக்குங்க. நான் எலெக்ட்ரீஷியனுக்கு போன் பண்ணி வரச் சொல்றேன். இப்ப முதல் தேவை கரன்ட்! உயிரை எடுக்கறது யாருங்கற கேள்வி இல்லை...'' - என்று குரலில் சற்று ரௌத்திரம் காட்டினார்.

‘‘சாரிடா! உன் டென்ஷன் எனக்குப் புரியுது... பை த பை, எலெக்ட்ரீஷியன் வந்து கரெக்ட் பண்ற வரை நம்ப வீட்டுல பவர்கட். அப்படித்தானே?''

‘‘ஆமாம்...'' என்றபடியே எலெக்ட்ரீஷியனுக்காக அவர் செல்போனில் ‘E' லெட்டரில் தேடலைத் தொடங்கி ‘ஏழுமலை எலெக்ட்ரீஷியன்' எனும் பெயரில் விரல் நுனியை வைக்க, அந்தப் பக்கமாய் எலெக்ட்ரீஷியனின் செல்போன், ‘உங்களுக்கு இந்த பெட்ரோமாக்ஸ் லைட்டேதான் வேணுங்களா?' என்கிற கவுண்டமணி குரலை ஒலித்தது.

‘‘ஒரு இந்தியனோட செல்போன்லதான் அவனைத் தவிர எல்லாரும் பேசுவாங்க... பாடுவாங்க..!'' - என்று அனந்த் முணுமுணுக்க, ரிங்டோனில் கவுண்டமணி காமெடி தொடர்ந்து கொண்டே இருந்தது.

கணபதி சுப்ரமணியனும் வள்ளுவரும் அங்கிருந்து கிளம்பி விட, ப்ரியா அருகில் இருந்தாள். பத்மாசினியும் ஒதுங்கிவிட்டாள்.‘‘பாத்தியா ப்ரியா இந்த எலெக்ட்ரீஷியனை! எடுக்கறானா பாத்தியா போனை?''

‘‘வெயிட் பண்ணு டாடி... சைலன்ட் மோட்ல போனை வச்சுட்டு ஏதாவது வேலை பாத்துட்டிருக்கலாம்!’’

‘‘என்ன வேலை..? டாஸ்மாக்ல தண்ணி அடிச்சிட்டு இருப்பான் இடியட்!’’

‘‘டென்ஷன் ஆகாதே... வேற எலெக்ட்ரீஷியனுக்கு வேணா போன் பண்ணு!’’

‘‘நோ... நோ... இவனுக்குத்தான் இந்த வீட்டோட லைன் பத்தி தெரியும். புதுசா எவனாவது வந்து அவன் இஷ்டத்துக்கு எதையாவது பண்ணி திரும்ப ஷார்ட் சர்க்யூட் ஆனா?’’

‘‘பொறுமை டாடி... அந்த ஏழுமலைக்கே திரும்பவும் ட்ரை பண்ணு!’’அனந்தகிருஷ்ணன் திரும்ப முயற்சி செய்ய, மறுபடியும் கவுண்டமணியின் அதே கேள்வி. ‘பெட்ரோமாக்ஸ் லைட்டேதான் வேணுங்களா?’

‘‘பாத்தியா ப்ரியா... எதைத்தான் ரிங்டோனா வைக்கறதுன்னு ஒரு விவஸ்தையே இல்லையா? விஞ்ஞான விஷயத்துல நாம எதையும் கண்டுபிடிக்க மாட்டோம். ஆனா, அதை யூஸ் பண்ணிக்கறதுல நம்மை அடிச்சுக்க ஆள் கிடையாது. விட்டா ஒபாமா வாய்ஸ் கூட கேட்கும்...’’

‘‘டென்ஷனாகாதே... அந்த ஏழுமலையே கூப்பிடுவான். கொஞ்சம் வெயிட் பண்ணுவோம்...’’

‘‘யார் அவனா? திமிரு பிடிச்சவன்மா அவன். இன்னிக்கு டாக்டர்ஸ், எஞ்சினியர்ஸ் சீப்பாயிட்டாங்க. ஆனா, ஃபிஸிகலா ஒர்க் பண்றவங்க மலை மேல் ஏறிட்டாங்க. இவனோட ஒருநாள் சம்பளம் இப்ப எவ்வளவு தெரியுமா?’’

‘‘எவ்வளவு டாடி?’’

‘‘சிக்ஸ் ஃபிப்டிம்மா... அதுபோக வாங்கற எலெக்ட்ரிகல் சாமான் அவ்வளவுலயும் கமிஷன். எப்படியும் ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய்க்கு குறையாது. மாசம் முப்பதாயிரம்! ஆனா ஒரு பி.ஈ படிச்ச எஞ்சினியரிங் ட்ரெய்னிக்கு எங்க ஃபேக்டரில ஸ்டார்ட்டிங் சேலரியே நைன் தவுசண்ட்தான்...’’

‘‘இந்தியப் பொருளாதாரமே ரொம்ப விநோதம்தான் டாடி... என் ஃப்ரெண்ட் வர்ஷன்கூட சிரிச்சிக்கிட்டே சொல்வான். மதுரைல இருந்து வைகை எக்ஸ்பிரஸ்ல சென்னைக்கு வர நூறு ரூபா சில்லறைதான். ஆனா, எக்மோர்ல இருந்து அடையாறு போக முன்னூறு ரூபாய்க்கும் மேலம்பான்!’’

‘‘நீ ஆட்டோ கொள்ளையை சொல்றியா? அவங்களையும் திருத்த முடியாது. விலைவாசி இவங்களுக்கு மட்டும் ஏறிட்ட மாதிரியே பேசுவாங்க!’’ - அவர்கள் இருவரும் நாட்டு நடப்புகளில், அதன் நசுக்கங்களில் பேச்சாய் இருக்க, வர்ஷனின் மோட்டார் பைக் சப்தம் கேட்டது. அதை நிறுத்திவிட்டு சாவியைத் தூக்கிப் போட்டுப் பிடித்த படி வர்ஷன் வருவதில் தமிழ் சினிமா ஹீரோக்கள் அவ்வளவு பேருமே தெரிந்தார்கள். ப்ரியாவின் கவனமும் கட் ஆனது.

‘‘டாட்...’’

‘‘என்ன உன் ஃப்ரெண்ட் வந்துட்டானா?’’

‘‘ம்...’’

‘‘கேரி ஆன்...’’ - என்று சற்று பெருமூச்சோடு அவளுக்கு விடை தரவும், வர்ஷன் ஹாலுக்குள் நுழையவும் சரியாக இருந்தது.

‘‘கமான் வர்ஷ்...’’

‘‘என்ன ப்ரியா! பவர் கட்டா?’’

‘‘ஆமாப்பா... வா, நாம தோட்டம் பக்கம் போவோம்...’’

‘‘எங்க அந்த வள்ளுவர்?’’ - வர்ஷன் ஆணியால் ஓலை மேல் எழுதுவது போல அபிநயித்து கேட்க...

‘‘உள்ள இருக்கார்...’’ என்றபடி வெளியே உள்ள வேப்ப மரம் சூழ்ந்த சிறு கார்டன் பகுதி நோக்கி நடந்தாள் ப்ரியா.

இடையில் வர்ஷனின் கைபேசியிடம் சிணுங்கல். காதைக் கொடுத்தான்.

‘‘வர்ஷன்... அந்த வள்ளுவரை பார்த்துட்டியா?’’

‘‘இல்ல சார்... இப்பதான் வீட்டுக்குள்ள நுழைஞ்சிருக்கேன்!’’

‘‘ஜாக்கிரதை... அவர் மிஸ்டர் கணபதி சுப்ரமணியன்கிட்ட ஒப்படைச்ச விஷயங்கள்லதான் விஷயமே இருக்கு!’’

“ஐ நோ... ஐ நோ...”

“பி கேர்ஃபுல்...”

“நான் பாத்துக்கறேன் சார்... நீங்க பேச்சு மாறிடாம பேசின படி நடந்துக்குங்க!”

“நோ பிராப்ளம்... உங்க அக்கவுன்ட்ல இப்பவே அஞ்சு லட்ச ரூபாய் போட்டுட்டோம். இன்னுமா மெஸேஜ் வரலை?” - கேள்வியே வர்ஷன் வரையில் தித்தித்தது.

தோட்டத்தில் ஒரு மூலையில் கருந்தேள் ஒன்று, பங்களாவுக்குள் நுழைய விரும்புவது போல் சென்று கொண்டிருந்தது!

11

இளங்கலையில் சரித்திரப் பாடம் எடுத்த நான், என் கல்லூரியில் மிகப் பிடித்த இடமாக நூலகத்தைத்தான் கருதினேன். என் கல்லூரி நூலகத்தில் நிறையவே புத்தகங்கள் இருந்து என் சரித்திர, பூகோள அறிவை வளப்படுத்திக்கொள்ள பெரிதும் துணை செய்தன.

முன்னதாக, என் ஆய்வுகள் குறித்த இந்தக் கட்டுரை நூலில் நான் என் அனுபவம் சார்ந்த தனிப்பட்ட கருத்துக்களையும் பதிவு செய்ய விரும்புகிறேன். இதை வாசிப்பவர்கள், ‘என்ன இது... ஆய்வுக்கட்டுரை என்று கூறிவிட்டு பொதுவான தகவல்களோடு ஒரு டைரிக்குறிப்பு போல இது இருக்கிறதே’ என்று எண்ணிவிட வேண்டாம்.

ஒருவேளை மற்ற ஆய்வுக் கட்டுரையிலிருந்து எனது இந்தக் கட்டுரை நூல் அதுபோல் மாறுபட்டிருந்தால் அதில் குற்றம் காண வேண்டாம். ‘இது என் பாணி’ என்று ஏற்றுக்கொள்ளுங்கள்.

இந்த ஆய்வு நூலில் எனது நோக்கமே, நம் புராதனங்களின் சிறப்பை உணர்ந்தும் புரிந்தும் உங்களோடு பகிர்ந்துகொள்வதுதான்... இன்று விஞ்ஞானம் மிகவே வளர்ந்து விட்டது. அது இன்னமும் கூட வளரும். ஆனபோதிலும் இன்றைய பிரமிப்பூட்டும் விஞ்ஞானத்திற்கே அடித்தளம் போட்டவர்கள் நம் தமிழ்ப் பெரியோர் என்பது என் கருத்து.

குறிப்பாக ஏறத்தாழ 20ல் இருந்து 21 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இன்றுள்ள கன்னியாகுமரியை ஒட்டிய நிலப்பரப்பு கடலில் மூழ்கிப்போனது. ‘குமரிக்கண்டம்’ என்று குறிப்பிடப்படும் இந்தக் கண்டம் இன்றைய உலக நாடுகளான ஆஸ்திரேலியா, இலங்கை முதலான நாடுகளோடு நிலப்பரப்பிலும் தொடர்புடையதாக இருந்தது. இதில் ‘பஃறுளி’ எனும் ஆறும், ‘குமரி’ எனும் பெயரில் ஒரு ஆறும் கூட ஓடியதாகத் தெரிகிறது. தென்மதுரை, கபாடபுரம், மூதூர் என்கிற நகரங்கள் இருந்துள்ளன. சங்ககாலத்தில் புகழ்பெற்றிருந்த நச்சினார் எனும் பழம்பெரும் புலவர் ‘இறையனார் அகப்பொருள்’ என்று தான் எழுதிய நூலில் ‘தமிழ்ச் சங்கம்’ இங்கே பத்தாயிரம் ஆண்டுகள் வரை தொடர்ந்து நடைபெற்றதைக் குறிப்பிட்டுள்ளார்.

இக்காலத்தில்தான் ‘அகத்தியம்’, ‘தொல்காப்பியம்’, ‘பூதபுராணம்’, ‘மாபுராணம்’, ‘சங்கப்பாடல் திரட்டு’ போன்ற நூல்கள் உருவாயின...நாம் நமது வரலாற்றைப் பற்றி பேசும்போது 2000 வருட அளவிற்கான காலகதிக்குள்ளான காலத்தை மட்டுமே பெரிதும் சிந்திக்கிறோம். உண்மையில் நம் வரலாறு 20 ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது.

உலகின் மற்ற மொழிகள் 2000 ஆண்டுகளில் தோன்றியிருக்கலாம். நம் தமிழ்மொழி 20 ஆயிரம் ஆண்டுக்கும் முந்தையது மட்டுமல்ல... அப்போதே அது வெறும் பேச்சு மொழியாக மட்டுமின்றி இலக்கண வரையறைகளையும் கொண்டிருந்தது. 20 ஆயிரம் ஆண்டுக்கு முன்பே இலக்கணம் இருந்திருக்கிறது என்றால், அதற்கும் முன் ஒரு 50 ஆயிரம் ஆண்டுகளாவது அது பேச்சு மொழியாக மனித நாவின் எல்லாவித உச்சரிப்பு அசைபாடுகளுக்கும் உள்ளாகியிருக்க வேண்டும் என்பது என் கருத்து. அடுத்து, அந்த நாளில் மொழியோடு கூடி நமது கணித அறிவும் பிரமிக்க வைக்கக் கூடியதாய் உள்ளது...'

– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அந்தக் கருந்தேளை யாரும் பார்க்கவில்லை. பார்க்கும்படியாக அது போகவுமில்லை! வர்ஷனும் சற்று கிசுகிசு குரலில் போனில் பேசி முடித்தவனாக திரும்பி வந்து ப்ரியாவைப் பார்த்தான். அவன் முகத்தில் வந்திருக்கும்போது தெரிந்ததை விடவே கூடுதலாய் ஒரு பிரகாசம்.

"என்ன வர்ஷா... ரொம்ப ஹேப்பியா இருக்கே? நீ புலம்பப் போறேன்னு நினைச்சேன்!"

"நோ... நோ... ஒரு வித்தியாசமான அசைன்மென்ட் நமக்குக் கிடைச்சிருக்கு. இதை விடக்கூடாது - இது எவ்வளவு தூரம் உண்மையானதுன்னு ஒரு கை பார்த்துடணும்..." என்று அவளோடு ஒத்துழைப்பது போல் பேச ஆரம்பித்தான்.

‘‘அஃப்கோர்ஸ்... இப்பதான் நீ சரியா யோசிக்க ஆரம்பிச்சிருக்கே. ரியலா சொல்றேன்டா... அந்த வள்ளுவர் ஒரு லெஜண்ட்! எந்த டாபிக்கை தொட்டாலும் மெயில் பாக்ஸை திறந்த மாதிரி விஷயம் கொட்டுது...’’

‘‘அது குப்பையா இல்லாம இருந்தா சரி...’’

‘‘குப்பையா இருந்தா நான் இவ்வளவு எக்ஸைட் ஆவேனா?’’

‘‘லுக் பேபி... உன்னை எல்லாம் ஏமாத்தணும்னு பிளான் பண்ணா எவ்வளவு வேணும்னாலும் ஏமாத்தலாம். ஆகையால் நீ உன்னை ரொம்ப அலர்ட்னு நினைச்சுக்காதே...’’- வர்ஷன் ஒரு ஆணுக்குண்டான திமிரோடு சொன்னதை ப்ரியாவும் ஒரு முறைப்போடு தான் எதிர்கொண்டாள்.

‘‘என்ன முறைக்கறே?’’

‘‘முறைக்காம... உங்க ‘மேல் ஷாவெனிச’த்தை காட்டாம உங்களால் இருக்கவே முடியாதாடா... பொம்பளன்னாலே அவ எல்லா வகைலயும் உங்கள விட வீக்கானவங்கனு ஒரு தீர்மானத்தோடதான் எப்பவும் பேசுவீங்களாடா நீங்க...’’

‘‘ப்ரியா... நீ தேவையில்லாம டென்ஷன் ஆகாதே. நான் உன் நல்லதுக்குத்தான் சொன்னேன். நீ உடனே ‘என்னை ஏமாத்திக் காட்டுடா பாக்கலாம்’னு சவால்விட, நான் அதை ஏத்துக்கறேன்னு நாம ட்ராக் மாறவேண்டாம். நீ இப்ப எதுக்கு கூப்பிட்டே? விஷயத்துக்கு வா..!’’

‘‘வர்ஷா... நீ எமன்டா! எல்லாரும் காலை மிதிச்சிட்டாதான் சாரி கேப்பாங்க. நீ கத்தியால குத்திட்டு அதுக்கும் சாரி கேக்கறவன்டா...’’

‘‘சரி... அப்படியே இருக்கட்டும். மேட்டருக்கு வா!’’

‘‘என்ன மேட்டருக்கு வா... நீ முதல்ல வள்ளுவரை மீட் பண்ணு. நான் சொன்னது எவ்வளவு சரின்னு அப்ப தெரியும். அப்புறம், அவரை சாகவிடக் கூடாது. அதுதான் இப்ப நம்ப முன்னால உள்ள சேலஞ்ச்...’’

‘‘என்ன பெரிய சேலஞ்ச்... அவர் என்ன ஐ.சி.யு.வில உயிருக்குப் போராடிக்கிட்டா இருக்கார், நாம எதையாவது பண்ணி அவர் உயிரை இழுத்துப் பிடிச்சு நிறுத்த..?’’

‘‘எல்லாத்துக்கும் பதில் சொல்லாதே... இங்க சில அமானுஷ்யமான சிக்னல்களும் கிடைச்சிருக்கு...’’

‘‘அமானுஷ்ய சிக்னலா... தமிழும் இங்கிலீஷும் கலந்த புது கலைச்சொல்லா இருக்கே?’’

‘‘கிண்டல் பண்ணாதே... ஒரு குடுகுடுப்பைக்காரன் வந்து ‘இந்த வீட்ல ஒரு உயிர் போகப் போகுது’ன்னு சொல்லிட்டுப் போயிருக்கான். இப்படி வீட்டு வாசலுக்கே வந்து பயமுறுத்தறதெல்லாம் எனக்குப் புதுசு. கேட்டா ‘சிட்டி லைஃப்ல இது அபூர்வம்... மற்ற ஊர்கள்ல ரொம்ப சகஜம்’னு சொல்றாங்க. நீ என்ன சொல்றே?’’

‘‘நான் என்னத்த சொல்ல... இவங்கள்லாம் ஏன் கும்பகோணம் தீ விபத்துல அவ்வளவு குழந்தைகள் செத்துப் போனதை முன்னாலயே சொல்லலை..?’’

‘‘இதோ பார்... இப்ப பிரச்னை ‘காலப்பலகணி உண்மையா, பொய்யா’ங்கறதுதான்! அது உண்மைன்னா வள்ளுவர் உயிர் அவர் நம்பற மாதிரி போயிடும்... பொய்னா போகாது... நாம இப்ப அது பொய்யிங்கற பக்கத்துல நின்னு செயல்படப் போறோம். ஆம் ஐ கரெக்ட்?’’

‘‘கரெக்ட்.... ஆனா ஒரு சின்ன கரெக்ஷன்...’’

‘‘என்ன?’’

‘‘ஏன் நாம அதை உண்மைன்னு நம்பக் கூடாது?’’

வர்ஷன் அப்படி ஒரு கேள்வி கேட்பான் என்று ப்ரியா துளிகூட எதிர்பார்க்கவில்லை.

‘‘என்னடா சொல்றே?’’ என்று காற்றுக்குரலில் கேட்டாள்.

‘‘உண்மையா இருந்துட்டா..?’’

‘‘நீயா இப்படி கேக்கறே?’’

‘‘நானேதான்... நீ சொல்ற அறிகுறிகளை வச்சுப் பாக்கும்போது, அது உண்மையா இருக்கறதுக்கு வாய்ப்பு இருக்கற மாதிரிதானே தோணுது?’’

‘‘அப்ப வள்ளுவர் செத்துப் போயிடுவார்னு நீ நம்பறியா?’’

‘‘அவரே நம்பும்போது நாம ஏன் அதை நம்பக் கூடாது?’’

‘‘மண்ணாங்கட்டி... நாமளும் நம்பினா அவரை எப்படிக் காப்பாத்த முடியும்?’’

‘‘அப்ப நீ நம்பாதே... காப்பாத்த முயற்சி செய். என்ன நடக்குதுன்னு பார்ப்போம்...’’ - வர்ஷனிடம் ஒரு எதிர்பாராத மாற்றத்தை அந்த நொடியே உணர்ந்த ப்ரியா முகத்தில் ஏராளமான சலனங்கள்.

‘‘என்ன ப்ரியா... நான் பல்டி அடிச்சிட்டதா நினைக்கறியா?’’

‘‘ஆமாம்... பல்டிலயும் அந்தர் பல்டி, ஆகாச பல்டிம்பாங்களே, அப்படி ஒரு பல்டியை நீ இப்ப அடிச்சிருக்கே. வந்ததுல இருந்தே உன்கிட்டே தடுமாற்றங்கள் வேற... ஆமாம் உனக்கு என்னாச்சு?’’

‘‘ப்ரியா... இப்ப என்ன செய்யணும்ங்கறே? காலப்பலகணியை நாம நம்பக் கூடாதுங்கிறியா?’’

‘‘பொடலங்கா... நாம நியூட்ரலா இருந்து செயல்படணும்னு சொல்ல வந்தேன்!’’

‘‘நியூட்ரலா... நியூட்ரலா... ஓ, அதுவும் சரிதான். அப்படியே செய்துடுவோம். சரி, வா... முதல்ல வள்ளுவரை சந்திப்போம்...’’ - வர்ஷனிடம் ஒரு வேகமும் தொனித்தது. அதே சமயம் முதல் தடவையாக அவன் முரண்பட்டவனாகவும் சந்தேகத்துக்குரியவனாகவும் ப்ரியாவுக்குள் அர்த்தமாக ஆரம்பித்தான்.அதற்கு மேல் அவனிடம் விவாதம் செய்யாமல் அவனை அழைத்துக்கொண்டு கணபதி சுப்ரமணியனின் அறை நோக்கி நடந்தாள் ப்ரியா.

உள்ளே மின்சாரம் இல்லாததால் இருள் கூடுதலாகத் தெரிந்தது.

‘‘என்ன... கரன்ட் இல்லையா?’’

‘‘ஆமாம்...’’

‘‘இன்வெர்ட்டர்..?’’

‘‘அதுவும் ரிப்பேர்...’’

‘‘பக்கத்து வீட்ல மோட்டார் ஓடற சத்தம் கேட்குதே..?’’

‘‘எங்க வீட்ல பவர் ஷார்ட் சர்க்யூட் ஆகி கிச்சன்ல மைக்ரோவேவ் அடுப்பு குண்டு வெடிச்ச மாதிரி வெடிச்சிடிச்சு...’’

‘‘மை குட்நெஸ்...’’ - பேசிய படி மாடிப்படியில் இருவரும் ஏறுவதை விசிறியால் விசிறிக் கொண்டே வந்த பத்மாசினி பார்த்தாள். அவளை ப்ரியாவும் பார்த்தாள்.

‘‘யாரும்மா... எலெக்ட்ரீஷியனா?’’

‘‘வர்ஷன்மா...’’

‘‘ஓ... சாரி!’’

‘‘ஹாய் ஆன்ட்டி...’’

‘‘எப்படிப்பா இருக்கே..?’’

‘‘ஃபைன் ஆன்ட்டி...’’

- நடந்தபடியே சம்பிரதாயமான பேச்சுக்கள் முடிய, இருவரும் அறைக்குள் நுழைந்தனர். கணபதி சுப்ரமணியன் நாற்காலி யில் அமர்ந்திருக்க, அவர் எதிரில் வள்ளுவரும் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

‘‘தாத்தா...’’

‘‘வாடா... யார் உன் பாய் ஃப்ரண்டா?’’

‘‘ஆமாம் தாத்தா... வர்ஷன்!’’

‘‘ஹலோ தாத்தா...’’

‘‘உக்காருங்க... இவர்தான் நம்ம கெஸ்ட் வள்ளுவர்!’’

- தாத்தா கை காட்ட, வர்ஷன் வள்ளுவரைப் பார்த்து சிரிக்க, பதிலுக்கு வள்ளுவர் சலனமின்றிப் பார்த்தார்.

‘‘உங்களப் பத்தி ப்ரியா ரொம்பவே சொன்னா... நீங்க வேணா பாருங்க, உங்கள சாக விடமாட்டோம் நாங்க...’’ - அந்த பதிலுக்காகக் கொஞ்சம் சிரித்தார். அந்த சிரிப்பின் பொருள் வர்ஷனுக்குப் புரிந்தது.

‘‘நீ எவ்வளவு சொன்னாலும் வள்ளுவர் அதை ஏத்துக்கத் தயாரில்லை. தான் சாகப் போறது உறுதிங்கற மாதிரியே பேசறார்!’’ - என்று எடுத்துத் தந்தார் கணபதி சுப்ரமணியன்.

அப்போது வள்ளுவர் நாற்காலியில் இருந்து எழுந்தவராக பாத்ரூம் நோக்கி செல்லத் தொடங்கினார்.

அவர் விலகின நொடி, ப்ரியாவிடம் வேகமாய் ஒரு செயல்பாடு. அந்த அறையின் சுவர்க் கடிகாரத்தில் மணி மூன்றைக் காட்டிக் கொண்டிருந்தது. அதை வேகமாக நான்குக்குக் கொண்டு போனாள். அடுத்து தன் கைக் கடிகாரத்தில் மணியை நான்குக்குக் கொண்டு போனவள், கணபதி சுப்ரமணியனின் கடிகாரம், வர்ஷனின் கடிகாரம் என்று சகலத்திலும் ஒரு மணி முன்னோக்கிப் போய் நின்றாள்.

கணபதி சுப்ரமணியன் புரிந்துகொண்டு வாய் திறந்தார்.

‘‘என்னடா... டயத்தை மாத்தி வச்சு வள்ளுவரை ஏமாத்த முடியும்னு நம்பறியா?’’

‘‘நிச்சயமா... அவர் சொன்னபடி 4 மணிக்கு மேலதான் அவருக்கான உயிர் பிரியற டைம். இந்த கடிகாரப்படி மூணு மணிக்கே நாலு மணி வந்துடும். அவர் சொன்னபடியே பார்த்தாலும், நாலு மணிக்கு மேலதான் மரணம் வரணும். அதன்படி பார்த்தா இந்த கடிகாரப்படி ஐந்து ஆகும்போதுதான் நாலு மணி. ஆனா, மூணு மணிக்கே வள்ளுவர் வரையில நாலு மணி கடந்துடறதால, சைக்கலாஜிகலா அவருக்கும் ஒரு தைரியம் வரும் இல்லையா?’’

‘‘நீ சொல்றது கொஞ்சம் குழப்பமாதான் இருக்கு. இருந்தாலும் சைக்கலாஜிகலா இது வள்ளுவருக்கு தைரியம் தர ஒரு சின்ன சான்ஸ் இருக்கு. அந்த மரண விநாடிகளைக் கடந்த பிறகு நாமகூட அவர்கிட்ட உண்மையைச் சொல்லி அவருக்குப் புரிய வைக்கலாம்...’’ என்றார் கணபதி சுப்ரமணியன். பாத்ரூமிலிருந்து வள்ளுவரும் திரும்பி வந்தார். கால் முழுக்க நல்ல ஈரம். கணபதி சுப்ரமணியனுக்கு ஈரக் கால்களோடு இருக்கவும் பிடிக்காது; நடக்கவும் பிடிக்காது. எனவே, இந்தக் கால் கழுவும் பழக்கமெல்லாம் அவருக்குக் கிடையாது. கணபதி சுப்ரமணியன் அவர் கால்களை இதனால் ஊடுருவிப் பார்க்கவும், வள்ளுவருக்குப் புரிந்தது.

‘‘என்ன, ஈரக்கால்களை அப்படி பாக்கறீங்க?’’

‘‘நான் பாத்ரூம் போனா காலெல்லாம் கழுவமாட்டேன். எனக்கு ஈரம் பிடிக்காது!’’

‘‘விதி தப்பா இருந்தா புத்தி இப்படித்தான் உணர வைக்கும்!’’

‘‘என்ன சொல்றீங்க... புரியல!’’

‘‘கால்களைக் கட்டாயம் கழுவணும்மா... வெளிய போய்ட்டு வந்தாலே கழுவிக்கணும். கலி புருஷன் கால் வழியாதான் நம்பள பிடிச்சு ஆட்டி வைப்பான். நளச் சக்கரவர்த்தியையே அவன் அப்படிப் பிடிச்சு படுத்தின பாடுதான் ‘நளதமயந்தி சரிதம்’!’’

‘‘விட்டா உடனே புராணம், சாஸ்திரம்னு போயிடுவீங்களே... நீங்க என்ன செய்வீங்க? உங்க வளர்ப்பு அப்படி... நான் தெரியாமதான் கேக்கறேன்... எல்லாம் தெரிஞ்சு தெளிவா நடந்துக்கறதா சொல்ற நீங்க செத்துடுவேன்ங்கறீங்க. இது எதுவும் தெரியாம வாழற நான் என்ன கெட்டுப் போயிட்டேன். நல்லாதானே இருக்கேன்!’’ - கணபதி சுப்ரமணியன் கேட்ட கேள்வி ப்ரியாவுக்கு சரியான கேள்வியாகத்தான் தோன்றியது.

‘‘அய்யா... இந்த உலகத்துல வாழற நாளைவிட சாகற நாள்தான்யா நல்ல நாள். அது உங்களுக்குப் புரியாது. நான் பொறக்கும்போதே என் மரண விநாடியும் முடிவாயிடுது. அதை மாற்ற அந்த சர்வேஸ்வரனுக்கே அதிகாரமில்லீங்க... உங்க வரையில நீங்க நல்லா இருக்கிறதா சொன்னீங்க. கேட்க சந்தோஷமா இருக்கு. ஆனா, நளனைவிடவே நீங்க அதிகம் கஷ்டப்படப் போறீங்க. இதை ஒரு தகவலா சொல்லிக்கறேன். நீங்க கஷ்டப்படணும்ங்கறது என் விருப்பம் இல்லீங்க... என்னைத் தப்பா எடுத்துக்காதீங்க!’’ - என்று வள்ளுவர் சொன்ன செய்தி ப்ரியா வைக் கலக்கியது.

வர்ஷனோ அந்த அறையில் ஒரு இடத்தில் வைக்கப்பட்டிருந்த வள்ளுவர் தந்த பெட்டியைப் பார்த்தவனாக, மெல்ல அதை நோக்கிச் சென்று அதனருகில் நின்றான்.

12

நம் சான்றோர்களின் கணித அறிவுக்கு சாட்சியாக ஒரு டெசிமல் காலண்டரே உள்ளது. காஞ்சி எனப்படும் காஞ்சிபுரத்தில் பல்லவன் காலத்தில் பல்கலைக்கழகமே இருந்து, அது செயல்பட்ட தன் தடயங்களை நான் பணிபுரிந்த காலத்தில் கண்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் எனக்குப் பல காரணங்களுக்காக மிகப் பிடித்த ஒரு ஊராகும்.

இங்கே பாலாற்றங்கரை ஓரம் ஒரு செவ்வகப் பாறையில் நமது எண் கணித டெசிமல் காலண்டரைக் கண்டேன். அனேகமாக கணித ஆசிரியர் பாடம் சொல்லித் தருவதற்காக மணலில் எழுதும்போது அழிந்துவிடுவதால், ஒரு நிரந்தர ஏற்பாடாக கல்லில் பொறித்து அந்த செவ்வகக் கல்லை விட்டிருக்க வேண்டும். அந்தக் கல் கிடந்த இடத்திற்கு அருகில்தான் பல்கலைக்கழகம் இருந்ததற்கான தடயங்களும் கிடைத்தன.

எனவே அந்தக் கல்வெட்டுக் கணக்கு மாணவர்கள் அறிந்துகொள்ளத்தான் என்று அனுமானித்தேன். அதில் ஒன்று முதல் காணி வரையிலான அளவீடுகள் இருந்தன.'1 – ஒன்று, 3/4 – முக்கால், 1/2 – அரை, 1/4 – கால், 1/5 – நாலுமா, 3/16 – மூன்று வீசம், 3/20 – மூன்றுமா, 1/8 – அரைக்கால், 1/10 – இருமா, 1/16 – மாகாணி (வீசம்), 1/20 – ஒருமா, 3/64 – முக்கால் வீசம், 3/80 – முக்காணி, 1/32 – அரைவீசம், 1/40 – அரைமா, 1/64 – கால் வீசம், 1/80 – காணி, 3/320 அரைக்காணி முந்திரி, 1/160 – அரைக்காணி, 1/320 – முந்திரி, 1/102400 – கீழ்முந்திரி, 1/2150400 – ஒரு இம்மி, 1/23654400 – மும்மி, 1/165580800 – ஒரு அணு...'

-என்று ஒன்றில் தொடங்கி அணுத்துகள் வரை கணித்து அதைப் பொறித்தும் வைத்திருந்தது எனக்கு வியப்பளித்தது. இன்று கால்குலேட்டர் உள்ளது. எவ்வளவு பெரிய கணக்கையும் அது பிழையின்றிப் போட்டுவிடும்.

ஆனால், அன்று அப்படி ஒன்று இல்லாத நிலையில் இந்தக் கணித அளவுகளை மிக நுட்பமாக, துல்லியமாக நம் சான்றோர்கள் எட்டியிருந்தது எனக்கு வியப்பளித்தது. நான் ஓர் உண்மை நோக்கி நகர ஆரம்பித்தேன். அது என்ன தெரியுமா? நம் சான்றோர்கள் இன்றைய விஞ்ஞானத்துக்கும் மேலான ஞானத்தோடு அன்றே வாழ்ந்திருக்க வேண்டும்!''- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அந்தத் தகரப்பெட்டி 'நான் 1950களின் தயாரிப்பு' என்பது போல அவனைப் பார்த்தது. பச்சை பெயின்ட் அடிக்கப்பட்டு உதிர்ந்தும் வெளிறியும் போயிருந்தது. பெட்டிக்கு வெளியே இன்றைய நவீன பூட்டு! வர்ஷன் அதைப் பார்த்து முகம் மாறுவதை கணபதி சுப்ரமணியன் பார்த்துவிட நேர்ந்தது.

''என்ன வர்ஷா... அந்தப் பொட்டிய அப்படிப் பாக்கறே... அதுதான் இவர் என்கிட்ட ஒப்படைச்சிருக்கிற சரக்கு...''

''சரக்கு இல்லை அங்கிள்... பொக்கிஷம்!'' - என்றான் வர்ஷன் வேகமாய்.

''பொக்கிஷமா?'' - மிக வேகமாக திருப்பிக் கேட்டார் கணபதி சுப்ரமணியன்.

''அ... ஆமா அங்கிள்... அப்படித்தான் சொன்னாங்க...''

‘‘யாரு?’’ - கணபதி சுப்ரமணியன் நெற்றி சுருங்க வேகமானார்.

‘‘ஓ... சாரி, அப்படித்தான் சொல்வாங்கன்னு சொல்ல வந்தேன்...’’ - வர்ஷன் சமாளித்தான்.அவன் வந்ததிலிருந்தே தடுமாறுவதை கவனித்து வந்த ப்ரியா, இம்முறையும் கவனித்தாள்.

‘‘பூட்டியிருக்கே?’’ - இதுவும் அவன்தான்.

‘‘நான்தான் பூட்டு போட்டேன். உள்ள இருக்கற விஷயம், நம்ம வள்ளுவர் மதிப்புப்படி பார்த்தா ஐம்பது கோடி ரூபாய்க்கும் மேல ஆச்சே?’’

‘‘அப்படியா... அப்ப வைரம், மாணிக்கம்னு அந்தக் கால சங்கதிகள் எல்லாம் உள்ள இருக்கா?’’

‘‘அப்படியெல்லாம் எதுவும் இல்லை. காலப்பலகணி எங்க இருக்கு, அதை எப்படி அடையணும்ங்கற ஏட்டுக் குறிப்புகள்... அப்புறம் அங்க பயன்படுத்தத் தேவையான காம்பஸ், சோழின்னு சில சமாச்சாரங்கள்...’’

‘‘ஓ! இதுக்கா இவ்வளவு மதிப்பு?’’ - வர்ஷன் வியப்பை வழிய விட்டான்.

‘‘தம்பி... இன்னும் ஐந்நூறு வருஷம் இந்த உலகம் எப்படி இருக்கும்ங்கிற தகவல் ரொம்பத் துல்லியமா பலகணியில இருக்குப்பா! அதுல நம்ம தமிழ்நாட்டு சமாசாரமோ... இல்ல, இந்திய நாட்டு சமாசாரமோ மட்டுமில்ல... உலகம் முழுக்க நடக்கப் போற தகவல்கள் எல்லாம் இருக்கு. குறிப்பா சுனாமி பற்றின தகவல்கள், பூகம்பம் பற்றின தகவல்கள், எரிமலை வெடிக்கப் போற தகவல்கள், பிரதான உலகத்தலைவர் யாருங்கற தகவல்கள்... இப்படி சொல்லிக்கிட்டே போகலாம்!’’

‘‘இதெல்லாம் எப்படி சாத்தியம்... எவ்வளவு யோசிச்சாலும் லாஜிக் இடிக்குதே?’’

‘‘நல்லா இடிக்கட்டும்... இதெல்லாம் டுபாக்கூர், பொய்னு சொல்றவங்கதான் உண்மைல இந்தப் பலகணியை காலாகாலத்துக்கும் காப்பாத்தப் போறவங்க. ஏன்னா, ‘இது உண்மை’ன்னு தெரிஞ்சு இதை அடைய ஆளுக்கு ஆள் முயற்சி செய்தா இதோட கதி என்னாகும்னு யோசிச்சுப் பார்!நமக்குச் சொந்தமான கோஹினூர் வைரம் இப்ப நம்ம நாட்டுலயே இல்லை. அது இப்ப வெள்ளக்காரன்கிட்ட இருக்கு. அங்க அதைப் பாதுகாக்க அதுக்கான மதிப்பை விடவே அதிகம் செலவழிச்சுட்டாங்க; செலவழிச்சுக்கிட்டும் இருக்காங்க. ஒரு உண்மை

தெரியுமா?’’ - வள்ளுவர் கேட்கவும் எல்லோருமே அவரிடம் ஊன்றினர்.

‘‘அந்த வைரம் இங்க இருந்தவரை இந்த நாடு பிரிஞ்சு பல கூறுகளாக இருந்தது. தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரனா இருந்தான். அந்த வைரம் இங்க இருந்து போச்சு. இந்திய நாடு ஒண்ணாகிடுச்சு! மிட்டா மிராசு, ஜமீன்தார், ராஜா, மந்திரின்னு எல்லாரும் ஒழிஞ்சுட்டாங்க. அதே சமயம் இது இப்ப எங்க இருக்கோ, அங்க இப்ப பெருசா ஒத்துமையில்லை. அங்க எல்லாம் பிரிஞ்சு எலிசபெத் ராணியே கௌரவ ராணியாதான் இருக்காங்க’’ - வள்ளுவர் சொன்னது யோசிக்கக் கூடியதாக இருந்தது. ஆனாலும் வர்ஷன் அதை ஏற்கவில்லை.

‘‘ஐயா! காலம் மாறிக்கிட்டேதான் இருக்கும். நாமளே சின்னக் குழந்தையா இருந்து வளர்ந்து மாறலையா? இது இயற்கை! அப்படி ஒரு மாற்றம்தான் எப்பவும் நம்மைச் சுத்தியும் நடந்துக்கிட்டிருக்கு. ஆனா, நீங்க சொல்றத பார்த்தா ‘வைரம்தான் காரணம் - அதுக்குப் பிரிக்கற சக்தி இருக்கு’ங்கற மாதிரியில்ல இருக்கு?

’’‘‘ஆமாம்பா! வைரம்னா சுக்கிரன்ங்கற கிரகத்தோட அம்சம்... இது பௌராணிகப் பார்வை! வைரம்னா அழிவற்றது. இது புத்திபூர்வமான பார்வை! ஒரு வைரம் நம்ம கைல இருக்குன்னா, லட்சக்கணக்கான கால அளவு கடந்து அப்ப உள்ள ஏதோ ஒரு நாளில் அழிந்து போய் பூமிக்குள்ள புதைஞ்சு போன ஒரு மரத்துண்டைத்தான் நாம இப்ப தொட்டுக்கிட்டு இருக்கோம்னு அர்த்தம்.

பூமிக்குள்ள புதைஞ்சும், மக்கி மண்ணாகிடாம, இறுகிக் கல்லாகி, அப்புறம் கரியாகி, அப்புறம்தான் வைரமாகியிருக்கு. பல ஆயிரம்

வருடங்கள் பல சோதனைகளைக் கடந்தும் அழியாம இப்ப ஒளி பொருந்தியதா அது இருக்குன்னா, ஒவ்வொரு நொடியும் அழிவை சந்திச்சு முதுமையை நோக்கிப் போய்க்கிட்டிருக்கற நம்ம முன்னால இந்த வைரம் எவ்வளவு பெருசு?'' - சரியாகத்தான் கேட்டார் வள்ளுவர். சட்டென்று ஒரு பதிலைக் கூற வர்ஷனால் முடியவில்லை.

''என்ன தம்பி மௌனமாயிட்டே..? அதனாலதான் ஒரு முற்றுப்புள்ளி அளவு வைரத்துண்டு கூட பல ஆயிரம் ரூபா விக்குதுன்னு பொருளாதாரப் பார்வை பாத்துடாதே! அதை தாண்டிப் பார்! ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு விஷயமும் மாறிக்கிட்டிருக்கிற இந்த உலகத்துல தன்னை ஜிகுஜிகுன்னு மாத்திக்கிட்டு, வலிமையிலயும் தனக்கு இணை இல்லைன்னு வச்சுக்கிட்டிருக்கற வைரம் நம்மைவிட மேலானதும், சக்தி உடையதுமா இருக்க வாய்ப்பு இருக்கா இல்லையா..?''

''ஒரு கோணத்துல நீங்க சொல்றது வாஸ்தவம்தான். ஆனா, இதோட மதிப்பு தெரிஞ்சு நாம வாங்கி பாதுகாப்பா வச்சிருக்கறதாலதானே இது இருக்கு. அப்ப, இதை வாங்கி பாதுகாக்க முடிஞ்ச நாம பெருசா... இல்லை, இது பெருசா?''

''இதையே நான் கொஞ்சம் மாத்திச் சொல்றேன். இதை எல்லோராலயும் வாங்க முடியாது. உலகத்துல எவ்வளவோ விஷயங்கள் வாங்கறதுக்கு இருக்கும்போது, இதை வாங்கற ஆசையும், இதை பாதுகாப்பா, வச்சுக்கணும்ங்கற எண்ணமும் ஏன் சிலர்கிட்ட மட்டும் இருக்கு?''

''ஏன்?''

‘‘அங்கதான் இதோட சக்தி இருக்கு. வைரத்தை எல்லோரும் வாங்கிட முடியாது. அதுக்கு ஒரு விதி இருக்கு. அதுக்குப் பின்னால சுக்கிரன்ங்கற கோள் இருக்கு. அந்தக் கோள் நம்ம உடம்புல சுக்கிலம்ங்கற ஜீவசக்தியா இருக்கு. அந்த ஜீவ சக்தி நம்ம மன அமைப்பை மாற்றக் கூடியது. ஒரு பொருள் மேல ஆசைப்பட இந்த சக்திதான் காரணம். வெறுக்கவும் இதுதான் காரணம்!’’

‘‘என்ன சொல்றீங்க நீங்க... நாம சுயமா எதையும் செய்யறது கிடையாதா?’’

‘‘மனசை ஆடாம அசையாம நிறுத்த முடிஞ்ச யோகி மட்டும்தான் சுயமா செயல்படுறவன். மனசுங்கற ஒண்ணு தலையில இருக்கா, மார்புக்குள்ள இருக்கான்னு கூட தெரியாம, ஒரு சமயம் நெஞ்சைத் தொட்டும் ஒரு சமயம் தலையைத் தொட்டும் பேசற உன்னைப் போல யாருமே சுயமா எதையும் செய்யறவங்க கிடையாது தம்பி!’’

‘‘இதை நான் ஒத்துக்க முடியாது. ரொம்ப முட்டாள்தனமா இருக்கு உங்க பேச்சு...’’ - சற்று கோபப்பட்டான் வர்ஷன்.

‘‘கோபிக்கறதால என் கருத்து மாறிடாது. நானும் சுயம் இல்லாதவன்தான். அதனாலதான் என் உயிர் என் கைல இல்லன்னு நம்பறேன். அவ்வளவு ஏன்..? உறுதியா செத்துடுவோம்னு நம்பற ஒருத்தன், தன் இறுதிக்கால மணி நேரங்களை இப்படியா தன் வாழ்க்கைல இதுவரை சந்திச்சிராத புது நபர்களோட கழிப்பான்?’’

‘‘வாட் டூ யூ மீன்?’’

‘‘என் வள்ளுவப் பிறப்பு முடியப் போகுதுய்யா. அடுத்து நான் என்னாவேன், ஏதாவேன்ங்கறது ஆன பிறகுதான் தெரியும். ஒரு

கொடுமை என்னன்னா, என் இறப்புக்குப் பிறகு நான் மனிதனா இல்லாம, ஒரு ஆடா, மாடா பிறந்தா அது கூட தெரியாது. ஏன்னா ஆடு, மாடுங்கறது நாம வச்ச பேர்.

ஒரு ஆட்டுக்கோ மாட்டுக்கோ தான் ஒரு உயிரினம் - தான் ஒரு ஆடு - தான் வாழ்ந்துக்கிட்டிருக்கறது பூமியிலங்கற எதுவுமே தெரியாது. உணர்வால மட்டுமே வாழ்ந்து மடிஞ்சு போற உயிரினங்கள் அவை. மனிதன் மட்டும்தான் அறிவால தன்னை அறிஞ்சவனா இருக்கான். அந்த மனிதப் பிறப்பா நான் திரும்பப் பிறந்தாலும், நான் ஒரு மனிதன்னு தெரிஞ்சுக்க குழந்தைப் பிராயத்தைக் கடக்கணும்.

கூட்டிக் கழிச்சுப் பார்த்தா, எதுவும் நம்ம கைல இல்ல. சுழிச்சுக்கிட்டு ஓடுற ஆத்துல ஒரு தக்கை விழுது... ஆறு போன போக்கெல்லாம்தான் அதுவும் போகும். அதுக்கு தனியா ஒரு போக்கு எப்படி கிடையாதோ அப்படித்தான் நாமும்.’’

‘‘வள்ளுவரே... இவ்வளவு பேசற நீங்க எதனால எங்க கூட வந்தீங்க.

எங்ககிட்ட இந்தப் பெட்டியை ஒப்படைக்க எது காரணம்? நடக்கறதுதான் நடக்கும்னா இந்தத் தொல்பொருள் ஆய்வாளரைத் தேடி எதுக்காக வரணும்?’’ - வர்ஷன் சரியாகத்தான் கேட்டான். ஆனால் அசரவில்லை வள்ளுவர்.

‘‘தட்டுல சாப்பாடு இருக்கு... நீ என்ன செய்வே?’’ - சம்பந்தமில்லாதபடி ஒரு கேள்வி கேட்டார்.

‘‘நான் ஒண்ணு கேட்டா நீங்க ஒண்ணு சொன்னா எப்படிங்க?’’

‘‘உன் கேள்விக்குத்தாம்ப்பா பதில் சொல்லிக்கிட்டு இருக்கேன். பதிலைத்தான் கேள்வியா கேட்டிருக்கேன். நீ பதில் சொல்!’’ - அப்போது எலெக்ட்ரீஷியன் உள்ளே வந்து வேலை பார்த்து விட்டது புரிந்தது. பளிச்சென்று அறை விளக்குகள் எரிய, ஏ.சியும் ஓடத் தொடங்கியது.

‘‘ஒன் செகண்ட்’’ - என்று ப்ரியா வெளியேறி சமையற்கட்டு நோக்கிச் சென்றாள். அங்கே எலெக்ட்ரீஷியன் ஏழுமலை இருக்க, அருகில் இருந்தார் அனந்தகிருஷ்ணன்.

‘‘அப்பா! பிராப்ளம் சால்வ்டா?’’

‘‘இல்லம்மா... தற்காலிகமா சரி பண்ணியிருக்கான். டோட்டலா வீடு பூரா வயரிங்கையே மாத்தணும்ங்கறான். வீடு கட்டும்போது போட்ட வயரெல்லாம் வயசாகி அந்து போச்சாம்!’’ - சிரித்தார் அனந்த கிருஷ்ணன்.

‘‘ஆமாம்மா... இப்போதைக்கு டெம்ப்ரவரியா கனெக்ஷன் கொடுத்துருக்கேன். இந்த அடுப்பு பழைய இரும்புக்கு கூட போகாது. தூக்கி குப்பைல போட்ருங்க. சூப்பர் அடுப்பெல்லாம் வந்திருக்கு. நானே ஒண்ணு வாங்கிட்டு வந்து ஃபிக்ஸ் பண்ணி கொடுத்துடட்டுமா சார்!’’

‘‘அதை அப்புறம் பார்த்துக்கலாம். நீ வேகமா புது வயரிங் பண்ணு... இப்பவே கூட ஆரம்பிச்சிடு, எங்களுக்கு ஆட்சேபணை இல்லை!’’

‘‘அய்யோ சார்... அண்ணா நகர்ல ஒரு ஃப்ளாட்ல வேலை நடந்துக்கிட்டிருக்கு. உங்களுக்காக அப்படியே போட்டுட்டு வந்துருக்கேன். அந்த வேலை நாளைக்கு முடிஞ்சிடும். நான் நாள மறுநாள் வந்துட்றேன். வரும்போது வயரையும் வாங்கிட்டு வந்துட்றேன். சாமானுக்காக நீங்க சிரமப்பட வேண்டாம். எல்லாம் என் பொறுப்பு. கடைசியா நீங்க பணம் கொடுத்தா போதும்!’’

‘‘அது சரி... நீ பாட்டுக்கு போட்டு தாளிச்சிடாதே. எல்லாம் ரீசனபிளா இருக்கணும்!’’

‘‘என்ன சார் நீங்க.. வருமான வரியா கவர்மென்ட்டுக்கு கொடுப்பீங்க. எங்களுக்கு கொடுக்க யோசிச்சா எப்படி சார்..?’’ - ‘தாளிக்காமல் விட மாட்டேன்’ என்பது போலப் பேசிவிட்டு தன் டூல் பாக்ஸைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டான் ஏழுமலை.சில அடிகள் சென்றவன் நின்று திரும்பி, ‘‘சார்.. பாத்ரூம்ல பாத்துப் புழங்குங்க. ஈரக்கையோட ஸ்விட்ச்சைப் போடாதீங்க...’’ என்றான். ஆனால் அது சரியாகக் காதில் விழவில்லை.

ப்ரியா வேகமாய் கணபதி சுப்ரமணியன் அறைக்குத் திரும்பினாள். கணபதி சுப்ரமணியன் பெட்டியைத் திறந்து உள்ளிருக்கும் ஏட்டுக் கட்டு, காம்பஸ், சோழி என்று சகலத்தையும் காண்பித்தபடி இருந்தார். வள்ளுவர் திரும்பவும் பாத்ரூம் போய் விட்டிருந்தார்.வர்ஷன் ஏட்டுக்கட்டைப் படிக்க முனைந்தான். செவ்வெறும்புகள் வரிசையாக ஒட்டிக் கொண்டு செல்வது போல் எழுத்துக்கள்! ‘எடுத்தோம்... படித்தோம்...’ என்றெல்லாம் படித்து விட முடியாது. கணபதி சுப்ரமணியன் சிரித்தார்.

‘‘இதைப் படிக்க பயிற்சி எடுக்கணும்பா... அதுக்குன்னு ஆட்கள் இருக்காங்க...’’ என்றார்.

‘‘ஆமாம்.. எதுக்காக காலப்பலகணியை எங்கேயோ வச்சுட்டு, அது இருக்கற இடம்னு இப்படி எழுதி வைக்கணும்?’’ - கேட்டான் வர்ஷன்.

‘‘மலை மேல் கோயில் கட்டற மாதிரிதான் இதுவும். நீ ஒரு கேள்வி தான் கேட்டிருக்கே. எனக்குள்ள இதைவிட நிறைய கேள்விகள் இருக்கு வர்ஷன்!’’

‘‘அங்கிள்... நீங்க இதை நம்பறீங்களா?’’

‘‘நிச்சயமா...’’

‘‘அப்ப வள்ளுவர் இறந்துடுவாரா?’’

‘‘டெலிகேட்டா கேள்வி கேட்கறியே...’’

‘‘பதில் சொல்லுங்க...’’

‘‘ஒரு ஆராய்ச்சியாளனா நிச்சயம் சொல்றேன், ‘வள்ளுவர் இறந்துடுவார்’. ஆனா ஒரு மனுஷனா, அவரைக் காப்பாத்த விரும்பறேன்!’’

‘‘சாமர்த்தியமான பதில்... போகட்டும்! வள்ளுவர் இறந்தா காலப்பலகணி நூறு சதவீதம் நிஜம்... அப்படித்தானே?’’

‘‘இப்பவே சொல்றேன்... இது ஒரு நூறு சதவீத நிஜம். இப்படி ஒண்ணு இருக்கற விஷயம் இங்க இருக்கற நமக்கு மட்டுமில்ல, வெளில பலருக்கும் கூட தெரியும்!’’

‘‘வெளிலயா?’’

‘‘ஆமாம்.. அவ்வளவு ஏன்? அவங்க பார்வை எல்லாமும் இப்ப இங்க... இந்த வீட்டு மேல இருக்கலாம். ஒருபடி மேல போய் சொல்லட்டுமா?’’ - கணபதி சுப்ரமணியன் மிரட்டலாகப் பேச ஆரம்பித்தார்.

‘‘என்ன அங்கிள்?’’

‘‘இந்த விஷயத்துல உன்னைக்கூட அவங்கள்ல சிலர் விலைக்கு வாங்க முயற்சி செய்யலாம்...’’- கணபதி சுப்ரமணியன் தற்செயலாக - அதே சமயம் அந்த உண்மையை - கூறவும், வர்ஷன் விக்கித்துப் போனான். அப்போது அந்த அறையின் இருண்ட மூலையில் கறுப்பாக ஏதோ நெளிவது போலத் தெரிய, யதார்த்தமாக அதைப் பார்த்த ப்ரியா கண்கள் அகலமானாள்.

‘‘வர்ஷா... அங்க பார்...’’ - என்று கை காட்ட, வர்ஷனும் பார்த்தான். மெல்ல நெருங்கினான். அந்த கருந்தேள் பாவம் அவன் கண்களில் படவும், அடுத்த பத்தாம் நொடி அறையில் இருந்த ஒரு கட்டையால் நசுங்கி உயிரை விட்டது.

வள்ளுவர் பாத்ரூமில் இருந்து பார்த்தபடியே வந்தார்.‘‘என்ன... எமன் ஆளை அனுப்பிட்டான் போல இருக்கே?’’ என்று கேட்டுச் சிரித்தார்.‘‘அவனை எமன்கிட்டயே அனுப்பிட்டோம். நீங்க பயப்படாதீங்க! உங்களுக்காக எமன் வந்தா அவனுக்கும் இந்த தேள் கதிதான்’’ என்றபடியே செத்த தேளைவெளியே போடச் சென்ற வர்ஷனின் போன் சிணுங்கியது. தேளை தோட்டத்தில் வீசிவிட்டு காதை போனுக்குக் கொடுத்தான்.

‘‘எல்லாம் நல்லா போய்க்கிட்டு இருக்குதானே?’’

‘‘ம்…’’

‘‘பெட்டியைப் பாத்துட்டியா?’’

‘‘ம்…’’

13

இன்றைய விஞ்ஞானத்துக்கும் மேலான ஞானம் கொண்டு நம் முன்னோர்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்கிற என் கருத்துக்கு வலிமை சேர்த்தார் ஒரு நண்பர். இவரும் என்னைப் போல எதையும் பிளந்து பார்ப்பவர்… ‘ஏன், எதற்கு, எப்படி?’ என்றெல்லாம் கேள்விகள் கேட்பவர்.இப்படிக் கேள்விகள் கேட்டதால்தான் அனேக ரகசியங்கள் வெட்ட வெளிச்சமாகின.

இந்தக் கேள்விகளை அவ்வளவு சுலபத்தில் எல்லோராலும் கேட்டுவிட முடியாது; அதே போல இந்த வகையில் கேள்விகள் கேட்டவர்கள் அவ்வளவு பேரும் புத்திசாலிகளும் கிடையாது. உதாரணமாக, ‘நம்முடைய இதிகாசங்கள் எவை’ என்று யாரிடம் கேட்டாலும் ‘ராமாயணம், மகாபாரதம்’ என்று வேகமாய்க் கூறிவிடுவார்கள்.

‘இவை நமக்கு எதைச் சொல்ல வருகின்றன’ என்று கேட்டால், ‘மனித வாழ்வு எப்படிப்பட்டது… அந்த வாழ்வை நாம் எப்படி வாழ வேண்டும் என்று இவை இரண்டும் சொல்கின்றன’

என விளக்கமளிப்பார்கள். ஒருபடி மேலே போய், ராமாயணம் பெண்ணாசை கூடாது என்பதையும், மகாபாரதம் மண்ணாசை கூடாது என்பதையும் வலியுறுத்துவதாகச் சொல்வார்கள். ஒரு கோணத்தில் இது மறுக்க முடியாத உண்மையும் கூட!

இரண்டு இதிகாசங்களுமே பல்லாயிரம் காலமாக அழியாது வாழ்ந்தும் வருகின்றன. இவற்றைக் கொண்டே பலரும் வாழ்ந்து வருகின்றனர். கோடானு கோடி மானிடர்களை இந்த இரு இதிகாசங்களும் பார்த்து விட்டன; பார்க்கவும் போகின்றன. இவை வாழ்வியல் நடைமுறையைச் சொல்வதாகவும் தெய்வீகமாகவுமே பலரும் கருதுகின்றனர். கடவுள் மறுப்புக் கொள்கை கொண்டவர்கள் இவற்றைக் கற்பனை என்று ஒதுக்கி விட்டனர்.

ஆனால், இத்தனை ஆயிரம் வருடங்களில் இத்தனை கோடி பேர்களில், விரல் விட்டு எண்ணக்கூடிய மிகச் சிலரே இந்த இரு இதிகாசங்களையும் மிக மாறுபட்ட கோணத்தில் பார்த்து வியந்தனர். அந்த சிலரில் ஒருவர் என் நண்பர். அவர் ராமாயணம் பற்றி என்னிடம் சொன்ன கருத்து வியக்க வைத்தது. 'உண்மையில் ராமாயணம் என்பது வானில் வலம் வரும் சூரியனுக்கானது. அந்த சூரியனின் நகர்வை அளப்பது... அது ஒரு வானவியல் சாஸ்திர நூல்' என்றார் அந்த நண்பர். இதைக் கேட்கும்போதே ஆச்சரியமாக அதிர்ச்சியாக எல்லாமுமாக இருக்கிறதல்லவா..?"- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

வர்ஷன் போனில் இறுக்கமாக 'உம்... உம்...' என்று மட்டுமே சொன்ன பதில், மறுபக்கம் பேசிய நபருக்கு எரிச்சலை மூட்டிவிட்டது.

‘‘என்னப்பா... வாயைத் திறந்து பேசமாட்டியா நீ?’’ - என்று கோபமாகக் கேட்டான்.

‘‘இது அதுக்கான நேரமில்ல சார்... இங்க இப்ப ரொம்ப டென்ஷனான சூழ்நிலை நிலவிக்கிட்டிருக்கு...’’

‘‘என்ன டென்ஷன்... அந்தக் கெழட்டு ஆராய்ச்சியாளன் ஏதாவது அலம்பல் பண்றானா?’’

‘‘அதெல்லாம் ஒண்ணுமில்லை. இங்க சிக்கலே வேற...’’

‘‘என்னன்னு தெரிஞ்சுக்கலாமா?’’

‘‘அந்த வள்ளுவர் சாகப்போறாரு...’’

‘‘என்ன சொன்னே... வள்ளுவன் சாகப்போறானா?’’

‘‘ஆமாம்... ஏன் இது உங்களுக்குத் தெரியாதா?’’

‘‘தெரியாது... ஆமாம் அவன் சாகப்போறான்னு உனக்கு எப்படித் தெரியும்?’’

‘‘அந்த வள்ளுவர்தான் சொன்னார். அதுவும் துல்லியமா இத்தனை மணி, இத்தனை செகண்டுல பிரியும்னு சொல்லிக்கிட்டிருக்கார்...’’

‘‘புரிஞ்சு போச்சு... காலப்பலகணி அவன் மரணத்தைக் கணக்குப் போட்டு சொல்லிடுச்சு. அதான் ஆராய்ச்சியாளன் கிட்ட பெட்டியைத் தூக்கிக் கொடுத்துருக்கானா?’’

‘‘ஆமாம். அதுல என்ன இருக்குன்னும் பார்த்துட்டேன். நாலஞ்சு ஏட்டுக் கட்டுங்க, சோழி, காம்பஸ்னு சில்லரை விஷயங்கள்தான் எல்லாம்...’’

‘‘உனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான். அந்த காம்பஸ் சோழர் காலத்தது..! சோழிகள் அதுக்கும் முந்தையது. அந்த சோழியை வச்சுத்தான் கடல்கோள் வரப்போறதை மணிமேகலை தெரிஞ்சிக்கிட்டா...’’

‘‘மணிமேகலையா.... யார் அது?’’

‘‘மணிமேகலையை யார்னு கேக்கறியே... என்ன பண்றது! நீ இந்தக் காலத்து ஸ்டூடன்ட்... பள்ளிக்கூடத்துல இங்கிலீஷ் மீடியத்துல படிச்சு, தாய்மொழி தொடர்பே இல்லாம வளர்ந்துட்டீங்க... இப்படித்தான் கேப்பீங்க!’’

‘‘ஹலோ... சந்து கிடைச்சா உடனே சிந்து பாடக் கூடாது. உங்க தமிழ் படிச்சா நல்ல வேலை கிடைக்கும்னா படிச்சிட்டுப் போறோம். எங்க கிடைக்குது? நீங்க மணிமேகலை யார்னு முதல்ல சொல்லுங்க...’’

‘‘உனக்கு கண்ணகியையாவது தெரியுமா?’’

‘‘மெரினா பீச்ல சிலை வெச்சிருக்காங்களே..!’’

‘‘அப்பாடா... இதாவது தெரிஞ்சிருக்கே! அந்த சிலைக்குரிய கண்ணகியோட புருஷனான கோவலனோட மகள்தான் மணிமேகலை!’’

‘‘ரொம்ப ஒட்டாதே... நானும் படிச்சிருக்கேன். கோவலனோட சின்ன வீடான மாதவியோட மகள்தானே?’’

‘‘அவளேதான்... அவகிட்ட தான் அமுதசுரபிங்கற அட்சய பாத்திரமும் இருந்தது!’’

‘‘சரி, இப்ப அவளுக்கென்ன?’’

‘‘அவகிட்டயும் இந்த சோழிகள் இருந்துருக்குப்பா. அவ ஸ்பரிசம் அந்த சோழில பட்டுருக்கு. அப்படின்னா எவ்வளவு ஏன்ஷியன்ட்னு யோசி!’’

‘‘இதை எல்லாம் உங்களுக்கு யார் சொன்னது?’’

‘‘அதை எல்லாம் நீ கேட்காதே. அந்தப் பெட்டியை எப்படியாவது எங்ககிட்ட சேர்த்துடு. உன்கிட்ட நாங்க பேசினபடி பணத்தைக் கொடுத்துடுவோம்..!’’

‘‘நான் உங்கள ஒண்ணு கேட்கலாமா?’’

‘‘எல்லா கேள்வியையும்தான் கேட்டுட்டியே... இன்னும் என்ன?’’

‘‘இல்ல... இந்த தகரப் பெட்டில இருக்கற விஷயம் பழமையான ரிச்சுவல்னு இருந்தாலும், ஏதோ சில ஆயிரம் மதிக்கலாம். நீங்களோ இதுக்காக கோடிக் கணக்குல செலவு செய்யத் தயாரா இருக்கீங்க... நீங்க இதை நம்பறதைத்தான் என்னால ஜீரணிக்க முடியல..!’’

‘‘நீ ஜீரணிக்க முடியலன்னா அது உன்னோட பிரச்னை. அநாவசியமா பேசாம காரியத்தை கச்சிதமா முடி!’’

‘‘அதை நீங்க நினைக்கற மாதிரி அவ்வளவு சீக்கிரத்துல முடிக்க முடியாது. அந்த வள்ளுவன் வேற சாகப் போறேன்னு சொல்லிக்கிட்டிருக்கான். அதை கணபதி சுப்ரமணியனும் நம்பறார். அதேவேளை, அவரை சாக விடாம காப்பாத்தற முயற்சியிலயும் இருக்கோம். மொத்தத்துல நாளைக்கு சாயந்திரம் நாலு மணிக்கு மேலே நடக்கப் போறத வச்சுத்தான் பெட்டியை எப்படி அடிக்கறதுங்கற முடிவுக்கு நான் வர முடியும்!’’

‘‘எப்ப நீ வள்ளுவன் செத்துடுவான்னு அவனே நம்பறதா சொன்னியோ... அப்பவே எங்க முடிவும் அதுதான்! அவன் செத்த நிலையில எல்லார் கவனமும் அவன் மேல இருக்கும்போது எப்படியாவது நீ அடிச்சிடு. இல்ல, அப்புறம் முடியாமலே போயிடும்.

எந்தக் காரணம் கொண்டும் அந்தக் கிழவன் காலப்பலகணியை தேடிப் போகக் கூடாது!’’

‘‘ட்ரை பண்றேன்...’’

‘‘ட்ரை பண்றே இல்ல... முடிக்கறே! உனக்கு நாங்க தர்றதா சொன்ன 50 லட்சத்தை 60 லட்சம் ரூபாயாக்கூட தரத் தயாரா இருக்கோம். மறந்துடாதே..!’’- போன் பேச்சு ‘மறந்துடாதே’யோடு மடங்கி முடிவுக்கு வந்தது. வர்ஷனும் சிந்தித்தபடியே திரும்பி வந்தான்.

எல்லாமே சினிமாவில் நடப்பது போல் கூட அவனுக்குத் தோன்றிற்று. 50 லட்ச ரூபாயை நொடியில் 60 லட்ச ரூபாயாக்கி தனக்குத் தரத் தயாராக இருப்பவர்களை ஒரு விநாடி எண்ணிப் பார்த்தான். ஜிம்மில் ப்ரியா வர்ஷனைப் பார்த்து விட்டு விலகிய நொடியில் வந்து அவனை வளைக்கத் தொடங்கியவர்கள், ஒரு வழியாக வளைத்தும் விட்டார்கள். செல்போன் மெஸேஜ் பாக்ஸைத் திறந்து பார்த்தபோது, அவன் கணக்கில் 5 லட்ச ரூபாய் டெபாசிட் ஆகியிருப்பது தெரிந்தது.

அப்பாவிடம் பாக்கெட் மணி வாங்கி செலவு செய்துகொண்டு ஒரு வாழ்க்கை வாழ்ந்தாயிற்று. நன்றாக சம்பாதித்து செலவு செய்ய விருப்பம் இருந்தபோதிலும், சம்பாதிக்க வாய்ப்பு இன்னமும் வரவில்லை. வேலைக்குப் போனால் வரும்... ஆனால் ஒரு ஐ.டி நிறுவனத்துக்குள் கம்ப்யூட்டர் முன்னால் மௌஸ் முதுகைப் பிடித்தபடி செயல்பட ஏனோ வர்ஷனுக்கு மனம் வரவில்லை.

அவன் இலக்கெல்லாம் சினிமா மேல்தான் இருந்தது. மனதுக்குள்ளேயே ரீ-ரெக்கார்டிங் பின்புலத்தோடு காட்சிகளைக்

கற்பனை செய்து பார்த்து சந்தோஷப்படுவான்.அவனுக்கு இயக்குநர் ஷங்கரை மிகப் பிடிக்கும். மேலே உயரே உச்சியிலே என்று அவர் படத்துக்குப் படம் தன்னை வளர்த்துக்கொள்வதோடு வெற்றியை விட்டுவிடாதபடி பிடித்துக்கொண்டிருப்பதை எண்ணி ஆச்சரியப்படுவான். அவனது மானசீக 'மென்ட்டர்' அவர்தான்.

நாளை இயக்குநரானால் 'ஷங்கர்வர்ஷன்' என்றே தன் பெயர் இடம்பெற வேண்டும் என்று அப்படித்தான் கையெழுத்தும் போட்டு வருகிறான்.இப்போது அறுபது லட்ச ரூபாயாகத் தருவதாக அந்த அநாமதேய மனிதர்கள் சொல்லவும், வர்ஷனுக்குள் ஜிகுஜிகுவென்று ஒரு உள்ளோட்டம்... 'ஒரு தகரப்பெட்டிக்கு 60 லட்ச ரூபாய் என்பது ஒரு கோணத்தில் மிகப் பைத்தியக்காரத்தனமானதாகத் தெரிந்தபோதிலும் அவனை ஒரு விஷயம் உறுத்தியது. இதற்கு இத்தனை தரத்தயாராக இருப்பவர்கள் இதைக் கொண்டு பல மடங்கு சம்பாதிக்க முடியும் என்றுதானே நம்புகிறார்கள்.

ஒருவேளை காலப்பலகணி ஒரு நிஜமோ? அதனுள் உலகைப் புரட்டிப் போடும் ரகசியங்கள் இருக்கின்றனவோ?அது எப்படி இப்படி ஒன்றை ஒருவரால் உருவாக்க முடியும்? எந்த ஒரு சம்பவமும் அதற்கு முந்தைய சம்பவத்தின் தொடர்ச்சிதானே? அப்படித் தொடர்கின்ற ஒன்று அறுந்துவிடாமல் தொடர்கின்றது என்றால் கூட பரவாயில்லை... அந்தத் தொடர்ச்சியை கற்பனை செய்து பார்க்க முடியும். ஆனால், எல்லா சம்பவங்களுமே அதற்கென்று ஒரு நீளத்தோடு முடிந்து போகின்றவைதானே?

நான் ஒரு சினிமா பார்க்கச் செல்கிறேன் என்றால் ஒரு மூன்று அல்லது நான்கு மணி நேரத்தில் அந்த நிகழ்வு முடிந்து நான் வீடு திரும்பி விடுகிறேன். அதோடு சினிமா முடிந்து, அடுத்த நிகழ்வு தொடங்குகிறது. அது நான் டி.வி. பார்ப்பதாக இருக்கலாம்.

அப்படியிருக்க, இந்த நேரத்தில் நான் இதைத்தான் செய்தபடி இருப்பேன் என்றோ... இல்லை இதுதான் நடக்க முடியும் என்றோ எதை வைத்துக் கணிக்க முடியும்?'

- வர்ஷனுக்குள் கேள்விகள் மண்புழுக்கள் கொத்தாக ஒன்றன் மேல் ஒன்று விழுந்து புரள்வது போல புரள ஆரம்பிக்க, தோட்டத்துப் பக்கமே தேங்கி விட்டவனைத் தேடிக்கொண்டு வந்தாள் ப்ரியா.அவள் வரவும் அவன் கலைந்தான்.

''என்ன வர்ஷா... ஒரு செத்த தேளை தூக்கிப் போட இவ்வளவு நேரமா.... இங்க நீ யார் கூடவோ பேசிக்கிட்டிருந்த மாதிரி இருந்ததே...'' என்று ஆரம்பித்தாள்.''அது... அது... ஆமாம்! போன்ல ஒரு ஃப்ரெண்டு ரொம்பவே போரடிச்சுட்டான்!''

''அவன் போரடிச்சாலும் நீ இடம் தரமாட்டியே!''

''அஃப்கோர்ஸ், 'வைடா போனை'ன்னு சொல்லித்தான் கட் பண்ணேன்...''

''அதுக்கே இவ்வளவு நேரமா?''

''என்ன ப்ரியா... எதுக்காக நீ என்னை இவ்வளவு கேள்வி கேட்கறே?''

''உன்கிட்ட நான் நிறைய தடுமாற்றங்களைப் பாக்கறேன் வர்ஷன். உனக்கு இந்த வள்ளுவர் அசைன்மென்ட் பிடிக்கலேன்னா போயிடு. நானும் தாத்தாவும் சமாளிச்சுக்கறோம்!'' - ப்ரியா அவன் கண்களைப் பார்த்தபடி பேசினாள்.

''ஓ நோ... என்னை டைரக்டராக்கப் போற அசைன்மென்ட் இது ப்ரியா. நீ என்ன 'போ'ன்னு சாதாரணமா சொல்லிட்டே...''

‘‘என்ன உளர்றே... இதனால நீ எப்படி டைரக்டராக முடியும்?’’ - புருவம் வில்லாக வளைய ப்ரியா கேட்டாள்.

‘‘அது... அது... அந்த காலப்பலகணி இருக்கற இடம் நமக்குத் தெரிஞ்சுட்டா அதுல என் ஃப்யூச்சரைப் பத்தியும் தெரிஞ்சிக்கலாம் இல்லியா?’’ - சமாளிப்பாகப் பேசினான் வர்ஷன். அவனை ப்ரியா வெறித்துப் பார்த்தாள்.

‘‘சரி... சரி... உள்ள வா! நாம அந்த வள்ளுவரை விட்டு ஒரு நிமிஷம் கூட பிரியக் கூடாது!’’ என்றாள் அழுத்தமாக.

‘‘அப்ப அவரை நாம காப்பாத்த முடியும்னு நம்பறியா ப்ரியா...’’

‘‘என்ன வர்ஷன்... எங்க அவர் சாகாமப் போயிடுவாரோன்னு நீ நினைக்கற மாதிரி தெரியுதே?’’

‘‘அய்யோ... நான் எங்க நினைக்கறேன். அவரே நம்பற விஷயம்தானே இது!’’

‘‘அதை பொய்யாக்கணும். நம்ம கண் எதிர்ல ஒரு உயிர் போக அனுமதிக்கக் கூடாது!’’

‘‘அப்படி நடந்து நாம ஜெயிச்சிட்டா காலப்பலகணி பொய்யாயிடுமே..!’’

‘‘ஆகட்டும்டா... அது பெருசு இல்ல! ஒரு மனிதனோட உயிர்தான் பெருசு. கமான்...’’ - ப்ரியாவிடம் ஒரு தெளிவான அணுகுமுறை தெரிந்தது.வள்ளுவரிடம் தொடர்ந்து பேசும் முடிவில்

இருந்தாள் ப்ரியா. கையில் ரிக்கார்டர் இருந்தது. வெப் கேமராவை ஃபோகஸ் செய்து அவருடனான பேச்சை பதிவும் செய்துகொள்ளத் தயாரானாள். ‘‘அவரிடம் எல்லா விஷயங்களையும் பேசுவோம். ஜோதிடம் பார்ப்போம். எல்லா விஷயங்களிலும் புதுப்புதுத் தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன. எல்லாமே பதிவும் ஆகட்டும்’’ என முடிவு செய்தாள்.

அதே போல பேச்சும் தொடங்கியது. ப்ரியா தன் குடும்பத்தினர் ஜாதகங்களைக் கொண்டு வந்து அவர் முன்னால் வைத்தாள். அனந்தகிருஷ்ணன் ஜாதகம் முதலாக கையில் அகப்பட்டது.

‘‘முதல்ல உங்கப்பா ஜாதகம் வந்துருக்கு... பாத்துடுவோமா?’’ என்று விரித்தார். கட்டங்களை அவரது இடுங்கிய கண்களிரண்டும் ஆராய்ந்தபடியே இருந்தன.வர்ஷன் பெட்டி இருந்த இடத்தைப் பார்த்தான். அதைக் காணவில்லை! கொஞ்சம் பகீரென்றது. கணபதி சுப்ரமணியன் எடுத்து பீரோவுக்குள் வைத்துப் பூட்டியிருந்தார்.

வர்ஷனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அதை எப்படியாவது தன் வயப்படுத்தி அதற்கு 60 லட்சம் தருவதாகச் சொன்னவர்களிடமே 5 கோடி என்று விலை வைத்து ஒரு போடு போட வேண்டும். பணம் கைக்கு வந்த நொடி அந்த 5 கோடி பட்ஜெட்டுக்குள் அடங்குகிற மாதிரி ஒரு திரைப்படம் தயாரித்து விட வேண்டும் என்று அவன் தன் மனக்குதிரைகளை ஓட விட்டுக் கொண்டிருக்க, வள்ளுவர் முகம் அனந்தகிருஷ்ணன் ஜாதகத்தைப் பார்த்து விக்கித்து நின்றது.‘அடப்பாவி! எனக்கு முன்னால போகப் போறவனா நீ?’ - என்று ஆழ்மனதுக்குள் ஒரு விசாரமான கேள்வியும் தோன்றியது!

14

ராமாயணம் என்கிற பெயரிலேயே காலம் ஒளிந்துள்ளது. ராமாயணத்தை ஒரு சொல்லாகக் கருதி சிந்திக்கும்போது கல்யாணம், உத்தராயணம், தட்சிணாயணம் என்று வேறு சில வார்த்தைகளும் நினைவுக்கு வரும். இதில் கல்யாணத்தை திருமணமாக நாம் பொருள் கொள்வோம்.

உண்மையில் கல்யாணம் என்பது 'கலவிக்கான காலம்' என்ற பொருளில் அமைந்த ஒரு சொல்லே! உத்தராயணம், தட்சிணாயணம் என்பவை நேராக நமக்குக் காலத்தைச் சுட்டிக் காட்டுபவை என்பது தெரியும். ஒரு ஆண்டின் பன்னிரண்டு மாதங்களை இரு கூறாகப் பிரித்து உத்தராயணம் ஒரு ஆறு மாதமும் தட்சிணாயணம் ஒரு ஆறு மாத காலமுமாகி உள்ளது.

ஆக 'அணம்' எனும் சப்தத்தோடு முடியும் கல்யாணம், உத்தராயணம், தட்சிணாயணம் ஆகியவை காலத்தைச் சுட்டுவதாக இருக்க, ராமாயணம் மட்டும் எப்படி ராமனின் வரலாறு என்று இருக்க முடியும்? எனவே 'ராமாயணம் வானவியல் சாஸ்திரத்தையும் உள்ளடக்கியது' என்று வாதிட்ட அந்த நண்பர், தன் கருத்துக்கு வலிமை சேர்க்க 'கடபயாதி' என்னும் நமது வேத கணித முறையை துணைக்கு எடுத்துக்கொண்டு அதன் மூலம் எனக்கு சில புரிதல்களை ஏற்படுத்தினார்.

அந்த நண்பர், தமிழில் 'அடி' என்கிற சொல்லுக்கு பல பொருள் உள்ளதைச் சுட்டிக் காட்டினார். ஒரு அடி என்றால் அடிப்பது என்றும் பொருள்... 12 அங்குல நீளம் உடையது என்றும் பொருள்... பாதத்தின் பதிவு என்றும் பொருள்...

எல்லாமே இடத்திற்கேற்ப பொருள் கொள்ளப்படும்.உண்மையில் 'கடபயாதி' (Kadapayathi) முறையில் அடி என்ற சொல்லை 'அ+ஃட்+இ' என்று பிரிக்க வேண்டும். இதில் 'அ'வுக்கு மதிப்பு 1, 'ஃட்'டுக்கு மதிப்பு 8, 'இ'க்கு மதிப்பு 3. கூட்டினால் பன்னிரண்டு. ஒரு அடி பன்னிரண்டு அங்குலம் உடையது என்பது இதிலிருந்தே வந்தது என்ற நண்பர், 'வார்த்தைகளுக்குள் நம் சான்றோர்கள் இப்படி நிறைய ரகசியங்களை ஒளித்து வைத்துள்ளனர்' என்றார்.

'அவர்கள் ஒளித்து வைக்கவில்லை... அது அப்படி இயல்பாக அமைந்து விட்டது என எடுத்துக்கொள்ளலாமா?' என்று கேட்டேன். 'அப்படியும் எடுத்துக்கொள்ளலாம்' என்று கூறிய அந்த அன்பர், 'தமிழ் இலக்கியங்களில் ஔவையாருக்கு தனி இடம் உண்டு. ஒரு பெண் துறவி இவர்! இவருக்கும் 108 என்கிற எண்ணுக்கும் கூட தொடர்பு உள்ளது' என்றார்.'' - கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அனந்தகிருஷ்ணன் ஜாதகத்தைப் பார்த்த வள்ளுவரிடம் ஒரு பெரும் முகமாற்றம். அதிலும் அனந்தகிருஷ்ணன் ஆயுளும் அற்ப ஆயுளே - அதிலும் தன்னைவிட வேகமாக அகாலமாகப் போகிறார் - என்கிற அந்த உணர்தல் வள்ளுவரை வாயடைக்க வைத்துவிட்டது.அதனால் ஒரு ஆழ்ந்த மௌனம்!

''என்ன மிஸ்டர் வள்ளுவர்... மௌனமாகிட்டீங்க... எனிதிங்க் சீரியஸ்?'' - கணபதி சுப்ரமணி யன் சரியாகவே கேட்டார்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லய்யா...''

‘‘இல்ல... இதை நான் நம்பமாட்டேன். எதுவா இருந்தாலும் சொல்லுங்க!’’

‘‘சொல்றேன்... இந்த ஜாதகப்படி இவர் பிறந்த நாள், தேதி எல்லாம் சரிதானே?’’

‘‘ஒரு விஷயத்தை மட்டும் க்ளியர் பண்ணிட்றேன். அந்தக் காலத்துல... அதாவது 1960கள்ல மூணு வயசு முடிஞ்சிருந்தாதான் ஸ்கூல் அட்மிஷன். ஒரு மாசம் குறைவா இருந்தா கூட சேர்க்க மாட்டாங்க. அதைத் தவிர்க்க ஸ்கூல்ல வாத்தியாரே ஒரு வழி சொன்னார். அனந்த கிருஷ்ணன் பிறந்த இதே தேதியில் இதே நேரத்துல மூணு மாசம் முந்தி பிறந்திருந்த ஒரு குழந்தைக்கு அட்மிஷன் போட்ட ஆசிரியர், இதே தேதிக்கு - அதாவது ‘மாசத்தை மட்டும் மாற்றிப் போட்டுக்குங்க... சட்டத்துக்கு சமாதானம் சொன்ன

மாதிரியும் ஆச்சு. உங்க சிக்கலும் தீர்ந்துடும்’னார். அப்ப நிறைய பேரை இப்படித்தான் சேர்த்தாங்க. இப்ப இருக்கற மாதிரி பர்த் சர்ட்டிபிகேட்டுங்கறது ஒரு பெரிய விஷயமா அப்ப கிடையாது... இன்னிக்கு பர்த் சர்ட்டிபிகேட்தான் எல்லாம்!’’

‘‘அப்ப இந்த தேதி இவர் வரையில பொய்யான தேதி... அப்படித்தானே?’’

‘‘ஆமா... இதுல மாசத்தை மட்டும் மாத்திக்கிட்டா அதுதான் இவன் சரியான பிறந்த தேதி. அக்டோபர் மாசம்னு இருக்கறதை ஜுலைன்னு மாத்தி இவன் மூணு வயசைக் கடந்துட்டதா காமிச்சி ஸ்கூல்ல சேர்த்தோம்!’’

கணபதி சுப்ரமணியன் விளக்கம் தரவும் அப்பாடா என்ற நிம்மதிப் பெருமூச்சு வள்ளுவரிடம்.

‘‘என்ன வள்ளுவர்?’’

‘‘தப்பான தேதின்னு தெரிஞ்சும் ஜாதகம் கணிச்சா எப்படிங்க?’’

‘‘மாசத்த மாத்தி பதிஞ்சவன் நான். இங்க வீட்ல என் மனைவிக்குக் கூட தெரியாது. அதுதான் இந்த தேதிக்கே ஜாதகம் கணிச்சிருக்காங்க...’’

‘‘நல்லவேளை...’’

‘‘அப்படின்னா..?’’

‘‘எப்படிச் சொல்வேன்... இந்த தேதிப்படி, நேரப்படி பிறந்திருந்தா இன்னிக்கே இந்த ஜாதகருக்கு மரணம்!

''வள்ளுவர் சொன்னதைக் கேட்டு மூவரும் ஸ்தம்பித்தனர். என்னதான் பேசுகிறார்கள் என்று மெல்ல எட்டிப் பார்த்து அவர்களை நோக்கி வந்த அனந்த கிருஷ்ணனுக்கும் திகைப்பு.

‘‘மிஸ்டர் வள்ளுவர்... மரணத்தை நீங்க என்ன எமன் உங்க பேச்ச கேட்டு நடக்கறவன்ங்கற மாதிரியே குறிப்பிட்றீங்க. ஒருவருக்கு ஆயுள் இத்தன வருஷம்னு தோராயமாதான் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கேன். நீங்க என்ன நாள், மணி, நொடி சுத்தமா சொல்றீங்க... இது எப்படி சாத்தியம்?''

‘‘என் வரைல சாத்தியம். இந்த மாதிரி நான் ரொம்ப பேருக்குச் சொல்லி அப்படியே நடந்துருக்கு..!''

‘‘அது எப்படி?''

‘‘கணக்குதாங்க...''

‘‘அப்ப அந்தக் கணக்கை வச்சு எல்லாருடைய ஆயுளையும் சொல்லிட முடியுமா?''

‘‘இவ்வளவு முட்டாள்தனமாவா கேட்பீங்க. கணக்கு போடத் தெரிஞ்சா யார் வேணும்னாலும் சொல்லலாம். ஆனா ஜாதகத்துல ஒரு நொடி கூட தப்பு இருக்கக் கூடாது!''

‘‘அப்ப உங்க கணக்கு தப்பிட்டா ஜாதகம் தப்புன்னு சொல்லிடுவீங்க... இது நல்லா இருக்கே?''

‘‘சரியான காலப்படி ஜாதகம் கணிக்கப்பட்டிருந்தா, நான் சரியா சொல்லிடுவேன்!’’

‘‘சரி... அனந்தகிருஷ்ணன் ஜாதகம் இது இல்லேன்னாலும், இந்த நாள் இதே நேரத்துல பிறந்த நபர் கூடதான் அனந்து படிச்சான். ஹை ஸ்கூல் வரை ஒண்ணா படிச்சாங்க. இப்பவும் தொடர்புலதான் இருக்காங்க. அனந்து அளவு பெரிய படிப்பு படிக்கல. ஒரு டிகிரி முடிச்சிட்டு, கவர்ன்மென்ட் ஜாப் கிடைக்கவும் சேர்ந்துட்டான். பேர் கூட கிருஷ்ணமூர்த்தின்னு நினைக்கறேன். அனந்தா! சரிதானே?’’

‘‘ஆமாம்ப்பா... இப்ப எதுக்கு இந்த ஆராய்ச்சி எல்லாம்..?’’

‘‘பொழுது போக வேண்டாமா... அப்புறம், வள்ளுவர் இருக்கும்போதே பல விஷயங்களை பேசி வச்சுக்கறது நல்லதுதானே?’’

‘‘அதான் கேமரால்லாம் ஆன்ல இருக்கா?’’

‘‘ஆமாம்... உன்கிட்ட கிருஷ்ணமூர்த்தி நம்பர் இருக்கா?’’

‘‘அவ்வளவு தூரம் தொடர்பில்லப்பா. எப்பவாவது எங்கேயாவது பார்த்தா ‘அனந்தா’ன்னு ஓடி வருவான்; நானும் பேசுவேன்... அவ்வளவுதான்!’’அனந்தகிருஷ்ணன் பதிலைத் தொடர்ந்து வர்ஷன் தயாரானான்.

‘‘அய்யா வள்ளுவரே... ஒருத்தரோட மரணத்தை சொல்றது ஒண்ணும் சாதாரண விஷயமில்ல. நீங்க அதுல எக்ஸ்பர்ட்னா உங்க கணக்கை நிச்சயம் ஒருத்தர் எக்ஸ்பிளாய்ட் பண்ணி, அதை வச்சு வி.ஐ.பிக்களை எல்லாம் மிரட்ட முடியும். மிரட்டல்னா, தப்பான

அர்த்தத்துல இல்லை. ஒரு திகைப்பை உருவாக்க முடியும். குறிப்பா பவர்ல இருக்கற அரசியல்வாதிகள் உங்கள தூக்கிட்டுப் போய், தங்களோட கஸ்டடில வச்சிருப்பாங்க. அவ்வளவு ஏன்... அமெரிக்க ஒபாமாவுல இருந்து பிரிட்டிஷ் மகாராணி வரை நீங்க லாக் ஆகியிருப்பீங்க. நாசாவுல வானத்தை ஆராய்ச்சி பண்ற ஒரு குரூப் உங்களை பிரிச்சு மேய்ஞ்சிருப்பாங்க! ஒரு பிரபலமான கூல்ட்ரிங்ஸ் ஃபார்முலாவையே எப்படியெல்லாம் திருடலாம்னு அலையற உலகம் அய்யா இது! மரணப்புள்ளியை சொல்ல முடிஞ்ச உங்களை சாதாரணமா விட்டு வச்சிருப்பாங்களா என்ன?''

''வர்ஷா... எதுக்கு இவ்வளவு வளவளன்னு? ஷார்ட்டா சொல்லு... நீ என்ன சொல்ல வர்றே?''

''மரணப்புள்ளியை எல்லாம் துல்லியமா சொல்ல முடியாது. ஆயிரத்துல ஒருத்தருக்கு தற்செயலா இவர் சொன்னபடி மரணம் ஏற்பட்டுருக்கலாம்!''

''இதுக்கு உங்க பதில் என்ன வள்ளுவரே...''

''அதுக்கு முந்தி ஒரு கேள்வி... எங்க அப்பாவுக்கு எந்த ஆபத்தும் இல்லையே?'' - ப்ரியா இடையிட்டாள்.

''இது உங்கப்பா ஜாதகமே இல்லாதப்ப உன் கேள்விக்கே இடமில்லை. அடுத்து, இதோட தொழில் ஸ்தானம் உங்கப்பா சொல்ற மாதிரி அரசுத் தொடர்புடையதாதான் இருக்கு. உங்கப்பா தனியார் நிறுவனத்துல வேலை பாக்கறவர். ஆகையால நீ கவலப்பட இடமேயில்ல. ஆனா, இந்த ஜாதகம்தான் அந்த கிருஷ்ணமூர்த்தி ஜாதகம்னா அவர் இன்னிக்கு இறந்தே தீருவார்! இந்த நாட்டுல

ஜாதகம் பார்க்கத் தெரிஞ்சவங்க லட்சக்கணக்குல இருக்கலாம். நான் லட்சத்துல ஒருத்தன்.

நான் எப்படி உயிர் பிரியற நேரத்தை சரியா கண்டுபிடிச்சேன்ங்கறத சுருக்கமா சொல்லிட்றேன். எல்லோரும் உயிரோட இருக்கறவங்களுக்குதான் ஜாதகம் பார்ப்பாங்க. நான் ஆயிரம் இறந்த ஜாதகங்களை எடுத்து ஆராய்ச்சி செய்தேன். அப்ப அந்த ஜாதகரோட பிறந்த நேரம், இறந்த நேரம்... ரெண்டும் என் கைல இருந்தது. நொடி சுத்தமா கணக்குப் போட்டேன். ஆயுள் காரகனான சனி, லக்னாதிபதி, நடப்பு தசை, இறந்த அன்னிக்கான புக்தி, திதின்னு ஆறு அம்சங்களை மட்டும் எடுத்துக்கிட்டேன்.

அந்த நாள்ல இந்த மாதிரி கணக்கைப் போட்றது சாத்தியமில்ல. கூட்டிக் கழிக்கறதுக்குள்ள உயிர் போயிடும். இப்பதான் கம்ப்யூட்டர் வந்துடுச்சே! இந்த கம்ப்யூட்டரைப் பயன்படுத்தக் கத்துக்கிட்டு, அந்த எந்திரத்துகிட்ட ஆயிரம் ஜாதகத்தையும் கொடுத்தேன். அது எனக்குக் கொடுத்த விடைல ஆயிரம் ஜாதகத்துலயும் சனியோட தொடர்பு உறுதியானது. அடுத்து லக்னாதிபதி தொடர்பு. இவங்க ரெண்டு பேர்தான் மரணத்தை முடிவு செய்ற பிரதான காரணகர்த்தர்கள். மற்ற கிரகங்கள் துணைக் காரணங்கள். மரணத்தைத் துல்லியமா கண்டுபிடிக்க முடியாதபடி செய்யற கிரகங்கள் இரண்டு. ஒண்ணு சூரியன். இன்னொண்ணு சந்திரன். இதுல சந்திரன்தான் என் வரையில முக்கியமானவன்.

பூமிக்கு ரொம்பப் பக்கத்துல இருக்கற கிரகம்... தேய்ஞ்சு தேய்ஞ்சு வளர்ற கிரகம்... ஒரு மனிதனோட மன அமைப்பைப் பிரதிபலிக்கற கிரகம். இந்த கிரகம் ஒரு ராசியை இரண்டரை நாள்ல கடந்துடுது. இதே ராசியை சனி கிரகம் கடக்க இரண்டரை வருஷம் ஆகுது. அப்ப இரண்டுக்குமான வேகம் எப்படின்னு பாருங்க...

நிதானமான சனி கிரக கதிரும், வேகமான சந்திர கிரக கதிரும் சந்திக்கற புள்ளியில மனம் அடங்குது. மனம் அடங்கற அந்தப் புள்ளிதான் மரணப்புள்ளி. இதை ஜோதிடம் தெரிஞ்சவங்க வேகமா புரிஞ்சிப்பாங்க. உங்களுக்குக் கொஞ்சம் தலையை சுத்தும்...'' - வள்ளுவர் பேசியது அவர் சொன்னது போலவே தலையைச் சுற்றும் விஷயமாகத்தான் தோன்றியது.

''எல்லாம் சரிங்க... இதை ஏன் நீங்க யாருக்கும் கத்துத் தரலை? நான் சொன்ன மாதிரி நீங்க மரணத்தை சொல்ல முடிஞ்சவரா இருந்தா, இந்த உலகம் உங்களை விட்டு வச்சிருக்காதே..?'' - வர்ஷன் கூட சரியாகத்தான் கேட்டான்.

''தம்பி.... என் ஜோசியம் சிலருக்கு நூறு சதவீதம் பலிச்சா, சிலர் வரையிலும் சுத்தமா பலிக்கறதில்ல. இது எனக்கே கூட ஆச்சரியம்தான். அந்த வகைல நான் சொல்லி பலிக்காம போகவும் இடமிருக்கறதாலதான் நீங்க சொல்ற மாதிரி நடக்கலையோ என்னவோ! அப்புறம் இன்னொரு விஷயமும் இருக்கு... என்னை என் விருப்பத்துக்கு மாறா பயன்படுத்த விரும்பி வந்தவங்க யாரும் உயிரோட இல்லை.

உதாரணமா ஒரு மந்திரி என்கிட்ட ஜாதகம் பாக்க விரும்பினார். அவர் பி.ஏ வந்து கேட்டார். நான் நேர்ல வரச் சொன்னேன். அவர் என்னை மந்திரி வீட்டுக்கு வரச் சொன்னார். நான் மறுத்திட்டேன். அந்த பி.ஏ என்கிட்ட மிரட்டலா பேசிட்டுப் போனார். போனவர் அப்புறம் வரவேயில்லை. விபத்துல இறந்துட்டார்.என்னை யார் பகைச்சாலும், என் விருப்பத்துக்கு எதிரா நடந்துக்கிட்டாலும் அவங்களுக்கு ஏதாவது ஆயிடுது. அதுதான் பல கோடி மதிப்புள்ள இந்தப் பெட்டியையும் காப்பாத்துச்சு. இல்லேன்னா ஒரு உருட்டுக்

கட்டை போதுமே... என் வீடு புகுந்து என்னை அடிச்சுப் போட்டுட்டு பெட்டியை எடுத்துக்கிட்டுப் போக..?''

- வள்ளுவர் கேட்ட கேள்வி வர்ஷனுக்கும் ஒரு விடையைத் தந்தது. எதற்காகத் தன் மூலம் பெட்டிக்கு எதிரிகள் வலை விரித்துள்ளனர் என்பதும் புரிந்தது.'என்றால் இந்த வள்ளுவரை அந்த கூட்டம் வெகுகாலமாக கவனித்துக்கொண்டே இருந்திருக்க வேண்டும்' என்பது அவனுக்கு உரைத்தது. எப்படிக் கேட்டாலும் திக்காமல் திணறாமல் பதில் தரும் அவர் தெளிவு, உண்மையில் அவனை அசர அடித்திருந்தது. ப்ரியா அசந்து போனதாக சொன்னதில் நிச்சயம் அர்த்தமிருக்கிறது.

இந்த வள்ளுவர் சாதாரண மனிதரல்ல... இவர் வசம் உள்ள அந்தப் பெட்டி, மற்றும் அதிலுள்ள வழிகாட்டும் ஏடுகளை விட - அவ்வளவு ஏன், காலப் பலகணியை விடவே இவர்தான் மதிப்பு மிக்கவர்' - வர்ஷன் வள்ளுவரை மதிப்போடு பார்க்க ஆரம்பித்து, அப்படியே ப்ரியா காதருகில்,

''ப்ரியா... நீ இவரைப் பத்தி சொன்னது நூத்துக்கு நூறு உண்மை!'' என்றான்.

அனந்தகிருஷ்ணனோ ஒரு சிக்கலில் புதையுண்டது போன்ற முகபாவனையில், ''மிஸ்டர் வள்ளுவர்... அப்ப என் ஃப்ரெண்டு கிருஷ்ணமூர்த்தி என்னாவான்? அவனுக்கு உங்க ஜோசியம் பலிக்குமா, பலிக்காதா... எனக்கு படபடப்பா இருக்கு!'' என்று தனது துடிப்பைக் காட்ட,

‘‘அவருக்கு போன் போடுங்க... அவர் இப்ப எப்படி இருக்கார்னு தெரிஞ்சாலே போதும். நான் உறுதியா சொல்லிடுவேன்’’ என்றார் வள்ளுவர்.

அனந்தகிருஷ்ணன் அங்கிருந்து விலக, வர்ஷன் ப்ரியாவோடு சற்று மறைவாகச் சென்று அவள் கைகளைத் தேடிப் பிடித்தவனாக சொன்னான். ‘‘ப்ரியா... இந்த வள்ளுவரை சாக விடக்கூடாது. இவர்கிட்ட நமக்கு இன்னும் ஏராளமான கேள்விகள் இருக்கு. நான் இப்ப சொல்றேன்... நம்ம உயிரைக் கொடுத்தாவது இவரைக் காப்பாத்திடணும்’’ என்றபோது அனந்தகிருஷ்ணன் திரும்பியிருந்தார். அவர் முகத்தில் சுரத்தில்லை. ஈன சுரத்தில் பேசவும் தொடங்கினார்.

‘‘மிஸ்டர் வள்ளுவர், நீங்க ரொம்பவே கிரேட்! கிருஷ்ணமூர்த்தி இப்ப ஒரு கேன்சர் பேஷன்ட். சீரியஸ் கண்டிஷன்ல ஹாஸ்பிட்டல்ல இருக்கான்...’’ - எனவும், வர்ஷன் - ப்ரியா இருவர் இதயமும் ஒரு முறை நின்று பிறகு துடிக்க ஆரம்பித்தது!

15

ஔவையாரை 108 என்கிற எண்ணோடு தொடர்புபடுத்திய என் நண்பர், 108 ஒரு புனித எண். ஒருபடி மேலே போய் சற்று மேஜிக்கலான எண்ணும் கூட என்றார். ராமாயணத்தில் தொடங்கிய பேச்சு, ஔவையைத் தொட்டு எண்களிடம் சென்றுவிட்டது. நண்பர் எண்களைத் தொட்டு பல அரிய செய்திகளைக் கூறத் தொடங்கினார்.

108 என்ற எண்ணைக் கூர்ந்து கவனிக்கச் சொன்னார். ‘இதில் கவனிக்க என்ன இருக்கிறது?’ என்று கேட்டேன். ‘இதில்தான்

எல்லாம் உள்ளது. நம் சான்றோர்கள் காலத்தால் மட்டுமின்றி, ஞானத்தாலும் எவ்வளவு மூத்தவர்கள் என்பதை இந்த எண்ணே சொல்கிறது. நூற்றி எட்டின் நடுவில் உள்ள பூஜ்ஜியத்துக்கு மதிப்பில்லை.

அதன் இரு பக்கமும் எண்கள் உள்ளன. ஒரு எண் பூஜ்ஜியத்துக்கு முன் வரும்போது அது பத்து மடங்கு பெருகுகிறது. பூஜ்ஜியத்துக்கு அடுத்து வரும்போது பத்து மடங்கு ஒடுங்குகிறது. இந்தக் கணக்கு சரிதானே?' என்று கேட்டார். 'ஆம்... இதுதான் கணித நடைமுறை'என்றேன் நான். 'இப்போது இந்தக் கணிதத் தெளிவோடு எண் நூற்றி எட்டைப் பாருங்கள்' என்றார்.

நானும் பார்த்தேன். அவரும் கூடவே விவரிக்கத் தொடங்கினார்... 'ஒன்று என்பது இங்கே கடவுளைக் குறிக்கும். அதைப் பரம்பொருள், பிரம்மம், சிவன், விஷ்ணு, அல்லா, இயேசு என்று எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். பூஜ்ஜியத்தின் முன் அது இருந்து பெருகிக் கிடக்கிறது. எட்டு என்பது நம் வாழ்வைக் குறிக்கும். நாம் எப்படி வாழ்ந்தாலும் ஒருநாள் அது முடிவுக்கு வந்தே தீரும். அரச யோகத்தோடு வாழ்ந்திருந்தாலும் சரி, ஆண்டியாக வாழ்ந்திருந்தாலும் சரி, நம் வாழ்வு ஒவ்வொரு நாளும் முடிவை நோக்கி நகர்ந்து ஒருநாள் பூஜ்ஜியமாகி விடுகிறது.

அப்படி பூஜ்ஜியமாகும் நிலையில் இறைவன் ஒருவனே என்று சரண்புகும்போது நாம் அந்த ஒன்றாகிய இறைவனை அடைகிறோம். நூற்றி எட்டைக் கூட்டினால் ஒன்பது வரும். ஐந்து பூதங்களால் ஆன நாம், ஆறாவது அறிவால், ஏழாகிய பிறப்பைக் கடந்து எட்டுவது ஒன்பதாகிய நிலையை... இந்த ஒன்பதை எதனால் பெருக்கினாலும் தன்னிலை மாறாது. இப்படி

இந்த எண் பல செய்திகளைத் தந்துகொண்டே போகிறது' என்றார்.

“சரி... இதை ஔவைக் கிழவியோடு எப்படி தொடர்புபடுத்தினீர்கள்?' என்று கேட்டேன்...”- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அனந்தகிருஷ்ணன் சொன்னதைக் கேட்டு வள்ளுவர் பெருமூச்சு விட்டார். கணபதி சுப்ரமணியனோ ஸ்தம்பித்து விட்டார். வள்ளுவரே அதைக் கலைத்தார்...

“எனக்கு முந்தி அவர் போயிடுவார்... அது உறுதி! இனி யார் ஜாதகத்தையும் நான் பார்க்கலை...”- என்று அந்த ஜாதக நோட்டை அப்படியே மூடினார்.

“அய்யா...” என்று மெல்லிய குரலில் அவரை அழைத்தான் வர்ஷன்.

“என்னப்பா...”

“உங்கள பாக்க பிரமிப்பா இருக்கு எனக்கு. எவ்வளவு பெரிய மேதை நீங்க...” என்றான் மிக உணர்வுபூர்வமாக...

“யாரா இருந்தா என்னப்பா... நேரம் வந்தா போய்க்கிட்டேதானே இருக்கணும்...”

“அது... அது உண்மைதான்! ஆனா, அதுக்கொரு வயசு இருக்குல்ல?”

‘‘அதுக்கென்ன பண்ண... நம்ம விதியை நாமதானே எழுதிக்கிறோம்..?’’

‘‘நாம எழுதிக்கிறோமா... அப்ப கடவுள்..?’’

‘‘அவருக்கு நம்ம விதியை எழுதறதா வேலை..?’’

‘‘அப்ப என் தலைல கடவுள் இப்படி எழுதிட்டான்னு சொல்றோமே...’’

‘‘எல்லாம் அறியாமைல சொல்றதுதான்...’’

‘‘என்ன சொல்றீங்க நீங்க... `எதுவும் நம்ம கைல இல்லை. எல்லாம் விதி’ன்னும் சொல்றீங்க. மறுபுறம் நேர் எதிரா நாமதான் நம் தலையெழுத்தை எழுதிக்கறதாவும் சொல்றீங்களே?’’

‘‘ஆமாம்... நான் சொன்ன இரண்டுமே உண்மை. இந்த உண்மையை சும்மா இப்படி கேள்வி கேட்டுல்லாம் புரிஞ்சிக்க முடியாது... ஒரு நெடிய அனுபவமும் பார்வையும் இதுக்கு வேணும். ஒரு விஷயத்தைத் தெளிவா புரிஞ்சுக்கோ... உலகத்திலேயே பெரிய கேள்வி எது தெரியுமா?’’

‘‘எது?’’

‘‘நான் யாருங்கறதுதான்!’’

‘‘அதனால...’’

‘‘நான் யார்’ங்கற இந்தக் கேள்விக்கான விடை ஒவ்வொருத்தருக்கும் அவங்க தேடலுக்கும் தவிப்புக்கும் ஏற்ப யாரும் சொல்லாமலே ஒருநாள் புரியும். இதுக்கு மட்டும் வார்த்தைல விடை கிடையாது. வார்த்தைல சொல்றது விடையாவும் ஆகாது! அதனாலதான் சித்தர்கள் இதுக்கு பதிலை இரண்டு வரில சொன்னாங்க. ‘கண்டவர் விண்டிலர் - விண்டவர் கண்டிலர்’ அவ்வளவுதான்!’’

‘‘எங்கேயோ போய்ட்டீங்களேய்யா!’’

‘‘கேள்வியைப் பொறுத்துத்தானே பதில்...’’

‘‘உண்மைதான்...’’ என்று அடுத்து ஒரு கேள்வி கேட்க வாயெடுத்தவனை தடுத்த வள்ளுவர், ‘‘இனி எதுவும் பேசாதே... நானும் மௌனத்துல ஆழ்ந்திடத்தான் விரும்பறேன். இப்ப மணி என்ன?’’ என்று கடிகாரத்தைப் பார்த்தார். ஐந்தரை ஆகியிருந்தது.

(உண்மையில் நாலரை மணிதான்) ‘‘மணி இப்ப ஐந்தரை... இன்னிக்கு ஏழு மணிக்கு மேலே நட்சத்திரம் மாறுது. அதுக்குப் பிறகு நான் மௌனமா இருக்கத்தான் விரும்பறேன். உங்க வரைல நான் இன்னும் ஒண்ணரை மணிநேரம்தான் பேசுவேன். அதுக்குள்ள காலப்பலகணி தொடர்பா என்கிட்ட எதைக் கேட்கணும்னாலும் கேட்டுத் தெரிஞ்சுக்குங்க. அது சம்மந்தமா எனக்குத் தெரிஞ்ச எல்லாத்தையும் நான் சொல்றேன். உங்க தேடலுக்கும் உதவியா இருக்கும்...’’ என்றவரை ப்ரியா படபடப்போடு பார்த்தாள்.

அய்யா நீங்க ஏன் மௌனமாக விரும்பறீங்க... கலகலன்னு பேசிக்கிட்டிருக்கலாமே?’’

‘‘நான் கொஞ்சம் மௌனமா தியானத்துல மூழ்க விரும்பறேன்மா. எனக்கு ஒரு உண்மை நல்லா தெரியும். உயிர் பிரியறதுக்கு முன்னால நினைக்கற நினைப்புக்கும் அடுத்த பிறப்புக்கும் நெருங்கின தொடர்பு இருக்கும்மா...’’

‘‘நீங்க ‘நான் சாகப்போறவன்’ங்கற அந்தக் கருத்துல இருந்து வெளிய வரவே மாட்டீங்களா?’’

‘‘உனக்காக நான் எப்படிம்மா என் நம்பிக்கை சார்ந்த விஷயங்களை உதற முடியும்?’’

‘‘அதைப் பொய் நம்பிக்கைன்னு நினைச்சா முடியும்!’’

‘‘இல்லம்மா... என் சாவு - காலப்பலகணி - அதோட வெளிப்பாடு - அது சொல்லப்போற விஷயங்கள் - அதனால ஏற்படப்போற தாக்கம்னு ஒரு பெரிய வட்டச்சுற்று இருக்கும்மா. இதுல நீ, இவர்,

அவர் எல்லாம் பார்வையாளர்கள்... அப்பபப்ப பங்கெடுத்துக்கறவங்களும்கூட!''

- வள்ளுவரின் பதில், 'அடுத்து எதைக் கேட்பது' என்ற குழப்பத்தைத்தான் அவர்களிடம் ஏற்படுத்தியது. வர்ஷனிடம் மட்டும் கேள்விகள் முண்டியடித்தன.

''அய்யா... இந்தப் பெட்டி, சோழி, ஏடு இதெல்லாம் எவ்வளவு காலமாக உங்ககிட்டஇருக்கு?''என்று ஆரம்பித்தான்.

''அதான் சொன்னேனே... என் தாத்தா காலத்துல இருந்தே!''

''அவர் காலப்பலகணியைத் தேடிக் கண்டுபிடிச்சவரா?''

''ஆமாம். அப்படி கண்டுபிடிச்ச நிலைல அவர் எழுதி எடுத்துக்கிட்டு வந்த குறிப்புப்படிதான் எல்லாம் நடந்துடுச்சே..!''

''அது சரி... நீங்க ஏன் முந்தியே இதைத் தேடிப் போகல?''

''எனக்கு இந்தப் பெட்டி பத்தியும் பலகணி பத்தியும் சமீபமாதான் தெரிய வந்தது. தாத்தாவோட டைரியை படிச்சுத்தான் நான் ஒரு தெளிவுக்கும் வந்தேன். பலகணியை நெருங்கறவங்க, அதை நெருங்கினதுல இருந்து சொற்ப நாட்கள்ல இறந்து போயிடுவாங்கங்கற விதிப்படி என் தாத்தா அப்பவே இறந்துட்டாரு. இதை எல்லாம் நான் இவங்களுக்கு முன்பே சொல்லிட்டேன்பா!''

நீங்க என்ன சொல்றீங்க... அப்ப இதை இவர் தேடிப்போய் கண்டுபிடிச்சுட்டா இவரும் சீக்கிரமா செத்துப்போயிடுவாரா?'

‘‘ஆமாம்’’- வள்ளுவர் துளியும் பதற்றமின்றி ஆமோதித்தது கணபதி சுப்ரமணியனை நெருடியது.

‘‘வள்ளுவரே... நீங்க என்ன சொல்றீங்க? நான் செத்துடுவேன்னு தெரிஞ்சும் என்கிட்ட ஒப்படைக்க உங்களால எப்படி முடிஞ்சது?’’- கணபதி சுப்ரமணியன் கணிசமாய் கோபப்பட்டார்.

அய்யா... இது ஒரு அதிசயம்! இந்த அதிசயத்தை நான் எப்ப தொட்டேனோ, அப்பவே என் முடிவு ஊர்ஜிதமாகி இது ஒரு உண்மைங்கறதுக்கான சாட்சியங்களையும் நான் வரிசையா பாத்துட்டேன். குறிப்பா நான் இந்தப் பலகணிக் குறிப்புப்படி வந்த சில ரகசியங்களை வெளிய சொன்னது ஒரு பெரிய அதிர்வையே ஏற்படுத்திடுச்சி. முதல்ல நான்கூட கொஞ்சம் சந்தேகத்தோடதான் இருந்தேன். அப்புறம் எல்லாமே தெளிவாகிடுச்சு. பொம்மலாட்டம்னு ஒரு ஆட்டம் உண்டு... அதைப் பத்தி கேள்விப்பட்டிருக்கீங்களா?’’

‘‘அதுக்கென்ன வள்ளுவரே...’’

பொம்மலாட்டத்தைப் பாக்கறவங்களுக்கு பொம்மைங்க தானா ஆடற மாதிரி தெரியும். ஆனா, உண்மைல ஆட்டி வைக்கறவன் பின்னாடி இருக்கான். நாமெல்லாம்கூட பொம்மைங்கதான். இதெல்லாமே எனக்கு தெளிவா புரிஞ்சு போச்சு!’’

‘‘அப்ப ஆட்டி வைக்கறது யார் வள்ளுவரே..?’’

‘‘காலம்தான்... வேற யார்?’’

‘‘இது என்ன பதில்..? போகட்டும்... இந்த நிமிஷம் இந்த காலப்பலகணி பத்தி வேற யாருக்குத் தெரியும்?’’

‘‘இப்பத்தான் கேட்க வேண்டிய கேள்விய கேட்டிருக்கே...’’

‘‘முதல்ல இதுக்கு பதிலைச் சொல்லுங்க!’’

‘‘டெல்லில ஜனார்த்தனன் சதுர்வேதினு ஒரு சாமியார் இருக்கார். அவருக்குக் கொஞ்சம் சித்து வேலைகளும் தெரியும். இப்ப நீங்க ஒரு பரீட்சை எழுதியிருக்கீங்கன்னு வையுங்க. பரீட்சை பேப்பரைத் திருத்தி மார்க்கும் போட்டிருந்தா போதும். இவர் தன்கிட்ட ஏவல் செய்யற கெட்ட சக்தியோட துணையால அந்த மார்க்கை முன்னாடியே சொல்லிடுவாரு. இப்ப வேலைக்காக எவ்வளவோ பேர் பரீட்சை எழுதறாங்க... அவங்க பாஸா, ஃபெயிலான்னும் சரியா சொல்லிடுவாரு!’’

‘‘இதெல்லாம் சாத்தியமா..?’’

‘‘சாத்தியமில்லாமதான் நாத்திகத்துக்கு ஒரு கட்சியே இருக்கும்போதும் இவங்க நடமாடறாங்களாக்கும்?’’

‘‘சரி... சாத்தியம்னே வச்சுப்போம்... இவரைப் பத்தி இப்ப எதுக்கு சொன்னீங்க?’’

‘‘இவருக்கு இப்ப காலப்பலகணி பத்தித் தெரியும்!’’

‘‘எப்படி?’’

‘‘டெல்லில யார் ஆட்சியைப் பிடிப்பாங்கனு எல்லோரும் ஜோசியம் பார்த்தப்ப பலகணி சொன்னதை வச்சு நான் சொன்னது அப்படியே நடந்ததே..! அடுத்து விஞ்ஞானி காணாம போவார்னு

சொன்னது. அவ்வளவு ஏன்... அந்த சதுர்வேதி ஒரு கிட்னி ஃபெயிலியர் கேஸை பிழைக்க வைக்கறேன்னு சொல்லி பணம் கறந்தப்ப, அவங்க என்கிட்ட வந்தாங்க. நான் 'அந்த கேஸ் பிழைக்காது'ன்னு சொல்லி சாகற நேரத்தையும் சொன்னேன்... நான் சொன்னபடிதான் நடந்தது. சதுர்வேதி பார்வையும் என் பக்கம் திரும்பிடிச்சு!''

''அப்ப சதுர்வேதி உங்கள சந்திச்சாரா?''

''அவர் சார்பா சிலர் வந்து சந்திச்சாங்க. பலகணி பத்தியும் கேட்டாங்க. நானும் பலகணிங்கறது எங்க தமிழ்நாட்டு சொத்து... கால ஞானம் கொண்ட சித்தர்கள் கண்டு பிடிப்பு அது. மயில்பொறி, அமுதசுரபி, சந்திரகாந்தக்கல், ரசமணி மாதிரி அது ஒரு அதிசயம் - ஆனா அறிவுப் புதையல்'னு சொன்னேன்!

அது எங்க இருக்குன்னு கேட்டாங்க... 'எனக்கே தெரியாது... அதைக் கண்டுபிடிக்க ஒரு சாமர்த்தியம் வேணும். புதையலாச்சே! மறைவாதான் இருக்கும்'னும் சொன்னேன். அப்படியே அதைக் கண்டுபிடிக்கறவர் யாரா இருந்தாலும் 27 நாள்ல செத்துப்போறதும் சத்தியம்'னு சொன்னேன்!''

''உடனே பின்வாங்கிட்டாங்களா?''

''கொஞ்சம் தயங்கினாங்க... எனக்கு நல்லா தெரியும்! அந்த சதுர்வேதி தன் ஏவல் சக்திகிட்ட கேட்டிருப்பான். அதுங்க நான் சொன்னது உண்மையா, பொய்யான்னு சொல்லியிருக்கும். அதனாலதான் நேரடியா ஈடுபடாம யாரையாவது களத்துல இறக்கி விட்ருப்பான். இதுல இறங்கியிருக்கறவங்களுக்கு இந்த 27 நாள்ல சாவுங்கறது தெரியாது. பாவம் அவங்க...''

‘‘அப்ப அவங்கதான் உங்ககிட்ட பல கோடிக்கு விலை பேசினவங்களா?’’

‘‘என்கிட்ட பேசினாங்க... அவ்வளவு ஏன்? என் வீட்டையே சல்லடை போட்டாங்க. இந்தப் பெட்டியைக் கூட பார்த்தாங்க! ஆனா, இதுதான் பலகணிக்கு வழிகாட்டற குறிப்பு கொண்டதுங்கறது அவங்களுக்குத் தெரியல. இந்தத் தகரப் பெட்டியை அவங்க குப்பையாத்தான் பார்த்தாங்க. நான் ரகசியக் குறிப்பை செப்புப் பட்டயமா வச்சிருப்பேன்னு நினைச்சு வந்துட்டாங்க. ஏமாற்றத்தோட திரும்பிப் போனாங்க. 'திரும்ப வருவோம்’னும் சொன்னாங்க. நான் அப்ப சொன்னேன், 'நீங்க வரமாட்டீங்க’ன்னு...’’- வள்ளுவர் கொஞ்சம் இடைவெளி விட, ப்ரியா இம்முறை கேட்டாள்.

எதை வச்சு அங்கிள் 'வரமாட்டீங்க’ன்னு சொன்னீங்க?’’ப்ரியா தன்னையுமறியாமல் அவரை அங்கிள் என்றதில் அவரிடம் ஒரு நெகிழ்வு.

‘‘ஒரு உள்ளுணர்வுல சொன்னேம்மா... அதே மாதிரி போனவங்க ஒரு விபத்துல இறந்துட்டாங்க. அதனால என் வரைல சதுர்வேதிக்கு பயமும் கொஞ்சம் பக்தியும் கூட வந்துடுச்சி!’’

‘‘அவர்கிட்ட நீங்க நல்ல விலைக்கு வித்துருக்கலாமே... பணத்தை உங்க குடும்பத்துக்குக் கொடுத்தா அவங்க நல்லா இருப்பாங்க இல்லையா?’’

- வர்ஷன் இப்படிக் கேட்கவும், வள்ளுவர் அவனை ஒரு மாதிரி புன்னகையோடு பார்த்தார். அந்தப் புன்னகையை மொழிபெயர்க்க நிறையவே திராணி வேண்டும்.

16

நூற்றி எட்டு என்கிற எண்ணை ஔவையோடு தொடர்புபடுத்தி அந்த நண்பர் பேச ஆரம்பித்தார். முன்னதாக நூற்றி எட்டுக்குள் மறைந்திருக்கும் சிறப்பை தெரிந்துகொள்ளச் சொன்னார்... 'ஒன்பது கிரகங்கள், பன்னிரெண்டு ராசிகள், இருபத்தியேழு நட்சத்திரங்களை ஒன்று சேர்த்தால் 48 வரும். கிரகங்கள் ராசிகளாகி நட்சத்திரங்கள் மூலமாகவே மனிதர்களை ஆட்சி செய்கின்றன.

அப்படி மனிதர்களை ஆட்சி செய்யும் கால வட்டம் அறுபது ஆண்டுகள் எனும் ஒரு சுற்றளவைக் கொண்டது. இதனாலேயே அறுபது வரும்போது மணி விழா கொண்டாடும் ஒரு வழக்கம் தோன்றியது. இந்த அறுபதுடன் அந்த நாற்பத்தி எட்டை கூட்டிட, 108 வரும்.இந்த 108க்குள் வருஷம், கிரகம், ராசி, நட்சத்திரம் அவ்வளவும் அடக்கம். மகா கணபதி மேல் பக்தி கொண்டு தன் இளம்பருவத்தை தத்தம் செய்து முதுமையை வேண்டிப் பெற்று 108 ஆண்டுகள் வாழ்ந்த ஔவை, பின் மகா கணபதியாலேயே கைலாயத்தை அடைந்த அருள் மூதாட்டி. இந்த வருடம், கிரகம், ராசி, நட்சத்திரங்களால் அவளை ஏதும் செய்ய இயலவில்லை.

எனவே 108 என்கிற எண் தனக்குள் ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்களோடு, பூஜ்ஜியத்தையும் கொண்டு அதன் பெருகிய அம்சங்களுக்குள் ராசி, நட்சத்திரம், கோள், மாதம் என்கிற சகலத்தையும் கொண்டுள்ளது. எனவே, ஒருவர் 108 முறை ஒரு நாமத்தைச் சொல்லும்போது, அதன் பெருகிய அம்சங்கள் அவ்வளவுக்கும் அந்த நாமம் செல்கிறது. எனவேதான் துதிகளை 108 எனும் எண்ணிக்கைக்குள் அடக்கினர்' என்றார்.

இந்த பதிலுக்குள் இருக்கும் விஷயங்களைக் கடந்து, இந்த 108க்குள் சில ரகசியச் சிறப்புகள் இருப்பதாக எனக்குத் தோன்றியது. இன்று அபரிமிதமான மனித சக்தி காரணமாக பெரிய அளவில் விஞ்ஞானம் வளர்ந்துள்ளது. நிறைய கண்டுபிடிப்புகள் நிகழ்ந்து பல புதிய வழிமுறைகள் தோன்றியுள்ளன. அந்த நாளில் இந்த வழிமுறைகளும் விஞ்ஞானமும் இல்லாத நிலையில், ஒரு தனி மனிதன் தனது ரகசியங்களை எப்படிப் பாதுகாத்திருப்பான்? குறியீடுகளுக்குள்ளும், எண்களுக்குள்ளும், சில சொற்களுக்குள்ளும்தான் ஒளிக்க முடிந்தது. உதாரணமாக 'தமிழ் தமிழ் என்றிட அமிழ்தம் தோன்றும்' என்னும் வாக்கியத்தைக் கூறலாம்.எப்படி?"- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

வள்ளுவரின் புன்னகையைப் புரிந்துகொள்ள முடியாமல் வர்ஷன் திணறினான். ப்ரியாவோ தனக்குள் முயன்று பார்த்தாள். கணபதி சுப்ரமணியன் கூட அதற்கு பொருள் என்னவாக இருக்கும் என்றே தவிக்க ஆரம்பித்தார். அனந்த கிருஷ்ணனோ, தன் நண்பன் கிருஷ்ணமூர்த்தியின் மரணப் போராட்டத்தை எண்ணிக் கலங்கிப் போய் விட்டிருந்தார்.

"அய்யா, இந்த சிரிப்புக்கு என்ன அர்த்தம்... நான் கேட்டதுல என்ன தப்பு?" என்று வர்ஷன் திரும்பக் கேட்டான்.

"எல்லா சிரிப்புக்கும் அர்த்தம் சொல்ல முடியாது தம்பி. இந்த ரகசியம்ங்கறது ரொம்பப் பெரிய விஷயம். உலகத்துல எல்லாரையும் ஆட்டிப் படைக்கறதே காலம்தான். அந்தக் காலமே காலப்

பலகணிக்குள்ள வசப்பட்டுக் கிடக்கு... அப்ப பலகணி எவ்வளவு பெருசு?''

‘‘ஒப்புக்கறேன்... அதனால அதை விலைக்கு விக்கக்கூடாதா?''

‘‘வித்தா என்ன வரும்?''

‘‘பணம்!''

‘‘பணம் எதுக்கு?''

‘‘வாழறதுக்குத்தான்...''

‘‘அப்ப பணம் இருக்கறவங்கதான் வாழ முடியுமா?''

‘‘இப்படிக் கேட்டா எப்படி... பணம் இருந்தா கஷ்டமில்லாம சௌகரியமா வாழலாம் இல்லையா?’’

‘‘தப்பான பணத்தால சந்தோஷமா எல்லாம் வாழ முடியாது தம்பி!’’

‘‘பணம்ங்கறது ஒண்ணுதாங்க... அதுல தப்பான பணம், சரியான பணம்னு எல்லாம் ரெண்டு கிடையாதுங்க!’’

‘‘அப்ப பணத்தைப் பதுக்கினா அதை கறுப்புப் பணம்னு ஏன் சொல்றே?’’

‘‘அது அடையாளத்துக்கு! மற்றபடி அந்தப் பணம் அதோட மதிப்பை இழக்கறதேயில்லை...’’

‘‘அந்த தாள் இழக்காதுதான்... ஆனா, அதை வச்சிருக்கறவன் எல்லாத்தையும் இழக்க ஆரம்பிச்சிடுவான்!’’

‘‘தலைகீழா சொல்றீங்களேய்யா... இந்த நாட்டுல கறுப்புப் பணம் வச்சிருக்கறவங்கதான் ரொம்ப நல்லா இருக்காங்க... சமயத்துல இந்த நாட்டோட தலையெழுத்தையே அவங்கதான் எழுதறாங்க!’’

‘‘தம்பி... மேலோட்டமா நீ உன் பார்வைக்குப் படுறத வச்சு சொல்றே! வாழ்க்கைங்கறது மனம் சார்ந்தது. பயமில்லாம, பதற்றமில்லாம, ரகசிய பாரங்கள் எதுவும் இல்லாம, ஏகாந்தமா இலவம் பஞ்சு மாதிரி மனசு இருக்கணும். ஒவ்வொரு நொடியும் இயற்கையை ரசிச்சுப் பாக்கற ஒரு கவிஞனைப் போல அனுபவிச்சு வாழறதுதான் உண்மையான வாழ்வு. புதையல் பூதம் போல, எப்பவும் பணம், அதோட பாதுகாப்புன்னு வாழறதுக்குப் பேர் வாழ்க்கை கிடையாது!’’

‘‘அய்யா... அப்படி எல்லாம் இல்லை. தப்பா பணம் சேர்த்தவங்க நல்லாவே அனுபவிச்சுதான் வாழறாங்க. நீங்கதான் அந்தக் காலத்து மனுஷனா ஏதேதோ பேசறீங்க...’’

‘‘இல்ல தம்பி... சரியான வழியில வராத பணம், ஒரு வழி பண்ணிடும். எனக்கு அப்படி ஒரு பணம் வேண்டாம். என் பிள்ளைகளுக்கு நான் காசு, பணத்தைத் தராட்டியும் பாவத்தை தராம இருக்கலாம், இல்லையா?’’

‘‘அப்ப இந்த பலகணியை வச்சு யார் சம்பாதிச்சாலும் கஷ்டம்தானா?’’

‘‘அதுல என்ன சந்தேகம்?’’- வள்ளுவரின் பதில் வர்ஷன் முதுகில் சவுக்கால் அடித்தது போல் இருந்தது. அதை ப்ரியாவும் கூர்மையாக கவனித்தாள். கணபதி சுப்ரமணியன் இடையில் புகுந்தார்.‘‘மிஸ்டர் வள்ளுவர்! இதைக் கொண்டு நீங்க சம்பாதிக்க விரும்பலைங்கறதுக்குக் காரணம் தெரியுது. அதே சமயம், ‘இதுகிட்ட நெருங்கறவங்க செத்துடுவாங்க’ன்னு ஒரு விஷயம் இருக்கும்போது, இது நம்மை விட்டு ஒழிஞ்சா போதும்னு நினைக்காம என்னைத் தேடி வந்து என்கிட்ட இதைக் கொடுத்திருக்கீங்களே... நான் உயிர் வாழ வேண்டாமா? நான் செத்துட்டா இது என்கிட்ட வந்துதான் என்ன புண்ணியம்?’’

‘‘அய்யா... இது ஒரு அதிசயம். சாதாரண அதிசயம் கூட இல்லை. அதிசயங்களுக்கெல்லாம் அதிசயம். இது ஒரு கணக்கு. அந்தக் கணக்குல, நூறு நூறு வருஷம் வாழற அமைப்பு கொண்டவங்க இது கிட்டயே வர முடியாது. இதுகிட்ட யாராவது

வராங்கன்னா, அவங்களுக்கு நீண்ட ஆயுள் கிடையாது. இதுதான் உங்க கேள்விக்கு என்னுடைய சுருக்கமான, தெளிவான விடை.

நீங்க நீண்ட நாள் வாழ விரும்பினா இதைத் தேடாதீங்க. இந்தப் பெட்டியைக் கொண்டு போய் ஆத்துலயோ... இல்ல, சமுத்திரத்துலயோ போட்டுடுங்க. இல்ல, சாவு உறுதியாயிட்ட ஒரு புற்றுநோயாளியை வச்சு தேடிக் கண்டுபிடிச்சு, கால ரகசியங்களை தெரிஞ்சிக்குங்க.

நீங்க எப்படி நடந்துக்கிட்டாலும் அது உங்க விருப்பம்தான். ஒண்ணு மட்டும் நிச்சயம்... இது கிடைச்சுட்டா குறைஞ்சது 100 வருஷத்துக்கு தமிழ்நாட்டோட நிலையையும், இந்தியாவோட நிலைப்பாட்டையும், உலகத்தோட நிலைப்பாட்டையும் அணு சுத்தமா தெரிஞ்சிக்கலாம். அதனால பெரிய நல்லது நடக்கணும்னு விதி இருந்தா அந்தப் பலகணி மூலமா ரகசிய உண்மைகள் தெரிய வந்தே தீரும்!'' என்ற வள்ளுவரை அனைவரும் மலங்க மலங்கப் பார்த்தனர்.

''இனி உங்ககிட்ட எந்தக் கேள்விகளும் இல்லைன்னு நினைக்கறேன்...'' என்று தொடர்ந்தவரை அடுத்து என்ன கேட்பது எதைக் கேட்பது என்று தெரியாமல் அனைவரும் வெறித்தனர்.

''நான் மௌனமாயிட்டா அப்புறம் ஒரு வார்த்தை பேச மாட்டேன்'' - வள்ளுவர் கண்டிப்போடு சொல்லவும் ஒரு இனம் புரியாத குழப்பம்...

''நல்லது...என் உயிர் உங்க வீட்ல பிரியணுமான்னும் யோசிச்சிக்குங்க. பரவாயில்லைன்னா என் இறப்புக்குப் பிறகு என் குடும்பத்தவர்கிட்ட என் உடம்பை ஒப்படைச்சுடுங்க. அவங்க இப்ப திண்டுக்கல் பக்கமா சிறுமலைல இருக்காங்க. நான் அவங்ககிட்ட

பேசப் போறேன். இங்க வரச் சொல்லப் போறேன். உங்களுக்கு எந்த சிரமும் வைக்காம என்னைத் தூக்கிக்கிட்டுப் போயிடுவாங்க'' - வள்ளுவர் பேச்சோடு பேச்சாக தன் செல்போனை தனது தொள தொள காமராஜர் சட்டையின் பாக்கெட்டில் இருந்து எடுத்தார்.

''இருங்க. நீங்க இப்ப எதுவும் பேச வேண்டாம்!'' என்று வேகமாய் ப்ரியா இடையிட்டாள். அதைக் கேட்க வள்ளுவரிடம் சிரிப்பு.

''இந்த சிரிப்புக்கு எனக்கு அர்த்தம் தெரியும். நீங்க நிச்சயம் சாக மாட்டீங்க. உங்களுக்கு எதுவும் ஆகாது!''

''அம்மாடி... நீ தாராளமா நம்பு. ஆனா, அதுக்காக நான் சும்மா இருக்க முடியாது. உனக்கு நான் இவ்வளவு தூரம் ஒத்துழைப்பு தந்துட்டிருக்கறதே அதிகம்...'' - வள்ளுவர் செல்போனை ஆன் செய்தவராக ஒதுங்கிச் சென்றார்.

கணபதி சுப்ரமணியனும் ப்ரியாவும் ஒருவரை ஒருவர் வெறித்துக்கொள்ள, சற்று ஒதுங்கியிருந்த அனந்தகிருஷ்ணன் திரும்பி வந்தார்.

''ப்ரியா! கிருஷ்ணமூர்த்தி செத்துட்டான். இப்பதான் எஸ்.எம்.எஸ். வந்தது...'' என்று அதைக் காண்பித்தார். வர்ஷன் முகம் குப்பென்று வியர்த்தது.

''ப்ரியா... அப்பா... இவரை இப்பவே அனுப்பிடுங்க. நம்ப வீட்ல வச்சு இவர் உயிர் போக வேண்டாம்!'' என்று அனந்தகிருஷ்ணன் தன் நம்பிக்கையை வேகமாய் வெளிப்படுத்தினார்.

‘‘அப்பா, கொஞ்சம் சும்மா இருங்க...’’

‘‘போதும்... இந்தப் பெட்டியையும் இவர்கிட்டயே கொடுத்து அனுப்பி வையுங்க. இதுவரை நீங்க தேடிக் கண்டுபிடிச்சது போதும். இதைத் தேடிப் போய் நீங்களும் சாக வேண்டாம்!’’

‘‘அப்பா... உங்க நண்பர் ஒரு கேன்சர் பேஷன்ட். அதனால இறந்துட்டார். இவரைப் பாருங்க... இவர் சாகப் போறவர்னு யாராவது நம்புவாங்களா?’’

‘‘ஆரோக்கியத்துக்கும் ஆயுளுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. தூக்கத்துல செத்தவங்க ஆயிரம் பேர். விமானத்துல இருந்து விழுந்தும் சாகாதவங்களும் ஆயிரம் பேர். மரணம் எப்ப வேணா, எப்படி வேணா வரும்!’’

‘‘நீ சொல்றத நானும் ஒத்துக்கறேன் அனந்தா... அதே சமயம் ஒரு ஆர்க்கியாலஜிஸ்ட்டா என்னால இந்தப் பலகணி விஷயத்தை சாதாரணமா எல்லாம் நினைச்சு ஒதுக்கிட முடியாது!’’

‘‘நீங்க இப்படித்தான் சொல்வீங்கன்னு எனக்குத் தெரியும். நாளைக்கு நடக்கப் போறத சொல்ற இந்த காலப்பலகணி உண்மையோ... இல்ல, பொய்யோ... எப்படி வேணா இருந்துட்டுப் போகட்டும். அதைக் கண்டுபிடிச்சு நடக்கப் போறத தெரிஞ்சிக்கிட்டு நாம என்ன பண்ணப் போறோம்! எந்த ஒரு சம்பவத்தையும் நம்மால தடுத்து நிறுத்த முடியாது எனும்போது நமக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை..?’’

‘‘அனந்தா! நீ சொல்றபடி பார்த்தா, நான் கண்டுபிடிச்ச தாழிப் பானை, மண்ட ஓடுகளால மட்டும் என்னடா புண்ணியம்? ஆனா,

இதெல்லாம் காலப்போக்கை காட்டற விஷயங்கள். மனித நாகரிக வளர்ச்சியை இதை எல்லாம் வச்சுத்தான் தெரிஞ்சுக்க முடியும்...''

கணபதி சுப்ரமணியம் அனந்தகிருஷ்ணனுக்கு பதில் கூறும் சமயம் வள்ளுவர் திரும்பி வந்தார். கடிகாரத்தையும் பார்த்தார்.

எல்லோரையும் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டார்.

''நான் சப்தம் போடுறத நிறுத்தப் போறேன்... உங்க எல்லோருக்கும் என் வாழ்த்துகள். நாளைக்கு மதியமே என் குடும்பத்துல எல்லாரும் வந்துடுவாங்க. ஆனா, இங்க வரமாட்டாங்க. என் இறப்புக்குப் பிறகு என் வீட்டுக்குக் கொண்டு போய் என் உடம்பை ஒப்படைச்சிடுங்க. என் உயிர் பிரியறத வச்சு நான் சொன்ன விஷயங்கள் எவ்வளவு உண்மையானது, உறுதியானதுன்னு நீங்க முடிவுக்கு வரலாம். திரும்ப சொல்றேன்... உங்க எல்லோருக்கும் என் வாழ்த்துக்கள்!''

ஒரு யோகி போல, கைகளை உயர்த்தி ஆசீர்வாதம் செய்துவிட்டு, அவருக்கான படுக்கை விரிப்பில் போய் சப்பணமிட்டு அமர்ந்து கொண்டார்.

அவர் இனி பேச மாட்டார் என்ற நிலையில் அங்கே இருந்து என்ன செய்வது?

வர்ஷன் 'நான் புறப்படுகிறேன்' என்பது போல ப்ரியாவைப் பார்த்தான். ப்ரியாவும் சரி என்றாள். அவனோடு வாசல் வரை சென்றாள். அனந்த கிருஷ்ணனுக்கு தான் சொன்னதை கணபதி சுப்ரமணியன் கேட்காதது வருத்தத்தை மூட்டி விட்டிருந்தது. முகச்சுளிப்போடு விலகி அவர் அறை நோக்கிச் செல்லவும், பத்மாசினி அனந்தனை நெருங்கியவளாக, ''இந்த வீட்ல என்னதாங்க நடக்குது..?'' என்று ஆரம்பித்தாள்.

வாசலில் வர்ஷன் தன் பைக்கை நெருங்கி ஏறி அமர்ந்திருந்தான்.

‘‘ப்ரியா... உன் வீட்டுக்கு வரும்போது இருந்த வர்ஷன் வேற! இப்ப உன்கிட்ட பேசறவர்ஷன் வேற! லைஃபை நினைச்சா எனக்கு இப்ப ரொம்ப பயமா இருக்கு...’’ என்றான். ப்ரியா பதில் ஏதும் கூறவில்லை.

‘‘ரைட்... நாளைக்கு வள்ளுவர்... வள்ளுவர்...’’ என்று அடுத்த வார்த்தைகள் பிடிபடாமல் தந்தி அடித்தான்.

‘‘அவர் இறந்தபிறகு போன் பண்ணுங்கிறியா?’’ - பளிச்சென்று கேட்டாள். அவன் தலை அசைந்தது.

‘‘பாக்கலாம்...’’ என்றாள் அரை மனதாக.

‘‘உனக்கு இன்னுமா நம்பிக்கை வரலை?’’

‘‘அது எப்படி வரும்... உயிர் போற வரை என் நம்பிக்கை நீடிக்கும். அப்படி நீடிச்சாதான் அது நம்பிக்கை. இல்லேன்னா அது வெறும் எண்ணம்!’’ - ப்ரியா அழுத்தமாகவே கூறினாள்.

அவன் பட்டனை அழுத்தவும் பல்சரிடம் இயக்க சப்தம்... சிறிது தூரம் சென்றவன் ஒரு ஓரமாக ஒதுங்கி தன் செல்போனை எடுத்தான். யாரிடமோ தொடர்பு கொண்டான். ‘‘சாரி... என்னால முடியாது! உங்க பணத்தை ரிவர்ஸ் பண்ணிடறேன். நான் உயிரோட வாழ விரும்பறேன்...’’ என்றான்.

17

தமிழ் தமிழ் என்றால் எப்படி அமுதம் வரும்? மனதுக்குள் கேள்வி முளைத்த நிலையில் 'தமிழ்... தமிழ்...' என்று வேகமாக உச்சரிக்க உச்சரிக்க, அது 'அமிழ்து' என்று செவிகளில் ஒலித்தது. தொடர்ச்சியான ஒலி வடிவம் வேகமெடுக்கும்போது 'அமிழ்து' என்றாகி அமுதமாகிறது. இதை யதார்த்தமாகவும் இயல்பாகவும் அமைந்துவிட்ட ஒரு விஷயமாகக் கருதாமல் ஒரு மகா விஷயமாகக் கருதுவது சரியா என்றுகூட கேட்கலாம்.

'மாரா' என்று தொடர்ந்து அழைத்தால் 'ராமா' என்றே அது ஒரு கட்டத்தில் எதிரொலிக்கும். வெற்றியைத் தவிர வேறு எதையும் பெற்றிராத கவிஞனை 'விகடகவி' என்பார்கள். இந்த வார்த்தை திரும்பிச் சொல்லும்போதும் அதே பொருள் தரும்.இதெல்லாம் சின்ன வியப்புக்கும, ரசிப்புக்கும் உரியவை மட்டுமல்ல. அதற்கும் மேலான ஆய்வுக்கும் உரியவை. என் போன்ற ஆய்வாளர்கள் இதைப் போன்ற சொற்களைப் பிளந்து பார்க்கப் பழக வேண்டும். ஏனென்றால் பல ரகசியங்கள் பெயருக்குள் ஒளித்து வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பெயர் ஆராய்ச்சியில் ஈடுபட்ட எண் கணித நிபுணர் ஒருவர், ஒருநாள் என்னைச் சந்தித்தார்.

'சார்... கடந்த ஒரு ஆண்டாக நாட்டில் நடந்த விபத்துகள் மற்றும் தற்கொலைகள் பற்றிய ஒரு கணக்கெடுப்பை நிகழ்த்தினேன். தினந்தோறும் செய்தித்தாளில் வந்த செய்திகளின் அடிப்படையில் இதைச் செய்தேன். ஒரு ஆயிரம் பேரை இம்மட்டில் பதிவு செய்துகொண்டேன். இந்த 1000 பேரும் இயற்கையாக சாகாதவர்கள்... எதிர்பாராமல், மிகுந்த

மனச்சுமையோடு இறந்தவர்கள்... இவர்களின் பெயர்களுக்குள் நான் ஒரு அதிசய ஒற்றுமையைப் பார்த்தேன்!'' என்றார். என்ன அது..?''

- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

மறுபுறம் ஒரு ஆழ்ந்தஅமைதி!

வர்ஷன் சற்றுப் பொறுமை இழந்தான்.

''சார்... நான் சொல்றது கேக்குதா? என்ன எந்த பதிலையும் சொல்ல மாட்டேங்கறீங்க?'' - என்று திரும்பத் தூண்டவும் மறுபுறத்தில் இருந்து பேச்சு ஒலித்தது.

''மிஸ்டர் வர்ஷன்... ஏன் இப்படிப் பேசறீங்க?''

''ஏன் பேசறேனா... நீங்க ரொம்ப விவரம் சார்!''

''என்ன சொல்றீங்க வர்ஷன்?''

''என்னத்த சொல்ல... காலப்பலகணியை எடுக்கறவங்க யாரா இருந்தாலும், அதிகபட்சம் 27 நாட்கள்ல இறந்துடுவாங்களாம். நான் சாக விரும்பல, போதுமா?''

''இது என்ன பைத்தியக்காரத்தனமான பேச்சு..?''

''பைத்தியக்காரத்தனமில்லை மிஸ்டர்... நிஜம்! நம்ப முடியாத நிஜம்...''

''எதை வச்சு சொல்றீங்க?''

‘‘ம்... அந்த வள்ளுவர் செத்துட்ட செய்தி அதிகபட்சம் 24 மணி நேரத்துல வரும். அப்ப தெரியும், நான் சொல்றது உண்மைன்னு!’’

‘‘அபத்தமா பேசாதீங்க வர்ஷன்! வள்ளுவர் சாவுக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அப்புறம், அவர் நல்லா இருக்கும்போது அவர் செத்துடுவார்னு சொல்றதும் சரியில்லை...’’

‘‘அப்ப நீங்க நேரா களத்துல இறங்குங்க... எனக்கு எதுக்கு 50 லட்ச ரூபாய் தரணும்? ஒரு தகரப் பெட்டிக்கும் சில ஏடுகளுக்கும் இந்த விலை ரொம்பவே அதிகம்னு நான் நினைச்சேன். அதுக்கு காரணம் இப்பல்ல புரியுது..!’’

‘‘மிஸ்டர் வர்ஷன்... நாங்க அதிர்வில்லாம செயல்பட விரும்பறோம். இந்த நிமிஷம் நாலு ரவுடிப் பசங்கள ஏவி விட்டா

விஷயம் முடிஞ்சிடும். ஆனா, பூப்பறிக்கிற மாதிரி, யாரும் இதை கவனிச்சிடாத மாதிரி நடந்துக்க விரும்பறதாலதான், ப்ரியாவோட காதலரான உங்களைத் தேர்வு செய்து நெருங்கினோம். நீங்க இந்த 50 லட்சத்தை சம்பாதிக்க எத்தனை வருஷம் ஆகும் தெரியுமா?’’

‘‘போதும் சார்... ரொம்ப புத்திசாலித்தனமா பேசறதா நினைப்பா? பணத்தைவிட உயிர் பெருசுன்னு தெரியாதா உங்களுக்கு?’’

‘‘அட என்ன நீங்க.... திரும்பத் திரும்ப ‘உயிர்... உயிர்...’னு அதையே பேசறீங்க? அதெல்லாம் மூட நம்பிக்கை!’’

‘‘நான் ஒண்ணும் காதுல பூ சுத்தின கிராமத்தான் இல்லை. இப்ப கிராமத்துலயே கூட அப்படிப்பட்ட மனிதர்கள் இல்லை மிஸ்டர். எனக்கும் நம்பிக்கை எது, மூட நம்பிக்கை எதுன்னு நல்லா தெரியும். ஏன்... உங்களுக்கும் தெரியும். அந்த வள்ளுவர் டெல்லில இருக்கற சதுர்வேதி பத்தியும் சொல்லிட்டார்.

காலப்பலகணி ஒண்ணும் மூடநம்பிக்கையை மையமா கொண்ட கண்மூடித்தனமான ஜோதிடமில்லை. அது ஒரு கணக்கு. அந்தக் கணக்கு எப்படிப்பட்டதுங்கறதை நானும் சரி, நீங்களும் சரி, விஞ்ஞானி காணாமப் போனப்பவே தெரிஞ்சிக்கிட்டோம். அடுத்து டெல்லியில நடந்த ஆட்சி மாற்றம்... ஆகையால காலப் பலகணி ஒரு அறிவுப் புதையல்! துரதிர்ஷ்டவசமா, அதை நெருங்கறவங்க செத்துடணும்ங்கற விஷயம் மட்டும் ஏன்னு புரியல. அப்படி இல்லேன்னா அந்தப் பலகணி பட்டவர்த்தனமாகி, இந்நேரம் அது கோஹினூர் வைரம் கடத்தப்பட்ட மாதிரி பல கைகள் கடந்திருக்கும். நாட்டை நிர்வகிக்கிற பிரதமர்களும், ஜனாதிபதிகளும் அதை அடையறதையே நோக்கமா வச்சு செயல்பட்டுக்கிட்டு இருப்பாங்க! அதை வச்சுதான் முக்கிய முடிவுகள் எடுக்கறதுங்கற நிலை

உருவாகியிருக்கும். அதனாலதான் மரணம்ங்கற பூட்டைக் கொண்டு அதை ஒளிச்சு வச்சிருக்காங்களோன்னு நினைக்கத் தோணுது எனக்கு...''

- வர்ஷன் சாலையோரம் என்றுகூடப் பார்க்காமல் படபடவென்று பேச, சிலர் அவனை ஒரு மாதிரி பார்த்தபடி சென்றனர். அவனும் சற்று குரலைத் தாழ்த்திக்கொண்டான். மறுமுனையில் சளைக்காத பதில்:

''வர்ஷன்... உங்களுடைய பல கருத்துக்களோட நாங்களும் ஒத்துப் போறோம். காலப் பலகணி ரகசியமா இருக்கறதுதான் சரி. இன்னும் சொல்லப் போனா, இது ஒரு பொய்யா இருந்தா எங்களுக்கும் ரொம்பவே சந்தோஷம். ஆனா, அதை நெருங்கறவங்க செத்துடுவாங்க என்கிற விஷயத்தை நிச்சயம் ஜெயிக்க முடியும். பலகணில அதுக்கு விடை இருக்கும்னு நம்பறோம்!''

''என்ன சார்... முதல்ல அதை மூடநம்பிக்கைன்னு சொல்லிட்டு இப்ப ஒத்து ஊதறீங்க. ஒரு விஷயம் தெரிஞ்சிக்குங்க... அந்தப் பெட்டி, அப்புறம் ஒரு சோழி... இதெல்லாம் கிடைச்சிட்டா மட்டும் பலகணி கிடைச்சிடாது. அதைத் தேடணும். அதைத் தேடறதும் ஒண்ணும் சாதாரண விஷயமில்ல! அதுக்கு சரித்திர அறிவு, விஞ்ஞான அறிவு, மொழி அறிவுன்னு பல விஷயங்கள் வேணும். மெக்கன்னாஸ் கோல்டுங்கற இங்கிலீஷ் படத்துல தங்கத்தை தேடிப்போன மெக்கன்னாஸ் மாதிரி நாமளும் தேடிப் போனா கிடைச்சிடும்கற ஒரு விஷயம் இல்லை இது. ஆராய்ச்சியாளர் கணபதி சுப்ரமணியன் போன்ற சிங்கங்களுக்கே இது ஒரு சவால்தான்!''

‘‘இதோ பாருங்க... இப்ப எதுக்கு இந்தப் பேச்செல்லாம்! நீங்க முடிவா என்ன சொல்றீங்க..?’’

‘‘என்ன விட்டுடுங்க... நீங்களும் இறங்காதீங்க. ஒதுங்கிப் போயிடுங்க. இல்ல, சாவு நிச்சயம்!’’

‘‘அப்ப வள்ளுவர் சாகப் போறது உறுதியா?’’

‘‘தயவுசெய்து அவர் இறந்த பிறகாவது புரிஞ்சிக்கிட்டு விலகப் பாருங்க. காலப் பலகணிங்கற ரகசியம் ரகசியமாவே இருக்கட்டும். இல்ல, அது எக்கேடோ கெட்டுப் போகட்டும். காலப் பலகணியை அடைஞ்சு அதனால வெற்றிகரமான ஒரு வாழ்க்கை வாழ முடியாதுங்கற ஒரு நிலை இருக்கும்போது எதுக்கு அது நமக்கு?’’

‘‘அப்ப கணபதி சுப்ரமணியன் சார் என்ன செய்யப் போறார்?’’

‘‘அவருக்கு இப்பதான் 65 வயசாகுது. அவர் 100 வயசு வரை நல்லா இருக்க விரும்பறார்... நிச்சயம் இதுல அவர் இறங்க மாட்டார்!’’

‘‘அப்ப வள்ளுவர் எதுக்கு அவர்கிட்ட அந்தப் பெட்டியைக் கொடுக்கணும்...?’’

‘‘வள்ளுவர் இந்த விஷயத்துல கொஞ்சம் தப்பு பண்ணிட்டார்னுதான் நான் சொல்வேன். உயிரைப் பொருட்படுத்தாம ஆராய்ச்சியாளர் களத்துல இறங்குவார்னு நினைச்சிருக்கலாம்...’’

‘‘அப்ப ஆராய்ச்சியாளர் ஒதுங்கிக்கப் போறாரா?’’

‘‘நிச்சயமா...’’

‘‘இதை நாங்க நம்பணுமா?’’

‘‘அது உங்க இஷ்டம்!’’

‘‘சரிங்க வர்ஷன். நீங்க பணத்தை ரிவர்ஸ் பண்ணிடுங்க. நாங்க பாத்துக்கறோம்...’’

‘‘வேற வழில முயற்சி செய்து அழிஞ்சு போகாதீங்க. ஒதுங்கிடுங்க. அதுதான் எல்லாருக்கும் நல்லது!’’

‘‘பை த பை... நாங்க முயற்சி செய்த விஷயத்தை நீங்களும் யார்கிட்டயும் சொல்ல வேண்டாம்!’’

‘‘இதுக்கு நான் உடன்பட்டதை ப்ரியா கேள்விப்பட்டா என்னைக் காறித் துப்பிடுவா... நீங்க இத பத்தி பேசாம இருந்தாலே போதும்!’’ - வர்ஷன் போனை கட் செய்தவனாக சட்டைக் காலரை தூக்கி விட்டுக்கொண்டான். ‘அப்பாடா’ என்கிற ஒரு பெருமூச்சோடு பைக்கை திரும்பக் கிளப்பினான்.

* * *

இரவு மணி பத்து!

விளக்குகளை அணைத்தபடி வந்த பத்மாசினி, கணபதி சுப்ரமணியன் அறைக்குள் பார்வையைச் செலுத்தினாள். கணபதி சுப்ரமணியன் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்தபடியே இருக்க, வள்ளுவர் படுத்திருந்தார். பிணம் போல விறைப்பாக மார்பு மேல்

இரு கைகளைக் கோர்த்துக்கொண்டு அவர் படுத்திருப்பதே அலாதியாக இருந்தது.

‘நம்மால் எல்லாம் இரண்டு நிமிடம்கூட அப்படிப் படுக்க முடியாது. ஒருக்களித்து விடுவோம்...’ அதைப் பார்த்தபடியே ஓசைப்படாமல் திரும்பினாள்.

அவளது படுக்கை அறைக்குள் நுழையும் முன் ப்ரியா அறையை ஒரு பார்வை... ப்ரியா எதையோ எழுதிக் கொண்டிருந்தாள். பத்மாசினி பார்க்கவும் ஏறிட்டாள்.

‘‘என்னம்மா?’’

‘‘தூங்கலையா?’’

‘‘தூங்கணும்... நீ போ!’’

‘‘துரத்தாதே... ஆமா, அந்த வள்ளுவர் பத்தி உங்கப்பா சொன்னதெல்லாம் உண்மையா?’’

‘‘இப்ப எதுக்கும்மா அந்தப் பேச்சு?’’

‘‘இது வாழற வீடு ப்ரியா... இங்க ஒரு உயிர் தேடி வந்து போகணுமா?’’

‘‘அப்படியெல்லாம் நடக்காதும்மா...’’

‘‘நடக்காதா... அவர் சொன்னபடி எல்லாமே நடந்திருக்கும்போது இது மட்டும் நடக்காதா..?’’

‘‘நடக்காதா இல்லை... நடக்கக் கூடாதும்மா!’’

‘‘அது எப்படிடி..?’’

‘‘நீ போ... நாளைக்குத் தெரியும் பார்!’’

‘‘அவர் நூறு வருஷம் நல்லா இருக்கட்டும். அவர் எதுக்கு இப்படி ஒரு நிலைல இந்த வீட்டுல இருக்கணும்?’’

‘‘தயவுசெய்து போம்மா... எல்லாத்தையும் நாம நாளைக்கு சாயந்தரம் நாலு மணிக்கு மேல பேசுவோம்...’’

‘‘வீடு பூரா கடிகாரத்தையெல்லாம் வேற திருப்பி வச்சிருக்கே. உன் தாத்தாவால இன்னும் என்னென்ன பாடோ?’’ - புலம்பியபடியே விலகினாள் பத்மாசினி. தன் படுக்கை அறைக்குள் நுழைந்தபோது லேசான மது வாடை. அனந்தகிருஷ்ணன் மது அருந்திய நிலையில் ஒரு மெல்லிய குறட்டையோடு...

‘‘நானும் குடிக்கறேன்... அப்பதான் எனக்கும் தூக்கம் வரும்...’’ என்றபடியே... ஆனால் குடிக்காமல் படுத்தாள்.அங்கே வர்ஷனும் சுருதி சேர்த்துக்கொண்டுதான் படுத்தான்!

* * *

மறுநாள்!

மாலை 4 மணி... ப்ரியா வீட்டு கடிகாரங்களில் மட்டும் 5 மணி...

வள்ளுவர் மௌனமாக தியானத்தில்... ப்ரியாவும், கணபதி சுப்ரமணியனும், அனந்தகிருஷ்ணனும், ஏன்... பத்மாசினியும் கூட அவர் அருகில்!

18

அந்த ஆயிரம் பெயர்களில் அப்படியென்ன பெரிய ஒற்றுமையை நீங்கள் உணர்ந்தீர்கள்?' என்று கேட்டேன். 'ஈஸ்வரம் என்கிற சப்தம் அந்தப் பெயர்களில் பிரதானமாக இருந்தது. குறிப்பாக முருகேஸ்வரன், பாண்டீஸ்வரி, முனீஸ்வரி, முருகேசன் என்கிற பெயர்களைச் சொல்லலாம்.

நீங்கள் வேண்டுமானால் பாருங்கள். இந்தப் பெயர்ப் பட்டியலைத்தான் பார்க்க வேண்டும் என்றில்லை. இனி எதிர்காலத்தில் வரும் விபத்துச் செய்திகளைப் பார்த்துக்கூட இதை உணரலாம். இன்றுகூட ஒரு முருகேஸ்வரி குத்திக் கொல்லப்பட்டிருக்கிறாள்!' என்றார். என்னால் அவர் கருத்தை மறுக்கவும் முடியவில்லை; ஏற்கவும் முடியவில்லை.

'என்னடா இது, நியூமராலஜிக்குப் போய்விட்டானே என்று எண்ணாதீர்கள். பெயரின் சப்தத்துக்கும் ஒட்டுமொத்த வாழ்வுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உள்ளது. பொருந்தும் சப்தம், பொருந்தாத சப்தம் என்று அது இரண்டு விதமாக உள்ளது. பொருந்தாத சப்தத்தை பொருந்தும் சப்தத்துக்கு மாற்றிக்கொள்ளும்போது வாழ்வும் மாறிவிடுகிறது.

என் ஆய்வில் பெரிய வெற்றி கண்ட பிரபலமானவர்களில் 70 சதவீதத்தினர் பெயர் மாற்றம் செய்து கொண்டவர்களே!' என்று தொடர்ந்தார்.'அப்படியே ஊர்ப் பெயருக்கும் அங்கு வாழ்கிறவர்களுக்கும்கூட தொடர்பு உள்ளது. எல்லோராலும் எல்லா ஊரிலும் சந்தோஷமாக வாழ்ந்துவிட முடியாது' என்று சொல்லிக்கொண்டே வந்தவர், 'இன்னும் 20 வருடங்களுக்குள் தமிழகத்தின் தலைநகர் தகுதியை சென்னை இழந்துவிடும். இயற்கையே இதைச் செய்து தரும். மதுரை தலைநகரமாக மாறியே தீரும்' - என்று ஜோதிடர் போல பேசத் தொடங்கிவிட்டார்.

ஒரு ஆய்வாளன் நான்! மண்ணைத் தோண்டி பழம்பொருட்களைத் தேடுவது மட்டுமா என் பணி? காலத்தோடு கரைந்துபோன வரலாற்றை உள்ளது உள்ளபடி தெரிந்துகொள்ள முயல்வதும்தானே? கரைந்துபோன காலம் தன் அடையாளங்களை தடயங்களாகத்தான் விட்டுச் சென்றுள்ளது. அந்தத் தடயங்கள் பொன்னாக, பொருளாக, கல்லாக, மண்ணாக மட்டுமே இருக்கும் என்பது குறுகிய பார்வை.

கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், செவிவழிக் கதைகள், ஊர்களுக்குள் காலம் காலமாய் நிலவி வரும் நம்பிக்கை சார்ந்த விஷயங்கள், ஊருக்கு ஊர் மாறுபடும் பழக்கவழக்கங்கள் என்று சகலத்திற்குள்ளும் வரலாறு புதைந்து கிடக்கிறது. அதை நொறுங்கி விடாதபடி, உண்மை கெடாதபடி தோண்டி எடுப்பதில்தான் வெற்றி உள்ளது. அதற்கான பயணத்தில் சப்த ஆராய்ச்சி செய்யும் இந்த நண்பர் போலவும் சிலர்... ராமாயணத்தை 'வான் கணிதம்' என்று சொன்ன நண்பர் போல சிலர்... சொல் ஆய்வு, பொருள் ஆய்வு என்று செய்வோர் சிலர். இவர்களை எல்லாம் சந்திக்கத்தான் வேண்டியுள்ளது.

இவர்களில் ஒருவர் என்னிடம் ‘மணிமேகலை வைத்திருந்த அமுதசுரபி பொய்யா, மெய்யா’ என்று ஒரு கேள்வி எழுப்பினார்!”

- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

வள்ளுவர் பாய்மீது ஒரு தவசியைப் போல அமர்ந்த நிலையில் தன்னையே மறந்திருந்தார். மணி நான்கைக் கடந்துவிட்ட நொடிகளில் அந்த வீட்டின் அனைவரது கைக்கடிகாரங்களிலும் ஒரு மணி நேரம் கூடுதலாகவும் காட்டிக்கொண்டிருக்க, “அங்கிள்” என்று வள்ளுவரின் தியானத்தைக் கலைத்தாள் ப்ரியா.

அவர் தியானம் கலையவில்லை.

“அங்கிள்” - என்று தோளைத் தொட்டு உசுப்ப வேறு செய்தாள். எல்லோரும் சற்று பயந்தார்கள். வள்ளுவர் சொன்ன மரணப் புள்ளிக்கு இன்னமும் இரண்டு நிமிடங்கள்கூட இல்லை. அவர் சொன்னபடியே சொல்வதானால் 4 மணி 2 நிமிடத்துக்கு மேல் மூன்று நிமிடத்துக்குள் எந்த நொடி வேண்டுமானாலும் அவர் உயிர் பிரியலாம்.அப்படி இருக்க, ப்ரியா தொட்டு அவர் அப்படியே சுருண்டு விழுந்துவிடப் போவதுபோல பத்மாசினி கற்பனை செய்து பார்த்தாள். ஆனால் அப்படியெல்லாம் ஆகவில்லை.

வள்ளுவர் கண் திறந்தார். ப்ரியா அவருக்கு சுவர்க் கடிகாரத்தைக் காட்டினாள். அதில் மணி மிகச்சரியாக 5 மணி இரண்டு நிமிடம்!

‘‘அங்கிள்... நீங்க சாகலை! நீங்க சொன்ன நேரம் கடந்து ஒரு மணி நேரமாகுது. உங்களுக்கு இனியும் எதுவும் ஆகாது’’ என்றாள்.வள்ளுவர் முகத்திலும் ஆச்சரிய சலனம்! ப்ரியாவை மட்டுமல்ல, அங்குள்ள அவ்வளவு பேரையும் ஆச்சரியத்தோடு பார்த்தார்.

‘‘உங்க ஜோசியக் கணக்கு உங்க வரையில பொய்யாகிடுச்சு அங்கிள். நீங்கதான் சொல்லியிருக்கீங்களே... ‘என் ஜோசியம் பலிச்சா 100 சதவீதம் பலிக்குது, இல்லைன்னா சுத்தமா பலிக்க மாட்டேங்குது’ன்னு... உங்க ஜோசியம் உங்க வரைல பலிக்கலைன்னுதான் எடுத்துக்கணும். என் நம்பிக்கை மட்டும் துளியும் வீண் போகலை’’ என்று முகமெல்லாம் ஜொலிக்க எல்லோரையும் பார்த்தாள்.

வள்ளுவரிடம் ஒரு ஆழ்ந்த அமைதி. திரும்ப கடிகாரத்தைப் பார்த்தார். அது, 5.03ஐயும் கடந்துவிட்டிருந்தது. நிஜமாலுமே அவரது மரணப்புள்ளியை அவர் கடந்துவிட்டார். உண்மையில் 4.03 என்ற அவர் கணித்த நேரத்தைக் கடந்து அவர் உயிரோடுதான் இருக்கிறார்.ஆனாலும் பத்மாசினியிடம் பதற்றம் அப்படியேதான் இருந்தது. கணபதி சுப்ரமணியமும் இந்த நேரம் மிகச்சரியான நேரம்தானா என்கிற சந்தேகத்தோடு டி.வியை ஆன் செய்து நியூஸ் சேனல் ஒன்றின் டிஜிட்டல் டைமரைப் பார்க்க, அதில் 4.05 ஆகியிருந்தது.

‘‘தாத்தா... நீங்க இனியும் சந்தேகப்படத் தேவையே இல்லை. இனி அங்கிளுக்கு ஒரு பிரச்னையுமில்லை. கடிகாரத்தை எல்லாம் நாம திருப்பி வைப்போம். அங்கிள் மூன்று மணிக்கே தியானத்துல உக்காந்துட்டதால நாம் ஒரு மணி நேரம் அட்வான்ஸ் பண்ணி வச்சது நமக்கு பெருசா யூஸ் ஆகலை. இருந்தாலும் அஞ்சு மணி ஆயிடுச்சுனு அவரை நினைக்க வெச்சு, அந்த மரண நினைப்பில் இருந்தும், அவர் உறுதியா நினைச்ச பொய்யான நம்பிக்கைல இருந்தும் அவரை மீட்டு எடுத்துட்டோம்’’ என்று ப்ரியா தொடர்ந்து உறுதியாகப் பேசினாள்.

வள்ளுவரும் அதை ஒப்புக்கொள்வதுபோல ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டவராக... ‘‘அம்மாடி! நீ சொன்னதுதான் உண்மை. என் ஜோசியம் எனக்குப் பலிக்கலை. என் கணக்குல எங்க தப்பு விட்டேன்னு தெரியலையே..?’’ என்று கையைச் சொடுக்கினார்.

‘‘அங்கிள்! உங்க கணக்கை நீங்க அப்புறமா போட்டுக்குங்க. நான் சொல்றேன், உங்களுக்கு நூறு வயசு...’’

‘‘வேண்டாம்மா... நூறு வயசெல்லாம் யாருமே இந்த மண்ணுல வாழ வேண்டாம். உடம்புல தெம்பில்லாம, கண் பார்வை மங்கிப் போய், காதும் செயலிழந்து, ஆயுசோட மட்டும் இருந்து என்ன புண்ணியம்? அதிகபட்சம் 75 வயது வாழ்ந்தா போதும்!’’

‘‘சரி... இப்ப அந்தப் பேச்சையும் விடுங்க. இந்தக் காலப் பலகணி மேட்டருக்கு வருவோம். நீங்க என்ன செய்யப்போறீங்க?’’

‘‘உன் கேள்வியே எனக்குப் புரியலியேம்மா...’’

‘‘இல்ல... இதன் மேல உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கா?’’

‘‘ஓ... என் உயிர் போகலன்னதும், உடனே உனக்கு இதன் மேலயும் சந்தேகம் வந்துடுச்சா?’’

‘‘அப்படியெல்லாம் இல்லை... உங்க உயிர் பிரியும்னு காலப் பலகணி சொல்லலை. நீங்கதான் உங்க ஜோசியப்படி சொன்னீங்க... ஆனா, உங்க கருத்துப்படி இந்தப் பலகணியைத் தேடிக் கண்டுபிடிக்கறவங்கதான் 27 நாள்ல இறந்து போறாங்க.

அதன்படி பார்த்தா இன்னும் இங்க யாரும் அதுக்கு எந்த ஸ்டெப்பும் எடுக்கலை. நீங்ககூட இறந்து போயிடுவேன்னு நம்பினதாலதான் என் தாத்தாகிட்ட இந்தப் பெட்டியை ஒப்படைச்சீங்க. ஆனா, நீங்க இப்ப உயிரோட இருக்கீங்க. இந்த நிலைல, அந்தப் பெட்டியில் உள்ள குறிப்புகள்படி சோழி, காம்பஸ் எல்லாம் பயன்படுத்தி அந்தப் பலகணியைத் தேடப் போறீங்களா? இல்லை, தாத்தாகிட்ட ஒப்படைச்சது ஒப்படைச்சதுதானா?’’

ப்ரியா மிக பாய்ன்ட்டாகவே கேட்டாள். வள்ளுவர் சற்று யோசித்தவராக வாய் திறந்தார்.

‘‘இந்த விஷயத்துல நான் அய்யாவோட முடிவுக்குக் கட்டுப்படறேன். அவர் தேடிக் கண்டுபிடிக்க விரும்பினா கண்டுபிடிக்கட்டும்... இல்ல, அது ஆத்துலயோ குளத்துலயோ விழட்டும்!’’

‘‘இப்படிச் சொன்னா எப்படி? ஒரு விஞ்ஞானப் புதையல்னு இந்த காலப் பலகணியை வர்ணிச்சுட்டு, ஆத்துல, குளத்துலகூட தூக்கிப் போடலாம்னா எப்படி?’’

‘‘அம்மாடி... இது எங்க வீட்ல பல வருஷங்களா இருக்கறதே தெரியாம இருந்தது. அப்படி இருந்தவரை ஒரு குழப்பமும் இல்லை. எப்ப பரண் மேல இதைப் பார்த்து நான் வெளிய எடுத்தேனோ, அப்ப ஆரம்பமாச்சு குழப்பம்! அதுக்கு தோதா எனக்கு நானே ஆயுளைப் பரிசோதிச்சு, இன்னிக்கு இறந்துடுவேன்ங்கற கணக்கையும் போட்டேன். ‘சாகப் போற நேரத்துல இது கையில கிடைச்சிருக்கே... இப்ப எதுக்கு இது என் கைல கிடைக்கணும்?’ இப்படி யோசிச்சதாலதான் இதுல இருக்கற குறிப்புகள்படி நடந்தது, நடக்கப் போறதை எல்லாம் நான் வெளியே சொன்னேன். அது டெல்லி வரை தாக்கத்தை ஏற்படுத்தும்னு சத்தியமா எதிர்பார்க்கலை.

‘காரணமில்லாம காரியமில்லை’ங்கறது ஒரு நல்ல சொலவடைம்மா... அதன்படி பார்த்தா, இந்த நொடி உங்க வீட்ல உக்காந்துக்கிட்டு இதைப் பத்தி எல்லாம் சிந்திச்சுப் பேசற வரை நான் வந்துட்டேன். அப்ப இதுக்கெல்லாமும் ஒரு சரியான காரணம் இருக்கணும்தானே?’’

‘‘என் கேள்விக்கு இதுவா பதில்... எங்கெங்கேயோ போயிட்டீங்களே அங்கிள்!’’

‘‘எங்கேயும் போகலம்மா... தெளிவாத்தான் பேசிக்கிட்டு இருக்கேன். நான் என் ஆயுள் பற்றி ஒரு தப்புக்கணக்கு போடணும். அப்படி போட்டாதான் உங்க தாத்தாவான இவர்கிட்ட வரமுடியும். அப்படி ஒரு தப்புக்கணக்கை போட வச்சதும் விதிதான்.

அதுதான் உங்களை எல்லாம் காட்டி என்னைப் பேச வச்சிக்கிட்டிருக்கு. தெரிஞ்சோ தெரியாமலோ, இந்தக் காலப் பலகணி பற்றி உங்களுக்கும் தெரிஞ்சு போச்சு. வெளிய ஒரு கூட்டத்துக்கும் இதைப்பற்றி தெரியும். ஆக மொத்தத்துல விரல் விட்டு எண்ண முடிஞ்ச நபர்களுக்குத்தான் இப்ப இது தெரியும்.

மற்றபடி இதைப் பத்தி துளிகூட இந்த உலகத்துக்குத் தெரியாது. தெரிய வந்தா நிச்சயம் பெரிய அளவுல விபரீதம் உருவாயிடும். ஆளுக்கு ஆள் இதைக் குறி வச்சா அவ்வளவுதான்! ஆகையால இப்ப நாம எடுக்கப்போற முடிவு சரியானதா, தெளிவானதா இருக்கணும்!’’ - வள்ளுவர் ஒரு வழியாக தன் கருத்தைச் சொல்லி முடித்தார்.

‘‘போதும்... எங்க நீங்க செத்துப் போய் இந்த வீட்ல பிணம் விழுந்துடுமோன்னு நான் பயந்துகிட்டே இருந்தேன். நல்லவேளை... தப்பிச்சோம்! இந்தப் பலகணி, தலகாணின்னு எந்த கருமாந்தரமும் வேண்டாம். இதை எடுத்துக்கிட்டு கிளம்புங்க. இதைத் தூக்கிப் போடறதும் போடாததும் உங்க விருப்பம். எங்கள இதுல கூட்டு சேர்த்துக்க வேண்டாம். நல்ல நேரத்துல புறப்படுங்க!’’ - அதுவரை மௌனமாக இருந்த பத்மாசினி, ஒரே போடாகப் போட்டாள்.

கிட்டத்தட்ட அனந்தகிருஷ்ணன் எண்ணமும் அதேதான். எனவே, மனைவியை ஒப்புதலோடு பார்த்தார்.

வள்ளுவர் அதைக் கேட்டு கோபப்படாமல் சிரித்தார். ஆனால் கணபதி சுப்ரமணியனையே பார்த்தபடி இருந்தாள் ப்ரியா. அவரும் ஒரு முடிவோடு அவளைத்தான் பார்த்தார்.

‘‘என்ன தாத்ஸ்... அம்மா புலம்பியதைக் கேட்டீங்களா... என்ன செய்யப் போறீங்க?’’

‘‘உங்கம்மா கிடக்கறாம்மா... எனக்கு இது அபூர்வமான வாய்ப்பு - என்ன சொல்றே?’’

‘‘நான் நினைச்சதை சொல்லிட்டீங்க...’’

‘‘என்ன நினைச்சதை சொல்லிட்டீங்க? இதைக் கண்டுபிடிக்கறவங்க 27 நாள்ல செத்துடுவாங்கன்னும் சொல்லியிருக்கார். உன் தாத்தாவை சாகச் சொல்றியா?’’ - பத்மாசினி விடுவதாயில்லை.

‘‘அம்மாடி மருமகளே! முதல்ல அந்தப் பலகணி கிடைக்குதான்னு பார்ப்போம். அப்புறம் என் சாவைப் பற்றி யோசிக்கலாம். அர்த்தமில்லாம நூறு வருஷம் வாழறதைவிட அர்த்தத்தோட நூறு மணி நேரம் வாழறது போதுமானது!’’- என்றார் தீர்க்கமாக.

‘‘அப்ப நான் புறப்படறேன். என் உதவி இந்த விஷயத்துல எப்ப தேவைப்பட்டாலும் சொல்லுங்க... முடிஞ்சதை செய்யறேன். ஒரு விஷயத்தை மட்டும் அழுத்தமா சொல்லிக்கறேன். இது மாயமோ, மந்திரமோ இல்லை. உலகம் உருண்டைன்னு கண்டுபிடிச்ச மாதிரி,

வருஷத்துக்கு 365 நாள்தான்னு வகுத்த மாதிரி, மாசம், வாரம், நாள், கிழமை, மணி, நிமிஷம் நொடின்னு காலத்துக்கு ஒரு அடையாளத்தை உருவாக்கிய மாதிரி, இதுவும் ஒரு விஞ்ஞான விஷயம்தான்.

நம் ஒவ்வொருவர் மேலயும் ஒரு காலக்கணக்கு இருக்கு. பிறக்க ஒரு நேரம் மாதிரி, இறக்கவும் ஒரு நேரம்! ஆனா, அது எப்போ எனத் தெரியாது. தெரியாததை தெரிஞ்சுக்க நிச்சயம் ஒரு வழிமுறை இருந்தே தீரணும். நமக்கு அது தெரியலைங்கறதால, அதை 'இல்லவே இல்லாத ஒண்ணு'ன்னு சொல்லிட முடியுமா? இப்படிப்பட்ட கேள்விகள்தான் விடையை நோக்கிப் பயணிக்க வைக்குது.

ஒவ்வொரு விஞ்ஞானியும் இப்படிக் கேட்டுக் கேட்டுத்தான் தங்களோட இலக்கை அடைஞ்சாங்க. இந்தக் காலப் பலகணியை ஒரு கணக்குப் பெட்டகமா கருதி தேடிக் கண்டுபிடிங்க. வரலாறுல நம்ம பெயர் மட்டுமில்ல... நம்ம முன்னோர்கள் பெயரும் பதிவாகட்டும். நம்ம நாட்டை ஞான பூமின்னு சொல்றதை நாம இந்த காலப் பலகணி கொண்டு நிரூபிப்போம்!'' என்று ஒரு சொற்பொழிவே நிகழ்த்திய வள்ளுவர் புறப்பட்டார்.

''அய்யா, உங்கள உங்க வீட்ல நானே கொண்டுபோய் விடறேன்'' எனும்போது வர்ஷன் வந்து நின்றான். ஆச்சரியம், அதிர்வு என்று இரண்டும் கலந்த கலவையாகப் பார்த்தான்.

''என்னடா பாக்கறே... என் நம்பிக்கை வீண் போகல. உடனே 'எல்லாமே பொய்'ங்கற மாதிரி நினைக்காதே. வள்ளுவர் ஜோசியம் அவருக்குப் பலிக்கலை. தப்புக் கணக்கு போட்டுட்டார்!'' என்றாள் ப்ரியா.

“இது தப்புக்கணக்கு இல்ல ப்ரியா. இதுதான் சரியான கணக்கு!” - என்று கவிதையாகத் திருத்தினான்.

“சரி, வா! இவரை இவர் வீட்ல கொண்டுபோய் விட்டுட்டு வருவோம்!” - என்று புறப்பட்டாள்.வாசல் நோக்கிச் செல்லும்போது வேலைக்காரி முத்தழகு ஒரு தினுசாகப் பார்த்தாள். அவளுக்கும் அவர் செத்துவிடுவார் என்பது தெரிந்திருந்தது.

சாகாமல் சிரித்தபடி இவர் செல்வது எப்படி என்று தெரியவில்லை. இதைப் பற்றி பேசினால் ‘ஒட்டுக் கேட்கறியா?’ என்று கோபிக்கலாம். எனவே, மௌனமாக வெறித்தாள். கார் வெளியேற, ‘இரண்டு நாளா இந்தக் கிழவன் இந்த வீட்டை ஒரு மாதிரி ஆக்கிட்டான்’ என்று வாட்ச்மேன் தங்கவேலு முணுமுணுத்துக்கொள்ள, முத்தழகுவிற்கு ஒரு போன் வந்தது.

19

சிலப்பதிகாரத்து மணிமேகலை வசமிருந்த அமுதசுரபி ’பொய்யா? மெய்யா?’ என்று கேட்ட அந்த அன்பரை நான் ஆழ்ந்து பார்த்தேன். அவரோ ‘பதில் கூறுங்கள்... பொய்யா? மெய்யா?’ என்று திரும்பவும் கேட்டார்.எனக்கு எப்படித் தெரியும்..? சிலப்பதிகாரம் ஒரு சமண இலக்கிய நூல் என்பதுதான் எனக்குத் தெரியும். இளங்கோவடிகள் எழுதியது என்பதும் தெரியும். அது உண்மையா, பொய்யா என்று கேட்டால் என்ன சொல்ல?

இதே கேள்வியை ராமாயணம், மகாபாரதம் பற்றியும் கேட்கலாம். இதிகாசங்களை, புராணங்களை பொய் என்று

கூறுபவர்கள் ஒருபுறம்; ‘இல்லையில்லை... மெய்’ என்று நம்புபவர்கள் மறுபுறம்... இதில் நான் எந்தப் பக்கம்? எனக்கு நானே கேட்டுக்கொண்டேன். என் சிந்தனையை உசுப்பியும் விட்டேன். ஒரு ஆய்வாளனாக அரிய பல தடயங்களைக் கண்டவன் என்ற முறையிலும், பூகோள ரீதியாக நிலப்பரப்புகளை இன்று துல்லியமாக அளந்து பார்க்க முடிந்ததை வைத்தும் பார்த்தால் நிச்சயம் இவை கற்பனையாக இருக்க வாய்ப்பு மிகவும் குறைவு. மெய்யாக இருக்கவே வாய்ப்பு அதிகம் என்கிற முடிவுக்கும் வந்தேன்.

என் முடிவை சரியானது என்று நான் நிரூபிக்கவும் வேண்டும். அதற்கான தடயங்கள் மற்றும் என் வாதங்களே அதை நிரூபிக்கும். தடயங்கள் என்று பார்த்தால் கண்ணகி வாழ்ந்ததற்கான அடையாளம் இருக்கிறது. இன்றும் தமிழக எல்லையில் ஒரு மலை மேல் அவளுக்கான கோயில் வழிபாட்டில் உள்ளது. சிலப்பதிகாரம் சுட்டிக் காட்டிய ஊர்கள் எல்லாமும் இன்றும் உள்ளன. பாண்டிய மண்ணும் சரி, சோழ மண்ணும் சரி, மற்றுமுள்ள பல்லவ ராஜ்யமும், சேர மண்ணும் பௌத்த, சமண சமயத்தவர்களால் அவ்வப்போது ஆளப்பட்டவை என்பதற்கான தடயங்கள் மிகவே உள்ளன.

காலத்தை வென்று நிற்பவை சிற்பங்களும் அதன் கூடங்களும்தான். அழியாத எழுத்துக்கள் என்றால் அவை கல்வெட்டுக்கள்தான்! இவற்றில் எல்லாம் ஆதாரங்கள் நிரம்பியுள்ளன.அடுத்து காகிதம் என்கிற ஒன்று கண்டறியப்படாத நிலையில் பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு கற்பனையான ஒன்றைப் படைக்க அன்று தேவை இருந்ததா என்பது எனது பிரதான கேள்வி.

கற்பனையான ஒன்றை ஒருவன் படைப்பதன் நோக்கமே, அந்தக் கற்பனை ஊரில் எல்லோரையும் அடைந்து அவர்கள் அவனைப் பாராட்ட வேண்டும் என்பதற்காகத்தான்! அப்படி இருக்க ஒரு பனை ஓலைக்கட்டை எப்படி ஊர் முழுக்க ஒருவர் வாசிக்கத் தர முடியும்? எனவே கற்பனைப் படைப்பு என்பது அடிபட்டுப் போகிறது. வரலாறாக இருந்தாலே, கட்டாயம் இதைப் பதிவு செய்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று கருதினாலே, ஏடுகள் உருவாகும். எனவே சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஏனைய காப்பியங்களும் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்களே என்று முடிவு செய்த நான் அமுதசுரபியும் நிச்சயம் இருக்க வேண்டும் என்றும் நம்புகிறேன். என்றால் இப்போது அது எங்குள்ளது?''

- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அலறல் சப்தம் கேட்டு எல்லோரும் ஓடி வந்தனர். அதில் அந்த எலெக்ட்ரீஷியனும் இருந்தான். அவர்கள் எதிரில் முத்தழகு கரிக்கட்டையாக துடித்துக் கொண்டிருந்தாள். எலெக்ட்ரீஷியன் உடனேயே பின்னங்கால் பிடரியில் பட வாசல்புறம் ஓடினான். அங்கே மெயின் ஸ்விட்ச்சை ஒட்டுமொத்தமாக அணைத்தான்.

அணைத்துவிட்டு வந்தவனை அனந்தகிருஷ்ணன் அசாத்யமாக வெறித்தார்.

''ஏய்யா... நீ வேலை பாக்கற லட்சணம் இதானா? இப்பப் பார்...'' என்று வெடித்தார்.

பத்மாசினிக்கு உடம்பு நடுங்க ஆரம்பித்து விட்டது.



‘‘குடுகுடுப்பைக்காரன் சொன்ன மாதிரியே ஆயிடுச்சே... ஐய்யோ!’’ என்றாள்.

‘‘வாய மூடு... ஏய், இவ உடம்புல இன்னும் உயிர் இருக்கு. முதல்ல ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகற வழியைப் பாரு...’’ - என்று கணபதி சுப்ரமணியன் எலெக்ட்ரீஷியனைப் பார்த்தார்.

அவனிடம் முத்தழகுவை தொட்டுத் தூக்க தயக்கம்.

‘‘என்ன பாக்கறே... நீதான் இவ இப்படி ஆக காரணம். இவளைக் காப்பாத்தியே தீரணும். இல்லன்னா கொலை கேஸ் ஆயிடும்...’’ என்று அனந்த கிருஷ்ணனும் சேர்ந்து அலற, அவன் அவளை நெருங்கித் தொட்டான். உடம்பின் ஒரு பாகம் தோசை போல வெந்து விரல்கள் தீய்ந்து விட்டிருந்தன. வாட்ச்மேன் தங்கவேலுவும் வந்து வாயைப் பிளந்துகொண்டு நின்றான்.

‘‘தங்கவேலு... அவனுக்கு ஹெல்ப் பண்ணு. அனந்தா காரை எடு. நேரா ஜி.ஹெச்சுக்கு போயிடுங்க. ஷாக்குங்கறதால பெருசா என்கொயரி இருக்காது. நீ போறதுக்குள்ள நான் சீஃப் டாக்டருக்கு போன் பண்ணி பேசிடறேன். அநாவசிய தொந்தரவோ தேக்கமோ எதுவும் இருக்காது!’’ - என்றபடியே கணபதி சுப்ரமணியன் ஒதுங்கினார்.

பத்மாசினியின் அகண்ட விழிகள் மட்டும் சுருங்கவேயில்லை.

* * *

வள்ளுவரின் ஓட்டுக் கூரை வீடு!

வெளியே அவர் பேரன் விளையாடிக் கொண்டிருந்தான். உள்ளே வள்ளுவரின் மனைவி, மகன் மற்றும் மருமகள். வள்ளுவர் வரவும் அவர் மனைவி தாட்சாயிணி நெற்றி யில் தெரிந்த பெரிய சைஸ் பொட்டோடு ‘வந்துட்டீங்களா?’ என்பது போல பார்த்தாள். வள்ளுவரும் அந்த வீட்டைப் புதிதாய்ப் பார்ப்பது போல ஒரு பார்வை பார்த்தார்.

‘‘நீங்க இப்படி திரும்பி வருவீங்கன்னு எதிர்பார்த்திருக்க மாட்டாங்க... இல்ல..?’’ - என்று கேட்டாள் ப்ரியா. அது வள்ளுவரின் மனைவியை உசுப்பிவிட்டது.

‘‘ஐயோ... என்ன சொல்லுதுங்க இந்தப் பொண்ணு..? யாருங்க இது? எதுக்காக எங்களை அவசரமா மலையை விட்டு வரச் சொன்னீங்க..?’’ - என்று ஒரு கேள்விக்கு மூன்று கேள்விகளைக் கேட்டாள்.

‘‘சொல்றேன் தாட்சா... நீ அநாவசியமா பதற்றப்படாதே!’’ என்றவர், அவர் எதிரில் வந்து நின்று சிரித்த பேரனைப் பார்த்தார். அவன் வெறித்தான்.

‘‘வாடா இங்க... முட்ட முழிப் பயலே!’’ என்று அவன் பெரிய விழிகளை ரசித்தபடியே அழைத்தார். அப்போது அவர் மருமகளின் பழங்கால நோக்கியா செல்போனில் ‘தோத்திரம் பாடிடுவேன்’ எனும் ரிங்டோன் ஒலித்திட, பேரனே ஓடிப் போய் எடுத்து ஆன் செய்து, ‘‘ஹலோ... யார் வேணும்?’’ எனக் கேட்டான்.

அவனது வேகம், நடை, நிற்கும் விதம் என்று சகலத்திலும் பால்யத்துக்கே உண்டான லாவண்யங்கள்.

‘‘யாருடா?’’ என்று கேட்டபடி அவனிடமிருந்து போனை கொஞ்சம் வேகத்தோடு வாங்கினாள் அவர் மருமகள். காதையும் கொடுத்தாள். பின் பேசினாள்.

‘‘நாங்க நாளைக்கே வந்துடுவோம். எல்லாரும் வேதாகம வகுப்புக்கு கட்டாயம் வந்துடணும். யாரும் விடுபடக் கூடாது. ஆமா சர்ச்சோட ஸ்பீக்கரை ரிப்பேர் பண்ணிட்டாங்களா?’’ என்று அவள் பேச்சில் ப்ரியாவுக்கும் ஒரு பதில் இருந்தது.

‘‘நீங்க கட்டாயம் வரணும்னு சொல்லவும் போட்டது போட்டபடி வந்தோம். ஜெயமணிக்கு பைபிள் வகுப்பு வேற இருக்குது. அதை சூசை மாணிக்கத்துகிட்ட ஒப்படைச்சிட்டு வந்துருக்கோம்’’ - என்றாள் தாட்சாயிணி.

‘‘சரிம்மா... நீங்க எப்ப கிளம்பணுமோ கிளம்புங்க. நான் முடிஞ்சு போயிட்டதா நினைச்சுட்டேன். அதான் உங்கள தொந்தரவு

பண்ணிட்டேன். இனி எனக்கு எதுவுமில்லை. கண்டம் கடந்தா குண்டம்னு சொல்வாங்க.

குண்டம்னா 12 வருஷம்னு ஒரு கணக்கு உண்டு. நான் நிச்சயம் 12 வருஷம் நல்ல படியா இருப்பேன்..!'' வள்ளுவரின் பதிலைத் தொடர்ந்து மருமகள் முகத்தில் ஒரு கோப உணர்வு உருவானது தெரிந்தது.

''இந்த ஜோசியத்தை மூட்டை கட்டுங்கன்னா கேக்கறீங்களா? நமக்கு எப்ப எதைத் தரணும்னு கர்த்தருக்கு தெரியும். 'உன் முடிவு என்னால் முன்பே தீர்மானிக்கப்பட்டது. அதை நீ அறிய முற்படுவது தகாது'னு வேதத்துல சொல்லப்பட்டிருக்கு. அப்படி இருக்க எதுக்கு இந்த வேண்டாத வேலை?'' என்றாள் ஜெயமணி என்கிற அவள்.

வள்ளுவர் அவர் கேள்வி முன் அசமந்தமாய் சிரித்தார்.வார்த்தைகளில் பதில் சொல்ல அவர் முனையவேயில்லை. ப்ரியா கவனித்தபடியே இருந்தாள். வள்ளுவர் எப்போதெல்லாம் இது போல சிரித்தார் என்று வேகமாய் ரீவைண்ட் செய்தும் பார்த்தாள்.'இவர்களிடம் பேசுவதால் பயனில்லை' என்கிற எண்ணம் ஏற்படும்போதெல்லாம் அதை சிரிப்பில் அவர் வெளிப்படுத்துகிறார் என்பது அவளுக்கும் புரிந்தது.

''சரிம்மா... நீ கிளம்பு!'' - என்று ப்ரியா பக்கம் திரும்பியவரை ப்ரியாவும் சிரித்தபடி பார்த்தாள்.

''நீ வழக்கமான பொண்ணு இல்லம்மா. சில விசேஷங்கள் உங்கிட்ட இருக்கு'' என்றார் அவள் சிரிப்பை ரசித்தபடி..!

‘‘விசேஷம்னு நீங்க எதைச் சொல்றீங்க அங்கிள்’’ - என்று ப்ரியாவும் கேட்க, அவள் தோள் மேல் வாஞ்சையாக கை போட்டவராக வாசற்புரம் நடந்தபடியே பேசினார் வள்ளுவர்.

‘‘அம்மாடி... நீ உன் அடிமனசை ரொம்பவே நம்பறே. அது எப்பவும் ஆத்மாவோட தொடர்புலயே இருக்கற ஒண்ணு. அதோட தொடர்புல நீ இருக்கறது ரொம்ப நல்ல விஷயம்!’’

‘‘அப்ப ஆத்மாங்கறது உண்மையா அங்கிள்!’’ - வெடுக்கென்று கேட்டாள் ப்ரியா.

‘‘அப்ப நீ சந்தேகப்படறியா?’’

‘‘நிறையவே...’’

‘‘உண்மை பேசறே! அதுவரையில் சந்தோஷம்! சரி... சந்தேகப்பட்டுக்கிட்டே இரு. ஒருநாள் அதுக்கு விடை கிடைச்சு தெளிவு ஏற்பட்டுடும்...’’

‘‘தெளிவை உங்களால ஏற்படுத்த முடியாதா?’’

‘‘முடியவே முடியாது... ஒரு விடை மௌனத்துல இருக்கும்போது, வார்த்தைகள்ங்கற சப்தத்தால எப்படி பதில் கூற முடியும்?’’

‘‘மௌனம்ங்கறது ஒண்ணுமில்லாதது. அது எப்படி பதிலாகும்?’’

‘‘இருக்கற ஒன்றாலதாம்மா இல்லாம போக முடியும். இல்லவே இல்லாததை நாம ஒருக்காலும் உணர மாட்டோம். உணராதது மனசுல எந்த வகையிலும் பதிவே ஆகாது!’’

‘‘உங்க பதில் புரிஞ்ச மாதிரியும் இருக்கு. புரியாத மாதிரியும் இருக்கு...’’

‘‘கீதைல கிருஷ்ணன் சொல்வான். நான் இருக்கிறேன் - இல்லாமலும் இருக்கிறேன்னு... முடிஞ்சா அதைப் படி!’’

‘‘பாக்கறேன்... உங்களை இன்னொண்ணு கேக்கலாமா?’’

‘‘தாராளமா கேள்...’’

‘‘நீங்க கிறிஸ்தவரா?’’

‘‘இல்லம்மா... ஆனா என் மருமக கிறிஸ்தவ வழில நடக்கறவ...’’

‘‘அப்ப உங்க மகனுக்கு காதல் திருமணமா?’’

‘‘ஆமாம்...’’

‘‘நீங்க எதிர்ப்பு தெரிவிக்கலையா?’’

‘‘இல்லம்மா...’’

‘‘ஆச்சரியமா இருக்கு. அப்ப உங்க வரைல ஜாதி, மதம்லாம்?’’

‘‘அது ஒரு வழிமுறைம்மா!’’

‘‘வழி மாற அப்ப சம்மதிக்கிறீங்களா?’’

‘‘ஒரு ஊருக்கு போக ஒரே ஒரு வழித்தடம்தான் இருக்குன்னும்போது, அந்த வழித்தடம் ரொம்ப நெருக்கடியானதா இருக்கும். நெருக்கடி வந்த உடனேயே மனுஷனுக்கு வலி ஏற்படும். வலிச்ச உடனேயே அதைத் தவிர்க்க வழி என்னனு பாக்க ஆரம்பிச்சிடுவான். இங்கதான் விதிகள் உருவாகுது. அந்த ஒரு வழித்தடத்தை ரெண்டா பிரிச்சி... ‘ஒரு பக்கம் போறவங்க போங்க... மறுபக்கம் வாரவங்க வாங்க’ம்பான்... இல்லியா?’’

‘‘எக்ஸாக்ட்லி... அப்படித்தானே நடந்துக்க முடியும். அப்பதானே நெருக்கடிக்கு தீர்வு ஏற்படும்?’’

‘‘சரியா சொன்னே... இப்ப இந்த ஒருவழிப்பாதையோட பக்கத்துலயே இன்னொரு பாதையும் உருவானா?’’

‘‘உருவானா என்ன உருவானா? உருவாகியே தீரும். அதானே வளர்ச்சி?’’

‘‘ரொம்ப சரியா சொன்னே... பக்கத்துல ஒரு வழி உருவான மாதிரி, தண்ணில ஒரு வழி, ஆகாயத்துல ஒரு வழின்னும் உருவாகும்போது இன்னமும் நெருக்கடி குறையுமில்லியா?’’

‘‘நிச்சயமா?’’

‘‘அப்ப அதுல எல்லாமும் பயணிக்கிறதுதானே புத்திசாலித்தனம்..?’’

‘‘ஒரு ஊர்ல இருந்து இன்னொரு ஊருக்கு போறதுக்கு நீங்க சொல்ற இந்த விஷயம்லாம் சரி... ஜாதி, மதம்ங்கறது ரொம்ப

சென்டிமென்டான, நம்பிக்கை சார்ந்த உணர்வுபூர்வமான விஷயங்களாச்சே அங்கிள்!''

''எதுவா இருந்தாலும் மனுஷன் தன் ஆறாவது அறிவால 'வலி இல்லாத வாழ்க்கைக்கு என்ன வழி'ன்னுதான்மா யோசிப்பான். அதன்படிதான் நடந்துக்குவான். அதற்கேற்ப நியாயங்களும் அவனால உருவாகிடும்!''

''அப்படின்னா?''

''மனித இனம் சிறு அளவுல இருக்கும்போதுதான் இனம், மொழி, ஜாதிக்கெல்லாம் பலம். இப்ப இந்த நாட்டுல மிகப்பெரிய சக்தியே மனித சக்திதான். இந்த சக்தி அதிகமாகிட்டதால ஒரு பாதுகாப்பு அடிப்படைல உருவான இனம், மொழி, ஜாதியெல்லாம் தேவையற்றுப் போயிடும்மா. இது ரொம்ப இயற்கையான விஷயம்!''

''இந்த தெளிவுதான் நீங்க உங்க மகனோட காதலை ஆதரிக்கக் காரணமா?''

''நீ தெளிவுன்னு சொல்ற விஷயத்தை நான் கொஞ்சம் மாத்தி விதின்னும் சொல்வேன்!''

வெளியே கார் அருகே நின்று கொண்டு 'இதற்கு மேல் பேச ஒன்றுமில்லை' என்கிற மாதிரி கார் கதவைத் திறந்து, 'புறப்படுங்கள்' என்பது போல பார்த்தார் வள்ளுவர்.

புரிந்துகொண்டு வர்ஷன் காரை எடுத்தான். எப்போதும் இக்கட்டான வேளையில்தான் மறைவான இடங்களில் அரிப்பு ஏற்படும். அதேபோல் டிரைவிங் தொடங்கும்போதும் யாராவது செல்போனில் அழைப்பார்கள். அப்படி ஒரு அழைப்பு

வர்ஷனுக்கும்... டிரைவ் செய்தபடி செல்போன் இயர் போனை காதில் பொருத்திக்கொண்டு “ஹலோ” என்றான்.

“உனக்கு ஒரு மணி நேரம் அவகாசம் தர்றோம். அந்தப் பெட்டியை எடுத்துக்கிட்டு வந்து தர்றே... உனக்குப் பேசின தொகையும் வந்து சேரும். இல்லன்னா உன் தங்கை அனுஷா வீடு வந்து சேர மாட்டா!” என்றது அந்தக் குரல்.

20

அமுதசுரபி எங்குள்ளது என்கிற கேள்வியில் விழுந்த எனக்குள், வைக்கோல் போரில் விழுந்துவிட்ட ஒரு குண்டூசியின் நினைவும் சேர்ந்தே எழும்பியது. எப்படி அந்த குண்டூசியைக் கண்டறிய இயலாதோ, அப்படித்தான் இந்த அமுதசுரபி விஷயமும்.

லாஜிக்கலாக கோவலன் - கண்ணகி பாத்திரங்கள் இருந்து, மாதவி அழகில் கோவலன் மயங்கி பிறன்மனை கிடந்து, அதன் காரணமாக மணிமேகலை பிறந்திருந்தாலும், இவர்கள் வாழ்ந்த காலகட்டம் என்பதே துல்லியமாகத் தெரிந்திராத நிலையில், எந்த அடிப்படையில் அமுதசுரபி இப்போதும் இருக்கும் என்று நம்பி அதைத் தேடுவது? ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையின்படி தென்மதுரையில் சிந்தாதேவி எனும் தேவதையால் ஆபுத்திரன் என்பவனுக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரம் அது.

பின் அது மணிபல்லவத் தீவிலுள்ள கோமுகிப் பொய்கையை அடைந்து, அங்கே அது மணிமேகலை வசம் சேர்ந்தது. அதன்பின்

அதனால் பல்லாயிரம் பேர் அன்றாடம் பசியாறினர். குறிப்பாக காயசண்டிகை என்பவளின் தீராப் பசியையும் அவளின் பஸ்மக நோயையும் அமுதசுரபி போக்கிற்று... இத்தனை அரிய ஒரு பொக்கிஷத்தை தன்வசப்படுத்த பலரும் எண்ணியிருப்பார்கள். அவர்களில் அன்றைய சோழ மன்னனும் ஒருவன்.

அமுதசுரபி என்வரையில் இப்படி ஒரு மன்னனிடம் சென்று நிற்கிறது. ஆனால் மணிமேகலை அமுதசுரபியை கோமுகிப் பொய்கையிலேயே போட்டுவிட்டாள் என்றும் ஒரு கருத்து வலம் வருகிறது.எது உண்மை?

இதைப் பற்றிய ஆய்வில் நான் இறங்கியபோது என்னை பேராசை பிடித்தவனாகத்தான் என்னருமை ஆய்வாளப் பெருமக்கள் பலர் கருதினார்கள். நான் ஒரு கற்பனைப் புதினத்தை நம்பி முட்டாள்தனமாய் நடந்து கொள்வதாகவும் கூறினார்கள். ஆனால் நான் அன்றைய காவிரிப்பூம்பட்டினமான இன்றைய பூம்புகார் எனும் இடத்தில், மணிபல்லவத் தீவு இருந்ததற்கான தடயம் ஏதேனும் கிடைக்கிறதா என்று பார்த்து வருவதற்காகச் சென்றேன். எனக்கு இம்மட்டில் கடலாடுபவர்களின் உதவி பெரிதும் தேவைப்பட்டது.''

- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அந்தக் குரலும் கட்டளையும் வர்ஷனை ஒரு உலுக்கு உலுக்கியதில் காரின் ஓட்டத்திலும் ஒரு தடுமாற்றம்.

‘‘வர்ஷன்! என்னாச்சு... வாட்ஸ் ராங் மேன்?'' - என்று ப்ரியாவும் பதற்றப்பட, காரை அப்படியே ஓரம் கட்டினான் அவன்.

‘ஏய்... ஏழரைக்கு பொறந்தவனே! இது மெயின் ரோடு. ஃபுட்பால் கிரவுண்டுன்னு நினைச்சியா?’ - என்கிற ஒரு கமென்ட்டுடன் பின்னால் வந்த ஒரு கார் அவர்களைக் கடந்து போயிற்று.

வர்ஷன் காதில் அது விழவேயில்லை.

‘‘ஏய்... என் சிஸ்டருக்கு ஏதாவது ஆச்சு, அப்புறம் உங்களை சும்மா விடமாட்டேன்’’ என்று கார் ஓரம் கட்டப்பட்ட நிலையில் படபடத்தவனை ப்ரியா அதிர்ச்சியோடு பார்த்தாள்.

‘‘கத்தாதே வர்ஷன்! உன்னை விட்டுட்டு வேலைக்காரி முத்தழகுவை பிடிச்சோம். ஆனா அவ ஷாக்குக்கு ஆளாகி ஆஸ்பத்திரியில உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்கறதால எங்களுக்கு வேற வழி தெரியல. டெல்லியில இருந்து எங்களுக்குக்

கொடுக்கப்பட்ட காலம், ஒரு வாரம். அதுல ஆறு நாள் ஓடிப் போயிடிச்சு. இருக்கறது ஒரே ஒரு நாள்... அதாவது 24 மணி நேரம்! இந்த 24 மணி நேரத்துல நாங்க இந்த அசைன்மென்ட்டை முடிக்கலைன்னா இது வேற கைக்கு போயிடும்...'' - போனின் மறுமுனையில் இருந்து வந்த விளக்கம் வர்ஷனை குமையச் செய்தது.

''இதோ பார்... உன்னோட பிரச்னையை என் பிரச்னையா ஆக்காதே! இது கொஞ்சம்கூட நல்லா இல்லை!''

''வர்ஷன்... டென்ஷன் ஆகாதே! உன் பக்கத்துல ப்ரியா இருக்கறது எங்களுக்குத் தெரியும். இந்த நெருக்கடியை அவகிட்ட சொல்லு. அவளே உனக்கு உதவி செய்வா! இன்ஃபாக்ட், அவளாலதான் இதைச் செய்ய முடியும். வயசான காலத்துல அந்தப் பேராசிரியர் கணபதி சுப்ரமணியனை ரெஸ்ட் எடுக்கச் சொல்லுங்க. அப்புறம், அந்த வள்ளுவர் சொன்னபடி காலப் பலகணியைக் கண்டுபிடிச்சு நெருங்கறவங்கதான் சீக்கிரமா செத்துடுவாங்களே! ப்ரியா தன்னோட தாத்தாவை நிச்சயம் சாக விட மாட்டா. அதனாலதான் நாங்களும் இப்படி ஒரு முடிவுக்கு வந்தோம். உன் தங்கையையும் வளைச்சோம்.

இந்த நிமிஷம் வரை உன் தங்கைக்கு, நாங்க அவளை எங்க பிடியில வெச்சிருக்கறதே தெரியாது. ஜிம்முல நீ எக்சர்ஸைஸ் பண்ணும்போது சின்ன ஆக்சிடென்ட் ஆகி ஆஸ்பத்திரில இருக்கேன்னு சொல்லி அவளை கம்ப்யூட்டர் சென்டர்ல இருந்து கூட்டிக்கிட்டு வந்துட்டோம். இப்பகூட கே.ஆர். ஹாஸ்பிட்டலுக்கு வெளியிலதான் இருக்கோம். உன் தங்கை, உள்ள உனக்கு ட்ரீட்மென்ட் நடந்துக்கிட்டு இருக்கறதா நம்பி, ரிசப்ஷன்ல உக்காந்திருக்கா.

எங்க ஒவ்வொரு அடியும் அவ்வளவு கவனமா, கச்சிதமா இருக்கு. நீ அந்த தகரப்பெட்டியோட வந்து பணத்தை வாங்கிக்கிட்டு, உன் தங்கையோட பத்திரமா வீட்டுக்குப் போற வழியைப் பார். அதை விட்டா உனக்கு வேற சாய்ஸே இல்லை!'' - போனில் வந்த விளக்கம் வர்ஷனை நெற்றியைத் தேய்த்துக் கொள்ளச் செய்தது.

''வர்ஷன்! வாட் ஹேப்பண்ட்? யார் போன்ல... என்ன பிரச்னை?'' - என்று மீண்டும் ப்ரியா கேட்க, போனில் எச்சரிக்கையின் தொடர்ச்சி...

''வர்ஷன்! எந்த வகையிலயும் குறுக்குச்சால் ஓட்டாதே. புத்திசாலித்தனமா நடந்துக்கோ. எங்களுக்கு நாங்க நினைச்சது நடந்தாகணும். ஒரு காரியத்தை முடிக்க நாங்க எந்த எல்லைக்கும் போவோம். நீ ஒரு மணி நேரத்துல அந்த பெட்டியோட வரலைன்னா, உன் தங்கையை நாங்க ஒரு பேஷன்ட்டாக்கி ஆம்புலன்ஸ்ல வெச்சே மும்பை, கல்கத்தான்னு எங்கயாவது கூட்டிப் போய் விபசார புரோக்கர்கள்கிட்ட விட்டுவோம். அது ஒரு ஒன்வே டிராஃபிக்! அங்க போகலாம், நிச்சயமா திரும்பி வர முடியாது. உனக்கு டி.ஐ.ஜி.யே பழக்கமா இருந்தாலும் எதுவும் செய்ய முடியாது. பிரச்னையோட தீவிரத்தைப் புரிஞ்சிக்கோ. ப்ரியாகிட்ட பேசு. நிச்சயம் உனக்காக இல்லாட்டியும் உன் தங்கைக்காக அவ பெட்டியை எடுத்துத் தருவா.

பை த பை, உன்னை எங்க ஆட்கள் ஃபாலோ பண்ணிக்கிட்டு இருக்காங்க. ஜேம்ஸ்பாண்ட் வேலை எதுவும் செய்யாம பெட்டியைக் கொடுத்துட்டு காசோட சந்தோஷமா வாழற வழியைப் பார்...'' - என்று பேச்சும் ஒரு முடிவுக்கு வந்தது.

வர்ஷன் வியர்வையில் குளித்திருந்தான்.

ப்ரியா அவன் தோளைப் பற்றி உலுக்கத் தொடங்கினாள்.

‘‘இப்ப சொல்லப் போறியா, இல்லையாடா... என்னடா பிரச்னை?’’ என்று உச்ச ஸ்தாயியில் வெடித்தாள்.

அவனிடம் சில வினாடிகள் ஒருவித ஸ்தம்பிப்பு தொடர்ந்தபடியே இருந்தது.

‘‘டேய்ய்...’’

‘‘ச... ச... சாரி ப்ரியா...!’’

‘‘எதுக்கு சாரி கேக்கறே... யார் போன்ல... ஏன் பேய் மாதிரி முழிக்கறே?’’

‘‘ப்ரியா... ப்ரியா...’’

‘‘தந்தி அடிக்காதே... பீ சியர்ஃபுல் மேன்...’’

‘‘முடியல... நான் இப்ப வசமா ஒரு குரூப்கிட்ட மாட்டிக்கிட்டிருக்கேன்!’’

‘‘ஒரு குரூப்பா... யார் அவங்க?’’

‘‘சொல்றேன். இப்ப என் பிரச்னையை உன்னைத் தவிர யாராலயும் தீர்க்கவும் முடியாது...’’

‘‘முதல்ல பிரச்னையை சொல்!’’

‘‘தயவுசெய்து நான் சொல்றத கேட்டுட்டு என்னை வெறுக்கத் தொடங்கிடாதே...’’

‘‘முதல்ல சொல்லு...’’- வர்ஷனும் தொடக்கம் முதல் கூறத் தொடங்கினான். மிகச் சரியாக பத்து நிமிடங்கள் ஆயிற்று இறுதி வரை சொல்லி முடிக்க!

ப்ரியாவிடம் இப்போது கற்சிலையானது போல் ஒரு மௌனம்.

‘‘ப்ரியா! என்னை தப்பா நினைக்காதே... நான் இந்தக் காலப் பலகணி விஷயத்தை முதல்ல ஒரு விஷயமாகவே நினைக்கல. அதலாலதான் அந்த குரூப் என்னை அப்ரோச் பண்ணப்ப நான் முதல்ல ஒத்துக்கிட்டேன். ஐம்பது லட்ச ரூபாய்ங்கறது ஒண்ணும் சின்ன தொகை இல்லை. ஒரு தகரப் பெட்டிக்கு 50 லட்சம்னு சொன்ன உடனே நான் சரின்னு சொல்ல அதான் காரணம். ஆனா அப்புறமா அது ஒரு அதிசயம்னு தெரிஞ்ச உடனே நான் விலகிட்டேன்...’’ என்று பூசி மெழுகினான்.

‘‘வர்ஷன்... உனக்குள்ளயும் ஒரு கல்ப்ரிட் இருக்கான்டா. நிஜமா இந்தக் காலப் பலகணியை விடவே அந்த கல்ப்ரிட்தான் என் வரைல அதிசயம். நீ என்ன சொன்னாலும் என்னால ஜீரணிக்கவே முடியல!’’

‘‘ப்ரியா... ஒரு வேளை நான் முதல்லயே மறுத்திருந்தாலும் அவங்க வேற வடிவத்துல முயற்சி செய்திருப்பாங்க. முத்தழகுவை அவங்க வளைச்சதை யோசிச்சுப் பார்!’’

‘‘குப்புற விழுந்தும் மீசையில மண் ஒட்டலைங்கற மாதிரி பேசாதே... முத்தழகுவுக்கு ஆக்சிடென்ட்டுங்கறைதயும் என்னால ஜீரணிக்க முடியல...’’

‘‘சரி, நான் பேசலை. நீ இப்ப என்ன செய்யலாம்ங்கறே?’’

‘‘கொஞ்சம் இரு...’’ - ப்ரியா முதல் காரியமாக அனுஷாவுக்குத்தான் போன் செய்தாள்.

‘‘அனு...’’ என்றாள் வேகமாக...

‘‘அனு இல்ல. நாங்க டெல்லி பார்ட்டி. என்னடா இன்னும் உன்கிட்ட இருந்து போன் வரலையேன்னு நினைச்சோம்!’’

‘‘அனு போன் அப்ப உங்க கைலதான் இருக்கா..?’’

‘‘பின்ன... அவ கைல இது இருந்தாதான் அவ யார்கூட வேணா பேச முடியுமே..?’’

‘‘கிட்நாப்பிங்ல ரொம்ப எக்ஸ்பீரியன்ஸ்னு சொல்லுங்க...’’

‘‘உனக்கு இப்ப என்ன வேணும்?’’

‘‘அனுஷா கூட நான் பேசணும். அவளுக்கு எதுவும் ஆகிடக் கூடாது!’’

‘‘அது உன் கைலதான் இருக்கு. உள்ள யாரோ ஐ.சி.யுல இருக்க, வர்ஷன்தான் அதுங்கற மாதிரி சொல்லி நாங்க சமாளிச்சுக்கிட்டு இருக்கோம். இருந்தும் அவளுக்கு எங்க மேல சந்தேகம் வர ஆரம்பிச்சிடிச்சு. அது முத்தி வெடிக்கறதுக்குள்ள நீ பெட்டியோட வந்துட்டா நல்லதுன்னு நினைக்கறோம்!’’

‘‘நான் வர்றேன். அதே சமயம் அவளுக்கு ஏதாவது ஆனா நீங்க யாரும் தப்பிக்க முடியாது.’’

‘‘வீர வசனத்தை விடு... காரியத்தைப் பாரு... உனக்கு நேரம் ரொம்ப கம்மியா இருக்கு...’’

- அவர்கள் பேச்சை முடித்துக் கொள்ள, அனுஷா கடத்தப்பட்டதை ஊர்ஜிதம் செய்து கொண்டவள் வர்ஷனை காரை எடுக்கச் சொன்னாள்.

‘‘இப்ப என்ன பண்ணப் போறோம் ப்ரியா?’’‘‘காரை வீட்டுக்கு விடு...’’‘‘அப்ப..?’’

‘‘பெட்டிய ஒப்படைக்க வேண்டியதுதான்...’’

‘‘நிஜமாதான் சொல்றியா?’’

‘‘அப்ப ஒப்படைக்காமலே சமாளிக்க முடியும்னு நீ நம்பறியா?’’

‘‘நாம நேரா ஹாஸ்பிட்டலுக்குப் போய் அனுஷாவை முதல்ல பார்ப்போம்...’’

‘‘முட்டாள் மாதிரி பேசாதே... நம்மை ஃபாலோ பண்றவங்க நாம எங்க போய்க்கிட்டிருக்கோம்னு கவனிச்சுக்கிட்டே இருந்து தகவல் கொடுத்துக்கிட்டே இருப்பாங்க...’’

‘‘போலீசுக்கு தகவல் தந்து அவங்கள போகச் சொன்னா?’’

‘‘அதுக்கு நேரமில்ல... அது பெரிய ரிஸ்க்கும் கூட!’’

‘‘அப்ப பெட்டிய கொடுத்துடறதுதான் ஒரே வழியா?’’

‘‘அதுக்கு முந்தி என் கேள்விக்கு நீ பதில் சொல். பெட்டியில இருக்கற அயிட்டங்கள் என்னென்னன்னு அவங்களுக்குத் தெரியுமா?’’

‘‘நல்லா தெரியும்...’’

‘‘எப்படி?’’

‘‘அது தெரியாது...’’- ப்ரியா அதைக் கேட்டு நகம் கடித்தாள். கார் விரைந்தபடியே இருந்தது.

‘‘என்ன யோசனை?’’

‘‘ஒண்ணுமில்ல... வீட்ல இருந்து தாத்தாவை எப்படி வெளிய அனுப்பறதுன்னு யோசிக்கறேன்!’’

‘‘முத்தழகு பாக்கத் துடிக்கறாள்னா ஆஸ்பத்திரிக்குக் கிளம்பிடப் போறார்!’’

‘‘அப்படிப் போறவர் பீரோ சாவியை எடுத்துக்கிட்டு போயிட்டா என்ன பண்றது?’’

‘‘அப்ப தாத்தாவுக்கு தெரியாம பீரோவுல இருந்து எடுத்து அந்த குரூப்கிட்ட கொடுத்துடப் போறோமா?’’

‘‘அனுஷா மாட்டிக்கிட்டிருக்கா... யோசிக்க அவங்களும் நமக்கு நேரம் கொடுக்கல. எவ்வளவு மர்மக் கதைகள் படிச்சிருப்பே... சினிமாவும் பாத்துருப்பே? யோசிடா...’’

‘‘புரியுது... நீ என் சிஸ்டருக்காக இவ்வளவு தூரம் விட்டுக்கொடுத்து செயல்படுவேன்னு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கல ப்ரியா. அதே சமயம் பர்சனலா சொல்றேன். பெட்டிய தூக்கித் தர்றதுல எனக்குக் கொஞ்சம்கூட விருப்பம் கிடையாது...’’

‘‘வேகமா போ! நான் தாத்தாகிட்ட இருந்து பீரோ சாவியை எப்படி வாங்கறதுன்னு யோசிக்கறேன்...

’’ப்ரியா மூளையைக் கசக்கி விட்டுக்கொள்ள, காரும் சென்னை நகர சந்தடிகளில் முண்டியடித்தது. வர்ஷன் ரியர் மிர்ரர் வழியாக பின்னால் வரும் வாகனங்களைப் பார்த்தபடியேதான் வந்தான். ஒரு பழைய சான்ட்ரோ கார் மட்டும் விடாமல் பின்தொடர்ந்து கொண்டிருந்தது.கார் பங்களாவினுள் நுழையவும், பத்மாசினி பாய்ந்து வந்தாள்.

‘‘முத்தழகுக்கு என்னம்மா?’’

‘‘பாழாப் போன எலெக்ட்ரிக் வயரால வந்த வினை. அந்த வீணாப் போன எலெக்ட்ரீஷியன் பண்ண வேலை...’’ - பத்மாசினி வெடித்தாள். கணபதி சுப்ரமணியனும் எதிரில் வந்து நின்றார். வரும்போதே அவர் கையில் அந்தப் பெட்டி!

‘‘எல்லாம் இது வந்த நேரம்தான்டி. இவர்கிட்ட இதைத் தூக்கிப் போடச் சொல்லி நான் கெஞ்சிக்கிட்டு இருக்கேன். நீ வந்தபிறகு, உன்கிட்ட பேசிட்டுத்தான் முடிவுக்கு வருவேன்கறார் இவர்...’’

‘‘தாத்தா... என்ன தாத்தா இதெல்லாம்?’’

‘‘என்னத்தம்மா சொல்ல... முத்தழகு நிலை ரொம்பவே சீரியஸ்னு இப்பகூட போன் வந்தது. உங்கம்மா என்னடான்னா இது வந்த நேரம்தான்னு என் உயிரை வாங்கறா. சரிதான்னு நானும் இதைத் தூக்கிக் கூவத்துல போட முடிவு செய்துட்டேன். நீ என்ன சொல்றே?’’ என்று கேட்டவரிடம்,

‘‘கொடுங்க! நாங்க போய் போட்டுட்டு வர்றோம்’’ என்று கையை நீட்டினாள் ப்ரியா.

21

எனது ஆய்வுக் காலத்தில் எவ்வளவோ தேடல்கள்! அதில் அமுதசுரபி குறித்த என் தேடல் என் சகாக்களிடையே பெரிதும் கேலிக்குரியதாக அமைந்துவிட்டது. ஒரு கட்டத்தில் நான் அதை கைவிட்டு விட்டது போல நடித்தேன். இதனால் என் சகாக்களும் சற்று அமைதியானார்கள். இருந்தும் அவ்வப்போது என்னை சீண்டுவார்கள்.

ஒரு இஸ்லாமிய நண்பர் வீட்டில் ஒருமுறை விருந்தளித்தார்கள். மணக்க மணக்க பிரியாணி! பொதுவாக அவர்கள் பீங்கான் தட்டுகளையே அதிகம் பயன்படுத்துவார்கள். அன்று எங்களுக்கு வெள்ளித்தட்டில் விருந்து! அந்த தட்டுகளும் ஹைதராபாத் நிஜாம் காலத்து தட்டுகள். தட்டில் நிறைய வேலைப்பாடுகளும் கூட! அதில் ஒரு தட்டு புத்தம் புதிய வெள்ளித்தட்டைப் போல பளபளவென்று இருந்தது.

தட்டை வைத்து பிரியாணி போடும்போது 'இந்த வெள்ளித்தட்டு மட்டும் கறுக்கவே மாட்டேன் என்கிறது. எப்படி என்றும் தெரியவில்லை. இதன் பளபளப்பு அப்படியே இருக்கிறது' என்றார் விருந்தளித்த நண்பர். நானும் ஆச்சரியப்பட்டேன். என் சகாக்களுக்கு என்னை கிண்டல் செய்ய அதுவும் ஒரு வாய்ப்பாகிவிட்டது. 'அப்படியென்றால் இதுதான் அமுதசுரபியாக இருக்க வேண்டும். கணபதி சுப்ரமணியன்... இதை நீங்கள் மேலும் ஆய்வு செய்து, அமுதசுரபிக்கென ஏதாவது மந்திரம் இருந்தால் கூறுங்கள். இதில் ◌ோசாறு வருகிறதா பார்ப்போம்' என்றனர். நான் முறைத்தேன்.

உடனே அந்த இஸ்லாமிய நண்பரும் திகைத்துப் போய், 'சார்! அமுதசுரபி என்கிற ஒன்று நிஜமா... நீங்கள் அதைத் தேடுகிறீர்களா... அந்த அமுதசுரபி இந்தத் தட்டு போலவா இருக்கும்?' என்று படபடக்கத் தொடங்கிவிட்டார். அந்த நேரம் அவர்களை சமாளிக்க, 'அதெல்லாம் கற்பனை' என்றேன். அப்படியே, 'இந்தத் தட்டு கறுக்காமல் இருப்பது உண்மையில் ஆச்சரியம். யாராவது ஒரு மெட்டலர்ஜி படித்த பேராசிரியரிடம் இதைக் காட்டி கேட்கலாமே?' என்றேன். விருந்து கொடுத்த நண்பர், நான் சொன்னதைக் கேட்டு அசந்து போய் விட்டார். பிறகு இன்னொரு தகவலையும் கூறினார்.

'சார், இது விருந்தினர் தட்டு! இதில் பல வி.ஐ.பிக்கள் சாப்பிட்டுள்ளனர். ஒரு ஆச்சரியம் என்னவென்றால், இதில் சாப்பிட்டவர்கள் அவ்வளவு பேருமே அதன்பின் மேலும் மிகப்பெரிய நிலைக்குச் சென்று விட்டனர். ஒருவர் கவர்னராகவே ஆகிவிட்டார்' என்றபோது எனக்குள் என் பகுத்தறிவையும் மீறி ஒரு கற்பனை ஊற்றெடுக்கத் தொடங்கியது. நான் பெரிதும்

எதிர்பார்க்கும் 'பத்ம பூஷண்' போன்ற பட்டங்கள் எனக்குக் கிடைக்கும் என்றும் தோன்றியது...''- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

ப்ரியா கையை நீட்ட, கணபதி சுப்ரமணியன் அதிர்ச்சியோடு பார்த்தார். ஆனால் பத்மாசினி அலறத் தொடங்கினாள்.

''போதுண்டி... நீ உள்ளே போ! இதை இவரே போய் தூக்கிப் போடட்டும். இதைக் கையாலயே தொடாதே! இது வீட்டை விட்டுப் போனாதான் நல்லதே நடக்கும்'' - என்றவளை ப்ரியா வெறித்தாள்.

வர்ஷனோ, கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்து நிற்பதுபோல உணர்ந்தான்.

''அங்கிள்... தாங்க அங்கிள்! நான் போய் இதைப் போட்டுட்டு வர்றேன்'' என்று கணபதி சுப்ரமணியனிடமிருந்து அந்த தகரப்பெட்டியை வாங்கியே விட்டான்.

''சரிப்பா! யாரோ ஒருத்தர்... போய் தூக்கி எறிஞ்சிட்டு வாங்க... புறப்படுங்க'' என்றார் கணபதி சுப்ரமணியன்.இருவருமே புறப்பட்டனர். பத்மாசினி ப்ரியாவை பயத்தோடு பார்த்தவளாக, ''நீ போகாதே... வர்ஷன் போனா போதும்'' என்றாள்.

''எனக்குத் தெரியும்... நீ போய் சாதகம் பண்ற வழியைப் பார்... பை தாத்தா...'' என்று மிகவே வேகமானாள் ப்ரியா. போர்ட்டிகோவை அடைந்து பின் சீட்டில் பெட்டியை வைத்துவிட்டு முன்புறமாக ப்ரியா ஏறிக்கொள்ள, வர்ஷன் டிரைவிங் சீட்டில் அமர்ந்து காரைக் கிளப்பினான்.

‘‘ப்ரியா! எப்படி பெட்டியை எடுக்கப் போறோம்னு நினைச்சு வந்தா, அதுவா வந்து மடில விழுந்துடுச்சு. இட் ஈஸ் எ ஒண்டர்’’ என்று தலையை சிலுப்பிக் கொண்டான் வர்ஷன்.அந்த சாண்ட்ரோ அவன் காரைத் தொடர்ந்து வரத் தொடங்கியிருந்தது. ப்ரியா திரும்பிப் பார்த்தாள்.

‘‘அந்தக் கார் ஃபாலோ பண்ணுதா?’’

‘‘பின்ன?’’

‘‘ஸ்கௌண்ட்ரல்ஸ்... ப்ரியா! நான் ரொம்பவே ஃபூலாயிட்டேன்...’’

‘‘நீ ஃபூலா...? நோ... நோ... நீ சரியான திருடன். நீ எல்லாம் அரசியல்வாதியா இருந்திருந்தா எங்கயோ போயிருப்பே...’’

‘‘தப்பா சொல்றே ப்ரியா! என்னை அரசியல்வாதிகளோட மட்டும் கம்பேர் பண்ணாதே... சுத்தமா பிடிக்காது எனக்கு!’’

‘‘பிடிக்காதா... நீயா சொல்றே? அங்க டீலே கிடையாது. எல்லாமே ஃபிக்சட். ஒரு கான்ட்ராக்ட் எடுத்தேன்னு வை. அதுல அம்பது பர்சன்ட்தான் செலவு. மீதி அப்படியே உன் பேங்க் அக்கவுன்ட்டுக்குப் போயிடும்!’’

‘‘போதும் நிறுத்து... என் மேல சத்தியமா சொல்றேன். நான் இனி ஒரு சின்ன தப்புகூட பண்ண மாட்டேன்’’ - அவன் கசிந்து போய் பேச, ப்ரியா திரும்பி அந்தப் பெட்டியைப் பார்த்தாள். மெல்ல கை நீட்டி சிரமப்பட்டு எடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு திறந்தாள். கரகரவென்று தகரம் உரசும் சப்தத்தோடு திறந்து கொண்டது. உள்ளே

சோழிகள், காம்பஸ், ஏட்டுக்கட்டு, ஸ்படிக பெண்டுலம்... கூடவே, ஒரு சோழர் கால நாணயமும், உள்ளங்கையில் அடங்கிவிடும் ஒரு மண் கலயமும் இருந்தது. ப்ரியாவின் நெற்றியில் வரிகள் விழத் தொடங்கின.

வர்ஷனும் பக்கவாட்டில் அவ்வப்போது பார்த்தான். பார்த்தபடியே கேட்டான். ''என்ன ப்ரியா... கடைசி கடைசியா ஒரு பார்வை பாத்துக்கிறியா?''

''ஆமா... அதேசமயம் இந்த நாணயமும், கலயமும் எனக்கு புதுசா இருக்குடா!''

''என்ன சொல்றே?''

''வள்ளுவர் இந்தப் பெட்டியோட வந்து இதை காட்டினப்ப இதெல்லாம் உள்ள இல்லை...''

''அதனால என்ன இப்போ?''

''அப்ப இல்லாதது இப்ப மட்டும் எப்படி வந்தது?''

''இதைத் தூக்கிக் கொடுக்கப் போறோம். நம்மை விட்டுப் போகப் போற இதுல எது இருந்தா என்ன... இல்லாட்டாதான் என்ன?''- வர்ஷன் கேட்டதும் சரிதான். ஆனாலும் ப்ரியாவிடம் பதில் இல்லை. முகத்தில் தீவிர யோசனை!

''என்ன யோசனை?''

‘‘ஒண்ணுமில்ல…’’ என்றபடி திரும்பிப் பார்த்தாள். சாண்ட்ரோவின் ஃபாலோ அப்பில் தடையே இல்லை. அவள் பார்க்கவும், சாண்ட்ரோவின் கார் ஹெட்லைட் ஒருமுறை எரிந்து அணைந்தது.

அதேவேளை டிராஃபிக்கில் கார் தேங்கி நின்றது. பக்கவாட்டில் யதார்த்தமாக பார்வை போனது. அங்கே ஒரு ஃப்ளக்ஸ் போர்டு - அதில் பொதுப்பணித்துறையில் லஞ்சம் வாங்கிய அதிகாரிகளின் திருமுகங்கள். கீழே லஞ்சம் கொடுத்தவர்களின் புலம்பல் வரிகள். அந்த நிலையிலும் அதைப் பார்த்த ப்ரியாவிடம் சிரிப்பு.

‘‘என்ன சிரிக்கறே?’’

‘‘தப்பு பண்ணவங்ககூட அதுல ஒரு நியாயத்தை எதிர்பார்க்கறாங்க பார். இது ரொம்ப வினோதமான நாடுடா…’’ என்றவளை பரிதாபமாகப் பார்த்தான் வர்ஷன்.

‘‘நீ என்ன பரிதாபமா பாக்கறே.. உன்ன இவங்களோட கம்பேர் பண்ணதாலயா?’’

‘‘இதை விடு… எதுக்குதான் ஃப்ளக்ஸ் வைக்கறதுன்னே ஒரு விவஸ்தை இல்லாத நாடு இது. இதனால நல்ல பெயின்டர்களோட வாழ்க்கை தொலைஞ்சதுதான் மிச்சம். பை த பை ப்ரியா! இந்தப் பெட்டியை ஒரு பிளாக் மெயிலுக்கு கட்டுப்பட்டு தூக்கிக் கொடுக்கப் போறத நினைச்சா எனக்கு ரொம்பவே வலிக்குது ப்ரியா!’’

‘‘இதோ பார்… இப்ப நமக்கு உன் தங்கை அனுஷாதான் முக்கியம். ஆமா, எங்க போன்?’’அவன் காரை நகர்த்தியபடியே

எடுத்துத் தர, அதில் அவள் அந்த கிட்நாப்பர்களை எட்டிப் பிடித்தாள். ‘‘நான் இப்ப பெட்டியோட வந்துக்கிட்டு இருக்கேன்!’’

‘‘தெரியும்.’’

‘‘நீங்க எங்க இருக்கீங்க?’’

‘‘ஹாஸ்பிடல் கேம்பஸ்ல...’’

‘‘அஞ்சு நிமிஷத்துல வந்துடு வோம்!’’

‘‘அதுவும் தெரியும்...’’

‘‘அதான் கார் ஒண்ணு எங்களை ஃபாலோ பண்ணிக்கிட்டே வருதே?’’

‘‘அதெல்லாம் எங்க அசைன்மென்ட்டோட ஒரு பார்ட். பை த பை, நீ ரொம்பவே சீக்கிரமா பெட்டியை எடுத்துக்கிட்டு வந்துட்டே. அதுவே நீ எவ்வளவு தூரம் பயந்துட்டேங்கறத சொல்லுது.’’

‘‘உனக்கு ஒரு அக்காவோ தங்கையோ இருந்து கடத்தப்பட்டா, அப்ப தெரியும்...’’

‘‘ஃபீல் பண்ணாத ப்ரியா... நாங்க என்ன உங்க சொத்தையா கொள்ளையடிச்சிருக்கோம். ஒரு பழைய தகரப் பெட்டி...’’

‘‘அஃப்கோர்ஸ், அந்தப் பெட்டிக்குத்தானே நீயும் அம்பது லட்ச ரூபாய் விலை வெச்சிருக்கே?’’

‘‘ஆக மொத்தம், நாங்க நல்ல விலை கொடுத்துத்தான் வாங்கறோம். இதுக்கு நீங்க சந்தோஷம்தான் படணும்...’’

‘‘உன் பணமும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம். அனுஷாவை எதுவும் பண்ணாம விட்டா போதும்...’’

‘‘சாரி! இந்தப் பணம் ெபட்டிக்காக மட்டுமில்ல... காலப்பலகணி பற்றி நீங்க இனி யார்கிட்டயும் ஒரு வார்த்தை கூட பேசக்கூடாதுங்கறதுக்காக! இந்த விஷயத்தையே நீங்க மறந்துடணும்ங்கறதுக்காக...’’

‘‘நாங்க மறக்கறது இருக்கட்டும். நீங்க கவனமா இருங்க. பேராசை பெருநஷ்டம்ங்கற மாதிரி இது உங்ககிட்ட வரப்போற நேரம், உங்களுக்கும் ஏதாவது ஆகிடப் போகுது...’’

‘‘அது எங்க பிரச்னை. நீ அநாவசியமா கவலைப்படத் தேவையில்லை!’’- பேச்சின் முடிவில் கே.ஆர். ஹாஸ்பிடல் போர்டு தெரிந்தது. காரும் வளைந்து புகுந்து ஒரு ஓரமாக நின்றது. பின்னாலேயே வந்த சாண்ட்ரோவும் நுழைந்து நின்றது. அதிலிருந்து சராசரியாக ஒருவனும் அப்நார்மலாக வடக்கத்திய பிராமண பண்டிட் தோற்றத்தில் ஒருவரும் இறங்கினர். பண்டிட்ஜியின் கழுத்தில் மிகப்பெரிய ருத்ராட்ச மாலை; ஆனாலும் அநியாய பெரிய மூக்கு;

நெற்றியில் ஸ்கேல் வைத்து கோடு ேபாட்டது போல் விபூதிப்பட்டை - நடுவில் செந்தூரம் தீபச்சுடர் போல... அந்த பண்டிட்டுக்கு பூனைக் கண் வேறு! அவரை யாராவது ஒரே ஒருமுறை பார்த்தால் கூட போதும்... அந்த முகம் புகைப்படம் எடுத்த மாதிரி பதிவாகி விடும். அவர்களைப் பார்த்தபடியே வர்ஷன் தகரப்பெட்டியைக் கையில் எடுத்தான்.

கச்சிதமாய் ஒருவன் வர்ஷன் அருகில் வந்து நின்றான்.

‘‘பெட்டியை உள்ள வை...’’

‘‘காருக்குள்ளயா?’’

‘‘ஆமாம்...’’வர்ஷன் தயங்கினான்.

‘‘அட, வைன்னா...’’ - அவன் அதட்ட, வர்ஷனும் அமைதியாக வைத்தான். அந்த பண்டிட்ஜி அருகில் வந்து காருக்குள் ஏறி அமர்ந்தவராக பெட்டியைத் திறந்து ஒவ்வொன்றையும் பார்க்க ஆரம்பித்தார்.சோழர் கால நாணயம் அவர் முகத்தில் பிரகாசத்தை ஏற்படுத்தியது. மண்குவளை கண்களை அகலமாக்கியது. பெண்டுலம் அவர் விரல்களில் ஆடியது. சோழியும் இரு கைகளுக்குள் குலுங்கி சப்தமிட்டன. சப்தத்தை காதருகே வைத்து பரிசோதிப்பது போல கேட்டார். இறுதியாக ஏட்டுக்கட்டைத் தொட்டு, ஒவ்வொரு ஏடாக எடுத்து ஒரு பார்வை பார்த்தார். பின் திரும்பி தன்னை அழைத்து வந்தவர்களைப் பார்த்தார். பார்வையே ‘எல்லாம் சரியாக இருக்கிறது’ என்பது போல் இருந்தது.

‘‘நல்லது... தேங்க் யு வர்ஷன்! உன் அக்கவுன்ட்ல பணம் போட்டுருக்கோம். கேஷா கொடுத்தா கணக்குல வராது. கணக்குல வரணும்னுதான் போட்டுருக்கோம். திரும்பவும் சொல்றேன், இந்தப் பெட்டி பத்தி நீங்க யார்கிட்டயும் வாயே திறக்கக்கூடாது. நீங்க உண்டு, உங்க வேலை உண்டுன்னு இருக்கணும்... என்ன?’’

அவன் அதட்டலாக சொல்லி முடித்தான்.

‘‘அதான் பணம்லாம் வேண்டாம்னு சொன்னேனே... அப்புறம் எதுக்கு அக்கவுன்ட்ல போடறே?’’

‘‘எல்லாம் காரணமாகத்தான். அது உங்க வரைல ஒரு லாக். பை த பை... ப்ரியா! உன் தாத்தா இந்தப் பெட்டியைக் காணோம்னு தேடினா என்ன செய்வீங்க?’’

‘‘தூக்கி கூவத்துல போட்டுட்டேன்னு சொல்லிடுவேன். அதைப் பத்தி நீ கவலப்படாதே. எங்க அனுஷா...?’’

‘‘அதோ...’’ - அவன் கை காட்டிய அதே நொடியில், அனுஷா உள்ளிருந்து ஓட்டமும் நடையுமாக வந்தாள்.

வர்ஷன் ஓடினான்.

‘‘வர்ஷ்... நீ... நீ எப்படி இங்க?’’

‘‘பைத்தியம். எனக்கு எதுவுமில்லை. ஐ ஆம் ஆல்ரைட்.’’

‘‘ஆல்ரைட்டா... அப்ப ஐ.சி.யு.ல இருக்கறது யார்?’’

‘‘நீ கார்ல ஏறு... விவரமா சொல்றேன்!’’

‘‘என்ன வர்ஷா நடக்குது... எனக்கு எதுவுமே புரிய மாட்டேங்குதே!’’

‘‘பதற்றப்படாதே... இது ஒரு டி.வி. கேம் ஷோ! ‘ஏமாறாதே - ஏமாற்றாதே’ன்னு இதுக்குப் பேர். நீ கார்ல ஏறுங்கறேன்ல...’’

- வர்ஷன் அதட்ட, அவளும் காரில் ஏறிக் கொண்டாள். ‘ஏமாறாதே - ஏமாற்றாதேவா, நல்லா சமாளிக்கறேடா!’

என்பது போல பார்த்தபடியே ப்ரியாவும் ஏறிக்கொள்ள, கார் புறப்பட்டது!

அங்கே பங்களாவில் பத்மாசினியின் செல்போன் ரிங்டோனில் ‘கிருஷ்ணா நீ பேகனே பாரோ...’ என்கிற கர்நாடக சங்கீதத்தின் ஒலிப்பு. எடுத்து ஆன் செய்து காதைக் கொடுத்த பத்மாசினியின் முகம் இறுகியது.

‘‘முத்தழகுவைக் காப்பாற்ற முடியவில்லையாம்...’’ அனந்த கிருஷ்ணன்தான் பேசினார்!

22

நான் நம்பியது வீண் போகவில்லை. அந்த வெள்ளித்தட்டில் நான் சாப்பிட்ட நேரம், எனக்கு மைய அரசின் பத்ம விருது கிடைத்தது. இது எனக்குப் பெரிதும் ஊக்கமளித்தது. இந்த விருதின் நிமித்தம் என்னை பத்திரிகையாளர்கள் பேட்டி கண்டனர். அவர்களில் சிலர் நல்ல கேள்விகளையும் கேட்டனர்.

அதில் ஒருவர், ‘அகழ்வாராய்ச்சி செய்வதால் நாட்டில் பெரிதாக என்ன நடந்து விடப் போகிறது? இதனால் நெல்தான் கூடுதலாய் விளைந்துவிடப் போகிறதா? இல்லை, நம் அன்றாட வாழ்க்கைக்கு இதனால் என்ன பயன்?’ என்று கேட்டார்.

அனேகம் பேர் மிக மெட்டீரியலாகவே - அதாவது பொருள் சார்ந்தே - யோசிக்கிறார்கள் என்பதை இதன்மூலம் நான் தெரிந்து கொண்டேன். ‘அகழ்வாராய்ச்சியில் புதையல் கிடைத்தது. அதன் மதிப்பு பல கோடிகள்’ என்றால் ஒருவேளை

இவர்கள் திருப்தி அடைந்திருப்பார்கள். அப்படியும் நடந்திருக்கிறது. எனவே, கேள்வி கேட்ட நபருக்கு நான் விளக்கமளிக்கத் தயாரானேன்.

‘எங்கள் இலாகாவால் உடனடியாகவோ, நேர்முகமாகவோ ஒரு பயனும் இல்லை. ஆனால் ஒரு சரியான வரலாறு உருவாக நாங்கள் மிகவே பயன்படுகிறோம். ஒரு நாட்டுக்கு அதன் வரலாறு மிக முக்கியமானது’ என்று கூறிய நான், ஒரு தகவலையும் கூறினேன். ‘தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில் கஞ்சமலை என்று ஒரு மலை இருக்கிறது. இந்த மலை இரும்புத் தாதுவை நிரம்பக் கொண்டுள்ளது.

உடம்பைக் கட்டுக்கோப்பாய் வைத்திருக்கும் யோகிகளுக்கு இந்த மலை மிகப் பிடித்தமான இடம். இங்கே ஒருமுறை வந்தால் அவர்களுக்குத் திரும்பிச் செல்லவே தோன்றுவதில்லை; அவ்வளவாக பசியும் எடுப்பதில்லை; உடம்பில் உற்சாகமும் துளிகூட குறைவதே இல்லை. பிறகே தெரிந்தது... அந்த மலை இரும்புத்தன்மையோடு இருப்பதால், அது காந்தக் கதிர்வீச்சு உள்ளவர்களை தன்வசம் ஈர்க்கிறது என்று! இங்கே நிறைய சித்தர்கள் நடமாட்டமும் இருக்கிறது. இங்கு ஊற்றெடுக்கும் நீரில் குளித்தால் தோல் நோய்கள் மறைகின்றன.

கனிமவள ஆய்வாளர்கள் ‘இந்த மலைக்கற்களில் இரும்பு எவ்வளவு உள்ளது, துத்தநாகம் எவ்வளவு உள்ளது, ஜிப்சம் எவ்வளவு உள்ளது’ என்றே கணக்கெடுப்பார்கள். இதைக் கடந்து இங்கே ஆய்வு நிகழ்த்த ஏதாவது உள்ளதா என்று நான் ஊடுருவியபோது எனக்கு அரிய தகவல்கள் கிடைத்தன.அந்த நாளில் இந்த கனிமவளத்தைப் பயன்படுத்தி இரும்புத்தாது வைத் தனியாகப் பிரித்து எடுத்து, அதை உருக்கி தூண் வடிவில் செய்து,

அதன்மீது ஆமணக்கு எண்ணெய் பூசி, பிறகு சிறு பாய்மரக் கப்பல்களில் ஏற்றி பூம்புகார் துறைமுகம் வரை கொண்டு சேர்த்திருக்கிறார்கள்.

கஞ்சமலைக்கு சமீபத்தில் இருக்கும் பூலாம்பட்டி வழியாகப் பாய்ந்திடும் காவிரி ஆறு இந்த நீர்வழிப் பயணத்திற்கு பயன்பட்டுள்ளது. அப்படி ஏற்றுமதி செய்யப்பட்ட இரும்புத் தூண்கள், கப்பலில் ரோம் நகருக்குக்கூட சென்றுள்ளன!

இதற்கு ஆதாரமாய் பூலாம்பட்டியை ஒட்டி நாங்கள் ஆய்வு செய்தபோது இரும்பை உருக்கிய அடுப்புகள், வினோதமான அகப்பைகள், வார்ப்புப் பெட்டிகள் என்று நிறையவே கிடைத்தன. அந்த நாள் தமிழன் பூலாம்பட்டியில் இருந்து கொண்டு நீர்வழியாக ரோம் வரை ஏற்றுமதியே செய்திருக்கிறான் என்கிற விஷயம் அதிலிருந்து தெரிய வந்தபோது ஒரு ஆச்சரியப் பெருமிதம் தோன்றியது.''- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

பத்மாசினி போனை மிகச் சோர்வாகக் கீழே வைத்தாள். முத்தழகு இறந்து விட்டாள் என்ற சோகத்தோடு, 'புதிதாக ஒரு நல்ல வேலைக்காரி இனி கிடைக்க வேண்டுமே' என்கிற கவலையும் சேர்ந்து கொண்டது. முத்தழகு விஷயம் போலீஸ் கேஸாகி என்னவெல்லாம் செய்யுமோ என்கிற பயமும் மனம் முழுக்கப் பரவியது.

குழப்பம், ஏமாற்றம், பயம் என்கிற மூன்றுமே பாம்பின் விஷம், தேளின் விஷம், பல்லி விஷம் போல மூன்று விதமானவை. இம்மூன்றும் ஒரே தருணத்தில் துளிர்க்கும்போது மிகக் கொடூரமாக இருக்கும் அதன் உணர்வு.

பத்மாசினிக்கும் அப்படித்தான் இருந்தது.அறையிலிருந்த கணபதி சுப்ரமணியனின் காதுக்கும் விஷயம் சென்று சேர்ந்தது. அவரின் நெடிய வாழ்வில் நல்லதும் கெட்டதுமாய் எவ்வளவோ தருணங்கள். ஆனாலும் அப்போதைய தருணம் அவரை நிறையவே தவிக்க வைத்தது.வாழ்க்கை என்பது நொடிக்கு நொடி மாறிக்கொண்டே இருக்கிறது. அவற்றில் சில மாற்றங்களை முன்னதாக உணர முடிகிறது.

பல மாற்றங்கள் நடந்து முடிந்த பிறகே தெரிய வருகின்றன. அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டியும் உள்ளது. இதுபோன்ற தருணங்கள்தான் வாழ்வை ஒரு மலை போல பாரமாக்கிக் காட்டுகின்றன. மல்லாக்கப் படுத்திருக்கும்போது யாரோ ஒரு மலையைத் தூக்கி மார்பின்மேல் வைத்துவிட்டுப் போய் விட... சுமக்க முடியாமல் மூச்சுத்திணறலோடு படுத்திருப்பதுபோல் ஒரு அல்லாடல்!

'இந்த நான்கைந்து நாட்களில்தான் எத்தனை எத்தனை சம்பவங்கள்! எலும்பும் தோலுமாய் ஒரு மனிதர்... அவர் பேசினாலே பிரமிப்பு தட்டியது. ஒரு பழைய தகரப் பெட்டி... 'நான்தான் கால

ரகசியப்பேழை’ என்பது போன்ற அதன் தோற்றம்… நினைத்துக்கூட பார்த்திராத அனந்தகிருஷ்ணனின் நண்பன் மரணம்! அதே போன்றதுதான் முத்தழகுவின் மரணமும்…

இந்த வாழ்வை எப்படி எடுத்துக்கொள்வது? எப்போது எது நடக்கும் என்பது தெரியாத புதிரான நிலையில் போகிற போக்கில் போய்க்கொண்டே இருப்பதற்குப் பெயர்தான் வாழ்வா?’- கணபதி சுப்ரமணியன் பலவிதமான சிந்தனைகளில் உழன்று கொண்டிருக்க, அனந்த கிருஷ்ணன் அழைத்தார்.

‘‘அப்பா…’’

‘‘சொல்லுப்பா!’’

‘‘முத்தழகு போய்ட்டாப்பா!’’

‘‘தெரியும்…’’

‘‘போஸ்ட் மார்ட்டம் பண்ணி நாளைக்குத்தான் உடம்பைத் தருவாங்களாம்…’’

‘‘அதுதானே எப்பவும் வழக்கம்?’’

‘‘ஆனா முத்தழகு குடும்பத்தைச் சேர்ந்த சிலர், அந்த எலெக்ட்ரீஷியன்தான் தப்பு பண்ணிட்டான்னு அவனை அடிச்சு நொறுக்கிட்டாங்க…’’

‘‘விஷயம் தப்புத்தப்பா போய் சிக்கல் அதிகமாகிடக் கூடாது. சப் இன்ஸ்பெக்டர் மூலமா கன்ட்ரோல் பண்ணு!’’

‘‘எல்லாம் பண்ணிட்டேன். சப் இன்ஸ்பெக்டரும் அவங்ககிட்ட பேசினார். ‘போன உயிர் திரும்ப வரப்போகுதா? அமைதியா இருந்து சார் கொடுக்கற பணத்தை வாங்கிக்கிட்டுப் போங்க’ன்னு சொல்லி தற்காலிகமா 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கச் சொன்னார். சொன்னதைத் தந்து அடக்கி வெச்சிருக்கேன்.’’

‘‘குட்...’’

‘‘என்ன குட்டோ... ஆமா, அந்தப் பொட்டியைத் தூக்கிக் கொடுத்துட்டீங்களாமே..?’’

‘‘ஆமா...’’

‘‘ரியலி?’’

‘‘சந்தேகமா இருந்தா உன் பொண்ணுகிட்டே கேள்!’’

‘‘போதும்பா... இனி இந்த ஆராய்ச்சியெல்லாம் வேண்டாம். உங்க அனுபவங்களை எல்லாம் வச்சு புத்தகம் எழுதுங்க. அது போதும்!’’

‘‘பாக்கலாம்...’’

‘‘பாக்கலாமா... நீங்க எழுதறீங்க! அதை இங்க இருந்துதான் எழுதணும்னும் இல்லை.’’

‘‘அப்ப என்ன வெளிய எங்கயாவது போகச் சொல்றியா?’’

‘‘கொடைக்கானலுக்குப் போங்கப்பா. அங்கதான் நமக்கொரு பண்ணை வீடு இருக்குல்ல...’’

‘‘யோசிக்கறேன்...’’ - என்றவராக போனை கட் செய்தார். எதிரில் அவரது கிட்பேக். டேபிள் மேல் சார்ஜர், செல்போன், கெய்ரோ போனபோது வாங்கிய நவீன டூல் பாக்ஸ், மினி டிரான்சிஸ்டர், அன்டார்க்டிகாவில் பறவை வேட்டைக்கு பயன்படும் சப்தத்தை வெளிப்படுத்தாத ஒரு அடி நீள துப்பாக்கி என பல அயிட்டங்கள்.

வெற்று மனதோடு அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தபோது பத்மாசினி வந்தாள். ‘‘சப் இன்ஸ்பெக்டர் ஒருத்தர் வந்திருக்கார்’’ என்றாள் சுரத்தில்லாத குரலில்.

கணபதி சுப்ரமணியனும் அவரை எதிர்கொள்ளத் தயாரானார். அறைக் கதவைப் பூட்டிக்கொண்டு கீழே இறங்கிச் சென்றார். ஹாலில் சோபாவில் காக்கிச்சட்டை முதுகு தெரிய எஸ்.ஐ. அமர்ந்திருந்தார்.

‘‘வாங்க எஸ்.ஐ. சார்...’’

‘‘ஹலோ சார்!’’

‘‘எங்க இருந்து வர்றீங்க?’’

‘‘ஜி.ஹெச்ல இருந்து வர்றேன். எஃப்.ஐ.ஆர். போட்டு பேப்பரை மூவ் பண்ணணும். அதான் ஆக்சிடென்ட் எப்படி நடந்ததுன்னு விசாரிக்க வந்தேன்!’’

‘‘நீங்க மட்டுமா?’’

‘‘கமிஷனர் என்னைத்தான் போகச் சொன்னார்...’’

‘‘நல்லது! வாங்க... வந்து பாருங்க!’’

‘‘எப்படி இப்படி ஆச்சு?’’

‘‘பாருங்க... பாத்தாலே தெரிஞ்சுடப் போகுது. முப்பது வருஷத்து வீடு. அந்த நாளைய வயர் கனெக்ஷன். அப்ப வாங்கின சாமானுக்கெல்லாம் இவ்வளவுதான் ட்யூரபிலிடி.’’எஸ்.ஐ. எழுந்து சென்று கிச்சனைப் பார்த்தார். எலெக்ட்ரீஷியன் வயரை இழுத்து பிளாஸ்திரி போட்டு அப்படியே விட்டிருந்தான். சுவற்றில் கரி அடித்த தடயம் வேறு. அவர் தன் செல்போனில் படம் பிடித்துக் கொண்டார்.‘‘எலெக்ட்ரீஷியனை விசாரிச்சுட்டு கொஞ்சம் வேகமாக அனுப்பி வையுங்க. சிங்கிள் ஃபேஸ்ல ஏ.சி. எல்லாம் போட்டுக்காம பாத்துப் பாத்து யூஸ் பண்ணிக்கிட்டிருக்கோம்!’’

‘‘நான் போய் அனுப்பி வைக்கறேன் சார்! நீங்க டென்ஷன் ஆக வேண்டாம். அரசியல்வாதிகிட்ட இருந்து ஒரு போன் வந்தா, கொலையையே தற்கொலைன்னு மாத்திட்றோம். இது உண்மையா நடந்த விபத்து. இதைக் காம்ப்ளிகேட் ஆக விடுவோமா?’’ - எஸ்.ஐ. இதமாக பேசினார்.‘‘நான் இந்த மாதிரி மதிப்பைத்தான் சம்பாதிச்சு வெச்சிருக்கேன். கமிஷனருக்கும் ஹாஸ்பிட்டல்ல டாக்டர்சுக்கும் என் நன்றியைச் சொல்லுங்க’’ - என்ற கணபதி சுப்ரமணியனை புன்னகையோடு பார்த்தபடியே புறப்பட்டுப் போனார் அவர்.பத்மாசினி ‘அப்பாடா’ என்று மார்பு தழைய பெருமூச்சு விட்டாள்!

* * *

கடலோரம்!

முன்பு போல காதல் ஜோடிகள் பெரிய அளவில் இல்லை. டாய்லெட் போகும் சமயத்தைக்கூட விடாமல் பயன்படுத்தி செல்போன் வழியே பேசிக்கொண்டு விடுவதால், கடற்கரை தேவை அவர்கள் வரையில் குறைந்து விட்டது. மாறாக கிரிக்கெட் விளையாடுவோர்க்கு கடற்கரை இப்போது மிகவே பயன்படத் தொடங்கி விட்டது.

அலை அடிக்கும் இடத்தில் கோணலாய் நின்றபடி இருக்கும் கட்டுமரங்கள் கூட குறைந்து விட்டன. மீனவர்கள் நவீன நார்வே படகுகளுக்கு மாறி விட்டார்கள்.

இந்த சுண்டல் வடை சிறுவர்கள் மட்டும், ‘மனிதன் தீனி விஷயத்தில் திருந்தவே மாட்டான்’ என்பது போல ஆங்காங்கே திரிந்து கொண்டிருக்க... ஓரிடத்தில் வர்ஷன் தன் தங்கை அனுஷாவிடம் நடந்ததை எல்லாம் கூறி முடித்திருந்தான்.அவள் அலமலந்து போய் அமர்ந்திருந்தாள்.

ப்ரியா மணலில் கிடந்த கிளிஞ்சல்களைக் கொண்டு ஒரு மணல் கோபுரம் கட்டி அதன் மேல் கிளிஞ்சல்களை மூடி ஒரு கலையழகை உருவாக்கிக் கொண்டிருந்தாள். அவளிடம் ஏனோ பேச்சே இல்லை. அனுஷா அவளை அடிக்கடி பார்த்தாள். வர்ஷனும் ப்ரியாவைப் பார்த்தவனாக, ‘‘நீ கோபுரம் கட்டினது போதும் ப்ரியா... நானே பேசிகிட்டிருக்கேன். அனுகிட்ட நீயும் பேசு’’ என்றான்.

‘‘என்ன பேச... அதான் எல்லாம் முடிஞ்சு போச்சே?’’

‘‘எங்க முடிஞ்சது. அவங்க பணம் என் அக்கவுண்ட்ல இருக்கு. அதனாலயே எது வேணும்னாலும் நடக்கலாம்...’’

‘‘ஓ... உனக்கு அவ்வளவு க்ளாரிட்டி இருக்கா?’’

‘‘ப்ரியா... நான் பணத்தை எடுத்து போலீஸ் கமிஷனரைப் பார்த்து, அவர்கிட்ட கொடுத்து, நடந்ததை எல்லாம் சொல்லிடலாமான்னு பாக்கறேன்!’’

‘‘அவங்க சொன்னதை மறந்துட்டியா? ‘இந்த விஷயம் பத்தி யார்கிட்டயும் மூச்சு விடக்கூடாது. அதுக்குத்தான் இவ்வளவு பணம்’னு சொன்னாங்களே!’’

‘‘அப்ப நாமளும் மறந்துட்டு நம்ம வேலையைப் பாக்கலாம்ங்கிறியா?’’

‘‘இருட்டப் போகுது... புறப்படுவோமா?’’

‘‘எனக்கு என்ன பதில்?’’

‘‘நாளைக்கு சொல்றேன்!’’

‘‘ஏன்... யோசிக்க டைம் தேவைப்படுதா?’’

‘‘அதுக்கு மட்டும் இல்ல...’’

‘‘வேற எதுக்கு?’’

‘‘அனேகமா என் தாத்தா இப்ப வீட்ல இருக்க மாட்டார்... அவர் இருந்தா, நீ எல்லாத்தையும் மறந்துட்டு உன் வேலையைப் பார். இல்லேன்னு வை... இனிதான் நமக்கு வேலையே!’’

‘‘நீ பேசறதே புரியலியே ப்ரியா?’’

‘‘புரியும்படியாவே சொல்றேன். அனுஷா உனக்குப் பதற்றமா இருந்தா நீ வேணா கிளம்பு!’’

‘‘இல்ல ப்ரியா... எனக்கு நீங்க பெட்டிய ஒப்படைச்சதுல உடன்பாடே இல்லை. காலப் பலகணி விஷயத்தை நான் நூறு சதவீதம் நம்பறேன். எனக்கு மிஸ்ட்ரி எக்ஸ்பீரியன்ஸ் நிறையவே உண்டு. நான் பாண்டிச்சேரி அரவிந்த அன்னையோட பக்தை. அவங்களால எனக்கு நேரிட்ட அனுபவங்கள சொன்னா உங்களால நம்பவே முடியாது. ஆனா அது எதுவும் பொய்யும் கிடையாது. இருந்தாலும் லாஜிக்கே அதுல இருக்காது. அதனால நான் யார்கிட்டயும் என் எக்ஸ்பீரியன்ஸ் பத்தி பேசினதில்ல.’’

‘‘இப்ப அதைப் பத்தி எல்லாம் எதுக்கு சொல்றே?’’

‘‘நமக்கு ஒரு விஷயம் நம்ப முடியாததா இருக்கறதாலயே அது பொய் கிடையாது. அதுக்காக சொன்னேன்!’’

‘‘காலப் பலகணி ஒரு பொய்னு யாரும் சொல்லலையே...’’

‘‘அப்புறம் எதுக்காக அதை நீங்களே தேடாம ஒரு கிட்நாப் கோஷ்டிகிட்ட கொடுத்தீங்க?’’- அனுஷாவின் கேள்விக்கு மர்மமாக சிரித்த ப்ரியா, ‘‘என் தாத்தாவைப் பற்றி உங்களுக்குத் தெரியாது.

ஆனா எனக்குத் தெரியும். அவர் அப்படி எல்லாம் தூக்கிக் கொடுக்கறவர் இல்லை'' - என்றாள்.

உச்சந்தலையில் கழுகு கொத்தியது போல விடைத்தான் வர்ஷன்.

''புறப்படுங்க. என் வீட்டுக்கு போனா தெரிஞ்சிடும்'' என்றவளை விடைப்பு குறையாமல் பார்த்தான்.

''என்ன பாக்கறே... தாத்தா இந்நேரம் புறப்பட்டிருப்பார். பெட்டியில வெச்சு நாம கொடுத்ததுல நிச்சயம் முக்கியமான தகவல் இருக்க வாய்ப்பே இல்லை. அந்த கிட்நாப் கோஷ்டியும் டெல்லிக்கார சதுர்வேதியும் ஏமாறப் போறாங்க. ஆனா தாத்தா விடமாட்டார். ஏன்னா, அவர் ஜஸ்ட் கொஞ்சம் வயசான ஜேம்ஸ் பாண்ட்!''

- ப்ரியா கண்களைச் சிமிட்டியபடி சொன்னாள். வர்ஷனுக்கு ஒருபுறம் 'அப்பாடா' என்றிருந்தது. மறுபுறம் டெல்லி கோஷ்டி தன்னை எப்படியெல்லாம் துரத்துவார்களோ என்று பயமாகவும் இருந்தது!

23

''பூலாம்பட்டியில் கிடைத்த தடயங்களைத் தொடர்ந்து எனது ஆய்வுப்பணியில் விறுவிறுப்பு ஏற்பட்டது. கஞ்சமலை இரும்புக் கனிமக் கற்கள் என்னை ஆச்சரியப்படுத்தின. அந்த மலையில் வினோதமான ஆய்வு ஒன்றைச் செய்து பார்க்க நானும் என் சகாக்களும் தயாரானோம்.

ஒவ்வொருவரும் ஐந்து கிலோவுக்குக் குறையாத காந்தக் கற்களையும் பொருட்களையும் எங்கள் வசம் வைத்துக் கொண்டோம். மேலே சட்டைப் பாக்கெட்டில், கீழே பேன்ட் பாக்கெட்டில், அது போக இடுப்பைச் சுற்றியும் அவற்றை வைத்துக் கொண்டு அந்த மலையில் ஏறி இறங்க முடிவு செய்தோம். உண்மையில், ஏறும்போது அவ்வளவு கடினமாக இருந்தது. அந்த மலைப் பாறைகள் எங்களை இழுப்பதை உணர முடிந்தது.

நாங்கள் எங்கள் பலத்தைப் பயன்படுத்தி சமாளித்து நடந்தோம். சரிவுகளில் இறங்கும்போது நேர் எதிராக, முயற்சியே இல்லாமல் நடப்பது போல் உணர்ந்தோம்.

அந்த மலை முழுக்க ஒரு ஈர்ப்பு சக்தி வெளிப்பட்டபடி இருப்பதை உணர முடிந்தது. இந்த மலை மேல் மழை பெய்தால் என்னாகும் என்பது அடுத்த கேள்வியாக எழும்பியது. இரும்பும் நீரும் நேர் எதிரானவை. அப்படி இருக்க இங்குள்ள மலைப் பாறை குழிவுகளில் தேங்கியுள்ள நீர், தன் இயல்பு கெடாமல் இருக்கிறதா என்றும் சோதித்தோம். நீரின் ருசியே அலாதியாக இருந்தது.

அங்கே ஒரு குகைக்குள் ஒரு சாமியாரைச் சந்திக்க நேர்ந்தது. ஒரு அழுக்கு லுங்கிதான் அவரது உடை. அங்கேயே சோறு பொங்கி சாப்பிட்டுக் கொண்டு தங்கியிருந்தார். செங்கல் அடுப்பில் மலையில் உள்ள மரங்களை உடைத்தே விறகாக்கி சமையல் செய்தார். பெரும்பாலும் மிளகு தட்டிப் போட்டு பொங்கல் செய்து சாப்பிடுவாராம். ‘சித்தர் கோயில் வரை போய் வந்தால் உப்பு, மிளகு, அரிசி தாராளமாகக் கிடைக்கும். அது

போதுமானது’ என்றார். அவர் ஒரு தொழுநோயாளியாக இருந்தவராம்.

‘இந்த மலைக்கு வந்து ஒதுங்கிய பிறகு எனக்குப் பூரணமாக குணமாகி விட்டது. அதோடு மனம் மிக லேசாக ஆகிவிட்டதால் இங்கிருந்து செல்ல பிரியமின்றி இங்கேயே இருக்கிறேன்’ என்றார். தனக்கு வந்த தொழுநோயை அந்த மலையில் உள்ள ஒரு சுனை நீர்தான் குணப்படுத்தியது என்று அந்த சுனைக்கு எங்களை அழைத்துச் சென்றார்.”

– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து…

வர்ஷன் மளுக்கென்று பயத்தை கண்களில் காட்டினான். கடற்காற்றில் ஏற்கனவே தலைமுடி கன்னாபின்னாவென்று கலைந்து கிடக்க, அதோடு அவனைப் பார்க்க மிகவே பரிதாபமாக இருந்தது.

“என்னா.. பயமா இருக்கா?”

“பின்ன… அந்த டெல்லிக்காரனை சாதாரணமா எப்படி ப்ரியா எடுத்துக்க முடியும்?”

“ஒத்துக்கறேன் வர்ஷன். தெரிஞ்சோ தெரியாமலோ நாம இந்த காலப்பலகணி விஷயத்துல சிக்கிட்டோம். நம்ம பெரியவங்க அடிக்கடி ‘விதி… விதி…’ன்னு ஒரு வார்த்தையைப் பயன்படுத்துவாங்க. தெரியும்தானே?”

“அதுக்கென்ன இப்போ?”

‘‘அந்த விதி இப்படித்தான் வேலை செய்யும் போல இருக்கு…’’

‘‘இப்படியெல்லாம் பேசி ஆறுதல் பட்டுக்கறத விட அடுத்து என்னன்னு யோசிப்போம்!’’

‘‘அடுத்து என்ன? தாத்தா கிளம்பி இருப்பார். அவர் அந்த காலப்பலகணியை நிச்சயமா கண்டுபிடிச்சிடுவார். அதுல எந்த சந்தேகமும் இல்லை!’’

‘‘அப்ப அவருக்கு தன் உயிர் மேல எந்த பயமும் இல்லையா?’’

‘‘தாத்தாவுக்கு அன்றைய பொழுதுதான் கணக்கு. அதுலயும் அவருக்குள்ள பெரிய அளவுல சாதிக்கணும்னு ஒரு வெறியே உண்டு. சில சமயம் அவரோட ஜூனியருங்கல்லாம் அவரை ஓவர்டேக் பண்ணப்ப அவர் ரொம்பவே ஃபீல் பண்ணியிருக்கார்…’’

‘‘அவங்க எந்த வகைல உங்க தாத்தாவை ஓவர்டேக் பண்ணினாங்க?’’- அனுஷா இடையில் புகுந்து கேட்டாள்.

‘‘உலகத்துல இருக்கற அத்தனை பழங்கால நினைவுச்சின்னங்கள் பற்றியும் தாத்தா ஒரு புத்தகம் எழுதினார். ‘மான்யுமென்ட்ஸ்’ அப்படிங்கறதை ஷார்ட்டா ‘மான்’னு சுருக்கி அந்தப் புத்தகத்துக்கு பேரும் வெச்சார். புக்கோட அட்டைப்படமே மிரட்டலா இருந்தது. எகிப்து பிரமிடு, நம்ம பிரகதீஸ்வரர் கோயில் கோபுரம், மெக்கா டூம், மகாபலிபுரம் யானை சிற்பம்னு ஒரு கொலாஜ் டிராயிங்கோட ரொம்ப நல்லா இருந்தது. உள்ளே அந்த நினைவுச் சின்னங்கள் பற்றின அபூர்வ தகவல்கள் அத்தனையும் இருந்தது. ஒரு பயண இலக்கியமா அதை தாராளமா சொல்லலாம்.

அதுக்கு சாகித்ய அகாடமி மாதிரி ஒரு விருது கிடைக்கும்னு நாங்க நம்பினோம். போட்டிக்கும் அது போச்சு. கடைசி நிமிஷத்துல எல்லாம் மாறிப் போய் ஒரு சராசரி புத்தகத்துக்கு விருது கிடைச்சது...’’

‘‘எல்லா பெரிய மனுஷங்க வாழ்க்கைலயும் இது மாதிரி ஏமாற்றங்கள் இருக்கும் போல இருக்கே?’’

‘‘தாத்தா வாழ்க்கைல நிறைய... அவர் மனசு ரொம்ப வெறுத்துப் போகும்போதெல்லாம் என்னையும் கூட்டிக்கிட்டு மகாபலிபுரத்துக்குத்தான் போவார். அங்க பீச் ரிசார்ட்ல ரூம் போட்டு தங்குவோம். தாத்தா அங்கேயும் சிற்பங்களைப் பார்க்கப் போயிடுவார்.’’

‘‘பெக்கூலியர் இன்ட்ரஸ்ட்!’’

‘‘இன்ட்ரஸ்ட்ங்கற வார்த்தை அவரைப் பொறுத்தவரை ரொம்ப சின்னது. இதை ‘வெறி’ன்னு சொல்லலாம். ஒருமுறை மகாபலிபுரம் போனப்போ கடற்கரைல ஒரு சாமியாரைப் பார்த்தோம். அவர் என் தாத்தாவை வெறிச்சுப் பார்த்தார். அவர் தாத்தா கிட்ட வந்து,

‘சாகறதுக்குள்ள நீங்க இந்த உலகமே திரும்பிப் பாக்கற மாதிரி எதையாவது கண்டுபிடிப்பீங்க. குறிப்பா அது காலம் சம்மந்தப்பட்டதாவும் இருக்கும். உலகம் முழுக்க வெளியாகற பத்திரிகைகளோட அட்டைப் படத்துல உங்க புகைப்படம் வந்தே தீரும்’னு சொல்லிட்டுப் போயிட்டார்.

அவர் போன பிறகு அங்க கலைப்பொருள் விக்கற ஒருத்தர் சொன்னார். அவர் ஒரு இமயமலை சந்நியாசியாம். வருஷா வருஷம் மகாபலிபுரம் வருவாராம். யார் கூடவும் பேச மாட்டாராம். தாத்தாகிட்டதான் பேசினாராம். அவர் சொன்னா சொன்னபடி நடக்கும்னு அந்த வியாபாரி சொன்னப்ப நான் கூட சிரிச்சேன். ஆனா தாத்தா மனசுல அது ஆழமா விழுந்துடிச்சு!’’

‘‘அதனாலே இப்ப காலப்பல கணியைத்தான் உன் தாத்தா அந்த விஷயம்னு முடிவு பண்ணிட்டார்னு சொல்ல வர்றியா?’’

‘‘அதுக்குப் பிறகுதான் இந்த விஷயம் தானா தேடி வந்தது. ஆகையால தாத்தா நிச்சயமா இந்த விஷயத்துல பின்வாங்க மாட்டார்!’’

‘‘எதுக்கு சும்மா இங்க உக்கார்ந்து பேசிக்கிட்டு? வீட்டுக்குப் போய்ப் பார்ப்போமா...’’

‘‘போய் பார்க்கத்தான் வேணும்!’’

‘‘சரி கிளம்புவோம்... அனு, நீ நம்ம வீட்டுக்குப் போயிடு. நான் ப்ரியா வீட்டுக்குப் போயிட்டு வந்துடறேன்!’’

‘‘ஜாக்கிரதையா போய்ட்டு வா...’’

‘‘அனுஷா... இந்த விஷயம் நம்ம வீட்ல யாருக்கும் தெரியக்கூடாது!’’

‘‘அதை நீ சொல்லவே வேண்டாம். நான் பாத்துக்கறேன்!’’- அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தவர்களாக புறப்பட்டனர். இருளும் கலக்கத் தொடங்கி விட்டது. கடலின் நீர் வெளிமேல் கப்பல் ஒன்று போய்க் கொண்டிருந்தது! அதன் சில்லுச் சில்லான விளக்குகளின் வெளிச்சம் மிக ரசிக்கும்படியாக இருந்தது!

பங்களா கேட் முன் நின்ற காருக்கு கதவைத் திறந்து விட்டான் தங்கவேலு. காரை விட்டு இருவரும் இறங்கிய நொடியில் அருகே ஓடிவந்து, ‘‘அம்மா! முத்தழகு பாடியை ஆஸ்பத்திரியில இருந்து அவங்க வீட்டுக்குக் கொண்டு போய்ட்டாங்களா?’’ என்றுதான் கேட்டான். ப்ரியாவுக்கு பகீரென்றது!

‘‘தங்கவேலு, நீ என்ன சொல்றே... முத்தழகு இறந்துட்டாளா?’’

‘‘அட என்னம்மா... அப்ப நீங்க ஜி.ஹெச்சுக்கு போகலையா?’’

‘‘மை குட்நெஸ்...’’ - உள் ஓடினாள் ப்ரியா. ஹாலில் இடிந்துபோய் உட்கார்ந்திருந்தாள் பத்மாசினி.

‘‘அம்மா...’’

‘‘என்ன அம்மா... போனா போன இடமா? அந்தப் பெட்டிய தூக்கி எறிஞ்சிட்டு வர இவ்வளவு நேரமா உனக்கு?’’

‘‘முத்தழகுக்கு என்னம்மா ஆச்சு... முதல்ல அதைச் சொல்லு.’’

‘‘என்னத்த சொல்ல... போய்ச் சேர்ந்துட்டா! இரண்டு நாள் அந்தப் பெட்டி இந்த வீட்ல இருந்ததுக்கே ஒரு உயிர் போயாச்சு. அது தொடர்ந்து இருந்திருந்தா?’’

‘‘அந்தப் பேச்சை விடு... முத்தழகு உடம்பு இப்ப எங்கம்மா இருக்கு?’’

‘‘உங்கப்பாவுக்கு போன் பண்ணிக் கேள். சொல்வார்.’’

‘‘தாத்தா எங்கம்மா?’’

‘‘அவர் எங்க இருப்பார்! மாடில இருக்கே அவரோட பிருந்தாவனம்... அதுக்குள்ளதான்!’’

‘‘ஓ... அப்ப தாத்தா இங்கதான் இருக்காரா?’’

‘‘இங்க இல்லாம... வேற எங்கடி இருப்பார்?’’- பத்மாசினி கேட்க ப்ரியா உடனே கணபதி சுப்ரமணியனின் மாடி அறை நோக்கி ஓடினாள். பின் தொடர்ந்த வர்ஷன், ‘‘வர்ஷா...’’ என பத்மாசினி அழைக்கவும் நின்றான்.

‘‘ஆன்ட்டி...’’

‘‘அந்த சனியனைத் தூக்கிப் போட்டுட்டீங்கதானே?’’
‘‘போ... போ... போட்டுட்டோம் ஆன்ட்டி!’’

‘‘நீ பொய் சொல்லலையே?’’

‘‘ஐயோ... இல்ல ஆன்ட்டி!’’

‘‘என்னவோப்பா... பாரு! இருந்த ஒரு வேலைக்காரியும் போய்ட்டா. போலீஸ்காரங்க வந்து போட்டோல்லாம் புடிச்சிட்டுப் போனாங்க. இந்த வீட்டுல இப்படி ஒரு அசம்பாவிதம் நடக்கும்னு நான் கொஞ்சம் கூட நினைக்கலப்பா...’’

‘‘புரியுது ஆன்ட்டி... நீங்க அநாவசியமா கவலைப்படாதீங்க. எல்லாம் போகப் போக சரியாயிடும்!’’

‘‘சரியாகணும்! அதுக்கு முன்னாடி இப்ப ஒரு நல்ல வேலைக்காரி வேணும். எங்க போவேன்? பி.இ.யும், பி.டெக்.கும் முடிச்சவங்க ஆயிரக்கணக்குல இருக்காங்க. ஒரு எட்டாம் கிளாஸ் ஃபெயிலான பொண்ணு ஒருத்திகூட இல்லப்பா...’’

- முத்தழகு இறந்ததை விட, அடுத்த வேலைக்காரி கிடைக்காததற்கு பத்மாசினி வருந்துவதுதான் அதிகமாக இருந்தது. வர்ஷனும் மெல்ல நகர்ந்து படிகளில் ஏறினான்.மாடியில் கணபதி சுப்ரமணியன் தன் அறையின் சுவற்றில் பொருத்தியிருந்த மைக்கா போர்டில் ஸ்கெட்ச் பேனாவால் எதையோ எழுதியபடி இருந்தார். அவர் எழுதுவதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் ப்ரியா.

மேலே ஏதோ சுருக்கெழுத்து சங்கேத பாஷை போல புரியாதபடி ஏதோ எழுதப்பட்டிருந்தது. கீழே ‘வில்லி கோபுர உச்சி. நடுக்கலசம் - 116 திசைமானி - ஒன்பது காதம் - அஷ்டாவதாரன் அம்பலம் - அம்பலத்து ஈசானம் - அங்கே 84 திசைமானி - சோழி போடு - சோடு விடு’ என்று வரிசையாக வார்த்தைக் குறிப்புகள். அதை மௌனமாய் ப்ரியா பார்த்தபடி இருக்க, ‘‘ப்ரியா’’ என்று குரல் கொடுத்தபடி உள்ளே நுழைந்தான் வர்ஷன்.

சப்தம் கேட்ட நொடி திரும்பிய கணபதி சுப்ரமணியன், லேசான அதிர்வை முகத்தில் காட்டினார். பின் வேகமாய் போர்டில் எழுதியதை அழிக்கத் தொடங்கினார்.

‘‘என்ன தாத்தா... என்ன இதெல்லாம்?’’ என்று கேட்டபடி நாற்காலியில் அமர்ந்தாள் ப்ரியா.

‘‘ஒண்ணுமில்லம்மா... நீ அந்தப் பெட்டியைத் தூக்கிப் போட்டுட்டேதானே?’’ என்று அவர் கேட்க, ‘‘தலையை சுத்திப் போட்டாச்சு தாத்தா...’’ என்றாள் அவள்.

‘‘சந்தோஷம்... இதை உங்க அம்மாகிட்ட சொன்னியா?’’

‘‘சொல்லிட்டேன்!’’

‘‘குட்... ஆமா, உங்கப்பன் வந்துட்டானா?’’

‘‘இல்ல தாத்தா... ஆமா, நீங்க இன்னுமா புறப்படல?’’ - ப்ரியா இருபொருள்படக் கேட்டதில் அவரிடமும் திகைப்பு.

‘‘எங்கம்மா?’’

‘‘மு... முத்தழகு வீட்டுக்கு...’’ - ப்ரியா சமாளித்தாள்.

‘‘போகணும்மா... கட்டாயம் போகணும்! அவ இப்படி செத்துப் போவாள்னு கொஞ்சம்கூட நினைச்சுப் பாக்கலைம்மா...’’

‘‘நானும் வரேன்... அம்மாவையும் கூட்டிக்கிட்டே போயிட்டு வரலாம் தாத்தா!’’

‘‘நிச்சயமாம்மா... இந்தக் குடும்பத்துக்காக அவ ரொம்பவே உழைச்சவளும் கூட!’’

- இருவரும் முத்தழகுவைத் தொட்டுப் பேசிக்கொள்ள, அங்கே அறை டேபிள் மேல் ஒரு முதுகுப்புறம் அணிந்து கொள்ளும்படியான லெதர் பேக்கும், டார்ச் லைட், டூல் பாக்ஸ் போன்ற அயிட்டங்களும் இருக்க, வர்ஷன் அதைப் பார்த்தான். அவன் அதைப் பார்க்கவும், அதையெல்லாம் எடுத்து பேக்கில் வைத்தவர், ‘‘லெட்’ஸ் மூவ் - நாம கீழே போய்ப் பேசுவோம்’’ என்று அந்த அறை விளக்குகளை வேகவேகமாக அணைத்தார்.

ப்ரியாவும் வர்ஷனை அர்த்தத்தோடு பார்த்தாள். மூவரும் கீழே இறங்கி வந்தனர்.

‘‘வர்ஷா... என்னப்பா சாப்பிடறே?’’ என்று உபசாரமாகக் கேட்டாள் பத்மாசினி.

‘‘ஒண்ணும் வேண்டாம் ஆன்ட்டி. நானும் கிளம்பிட்டேன்’’ என்றான் வர்ஷன்.

‘‘ஆமாம் வர்ஷன்... நீ கிளம்பு! நாங்களும் முத்தழகு உடம்புக்கு அஞ்சலி செலுத்திட்டு வந்துடறோம்!’’ என்று ப்ரியாவும் அவனை போகச் சொன்னாள்.

‘‘நாங்களும்னு யாரை சொல்றே?’’ - பத்மாசினி கேட்டாள்.

‘‘நாம மூணு பேரும்தான்...’’

‘‘இல்லை... நான் வரல!’’

‘‘வரலையா... என்னம்மா சொல்றே?’’

‘‘நான் வரலடி... அவ உடம்ப பாக்கவே பயங்கரமா இருக்காம்ல?’’

‘‘அதுக்காக...’’

‘‘இல்லடி... நான் இங்க இருந்தே அஞ்சலி செலுத்திக்கறேன்!’’

‘‘லூசு மாதிரி பேசாதம்மா... ரெண்டு நிமிஷமாவது அங்க நின்னு ஒரு மலர் வளையம் வெச்சிட்டு வந்துடு. அப்பதான் அவ ஆத்மா சாந்தியடையும்!’’

‘‘ஆமாம்மா... புறப்படு! நாம போகலேன்னா நல்லாவும் இருக்காது...’’ என்று கணபதி சுப்ரமணியனும் கூற, பத்மாசினி திருதிருவென விழித்தாள்.

‘‘புறப்படும்மா...’’ - ப்ரியாவும் அலறினாள்.

அரைமனதாக பத்மாசினியும் புறப்படத் தயாராகி வெளியே காரில் ஏற வந்தபோது, கேட் முன்பாக ஆட்டோ ஒன்று வந்து நிற்கும் சப்தம். திறந்திருக்கும் மெயின் கேட் வழியாகப் பார்த்தபோது வள்ளுவர் இறங்கிக் கொண்டிருந்தார். திரும்பவும் வள்ளுவரைப் பார்த்த பத்மாசினிக்கு பகீர் என்றது. அப்போது வீட்டுக்குள்ளேயும் ஏதோ விழுந்தது போல சப்தம். பத்மாசினி உள்ளே போய்ப் பார்த்தாள். சமையல்கட்டில் ஒரு பிளாஸ்டிக் டப்பா! அதனுள்

பாசிப்பருப்பு. அந்த டப்பா விழுந்து சிதறியிருக்க, அதனுள் முத்தழகு பயன்படுத்திய ஒரு சிறிய சைஸ் செல்போனும் இருந்தது!

24

அந்த மலைவெளியில் பாறைகளுக்கான பரப்பில் அந்த சுனை அமைந்திருந்தது. அதில் தேங்கியிருந்த நீர் பார்ப்பதற்கு எண்ணெய் போலத் தெரிந்தது. கை வைத்தபோது நல்ல சிலுசிலுப்பு ஏற்பட்டது. ஒரு ஆச்சரியம் போல அந்த சுனை நீரில் ஓர் உயிரினம் கூட இல்லை! குறைந்தபட்சம் கல்லுக்குள் வாழும் தேரை இனத்தைச் சார்ந்த சிலவகைத் தவளைகளாவது இதுபோன்ற சுனைகளில் இருக்கும்.

அப்படியும் எதுவுமில்லை. சற்றுத் தள்ளி ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவை அருகே வரவேயில்லை. இதெல்லாமே எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. இந்நிலையில் என்னோடு வந்த ஆய்வாளர்களில் சிலர் அந்த சுனை நீரை கையால் அள்ளி முகர்ந்து பார்த்தனர். பின் ஒரு கண்ணாடி பாட்டிலில் ஆய்வுக்காக எடுத்துக்கொண்டனர்.

அந்தச் சாமியாரோ 'இந்த தண்ணீரில் மூன்று கவளங்கள் குடித்தால் போதும். பசியே எடுக்காது. பெரிதாக சிறுநீரும் பிரியாது' என்றபடியே சுனை நீரை கையால் அள்ளி அள்ளிக் குடித்தார். என்னோடு வந்த ஆய்வாளர்களில் ஒருவரோ, 'இங்கே சூரியசக்தியில் மின்சாரம் எடுக்கும் யூனிட்டை தாராளமாய் நிறுவலாம். தடையில்லாமல் மின்சாரம் கிடைக்கும். இந்த கஞ்சமலை கனிமவளம் மிகுந்த மலை மட்டுமல்ல, பல ரகசியங்களையும் தன்னகத்தே கொண்ட மலை' என்றார்.

‘அவை எப்படிப்பட்ட ரகசியங்கள்’ என நான் கேட்டேன். ‘கஞ்ச என்றால் தங்கம் என்றும் ஒரு பொருள் உண்டு. காஞ்சனம் என்பதே மருவி கஞ்ச என்றாகியிருக்க வேண்டும். எனவே இங்கே தங்கம் தொடர்பாகவும் மூலப்பொருட்கள் இருக்கக் கூடும்’ என்றார்.தங்கம் என்றவுடனேயே எல்லோரிடமும் ஒரு பரபரப்பு ஏற்பட்டு விட்டது. எனக்கு உடனே நீலகிரி மலைத்தொடரில் சில இடங்களில் தங்கம் அரித்தெடுக்கப்படுவது நினைவுக்கு வந்தது. இங்கேயும் கூட இருக்கலாம். ஆனால் அதைக் கண்டறிவது ஒரு தனி மனிதனுக்கு சாத்தியமில்லை.

பூமிக்குள் எண்ணெய் வளத்தைக் கண்டறிய மத்திய அரசு பல அமைப்புகளைக் கொண்டிருப்பது போல இதற்கும் அமைப்பு வேண்டும் என்றே எனக்குத் தோன்றியது. அந்த சுனைக்கு சற்றுத் தள்ளி ஒரு சிறிய குகை போன்ற பரப்பு. அந்தக் குகை சுவற்றில் லிங்க வடிவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அந்த லிங்க வடிவுக்கு நேர் எதிரில் முப்பது டிகிரி சரிவில் ஒரு கற்பலகை வெட்டப்பட்டிருந்தது.

அங்கே போய் சப்பணமிட்டு அமர்ந்து லிங்கத்தைப் பார்த்தபோது லிங்கத்தின் தலைப்பாகத்துக்கு மேல் உள்ள சரிவான பாறைப் பரப்பு தெரியாமல், மேலே உள்ள வானம் தெளிவாகத் தெரிந்தது. அந்த கற்பலகைக்கு அருகில் நிறையவே கல்வெட்டு வாசகங்கள்!’’ – கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அந்த செல்போனை குனிந்து கையில் எடுத்த ப்ரியாவுக்குள் முத்தழகுவின் நினைவு எழும்பியது. பத்மாசினி கவனித்தவளாக ‘‘இது முத்தழகியோட செல்போன்... அவ இங்கதான் எங்கேயாவது

வைப்பா. ஓ... பாசிப்பருப்பு டப்பாவுல இருந்ததா?'' என்று கேள்வியைக் கேட்டு பதிலையும் சொல்லிக்கொண்டாள்.

''ஆமா... இது எப்படி கீழ விழுந்தது?'' - என்றும் கேட்டவள் எதிரிலேயே எலி ஒன்று ஓடியது.''ஓ... எலியோட வேலையா?'' என்று உடனே அதற்கும் பதிலைச் சொல்லிக்கொள்ள, ஹாலில் கணபதி சுப்ரமணியனும் வள்ளுவரும் வந்து அமர்ந்தபடி பேசுவது கேட்டது.

''என்ன வள்ளுவரே... திடீர்னு வந்து நிக்கறீங்க?''

''ஒண்ணுமில்ல... என் கணக்கு எப்படி பொய்யாச்சுங்கறத கண்டுபிடிச்சுட்டேன். அதான் உங்கள பார்த்து பேசிட்டுப் போக வந்தேன்'' என்று ஆரம்பித்தார் வள்ளுவர்.

''நினைச்சேன்... நானும் உங்கள மாதிரிதான்! ஒரு தப்பு நடந்துட்டா, அது சரியாகறவரை விடமாட்டேன். பை த பை... இப்ப உங்ககூட மனம்விட்டு பேசற நிலைல நான் இல்ல. இங்க வீட்லயும் ஒரு கெட்டது நடந்துடுச்சு!''

‘‘கெட்டதா?’’

- வள்ளுவரிடம் முத்தழகுவுக்கு நேரிட்ட விபத்தையும் அவள் இறந்து விட்டதையும் கூறி முடித்தார் கணபதி சுப்ரமணியன்.வள்ளுவர் நெற்றியில் சுருக்கம் விழுந்து, சலனம் நன்கு தெரிந்தது. கையில் முத்தழகுவின் செல்போனுடன் ப்ரியாவும், பத்மாசினியும் வந்து நின்ற நிலையில் இருவரையும் கவனித்தனர்.

‘‘நீங்க எந்த நேரத்துல வந்தீங்களோ... வீட்ல கரன்ட்டுலயும் பிரச்னை; என் வேலைக்காரியும் செத்துட்டா. நல்லவேளை... அந்தப் பெட்டியைத் தூக்கி எறிஞ்சிட்டோம். இனியாவது எல்லாம் நல்லபடி நடக்கட்டும்...’’ என்று வள்ளுவருக்கு பெட்டியின் நிலையையும் சொன்னாள் பத்மாசினி.

வள்ளுவர் முகத்தில் மேலும் அதிர்வு!

‘‘சரி... சரி... புறப்படுங்க! எழவுக்கு புறப்பட்டா நடுவுல உட்காரக்கூடாதும்பாங்க’’ என்றும் படபடத்தாள்.

ப்ரியா வள்ளுவரையே கூர்மையாகப் பார்த்தாள். அவரிடம் ஒரே தடுமாற்றம்.

‘‘என்ன மிஸ்டர் வள்ளுவர்... பெட்டியைத் தூக்கிப் போட்டுட்டோம்னு சொன்ன உடனேயே பேச்சையே காணோம்? நீங்க அதை எதிர்பார்க்கலையா?’’

‘‘ஆமாம்... நீங்க தூக்கிப் போடுவீங்கன்னு நான் நினைச்சே பாக்கல!’’

‘‘நீங்கதானே ‘உங்க விருப்பம்... என்ன வேணா செய்துக்கங்க’ன்னு சொன்னீங்க?’’

‘‘ஆமா... சொன்னேன்! ஆனா...’’

‘‘எதுவா இருந்தாலும் அப்புறமா பேசிக்குங்க. புறப்படுங்க...’’ - பத்மாசினி படபடத்தாள். ப்ரியா மௌனமாக பார்த்தபடியே இருந்தாள். வர்ஷன் போய்விட்டிருந்தான்.

‘‘மிஸ்டர் வள்ளுவர்! நீங்க புறப்படுங்க. நான் அப்புறமா உங்களுக்குப் போன் பண்றேன். பை த பை, உங்க கணக்கு எதனால பொய்யாச்சுங்கறத நான் தெரிஞ்சிக்கறதுல எந்த பிரயோஜனமும் இருக்கறமாதிரி தெரியல’’ - எனும் கணபதி சுப்ரமணியனின் பதிலில், அவர் வள்ளுவரிடம் இனி பேச எதுவு மில்லை என்று கூறுகிற மாதிரிதான் தோன்றியது.வள்ளுவருக்கும் புரிந்தது. அடுத்த நொடியே எழுந்து கொண்டார். எழுந்து நின்றதில் ஒரு இனம் புரியாத வேகம்.

‘‘சரிங்க! நீங்க போய் துக்கம் கேட்டுட்டு வாங்க. ஆத்மாக்களை மட்டும் தவிக்க விடவே கூடாது. அதுலயும் உங்க வேலைக்காரி ரொம்ப துர்லபமா இறந்துட்டவ... அலை பாய்ஞ்சுக்கிட்டிருப்பா. நீங்க போய் விடப் போற கண்ணீர்தான் அவகிட்ட இருந்து உங்கள காப்பாத்தும். நானும் அவளுக்காக பிரார்த்தனை செய்துக்கறேன். சிவன் கோயிலுக்குப் போய் கோபுரத்துல மோட்ச தீபம் ஏற்ற முடியுமான்னும் பாக்கறேன்...’’ என்றவரை ப்ரியா மிக ஆச்சரியமாகப் பார்த்தாள்.

வள்ளுவர் விறுவிறுவென்று கிளம்பி விட்டார். அவர் பேச்சில் குறிப்பிட்ட ஆத்மா, அதன் துடிப்பு, மோட்ச தீபம் போன்ற பல விஷயங்கள் அவளுக்கு மிகவே புதிது.

அதே சிந்தனையாக காரில் மூவரும் புறப்பட்டனர். ப்ரியாவின் கையிலேயே இருந்தது முத்தழகுவின் செல்போன். அதில் திடீரென்று மெஸேஜ் ஒன்று வந்ததற்கான சிணுங்கல்! ஆர்வமாக மெஸேஜ் பாக்ஸை திறந்தபோது நிறைய மெஸேஜ்கள் கண்ணில் பட்டன!

‘எடுத்திட்டியா?’

‘எப்ப எடுப்பே?’

‘ஏதாவது உதவி வேணுமா?’

இறுதியாக ‘பயப்படாதே...’

- இப்படி ஓரிரு வார்த்தைகளில் செய்திகள். ப்ரியாவுக்குள் நமைச்சல் ஆரம்பமாயிற்று. அவ்வளவும் ஒரே எண்ணில் இருந்து வந்திருந்தன. அருகில் அமர்ந்திருந்த பத்மாசினி அவள் யோசிப்பதைப் பார்த்து, ‘‘என்னடி யோசனை... அவ செல்லுல யார்கிட்ட இருந்து மெஸேஜ்?’’ என்று மிக சகஜமாகக் கேட்டாள்.

‘‘ஒண்ணுமில்லம்மா... இது விளம்பர மெஸேஜ்!’’ என்று சமாளித்தாள். கணபதி சுப்ரமணியனோ எதுவும் பேசாமல் தெருவைப் பார்த்தபடியே வந்தார்.

‘‘தாத்ஸ்’’ - அவரை அழைத்தாள்.

‘‘உம்...’’

‘‘வள்ளுவர் பாவம்... நிறைய பேசற மூட்ல வந்தவரை மூட் அவுட்டாக்கி அனுப்பிட்டோம். இல்ல?’’

‘‘யெஸ்... யெஸ்...’’

‘‘அது என்ன மோட்ச தீபம் - சிவன் கோயில்னு எல்லாம் சொன்னாரே?’’

‘‘இறந்தவங்களுக்காக சிவன் கோயில்ல மோட்ச தீபம் போடறது ஒரு வழக்கம். அதனால இறந்த ஆத்மாவுக்கு சாந்தி கிடைக்கும்ங்கறது ஒரு நம்பிக்கை!’’

‘‘அப்ப முத்தழகுவோட ஆத்மா இப்ப சாந்தியடையாம தவிச்சுக்கிட்டா இருக்கும்?’’

‘‘அதுவும் ஒரு யூகம்தான்... அநியாயமா இல்ல செத்திருக்கா!’’

‘‘அப்ப நியாயமா செத்தா எதுவுமில்லியா?’’

‘‘அப்படித்தான் இருக்கணும்!’’

‘‘இருக்கணுமா... அப்ப உங்க பதில்ல ஒரு டவுட்டும் இருக்கே?’’

‘‘என்னம்மா பண்ணச் சொல்றே? ஐ ஹேவ் நோ எக்ஸ்பிரீயன்ஸ் இன் கோஸ்ட் ஏரியா!’’

‘‘எவ்வளவோ மண்டை ஓடுகளை எல்லாம் எடுத்துருப்பீங்க... அப்பல்லாம்?’’

‘‘நந்திங் ஹேப்பண்ட். அப்புறம் உனக்கொரு விஷயம்!’’

‘‘என்ன தாத்தா..?’’

‘‘நான் நாளைக்குக் காலைலயே கொடைக்கானல் புறப்படறேன்...’’

‘‘எதுக்கு தாத்ஸ்..?’’

‘‘ஐ நீட் சம் ரெஸ்ட். வர ஒரு மாசம் கூட ஆகலாம்!’’

‘‘ஒரு மாசமா?’’

‘‘ஆமா... எக்ஸ்டென்ட் ஆகலாம். ஆனா குறையாது!’’

‘‘என்ன திடீர்னு?’’ - ப்ரியா சிணுங்க, பத்மாசினி இடையிட்டாள்.

‘‘ஏண்டி குடைஞ்சிக்கிட்டே இருக்கே? கொடைக்கானல்ல நம்ம ரெஸ்ட் ஹவுஸ் எதுக்கு இருக்கு? போய் நல்லா ரெஸ்ட் எடுத்துட்டுதான் வரட்டுமே... என்னைக் கேட்டா, இந்த பாழாப் போன மெட்ராஸ் வெயில்ல கருவாடா ஆகறதுக்கு கொடைக்கானல்லயே பர்மனென்ட்டா இருந்துடலாம். உங்க அப்பா மட்டும் ஓ.கே.ன்னா நான் இன்னிக்கே கிளம்பிடுவேன்...’’

‘‘நோ பிராப்ளம் பத்மா... நான் இனி சென்னைல இருக்கப் போறது கூட ரொம்ப ரேர்தான்! கவலைப்படாதே, என்னைப் பாக்கறேன்னு யாரும் வந்து உன்னை இனி தொந்தரவு பண்ண மாட்டாங்க. என் ரூமை மட்டும் எதுவும் பண்ணிடாதே! நான் டெல்லில ஒருவேளை செட்டில் ஆகலாம். அப்ப காலி பண்ணிக் கொடுத்துடறேன்!’’

- கணபதி சுப்ரமணியன் கொடைக்கானலில் இருந்து டெல்லிக்கே போகப் போவதாகச் சொன்னது ப்ரியாவை மிக வேகமாக பல கணக்குகள் போடச் செய்தது.

அதற்குள் ஜி.எச்சும் வந்து, காரும் நின்றது. கார் நின்ற இடத்தில் அனந்தகிருஷ்ணன் காத்துக் கொண்டிருந்தார். முகத்தில் கோப ரேகைகள்.

‘‘ஏன் இவ்வளவு நேரம்... வேகமாக வர்றதுக்கென்ன?’’ என்று கேட்டுக் கொண்டே நடந்தார். மூக்கைப் பிய்த்து எறிந்து விடலாம் போல ஒருவித மருந்து நெடி. குறுக்கும் நெடுக்குமாய் ஸ்ட்ரெச்சர்களின் ஓட்டங்கள். இளம் பெண்ணொருத்தி மெழுகு பூசிய ஆப்பிள்களை வலைப் பை ஒன்றில் போட்டு நீட்டியவளாய் ‘‘யக்க... யக்கா... அம்பதே ரூவாக்கா... ஆஸ்திரேலியா ஆப்பிள்கா’’ - என்றாள்.

அலட்சியப்படுத்தியபடியேதான் நடக்க வேண்டி இருந்தது.

‘‘முப்பது ரூவா... முப்பது ரூவா...’’ - என்று தோள் மேல் குவியலாக இயர் போன் கேபிள் வயர்கள் தொங்க ஒருவன் கடந்து போனான். பலர் காதில் அந்த இயர் போன் இருந்தது.

ஆஸ்திரேலியா ஆப்பிளும், இயர்போன் வயரும் ஒரு ஆஸ்பிடல் வாசலில் கூவி விற்கும் விஷயங்களா? இந்தியப் பொருளாதாரத்தின் உலகமயமான தன்மை அந்த இருவரிடையே ஒரு மின்வெட்டு போல தோன்றிவிட்டு சென்றது. அப்போது காக்கி பேன்ட்டும் வெள்ளை சட்டையும் அணிந்த கறுப்பான ஒருவன் அனந்தகிருஷ்ணனிடம் வந்து, ‘‘பாடியை எடுத்துப் பாக்கற மாதிரி முன்னால போட்ருக்கேன் சார். பாத்துப் போட்டுக் கொடுங்க சார்...’’ என்றான்.

அனந்தகிருஷ்ணன் பதில் பேசாமல் நடந்தார். மார்ச்சுவரிக்கு வெளியே இரண்டு மூன்றாண்டு வளர்ச்சியில் சன்னமான வேப்ப மரங்கள். மரநிழல்களில் மனிதக் கூட்டங்கள்.முத்தழகு குடும்பத்தார் ஒரு மரத்தின் கீழ் இருக்க, அனந்தகிருஷ்ணனோடு பத்மாசினி வரவும் முத்தழகுவின் தாய்க்காரி ஓட்டமாய் ஓடி வந்தாள்.

‘‘யம்மா... வந்துட்டீங்களா! பாவி மக இப்படி பண்ணிட்டாளேம்மா...உடம்பையும் கொடுக்காம இழுத்துக்கிட்டே இருக்காங்கம்மா...’’ என்று பெரிதாக அலறினாள்.

‘‘இப்ப தந்துடுவாங்க... ஃபார்மாலிட்டீஸ்லாம் முடிஞ்சிடிச்சு. வேனுக்கும் ஏற்பாடு செய்துட்டேன்’’ என்று அவர்களை ஆற்றுப்படுத்தினார் அனந்தகிருஷ்ணன். அவரே ஒரு மாலையையும் வாங்கி வைத்திருந்தார். அதை பத்மாசினி கையில் தந்து, ‘‘போ பத்மா... போட்டுட்டு நிக்காம கிளம்பி போய்க்கிட்டே இரு. ரொம்ப மோசமான வைப்ரேஷன் உள்ள இடம் இது. நான் எல்லாத்தையும் செட்டில் பண்ணிட்டு வந்துட்றேன்’’ - என்றார்.

பத்மாசினியும் ப்ரியாவும் சற்றுத் தடுமாற, அந்த காக்கி பேன்ட்காரன் ‘‘நீங்க வாங்கம்மா...’’ என்று அவர்களை மார்ச்சுவரி அறை நோக்கி அழைத்துச் சென்றான்.ப்ரியா முதல் தடவையாக வந்திருக்கிறாள். இதுவரை பார்த்திராத சூழல்! ஆங்காங்கே அழுகை சப்தம். இடையிடையே சாராய வாடை.

அறை முகப்பருகே சென்று மரக்கதவைத் திறந்தான். ஒரு மரபெஞ்சின் மேல் முகம் மட்டும் தெரிய வெள்ளைத்துணி மூட்டையாகக் கிடந்தாள் முத்தழகு. அவளுக்குப் பின்னால்

தரைப்பரப்பெங்கும் கன்னா பின்னாவென்று உடல்கள்... உடல்கள்... மார்பு மேல் ஸ்கெட்ச் பேனாவால் போடப்பட்ட எண்களுடன்!

‘‘யம்மா! மளார்னு மாலைய போட்டு காலத் தொட்டு கும்பிட்டுட்டு விசுக்குன்னு கிளம்புங்க. கத்தி போடற டாக்டர் பாத்தா கத்துவார். டெலிவரி நோட் வரவும் பாடியைத் தூக்கி விட்ருவோம்...’’ - அவன் கேட்காமலே எல்லாம் சொன்னான்.பத்மாசினிக்கு ஏக அருவருப்பாய் இருக்க, மாலையை அவசரமாகப் போட்டுவிட்டு, முகத்தை மட்டும் ஒரு பார்வை பார்த்து விட்டு வேகமாகத் திரும்பினாள்.

ப்ரியா சற்று நிதானித்து ஏறிட்டாள். ‘இவ்வளவுதான் மனித வாழ்வு’ என்பது போல பலப்பல உடம்புகள். அந்த இடத்திலும் பணத்தை மட்டுமே குறிவைத்த ஒரு ஓட்டம்... அந்த மாலைகூட மறு விற்பனைக்காக லாவகமாகக் கழற்றப்பட்டது. பெருமூச்சோடு அங்கிருந்து வெளியே வந்தாள். கணபதி சுப்ரமணியனைத்தான் காணவில்லை!

25

கஞ்சமலையின் குகைப் பரப்பை ஒட்டி, ஒரு லிங்க வடிவ குடவரை சிற்பத்தின் அருகே, அனேக கல்வெட்டு எழுத்துகள் காணப்பட்டன. நான் அவற்றைப் புகைப்படம் எடுத்துக்கொண்டேன். கல்வெட்டு எழுத்துகளை தெளிவாகக் காண எங்கள் துறை நிறைய வழிமுறைகளைக் கொண்டுள்ளது.

முதலில் ஒரு பிரஷ்ஷால் சுத்தம் செய்வது, பின் ரசாயனத் தண்ணீர் கொண்டு ஸ்ப்ரே செய்வது, அதற்குப்பின் கற்பாறை மேல் சுண்ணாம்புப் பூச்சை பூசுவது, அதற்கும் மேலாக அதை

அழிப்பது, பின் கறுப்புத்தாள் கொண்டு ஒத்தி எடுத்தால் கல்வெட்டு எழுத்துக்கள் தாளில் அச்சாக்கம் செய்த மாதிரி ஒட்டிக்கொண்டு வெளிப்படும். கறுப்புத்தாளில் வெள்ளை எழுத்துகள் துல்லியமாக தெரியும்.

அந்த நாளில் கல்வெட்டுகளில் வட்டெழுத்துகள்தான் அதிகம் பயன்படுத்தப்பட்டன. அது போக, பிராமி, தேவநாகரி, பாலி என்று அந்நாளைய மொழி எழுத்துகள்தான் கல்வெட்டு எழுத்துகளாக விளங்குகின்றன. எழுத்துகளை வைத்தே ஓரளவு அவை எழுதப்பட்ட காலத்தைச் சொல்லிவிட முடியும். ஒரு ஐந்நூறு ஆண்டுகளுக்கு உட்பட்ட கால அளவில்தான் தமிழ் எழுத்துகள் அதிகம் பயன்பட்டன. அதற்குமுன் தமிழ் எழுத்து என்பது ஏடுகளுக்கான எழுத்தாகவே இருந்து வந்தது. தமிழர்கள் அதிகம் கல்வெட்டு முறைக்கு வரவில்லை.

கல்வெட்டு என்றாலே பௌத்தர்களும் சமணர்களுமே முன் நின்றனர். இவர்கள் தமிழை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. அதுவும்கூட இவர்கள் தமிழ் மண்ணில் கால் ஊன்றாமல் போகக் காரணமாக இருக்கலாம். சிலரோ, ‘சைவம் இவர்களை வளர விடாமல் தடுத்துவிட்டது. ஞானசம்பந்தர், அப்பர் போன்றவர்கள் அரண் போல் நின்று தடுத்து விட்டனர்’ என்கின்றனர்.

எல்லாவற்றிலும் கொஞ்சம் போல உண்மை இருக்கவே செய்கிறது. இங்கே நான் புகைப்படம் எடுத்த கல்வெட்டில் கொம்பெழுத்துகள் இருந்தன. ஒற்றைச்சுழி கொம்பு, இரட்டைச்சுழி கொம்பு, கால் வாங்குதல் எனும் துணை எழுத்து என்று எல்லாமே காணப்பட்டன. அதை வைத்துப் பார்த்தபோது ‘மிகச் சமீபமாகவே செதுக்கப்பட்டிருக்க வேண்டும்’ என்று நான் கருதினேன்.

குறிப்பாக பெஸ்கி எனப்படும் வீரமாமுனிவர் காலத்துக்குப் பிறகே என்கிற முடிவுக்கு நான் வந்தேன். இவரே முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி, முக்காற்புள்ளி, ஆச்சரியக்குறி, இணைப்புச் சிறுகோடு, பிறை அடைப்புக்குறி என்று பலவற்றை நம் மொழியோடு சேர்த்து அவற்றைப் பயன்படுத்தியும் காட்டியவர்.

இத்தாலி நாட்டுக்கார பெஸ்கியின் காலம் 1680ம் ஆண்டிலிருந்து 1746 வரை ஆகும். எனவே, இது அவருக்குப் பிந்தைய கால எழுத்து என்று முடிவு செய்து, அதை இன்றைய தமிழ் மொழிக்கு மொழி மாற்றம் செய்தபோது ஆச்சரியமான தகவல் ஒன்று அதில் இருந்தது!" - கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

கணபதி சுப்ரமணியனைக் காணவில்லை!

பத்மாசினியும், ப்ரியாவும் நாலாபுறமும் பார்த்தனர். திரைப்படத்து ரீ ரெக்கார்டிங் போல பின்புலத்தில் அழுகை, புலம்பல், விரட்டல், பிச்சை, வியாபாரக்குரல் என்று கலவையான சத்தங்கள்!அனந்தகிருஷ்ணன் ஓடி வந்து அவர்களை அணைத்தபடி அழைத்துக்கொண்டு அந்த பிராந்தியத்தை விட்டே விலகிச் சென்றார்.

சென்னையில் நிறையவே குடிசைப்பகுதிகளைப் பார்த்திருக்கிறாள் ப்ரியா. மின்சார ரயிலில் பயணிக்கும்போது கூவத்தின் நாற்றத்தை சைதாப்பேட்டை பாலத்தில் உணர்ந்திருக்கிறாள். ஆனால் மனிதர்களும் பிணங்களும் கூடிக் கிடக்கும் ஒரு பகுதியை இப்போதுதான் அவள் பார்க்க நேர்கிறது.

அது ப்ரியாவுக்குள் ஏராளமான சலனத்தை ஏற்படுத்தி விட்டதோடு, தாத்தா கணபதி சுப்ரமணியனைக் காணாததும், அவர் வராததும் பெரிய உறுத்தலாக இருந்தது. நடந்தபடியே கேட்டாள்.

‘‘அப்பா... தாத்தா எங்க?’’

‘‘யாருக்குத் தெரியும்... இங்கதான் எங்கேயாவது இருப்பார்!’’

‘‘காணோம்பா... அவரும் முத்தழகுவைப் பாக்கத்தான் எங்க கூட வந்தார்!’’

‘‘ஒருவேளை கார்கிட்ட இருக்கலாம். அவருக்கு இந்த ஸ்மெல் பிடிக்காது!’’

‘‘நோ... தாத்தாவுக்கு இதெல்லாம் மேட்டரே கிடையாது!’’ - பேசிக்கொண்டே காரை நெருங்கினர். டோக்கன் போடுபவன் ஓடி வந்து நின்றான்.

எரிச்சல் பீறிட்டது ப்ரியாவிடம்…‘‘போ மேன் அந்தப் பக்கம்! ஒரு காருக்கு எத்தனை பேர் டோக்கன் போடுவீங்க? இது அரசாங்க இடம். இதுல உங்களுக்கு ஒரு வாழ்வு. கேட்டா, ‘எத்தனை லட்சத்துக்கு குத்தகை எடுத்துருக்கேன் தெரியுமா’ன்னு ஆரம்பிச்சிடுவீங்க. உங்களுக்கு இடங்கொடுத்தா, இங்க மூச்சு விடறதுக்கும் டோக்கன் போடுவீங்க!’’ - வெடித்தாள்.

அவளது தீர்க்கமான எதிர்ப்பின்முன் அவன் சற்று மடங்கித்தான் போனான். காரில் கணபதி சுப்ரமணியன் இல்லை!

‘‘அப்பா… அவர் எங்க கூடவேதாம்ப்பா வந்தார்!’’ என்று சிணுங்கினாள் ப்ரியா.

‘‘போனை எடு. எங்க ஒழிஞ்சார்னு கேள்…’’ - என்ற அனந்த கிருஷ்ணன் முன் ப்ரியா வேகமானாள்.

ஒரு கையாலேயே செல்போனை எடுத்து அந்த ஐந்து விரல்களை மட்டுமே பயன்படுத்தி மிக வேகமாய் அவள் கணபதி சுப்ரமணியனை தொடர்புகொண்டாள். ஆண்ட்ராய்டு போனின் திரையில் அவரது அழகிய புன்னகை முகம்!

எல்லோரும் கேட்கட்டும் என்று ஸ்பீக்கரை ஆன் செய்தாள். ‘ஸ்விட்ச் ஆஃப்’ என்கிற பதிவேற்றப்பட்ட குரல் ஒலித்தது.

‘‘அப்பா…’’

‘‘எங்க போனார் இவர்?’’

‘‘எங்கேயோ போகட்டும். எப்பவும் எல்லாருக்கும் ஒருவழின்னா அவருக்கு மட்டும் தனி வழி. முதல்ல காரை எடுங்க. எனக்கு இந்த

இடத்தை விட்டுப் போனா போதும்னு இருக்கு!'' - பத்மாசினி படபடத்தாள்.

மணி இரவு ஒன்பதரை! அருகிலிருந்த விளக்குக் கம்ப ஒளியில் அவர்கள் ஓரளவு தெரிந்திட, ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி பத்மாசினியை நெருங்கியவளாக ''நீங்க சிங்கர் பத்மாசினிதானே'' எனக் கேட்க, பத்மாசினியிடம் ஒரு சிறு மாற்றம். புன்னகைக்கு மாறி ஆமோதித்தாள். இருவரும் பேசத் தொடங்க, அனந்தகிருஷ்ணன் ப்ரியாவிடம், ''உன்கிட்ட நான் முக்கியமா ஒரு விஷயம் சொல்லணும்மா'' என்று ஆரம்பித்தார்.

''என்னப்பா...?''

''முத்தழகு சாகும்போது என்கூட பேச ரொம்பவே ட்ரை பண்ணியிருக்கா. பக்கத்துல இருந்த நர்ஸ் சொன்னாங்க. வள்ளுவர் கொண்டு வந்த அந்தப் பெட்டியைப் பத்தித்தான் பேச விரும்பியிருக்கா. 'பெட்டி... பெட்டி...'ன்னும் முனகியிருக்கா!''

''அப்படியா?''

''ஆமா... சாகற நிலைல ஒருத்தி பெட்டி பத்தி பேச நினைச்சா அப்ப ஏதோ முக்கியமான ஒண்ணாதானே இருக்கணும்?''

''அப்சல்யூட்லி...''- இருவரின் இடையே பத்மாசினி அந்த ரசிகையை விட்டு விலகி வந்தவளாக, ''புறப்படலாம்'' என்றபடியே காரில் ஏறினாள்.

''அம்மா, தாத்தா இன்னும் வரலை...''

‘‘அவர் எங்க ஒழிஞ்சாரோ... சின்னப்புள்ளையா என்ன? ஆட்டோவோ, டாக்சியோ பிடிச்சி வரட்டும்...’’ - என்றாள். அனந்தகிருஷ்ணனும் ‘‘புறப்படுங்க... இங்கதான் யாராவது டாக்டர் கிட்ட பேசிக்கிட்டிருப்பார். நான் பார்த்து கூட்டிக்கிட்டு வர்றேன்!’’ என்றார்.

கார் புறப்படத் தயாரானது. புறப்பட்டபோது கார் கதவு கண்ணாடியை இறக்கி, ‘‘நீங்க எப்ப வருவீங்க?’’ என்று அனந்தகிருஷ்ணனைக் கேட்டாள் பத்மாசினி.

‘‘தெரியாது. எல்லாத்தையும் பக்காவா செட்டில் பண்ணிட்டுத்தான் வருவேன். இந்த மாதிரி விஷயத்துல அலட்சியமா இருந்தா பின்னால பெரிய கேஸ் ஆயிடும். பத்திரிகையும் டி.வியும் கான்ட்ரவர்ஸிக்கு அலை அலைன்னு அலையுறாங்க...

அப்புறம் ‘மர்மப் பெட்டி - விபரீத விபத்து’ன்னு எதையாவது ஹெட்லைனா போட்டு அதுதான் இந்தத் தமிழ்நாட்டுக்கே முக்கியமான பிரச்னைங்குற மாதிரி சித்தரிச்சிடுவாங்க’’ என்ற அனந்த கிருஷ்ணனை ஒருவித கோபத்தோடு பார்த்தாள் பத்மாசினி.

‘‘இங்கே வர்றதுக்காகக் கிளம்பும்போது திரும்ப வந்துட்டார் அந்த வள்ளுவர். எனக்கு பகீர்னு ஆயிடுச்சு...’’ என்றாள் அந்தக் கோபம் அடங்காமல்!

‘‘சரி... சரி... புறப்படு! எல்லாத்தையும் அப்புறமா பேசிக்கலாம்’’ என அவர் சொன்னதும், கார் சீறிக்கொண்டு டிராஃபிக்கில் கலந்தது.

* * *

அபார்ட்மென்ட்டின் மொட்டை மாடி.

கையில் பீர் பாட்டிலுடன் பெர்முடாஸ், டி-ஷர்ட் என்று வர்ஷன் நின்று கொண்டிருந்தான். எதிரில் இரவு பத்து மணியின் சென்னை நகரத்து மின்னொளிப் புள்ளிகள்! வானிலும் நட்சத்திரப் புள்ளிகள். இரவு நேர வங்காள விரிகுடாவின் மெல்லிய குளிர்காற்று உடலுபுக்கு இதமாக இருந்தது. மனதுதான் மாலையும் கழுத்துமாக நிற்கும் பலியாடாகத் தன்னை உணர்ந்தபடி இருந்தது. பெர்முடாஸ் பாக்கெட்டில் செல்போன்! பீர் பாட்டிலை ஒரு முழுங்கு போட்டுவிட்டு போனில் பேங்க் அக்கவுன்ட் பக்கமாய் போய்ப் பார்த்தான்.

டோட்டல் பேலன்ஸ் ஐம்பது லட்ச ரூபாயைக் கடந்து மிரட்டியது. பேன் கார்டு நம்பர் தந்தது நினைவுக்கு வந்தது. ஒரு பெரிய ட்ரான்சாக்ஷன்! ஐ.டி. காரர்கள் நிச்சயம் என்கொயரி செய்வார்கள். எதற்கு இந்தத் தொகை என்று கேட்பார்கள். கேட்டால், ‘அபார்ட்மென்ட் வாங்க’ என்று கூறிவிடலாமா?

அவனுக்குள் எண்ணங்கள் குமிழ் குமிழாக வெடிப்பது போல் ஒரு பிரமை.‘எப்படி சிலர் ஆயிரக்கணக்கான கோடிகளை வைத்திருக்கிறார்கள்? இந்த நடிகர்கள் தங்கள் கோடி கோடி சம்பளப் பணத்தை எப்படி பாதுகாப்பார்கள்? எவ்வளவுதான் நிலம் வாங்கிப் போட முடியும்?’ - அவனுக்குள் ஒரே கொந்தளிப்பு. இடையிட்டாள் ப்ரியா, ‘முன்பே வா என் அன்பே வா’ ரிங்டோனில்.

‘‘சொல் ப்ரியா...’’

‘‘மொட்டை மாடியிலயா இருக்கே?’’

‘‘ம்... எப்படித் தெரியும்?’’

‘‘காத்தோட சத்தம் உன் குரலைத் தடுக்குதே...’’

‘‘உனக்கு பயங்கர ஐ.க்யூ...’’

‘‘உன் பாராட்டை ரசிக்கற மனநிலையில நானில்லைடா...’’

‘‘நான் மட்டும் என்ன? பேங்க் அக்கவுன்ட்ல பேலன்ஸை பாத்துப் பாத்து பயந்துக்கிட்டிருக்கேன்!’’

‘‘அதவிடு... இங்க தாத்தா எஸ்ஸாயிட்டார்!’’

‘‘வாட்..?’’

‘‘எஸ்ஸாயிட்டார்னா தெரியாதா... எஸ்கேப் மேன்!’’

‘‘அவர் என்ன ஜெயில்லயா இருந்தார்... எஸ்கேப் ஆக?’’

‘‘மொக்க போடாத வர்ஷன். முத்தழகுவைப் பாக்க ஹாஸ்பிடல் போன இடத்துல அவரைக் காணலை!’’

‘‘புரியும்படி சொல்லு...’’

- அவளும் விலாவாரியாகச் சொல்லி முடித்தாள்.

‘‘போன் பண்ணிப் பார்த்தியா?’’

‘‘ஸ்விட்ச் ஆஃப்!’’

‘‘காலைல கொடைக்கானல் புறப்படப் போறேன்று உங்ககிட்ட சொன்னவர், ஹாஸ்பிடல்ல காணோம்னா இடிக்குதே...’’

‘‘என்ன இடிக்குது?’’

‘‘உன் ஐ.க்யூவுக்கு இது கூடவா புரியல! அவர் காணாமப் போக குழந்தையில்லை. யாரோ கடத்தியிருக்காங்க...’’

‘‘பயமுறுத்தாதடா...’’

‘‘ஆமா... நான் பேய் பாரு, உன்ன பயமுறுத்த...’’
‘‘அப்ப யாரா இருக்கும்?’’

‘‘யாரா இருக்குமாவா? எல்லாம் அந்த சதுர்வேதி ஆட்களாதான் இருக்கும்!’’

‘‘அவங்ககிட்டதான் பெட்டிய கொடுத்துட்டோமே...’’

‘‘ஆமாம்ல!’’

‘‘என்ன ஊமால்ல..?’’

‘‘ப்ரியா... ஆஸ்பத்திரியில யார் கூடவாவது பேசிக்கிட்டு இருக்கலாம் இல்லையா?’’

‘‘மண்ணாங்கட்டி... ஆஸ்பத்திரி பாதாள சாக்கடைல கூட எட்டிப் பாத்துட்டார் என் டாடி. அவர் இல்ல..!’’

‘‘ஐ.ஸீ…’’

‘‘எனக்கு பயமா இருக்குடா… முத்தழகுவும் சாகும்போது பொட்டி பொட்டின்னு ஏதோ சொல்ல வந்துருக்கா. அவ செல்போன்லயும் அவளை டைரக்ட் பண்ணின மெஸேஜஸ் இருக்கு…’’

‘‘அய்யோடா… இதுல அவளும் கூட்டா?’’

‘‘நீ முடியாதுன்னு ஸ்டன்ட் அடிக்கவும் அவங்க முத்தழகுவை மடக்கியிருக்காங்கடா…’’

‘‘மை காட்…. அப்ப அவ ஏதாவது பண்ணியிருப்பாளோ?’’

‘‘அந்தப் பெட்டியில எக்ஸ்ட்ராவா சில அயிட்டம்ஸ் இருக்கறதா நான் சொன்னேன் இல்லையா?’’

‘‘ஆமாம்…’’

‘‘அதை முத்தழகு வச்சிருக்கலாம்…’’

‘‘ப்ரியா… அப்ப அவ பெட்டியைத் திறந்து எடுத்துட்டான்னா சொல்ல வர்றே..?’’

‘‘இதெல்லாமே யூகம்தான்… உண்மையில என்ன நடந்ததுன்னு தெரியாது!’’

‘‘ப்ரியா, விஷயம் எங்கெங்கோ போகுதே… முத்தழகு சாவை போலீஸ் சந்தேகப்படறாங்களா?’’

“இந்த நிமிஷம் வரை இல்ல... அவ பாடியையும் எடுத்துட்டுப் போயிட்டாங்க!”

“சரி... உன் தாத்தா காணாம போயிட்டார்னு உன் அப்பா என்ன பண்ணாரு?”

“பொழுது விடியட்டும்... அவர் எங்கயாவது போய்ட்டு வந்திடுவார்னு நம்பறார்...”

“அதுக்கும் வாய்ப்பு இருக்குல்ல?”

“ம்...”

“ஏன் டவுட்டா ‘ம்’முங்கறே?”

“தப்பா ஏதோ நடந்துருக்கு வர்ஷன். அதுல எனக்கு சந்தேகமேயில்ல. உன்னையும் என்னையும் கூட வாட்ச் பண்ணிகிட்டு இருக்கலாம்...” - ப்ரியாவின் பேச்சில் வர்ஷன் வியர்க்கத் தொடங்கினான். சற்றுத் தள்ளி வாட்டர் டேங்கை ஒட்டி அடர்வாய் ஒரு உருவம்!

26

“அந்தக் கல்வெட்டுப் பாடலை நான் திரும்பத் திரும்பப் படித்தேன்.

‘சித்திரைச் சந்திர வெள்ளி எழும் பின் பிரம்மத்தில்

முத்திரைப் பொன்னின் இத்தரைப் பாகம் சக்கரைப்பானை
கிழங்கென ஒளிரும் – அத்தரை சித்தரே காண
பத்தரை மாற்றுப் பத்திரமாம் இது சத்தியமே... நஞ்ச
மண முனி பகர்வதிந்த சாட்சியமே!’

– எனும் அந்தக் கல்வெட்டுப் பாடல் 100 முதல் 200 ஆண்டுகளுக்குள் ஏதோ ஒரு நாளில் ஒரு முனிவரால் வெட்டப்பட்டது என்பது எனக்கு விளங்கி விட்டது. நிச்சயமாய் பெஸ்கி எனப்படும் வீரமாமுனிவரின் பாடல்களோடு தொடர்புடைய ஒருவர் இந்த முனிவர் என்பதையும் நான் உறுதி செய்து கொண்டேன். மேற்கோள் குறி, ஆச்சரியக் குறி, இடைக்கோடு என்று இதில் காணப்பட்ட குறிகளே அதற்கு சான்று.

இதன் அர்த்தம் மேலோட்டமாகப் பார்த்தால் ஒருவிதமாக இருக்கும். நுணுக்கமாய் வார்த்தைகளை வெட்டிப் பிளந்து பார்த்தால் வேறுவிதமாக இருக்கும். வெட்டிப் பிளந்து பார்த்தாலே பொருளானது தெளிவாகவும், சரியாகவும் புரியும். இல்லாவிட்டால் நாம் ஏமாற்றத்துக்கு ஆளாவோம்.‘சித்திரைச் சந்திர வெள்ளி எழும் பின் பிரம்மத்தில்’ எனும் முதல் வரிக்குப் பொருள், ‘சித்திரை பௌர்ணமி நாளின் அதிகாலைப் பொழுதில்’ என்று பொருள்... ‘முத்திரைப் பொன்னின் இத்தரைப் பாகம்’ என்றால் ‘தங்கம் கொண்ட தரைப்பகுதி’ என்பது பொருள்...

‘சக்கரைப் பானை கிழங்கென ஒளிரும்’ – பொங்கல் பானையை சக்கரைப் பானை என்போம். அதில் கட்டப்படும் கிழங்கு மஞ்சள் கிழங்கு – ‘அந்த மஞ்சள் கிழங்கு போல் மஞ்சள் நிறத்தில்’ என்று பொருள்... ‘அத்தரை சித்தரே காண பத்தரை

மாற்றும் பத்திரமாம்' என்றால் 'தங்கம் கொண்ட அந்த தரைப்பகுதியை ஒரு சித்தன் பார்த்தால் இங்கே தங்கம் இருக்கிறது என்று தெரிந்து கொள்வான்'.

அதாவது பத்தரை மாற்று என்பது பத்தரை மாற்றுத் தங்கத்தை குறிக்கிறது. அப்படிப்பட்ட தங்கம் இருப்பது சத்தியமான உண்மை. 'நஞ்ச மணமுனி பகர்வதிந்த சாட்சியமே' எனும் வரிகளில்தான் வார்த்தையைப் பிளந்து பார்க்கத் தெரிய வேண்டும். நஞ்ச மணமுனி என்ற பதத்தை நன் சமணமுனி என்றும் கொள்ளலாம்.

'அப்படிப்பட்ட நல்ல ஒரு சமணமுனியாகிய நானே இதற்கு சாட்சி' என்று முடிகிறது பாடல்! இந்தப் பாடல் அந்தப் பகுதியில் தங்கம் இருப்பதை உறுதி செய்து விடவும் எங்கள் குழு பரபரப்புக்கு ஆளாயிற்று...!'' – கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

இரவின் பிடியில் அந்த உருவத்தை வர்ஷன் பார்க்கவில்லை. பார்க்கக்கூடிய விதத்திலும் அந்த உருவம் தென்படவில்லை. அப்போது மொட்டை மாடி நோக்கி யாரோ வரும் சப்தம் கேட்கவும், வர்ஷன் பீர் பாட்டிலை மறைத்துக் கொண்டு யார் என்பது போல பார்த்தான். ''நான் பிறகு பேசுகிறேன்'' என்று போனையும் கட் செய்தான்.கையில் பாய், தலையணை மற்றும் கொசுவத்திச் சுருளோடு அப்பார்ட்மென்ட் வாசி ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

''யாருப்பா நீ... இங்க என்ன பண்றே? நில்லு... முகத்தைக் காட்டு...'' - என்கிற அவர் குரலும் கேட்டது. பதில் குரல் இல்லை.

மாறாக அவர் கேள்வி கேட்ட நபர், பதில் கூறாமல் அவரைக் கடந்து கீழே இறங்கிச் செல்வது அவர் பேச்சை வைத்தே தெரிய வந்தது.

‘‘ஏய்... என்ன நான் கேட்டுக்கிட்டே இருக்கேன். நீ பாட்டுக்கு பதில் சொல்லாம போய்க்கிட்டிருக்கே...’’ என்ற அந்த வார்த்தைகள் வர்ஷனை கூர்மையாக்கின. அவர் குரல் வர்ஷனுக்குப் புதியதில்லை. கீழே கிரவுண்ட் ஃப்ளோரில் இருக்கும் கோயில் குருக்கள் ஒருவர்தான் அவர்.

அந்த குருக்கள் வருவதற்குள் பீரை மடமடவெனக் குடித்துவிட்டு, அதைத் தண்ணீர் தொட்டி தூணை ஒட்டி ஒளித்தும் வைத்து விட்டு வந்து நின்றான்.

அவரும் வந்து நின்றார்.

‘‘யாரது?’’

‘‘நான்... நான் வர்ஷன்தான் குருக்களே!’’

‘‘வர்ஷனா... அது யாருப்பா கேக்க கேக்க பதிலே சொல்லாம போறான்?’’

‘‘அப்படியா... யாருன்னு தெரியலியே!’’

‘‘தெரியலியா... அப்ப இங்க அவன் உன் கூட இல்லையா?’’

‘‘நான் மட்டும்தான் குருக்களே இருக்கேன்...’’

‘‘அப்ப அவன் யார்? முகத்தைக் கூட காட்டாம எதுக்கு அவ்வளவு வேகமாக என்னைத் தாண்டிப் போறான்?’’

‘‘அதான் போய்ட்டான்ல... விடுங்க! அப்பார்ட்மென்ட் வீடுகள்ல யார் வீட்டுக்காவது வந்த ரிலேட்டிவா இருக்கலாம்.’’

‘‘ரிலேட்டிவா இருந்தா நின்னு சொல்லலாமே... திருடன் மாதிரியா ஓடணும்?’’

‘‘விடுங்க குருக்களே! நாம வேற விஷயம் பேசுவோம்...’’

‘‘என்ன வர்ஷன் நீ... சாதாரணமா இதை நினைக்கறே? பக்கத்துத் தெரு அப்பார்ட்மென்ட்ல ஒரு பாட்டியோட கழுத்தை நெரிச்சுக் கொன்னு பாடியை ஃப்ரிட்ஜுக்குள்ள வெச்சு பூட்டிட்டும் போய்ட்டான் ஒரு கொலைகாரன்! விஷயம் வெளிய தெரிய வர்றதுக்கே நாலஞ்சு நாள் ஆயிடிச்சு. அப்புறம் போலீசும் நாயும் வந்து என்னத்தை செய்ய முடியும்? கொலைகாரன் இந்த ஸ்ே◌டட்டை விட்டு இல்ல, நாட்டை விட்டுக்கூட போயிருப்பான்!’’

‘‘அப்படி யாராவது இருப்பான்னு சந்தேகப்படறீங்களா?’’

‘‘படணும்ப்பா... காலம் அப்படி!’’

- பாய் விரித்தபடியே சூடானார் குருக்கள். வர்ஷனுக்குள்ளும் ப்ரியா சொன்னது நெளிய ஆரம்பித்தது. கச்சிதமாய் ப்ரியாவிடம் இருந்து திரும்பவும் அழைப்பொலி.

‘‘முன்பே வா... என் அன்பே வா...‘‘

‘‘யாருப்பா... உன் வருங்காலமா?’’ - குருக்கள் மிகச் சரியாகவே கேட்க, ஒதுங்கிப் போய் பேசத் தொடங்கினான் வர்ஷன்.

‘‘என்ன வர்ஷன்... எதுக்கு டக்குன்னு கட் பண்ணே? இப்ப பேசலாம்தானே!’’

‘‘நான் என் ரூமுக்குப் போயிடறேன். போய்ட்டு கூப்பிடறேன்!’’

‘‘கட்டாயம் கூப்பிடு. எனக்கு ஒரே படபடப்பா இருக்கு. உன் கூட பேசறதுதான் இப்போதைக்கு எனக்கு ஒரே ரிலாக்ஸ்...’’

‘‘எனக்கும் இங்க அப்படித்தான்... ‘நம்மைக்கூட யாராவது வாட்ச் பண்ணிக்கிட்டு இருக்கலாம்’னு நீ சொன்னது ஹண்ட்ரட் பர்சன்ட் கரெக்ட். இங்க ஒருத்தன் மொட்டை மாடில எனக்கே தெரியாம நின்னுக்கிட்டு இருந்துருக்கான்...’’

‘‘மை காட்! அவன் யார்னு தெரிஞ்சதா?’’

‘‘இல்ல... ஓடிட்டான்! இரு, ரூமுக்குள்ள போய்ட்டு கூப்பிடறேன். இங்க குருக்கள் ஒருத்தர் மேல மொட்டை மாடில படுத்துத் தூங்க வந்துட்டார், இங்க இனி பேச முடியாது...’’

‘‘மொட்டை மாடில குருக்கள் படுத்துத் தூங்கப் போறாரா... அவன் என்ன லூசா! கொசு பிச்சு எடுத்துடாது?’’

‘‘கொசுவத்தியோட வந்துருக்கார். கீழ அவர் பொண்ணும் மாப்பிள்ளையும் வெளியூர்ல இருந்து வந்திருக்காங்க... சிங்கிள் பெட்ரூம் ஃப்ளாட். உனக்குப் புரியும்னு நினைக்கறேன்.’’

‘‘ஓ... அதுவா விஷயம்?’’

‘‘சரி... சரி... நான் கூப்பிட்றேன்.’’

- திரும்ப கட் செய்தான். குருக்களிடம் வந்தான். அவர் வானில் நட்சத்திர மண்டலத்தைப் பார்த்தபடி இருந்தார்.

‘‘குருக்களே... என்ன பாக்கறீங்க?’’

‘‘நட்சத்திர மண்டலம்பா... அதோ மிருகசீரிஷ நட்சத்திர மண்டலம். இன்னிக்கு மிருக சீரிஷ நட்சத்திரம்!’’

‘‘அப்படின்னா?’’

‘‘ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நட்சத்திரத்தோட பிடியில இருக்கோம். சம்பந்தப்பட்ட நட்சத்திரமும் வானத்துல தெரியும்.’’

‘‘லட்சக்கணக்குல நட்சத்திரங்கள் இருக்கு. இதுல மிருகசீரிஷம்னு பர்ட்டிகுலரா ஒரு கூட்டத்தைக் காட்டி, அதோட பிடியில நம்மளோட நாள் இருக்குன்னா எப்படி குருக்களே?’’

‘‘கோடிக்கணக்குல கூட நட்சத்திரங்கள் இருக்கலாம். ஆனா குறிப்பிட்ட திசையில, குறிப்பிட்ட தூரத்துல இருக்கற நட்சத்திர மண்டலம்தான் பூமி மேல ஆதிக்கம் செலுத்த முடியும்...’’

‘‘அதனால என்ன இப்ப?’’

‘‘என்னடா அம்பி! அதனால என்னன்னு சாதாரணமா கேட்டுட்டே. இதுக்குப் பேர்தான் அஸ்ட்ராலஜி. நட்சத்திரம், கிரகம் இதெல்லாம்தானே நம்மளை ஆட்டிப் படைக்கறது?’’

‘‘அது எங்கேயோ இருக்கு... அது எப்படி நம்மை ஆட்டிப் படைக்க முடியும்?’’

‘‘இங்க இருந்துண்டே நாம ஸ்பேஸ்ல விண்கலங்களை ஆட்டி வைக்கறோமே... அது எப்படி?’’

‘‘நாமதானே அவற்றை மேல அனுப்பி வெச்சோம். நாம அனுப்பினது நம்ம கன்ட்ரோல்லதானே இருக்கும்?’’

‘‘இதே நியாயம்தான் கிரகங்களுக்கும்... அதுகளோட டைரக்ஷன்லதான் நாம பூமிக்கு வந்தோம். அப்ப அதுகளோட பிடியிலதானே நாமளும் இருந்தாகணும்?’’

‘‘குருக்களே! நீங்க சயின்ஸையும், கற்பனையையும் ஒண்ணா பார்த்து, ஒண்ணா நினைச்சு பேசறீங்க. என் அப்பாவும் அம்மாவும்

சேரப் போய், அவங்க உயிரணுக்களாலதான் நான் இந்த பூமிக்கு வந்தேன். எந்த கிரகமும் என்னை அனுப்பி வைக்கல.அதோட, நான் உயிருள்ள மனுஷன். கிரகம்ங்கறது கல், மண் மாதிரி ஒரு ஜடம். எந்த ஜடத்தாலயும் உயிரை ஆட்டிப் படைக்க முடியாது. ஆனா உயிருள்ள மனுஷன் ஜடத்தை என்ன வேணா செய்யலாம். இதை நீங்க புரிஞ்சுக்குங்க...''- வர்ஷன் இறங்குவதற்காக படிகளை நோக்கி நடந்தபடியேதான் அவருக்கு பதில் சொன்னான்.

‘‘அம்பி, நில்லு... இன்ட்ரஸ்ட்டிங்கான டாபிக்கை தொட்டுட்டு அப்படியே போறியே?''

‘‘வேலை இருக்கு குருக்களே! அப்புறம் உங்கள மாதிரி ஆட்கள்கிட்டல்லாம் சயின்ஸைப் பற்றிச் சொல்லிப் புரிய வைக்கறதும் ரொம்ப கஷ்டம். நீங்க மூட நம்பிக்கைகளோட பேசறவங்க. நாம தொடர்ந்து பேசினா சண்டைலதான் அது முடியும்!''

‘‘இதோ பார்... இப்ப எனக்கு வேலை இருக்குன்னு பொய் சொல்லாதே. வா இப்படி! உட்கார்ந்து பேசு. நான் ஒண்ணும் சயின்ஸுக்கு எதிரியில்ல. நான் அந்தக் கால எஸ்.எஸ்.எஸ்.சி. சயின்ஸ்லதான் அதிக மார்க் எடுத்தேன்...''

‘‘அது பாடம் குருக்களே! படிச்சுட்டு எழுதறதுங்கறது வேற... விஞ்ஞானத்தை சரியா புரிஞ்சுக்கறது வேற...''

‘‘சரியா புரிஞ்சுக்கறதுன்னா?''

‘‘எப்படிச் சொன்னா உங்களுக்குப் புரியும்னு தெரியலியே... ஆங் - உங்களுக்கு சரியான விஞ்ஞான அறிவு இருக்குன்னா நீங்கள் கோயில்ல குருக்களா எல்லாம் இருக்க மாட்டீங்க...''

‘‘எதை வச்சு சொல்றே?’’

‘‘கோயில்ல இருக்கறது ஒரு சிலை. அதை ரசிக்கலாம். ஆனா அது நம்மை விட மேலானதுன்னு அதை உயிருள்ளதா நினைச்சு கும்பிடறது, பிரார்த்தனை பண்ணிக்கறதெல்லாம் வேஸ்ட்.’’

‘‘வேஸ்ட்டா?’’

‘‘பின்ன... அது சுப்பீரியர் - பவர்ஃபுல்லானதுன்னா நீங்க இப்படியா இருப்பீங்க. உங்க லைஃப் நாங்க தட்டுல போடற காசுகளை நம்பியா இருக்கும்?’’

‘‘அம்பி... தட்டுல விழற காசுக்குப் பேர் ‘காணிக்கை’. அது ஒருவித தர்மம். நான் தர்மம் பண்ணக் காரணமா இருக்கறவன். காணிக்கையை நான் ஏத்துக்கறேன். அவ்வளவுதான் அதுக்குள்ள இருக்கற விஷயம். நான் சந்தோஷமா இருக்கறதுங்கறது என் கர்மாவைப் பொறுத்த விஷயம்பா...’’

‘‘தெரியும்... இங்கதான் நீங்க வந்து நிப்பீங்கன்னு... விடுங்க - நிச்சயம் நாம பேசிக்கிட்டா சண்டையிலதான் முடியும். அப்புறம் உங்க கூட பேசற ஒரு மனநிலையும் நான் இப்ப இல்லை. இன்னொரு சந்தர்ப்பத்துல பேசறேன்...’’- வர்ஷன் விறுவிறுவென்று விலகி, அவன் அப்பார்ட்மென்ட் அறைக்குள் நுழைந்து கதவையும் தாழிடப் போனான்.

ஹாலில் சன் டி.வியில் அனுஷா ‘ஆதிரா’ பார்த்தபடி இருந்தாள். அவன் கதவைத் தாழிடும்போது கூர்மையாகப் பார்த்தாள். அவன் அதைப் பொருட்படுத்தாமல் போனில் ப்ரியாவைப் பிடித்தான்.

‘‘ப்ரி...’’

‘‘அப்பா! வந்துட்டியா... இவ்வளவு நேரமா என்ன பண்ணிக்கிட்டிருந்தே?’’

‘‘மாடில குருக்கள பத்தி சொன்னேன்ல? அவர் பிடிச்சுக்கிட்டார்! அவர் பாட்டுக்கு நட்சத்திரம் - கிரகம் - ஆதிக்கம்னு எங்கேயோ போய்ட்டார். நானும் விடாம கவுன்ட்டர் டாக் கொடுத்ேதன். அதான் நேரமாயிடிச்சு.’’

‘‘அவருக்கு எதிரா பேசினியா?’’

‘‘ஆமாம்... ஏன் கேக்கறே?’’

‘‘அப்ப நீ இன்னும் பழைய வர்ஷனாதான் இருக்கியா?’’

‘‘இது என்ன கேள்வி ப்ரியா... நான் எப்பவும் நானாதானே இருக்க முடியும்?’’

‘‘இந்த ‘நான்’ங்கற வார்த்தைக்குப் பின்னால யோசிக்க எவ்வளவு விஷயம் இருக்கு தெரியுமா வர்ஷன்!’’

‘‘ப்ரியா... நீ என்ன அந்த குருக்கள் மாதிரியே பேசறே?’’

‘‘வர்ஷா... நம்மைச் சுத்தி நடந்துக்கிட்டிருக்கற மௌடீகமான விஷயங்கள கொஞ்சம் நினைச்சுப் பார். இதுநாள் வரை நாம நினைச்சுக்கிட்டிருந்த பல விஷயங்கள் தப்புன்னு உனக்குத் தோணல?’’

“ப்ரியா... நம்மைச் சுத்தி மர்மமா சில விஷயங்கள் நடந்துகிட்டிருக்கு. அதுக்கு சில மனிதர்கள்தான் காரணம்னு நான் நினைக்கறேன். நீ எப்படி அப்படி இல்லேன்னு நினைக்கறே?”

“சிம்பிளா உனக்குச் சொல்லிடறேன். நீ இந்த ஆவி, பேய், பிசாசு... இதையெல்லாம் நம்பறியா?”

“நிச்சயமா இல்லை!”

“ஆனா நான் நம்பறேன் வர்ஷன்.”

“எதை வெச்சு?”

“நான் சொல்லப் போறதக் கேட்டு அதிர்ச்சியடையாதே. செத்துப் போன முத்தழகுவோட ஆவி இப்ப எங்க வீட்டுக்குள்ளதான் சுத்திக்கிட்டிருக்கு..!”

- ப்ரியா சொல்ல... வர்ஷன் விக்கித்தான்!

27

“பொதுவாக என் போன்ற ஆய்வாளர்களின் தேடல்கள் பெரும்பாலும் சலிப்பூட்டுபவை! அதே சமயம் சில நேரங்களில் மிக பரபரப்பாய் ஏதாவது தெரிய வந்து, அவ்வளவு நாள் சலிப்பையும் ஒன்றுமில்லாதபடி செய்துவிடும்.

இந்த உலகில் எவ்வளவோ விதமான பணிகள். இதில் காலத்தோடு தொடர்புடையதைத் தேடும் எங்கள் பணி மிக

விசித்திரமானது. எங்களால் நேரடியாக இந்த சமுதாயத்துக்கு ஒரு பயனும் இல்லை. ஆனால் மறைமுகமாக மிகவே பயன் உண்டு.எனது இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமும், என் அனுபவங்களைக் கூறுவதற்கேயாகும்.

என் போன்றவர்களின் பணிக்கு அபூர்வமாகவே மனிதர்கள் வருவர். பெரிதாய் எந்த இலக்கும் இல்லாத பணி, என் பணி. இத்தனை நாட்களுக்குள் இவ்வளவு தூரம் தோண்டி, இவ்வளவு சிலைகளையோ... இல்லை, புதைந்து போய்விட்ட ஏதோ ஒரு சுண்ணாம்பு டப்பாவையோ கண்டுபிடிக்க வேண்டும் என்று எங்களுக்கு இலக்கு எதையும் யாரும் நிர்ணயிப்பதில்லை. பல நேரங்களில் மனது 'வெட்டி வேலை' பார்ப்பதாக எண்ணிக்கொண்டு, 'இதெல்லாம் ஒரு வேலை' என்று புத்தியை ஏளனம் செய்யும். அது அவ்வளவையும், அபூர்வமாய் கிடைக்கும் ஒரு விஷயம் மாற்றிவிடும்.

கஞ்சமலை சித்தர் பாட்டின்மூலம், அங்கே தங்கம் இருப்பது தெரிந்த நிலையில் நாங்கள் அவ்வளவு பேருமே 'இது எந்த அளவு உண்மை' என்றும், 'இருந்தால் அதை எப்படி எடுக்க முடியும்' என்றும் எங்களுக்குள் விவாதித்தோம்.தங்கம் ஒரு விசித்திரமான உலோகம். இந்த உலகில் நீரும் நெருப்பும் அனைத்தையும் விழுங்கி விடும். இவற்றின் விளைவால் சர்வமும் உருமாறி குணம் மாறிப் போய்விடும். இவற்றிற்கு நடுவே துளியும் உருமாறாத, குணம் மாறாத தன்மை தங்கத்துக்கு மட்டும்தான் உண்டு. அதனாலேயே ஜாதி, இனம், மொழி கடந்து உலகின் பொதுப் பணமாகவே இது ஆகிவிட்டது.

இலக்கியம், புராணம், இதிகாசம் என்று சகலத்திலும் தங்கத்துக்கு ஒரு தனி இடம். எவ்வளவுதான் சட்டம் போட்டாலும்

இதைத் திருடுவதும், கடத்துவதும் துளியும் குறையவில்லை. அப்படிப்பட்ட தங்கம், இரும்புக் கனிமவளம் மிகுந்த கஞ்சமலையின் ஒரு பகுதியில் நிறைய இருக்கிறது என்கிற தகவலை ஒரு கற்பனையாகக் கருத எங்களால் முடியவில்லை. இம்மாதிரி விஷயங்களில் மாநில அரசை விட மத்திய அரசுக்குத்தான் சக்தியும் உரிமையும் அதிகம். எனவே மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லத் தீர்மானித்தோம்.''

- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

வர்ஷன் விக்கித்த கையோடு தடுமாறவும் செய்தான்.

''என்னடா... பதிலே காணோம்.'' - அந்த இரவில் ப்ரியா அவனைத் தூண்டினாள்.

''என்னத்த சொல்ல... நீ நிஜமாதான் சொல்றியா?''

''இது ரொம்பவே வழக்கமான கேள்விடா... நீ மட்டும் இப்ப இங்க இருந்தா தெரியும்.''

''ப்ரியா... நான் ஆவி பத்தி யாராவது என்கிட்ட பேசினா 'இட்லி குக்கர் ஆவியதான் நான் பாத்துருக்கேன்'னு கிண்டல் பண்றவன்... உனக்கும் தெரியும்!''

''இதோ பார்... எந்த அப்பாடக்கருக்கும் அசலான அனுபவம்தான் மாஸ்டர். நான் இப்ப அனுபவப்பட்டுக்கிட்டேதான் உன்கூட பேசிக்கிட்டிருக்கேன். இன் ஃபாக்ட், உன்கூட பேசறது தான் எனக்கு இப்ப ஒரு தைரியம்னு கூட சொல்வேன்... நான் இப்ப

உன்கூட பேசறத முத்தழகுவோட ஆவியும் பாத்துக்கிட்டேதான் இருக்கு...''

''என்ன சொல்றே நீ... அது எப்படி இருக்கு?''

''எப்படி இருக்குன்னா... நாம கண்மூடி இருக்கும்போது நம்மைச் சுத்தி யாராவது நடந்துக்கிட்டேயிருந்தா நாம அதை எப்படி உணர்வோம்?''

''அப்ப விசிபிளா பாக்கற மாதிரி தெரியலையா?''

''ஒரு நிழலைப் பாக்கற மாதிரி இருக்கு...''

'''செல்போன்ல படம் எடுத்து வாட்ஸ் அப்ல அனுப்ப முடியுமா?''

''ஐ வில் ட்ரை...''

''நானும் வெயிட் பண்றேன்...''

- வர்ஷன் கட் செய்தான். பின் நகம் கடிக்க ஆரம்பித்தான். பாலோடு வந்தாள் அனுஷா.

‘‘என்ன?’’

‘‘பால்...’’

‘‘வெச்சுட்டுப் போ...’’

‘‘ஏன்... தூக்கம் வரலையா?’’
‘‘அஃப்கோர்ஸ்... பலவிதமான எண்ணங்கள்! நீ போய்த் தூங்கு...’’

‘‘எனக்கு மட்டும் எப்படி வரும்?’’

‘‘வீட்ல அப்பா, அம்மாகிட்ட எதையும் சொல்லிடலையே?’’

‘‘இல்ல... ஆனா நீ கொஞ்ச நாளாவே சரியில்லங்கற எண்ணம் அவங்களுக்கு வந்தாச்சு.’’

‘‘அதுக்கு என்ன பண்றது... வினோதமான சிக்கல் இல்ல வந்துருக்கு...’’

‘‘ஒரு காலப்பலகணி... அதுக்கான குறிப்புகள்... அதைத் தொட்டாலே மரணம்... ஹாலிவுட் ஃபான்டசி மூவி மாதிரியே இருக்கு!’’

‘‘கூடுதலா இப்ப ஒரு சிக்கல் அனு...’’

‘‘என்ன அது?’’

‘‘ப்ரியாவோட தாத்தா காணாமப் போயிட்டார்.’’

‘‘வாட்?’’

‘‘அவரைக் காணோம்னு சொன்னேன்...’’

‘‘காணாமப் போக அவர் என்ன சின்னக் குழந்தையா? இல்ல, நம்ம ஊர்லதான் திருவிழா ஏதாவது நடக்குதா?’’

‘‘அனுஷா... இங்க நம்ம அபார்ட்மென்ட்லயும் என்னை குளோஸா ஒருத்தன் வாட்ச் பண்ணிக்கிட்டு இருக்கான்...’’

‘‘என்ன வர்ஷன், ஒவ்வொண்ணா சொல்றே?’’

‘‘ஒண்ணும் புரியல. பெரியவரை கடத்திட்டாங்களா... இல்ல, அவர் காலப்பலகணியை தேடி சொல்லாம கொள்ளாம கிளம்பிட்டாரான்னு எதுவும் தெரியல.’’

‘‘அவர் கிளம்பணும்னா குறிப்புகள் வேணுமே?’’

‘‘அதெல்லாம் மனுஷன் எமன். அந்தப் பெட்டில இருக்கற சுவடிகளை போட்டோ எடுக்க எவ்வளவு நேரம் ஆகிடப் போகுது?’’

‘‘யு மீன்?’’

‘‘அவர் ப்ரியாவோட அம்மா பத்மாசினியை சமாதானப்படுத்தறதுக்குத்தான் பெட்டிய தூக்கிக் கொடுத்தார். மற்றபடி அதுக்குள்ள இருக்கற கிரிஸ்டல் பெண்டுலம், திசைமானி, சோழி இதெல்லாம் வெளில நம்மால வாங்க முடிஞ்ச

அயிட்டங்கள்தான். ஒருவேளை அதெல்லாம் கூட அவர் இப்ப வாங்கி பெட்டிக்குள்ள வச்ச அயிட்டங்களாவும் இருக்கலாம்!’’

‘‘தெளிவா சொல்லு... பெரியவர் அப்ப எல்லாரையும் ஏமாத்திட்டாரா?’’

‘‘இருக்கலாம்... அப்படி நடக்கவும் வாய்ப்பு இருக்கு. இடையில முத்தழகுவும் ஏதோ சேட்டை செய்துருக்கா. இப்ப ஆவியா வேற அலையத் தொடங்கியிருக்கா...’’

‘‘வர்ஷண்ணா...’’ - பதறினாள் அனுஷா.

‘‘பயப்படாதே... எது நடந்ததோ, நடந்துக்கிட்டும் இருக்கோ, அதைத்தான் நான் சொல்லிக்கிட்டும் இருக்கேன்.’’

‘‘இது எதையுமே சட்டுன்னு நம்ப முடியலையே?’’

‘‘அப்ப மெல்ல நிதானமா நம்பு... ப்ரியா வாட்ஸ் அப்ல ஆவி படத்த அனுப்பறதா சொல்லியிருக்கா!’’

- சொல்லும்போதே அவன் செல்ஃபோனில் சிணுங்கல்... வாட்ஸ் அப்பிலும் நான்கைந்து படங்கள். ஆட்காட்டி விரல் நுனி படவும், எலெக்ட்ரான் வட்டம் உருவாகத் தொடங்கி தட்டாமாலை சுற்றியது.

‘‘இது ஒரு இம்சை... எவ்வளவு ஜி.பிய ஃபில் பண்ணாலும் அவ்வளவும் காலியாயிடும்...’’ என்று அவன் முணுமுணுக்க, புகைப்படமும் தெரிய ஆரம்பித்தது. படத்தில் தெளிவில்லை - கறுப்பாய் கசகசவென்று வீடியோ ஃபார்மில் ஒலியோடு சேர்த்து அது காட்சியாக விரிந்தது. அதனிடமிருந்து விசித்திர சப்தங்கள்.வர்ஷன்

உன்னிப்பாய் பார்த்த நொடி, அருகாமை கடிகாரம் நள்ளிரவு பன்னிரெண்டுக்கான ஒலிகளை சிதறவிடத் தொடங்கியது.

‘‘வர்ஷா இது...’’

‘‘இதான் முத்தழகுவோட ஆவி... வாய்சும் அவளோடது தான்...’’

‘‘அப்ப ஆவிங்கறதெல்லாம் உண்மையா?’’

‘‘அனு... பேசினது போதும். இப்ப எனக்கு எல்லாத்தையும் மறந்து தூங்கணும்னு தோணுது. பொழுது விடியட்டும்... நிறையவே வேலை இருக்கு!’’- அவன் பேச்சோடு கப் போர்ட் ட்ராயரைத் திறந்து ஒரு குவார்ட்டர் பாட்டிலை எடுத்தான்.

‘‘டாஸ்மாக் சரக்கா?’’

‘‘ஆமாம். வர்ற வழில வாங்கினேன். இது இல்லன்னா இப்ப சுத்தமா தூக்கம் வராது. பாவம் ப்ரியா... அங்க அவளை இந்த முத்தழகுவோட ஆத்மா என்ன பாடு படுத்தப் போகுதோ?’’- கேட்டபடி குடித்தான். பக்கத்தில் டம்ளரில் பால் ஆடையால் போர்த்திக் கொண்டு விட்டிருந்தது.

‘‘பாலைக் குடிக்காம இதைக் குடிக்கறியே...’’

‘‘நான் கொஞ்சமாவது தூங்கணும். நாளைக்கு நிறைய வேலை இருக்கு.’’

- அவன் சொல்லும்போதே ப்ரியா திரும்ப கூப்பிட்டாள்.

‘‘என்ன பாத்தியா?’’

‘‘பாத்தேன்... அந்த வாய்ஸ் உன்னோடது இல்லையே?’’

‘‘வர்ஷன்... இன்னுமா சந்தேகம் உனக்கு?’’

‘‘ஐ ஆம் சாரி... நாம வாழ்ந்துக்கிட்டிருக்கற வாழ்க்கை முறை அப்படி... இப்ப பேசிக்கிட்டிருக்கறதே செல்போன்ங்கற விஞ்ஞான சாதனத்தாலதான்... ஆனா பேசற விஷயம்?’’

- அவன் வார்த்தைகளை மென்று விழுங்கினான்.‘‘வர்ஷா... இங்க எதுவும் பிரமை இல்லை. நான் ஃபீல் பண்றதைத்தான் பேசறேன். இந்தப் பலகணி விஷயத்துல நம்ம அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் நிச்சயமா இருக்குடா.’’‘‘ஐ அக்ரி... காலைல பொழுது விடியட்டும். நான் நேர்ல வரேன். நாம ஒரு சரியான முடிவை இந்த விஷயத்துல எடுத்தே தீரணும். நீ தனியா இருக்காதே. உன் அப்பா ரூமுக்குப் போயிடு.’’

‘‘எனக்கும் இப்ப அதுதான் ஒரே வழி. முத்தழகு ஏதோ சொல்ல வர்ற மாதிரியும் இருக்கு. இன்னிக்கு சிவராத்திரிதான்...’’

- ப்ரியா ஒரு மாதிரி முடித்துக்கொண்டாள். வர்ஷனும் செல்லைத் தூக்கி எறிந்தவனாக கட்டிலில் விழுந்தான். அனுஷா மெல்ல விலகத் தொடங்கினாள்.

ப்ரியாவும் போனைக் கீழே வைத்தவளாக எதிரில் அறைக் கதவையே பார்த்தாள். அங்குள்ள திரைச்சீலைதான் ஒரு ஒழுங்கின்றி ஆடியபடி இருந்தது. கதவும் முன்பின் முன்பின் என்று, முறை

வைத்து ஒரு ஒழுங்கில் ஆடியது. அந்தக் கதவைக் கடந்தே அவள் வெளியே சென்றாக வேண்டும்.

அங்கேதான் முத்தழகுவின் ஆவி நின்றபடி இருக்க வேண்டும் என்றும் தோன்றியது. அவ்வப்போது பார்த்த ஆங்கிலப் படங்கள் எல்லாம் நினைவுக்கு வரத் தொடங்கின. அந்தப் படங்களில் பார்த்த, ஆவிகள் உடம்பைப் பற்றத் துடிக்கும் காட்சிகள் ஞாபகத்துக்கு வந்தன. இங்கே முத்தழகுவும் தன்னைப் பிடித்து தன்னுள் புகுந்து விடுவாளோ என்று தோன்றியது. காதோரமாக வியர்வைக் கோடு உருவாகி நீண்டபடியே இருந்தது. பளிச்சென்று மனதுக்குள் வள்ளுவர் நினைவு வந்தது. கீழே வைத்த போனை எடுத்து அவரை அழைத்தாள்.

நள்ளிரவில் ஒலித்த வள்ளுவரின் கைபேசி முதல் முறை நீண்டு ஒலித்து அடங்கியது. திரும்பத் தொடர்பு கொண்டாள். இம்முறை முடியும் எல்லையில் ‘‘சொல்லும்மா ப்ரியா... ஏதாவது பிரச்னையா?’’ - என்கிற கேள்வியோடு வள்ளுவர் பேசினார்.

‘‘அய்யா... சாரிய்யா... தொந்தரவு பண்ணிட்டேன்.’’

‘‘பதற்றப்படாதே... என்ன விஷயம்?’’

‘‘அய்யா! இப்ப என் முன்னால அந்த முத்தழகுவோட ஆவி நின்னுக்கிட்டு இருக்குய்யா...’’

‘‘அப்படியா... இதை நான் எதிர்பார்த்தேன். பயப்படாதே! கோயில்ல மோட்ச தீபம் போடப் போட அணைஞ்சுக்கிட்டே இருந்தது. அப்பவே எனக்குப் புரிஞ்சு போச்சு.’’

‘‘இப்ப நான் என்ன செய்யட்டும்..? எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியல.’’

‘‘பயப்படாதே... அது உன்னைப் பிடிக்க முடிஞ்சிருந்தா எப்பவோ பிடிச்சிருக்கும். உன் உடம்புல அதுக்கான அமைப்பு இல்ல. உனக்கு இப்ப நல்ல தசாபுக்தி நடந்துக்கிட்டும் இருக்கணும். உனக்கு சஷ்டி கவசம் தெரியுமா?’’

‘‘அய்யோ... அதெல்லாம் எதுவும் தெரியாதே?’’

‘‘சரி... நான் சொல்றேன். ஸ்பீக்கர் போன்ல போடு. அப்படியே அதுகிட்ட போ. அது நிச்சயம் என் குரல் கேட்டு ஓடிடும்...’’

‘‘ஓடிடுமா?’’

‘‘நீ ஸ்பீக்கரை போடு, சொல்றேன்.’’

‘‘சஷ்டி கவசத்துக்கு அவ்வளவு பவரா?’’

‘‘பின்ன என்னம்மா... சும்மா லொடலொடன்னு சத்தம் போடற சினிமா பாட்டுன்னு நினைச்சியாக்கும். உனக்கு விளக்கம் தர எனக்கு இப்ப நேரமில்லை. நான் சொல்றேன் - நீ தைரியமா போ - சத்தியமா உனக்கு எதுவும் ஆகாது. காலைல நான் வரேன். நாம நேர்ல பேசுவோம்’’ என்ற வள்ளுவர், கவசத்தின் நடுவில் உள்ள வரிகளான, ‘வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்...’ என்கிற வரியிலிருந்து தொடங்கினார். ப்ரியாவும் கதவு நோக்கி மெல்ல நடந்தாள். ஆடியபடி இருந்த கதவும் சட்டென நின்றது. திரைச்சீலையும் அடங்கியது... வெளியே நாய் குரைக்கும் சப்தம் கேட்கத் தொடங்கியது...

28

"அது இன்றுபோல கம்ப்யூட்டர்மயமாகாத ஒரு சூழல். அலுவலகக் கடிதங்களை தட்டச்சு செய்து அனுப்புவதுதான் நடைமுறை. இதற்கென ஸ்டெனோகிராஃபர்கள் இருந்தனர். தெருவுக்குத் தெரு டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட் எனப்படும் தட்டச்சுக் கூடங்களும் இருந்தன. பள்ளியில் படிக்கும்போதே இந்த தட்டச்சுக் கூடங்களுக்கு சென்று லோயர், ஹையர் என்று கற்றவர்கள் பலருண்டு. இன்று எல்லாமே மாறிவிட்டது. தட்டச்சு ஒரு பெரிய தேவையாக இல்லை. கம்ப்யூட்டரில் அன்றாடப் பழக்கத்தினாலேயே டைப் செய்கிற திறமை வந்து விடுகிறது.

அந்த வகையில் அன்று கஞ்சமலையில் தங்கக் கனிமமும் இருப்பதாக நாங்கள் அறிந்த விஷயங்களை கல்வெட்டுப் பாடல், புகைப்படங்களுடன் தட்டச்சுக் கடிதம் மூலம் டெல்லிக்கு அனுப்பினோம். ஆனால் அங்கே இருந்து பதிலே வரவில்லை.திரும்பவும் ஒருமுறை என் இலாகாவிலிருந்து நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டது.

அதுவும் கண்டுகொள்ளப்படவில்லை. எங்களுக்கும் உற்சாகம் போய்விட்டது. மேல்மட்டம் இதை அலட்சியப்படுத்தி விட்டது என்றே நினைத்தோம். பிறகுதான் தெரிந்தது... நாங்கள் அனுப்பிய கடிதங்கள் அங்கு போய்ச் சேரவேயில்லை என்று!

இந்த விவரம்கூட நான் டெல்லிக்கு ஒருமுறை என் பணி நிமித்தம் சென்றபோதுதான் தெரிய வந்தது. நானும் நேரிலேயே எங்கள் துறை சார்ந்த இயக்குநர்களிடம் தெரிவித்து,

கஞ்சமலைக்கு ஒரு ‘ஸ்பெஷல் ஃபோர்ஸ்’ எனப்படும் குழுவை அனுப்பி ஆய்வு செய்யச் சொன்னேன்.அங்கு இரும்புக் கனிமவளம் இருப்பது உறுதி செய்யப்பட்டு, அந்த மலை பராமரிக்கப்படும் செய்திகள் எனக்குக் கிடைத்தன.

பின்னர் என் வற்புறுத்தலால் டெல்லியிலிருந்து ஒரு அதிகாரி கஞ்சமலையில் நாங்கள் ஆய்வு நிகழ்த்திய இடத்தையும், அந்தக் கல்வெட்டுப் பாடல் உள்ள இடத்தையும் காண வந்தார். பார்த்தவர், ‘என் பார்வைக்கு இங்கே பெரிதாக எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை’ என்பதுபோல பேசினார். கல்வெட்டுப் பாட்டில் உள்ள பொருளின்படி சித்ரா பௌர்ணமி அன்று குறிப்பிட்ட அந்த நேரத்தில் அங்கே இருந்து கவனித்தால் உண்மை தெரியக்கூடும் என்றேன்.

அதற்கு அவரும் ‘சித்ரா பௌர்ணமி நாள் இரவு நாம் இருவருமே சென்று பார்ப்போம்’ என்று கூறிவிட்டுத் திரும்பிச் சென்றார். அப்படிச் சென்றவர் மாரடைப்பால் காலமான செய்தியே பிறகு கிடைத்தது. நான் விடாது முயன்று இன்னொரு ஆய்வாளரை வரவழைத்து, திரும்பவும் அந்த மலைப்பகுதிக்குச் சென்று காண்பித்தேன்.

இவ்வேளையில் ஒரு குறிப்பிட்ட சம்பவம் நடந்தது. முன்பு வந்த ஆய்வாளருக்கு ஒரு இடத்தில் கீழே விழுந்ததில் முட்டியில் அடிபட்டிருந்தது. இப்போது வந்தவரும் அதே இடத்தில் விழுந்தார். அவருக்கும் முட்டியில் அடிபட்டது. நானும் முதல் முறையாக ‘அமானுஷ்யம் என்று ஒன்று உண்மையோ’ என எண்ணத் தொடங்கினேன்.” - கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

ப்ரியா அந்த நாய்க் குரைப்பு சத்தத்தைக் கேட்டபடியே அனந்தகிருஷ்ணன் அறை நோக்கி ஓடிச்சென்று கதவைத் தட்டத் தொடங்கினாள். உட்புறமாய் தாழிட்டுக் கொண்டு பத்மாசினியும் அனந்தகிருஷ்ணனும் தூங்கியே போய் விட்டிருந்தனர்.ப்ரியா பலமாய் தட்டவும்தான் எழுந்து வந்து திறந்தாள் பத்மாசினி. கதவு திறக்கப்பட்ட வேகத்தில் உள்ளே நுழைந்து கதவைத் தாழிட்டாள் ப்ரியா.

‘‘ப்ரியா... என்னாச்சு? ஏன் உள்ளே வந்து கதவை மூடறே?’’ - பத்மாசினி கேட்டிட, ப்ரியாவின் கையிலிருந்த செல்போனில் வள்ளுவர் குரலில் கந்த சஷ்டி கவசத்தின் தொடர்ச்சி.

‘‘இது என்ன செல்போன்ல சஷ்டி கவசம்?’’- அவளே கேட்க, ப்ரியா பதிலுக்கு போனைக் காதில் வைத்து ‘‘ஐயா... போதும்யா! நான் அப்பா அம்மா ரூமுக்கு வந்துட்டேன்’’ என்றாள்.

‘‘நல்லதும்மா... பயப்படாம படுத்துத் தூங்கு! நாளைக்கு நான் வரேன்... விவரமா பேசுவோம்!’’

‘‘சரிங்கய்யா...’’

‘‘தாத்தா தூங்கிட்டாரா?’’

- வள்ளுவரிடம் எதிர்பாராத கேள்வி. ஸ்பீக்கர் போன் என்பதால் பத்மாசினி, அனந்தகிருஷ்ணன் இருவருக்கும்கூட கேட்டது.‘‘தாத்தா... தாத்தா இப்ப வீட்லயே இல்லைய்யா...’’ என்றாள் ப்ரியா, சற்று இழுவையான குரலில்...

‘‘ஓ... இதையும் நான் எதிர்பார்த்தேன்! சரி எல்லாத்தையும் காலையில பேசலாம். நீ தைரியமா தூங்கு.’’

‘‘அந்த முத்தழகு ஆவி இந்த அறைக்குள்ள வந்துட்டா?’’

‘‘வராது... ஒருவேளை நீ பயப்படற மாதிரி நடந்தா, சஷ்டி கவசத்தையோ, சுப்ரபாதத்தையோ நல்லா வீடு முழுக்க கேக்கற மாதிரி போடு!’’

‘‘சரிங்கய்யா...’’

‘‘திரும்பவும் சொல்றேன்... தைரியமா இரு! எனக்குத் தெரிஞ்ச சாமுத்ரிகா லட்சணப்படியும், உன் பெயரொலிப்படியும் உனக்கு துர்பலமா எதுவும் நடக்க வாய்ப்பு இல்லை. நீ நல்லா அனுபவிச்சு வாழறதுக்காகத்தான் இந்த ஜென்மமே எடுத்திருக்கே. ஆகையால, ‘அப்படி ஏதாவது ஆயிடுமோ...’ ‘இப்படி ஏதாவது ஆயிடுமோ’ன்னு எல்லாம் கொஞ்சமும் பயப்படாதே. என்ன?’’

‘‘சரிங்கய்யா...’’

போன் கட் ஆனது. நிமிர்ந்தாள். பத்மாசினியும் அனந்தகிருஷ்ணனும் குத்துப்பார்வை பார்த்தனர். ‘‘அம்மா... அப்பா...’’ என்று ஆரம்பித்தவள் சகலத்தையும் சொல்லி முடித்தாள்.

‘‘மைகாட்! அப்ப முத்தழகு ஆவி நம்ம வீட்டை சுத்துதாடி... ஐயோ!’’ என்று அனந்தகிருஷ்ணன் கையை இறுகப் பற்றிக்கொண்டாள் பத்மாசினி.

‘‘ஆமாம்மா... எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியாமதான் வள்ளுவருக்கு போன் செய்தேம்மா!’’

‘‘வள்ளுவர்... நாசமா போனவர்... அந்த ஆளால வந்ததுதானே இவ்வளவும்?’’

‘‘உளறாதேம்மா. நீதானே சொல்வே... ‘எப்ப எது நடக்கணுமோ அப்ப அது நடந்தே தீரும்’னு!’’ - ப்ரியாவும் பத்மாசினியும் உரசிக்கொள்ள, அனந்தகிருஷ்ணன் மெதுவாகப் போய் அறையில் இருந்த சி.டி. பிளேயரை ஆன்செய்து விஷ்ணு சஹஸ்ரநாமத்தைப் போட்டார். அது ஒலிக்கத் தொடங்க, அமைதியாக வந்து கட்டிலில் அமர்ந்தவர் தன் அருகில் ப்ரியாவை அமர்த்திக் கொண்டார். இந்தப் பக்கமாய் பத்மாசினியும் அமர்ந்து கொண்டாள்.

* * *

வாழ்க்கை என்பது மாற்றங்கள் நிறைந்ததுதான். ஆனால் சில நேரங்களில் சில மாற்றங்கள் கற்பனைகூட செய்ய முடியாதபடி நடந்துமுடிந்து, ‘இப்படிக்கூட நடக்க முடியுமா’ என்கிற கேள்வியை எழுப்புவதை என்னவென்று சொல்வது?மோட்டார் பைக் பில்லியனில்

ஹெல்மெட் இருக்க, வர்ஷனின் பைக் வேகமாக உள்ளே நுழைந்தது. வாட்ச்மேன் தங்கவேலு கதவைத் திறந்து விட்டு திரும்ப மூடினான். பெரிதாகக் கொட்டாவி விட்டான்.

‘‘என்ன தங்கவேலு... ராத்திரி சரியா தூங்கலையா?’’ என்ற வர்ஷனைத் திரும்ப வந்த கொட்டாவியோடு பார்த்தவன், ‘‘தம்பி... ராத்திரியெல்லாம் ஒரே நாய் குலைக்கற சப்தம். காத்து கருப்புங்க திரிஞ்சாதான் நாயுங்க அப்படி கத்தும்பாங்க... இத்தனை வருஷத்துல இப்படி நாய் குலைச்சு நான் கேட்டதில்லை’’ - என்றான் தங்கவேலு.

‘‘அப்ப காத்தோ, கருப்போ சுத்தியிருக்கணும்ங்கறே... அப்படித்தானே?’’

‘‘பயமுறுத்தாம போங்க தம்பி... நான் எனக்குத் தெரிஞ்சதைச் சொன்னேன்...’’

தங்கவேலுவிடம் குழப்பமும் பயமும் இருப்பது புரிந்தது. அவனை மேலும் குழப்பாமல், வர்ஷன் வீட்டுக்குள் நுழைந்தான். உள்ளே சுப்ரபாதம் ஒலித்தபடி இருந்தது. ஆனால் அமுக்கமாய் சப்தம் கேட்டது - யாரையும் காணவில்லை.

‘‘ப்ரியா...’’ என்று குரல் கொடுத்த நொடியில் கதவைத் திறந்துகொண்டு ப்ரியாவோடு பத்மாசினியும் அனந்தகிருஷ்ணனும் ஒருசேர வந்தனர். சுப்ரபாதமும் சப்தமாய் கேட்டது.‘‘வாப்பா...’’ என்றாள் பத்மாசினி.

‘‘என்ன இது... இப்பதான் வெளிய வர்றீங்களா... மணி என்ன தெரியுமா?’’ என அவன் கேட்க, சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தனர். ஒன்பது மணியைக் கடந்து விட்டிருந்தது அந்த காலைப்பொழுது.

‘‘என்ன… தாத்தா வந்துட்டாரா? போன் ஏதாவது வந்ததா?’’ - முன்கேட்ட கேள்விக்கு அவர்கள் பதில் கூறும்முன் அடுத்த கேள்வியையும் கேட்டான்.

‘‘இல்லடா… அந்த முத்தழகு ஆவிக்கு பயந்து மூணு பேருமே வெளியவே வரலை. சி.டி. பிளேயரையும் நிறுத்தவேயில்லை’’ - என்றபடி ஹால் சோபாவில் சென்று அமர்ந்தாள் ப்ரியா.

‘‘பேசிக்கிட்டிருங்க… ஃப்ரெஷ் பண்ணிட்டு வர்றேன்’’ - என்று விலகினார் அனந்தகிருஷ்ணன். பத்மாசினி சமையல் அறைமுன் தயக்கமாய் நின்றுகொண்டு உள்ளே எட்டிப் பார்த்தபடி இருக்க, வர்ஷனுக்குப் புரிந்து விட்டது.

‘‘ஆன்ட்டி! தைரியமா போங்க. அதான் எல்லாரும் இருக்கோமே…’’ என்றான் வர்ஷன். அவளும் அரைமனதாய் உள்ளே நுழைந்து காபி போடத் தயாரானாள். ஒரு ஓரமாய் வெடித்துச் சிதறிய மைக்ரோவேவ் அடுப்பு கிடந்தது. அது பத்மாசினிக்குள் முத்தழகு தொடர்பான கிலியை மூட்டியது. விறுவிறுவென்று வெளியே வந்தவள், ஹால் சோபாவில் வந்து ப்ரியா அருகில் அமர்ந்து கொண்டாள்.

‘‘ஆன்ட்டி…’’

‘‘பயமா இருக்குப்பா… எப்படிச் சொல்றதுன்னே தெரியல எனக்கு!’’

‘‘கிட்டத்தட்ட நானும் உங்கள மாதிரிதான் ஆன்ட்டி. பை த பை… வள்ளுவர் எத்தனை மணிக்கு வர்றேன்னார்?’’

‘‘இப்ப வந்துடுவார்னு நினைக்கறேன்...’’

‘‘ஐயோ... அவர் எதுக்கு?’’ - பத்மாசினி பதைபதைக்க, ‘‘வாயை மூடும்மா... இப்ப நமக்கு ஏற்பட்டுருக்கற சிக்கல்ல இருந்து அவரால மட்டும்தான் நம்மை விடுவிக்க முடியும்’’ என்று ப்ரியா சொல்லும்போதே தங்கவேலு உள்ளே வந்தான்.

‘‘அம்மா! அந்தப் பெரியவர் திரும்ப வந்திருக்காரு... நம்ம பெரிய ஐயாவும் வீட்ல இல்ல... ‘ஐயா இல்ல, போய்ட்டு வாங்க’ன்னு அனுப்பிடவா?’’ - என்று விநயமாகக் கேட்டான்.

‘‘ஐயோ தங்கவேலு... முதல்ல அவரை உள்ள அனுப்பு. அவருக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கோம்.’’ - ப்ரியா தோட்டா போல் வெடித்தாள். தங்கவேலு ஓட்டமாக வெளியில் சென்ற அடுத்த நிமிடத்தில் வள்ளுவரும் உள்ளே வந்தார். வந்தவர் தோளில் ஒரு பை தொங்கியபடி இருந்தது. நெற்றி நிறைய விபூதியும் குங்குமமும் தென்பட்டது.

‘‘ஐயா, வாங்க...’’

‘‘நல்லதும்மா... அப்புறம் நல்லா தூங்கினியா?’’

‘‘எங்கய்யா... விடிய விடிய முழிச்சுக்கிட்டேதான் இருந்தோம்.’’

‘‘அனுபவமில்லாததால ரொம்ப பயந்துட்டீங்க... போகட்டும்! உங்க வீட்ல இரும்பு சுத்தியல் இருக்கா?’’

‘‘நீங்க முதல்ல உக்காருங்க... எதுக்கு சுத்தியல்?’’

‘‘முதல்ல சுத்தியல் கொடும்மா... ஒரு வேலையை முடிச்சுடறேன்’’ என்றவரிடம் ப்ரியா சுத்தியலை எடுத்து வந்து தந்தாள். அவர் தன் தோளில் தொங்கிய பையிலிருந்து நான்கு இரும்பு லாடங்களை வெளியே எடுத்தார்.

‘‘ஐயா! என்ன இது?’’

‘‘இரும்பு லாடம்மா... இதை வீட்டுக் கதவு நிலைல பொருத்திட்டு வந்துட்றேன். கொஞ்சம் இரு...’’

‘‘இதை எதுக்குப் பொருத்தணும்?’’

‘‘கெட்ட சக்திகள் வீட்டுக்குள்ள நுழையாதும்மா. அதுக்குத்தான்...’’

‘‘அது எப்படி?’’ - என்று கேட்டவளிடம் ‘‘வந்து சொல்றேன்’’ என்றவராகச் சென்றார்.

‘‘இருங்க, நானும் வரேன்...’’ என்று ப்ரியாவும் உடன் செல்ல, அவர் முதலில் வாசலில் உள்ள நிலையின் மேலும், பின் இடதுபுறமாய் உள்ள ஒரு ஜன்னல் நிலை மேலும், பின்புறமாய் உள்ள வாசல் நிலைகால் மேலும், அப்படியே வலதுபுறத்து ஜன்னல் நிலை மேலும் என வீட்டின் நான்கு திசைகளிலும் லாடக்கட்டு போட்டுவிட்டு வந்தார். பத்மாசினி மலைப்போடு பார்த்துக்கொண்டிருந்தாள். அனந்தகிருஷ்ணனும் துண்டை தோளில் போட்டு மூடியவராகப் பார்த்தார்.

‘‘உட்காருங்கய்யா...’’

‘‘தாராளமாம்மா! இனி எந்த காத்தும் உள்ள வராது. நீ தைரியமா இரு!’’

‘‘இப்படி லாடம் அடிச்சா வராதாய்யா?’’ - கேட்டான் வர்ஷன்.

‘‘ஆமாம்பா... இந்த வீட்டோட நாலு திசைகளின் மையமும் இரும்பு லாடத்தால இணைக்கப்பட்டாச்சு. இது வீட்டுக்குள்ள நிலவற காஸ்மிக் எனர்ஜியை சமப்படுத்தறதோட, வாஸ்து பலம் தாறுமாறா இருந்தா அதையும் சரி செய்யும். வாஸ்துவும் சரியா வேலை செய்யும். அதனால வீட்டைச் சுத்தி ஒரு கதிர்வீச்சு உருவாகும். அதை ‘அருட்கதிர்’னு தமிழ்ல சொல்வோம். இங்கிலீஷ்ல ‘பாசிடிவ் பவர்’னு பொதுவா சொல்வாங்க...’’

‘‘இதையெல்லாம் எதை வச்சு நம்பறது?’’

‘‘இன்னிக்கு இடத்தோட எனர்ஜி லெவலை தெரிஞ்சுக்க ரொம்ப நுட்பமான கருவிகள் நிறைய வந்தாச்சும்மா. இந்த விஷயத்துல சீனர்கள் பிரபஞ்ச அறிவு அதிகம் உள்ளவங்கன்னு சொல்லலாம். அவங்கள்ல ‘தாவோ’ன்னு ஒரு தத்துவஞானி எதையும் வித்தியாசமா பாக்கறவர். ஒரு பாத்திரம் இருக்குன்னா ‘அந்தப் பாத்திரம் நமக்குப் பயன்படறதே இல்லை. அதுக்குள்ள இருக்கற வெளி மட்டும்தான் பயன்படுது’ம்பார். ‘வெளிக்காகத்தான் பாத்திரம் தேவை. நமக்கு வெளிதான் தேவை’ன்னு சொல்லுவார்.’’

‘‘ஐயா! இப்ப இந்த மாதிரி விஷயங்களை பேசற மூட்ல யாரும் இல்லை. தெரிஞ்சோ தெரியாமலோ நீங்க வந்ததுல இருந்துதான் இந்த வீட்லயும் பிரச்னையே. பெரியவரும் மாயமாகி எங்க இருக்கார்னு தெரியல. எங்களையும் சிலர் கவனிச்சுக்கிட்டே இருக்காங்க...’’ என்று பின்பாயின்ட்டாகப் பேசினான் வர்ஷன்.

‘‘தம்பி! நான் சொல்லப் போறதையும் நீங்க தெளிவா கேட்டுப் புரிஞ்சிக்குங்க. தொண்ணூறு சதவீதம், ஆராய்ச்சியாளர் ஐயா காலப்பலகணியைத் தேடிக்கிட்டுதான் போயிருக்கணும். அவரைத் தவிர வேற யாராலயும் காலப்பலகணி இருக்கற இடத்தை கண்டுபிடிக்கவும் முடியாதுங்கறதுதான் என் எண்ணம்.’’

‘‘அப்படிப் போறவர் சொல்லிட்டுப் போகலாமே?’’

‘‘சொன்னா நீங்க விடமாட்டோம்னு சொல்லலாம்!’’

‘‘நிச்சயம் சொல்வோம். இந்த வயசுல எதுக்கு இந்த வேண்டாத வேலை..?’’ - பத்மாசினி இடையிட்டாள்.

‘‘வயசாயிட்டா ‘கிருஷ்ணா... ராமா...’ன்னு மட்டுமே இருக்கணும்ங்கறது ரொம்ப பழைய சிந்தனைம்மா. அனுபவ அறிவு பழுத்து வாழை போல குலை தள்ளி இருக்கற காலம்மா வயசான காலம். அந்த அறிவுக்குத் தீனி போட வேண்டாமா?’’

‘‘எதைச் சொன்னாலும் ஒரு பதில் சொன்னா எப்படி... நீங்களும்தான் வயசானவர். அதை நீங்க தேடாம இங்க எதுக்கு வந்து இவரைத் தூண்டி விட்டீங்க?’’

‘‘நான் தப்புக்கணக்கு போட்டுட்டேம்மா! ‘நிச்சயம் உயிரோட இருப்பேன்’னு தெரிஞ்சிருந்தா நானே முயற்சி செய்திருப்பேன். அப்பகூட என்னால முடியுமான்னு ஒரு கேள்வி இருக்கு. எல்லோராலயும் அதுகிட்ட நெருங்க முடியாது. அதுக்குப் பின்னால புதிரான பல சக்திகள் இருக்கு!’’

‘‘இப்பதான் என் மாமனார் கிளம்பிப் போயிட்டாரே... நீங்க என்ன வேணும்னாலும் சொல்வீங்க! அந்தப் பெட்டி வீட்டுக்குள்ள வந்ததுக்கே ஒரு உயிர் போய், ஆவியாவும் வந்து மிரட்ற அளவு மோசமான நிலைமை. இன்னும் என்னென்ன நடக்கப் போகுதோ?’’

‘‘தைரியமா இருங்க! இவ்வளவு வருஷமா இல்லாம இப்ப எனக்குப் புதுசா ஒரு விஷயம் தெரிய வந்துருக்கு. விதிக்குதான் இந்த மண்ணுல எப்பவுமே சக்தி. அதேசமயம் மதிக்கு அதைவிட கூடுதலான சக்தி வரும்போது, அந்த விதி மதிக்கு கட்டுப்பட்டு மாறியிருக்கு. அபிராமி பட்டர் அதுக்கு ஒரு உதாரணம். அமாவாசை அன்னிக்கு வானத்துல நிலாவையே வர வைச்சிருக்காரு...’’ - பத்மாசினியும் வள்ளுவரும் மட்டுமே உரசிக்கொண்ட நிலையில் வர்ஷன் எழுந்தான்.

‘‘ஐயா! கொஞ்சம் என்னைப் பாருங்க... என் அக்கவுன்ட்ல 50 லட்சம் ரூபாயைப் போட்ட ஒரு கூட்டம், அந்தப் பலகணிக்காக துரத்திக்கிட்டிருக்காங்க. அவங்க என் தங்கையைக் கடத்தி வச்சுக்கிட்டு என்னை பிளாக்மெயில் எல்லாம் பண்ணினாங்க. அவங்கள எல்லாம் ஏமாத்திட்டுதான் ப்ரியாவோட தாத்தா கம்பி நீட்டியிருக்கார். அவங்க சும்மா இருப்பாங்களா?’’ - வர்ஷன் மிக ஆவேசமாகக் கேட்டான். அவன் போட்டு உடைத்த அந்த நிஜம், அனந்தகிருஷ்ணனை பதறச் செய்தது. அந்த நொடியில்தான் ‘காலப்பலகணிக்குப் பின்னால் ஒரு அசாதாரணத் தேடல் இருப்பது’ அவருக்கும் பத்மாசினிக்கும் தெரிய வந்தது.

‘‘வர்ஷன்... என்ன சொல்றே நீ? 50 லட்ச ரூபாயை உன் அக்கவுன்ட்ல போட்டாங்களா... யாருப்பா அது? பிளாக்மெயில் அது, இதுன்னு என்னென்னவோ சொல்றே?’’ - அனந்தகிருஷ்ணன் குரல் நடுங்கக் கேட்டார்.

‘‘ஆமாம் அங்கிள்! டெல்லியில சதுர்வேதின்னு ஒருத்தன். ஹைடெக் சாமியாரா திரியற ஒரு நபர். எம்.பி.க்கள், மந்திரிகள்னு பலர் அவனுக்குக் கட்டுப்பட்டவங்க. அவசியம் தேவையானா, ஜனாதிபதியே கூட அவன்கிட்ட ஆலோசனை கேட்பாராம். எல்லாம் சொல்லக் கேள்வி... அவனுக்கு இந்தக் காலப்பலகணி பற்றித் தெரிய வந்துருக்கு. இதுலதான் கால ரகசியங்கள் அவ்வளவுக்கும் பதில் இருக்கே!’’

‘‘அதனால..?’’

‘‘என்ன அதனால... அவன் ஜாதகக் கட்டத்தை வச்சே எல்லாரையும் ஆட்டி வைக்கறவன். அப்படிப்பட்டவன் கைல அமுதசுரபி, அட்சய பாத்திரம் மாதிரி இந்தப் பலகணி சிக்கினா உலகத்தையே ஆட்டிப் படைக்கலாமே?’’

‘‘ஈஸ் இட் பாசிபிள்?’’

‘‘என்ன அப்படிக் கேட்டுட்டீங்க அங்கிள்! பலகணியைப் பயன்படுத்தி எல்லா கேள்விக்கும் துல்லியமான பதிலை தெரிஞ்சுக்கலாம். அது ஒரு சூப்பர் கம்ப்யூட்டர் மாதிரி... ஆபரேட் பண்ணத் தெரிஞ்சா அந்த சூப்பர் கம்ப்யூட்டர் எவ்வளவு பெரிய கணக்கையும் நொடிக்குள்ள போட்டு எப்படி பதில் தருமோ, அப்படித்தான் அதுவும்! அடுத்த பிரதமர் யார்? அடுத்த புயல் எப்போ? அடுத்த சுனாமி என்னிக்கு? 2050ல இந்தியா எப்படி இருக்கும்? செவ்வாய்க் கிரகத்துல என்னவெல்லாம் இருக்கு? சிவா, விஷ்ணு, பிரம்மா எல்லாம் உண்மையா? ராமாயணம், மகாபாரதம் எல்லாம் கதையா... நிஜ சம்பவமா? இப்படி நம்ப முன்னால இருக்கற

மில்லியன் டாலர் கேள்விக்கெல்லாம் அதுல பதில் இருக்கே... வள்ளுவர் ஐயா! சொல்லுங்க இவருக்கு...'' - வர்ஷன் வெடித்தான்!

29

''கஞ்சமலையில் எனக்கு நேரிட்ட அமானுஷ்ய அனுபவம், என் மனதை மிகவே பாதித்து விட்டது. வாழ்வு குறித்த பலவித கேள்விகள் அதன் காரணமாக என்னுள் எழும்பின. 'அமானுஷ்யம் என்பதே அகராதியில் இல்லாத ஒரு சொல்...

அது மீடியாக்காரர்களால் கண்டறியப்பட்ட ஒரு புதிய சொல்' என்று எப்போதோ யாரோ சொன்ன கருத்து எனக்குள் தோன்றி, அந்தக் கஞ்சமலை சம்பவத்தைப் பற்றி பலவாறு நினைக்க வைத்தது. இப்படி நான் எனக்குள் ஒரு எண்ணக் குடைச்சலுடன் இருந்த வேளையில்தான் ஜோசப் சந்திரன் என்பவர் சந்திப்பு நிகழ்ந்தது.

ஜோசப் சந்திரன் ஒரு ஆங்கிலப் பேராசிரியர்! ஆங்கிலத்தில் மிகச் சரளமாகப் பேசுவதோடு, மிக ஆழமாக எழுதவும் செய்வார். இவரது கட்டுரைகளைப் படிக்கும்போது சில ஆங்கிலச் சொற்களுக்குப் பொருள் தெரியாமல் நான் அகராதியின் துணையை நாடியதுண்டு. அவருக்கு மேல்நாட்டு இலக்கியங்கள் எல்லாமும் மிகப் பரிச்சயம்.

நான் அவரைச் சந்தித்தபோது 'The Wheel of Time' எனும் அமானுஷ்யம் சார்ந்த புத்தகம் ஒன்றைத்தான் படித்துக்கொண்டிருந்தார். Carlos Castaneda என்பவர் எழுதிய

புத்தகம் அது. *'It's impossible to view the world in quite the same way'* என்று 'சிகாகோ ட்ரிப்யூன்' எனும் இதழ், அந்தப் புத்தகம் பற்றி ஒரு வரியில் கருத்து சொல்லியிருந்தது.

அதை எல்லாம் கவனித்தபடியே அவரிடம் நான் என் அமானுஷ்ய அனுபவம் குறித்துப் பேசத் தொடங்கினேன். முன்னதாக கஞ்சமலையில் உள்ள அந்த இடம் மற்றும் கல்வெட்டுப் பாடலையும் கூறினேன்.

ஆழ்ந்து கேட்டுக்கொண்ட சந்திரன் என்னைக் கேள்விகள் கேட்கச் சொன்னார். 'அந்த மலைக்கு ஆராயச் சென்ற ஒருவர் இறந்துவிட்டார்... இன்னொருவருக்கு பலத்த காயம்... ஆராய்ச்சி விஷயத்தில் ஒரு அடிகூட முன்னேற்றமில்லை. எழுதி அனுப்பிய கடிதங்களும் சென்று சேரவில்லை. இதை எப்படி எடுத்துக்கொள்வது?' என்று கேட்டேன்.

'இவற்றில் அமானுஷ்யத்திற்கு நிறைய இடமிருக்கிறது. இவற்றை தற்செயலாக நடந்துவிட்ட சம்பவங்களாகக் கருத முடியாது' என்றார்.'என்றால், அமானுஷ்யம் என்பது உண்மையா?''மனித சக்தி மற்றும் அதன் ஐம்புலன்களால் ஆன முயற்சிக்கு அப்பாற்பட்ட எல்லாமே அமானுஷ்யம்தான்!'

'அது எப்படி மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்று இருக்க முடியும்?''அமானுஷ்யம் என்பதும் மனித சக்தியின் இன்னொரு பரிமாணம்தான். பஞ்சபூதத்தால் ஆன உடம்புக்குள் இருக்கும் வரை உருவாகும் சக்தி, உடம்பைத் துறந்துவிட்ட நிலையில் உருவாகும் சக்தி என்று இரண்டு நிலைகள் உள்ளன.

நமக்கு உடம்புக்குள் இருக்கும் வரை உருவாகும் சக்தி பற்றி மட்டும்தான் தெரியும். உடம்பைத் துறந்துவிட்ட நிலையில் உருவாகும் சக்திதான் அமானுஷ்ய சக்தியாக உள்ளது.''பௌதிக அடிப்படையில் இது சரியா? சாத்தியம்தானா?''இப்படி சந்தேகப்படுவதில் தவறில்லை. அதனால் நஷ்டமுமில்லை. ஆனால் இதனாலேயே அமானுஷ்யத்தைப் புரிந்து கொண்டுவிட முடியாது.''என்ன செய்ய வேண்டும்?'

'அனுபவத்துக்கு ஆட்பட வேண்டும். இந்த 'The Wheel of Time' புத்தகம்கூட அமானுஷ்யம் குறித்த ஒரு பார்வைதான்.''நான் அனுபவத்துக்குள்ளானதால்தானே கேள்வியே எழுப்பியுள்ளேன்!''உங்கள் அனுபவம் முழுமையான அனுபவமல்ல... நீங்கள் அவசரப்படுகிறீர்கள்...''இதில் அவசரப்பட என்ன இருக்கிறது?'

'மேலும் அனுபவத்துக்கு ஆளாவோம். நானும் வருகிறேன். இந்த உலகில் மனிதர்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த முடிந்த இடம் - செலுத்தக்கூடாத இடம் என்று இரண்டு உண்டு. அந்த இடம் ஆதிக்கம் செலுத்தக்கூடாத இடமாக ஒருவேளை இருக்கலாம்.'- ஜோசப் சந்திரன் சொன்னதை நான் ஏற்றுக்கொண்டேன். அந்த வாரத்து ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமி நாளாக அமைந்திருக்க, அன்றைய இரவு அங்கே திரும்பச் செல்ல முடிவெடுத்தோம்!''

- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அனந்தகிருஷ்ணன், பத்மாசினி முன் வள்ளுவரைத் துணைக்கு அழைத்து அவரைப் பேசச் சொன்னான் வர்ஷன்.

வள்ளுவர் மௌனமாக அவர்களைப் பார்த்தார்.

அனந்தகிருஷ்ணன் இனம்புரியாத தவிப்போடு பதிலுக்குப் பார்த்தார்.

‘‘தம்பி சொல்றது வாஸ்தவம்தான்.. அது இருந்துட்டா நாம கடவுளாவே ஆகிட்ட மாதிரிதான்...’’ என்று மிக இதமான குரலில் சொன்னார் வள்ளுவர்.

‘‘அய்யா! நீங்க வந்த அன்னிக்கே பலகணி எப்படிப்பட்டதுன்னு எனக்குத் தெரிஞ்சுபோச்சு. இப்ப ‘ஈஸ் இட் பாசிபிள்’னு நான் கேட்டதோட அர்த்தமே வேற...’’

‘‘அப்ப எந்த அர்த்தத்துல கேட்டீங்க?’’

‘‘அது எப்படிய்யா என்னிக்கோ நடக்கப்போறத முன்கூட்டியே சொல்ல முடியும்?’’

‘‘அது சொன்னதைப் பாத்துமா உங்களுக்கு சந்தேகம்?’’

‘‘ஒண்ணு, ரெண்டு சரியா இருக்குங்கறதுக்காக எல்லாமே இருந்துடுமா... இது தற்செயலான ஒண்ணா இருக்கலாம் இல்லையா?’’

‘‘தற்செயலான ஒண்ணோட அடிப்படைக் குறிப்புகளுக்கு யாராவது ஐம்பது லட்ச ரூபாயை பேங்க்ல போட்டு கிட்நாப் பண்ற எல்லைக்கெல்லாம் போவாங்களா?’’

‘‘சரி, நாம விஞ்ஞானபூர்வமா பகுத்தறிவோட சிந்திச்சுப் பார்ப்போம். இப்படி ஒரு Prediction- அதாவது ‘முன்தெரிதல்’னால இதைக் கண்டுபிடிச்சு சொன்னவங்களுக்கு என்ன லாபம்? அப்படிச் சொன்னவங்க ஏன் கண்டுபிடிக்க முடியாதபடி ரகசியமா அதை வைக்கணும்?’’

‘‘இது ஒரு அறிவுக் கணக்கு! இதுல எந்த மாய மந்திரமும் கிடையாது. கணக்கோட விடைதான் குறிப்புகள். இப்படிப்பட்ட கணக்கைப் போட்டவன் சராசரி மனுஷன் இல்ல... அவன் தன் மூளையை நம்மைப் போல பத்து, பதினைஞ்சு சதவீதம் மட்டுமே பயன்படுத்தறவன் இல்லை. நூறு சதவீதம் பயன்படுத்தினவன். இது ஒரு வித்தை.

இந்த வித்தையை, அவனைப் போல நூறு சதவீதம் மூளையைப் பயன்படுத்தற ஆற்றல் உள்ளவனுக்குத்தான் கத்துத் தர முடியும். அப்படி ஒரு ஆற்றல் கொண்டவங்க எப்பவாவதுதான் பிறப்பாங்க. அதனாலதான் பலகணியோட கணிதத்தை சொல்லித் தரலை.

அடுத்து, இந்தப் பலகணி ஒரு கத்தி மாதிரி! கத்தியை எப்படி வேணும்னாலும் ஒருவர் பயன்படுத்தலாம். பயன்படுத்தலாம்ங்கற வார்த்தை கூட தப்பு. பயன்படும்ங்கறதுதான் யதார்த்தம். எப்படி

கத்தியை ஒருவன் தவறா பயன்படுத்தி கொலையும் செய்ய முடியுமோ, அப்படித்தான் இதுவும். அதனால இதை ரகசியமா வெச்சான். ரகசியமாதான் வெச்சான்... இதை அழிச்சிடலை. ரகசியமான இதைக் கண்டுபிடிக்க விதியுள்ளவன் கண்டுபிடிச்சு குறிப்புகளைத் தெரிஞ்சுக்கட்டும்னு நினைச்சிருக்கலாம்.’’

- வள்ளுவர் சொன்ன பதில் அனந்தகிருஷ்ணனை பெரிதாகச் சமாதானம் செய்த மாதிரி தெரியவில்லை. சமாதானம் ஆகாமல் தாடையைத் தேய்த்துக் கொண்டார்.

ப்ரியாவுக்கு எரிச்சலாக வந்தது.

‘‘டாட்...இது தேவையில்லாத விவாதம். இதனால நமக்கு நடக்கப் போறது எதுவுமில்லை. இந்த விஷயத்துல தாத்தா ஒரு பக்கம் தன் தேடலைத் தொடங்கிட்டார்ங்கறதுலயும் எனக்கு சில கேள்விகள் இருக்கு!’’ என்றாள்.

‘‘அது என்ன ப்ரியா?’’

‘‘தாத்தா சொல்லாம கொள்ளாம போகத் தேவையில்லை வர்ஷன். அவர் கொடைக்கானல் போறதாதான் எங்ககிட்ட சொன்னார். ‘அங்க போய் ஒரு மாசம் ஓய்வெடுக்கப் போறேன். அதுக்கு மேல கூடவும் செய்யலாம்’னார். அப்படி சொல்லும்பாதே அவர் கம்பி நீட்டிடுவார்னு நான் கணக்குப் போட்டுட்டேன். ஆக, அவர் இப்படி திடுதிப்னு காணாமப் போக வேண்டிய அவசியமே இல்லை.’’

‘‘அப்ப அவரைக் கடத்திட்டாங்கன்னு சொல்ல வர்றியா?’’

‘‘அதுக்குத்தான் நிறைய சான்ஸ் இருக்கு...’’ ப்ரியா அழுத்தமாகக் கூற, வள்ளுவர் ப்ரியாவைப் பார்த்தார்.

‘‘அம்மாடி... இரண்டு பேப்பரை எடுத்து ‘கடத்தப்பட்டார்’னு ஒரு காகிதத்துல எழுது... ‘தானாகச் சென்றுவிட்டார்’னு இன்னொரு காகிதத்துல எழுது’’ என்றார்.

‘‘எதுக்குய்யா?’’

‘‘எழுதும்மா... அவர் என்ன ஆனார்னு இப்ப நாம இங்கேயே கண்டுபிடிச்சிடலாம்...’’

‘‘எப்படிய்யா?’’

‘‘நீ எழுதும்மா சொல்றேன்...’’

- ப்ரியாவும் வேகமானாள். திருவுளச்சீட்டு போல இரண்டு சீட்டுகளில் அவர் சொன்னது போல எழுதி, எதிரில் டேபிள் மேல் வைத்தாள். வள்ளுவர் தன் காமராஜர் சட்டையின் பாக்கெட்டுக்குள் இருந்து சிறு சுருக்குப் பை போன்ற ஒன்றை எடுத்தார். வெல்வெட் துணியால் தைக்கப்பட்டிருந்த அந்த பையினுள் இருந்து ஒரு டவுசிங் (Dowsing) எனப்படும் பெண்டுலத்தை வெளியில் எடுத்தார்.

இதே பெண்டுலம்தான் காலப்பலகணி பற்றிய பெட்டிக்குள்ளேயும் இருந்தது. அதைக் கையில் எடுத்த வள்ளுவர், மெல்லிய அதன் சங்கிலியின் நுனியைப் பிடிக்க... ஸ்படிகத்தால் ஆன அந்த பெண்டுலத்தின் கூரியமுனை தரை நோக்கித் தொங்கியது. அப்படியே அது ‘தானாகச் சென்றுவிட்டார்’ என்கிற காகிதத்தின் மேல் நிறுத்தப்பட்டது.

வள்ளுவர் விரலால் அதைப் பிடித்தபடி துளி அசைவின்றி பெண்டுலத்தைப் பார்த்தார். அது எவ்வித அசைவுமின்றி தொங்கியபடியே இருந்தது. மிகச்சரியாக 60 நொடிகள் அப்படியே நின்ற நிலையில், 'கடத்தப்பட்டார்' என்கிற காகிதத்தை எடுத்து அந்தக் காகிதத்தின் மேல் வைக்கச் சொன்னார் வள்ளுவர்.

ப்ரியாவும் அப்படியே செய்தாள். அடுத்த சில நொடிகளில் அந்தப் பெண்டுலம் ஆடத் தொடங்கியது. மெல்ல ஆடத் தொடங்கிய அது, அப்படியே வட்டமடிக்கத் தொடங்கியது. வர்ஷனும், ப்ரியாவும் அவர் விரலையே பார்த்தனர்.

அவர் ஏதாவது செய்து அசைவை உருவாக்குகிறாரா என்கிற சந்தேகம்! ஆனால் அப்படியில்லை. பெண்டுல ஆட்டத்தை ஒரு கட்டத்தில் தடுத்தவர், அதை திரும்ப பைக்குள் போட்டார். ''அம்மாடி... அய்யாவை நீ சந்தேகப்பட்டபடி கடத்தியிருக்காங்க...'' என்றார். அனந்தகிருஷ்ணனுக்கு பகீரென்றது. பத்மாசினியும் வெலவெலத்தாள்.

''இந்த பெண்டுலம் ஆடினதை வச்சு சொல்றீங்களா?'' என்று கேட்டான் வர்ஷன்.

''ஆமாம் தம்பி. இது ஸ்படிக பெண்டுலம். ரொம்பப் புனிதமானது. இது அசைஞ்சா தப்பு - அசையலேன்னாதான் சரின்னு அர்த்தம்...''

''அது எப்படிங்கய்யா... இதை எப்படி நம்பறது? ரொம்ப கண்மூடித்தனமா இருக்கே..?''

''அப்படித்தான் தோணும். ஆனா இதுல தப்பு வராது!''

‘‘இதை எப்படி அறிவுபூர்வமா நம்பறது?’’

‘‘அதுக்கு புலனடக்கற சக்தி உங்களுக்கு இருக்கணும். அது தவம், தியானம்னு உள்ளவங்களுக்குத்தான் சாத்தியம். உங்க வாழ்க்கை ஐம்புலன்களையும் இயக்கி வாழற காம்யார்த்தமான பௌதிக வாழ்க்கை. உங்களால இதை நம்பமுடியாதுதான். நீங்க நம்பறதைப் பத்தியோ, நம்பாததைப் பத்தியோ எனக்கு எந்தக் கவலையும் இல்லை.

ஒரு ரோஜாப்பூ இருக்கு... அதை ஒருத்தன் ‘இது ரோஜாப்பூ இல்லை’ன்னு சொல்றதால பூவுக்கு எந்த பாதிப்பும் கிடையாது. அப்படிச் சொல்றவன்தான் உண்மையை விட்டு விலகிப் போறவனா இருக்கான். இதுவும் அப்படித்தான்...’’ - வள்ளுவர் சொல்லி முடிக்கவும், அனந்தகிருஷ்ணனின் கைபேசி ஒலிக்கவும் சரியாக இருந்தது.

‘‘அனந்தகிருஷ்ணன் ஹியர்...’’

‘‘மிஸ்டர் அனந்தகிருஷ்ணன் சார்... நான் ஒரு ஆக்சிடென்ட் ஸ்பாட்ல இருந்து பேசறேன். உங்க அப்பாதான் இந்த நம்பரைக் கொடுத்து உங்களுக்குத் தகவல் தரச் சொன்னார்.’’

‘‘என்ன சார் விஷயம்... அப்பா இப்ப அங்க இருக்காரா... ஆக்சிடென்ட்னு ஏதோ சொன்னீங்களே?’’

‘‘ஆமாம் சார்... நான் ஈ.சி.ஆர் ரோட்ல மகாபலிபுரம் தாண்டி ஏழாவது கிலோமீட்டர்ல இருந்து பேசறேன். என் பேர் சுகுமார். நான் என் பைக்ல பாண்டிச்சேரி போய்க்கிட்டிருந்தப்பதான்

உங்கப்பாவோட கார் ஆக்சிடென்ட் ஆகி, உங்கப்பா ரோட்டுல கிடந்தார்.

இறங்கி உதவி செய்யப் போனப்பதான் உங்க நம்பரைத் தந்து பேசச் சொன்னார். அவர் இப்ப மயக்கமாயிட்டார். அவரோட கார்ல இருந்த மூணு பேரும் காருக்குள்ளயே நசுங்கிக் கிடக்கறாங்க. அவங்க யாரும் உயிரோட இருக்கற மாதிரியே தெரியல...''

''எங்கப்பாவோட மூணு பேரா?''

''ஆமாம் சார்... தயவுசெய்து உடனே கிளம்பி வாங்க. நீங்களே ஆம்புலன்சுக்கு சொல்லுங்க. சீக்கிரம் சார்...''

''மிஸ்டர் சுகுமார்... நான் சென்னைல இருந்து வர்றதுக்குள்ள அவருக்கு எதாவது ஆகிடப் போகுது... நீங்க கொஞ்சம் பக்கத்துல இருந்து பாத்துக்குங்க. நான் இப்பவே ஹைவே பேட்ரோல் ஃபோர்சுக்கு போன் பண்றேன். ஆம்புலன்சுக்கும் போன் பண்றேன்.''

''சரி சார்... கொஞ்சம் சீக்கிரம் வாங்க! அப்புறம், உதவி செய்ய வந்த என்னை சிக்கல்ல மாட்டி விட்றாதீங்க.''

''நோ... நோ... நீங்க எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கீங்க! உங்களுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கேன்! இஃப் பாசிபிள், உங்க செல்போன்ல அப்பாவை ஒரு போட்டோ எடுத்து வாட்ஸ் அப்ல அனுப்ப முடியுமா?''

''ஒண்ணும் பிரச்னையில்ல சார்... கட்டாயம் அனுப்பறேன்.''

‘‘முடிஞ்சா ஆக்சிடென்ட் ஆன கார் - காருக்குள்ள இருக்கற அந்த மூணு பேரையும் போட்டோ எடுத்து அனுப்புங்க...’’

‘‘ஷ்யூர் சார்...’’ - அனந்தகிருஷ்ணன் போனை முடக்க, பத்மாசினி ‘‘ஐயோ! என்னங்க... மாமாவுக்கு என்னாச்சு?’’ என்று வெடித்தாள். அனந்தகிருஷ்ணனும் காதில் விழுந்ததைக் கூறி முடித்தார். முன்னதாக ஆம்புலன்சுக்கும், பேட்ரோல் ஃபோர்சுக்கும் தகவலும் தந்தார்.

‘‘அய்யா சொன்னதுதான் சரி... தாத்தாவைக் கடத்திக் கொண்டுக்கிட்டு போயிருக்காங்க. வழியில ஆக்சிடென்ட் ஆயிருக்கு. கடத்தினவங்க இப்ப உயிரோடவும் இல்ல...’’ - என்று நறுக்குத் தெறித்த மாதிரி சொன்னான் வர்ஷன்.

‘‘ஐயோ மாமாவுக்கு ஏதாவது ஆகிடப் போகுதுங்க!’’

‘‘புறப்படுங்க...போகும்போது பேசலாம். எதிரிகள் இனி கிட்ட வர ரொம்பவே யோசிப்பாங்க. காலப்பலகணி விஷயத்துல சுயநலத்தோட யார் நடந்தாலும் இந்த மாதிரி பலிகள் நடக்கும். அதனாலதான் அது ரகசியமா இதுவரை பாதுகாப்பாவும் இருக்கு’’ என்றபடியே புறப்பட ஆயத்தமானார் வள்ளுவர்.

‘‘என்னங்க இது? கத்தி போய் வாலு வந்த கதையா ஒண்ணு மாத்தி ஒண்ணு நடந்துக்கிட்டே இருக்கு...’’ என்று படபடத்த பத்மாசினியை ப்ரியா அதட்டி அடக்கத் தொடங்கினாள்.

‘‘அம்மா... தாத்தா இப்ப உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்கார். முதல்ல அவரைக் காப்பாத்தற வழியைப் பார்ப்போம். அப்புறம் மற்ற விஷயங்களைப் பேசலாம். நீ இப்படி பேசறதால எதுவும் மாறிடப்

போறதில்ல’’ என்றவள், அனந்தகிருஷ்ணன், வர்ஷன் இருவரோடும் காரில் புறப்பட்டாள்.

‘‘ஐயோ! எனக்கு தனியா இருக்க பயமா இருக்குங்க...’’ என்று அலறிய பத்மாசினியை அனந்தகிருஷ்ணன் முறைத்தவராக ‘‘அப்ப நீயும் வா’’ - என்றார். அவள் தயங்கினாள்.

வள்ளுவர் அவளை உணர்ந்தவராக... ‘‘அம்மாடி! பயப்படாதே... இனி எந்த ஆவியும் இங்க வராது. அநியாய மரணம் நடக்கற இடத்துல சில சமயம் ஆவிகள் சுத்தி வரும். கட்டு போட்டுட்டா, அது அதோட வழில போயிடும். இதைப் பெருசுபடுத்தத் தேவையில்லை... தைரியமா இரு’’ என்றார்.

அனந்தகிருஷ்ணனும் வாட்ச்மேன் தங்கவேலுவை அழைத்து, ‘‘அம்மாவுக்குத் துணையா இங்கேயே இரு. நாங்க அவசரமா மகாபலிபுரம் வரை போறோம்’’ என்றார். காரும் புறப்பட்டு வீதியில் இறங்கிட, கைபேசியில் வாட்ஸ் அப்பின் சிக்னல் சப்தம். திறந்து பார்க்கவும், கணபதி சுப்ரமணியன் ஒருபுறம் மரத்தின் மேல் சாய்ந்தபடி படுத்திருக்க, காருக்குள் இருப்பவர்களின் முகங்கள் ஓரளவு தெளிவாகவே தெரிந்தன. அவர்கள் முன்பே வர்ஷனின் தங்கை அனுஷாவைக் கடத்தியவர்கள்தான்!

30

அந்த ஞாயிற்றுக்கிழமையும் வந்தது. கல்வெட்டுப் பாடலின் பொருள்படி ‘சித்திரைச் சந்திர வெள்ளி எழும் பின் பிரம்மத்தில்’ என்றால், இரண்டு மணியிலிருந்து நான்கு மணி வரையிலான காலகட்டத்தில். சந்திரன் வானில் சஞ்சரித்த நிலையில், அவனது

கிரணங்கள் தங்கு தடையின்றி அந்த மலைப் பாகத்தின் மேல் படும் நிலையில் நாம் அங்கிருந்து பார்க்க வேண்டும். அப்போது ‘சக்கரைப் பானைக்கிழங்கு’ என்று பாடலில் குறிப்பிடப்பட்ட மஞ்சள் கிழங்கின் மஞ்சள் நிறத்தில் அந்த இடம் பிரகாசிக்கலாம். அப்படிப் பிரகாசிக்கும் இடம் முழுக்க தங்கம் இருக்க வேண்டும்!

இந்தச் செய்தியை நான் ஜோசப் சந்திரனிடம் சொல்லியிருந்தேன். அவரும் அந்த நேரமாக நிச்சயம் கவனிப்போம் என்று கூறியிருந்தார். கூடவே அவர் ஒரு விஷயம் சொன்னார்… ‘சந்திர ஒளி அவ்வேளையில் ஒரு குறிப்பிட்ட கோணத்தில் விழுவதால் அவ்வாறு மஞ்சள் நிறம் தெரியக்கூடும். என்றால், சந்திரன் ஒளிரும் அந்தக் கோணத்தில் சூரியன் எந்த நாளிலும் விண்மிசை சஞ்சாரம் செய்யாதபடி ஒரு அமைப்பு இருக்கலாம். சூரியனுக்கான சஞ்சார பாகம் என்பது கிழக்கு மேற்கில் இடவலமாய் உள்ள எல்லா இடமும் ஆகும். இதையே உத்தராயனம், தட்சிணாயனம் என்கிறோம். நிலவு சூரிய ஒளியைப் பெற்று பிரகாசிப்பதால், நிச்சயம் அந்த தங்கம் உள்ள தரைப்பகுதி கிழக்குத் திசை – மேற்குத் திசையாக இருக்க வாய்ப்பு இல்லை. வடக்கு – தெற்காகத்தான் இருக்க வேண்டும்.

அடுத்து, குறிப்பிட்ட ஒரு டிகிரியில் நிலவு நிற்கும்போதுதான், அதன் கதிர்வீச்சு தங்கம் இருப்பதாக கருதப்படும் தரைமேல் விழுந்து மஞ்சள் நிறமாக அந்த பாகமும் ஒளிரும். பூமியும் சந்திரனும் சதா சர்வ காலமும் சுழன்றபடியே இருப்பதால் இந்த ஒளிரும் நிகழ்வு ஒரு சில நிமிடங்கள் மட்டுமே நடக்கக்கூடும்’ என்று தான் சிந்தித்த விஷயங்களை எல்லாம் கூறினார். அவர் தீவிரமாக இந்த விஷயத்தில் இறங்கி விட்டதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

ஞாயிற்றுக்கிழமை மாலையே நாங்கள் அங்கு சென்று டென்ட் அமைத்துத் தங்கி விட்டோம். அங்கே சரியானபடி சிக்னல் கிடைக்காததால் எங்களின் டிரான்சிஸ்டர் ரேடியோ செயல்படவில்லை. அன்று இரவில் ஒரு புகைப்படம் எடுக்க ஃப்ளாஷ் பல்புகள் வேண்டும். எடுத்த புகைப்படத்தைக் கழுவி பிரின்ட் போட்டுப் பார்க்க கால அவகாசம் வேண்டும். இன்று அப்படியில்லை. நொடிகளில் இந்த விஷயங்களைக் கடந்து விடுகிறோம். அந்த நாளில் புகைப்படக் கேமராவை தயார் நிலையில் வைத்துக்கொண்டு, அந்த கல்வெட்டுப் பாடல் உள்ள பகுதிக்கும் சென்று பார்த்தவர்களாக பேசியபடியே பொழுதைக் கழிக்கத் தயாரானோம்.

மலைகளுக்கு பறக்கும் தன்மை இருந்ததாக புராணங்களில் படித்தது பற்றி பேசினோம். ‘இது எத்தனை பெரிய முட்டாள்தனமான கற்பனை. பறக்க வேண்டும் என்றாலே சிறகுகள் வேண்டும். சிறகுகள் என்று வந்துவிட்டாலே அது அசைந்தாலன்றி பறக்க முடியாது. ஆக, சிறகுகள் அசைந்திட உயிர் இயக்க சக்தி வேண்டும். கல்லும் மண்ணுமான மலையிடம் அந்த உயிர் இயக்க சக்தி எங்கே இருக்கிறது? எதை வைத்துக்கொண்டு மலைகள் பறக்கும் என்று புராணத்தில் சொன்னார்களோ தெரியவில்லை’ என்று நான் கூறியதை ஜோசப் சந்திரன் மறுக்கத் தொடங்கினார்.

‘மலைகள் பறக்கும் என்பதை நம்ப பூகோள ரீதியாக இடமிருக்கிறது. பல ஊர்களில் சிறு அளவில் அனேக மலைகள் உள்ளன. அந்த மலைகளைச் சுற்றி நூறு மைல் சுற்றளவுக்கு சமதளமான நிலப்பகுதிதான் உள்ளது. சமதள நிலப்பரப்பின் நடுவில் ஒரு மலைக்குன்று அங்கு எப்படி வந்தது என்பது கேள்விக்குரிய விஷயம்.

அவ்வளவு ஏன்? தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் கோபுரம் கல்லால் ஆனது. சுற்று வட்டாரத்தில் அந்தக் கல்லின் தன்மை கொண்ட மலைப்பகுதி பல மைல் தூரத்துக்கு இல்லை. அப்படியிருக்க அந்தக் கோயிலும் கோபுரமும் எப்படி உருவானது என்பதிலேயே நாம் வியக்க நிறைய இடமுண்டு. குறிப்பாக அங்கு மட்டும் ஒரு சிறு குன்று இருந்து, அது தகர்க்கப்பட்டு பிரகதீஸ்வரர் கோயிலாக மாறியிருக்கலாம். இப்படி நாம் பல கோணங்களில் சிந்தித்தால் இந்த கஞ்சமலை இங்கு இருப்பதற்கும், இதில் இரும்போடு தங்கமும் இருப்பதாக நாம் கருதுவதற்கும் ஒரு சரியான விடை கிடைத்து விடும்' என்றார் ஜோசப் சந்திரன்!'' - கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

வாட்ஸ் அப்பில் புகைப்படங்களைப் பார்த்த வர்ஷனுக்கு முதலில் பகீரென்றது. பின்பு அதுவே பரிதாபமாக மாறவும் தொடங்கியது. அவன் முகமும் சுணங்கியது. அனந்தகிருஷ்ணன் டிரைவ் செய்தபடி இருந்தார்.

வர்ஷனை ப்ரியா ஊடுருவினாள்.

''என்னடா... இவங்க மரணம் உனக்கு வேதனையா இருக்கா?''

''ஆமாம் ப்ரியா... பாவம் இவங்க! பணத்துக்காகத்தான் இவங்களும் இந்த அசைன்மென்ட்ல இருக்கணும். என்கிட்ட நல்லா சிரிச்சு தெனாவெட்டா பேசிக்கிட்டிருந்தவங்க இப்ப பிணமா கிடக்கறாங்க. இந்த வாழ்க்கைதான் எவ்வளவு விசித்திரமானது!'' - என்று கொஞ்சம் தத்துவமாகவும் பேசினான்.

வள்ளுவர் பதில் எதுவும் கூறாமல் மௌனமாக பக்கவாட்டில் சாலையை வெறித்தபடியே வந்தார். ப்ரியா அதையும் கவனித்தவளாக அவர் பக்கம் திரும்பினாள்.

‘‘அய்யா...’’

‘‘சொல்லும்மா...’’

‘‘தாத்தா உயிருக்கு எந்த ஆபத்தும் இருக்காதே?’’

‘‘நிச்சயம் இருக்காதும்மா...’’

‘‘இந்த விபத்தைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?’’

‘‘இதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலைம்மா. உன் தாத்தாவை அவங்க ஏன் கடத்தணும்? இது என் முதல் கேள்வி. அது தெரியாம இந்த விபத்து பற்றி தெளிவா என்னால எதுவும் சொல்ல முடியாது...’’

‘‘அய்யா, இதுக்கு நான் பதில் சொல்றேன்’’ என ஆரம்பித்தான் வர்ஷன்.

‘‘அவங்க உங்களதான் தொடக்கத்துல இருந்தே ஃபாலோ பண்ணிக்கிட்டிருக்காங்க.

காலப்பலகணி குறிப்பு கொண்ட பெட்டியைக் கேட்டு வந்த அவங்களால உங்களை எதுவும் செய்ய முடியல. உங்க வீட்டுக்கே வந்து மிரட்டுனவங்களும் விபத்துலதான் இறந்ததா சொன்னீங்க. அதனாலே ஒரு பயத்தோட கவனிச்சவங்க எதிர்ல, நீங்க ப்ரியாவோட தாத்தாவைப் போய்ப் பார்த்தீங்க. அவங்களுக்குப்

புரிஞ்சி போச்சு. அவங்களும் உங்கள விட்டுட்டு இந்தப் பக்கம் திரும்பினாங்க. அந்தப் பெட்டியை ப்ரியா தாத்தாகிட்ட இருந்து எடுத்துக் கொடுக்க முதல்ல என்னைப் பிடிச்சாங்க. நான் நடுவுல முழிச்சிக்கவும் வீட்டு வேலைக்காரி முத்தழகுவை பிடிச்சாங்க. அவளோ ஷாக் அடிச்சி போய் சேர்ந்துட்டா.

இந்த நிலைல திரும்ப என் தங்கையை பிடிச்சு, என்னை பிளாக்மெயில் பண்ணி, நான் அந்தப் பெட்டியை எடுத்துத் தந்தே ஆகணும்னு நிர்ப்பந்தம் பண்ணாங்க. அதுக்குத் தோதா, துளியும் எதிர்பார்க்காத நிலைல ப்ரியா தாத்தா அந்தப் பெட்டியை தானா தூக்கி எங்க கைல கொடுத்து ஆத்துலயோ குளத்துலயோ போட்டுடச் சொன்னாரு. நானும் 'தப்பிச்சேன்டா சாமி'ன்னு அந்தப் பெட்டியைக் கொண்டு போய் அவங்க கைல கொடுத்தேன். அதாவது, இப்ப இந்த வாட்ஸ்அப் போட்டோல செத்துக் கிடக்கறாங்களே... இதே மூணுபேர் கிட்டதான்! என் தங்கையை அப்புறம்தான் விட்டாங்க.

அதேசமயம் பெட்டியை ஒப்படைக்கறதுக்கு முந்தி அதைத் திறந்து பார்த்தப்போ, அதுல கூடுதலா சோழர் கால நாணயம் ஒண்ணும், அந்தக் கால மண் கலயம் ஒண்ணும் இருந்தது! அப்பவே எனக்கும் ப்ரியாவுக்கும் லேசா சந்தேகமும் வந்துடுச்சி... அதாவது ப்ரியாவோட தாத்தா அந்தப் பெட்டில இருந்து நீங்க கொடுத்த விஷயங்களை எல்லாம் தான் எடுத்துக்கிட்டு, எங்ககிட்ட அவர் கொடுத்தது அதேபோன்ற டூப்ளிகேட்டை! அவர் எந்த நிலையும் அந்த ஏடுகளையோ, சோழிகளையோ பெண்டுலம் மற்றும் திசைமானியையோ இழக்கத் தயாரா இல்லை.

அந்தப் பெட்டியாலதான் மரணம்னு ஆன்ட்டி பயந்ததால, அவங்கள சமாதானம் செய்ய தாத்தா பெட்டியை எங்ககிட்ட கொடுத்து தூக்கிப் போடச் சொல்லிட்டார். மறுபக்கம் கொடைக்கானல்

போய் ஓய்வு எடுக்க விரும்பறேன்னு பலகணியைத் தேடத் தயாராயிட்டார். நானும் ப்ரியாவும் அந்த டூப்ளிகேட் பெட்டியைக் கொடுத்துத்தான் என் தங்கையை மீட்டோம். முதல்ல பெட்டியை ஒரிஜினல்னு நம்பினவங்க, பின்னால எப்படியோ டூப்ளிகேட்னு தெரிஞ்சிக்கிட்டிருக்காங்க. இது ப்ரியாவோட தாத்தா வேலைன்னு தீர்மானிச்சு, அவரை இனி விடக் கூடாதுன்னு ஜி.ஹெச்சுக்கு முத்தழகு பாடியைப் பார்க்கப் போனப்போ அவரைக் கடத்திட்டாங்க.

இப்ப நான் சொன்னதுதான் உண்மை. அப்படிக் கடத்தி அவரைக் கொண்டே காலப்பலகணியைக் கண்டுபிடிக்கற எண்ணத்தோட அவங்க பாண்டிச்சேரி ரோட்டுல போனப்பதான் ஆக்சிடென்ட்டும் ஆகியிருக்கணும்'' என்று ஒரு மிக நீண்ட விளக்கத்தைக் கொடுத்து முடித்தான் வர்ஷன். கச்சிதமாக அனந்தகிருஷ்ணனின் போனில் அப்போது அழைப்பு. ஸ்பீக்கர் போனை போட்டபடி பேசத் தொடங்கினார். அந்த சுகுமார் என்கிற இளைஞன்தான் பேசினான். ''சார்... போலீஸ் வந்துடுச்சு. ஃபார்மாலிட்டிசை ஸ்டார்ட் பண்ணிட்டாங்க. உங்க அப்பாவை ஆம்புலன்ஸ்ல ஏத்தி மகாபலிபுரம் ஜி.ஹெச்சுக்கு சிகிச்சைக்காக கூட்டிக்கிட்டு போயிட்டாங்க. அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்...''

''சொல்லுங்க?''

''உங்கப்பா மயங்கறதுக்கு முந்தியே அந்தக் கார்ல இருந்து ஒரு தகரப் பெட்டியை எடுக்கச்சொல்லி என்கிட்ட கொடுத்தாரு. அதை பத்திரமா வெச்சுருக்க சொன்னாரு. 'யார் என்னைப் பாக்க வராட்டியும் என் பேத்தி ப்ரியா கட்டாயம் வருவா. அவ கைல கொடுத்துடு'ன்னு சொன்னார். இப்ப அந்தப் பெட்டி என்கிட்ட இருக்கு. அது நம்பர்லாக் போட்டு பூட்டப்பட்டு இருக்கு...''

‘‘ஓ... மைகாட்! தேங்க்யூ மிஸ்டர் சுகுமார். அந்தப் பெட்டியோட நீங்க அங்கேயே இருங்க. நாங்க வந்துக்கிட்டே இருக்கோம். ஆமா, போலீஸ்காரங்க உங்களை எதுவும் கேட்கலையா?’’

‘‘கேட்கலையாவா? கொடகொடன்னு கொடஞ்சிட்டாங்க. கெட்டதுல ஒரு நல்லது மாதிரி உங்கப்பாவுக்கு திடீர்னு மயக்கம் தெளிஞ்சுடுச்சு. அவரே எல்லா கேள்விக்கும் பதில் சொல்லி சமாளிச்சிட்டாரு...’’

‘‘ஓ... அப்ப அப்பாவுக்கு பயப்படும்படியா எதுவுமில்ல... அப்படித்தானே?’’

‘‘ஆமாம் சார்... ஆனா உள்காயம் பட்டிருக்கலாம். குறிப்பா தோள்பட்டைல நல்ல அடி!’’

‘‘அவர் ஆம்புலன்ஸ்ல போகும்போது பெட்டியை தன்கிட்ட கொடுன்னு கேட்கலையா?’’

‘‘கேட்கல... ‘தம்பி, இதை ப்ரியாகிட்ட எப்படியாவது ஒப்படைச்சுடு’ன்னு மட்டும் சொன்னார்.’’

‘‘ரொம்ப நன்றி சுகுமார் உங்களுக்கு... நாங்க இப்ப அங்கதான் வந்துக்கிட்டிருக்கோம். எப்படியும் அரை மணி நேரத்துல அங்க இருப்போம். இப்ப திருவான்மியூரைத் தாண்டி, வி.ஜி.பி கோல்டன் பீச்சைத் தொட்டுட்டோம்...’’

‘‘இங்கயும் ஃபார்மாலிட்டீஸ் முடிய கொஞ்சம் டைம் ஆகும் போலத் தெரியுது சார்!’’

‘‘ஓ… உங்களுக்குத்தான் எங்கப்பாவால கஷ்டம்… பாவம் உங்க வேலை எவ்வளவு கெட்டுச்சோ!’’

‘‘பரவால்ல சார்… எனக்கு ஒரு நல்ல காரியம் செஞ்ச திருப்தி. நீங்க நிதானமாவே வாங்க!’’

- அந்த சுகுமார் பேசி முடித்திட, அனந்தகிருஷ்ணன் ப்ரியாவைப் பார்த்தார். அவள் கணபதி சுப்ரமணியன் அவனிடம் பாசத்தோடு சொன்ன வார்த்தைகளில் உருகிப்போயிருந்தாள்.

‘‘என் அப்பாவுக்கு என்னைவிட நீ எவ்வளவு ஒசத்தியா இருக்கே பாத்தியா?’’ என்று கேட்டார் அனந்தகிருஷ்ணன்.

‘‘அது ப்ரியா ஸ்பெஷல் சார். உங்களவிடவே உங்கப்பாவை இவ அதிகம் புரிஞ்சி வெச்சிருக்கறவ சார்’’ - என்று வக்காலத்து வாங்கினான் வர்ஷன்.

‘‘அதெல்லாம் இருக்கட்டும்… அந்தப் பெட்டி திரும்ப நம்மகிட்டயே வருதே… இப்ப என்ன பண்ணப்போறோம்?’’ என்ற அனந்தாவை இருவருமே திருதிருவென பார்த்து விழிக்க, ‘‘அது போலியான பெட்டிதானே… அதைப் பத்தின பயத்தை விடுங்க. ஆராய்ச்சியாளரய்யா என்ன சொல்றார்னு பார்ப்போம்… இத்தனை பெரிய விபத்துலயும் அய்யாவுக்கு எதுவும் ஆகலைன்னா அவருக்கு இனியும் எதுவும் ஆகாது…’’ என்றார் வள்ளுவர்.

‘‘இது உங்க தனிப்பட்ட நம்பிக்கையா… இல்லை, ஜோசியமா?’’ என்று வர்ஷன் கேட்க, ‘‘இரண்டும்தான்னு வெச்சுக்குங்களேன்’’ என்றார் வள்ளுவர்.

கார் வேகமெடுத்து சீறியது. ஒருபுறமாய் கடல், மறுபுறமாய் அதன் கரைகளில் கம்பீரமான பங்களாக்கள். சாலைகளில் பஞ்சமில்லாத கார்களின் ஓட்டம். பெரும்பாலும் எவரிடமும் சாலை விதியைப் பற்றிய அறிவோ தெளிவோ இல்லை. ஆடும் மாடும் மேய்ச்சலின்போது விருப்பத்துக்கு முனைந்து செல்வதுபோலத்தான் கார்களிடம் பாய்ச்சல்!

ஆக்சிடென்ட் ஸ்பாட்டை அடைந்தபோது இறந்தவர்களின் சடலங்களை ஏற்றிக்கொண்டு ஆம்புலன்ஸ் ஒன்று புறப்பட்டபடி இருக்க, மரத்தடியில் தனது பைக்கை நிறுத்திக்கொண்டு அதன்மேல் தன் ஜெர்க்கின் கோட்டை பந்துபோல வைத்திருந்தான் அந்த சுகுமார் என்கிற இளைஞன்.

அவனை சில போலீஸ்காரர்கள் அவ்வப்போது பார்த்தபடியே இருந்தனர். காரில் இருந்து அனந்தகிருஷ்ணனும் மற்றவர்களும் இறங்கிய நிலையில் அவனாக அவர்களை நோக்கி முன் வந்தான். அனந்தகிருஷ்ணன் அவனிடம் கை குலுக்கினார். ஒரு போலீஸ் ஆபீசரும் வேகமாக முன் வந்தார்.

‘‘பரவால்ல சார்... சீக்கிரமாவே வந்துட்டீங்க...’’ என்றார்.

‘‘அப்பாவுக்கு எப்படி இருக்கு?’’

‘‘பயப்படும்படியா எதுவுமில்ல. மகாபலிபுரம் ஜி.ஹெச் போனா பாக்கலாம். பை த பை, இறந்து போயிட்ட இவங்களப் பத்தி சாருக்கு எதுவும் தெரியல. என்னை இவங்க கடத்தும்போதுதான் ஆக்சிடென்ட் ஆயிடுச்சின்னார். அப்புறம்தான் சார் எப்படிப்பட்ட ஒரு செலிபிரிட்டின்னு தெரிஞ்சிகிட்டோம். உங்கப்பாகிட்ட எங்களுக்கு

ஒரு பெரிய என்கொயரி இருக்கு. முதல்ல அவர் கொஞ்சம் தெளியட்டும்'' என்று படபடவென்று பேசினார் அந்த ஆபீசர்.

இங்கே அனந்தகிருஷ்ணன் ஆபீசரோடு பேசிக்கொண்டிருக்கும்போது அங்கே சுகுமார் தன் ஜெர்க்கினுக்குள் மறைத்து வைத்திருந்த தகரப் பெட்டியை அப்படியே தூக்கி ப்ரியா வசம் கொடுத்தவனாக... ''சார் இதை யாருக்கும் தெரியாம உங்ககிட்ட கொடுக்கச் சொன்னார்...'' என்றான்.

வர்ஷனும் ப்ரியாவும் ஜெர்க்கினோடு தங்கள் கார் நோக்கிச் சென்று காருக்குள் பெட்டியை வைத்துவிட்டுத் திரும்பிய நொடி ஒரு போலீஸ் ஆபீசர் மிகக் கூர்மையாகப் பார்த்தபடியே வந்தவராக, ''வாட் ஈஸ் தட்.... இப்ப எதை உள்ள வச்சீங்க?'' என்று ஆரம்பித்தார். வர்ஷன், ப்ரியா இருவரிடமும் மெல்லிய உதறல்!

31

''அந்த மலைத் தலத்தில் ஜோசப் சந்திரனுடன் கழிந்த என் நேரம், என் வாழ்வின் மகத்தான நேரம் என்பேன். அவரின் விசாலமான அறிவும் வித்தியாசமான அணுகுமுறைகளும் எனக்கு மிகவே ஆச்சரியமளித்தன. எனக்கு எப்படி சிறுபிள்ளையாக நான் இருக்கும்போதே சரித்திரத்தின் மேல் ஒரு இனம் புரியாத ஈர்ப்பு இருந்ததோ, அதேபோல அவருக்கும் சரித்திரத்தின் மீதுதான் மிகுந்த ஈடுபாடு இருந்ததாம்! இது எங்களுக்குள்ளான ஒற்றுமை...

'உலகத்திலேயே நம் சரித்திரம் மிக நீளமானது; மிக ஆழமானது; மிகப் பரந்தது; மிக உயர்ந்தது' என்று அவர் கணிதப்படுத்திய விதமே எனக்குக் கவிதைபோல் இருந்தது. 'ஆனால் இன்று இந்த சரித்திரத்தை பெரிதாகப் பொருட்படுத்தி

இந்தத் துறையில் ஈடுபாடு கொண்டவர்களைப் பார்ப்பது மிக அபூர்வமாகி வருகிறது’ என்றார். உண்மைதான்!

‘ஒவ்வொரு வருடமும் இளங்கலைப் பட்டம் படித்து முடிப்பவர்கள் எண்ணிக்கை சராசரியாக பத்து லட்சம் பேருக்குக் குறைவதேயில்லை. இதில் சரித்திரம் படித்து பட்டம் பெறுபவர்கள் எண்ணிக்கை வெறும் மூன்று இலக்கங்களில்தான் உள்ளது’ என்றார். ‘ஒரே காரணம்தான்... இந்தப் பாடம் சம்பாதிப்பதற்கு துணை செய்வதாக இல்லை. இது முழுக்க முழுக்க பிறப்பிலேயே ஆர்வம் கொண்டு வளர்பவர்களுக்கான துறை என்றாகி வருகிறது’ என்றார். அப்படியே, ‘முன்பெல்லாம் எவ்வளவு சரித்திரக் கதைகள் பத்திரிகைகளில் வரும். கல்கி, விக்கிரமன், ஜெகசிற்பியன், கோவி.மணிசேகரன், கௌதம நீலாம்பரன், நா.பார்த்தசாரதி என்று எவ்வளவு எழுத்தாளர்கள்..? இன்று குறிப்பாக, இந்த 20ம் நூற்றாண்டில் பதினைந்து வருடங்கள் கழியப் போகிறது... சரித்திரம் எழுத புதியதாக எத்தனை பேர் வந்திருப்பார்கள்? ஒருவேளை யாராவது எழுதினாலும் பத்திரிகைகள் வெளியிட உற்சாகம் காட்டுவதில்லை என்பதை கவனித்தீர்களா?’ என்று கேட்டார்.

அப்படியே ‘இந்தக் கால மாற்றத்தை நாம் சற்று முயன்றால் திசை திருப்ப முடியும்!’ என்றார். ‘எப்படி?’ என்று நானும் கேட்டேன். ‘நம் சரித்திரம் என்பது கற்பனையான ஒன்றல்ல... அது மனித வாழ்வின் ஒரு பதிவு என்கிற கருத்தை முதலில் உருவாக்க வேண்டும். எப்படி எல்லாம் மனிதன் இருந்திருக்கிறான் என்கிற தெளிவு மிக முக்கியம். அப்போதுதான் வருங்காலத்தில் எப்படி இருப்போம் என்பதிலும் ஒரு சரியான அனுமானம் உருவாகும். இன்று உள்ள நம் மனித சமூகத்துக்கு மிக அதிகபட்சமாக ஒரு 150 வருட சரித்திரம் மட்டும்தான் தெரியும்.

அதுவும் கல்வியாளர்கள் சிலருக்கே தெரியும். குறைந்தது 1500 வருட சரித்திரம் எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அந்த நாளில் மனிதன் தனக்கான ஆடை முதல் அணிகள் வரை சகலத்தையும் எப்படி உருவாக்கினான் என்பதிலிருந்து அவன் தன் ஒருநாள் பொழுதை எப்படிக் கழித்தான் என்பது வரை தெளிவு வேண்டும்' என்று ஜோசப் சந்திரன் சொல்லவும், நான் மீடியா பக்கமாகச் சென்றேன்.

'நிறைய திரைப்படங்கள் இம்மட்டில் நமக்கு முன்னோடியாக உள்ளனவே' என்றேன். 'மண்ணாங்கட்டி' என்று கோபித்த ஜோசப் சந்திரன், 'இந்த பாழாய்ப் போன மீடியாக்கள் நம் நிஜமான சரித்திரத்தையே குழி தோண்டிப் புதைத்து விட்டன' என்றார். அதை விளக்கவும் செய்தார்... 'சினிமா என்பது ஒளி - ஒலி என்பதன் கலவை! இதில் இரண்டுமே சம பலத்தோடு இருக்க வேண்டும். இதில் ஒலி அம்சம்கூட பரவாயில்லை. அவை காட்சி உணர்வை நமக்குள் ஏற்படுத்துபவை... காட்சியாகவே தோன்றும் ஒளி அம்சம்தான் பெரிய தவறிழைத்து விட்டது. ஒரு சரித்திரப்படம் எடுக்கும் இயக்குநர் முதலில் நம்புவது, வண்ண வண்ண பெயின்ட் டப்பாக்களையும், மிகுந்த எடையுள்ள ஆபரணங்களையும்தான். இன்றுள்ளது போல நூற்றுக்கணக்கான வண்ணங்கள் அன்று கிடையாது. அதேபோல எந்த நாளும் மனிதன் உடல் புழுங்கும் அளவு ஆடைகளையோ அணிகளையோ அணியவே மாட்டான். அதேபோல வழவழவென்று முடிக் கால்களே தெரியாத அளவு சவரம் செய்துகொள்ளவும் அந்த நாளில் வாய்ப்பேயில்லை. நம் சினிமாக்களில் கூர்ந்து பாருங்கள்... இதெல்லாம்தான் முதலில் இருக்கும். கேட்டால், 'இப்படி இருந்தாலே கவனிக்கப்படுவோம். இது ஒருவகை சினிமா இலக்கணம்' என்று நியாயம் கற்பிப்பார்கள்..!' ஜோசப் சந்திரனோடு என் பேச்சு இப்படி பல தளங்களில் சென்றது.

நாங்கள் காத்திருந்த அந்த இரவுப் பொழுதும் வந்தது. வானில் சித்திரைப் பௌர்ணமிக்கு பதிலாக ஆடி மாதப் பௌர்ணமி!''

– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

வர்ஷனும் ப்ரியாவும் உதறலுக்குள்ளானபோதிலும், ப்ரியா மிக வேகமாய் சுதாரிக்கத் தொடங்கினாள். காருக்குள் வைத்த அந்தப் பெட்டியை அப்படியே வேகமாய் வெளியே எடுத்து அந்த ஆபீசர் கையில் வைத்தாள். ''சார்... இது எங்க தாத்தா வச்சிருந்த பெட்டி. அதாவது இது ஆன்டிக்ஸ் மாதிரி ஒரு அயிட்டம். உங்களுக்குப் புரியற மாதிரி சொல்லணும்னா, பழங்காலப் பொருட்கள். என் தாத்தா எங்க போனாலும் இந்த மாதிரி எது கண்ணுல பட்டாலும் வாங்கிடுவார். அப்படி வாங்கிட்டு வரும்போதுதான் அவரை கிட்நாப் பண்ணிட்டாங்க. அவரைக் கடத்தும்போது ஆக்சிடென்ட்டும் ஆகி, கடத்தினவங்க செத்தும் போயிட்டாங்க. தாத்தா அதை இதோ அவரைக் காப்பாத்தின இந்த சுகுமார் கையில கொடுத்து என்கிட்ட ஒப்படைக்கச் சொல்லியிருந்தார். இவரும் என்கிட்ட கொடுத்தார். இதான் விஷயம்.''

- ப்ரியா வெகு அழகாக சமாளித்தாள். அது காலப்பலகணிக்கு வழிகாட்டும் சமாச்சாரம் என்கிற விஷயத்தை மட்டும் மறைத்து, மற்ற அவ்வளவையும் உள்ளது உள்ளபடி கூறவும் அந்த ஆபீசரிடமும் ஒரு மாற்றம். அந்தப் பெட்டியை இப்படியும் அப்படியும் பார்த்தவர் நம்பர் லாக் பூட்டைப் பார்த்தவராக ''இதைத் திறக்க முடியுமா?'' - என்று கேட்டார்.

''எனக்கு சீக்ரெட் நம்பர் தெரியாது. தாத்தாவுக்குத்தான் தெரியும்...''

‘‘ரைட்.. அதுவரை இது எங்ககிட்ட இருக்கட்டும். ஆக்சிடென்ட் ஸ்பாட்ல கிடைக்கற ஒவ்வொரு பொருளுமே எங்களுக்கு முக்கியம்...’’

‘‘நோ பிராப்ளம்... ஆனா இது ஜாக்கிரதையா, பத்திரமா இருக்கணும். கேஸ் பிராப்பர்ட்டின்னு அலட்சியமா ஹேண்டில் பண்ணிடாதீங்க. தாத்தா வரைல ஒரு குண்டூசிகூட பெரிய விஷயம்...’’

‘‘குண்டூசி கூடவா?’’

‘‘ஆமாம்... மகாத்மா காந்திக்கு ஒருத்தர் கடிதம் போட்டார். காந்தி அதுக்கு பதில் போட்டார். பதில் பல பக்கங்கள் இருந்தது. காந்தி அந்த பக்கங்களை குண்டூசியால இணைச்சு அனுப்பியிருந்தார். அந்தக் கடிதமும் குண்டூசியும் இன்னிக்கு எவ்வளவு மதிப்பான பொருட்கள் தெரியுமா?’’

ப்ரியா போட்ட போடில் அந்த ஆபீசர் அதன்பின் எதுவும் பேசவில்லை. ஆனால் வர்ஷன் அதை அவர் எடுத்துச் சென்றது பார்த்து பரிதவித்தான். வள்ளுவர் மந்தகாசமாகப் பார்த்தார்.

‘‘லூசு... அது அவ்வளவும் டூப்ளிகேட். ஒரிஜினல் தாத்தா கிட்டதான் இருக்குன்னும்போது எதுக்கு ஃபீல் பண்றே?’’ என்றாள் மெல்லிய குரலில்... அவனும் லேசானான்.

அதன்பின் அந்த சுகுமாரும் விடைபெற்றுக் கொண்டான். அவனை ஒரு போலீஸ் ஆபீசர் போட்டோ எடுத்துக்கொண்டார். தோரணையாக, ‘‘உன் பேர் என்ன? என்ன படிச்சிருக்கே? இந்தப் பக்கம் எதுக்குப் போனே? லைசென்ஸ் இருக்கா?’ ’ என்று அவனிடம் கித்தாப்பைக் காட்டத் தவறவில்லை.

அதன்பின் அவ்வளவு பேரும் மகாபலிபுரம் மருத்துவமனை நோக்கித்தான் புறப்பட்டனர். சுகுமாரும் ஹெல்மெட்டை மாட்டிக்கொண்டு பைக்கை உதைத்து ஸ்டார்ட் செய்தவனாக புறப்பட்டுப் போனான்.

* * *

மருத்துவமனை!

கணபதி சுப்ரமணியன் கால் நீட்டி அமர்ந்திருந்தார். ட்ரிப்ஸ் ஏறி முடிந்திருந்தது. திபுதிபுவென்று எல்லோரும் வரவும் அவரிடம் சற்று படபடப்பு. அனந்தகிருஷ்ணன் அவரை அன்போடு பார்த்தவராக, ‘‘என்னப்பா நடந்தது... நேத்து ராத்திரியில இருந்து நாங்க எப்படி

ஆயிட்டோம் தெரியுமா?'' என்று பதற்றமாய் பேசியவிதமே மிக காட்டமாய் இருந்தது.

''டென்ஷன் ஆகாதே அனந்தா... ஜி.எச்ல நீ, உன் பெண்டாட்டி அப்புறம் ப்ரியாவோட முன்னால நடந்து போயிட்டிருந்தீங்க. கொஞ்சம் தள்ளி வந்துக்கிட்டிருந்த என்னை, இரண்டு பேர் பின்னாலயே வந்து துப்பாக்கி முனைல அமுக்கிப் பிடிச்சிட்டாங்க! அங்க ஒரு இடத்தை கிராஸ் பண்ணும்போது கொஞ்சம் இருட்டா இருந்தது. அங்கதான் அவங்க என்னைக் கடத்தினாங்க... முதல் காரியமா செல்போனை வாங்கி ஸ்விட்ச் ஆஃப் பண்ணிட்டாங்க. அப்புறமா அவங்க இடத்துக்குக் கூட்டிக்கிட்டு போய் கட்டிப் போட்டுட்டாங்க. இன்னிக்கு பாண்டிச்சேரிக்கு என்னைக் கடத்தும்போது எதிர்பாராத விதமா ஒரு எருமை குறுக்க வரவும், காரை ஒடிச்சு திருப்பினதுல ரோடோட மீடியன்ல மோதி அப்படியே கவுந்து என்னென்னவோ ஆகிடிச்சு. நான் இப்ப உன் முன்னால உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்கறத நினைச்சா என்னாலயே நம்ப முடியல...''

''அவங்க யாரு... உங்களை எதுக்குக் கடத்தணும்?''

அனந்தாவின் இந்தக் கேள்விக்கு மட்டும் ப்ரியாவை அர்த்தத்தோடு ஒரு பார்வை பார்த்தவர், ''அவங்க ஏதோ புதையலை தேடிக்கிட்டிருக்கறவங்களாம்... நான் அவங்களுக்கு உதவி செய்தா அதை எடுத்துட முடியும்னு நம்பியிருக்காங்க!'' என்றார்.

''புதையலா... இல்ல, இந்த காலப்பலகணியா?''

''புதையல்னுதான்ப்பா சொன்னாங்க...''

‘‘இதுக்கு எதுக்கு கடத்தணும்? ஒரு அசைன்மென்ட்டாவே உங்களை செய்து தரச் சொல்லலாமே..?’’

‘‘பைத்தியக்காரா... புதையல் எடுத்தா அது கவர்மென்ட்டுக்கு சொந்தம். வெளிய தெரியாமதான் எல்லாம் செய்யணும். நான் இல்லீகலா நடக்க மாட்டேன்னுதான் உனக்குத் தெரியுமே...’’

அவர்கள் பேசுவதை ஒரு போலீஸ் ஆபீசரும் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த நாளாக இருந்தால் ஒரு பேடிலோ... இல்லை, டைரியிலோ குறிப்பாக எழுதிக் கொள்வார்கள். இப்போது அவர்கள் சட்டையில் இருக்கும் செல்போன் அந்த மொத்த பேச்சையும் தனக்குள் பதிவு செய்து கொண்டிருந்தது.

தாத்தா திட்டமிட்டுக் கொண்டு பேசுகிறார் என்பது ப்ரியாவுக்கும் வர்ஷனுக்கும் மட்டும் புரிந்தது. அப்போது அங்கே நின்று கொண்டிருந்த போலீஸ்காரரே அனந்தகிருஷ்ணனிடம் வந்து ‘‘சார், உங்கள சீஃப் டாக்டர் கூப்பிடறாரு...’’ என்றார்.

‘‘எங்க இருக்காரு?’’

‘‘வாங்க... கூட்டிக்கிட்டு போறேன்!’’

அவர்கள் இருவரும் விலகிய நொடியில் கணபதி சுப்ரமணியனிடம் பெரும் மாற்றம். நாலாபுறமும் பார்த்தவர் அவர்கள் மூவரையும் அருகில் அழைத்தவராக கிசுகிசு குரலில் ‘‘எங்க பெட்டி?’’ என்று கேட்டார். ப்ரியாவும் அதை போலீஸ் ஆபீசர் எடுத்து வைத்துக் கொண்டதை சொன்னாள். கணபதி சுப்ரமணியன் முகம் உடனே சுணங்கவும், ‘‘தாத்தா! கவலப்படாதே... காலப்பலகணிக்கான குறிப்பு அதுல இருக்குன்னு நான் சொல்லலை. கலைப் பொருட்கள்னு பொதுவாதான் சொல்லியிருக்கேன். அதோட, அது

பூட்டியிருக்கறதால உள்ள என்ன இருக்குன்னு அவங்களுக்கும் தெரியாது...'' என்றாள் ப்ரியா.

கணபதி சுப்ரமணியன் இம்முறை தீர்க்கமாய் வள்ளுவரைப் பார்த்தார்.

''என்ன பாக்கறீங்க?'' என்றார் வள்ளுவர்.

''நீங்க எப்படி இவங்களோட வந்தீங்க?''

''நீங்க தொலையவும் உங்க பேத்திக்கு என் ஞாபகம் வந்துடிச்சி. அது இப்ப இங்கவரை கூட்டிக்கிட்டு வந்துடிச்சி...''

''ஒரு வகைல உங்கள பார்த்ததுல சந்தோஷம். அடுத்தடுத்து நடக்கறதை எல்லாம் நீங்களும் பாத்துக்கிட்டுதானே வர்றீங்க...''

''பின்ன?''

''அமானுஷ்யம்ங்கற விஷயத்த நான் தொடக்கத்துல நம்பாதவன். கஞ்சமலைல தங்கம் இருக்குங்கற விஷயத்தை ஆராயறப்ப அதுமேல எனக்கு நம்பிக்கை வந்தது. இந்த காலப்பலகணி விஷயமும் அமானுஷ்யமானதுதான். 'செத்துப் போயிடுவேன்'னு சொன்ன நீங்க உயிரோட இருக்கீங்க. செத்தே போயிருக்க வேண்டிய நானும் உயிரோட இருக்கேன். ஆனா உயிரோட இருப்போம்னு நம்பிக்கிட்டிருந்த பலர் செத்துப் போயிட்டாங்க. இதையெல்லாம் பாக்கும்போது உங்களுக்கு என்ன தோணுது?''

''காலப்பலகணி ஒரு சத்தியமான உண்மைன்னு தோணுறது மட்டுமில்ல, அது நிச்சயம் நமக்குக் கிடைக்கும்னும் தோணுது. அதன்

மூலமா நம்ம வாழ்க்கைல நிறைய மாற்றங்கள் ஏற்படப் போகுதுன்னு நான் நினைக்கறேன்...''

''சரியா சொன்னீங்க... இந்த வினாடி வரை இந்த காலப்பலகணி பத்தி நமக்கு மட்டும்தான் தெரியும். இதைப்பத்தி தெரிஞ்ச மத்தவங்க யாரும் உயிரோட இல்லை. ஆகையால, ஒரு ரகசியமா நீடிச்சுகிட்டு இருக்கற இதை நாம எல்லாரும் ஏன் ஒண்ணா சேர்ந்தே தேடக் கூடாது?''

கணபதி சுப்ரமணியன் அப்படி ஒரு கேள்வி கேட்பார் என்று வள்ளுவர் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. ''நீங்க முதல்ல சரியாகி வெளிய வாங்க. அப்புறம் இதைப் பத்தி பேசலாம்'' என்றார்.

''தாத்தா! அப்ப உனக்கு செத்துடுவோம்ங்கற பயம் இல்லையா?'' என்று கேட்டாள் ப்ரியா.

''செத்துப் பிழைச்சவன்மா... இனி எனக்கேது சாவு?''

''நீங்க இன்னும் களத்துலயே இறங்கல. நீங்க இந்தப் பலகணிய தேடியும் வரல... அதுக்கே உங்களுக்கு ஆக்சிடென்ட் வரை ஆகிடுச்சு. சுருக்கமா சொன்னா, இது ஒரு எச்சரிக்கை. இது புரியாம நீ களத்துல இறங்கினா உனக்கும் ஆபத்து வரலாம்தானே?''

''உன் கோணத்த நான் தப்பு சொல்ல மாட்டேன். ஆனா என் கோணம் வேற... எனக்கு ஆபத்து வரணும்னா இந்த ஆக்சிடென்ட்டுலயே நானும் செத்துருக்கணும். ஆனா நானோ உங்க கூட நல்லா பேசிகிட்டு இருக்கேன். எதிரிகளும் செத்துப் போயிட்டாங்க. அந்த சதுர்வேதி நிச்சயமா இனி ரொம்பவே அடக்கி

வாசிப்பான். நடந்த அவ்வளவும் அவனுக்குதாம்மா எச்சரிக்கை. நமக்கு இல்லை...''

‘‘அப்ப நாம அதைக் கண்டுபிடிக்கப் போறோமா?''

‘‘நிச்சயமா?''

‘‘அப்புறம்?''

‘‘என்ன அப்புறம்... புரியல?''

‘‘அதைக் கண்டுபிடிச்சு என்ன பண்ணப் போறோம்?''

‘‘என்ன ப்ரியா! பைத்தியம் மாதிரி கேட்கறே?''

‘‘நீதான் தாத்தா என் கேள்விய சரியா புரிஞ்சுக்கல. அதை அடைஞ்சுட்ட நிலைல பல ரகசியங்களைத் தெரிஞ்சுகிட்டு நாம என்ன செய்யப் போறோம்?''

‘‘அதப்பத்தி அப்புறம் பேசலாம். இப்ப உங்கப்பா வர்ற சப்தம் கேட்குது... வேற பேச்ச பேசுவோம்'' - என்றான் வர்ஷன். அனந்தகிருஷ்ணனும் பரபரப்பாக உள்ளே நுழைந்தவராக ‘‘ப்ரியா... உன்கிட்ட பெட்டிய வாங்கினாரே போலீஸ் ஆபீசர்... அவருக்கும் ஆக்சிடென்ட் ஆகிடிச்சாம்'' என்றார்.

அடுத்த பகீர், அவ்வளவு பேரிடமும்!

32

“அன்று பௌர்ணமி நிலாவை மேகமும் மூடவில்லை. தடையில்லாத வெளிச்சம் ததும்பிப் படர்ந்திருந்தது. ஆனாலும் நாங்கள் கல்வெட்டுப் பாடலைக் கொண்டு அனுமானித்த இடத்தில் எந்த மாற்றமும் இல்லை. எங்காவது மஞ்சள் நிறத்தில் ஏதாவது தெரிகிறதா என்று கூர்மையாகப் பார்த்தோம். ஜோசப் சந்திரன் சில தங்க நகைகளைக் கொண்டு வந்திருந்தார்.

தட்டையான அவை நல்ல வேலைப்பாட்டுடன் இருந்தன. அதோடு சில தங்க நாணயங்களையும் கொண்டு வந்திருந்தார். அவற்றை அந்த மலைத்தலத்தில் ஆங்காங்கே தரைமீது வைத்து, எட்டச் சென்று நின்று, அதன்மேல் சந்திர ஒளி படும்போது அது எப்படி எதிரொளிக்கிறது என்றெல்லாமும் பார்த்தார். எனக்கு இப்படி செய்து பார்க்கத் தோன்றாததை எண்ணி ஒருவித தாழ்வு மனப்பான்மைகூட எனக்கு ஏற்பட்டது. இந்த மாதிரியான அனுபவங்கள்தான் நம்முள் கர்வம் வளராமல் செய்கின்றன.

இப்படியாக அந்த பிரம்ம முகூர்த்த காலை வேளை சென்று கொண்டிருந்த நிலையில், எங்கள் இருவரைக் கடந்து மேலும் சிலர் அங்கே இருப்பதுபோல ஒரு உணர்வும் எனக்கு ஏற்பட்டது. ஆனால் அதைப் பற்றி நான் ஜோசப்பிடம் பேசவில்லை. ஜோசப்பும் அதேபோல் உணர்ந்தார் என்பது பிறகு எனக்குத் தெரிய வந்தது.

ஜோசப் ஒரு பாறைமேல் ஏறி நின்று சுற்றிலும் நோட்டமிட்டபோது எதிர்பாராத விதமாக தடுமாறியபடி அங்கேயிருந்து உருண்டுவிழத் தொடங்கினார். அப்போது

அவரையும் மீறி உதவி வேண்டி ‘ஹெல்ப் மீ கணபதி’ என்று கத்திவிட்டார். அவரைக் காப்பாற்ற முயன்ற எனக்கும் காயங்கள். முதலுதவிப் பெட்டியை எடுத்துச் சென்றிருந்ததால் ஓரளவு அதிலிருந்து நிவாரணம் கிடைத்தது.

பொழுது விடிந்த நிலையில் தடுமாறியபடியே எங்கள் இருப்பிடத்தைஅடைந்தோம். கீழே விழுந்த பிறகு ஜோசப் சந்திரன் பெரிதாக பேசவில்லை. காயத்தால் உண்டான வலி ஒரு காரணம். அதன்பின் ஆற அமர பேசத் தொடங்கினார்.‘கணபதி சுப்ரமணியன்... அந்த இடத்துக்கு இனி செல்ல வேண்டாம். அங்கே எந்த ஆய்வும் செய்ய வேண்டாம். அங்கே தங்கத் தாது இருப்பது உண்மை. அதனாலேயே அரூபமான சித்தர்களின் நடமாட்டமும் அங்கு இருக்கிறது. அதில் ஒரு சித்தர்தான் பாறைமேல் நின்றிருந்த என்னைத் தள்ளிவிட்டார். எனக்கு அதனால் காயமும் ஏற்பட்டது!’ என்று அவர் கூறவும் எனக்குத் திகைப்பு.

‘இதை நீங்கள் எதை வைத்துத் தெரிந்து கொண்டீர்கள்? அறிவியல் சார்பே இதில் இல்லையே...’ என்று நான் கேட்டேன். அவர் சிரித்தார். சிரிப்பு ஒரு பெரும் மொழி! ஒரு சிரிப்பு ஒரு பெரிய புத்தகமளவு பொருளைக்கூட கொண்டிருக்கும். அப்படித்தான் எனக்குத் தோன்றியது. அதேசமயம் ஜோசப் சந்திரன் எனக்கு பதிலும் கூறினார்.

‘கணபதி சுப்ரமணியம்... நான் அறிவியல் சார்பில் அதை உணரவில்லை. அனுபவ சார்பில்தான் உணர்ந்தேன். நம்மைப் போன்ற ஆய்வாளர்கள் எந்த சார்பும் இன்றி நடுநிலையாளர்களாக இருக்க வேண்டியது மிக அவசியம். என் பெயரில் ஒரு மதச்சார்பு தெரியும்.

அதற்கு நான் காரணமல்ல... என் பெற்றோர்கள் இட்ட பெயர் அது! இப்போது ஒரு பெயரை நான் வைத்துக் கொள்ளலாம் என்றால் ‘சார்பற்றவன்’ என்றே வைத்துக்கொள்வேன். சார்பற்று இருப்பது என்பது ஒரு வட்டத்தின் மையத்தில் நாம் நிற்பதற்குச் சமம். மையத்தில் நிற்பவனுக்குத்தான், வட்ட விளிம்பு எல்லாப் பக்கங்களிலும் சம தூரத்தில் இருக்கும். அதை விட்டு கொஞ்சம் விலகினாலும் ஒருபுறம் கூடி இன்னொருபுறம் குறைந்துவிடும். அதன்பின் அதற்கேற்பவே காட்சிகளும் எண்ணங்களும் உருவாகிவிடும். கோடானுகோடிப் பேர் கொண்ட இந்த உலகில் ஒரே விஷயத்தில் பலருக்குப் பல மாதிரி கருத்து உருவாக இதுதான் காரணம்’ – என்று கொஞ்சம் போல கருத்து பீடிகை போட்டார்.

அதோடு, ‘அமானுஷ்யமான விஷயங்களை அறிவியல்படுத்த முடியாது; படுத்தவும் கூடாது. காலம் காலமாக அவை அப்படியே இருந்து வருகின்றன. இனியும் அப்படித்தான் அவை தொடரும். அறிவியலை ஒதுக்கிவிட்டு அதற்கும் மேலான அனுபவ இயலுக்குள் புகுந்தால் அமானுஷ்யம் ஒரு நாய்க்குட்டி போல நமக்கு வசப்பட்டுவிடும். எனக்கு அப்படி அது வசப்பட்டு பல காலமாகி விட்டது’ என்றார்.

அமானுஷ்யம் குறித்த இந்த விளக்கம் எனக்கு புதிது மட்டுமல்ல; அதிர்ச்சியாகவும் இருந்தது!” – கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அந்த பகீர் உணர்வு விலகாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள, வர்ஷன் மட்டும் சிந்திக்கும்படியாக ஒரு கேள்வியைக் கேட்டான்...

‘‘அங்கிள்... அந்த பாக்ஸ்ல இருக்கறது அப்ப ஒரிஜினல் ஏடும், ஒரிஜினல் சோழிகளுமா?’ என்று!

ஆமாம் என்பதுபோல் கணபதி சுப்ரமணியன் தலை அசைந்தது.அது ப்ரியா வரையில் மேலும் பகீர் உணர்வை உருவாக்கியது.

‘‘தாத்தா... அது டூப்ளிகேட் இல்லையா? ஒரிஜினலா?’’

‘‘ஆமாண்டா குட்டி...’’

‘‘அய்யய்யோ... ஒரிஜினலை எடுத்துக்கிட்டு டூப்ளிகேட்டை நீ கொடுத்ததாதான் நாங்க நினைச்சோம்.’’

‘‘நீ யூகிச்சது ஒரு கோணத்துல சரி. நான் அப்படித்தான் செய்தேன். ஆனா எனக்கும் தெரியாம என்னை கவனிச்சிக்கிட்டிருந்த முத்தழகு, நான் எடுத்ததை திரும்ப அந்தப் பெட்டிக்குள்ள வெச்சு டூப்ளிகேட்டை தூக்கி எங்கேயோ போட்டுட்டா. கூடுதலா கலயம்,

நாணயம் இதையெல்லாம் என் ரூம்ல இருந்து எடுத்து வெச்சது அவதான். அவங்க என் அறைல இருக்கற தொல்லியல் பொருட்கள் அவ்வளவையுமே முடிஞ்சா எடுத்துத் தரச் சொல்லியிருக்காங்க. ஒவ்வொண்ணுக்கும் ஒரு விலையும் சொல்லியிருக்காங்க. முத்தழகுவுக்கும் பணத்தேவை இருந்தது. அவ சம்மதிச்சிட்டா. ஆனா காலப்பலகணியோ, தப்பா தன்னை அணுகற அவ்வளவு பேரையும் பலி வாங்கிடிச்சு. இதைக் கொஞ்சம் மாத்தி, ‘சுயநலத்தோட அதை யார் தொட்டாலும் பாதிப்பு நிச்சயம்’னும் சொல்லலாம்...’’

‘‘ஒரு உலோகப் பெட்டிக்கு இப்படி ஒரு சக்தி எப்படி சாத்தியம்?’’

‘‘பெட்டிக்கோ உள்ள இருக்கற பொருட்களுக்கோ இது சாத்தியமில்ல. அதேசமயம் உள்ள இருக்கற ஏடுகளுக்கு இது சாத்தியம்...’’

‘‘ஏடும் ஒரு பொருள்தானே?’’

‘‘ஆனா ஏட்டுல எழுத்தும் எந்திரமும் எழுதப்பட்டு இருக்குல்ல?’’

‘‘எழுத்தும் எந்திரமுமா?’’

‘‘ஆமாம்! எழுத்துங்கறது என்ன... சப்தத்தோட பதிவுதானே? எழுத்தை நாம பார்த்து படிக்கும்போது நமக்குள்ள சப்தம் எழும்புதுல்ல?’’

‘‘சரி... எந்திரம் எப்படி?’’

‘‘எந்திரம்னா என்ன... இயங்கற ஒரு விஷயம் அது. இயங்கறதுங்கற விஷயம்கூட ‘ஒரே மாதிரி துளியும் மாறாம

இயங்குவது'ன்னு பொருள். உதாரணமா ஒரு நீர் இறைக்கற எந்திரம் இருக்கு. ஸ்விட்சைப் போட்ட உடனே மின்சாரம் பாய்ந்து அது இயங்க ஆரம்பிச்சிடும். அந்த இயக்கம் ஒரே மாதிரியானது. தண்ணீரை உறிஞ்சுவது அதோட வேலை. அதை மட்டும் அது செய்யும். மாறா வேற எதையும் செய்யாது. இந்த உறிஞ்சற வேலையையும் ஒரே மாதிரிதான் செய்யும். ஒரு நொடிக்கு ஒரு லிட்டர் அளவுன்னா எப்ப ஸ்விட்சை போட்டாலும் அந்த ஒரு லிட்டர் அளவு கூடாது, குறையவும் செய்யாது... இல்லையா?''

''ஆமாம்...''

''இந்த எந்திரமும் அதே மாதிரி. அது எதுக்காக வடிவமைக்கப்பட்டதோ அந்த செயல்பாட்டை அது செய்யும்.''

''ஒரு பனை ஓலை ஏட்டுல ஒரு எந்திரம் எப்படி இருக்க முடியும்?''

''எந்திரம்ங்கறது இங்கே கோடு வடிவில சதுரம், செவ்வகம், முக்கோணம், வட்டவடிவமா இருந்து செயல்படும்.''

''அது எப்படி?''

''அதை இந்த ஆஸ்பத்திரில நான் விளக்க முடியாது. இதுக்கு சரியான நபர் வள்ளுவர்தான். இந்த விளக்கத்தைக் கூட நாம போகப் போக டைம் கிடைக்கும்போது கேட்டுப் புரிஞ்சிக்கலாம்.

இப்போதைக்கு நமக்குத் தேவை, அந்தப் பெட்டி நம் வசமாகணும். அடுத்து அந்த ஏட்டைத் திறந்து அதுல உள்ள பாட்டுல

இருக்கற பொருளைக் கொண்டு நாம காலப்பலகணி உள்ள இடத்தைக் கண்டுபிடிக்கணும்.’’

‘‘ரைட்... நாம கண்டுபிடிக்கறோம். அதுதான் நம்மோட பிரதான வேலை...’’ - வர்ஷன் பெரும் உற்சாகமானான்.

‘‘இதுல நம்ம நாலு பேரைத் தவிர வேற யாருக்கும் இடமில்லை. இதை ரகசியமான ரகசியமா நாம பாதுகாக்கணும்.’’

‘‘அப்படியே செய்துடுவோம்.’’

‘‘நமக்கு நிச்சயம் எந்தக் கேடும் நடக்காது. நமக்கு யாராலயும் எந்த ஆபத்தும்கூட நேரிடாது. மிஸ்டர் வள்ளுவர், நீங்க என்ன சொல்றீங்க?’’

‘‘நான் என் பெண்டுலத்துகிட்ட கேட்டுடறேன்’’ என்றபடி வள்ளுவர் தன் காமராஜர் சட்டையில் இருந்து முன்பு பயன்படுத்திய பெண்டுலத்தை வெளியே எடுத்தார். அனந்தகிருஷ்ணனுக்கு சற்று எரிச்சலாக வந்தது.

‘‘அப்பா... இப்ப இங்க இந்த நிலைல இருக்கும்போது பேசற பேச்சா இது. அந்த காலப்பலகணி எக்கேடோ கெட்டுப் போகட்டும். நீங்க இனி அதை நினைக்கவே கூடாது’’ என்றார் கடுமையான குரலில்.

‘‘நீ இப்படி சொல்வேன்னுதான் நான் உன்னை சேத்துக்காம நாம நாலு பேரும்னு இவங்கள மட்டும் சேர்த்துக்கிட்டேன்.’’

‘‘போதும். நான் எல்லாருக்காகவும்தான் சொல்றேன். நீங்க தேடறது ஒரு புதையலா இருந்தா கூட பரவாயில்ல. அது ஒரு மெட்டீரியல் பெனிஃபிட்டா அமைஞ்சு நமக்கு பயன்படும். இந்த காலப்பலகணிங்கறது ஒரு ஜோசியப் புத்தகம் மாதிரின்னு நினைக்கறேன் - இதுக்கு நாம மெனக்கெடறது புத்திசாலித்தனமா தெரியல...’’

‘‘எதுடா புத்திசாலித்தனமில்ல? இதுக்குப் பின்னால எவ்வளவு உயிர்கள் போயிருக்கு தெரியுமா? நமக்குத் தெரிஞ்சே நாலு பேர் இறந்துட்டாங்க...’’

‘‘அப்ப நாம அதைப் பார்த்து ஒதுங்கிப் போறதுதானே புத்திசாலித்தனம்?’’

‘‘பைத்தியக்காரா... இதைப் பார்த்து ‘இது எவ்வளவு பெருசா இருந்தா இத்தனை உயிர்கள் போயிருக்க முடியும்’னு அப்படி யோசிக்கணும்டா! அதோட, காலப்பலகணி நீ சொன்ன மாதிரி ஜோசியப் புத்தகமோ... இல்ல, புரியாத குறிப்புகள் இருக்கற பயன்படாத பொருளோ இல்லை. ஏதாவது சூத்திரமா கூட இருக்கலாம். அது எப்படி வேணா இருந்துட்டுப் போகட்டும். சுருக்கமா சொல்லப் போனா, அது ஒரு அறிவுக் கணிதப் புதையல்!

விண்வெளிக்கு ராக்கெட் விட்டு செயற்கைக்கோள் மூலமா ஆராயறது எவ்வளவு முக்கியமோ, இந்த கணிதப் புதையலைத் தேடி அடையறதும் அவ்வளவு முக்கியம். ராக்கெட்டில் ஏவுற செயற்கைக்கோள் வானத்துல இருந்துக்கிட்டு பூமியில எங்க என்ன இருக்குன்னு காட்டிக் கொடுக்குது. இதுவோ பூமியில அடுத்தடுத்து என்ன நடக்கும்ங்கறத காட்டிக் கொடுக்கப் போகுது. ஆகையால இதை தேடிக் கண்டுபிடிக்கறது ரொம்பவே அவசியம்.

முதல்ல இதை நான் தனியா போய் கண்டுபிடிக்கத்தான் ஆசைப்பட்டேன். ஆனா இந்த விபத்து என் எண்ணத்தை மாத்திடுச்சு. இதை ஒரு கூட்டு முயற்சியாதான் செய்யணும். அதுதான் சரியும் கூட. நீ அமைதியா தூர இருந்து கவனிச்சா போதும். அப்படியே உன் பொண்டாட்டி இதுல மூக்கை நுழைக்காதபடியும் பாத்துக்கோ...''

- கணபதி சுப்ரமணியன் மிக அழுத்தமாகச் சொல்லி முடிக்க, வள்ளுவரும் இரு தாள்களில் 'இறங்கலாம்' 'வேண்டாம்' என்று எழுதி பெண்டுலத்தை பிடிக்கவும் 'இறங்கலாம்' என்கிற தாள்முன் பெண்டுலம் நன்றாக ஆடியது. வர்ஷன் அடுத்த நொடியே ''ப்ரியா புறப்படு... அந்தப் பெட்டியை கொண்டு வர்ற வழியைப் பார்ப்போம்'' என்றான்.

''ஆமாம்... இப்ப அதுதான் முக்கியம்'' எனும்போதே என்கொயரி ஆபீசர்கள் வந்தனர். அதில் ஒருவர் கையில் ஹெல்மெட்! முகத்தில் ஏராளமான வியர்வை.

ப்ரியா, வர்ஷன், வள்ளுவர் மூவரும் மெல்ல விலகி நிற்க, அவர்கள் முன் வந்து நின்றனர். ஆபீசர்களில் ஒருவர் ஒரு புது மாதிரியான செல்போனை எடுத்து ஆன் செய்து கொண்டே பேசத் தொடங்கினார்.

''சார், நீங்கதான் ஆராய்ச்சியாளருங்களா?''

''ஆமாம்... ஆர்க்கியாலஜிஸ்ட்டான்னு அழகா கேளுங்க...''

‘‘ஓ... ஆர்க்கியாலஜிஸ்ட்டா? ஆமா, நீங்க இப்ப சர்வீஸ்ல இருக்கீங்களா என்ன?’’

‘‘ரிட்டயர் ஆகி பல வருஷமாச்சு.’’

‘‘அப்புறம் எதுக்கு உங்கள கடத்துனாங்க?’’

‘‘ஏதோ புதையல் எடுக்கணும்னாங்க.’’

‘‘ஓ... நீங்க புதையல்லாம் எடுத்துத் தருவீங்களோ?’’

‘‘உங்க கேள்வியே தப்பு. அவங்க என்னைப் புதையல் எடுக்க முடிஞ்சவனா நினைச்சுட்டாங்க...’’

‘‘அப்புறம்?’’

‘‘என்ன அப்புறம்? அதனால என்னைக் கடத்திட்டாங்க!’’

‘‘அது சரி... உங்கள எதுக்கு பாண்டிச்சேரிக்குக் கூட்டிக்கிட்டு போக நினைச்சாங்க..?’’

‘‘அங்க அந்த புதையல் எங்காவது இருந்திருக்கலாம்...’’

‘‘இறந்து போன மூணு பேர்கிட்ட இருந்த செல்போனை வெச்சு புலன் விசாரணை செய்தநுல அவங்க வேலை எதுவும் இல்லாதவங்க என்பதுல இருந்து எல்லா கெட்ட பழக்கங்களும் உள்ளவங்கன்னு தெரிய வந்துருக்கு. குறிப்பாக அவங்களுக்கு போதைப் பழக்கம் இருக்கு. அதனால அவங்க நெட்வொர்க் ரொம்ப பெருசா உலக அளவுல இருக்க வாய்ப்பு இருக்கறதா நினைக்கறோம்.’’

‘‘அப்படியா?’’ - கணபதி சுப்ர மணியன் வெகு ஆழமாக அதை எதிர்கொண்டு கேட்டார்.

‘‘அது மட்டுமல்ல... அவங்க செல்போனை வெச்சு அவங்க யாரையெல்லாம் தொடர்பு கொண்டாங்கங்கற ஒரு லிஸ்ட்டை எடுக்கச் சொல்லியிருக்கோம்.’’

‘‘தாராளமா எடுங்க... என்னை முதல்ல வீட்டுக்கு அனுப்பற வழியைப் பாருங்க...’’

‘‘டாக்டர் போகச் சொன்னா நீங்க போகலாம் சார். அதே சமயம் அப்பப்ப நாங்க உங்களைச் சந்திச்சு விசாரிக்க வேண்டியிருக்கும்.’’

‘‘தாராளமா செய்யுங்க. நானும் கோ-ஆபரேட் பண்றேன். அப்புறம், என்னோட பெட்டி ஒண்ணு உங்க கஸ்டடில இருக்குது... அது எனக்கு வேணும்!’’

‘‘அதை எடுத்துக்கிட்டு வரும்போதுதான் ஆபீசருக்கு ஆக்சிடென்ட் ஆகிடுச்சு.’’

‘‘அந்தப் பெட்டிக்கு எதுவும் ஆகிடலையே?’’

‘‘கொஞ்சம் நசுங்கி நெளிஞ்சிடுச்சு. உள்ள ஏதாவது காஸ்ட்லியான பொருள் இருக்கா என்ன?’’

- அந்த ஆபீசர் கேட்கவும் கணபதி சுப்ரமணியனுக்கு சுருக்கென்றது!பெட்டியும் வந்தது. நசுங்கிப் போயிருந்தது. கணபதி

சுப்ரமணியன் முகத்தில் அசுர மாற்றங்கள்! அதை கவனித்த அந்த ஆபீசரிடமும் வேகமான மாற்றம்.

‘‘சார்... இது எதிர்பாராத விதமா நடந்துடிச்சி. நிச்சயம் எந்த மோட்டிவும் கிடையாது. இதுல எது இருந்தாலும் சரி, நீங்க இதை பெரிசுபடுத்திடாதீங்க. சொல்லப் போனா, இந்த கேஸ்ல இதை நாங்க குறிப்பிடப் போறதே இல்லை. உங்கள என்கொயரி பண்றதோட சமாதானப்படுத்தவும்தான் கமிஷனர் என்னை அனுப்பினார்.’’

அந்த ஆபீசர் வந்தபோது ஆரம்பித்த தோரணைக்கும் இப்போது கெஞ்சுவது போல பேசுவதற்கும் நிறையவே வித்தியாசம்.

கணபதி சுப்ரமணியன் வேண்டுமென்றே உம்மென்று முகத்தை வைத்துக் கொள்ள, ப்ரியா இடையில் புகுந்தாள்.

‘‘சார், அவ்வளவும் ஒரு ஆராய்ச்சியின்போது கிடைச்ச விஷயங்கள். திரும்ப இதை உருவாக்கல்லாம் முடியாது. சரி, சரி, நான் தாத்தாவை சமாதானப்படுத்தறேன். நீங்க கவலைப்படாதீங்க...’’ என்று சாதுர்யமாக அந்த ஆபீசரிடம் பேசினாள்.

அவரும், ‘‘ரொம்ப தேங்க்ஸ் மேடம்... ரொம்ப ரொம்ப தேங்க்ஸ். டாக்டர்கிட்ட ஃபிட்நெஸ் சர்ட்டிபிகேட் வாங்கிக்கிட்டு சாரை எவ்வளவு சீக்கிரம் அனுப்பணுமோ, அவ்வளவு சீக்கிரம் அனுப்பிட்றோம். பத்திரிகைக்காரங்க சிலர் கூட கேட்டாங்க. நாங்க அவங்கள கண்ட்ரோல் பண்ணி அனுப்பிட்டோம். நீங்களும் மீடியாவுல பெருசுபடுத்திக்க வேண்டாம். மத்தபடி உங்களுக்கு எங்க போலீஸ் பாதுகாப்பு இனி எப்பவும் இருக்கும்.

ஒரு விஜிலென்ஸ் ஆபீஸர் உங்க வீட்டுகிட்ட எப்பவும் இருப்பார்...'' என்றபடியே கிளம்பினார் அந்த ஆபீசர். 'அப்பாடா' என்றிருந்தது.எப்படிப் போய் எடுத்து வரப் போகிறோமோ என்று எண்ணிய மலை போன்ற ஒரு விஷயம் மடி மேலேயே வந்து விழுந்து விட்டது. ஆனால் உள்ளே என்னாகி இருக்குமோ என்கிற பயத்தோடு திறந்து பார்த்தால்...

33

"ஜோசப் சந்திரன் சொன்னதைக் கேட்டு நான் என் அதிர்ச்சியை வெளிப்படுத்தினேன். அவருக்கும் அது புரிந்தது.

'என்ன கணபதி... என் பதில் வியப்பை அளிக்கிறதா?' என்று கேட்டார்.

'ஆம்' என்றேன்.

'அந்த வியப்பைக் கடந்து விடுங்கள். வியப்பு ஏற்படுகிறது என்றாலே நாம் அதன் முன் சிறிதாகி விட்டோம் என்று பொருள். அதேவேளையில், எந்த ஒரு விஷயமும் தொடர்ந்து வியப்பளிக்காது. முதல் முறை மட்டுமே வியப்பு ஏற்படும்' என்று பதற்றமே இல்லாமல் மிக சரளமாகப் பேசினார்.

நான் திரும்ப அந்த தங்க விஷயத்தைத் தொடத் தொடங்கினேன். 'அங்கே சித்தர் நடமாட்டமும் இருக்கிறது, தங்கமும் இருக்கிறது என்றால் முரணாகத் தெரிகிறதே' என்றேன்.

‘எப்படி’ என்று கேட்டார்.

‘சித்தர்கள் துறவிகளைப் போன்றவர்கள். அதாவது முற்றும் துறந்தவர்கள். அவர்களுக்கு எதற்கு தங்கம்? அதைப் பிறர் தெரிந்து கொண்டு விடாதபடி ஏன் அவர்கள் தடுக்க முயற்சி செய்ய வேண்டும்?’ என்றேன்.

‘ஒரு கோணத்தில் இது நல்ல கேள்வி. அவர்கள் சூட்சுமமாக அங்கே திரிகிறார்கள். ஸ்தூல உடம்பு போல சூட்சும உடம்பு என்று ஒன்று இருக்கிறது. அந்த உடம்புக்கு ஏற்றதாக அந்த இடத்தின் தட்பவெப்பம் இருக்கலாம். அதைக் கடந்து பூகோள ரீதியாகவும் கோள்கள் சம்மந்தமாகவும் ஏதாவது காரணங்கள் இருக்கலாம்’ என்றார் அவர்.

‘எப்படி இப்படி எல்லாம் இவரால் யோசிக்க முடிகிறது?’ என்று எண்ணிய நான், அதைக் கேட்கவும் செய்தேன். அதற்கு அவர் சொன்ன பதிலில் மேலும் பல ஆச்சரிய அதிர்ச்சிகள் எனக்கு ஏற்பட்டன.

‘சித்த புருஷர்கள் பல வகைகளில் தங்களையே வென்றவர்கள் ஆவார்கள். அவர்கள் எல்லாவிதங்களிலும் நம்மிலிருந்து வேறுபட்டவர்கள். அவர்களது பல இயல்புகள் நம்மைப் போன்றதாக இராது. அவர்கள் உடம்பின் ‘ஆரா’வும் இதனால் நம்மிலிருந்து மிக வேறுபட்டது. இதனால் பஞ்ச பூதங்களில் நிலம் எனும் பூதத்திடம் எங்கே அபரிமிதமான சக்திப்பாடு உள்ளது என்பதைத் தெரிந்துகொண்டு, அங்கே தங்கள் இருப்பிடத்தை அமைத்துக் கொள்வார்கள். அவர்களின் பஞ்ச பூத அறிவு அசாதாரணமானது. அதனாலேயே போகர் எனும் சித்தர் பழநிமலை மேல் முருகனின் நவபாஷாண சிலையை

உருவாக்கினார். பழநிமலையில் முருகன் சன்னதி உள்ள இடத்தின் மேல் மார்ஸ் எனப்படும் செவ்வாய்க் கிரகத்தின் கதிர்வீச்சு ஒரு சராசரி அளவுக்கு மேலாக பட்டுத் தெறிக்கிறது.

அப்படி ஒரு இடத்தில் நவபாஷாணம் எனும் ஒன்று இருக்க, அந்த பாஷாணத்தோடு கதிர்வீச்சு கூடி, அதனால் அந்தக் கதிர்வீச்சானது மாறும் ஒரு அமைப்பு அங்கே ஏற்படுகிறது. அவ்வாறு அங்கே முருகன் வடிவில் நவபாஷாணம் இடம்பெறாது போனால், அந்த மலையைச் சுற்றி உள்ள பாகங்களில் நாம் உணர முடியாத அளவில் மாற்றங்கள் ஏற்பட்டு, அது ஒருவித தீமையாகக் கூட அமையலாம். அதுபோல கஞ்சமலையின் அந்தப் பகுதியும் பூகோள ரீதியாக ஒரு சிறப்பிடமாக சூட்சும சித்தர்களுக்கு உகந்திருக்கலாம்' என்று ஜோசப் சந்திரன் பழனிமலை வரை போய் விட்டார்.'' – கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

பெட்டியைத் திறந்து பார்த்ததில் நல்லவேளையாக உள்ளிருந்த பொருட்களுக்கு ஒரு சிறு சேதமும் இல்லை. 'அப்பாடா' என்கிற பெருமூச்சு எல்லோரிடமிருந்தும் வெளிப்பட்டது. அனந்தகிருஷ்ணனுக்கோ அந்தப் பெட்டிக்குள் இருப்பவை நொறுங்கி நாசமாகப் போயிருக்கக் கூடாதா என்று தோன்றியது.

''குட்டி... இனி ஒரு நிமிஷத்தைக் கூட விரயம் பண்ணாதே! முதல்ல இந்தப் பெட்டியோட வீட்டுக்குப் புறப்படு. ஏடுகளை தனித்தனியா ஸ்ேகன் பண்ணி கம்ப்யூட்டர்ல பக்காவா சேவ் பண்ணிடு. அதுக்குள்ள நான் வந்துடுவேன்னு நம்பறேன். வள்ளுவர் இங்க என் கூட இருக்கட்டும். நாம ஏடுகளில் உள்ள குறிப்புகளை வெச்சு முதல்ல காலப்பலகணி உள்ள இடத்தைக் கண்டுபிடிப்போம்.

அதன் பிறகு அங்க போய் அதை நெருங்குவது பற்றி முடிவு செய்யலாம்...'' என ப்ரியாவிடம் படபடப்பாகப் பேசினார் கணபதி சுப்ரமணியன்.

''ஓகே தாத்தா... நீ சொன்னதுதான் சரி. இதை முதல்ல நாம் டிஜிடலைஸ் பண்ணிடணும். அப்புறம் இந்த ஏட்டுக்கு ஏதாவது ஆனாலும் கவலையில்லை...'' ப்ரியா சொன்ன கருத்தை வள்ளுவர் மறுப்பது போல பார்த்தார். அதை ப்ரியா கவனித்தாள்.

''என்னய்யா! நான் தப்பா சொல்லிட்டேனா?''

''ஆமாம்மா. ஏடுகள் பத்திரமா இருக்கறது ரொம்ப முக்கியம். உள்ளே இருக்கற பாடல்கள், அதன் கருத்துகள் எல்லாமே ரொம்ப சக்தி வாய்ந்தவை. இந்த நேரத்துல நான் சில நுட்பமான விஷயங்களை சொல்ல விரும்பறேன். ஏடுகளுக்குள்ள இருக்கற எந்திர வரைவும், அதை இயங்க வைக்கற மந்திர வரைவும் சாதாரணமில்லை.

அந்த எந்திர - மந்திர வரைவை எழுதினவங்க, ஒரு சரியான காலகட்டத்துலதான் அதை எழுதியிருப்பாங்க. நினைச்ச நேரத்துல நாம பேனா எடுத்து பேப்பர்ல எழுதற மாதிரியான ஒரு விஷயமல்ல அது. குறிப்பா ஜோதிடக்கணக்கு இதுக்குப் பின்னால இருக்கு. எந்த நாளா இருந்தாலும், மதிய நேரமான 12 மணி காலப் பொழுதுக்கு ‘அபிஜித் முகூர்த்த காலம்’னு பேர். இந்த நேரத்துல தொடங்கப்படற செயல்கள் வெற்றியா முடிவடையும். அதே போல இந்த அபிஜித் முகூர்த்த காலத்துல சில சமயங்கள்ல நாள், நட்சத்திரம், திதி... இதெல்லாமும் வெற்றிக்கு உகந்ததாகக் கூடி வரும்.

இப்படி எல்லாம் கூடி வரும் காலத்துல தொடங்கப்படுகிற விஷயங்களும் மிகப் பெரிய வெற்றியை அடையும். இந்த மாதிரி அபூர்வ ஏடுகளை எழுதறவங்க, நிச்சயம் இப்படிப்பட்ட கால கட்டத்தைத் தேர்வு செய்துதான் இதை எழுதியிருப்பாங்க. அப்படி எழுதி முடிச்ச நொடியில இருந்தே அதோட சக்தி செயல்பட ஆரம்பிச்சிடும். எப்படி ஒரு டி.வி. ரிமோட்ல பட்டனை அழுத்தினதும், மின்சக்தி கண்ணுக்குத் தெரியாத அலைகளா மாறி டி.வி.க் குள்ள புகுந்து அதை இயங்கச் செய்யுதோ, அதே மாதிரிதான் இந்த ஏடுகளும் இயங்குது...’’ - என்ற வள்ளுவரிடம் வர்ஷன் வேகமாக ஒரு கேள்வியை முன் வைத்தான்.

‘‘அய்யா... ரிமோட்ல மின்சக்தியைத் தருகிற பேட்டரி இருக்கு. அந்த சக்தியும் நாம அதை இயக்கும்போதுதான் செலவாகுது. அந்த பேட்டரி தீர்ந்துட்டா அந்த ரிமோட்டும் வேலை செய்யாது. இங்க அந்த மாதிரி எதுவுமில்லையே..?’’ - என்றான்.

‘‘தம்பி! காளிதாசன்னு ஒரு கவிஞன்... போஜராஜன்னு ஒரு அரசன். இவங்க இரண்டு பேரும் ரொம்ப நெருக்கமான நண்பர்கள். இதுல காளிதாசன் காளியோட அருளால கவிஞன் ஆனவன். அவன்

சொற்களுக்கு மந்திர சக்தி உண்டு. காளிதாசன் மட்டுமில்ல... நல்ல கவிதைகள் படைக்க முடிஞ்ச கவிஞர்கள் அவ்வளவு பேருக்குமே பெரும் சக்தி உண்டு. அதனால கவிஞர்கள் மனம் நோக நடந்துக்க மாட்டாங்க! அவங்க நம்ம மேல கோபப்படாதபடியும் பாத்துப்பாங்க.

எதுக்கு சொல்றேன்னா, காளிதாசனும் போஜனும் ஒருநாள் விளையாட்டா பேசிக்கும்போது, ‘நண்பா! நான் உனக்கு முன்னால இறந்துட்டா நீ என் நினைவா இரங்கற்பா எனப்படுகிற சரம கவிதை பாடுவேதானே’ன்னு கேட்க, காளிதாசனும் ‘இப்ப எதுக்கு அந்தப் பேச்சு’ன்னு சொல்றான். ‘இல்ல, நீ பதில் சொல்லு’ன்னு அழுத்தம் கொடுக்கிறான் போஜன். ‘நிச்சயம் பாடுவேன்... அதாவது எழுதுவேன்’னு சொல்றான். ‘அப்படி நீ பாடினா அதை நான் கேட்க முடியாது இல்லையா’ன்னு போஜன் திருப்பிக் கேட்க, ‘ஆமாம்’னு சொல்றான் காளிதாசன்.

‘அதனால நான் உயிரோட இருக்கற இப்பவே நான் செத்துட்டதா நினைச்சுப் பாடு’ன்னு சொல்றான் போஜன். காளிதாசனோ, ‘முடியாது’ங்கறான். ஏன்னா சரம கவிதைங்கறது இறந்தவர்களுக்கு மட்டுமே எழுதப்படுவது. அது பொய்யாகவே ஆகாது. உயிரோடு இருக்கும்போது பாடினா, பாடினது உண்மையாகி போஜன் உயிர் போயிடும். அதனால காளிதாசன் ‘முடியாது’ங்கறான். இந்த விஷயம் விவகாரமாகி காளிதாசனை நாட்டைவிட்டே துரத்தறான் போஜன். காளிதாசனும் போஜன் உயிரோட இருந்தா போதும்னு நாட்டை விட்டு வெளியேறுகிறான். ஆனாலும் போஜன் தந்திரமா தான் இறந்துட்டதா காளிதாசனை நம்ப வெச்சு சரம கவிதை பாட வைக்க, கடைசில அதைக் கேட்காமலே நிஜமா போஜன் இறந்தும் போனான்.

இது வரலாறு, தம்பி! ஒரு கவிதைக்கே கொல்லும் சக்தி இருக்குங்கறதுக்கு ஒரு சான்று இது. இதோட மாறுபட்ட வடிவம்தான் அறம் பாடி கொல்லுதல்ங்கற விஷயங்கள். இந்தப் பாடல் வரிகளுக்குள்ளயே நீ குறிப்பிடற பேட்டரி மின்சாரம் ஒளிஞ்சிருக்குப்பா. அதுமாதிரிதான் இந்த ஏடுகளும்... இதுக்குள்ள உள்ள எந்திர வரைவும்...'' என்றார் வள்ளுவர்.

‘‘இந்த போஜன் - காளிதாசன் கதை ஒரு புனைகதையா இருக்கலாம் இல்லையா?''

‘‘இதுக்கு மேலே என்னால உனக்கு விளக்கம் தர முடியாது. அமானுஷ்ய விஷயங்களை ஏதாவது ஒரு இடத்துல நம்பத் தொடங்கினா மட்டுமே அதைக் கொஞ்சமாவது புரிஞ்சுக்க முடியும்!''

‘‘போதும்... இப்படி விவாதம் பண்ணிக்கிட்டு போனா காரியம் கெட்டாலும் கெட்டுடும். இதுவரை நடந்த அமானுஷ்யங்களை அடிப்படையா வச்சு, இதை நம்பி நாம காரியத்துல இறங்குவோம். இனி ஒரே எய்ம்தான். அது அந்த காலப்பலகணி!'' என்றாள் ப்ரியா.

பின் இருவரும் புறப்பட்டனர். அனந்தகிருஷ்ணன் அவர்களோடு இணைந்துகொள்ள, வள்ளுவர் மட்டும் கணபதி சுப்ரமணியனோடு ஆஸ்பத்திரி யிலேயே தங்கி விட்டார்.

அவர்கள் வெளியேறியதும் கணபதி சுப்ரமணியன் கேட்டார், ‘‘என்ன வள்ளுவரே! நாம் அதை கண்டுபிடிச்சிடுவோமா?''

‘‘நிச்சயமா! அதுல என்ன சந்தேகம்?''

‘‘நீங்க இன்னிக்கு உயிரோட இருக்கறதே உங்க வரையில ஒரு ஆச்சரியமான விஷயம்தானே?''

‘‘ஆமாம்... அந்தக் காலப்பலகணியில அதுக்கு நிச்சயம் விடை இருக்குன்னும் நான் நம்பறேன்!’’

‘‘அது மட்டுமா? எவ்வளவோ விஷயங்களை நாம தெரிஞ்சிக்கப் போறோம். குறிப்பா ‘இந்தியா வல்லரசாகுமா’ங்கற கேள்விதான் என் வரையில பிரதானம்!’’

‘‘காசுக்கு தண்ணி வாங்கற நிலை வந்துடுச்சுங்களே... இதை மாத்தற மாதிரி இந்த நாடு தண்ணிப் பிரச்னை இல்லாம இருக்குமாங்கறது என் கேள்வி...’’

‘‘நம்ம தேசத்துல எங்கே பெட்ரோல் கிடைக்கும்? எங்கே தங்கச் சுரங்கம் இருக்குங்கற கேள்வியும் பிரதானமானது. இந்த இரண்டும் இருக்கற இடம் தெரிஞ்சுட்டா நம்மளைக் கையிலயே பிடிக்க முடியாதே?’’

அவர்கள் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருக்க, வெளியே ஒரு விஜிலென்ஸ் போலீஸ்காரர் வந்து நின்றார். ஏதோ வேலையாக நடப்பது போன்ற பாவனையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தார். வள்ளுவர் உடனேயே சுதாரித்தவராக ‘‘நாம ஒண்ணுக்கும் உதவாத விஷயம் பேசுவோமா?’’ என்று கேட்க, ‘‘உங்களால முடியுமா?’’ என கணபதி சுப்ரமணியன் சீரியஸாகக் கேட்க,

‘‘முயற்சிக்கறேன்... ஆமா, அந்த உயரமான நடிகைக்கும் ஜாலி நடிகருக்கும் சீரியஸான காதல் இருக்கறதா கிசுகிசு வந்துச்சே, நீங்க படிச்சீங்களா?’’ என்று ஆரம்பித்தார். கணபதி சுப்ரமணியன் பங்களா. தங்கவேலு கதவைத் திறந்துவிட கார் உள்ளே பிரவேசித்தது. பெட்டியோடு இறங்கிய ப்ரியாவைப் பார்த்து பத்மாசினி பெரிதாகவே அதிர்ந்தாள்.

‘‘ஐயோ, என்னடி இது..?’’ என்றவளுக்கு அனந்தகிருஷ்ணனை பதில் சொல்லச் சொல்லிவிட்டு இருவரும் நேராக கணபதி சுப்ரமணியன் அறை நோக்கித்தான் சென்றனர்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றவர்கள் தாழ்ப்பாள் போட்டுக்கொள்ள பத்மாசினி புலம்பத் தொடங்கினாள்.

‘‘என்னங்க நடக்குது இங்க?’’

‘‘சொல்றேன்... நீ கொஞ்சம் பதற்றப்படாம இரு!’’

‘‘எப்படி இருக்கறது? திரும்ப அந்தப் பெட்டி வந்துடுச்சே?’’

‘‘வந்துடுச்சிதான்... என்ன செய்யச் சொல்றே?’’

‘‘இப்படிச் சொன்னா எப்படிங்க..?’’

‘‘இதோ பார்.... இங்க நாங்க போனபிறகு உனக்கு எதுவும் ஆகலையே?’’

‘‘ஏன்... எனக்கு ஏதாவது ஆகணுமா! என்னங்க கேள்வி கேக்கறீங்க..?’’

‘‘பைத்தியம்! அந்த முத்தழகு ஆவியால ஏதாவது திரும்பத் தொல்லை ஏற்பட்டுதான்னு கேட்டேன்!’’

‘‘அதை ஞாபகப்படுத்தாதீங்க... ஆமா, உங்க அப்பாவுக்கு இப்ப எப்படி இருக்கு?’’

‘‘அவருக்கு எதுவுமில்லை... நல்ல இருக்கார். ஆனா அவருக்கு ஏதாவது ஆயிருந்தா எவ்வளவோ நல்லா இருந்திருக்கும்!’’

‘‘ஏன் அப்படிச் சொல்றீங்க?’’

‘‘வேற எப்படிச் சொல்றதுன்னு தெரியல பத்மா. ஒரு விஷயத்தை மட்டும் நல்லா தெரிஞ்சிக்கோ. இதுவரை பெருசா எதுவும் நடக்கலை. இனிமேதான் எல்லாம் நடக்கப் போகுது...’’

‘‘எல்லாம்னா..?’’

‘‘எல்லாம்னா எல்லாம்தான்... அனேகமா உனக்கும் எனக்கும் பைத்தியம் பிடிக்கறதுங்கறது அதுல ஒண்ணா இருக்கலாம்!’’

‘‘புரியற மாதிரியே பேச மாட்டீங்களா?’’

- பத்மாசினி கெஞ்சல் குரலில் கேட்க, பேசறேன் என்பதுபோல, நடந்த எல்லாவற்றையும் அவளிடம் பகிர்ந்துகொள்ள அவர் தயாரானார்.

உள்ளே வர்ஷனும், ப்ரியாவும் ஏட்டுக்கட்டைத் திறந்திருந்தனர். முதல் பக்கத்தில் ஒரு ஸ்வஸ்திக் குறி, அடுத்த பக்கத்தில் ‘ஆனைமுகன்காப்பு’ என்கிற தலைப்புக்குக் கீழே பிள்ளையாரைத் துதி செய்யும் நான்கு வரிப் பாடல்... மூன்றாவது ஏட்டில் ‘பதிமூன்று முறை பிராணாயாமம் செய்து முட்டி மடக்கி தரை மீதமர்ந்து ஏட்டைத் தொடர்க!’ என்கிற குறிப்பு இருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் திருதிருவென பார்த்துக் கொண்டனர்.

34

“பழனி மலையைத் தொட்டு ஜோசப் சந்திரன் சொன்ன கருத்துக்கள் எந்த அளவிற்கு சரியானவை என்று ஒரு கேள்வி எனக்குள் எழும்பியது. குறிப்பாக செவ்வாயின் கதிர்வீச்சு அங்கே படுகிறது என்பதை எதை வைத்து அறிவது? விண்ணில் ஒரு பந்து போல மிதந்தபடி திரியும் ஒரு கோளின் கதிர்வீச்சு, அதன் சுற்றுப் பாதையைக் கடந்து பூமி மேல் படுகிறது என்கிற கருத்தை எதைக் கொண்டு ஊர்ஜிதப்படுத்திக்கொள்வது என்று நான் எனக்குள் நிறைய துணைக் கேள்விகளின் பிடியில் சிக்கினேன். அது அவருக்கும் புரிந்தது.

‘கணபதி சுப்ரமணியன்! என் கருத்தை நம்ப நீங்கள் அதிக சிரமப்படத் தேவையேயில்லை. ஒரு நிலையில் இல்லாமல் மாறிக்கொண்டே இருக்கும் நம் மனமே பெரிய சாட்சி. நம் உடம்பின் வழியே நுழையும் கதிர்வீச்சுகளால் மனதை கோள்கள் பாதிக்கின்றன. இதனால்தான் நம் எண்ணங்களில் பெரிதும் மாற்றங்கள் நிகழ்கின்றன. ஜோதிட சாஸ்திரமும் இதையே வலியுறுத்துகிறது. விண்ணில் ஆயிரக்கணக்கான கோள்களும் நட்சத்திரங்களும் இருந்தாலும், பூமியைப் பாதிக்கும் விதத்தில் இருப்பவை ஏழு கோள்கள்தான்!

இதை நான் தொடக்கத்தில் ஒப்புக்கொள்ளவில்லை. பின்னர் நடுநிலையோடு சிந்தித்து பல ஆராய்ச்சிகள் செய்து ஒப்புக்கொண்டேன். அப்போது நான் சற்று வெட்கப்படவும் செய்தேன். நான் ஒப்புக்கொண்டது மிகத் தாமதமாகவே... முன்னதாய் இது நிகழ்ந்திருந்தால் நான் என் ஆராய்ச்சியில்

எவ்வளவோ சாதித்திருப்பேன் என்பதுதான் நான் வெட்கப்பட காரணம்.

அடுத்து இன்னொரு விஷயமும் முக்கிய பங்கு வகிக்கிறது. நாம் நம்மையுமறியாமல் நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு ஒரு முக்கியத்துவத்தைத் தந்திருக்கிறோம். குறிப்பாக நம்மை யாரும் கேலியாகப் பார்த்துவிடவோ பேசிவிடவோ கூடாது என்பதில் நாம் மிகவே அக்கறையாக உள்ளோம். அதனாலேயே நம் போக்கில் போய் ஒரு காரியத்தைச் செய்வதில்லை.

'நம் போன்ற ஆய்வாளர்கள் இந்த மூன்றாம் மனிதர்களால் மிகவே கட்டப்பட்டுள்ளோம். ஆய்வு புரிபவனுக்கு பாரபட்சம் கூடாது. உண்மை மட்டுமே நிதர்சனமானது' என்று ஒரு நீண்ட விளக்கமும் அளித்தார்.

அதை நானும் ஏற்றுக்கொண்டேன். அப்படியே 'கஞ்சமலை தங்கம் உள்ள பகுதியை என்ன செய்யலாம்?' என்று திரும்பக் கேட்டேன்.

'ஏன்... அந்த தங்கம் மதிப்பு மிக்கதாக உங்களைக் கருத வைத்துக்கொண்டே இருக்கிறதா?' என்று அவர் திருப்பிக் கேட்டார்.

'அது மதிப்பு மிக்கதுதானே. ஒரு கிராம் தங்கம் இன்று 300 ரூபாய் ஆயிற்றே' என்றேன்.

‘இது 3000 ரூபாய் வரை கூட போகும்... போய்விட்டுப் போகட்டும். ஆனால் நம்மால் மட்டுமல்ல. யாராலும் அங்கே எதையும் செய்ய முடியாது. ஒருவேளை அரசாங்கத்தின் அதிகாரமும் செல்வாக்கும் அங்கே ஒரு சுரங்கத்தைத் தோண்ட உத்தரவிட்டாலும் அதனால் பெரிதாக பயன் ஏற்பட்டுவிடாது. இந்த உலகில் ஒவ்வொரு கண்டத்திலும் ஒரு புதிர் போன்ற மர்மம் உள்ளது. அதை விஞ்ஞான உலகமும் பெரிதாக ஆய்வு செய்ய நுழையாமல் அப்படியே விட்டுவிட்டது. ஏன் தெரியுமா?’ என்று கேட்டார். அவரின் பதிலைக் கேட்க நானும் தயாரானேன்.’’

– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

‘**ப**திமூன்று முறை பிராணாயாமம் செய்து முட்டி மடக்கி தரை மீதமர்ந்து’ என்கிற ஏட்டின் கட்டளையை செயல்படுத்துவதா வேண்டாமா என்று இருவரிடையேயும் ஒரு தயக்கம் உருவாகியது.

‘‘என்ன இது... எதுக்கு பிராணாயாமம் - அதுவும் பதிமூணு தடவை...’’ என்றான் வர்ஷன்.

‘‘முதல்ல உனக்கு பிராணாயாமம்னா என்னன்னு தெரியுமாடா?’’ - என்றாள் ப்ரியா.

‘‘மூச்சை உள்ளே இழுத்து விடறதுதானே?’’

‘‘அதைத்தான் நாம ஒவ்வொரு நொடியும் செய்துக்கிட்டு இருக்கோமே..?’’

‘‘அப்ப பிராணாயாமம்னா மூச்சை அடக்கி தம் கட்றதா?’’

‘‘உனக்குத் தெரியல... அதை ஒத்துக்க தைரியமும் இல்ல! விடு... நான் வள்ளுவர்கிட்டயே கேட்கறேன்!’’

- அடுத்த நொடி கைபேசி ஆஸ்பத்திரியில் இருந்த வள்ளுவரை அள்ளியது.

‘‘அய்யா...’’

‘‘சொல்லும்மா...’’

‘‘பிராணாயாமம்னா என்னங்கய்யா?’’

‘‘அது ஒரு மூச்சுப் பயிற்சிம்மா... இரண்டு மூக்குத் துவாரங்கள்ல இடது துவாரம் வழியா காற்றை நெஞ்சில இழுத்து நிரப்பி, ஒரு பத்து பதினைஞ்சு செகண்ட் வெளிய விடாம நுரையீரலுக்குள்ளேயே காற்றை நிறுத்தி வெச்சு பிறகு வலது துவாரம் வழியா வெளிய விடணும். உள்ள போன காத்து இப்ப ஆக்சிஜனை இழந்து கரியமில வாயுவா வெளிய வரும். இப்படி வெளிய போகும் காற்று அசுத்தக் காற்று.’’

‘‘இது போதும்யா... இங்க பதிமூணு முறை பிராணாயாமம் செய்துட்டு அப்புறமா முட்டி மடக்கி தரை மேல உட்கார்ந்து ஏட்டைத் தொடர சொல்லியிருக்குய்யா ஒரு குறிப்பு...’’

‘‘அப்படியே செய்யுங்க... தரை மேல நிக்கும்போது பாதம் பூமியோட தொடர்புல இருக்கும். ஒவ்வொரு இடத்துக்கு ஒவ்வொருவித வாஸ்து பலம் உண்டு. அந்த சக்தி பாதம் வழியா உடம்புல ஏறும். முட்டி போட்டு அமரும்போது அதுக்கு இடமில்லாமப் போயிடுது இல்லையா? அதனாலதான் முட்டி போடச்

சொல்லியிருக்கு. பிராணாயாமம் பதிமூணு முறைன்னும்போது குறிப்பிட்ட அளவு ஆக்சிஜன் - அதாவது உயிர்க்காற்றுன்னு நாங்க சொல்ற ஜீவக்காற்றோட சக்தி - ரத்தத்துல எதிரொலிச்சு யோசிக்கற சக்தி கூர்மையா மாறும்!''

''ஓ... இதுக்குள்ள இப்படி ஒரு நுட்பமா? போகட்டும்... அது என்ன பதிமூணுங்கற அளவு?''

''அத்தனை முறை செய்யும்போதுதான் உயிர்க்காற்று ரத்தத்துல நல்லா கலக்கும். குறைஞ்சா பயனில்ல. கூடுதலா இருந்தா அது தேவையில்லை. இது ஒரு பாத்திரம் நிரம்பி வழியற மாதிரி...''

''ஒரு ஏட்டை படிக்க இதெல்லாம் எதுக்கு?''

''இந்தக் கேள்விக்கு விடை உள்ள இருக்கும்மா... தொடர்ந்து படி!''

''நல்லதுய்யா...''

- ப்ரியா திரும்பினாள். வர்ஷன் ஊன்றினான்.

''என்னவாம்?''

''பிராணாயாமம் நம்மை ஷார்ப் பண்ணிக்க.... முட்டி போடறது இந்த இடம் நம்மை டிஸ்டர்ப் பண்ணாம இருக்க...''

''இங்க என்ன டிஸ்டர்பன்ஸ் நமக்கு?''

- அப்போது கதவு தட்டப்படும் சப்தம் கேட்டு ''அம்மா'' என்றபடி போய் கதவைத் திறந்தாள்.

அம்மாவேதான்!

‘‘கதவை சாத்திக்கிட்டு என்னடி பண்ணிக்கிட்டிருக்கே?’’

‘‘கூத்தடிச்சிக்கிட்டு இருக்கோம்... போதுமா?’’

‘‘இப்படி நீ சொல்லிட்டா நான் விட்ருவேனா... வேண்டாம்டி இந்தப் பாழாப் போன வேலை!’’

‘‘தப்பா சொல்றே... இது எவ்வளவு இன்ட்ரஸ்ட்டா இருக்கு தெரியுமா?’’

‘‘மண்ணாங்கட்டி... எனக்கு நீ ஒரே பொண்ணுடி! உனக்கு எதுவும் ஆகிடக் கூடாது...’’

‘‘எதுவும் ஆகாது. சென்ட்டிமென்ட்டா பேசி என்னை மாத்தலாம்னு நினைக்காதே. போ... போய் உன் பிராக்டீசை ஆரம்பி. வர்ற ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ண கான சபாவுல உன் கச்சேரிங்கறதை மறந்துடாதே...’’

‘‘ப்ரியா... உனக்கு இந்த வாய் ஆகாதுடி!’’

‘‘அம்மா! டயத்தை வேஸ்ட் பண்ணாம போம்மா...’’ - கதவைத் திரும்ப தாழிட்டுவிட்டுத் திரும்பினாள். வர்ஷன் கேட்டான்.

‘‘ஓ, இந்த டிஸ்டர்பன்சுக்காகத்தான் முட்டி போடணுமா?’’ - ப்ரியா சிரித்தவளாக, ‘‘இந்த டிஸ்டர்பன்ஸ் இல்ல... இதுக்கு வேற பேர் - இது நொச்சு! டிஸ்டர்பன்ஸ்ங்கறது பூமியால வருமாம்...’’

‘‘எப்படி?’’

‘‘வேண்டாம்... அந்தக் கேள்விக்கு பதில் கேட்டா, அப்புறம் அந்த பதிலுக்கு ஒரு கேள்வி நமக்குள்ள எழும்பும். நாம பிராணாயாமம் செய்வோம். முட்டி போடுவோம். அடுத்த பக்கத்துக்கு போவோம். எனக்குள்ள க்யூரியாசிட்டி அதிகமாகிக்கிட்டே போகுது வர்ஷன்...’’

‘‘பை த பை, அந்த சதுர்வேதி இப்ப என்ன செய்துக்கிட்டிருப்பான் ப்ரியா? அவன் கப்சிப்னு ஒதுங்கிடுவான்னு எதை வச்சு நம்பறது..?’’ - வர்ஷன் சதுர்வேதியைத் தொடவும், ப்ரியா அவனை வெறித்தாள்.

‘‘இப்ப நம்ம வேலை இந்த ஏட்டை படிச்சுப் புரிஞ்சிக்கறதும் காலப்பலகணி இருக்கற இடத்தைத் தேடிப் போறதும்தான்...’’

‘‘ஓகே... ஓகே... கன்டினியூ!’’

இருவரும் பிராணாயாமித்து முட்டி போட்டு அமர்ந்து ஏட்டின் அடுத்த பக்கத்தைத் தொட்டனர்.

‘அமர்வது கிழக்கு நோக்கி... அடுத்ததும் கண ஒடுக்கம்
ஒடுங்கி விரிந்திட இஷ்ட தெய்வ துதி...
துதியதன் பின்னே மதியதும் காணட்டும்
மார்கண்ட சக்கரம்!’- என்கின்ற வரிகள்!

அதில் முதல் மூன்று வார்த்தைகளுக்கு பொருள் புரிந்து விட்டது. காம்பசைக் கொண்டு கிழக்குத் திசை அறிந்து, அதை நோக்கி முட்டி

போட்டு அமர்ந்தனர். ‘அடுத்ததும் கண ஒடுக்கம்’ எனும் வார்த்தைகளுக்குத்தான் பொருள் தெரியவில்லை. ப்ரியா உடனேயே போனை கையில் எடுத்தாள்.

‘‘போதும், நிறுத்து ப்ரியா... ஒவ்வொரு பக்கத்துக்கும் போன் பண்ணி கேட்டு நாம புரிஞ்சுக்கறதுக்குள்ள பொழுது விடிஞ்சிடும். பேசாம நாம இதை முதல்ல ஸ்கேன் பண்ணுவோம். அப்புறமா அவங்கள - குறிப்பா வள்ளுவரை - கிட்ட வச்சுக்கிட்டு நாம இடத்தைக் கண்டுபிடிப்போம்... என்ன சொல்றே?’’

‘‘அதுவும் சரிதான்... இப்படி சட்டுன்னு முடிவுக்கு வர்றதுக்குத்தான் அந்த பிராணாயாமம் ஹெல்ப் பண்ணுச்சோ?’’

‘‘இருக்கலாம்... நீ கேமராவை ஆன் பண்ணு. க்விக்... நான் கம்ப்யூட்டரை ஆன் பண்றேன்’’ - என்று ப்ரியா சுறுசுறுப்பானாள்.

ஆஸ்பத்திரியில் டாக்டர் பரிசோதித்தவராக ‘‘ஒரு இரண்டு நாள் இங்க இருக்கலாமே’’ என்றார். அருகிலேயே ஒரு போலீஸ் ஆபீசர். கணபதி சுப்ரமணியன் டாக்டரை பரிதாபமாகப் பார்த்தார்.

‘‘நாங்க ரொம்ப ஜாக்கிரதையா பாத்துப்போம் சார்’’ என்று டாக்டர் மறுபடியும் சொன்னார்.

‘‘எனக்கு என் வீடுதான் சொர்க்கம் டாக்டர். ப்ளீஸ்...’’ - கெஞ்சினார் கணபதி சுப்ரமணியன்.

‘‘அப்ப சரி... ஆனா ஒண்ணு.’’

‘‘என்ன?’’

‘‘ஷோல்டர்ல மைல்ட் ஹேர் கிராக் இருக்கு. ஷேக் ஆனா டெவலப் ஆகும். துளிகூட அங்க அசைவு கூடாது. சாஞ்சுதான் படுக்கணும். புரண்டும் படுக்கக் கூடாது. பாயின்ட் ஃபைவ் அளவுல மைல்ட் ஸ்லீப்பிங் டோஸ் தரேன். லிக்கர் கூடாது...’’

‘‘ஃபார்ச்சுனேட்லி, எனக்கு அந்த வழக்கம் கிடையாது டாக்டர்!’’

‘‘உண்மைல பெரிய ஆச்சரியம். அப்ப நீங்க தமிழ்நாட்டுல 43 பர்சன்டேஜ்ல ஒருத்தர்னு சொல்லுங்க!’’

‘‘அது என்ன 43 பர்சன்டேஜ்..?’’

‘‘57 பர்சன்டேஜ் குடிக்கறவங்களாம்... அதைச் சொன்னேன்!’’

‘‘ஓ... அப்ப குடிக்கறவங்க எண்ணிக்கைதான் கூடுதலா... குடிக்காதவங்க மைனாரிட்டியா?’’ - கணபதி சுப்ரமணியன் வேடிக்கையாகக் கேட்க, டாக்டரும் ஃபிட்நெஸ் சர்ட்டிஃபிகேட்டில் கையெழுத்திட்டார். அருகில் இருந்த போலீஸ் ஆபீசருக்கு அப்போது போன் வந்தது. எதிர் முனையில் பேசுவது இவர்களுக்கும் தெளிவாகக் கேட்டது.

‘‘சார், ஆக்சிடென்ட்ல செத்தவங்க உடம்பைக் கேட்டு அவங்க பேரன்ட்ஸ் வந்திருக்காங்க. அவங்க கமிஷனரைப் பார்த்து பர்சனலா பேசணும்னும் சொல்றாங்க சார்...’’

‘‘என்ன பேசணுமாம்?’’

‘‘இறந்தவங்க பல விஷயங்கள்ல வினோதமா எல்லாம் நடந்துக்கிட்டிருக்காங்க. எருமையை வெட்டிப் போட்டு ஏதோ பூஜை எல்லாம் செய்திருக்காங்க. அபூர்வமான பொருள் ஒண்ணை தேடப் போறதாவும் அவங்க பேசியிருக்காங்க சார்...’’

‘‘என்னய்யா, என்னென்னமோ சொல்றே... அபூர்வமான பொருள்னா என்னய்யா அது?’’

- போலீஸ் ஆபீசர் அப்படி பலமான குரலில் கேட்கவும், கணபதி சுப்ரமணியனும், வள்ளுவரும் விதிர்த்தனர்.

‘‘அது என்னன்னு யாருக்கும் தெரியல... டெல்லில இருந்து இவங்கள யாரோ டைரக்ட் பண்ணியிருக்காங்க!’’

‘‘சரி, முதல்ல அவங்ககூட நான் பேசறேன். பாடியை வாங்கிக்கிட்டுப் போய் காரியத்தை முதல்ல முடிக்கச் சொல்லுங்க.’’

‘‘யெஸ் சார்...’’

பேச்சை முடித்து போலீஸ் ஆபீசர் போனை பாக்கெட்டில் போட்டபடி, ‘‘இந்த கேஸ் ரொம்பவே விவகாரமா இருக்கும் போல இருக்கு. நீங்க உங்க வீட்ல இருக்கறதுதான் சேஃப்டியும் கூட!’’ - என்றார்.

‘‘என்ன சார் திடீர்னு... ஏதாவது புதுப் பிரச்னையா?’’

கணபதி சுப்ரமணியன் கேட்க, ஆமோதித்த போலீஸ் ஆபீசர், ‘‘நீங்க கிளம்புங்க சார்... உங்க வீடு வரை நானும் வர்றேன். பை த பை, நீங்க உங்க வீட்லதான் இருக்கணும். எதுக்காகவும் நீங்க வீட்டை விட்டு வெளியே போகக்கூடாது’’ என்றார்.

கணபதி சுப்ரமணியனுக்கு நெஞ்சில் மிதித்தது போல் இருந்தது.

35

‘நாஸ்டர்டாமஸ் என்று ஒரு பிரெஞ்சுக்காரர் எதிர்காலம் குறித்து பல கருத்துக்களை எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார். அவர் எழுதிய பல விஷயங்கள் அப்படியே நடந்தும் இருக்கின்றன. இனி வரும் நாளில் நடக்க இருப்பதையும் எழுதியுள்ளார். அவை எல்லாம் நடக்குமா என்பது போகப் போகத்தான் தெரியும். இந்த நாஸ்டர்டாமஸ் விஷயத்தை விஞ்ஞானிகள் அப்படியே விட்டு விட்டனர். ‘இது எப்படிச் சாத்தியம்’ என்று ஆராய்வதை விட ‘இதைக் கண்டுகொள்ளாமல் போவதே புத்திசாலித்தனம்’ என்பது சிலர் கருத்து.

அடுத்து, பறக்கும் தட்டு வடிவில் விண்ணில் இருந்து வாகனங்கள் பூமியில் உள்ள வயல்களில் இறங்கியிருக்கின்றன. அப்படி அவை இறங்கிய இடங்களில் பயிர்கள் கத்தரிக்கப்பட்டது போல தடயம் உருவாகியுள்ளது. அதை வைத்து ‘ஏலியன்கள்’ எனப்படும் மாற்று கிரகத்தவர்கள் பூமிக்கு சகஜமாக வந்து செல்கின்றனர் என்கிற ஒரு கருத்து பலமாக உலவுகிறது. ஆனால் அதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. ஏலியன்கள் இப்படி மனிதர்கள் தங்களைக் கண்டுவிடாதவாறு மிக எச்சரிக்கையாக வந்து செல்வதாக ஒரு கருத்து நிலவுகிறது. இந்த விஷயமும் ஒரு அமானுஷ்யமாக, கேள்விக்குறியாகவே உள்ளது’ என்றார் ஜோசப் சந்திரன்.

‘நானும் இதுபோன்ற செய்திகளைப் படித்துள்ளேன். ஆழ்ந்த அறிவியல் நம்பிக்கை கொண்டவர்கள் இதுபோன்ற விஷயங்களைப் பற்றி ஒருமுறை தங்களுக்குள் நினைத்துப் பார்க்கக்கூட விரும்புவதில்லை’ என்றேன் நான். ‘அது அவர்களின் தீவிரத் தன்மையைப் பொறுத்து அமையும் விஷயமாகும். உண்மையில் எல்லாமே அறிவியல்தான். ஒரு கடல் பிராந்தியத்தில் குறிப்பிட்ட பகுதியில் விமானங்கள் காணாமல் போகின்றன. கப்பல்கள் போனாலும் திரும்புவதில்லை. இதுகுறித்த உண்மைக் காரணத்தைக் கண்டறிய முடியவில்லை. புவிஃஈர்ப்பு விசைப்பாடு சார்ந்த ஒரு விஷயம்தான் காரணம். தெளிவாகத் தெரிந்தால் அதை விளக்க முடியும். விளக்க முடிவது விஞ்ஞானமாகி விடுகிறது; அப்படி விளக்க முடியாததே புதிராக, அமானுஷ்யமாக அப்படியே நின்று விடுகிறது. இன்று புரியாவிட்டாலும் எதிர் காலத்தில் புரியும் சாத்தியங்கள் மிகுதி. எனவே, நாம் அமானுஷ்யங்களை அலட்சியப்படுத்தி, அதுதான் அறிவுபூர்வ செயல்பாடு என்று எண்ணக் கூடாது. அமானுஷ்யங்கள் மேல் ஒரு பார்வை இருந்தபடியே இருக்க வேண்டும்’- என்று ஜோசப் சந்திரன் பேசியது என் வரையில் மாறுபட்ட கருத்து.

கஞ்சமலை தங்கம் குறித்த விஷயத்துக்கு மீண்டும் வருகிறேன். அதை முழுமையாகப் புரிந்துகொள்ளும் ஒரு விருப்பம் எனக்குள் இருந்துகொண்டே இருந்தது. குறிப்பாக அங்கு உடம்பில்லாத உடம்போடு நடமாடும் சித்தர்களை எப்பாடுபட்டாவது சந்தித்துப் பேசவும் நான் விரும்பினேன். ஏனென்றால், எனக்குள் ஒரு கேள்விக்கு தெளிவான விடையின்றி தவித்தபடியேதான் இருக்கிறேன். உயிர் போனபின் உடம்பை எரித்து அழித்து விடுகிறோம். போன உயிர் அதன்பின் சூட்சும உடம்போடு அலைவதாகக் கூறுவது எதை வைத்து? அந்த சூட்சும உடம்பு எந்த

வடிவில் இருக்கும்? அதற்கு பசி, தாகம் உண்டா? உண்டு என்றால் அது எதை உண்ணும்? எப்படி உண்ணும்? - இப்படி என்னுள் பலப்பல கேள்விகள்.'' - கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

போலீஸ் ஆபீசர் கூறியதைக் கேட்ட வள்ளுவருக்கும் கணபதி சுப்ரமணியனின் கலக்கம் புரிந்தது.

''சார்... இந்த உடம்போடு அவர் எங்க சார் போக முடியும்? அவர் எங்கேயும் போக மாட்டார். நீங்க கவலைப்பட வேண்டாம்'' என்றார்.

அதன்பின் அவர்கள் புறப்பட்டனர். தனது போலீஸ் காரிலேயே இருவரையும் அழைத்துக்கொண்டு புறப்பட்ட அந்த போலீஸ் ஆபீசரின் நேம் பேட்ஜில் சந்தானம் என்கிற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அந்த சந்தானம் காரின் முன்புற சீட்டில் அமர்ந்துகொள்ள, பின்னால் கணபதி சுப்ரமணியனும் வள்ளுவரும் அமர்ந்துகொள்ள, காரும் கிளம்பியது.

கார் மகாபலிபுரத்தை விட்டு விலகிய நிலையில் சந்தானத்துக்கு திரும்பவும் ஒரு போன் வந்தது.

''சொல்லுய்யா...''

''.........................''

''என்னய்யா என்னென்னமோ சொல்றே. நாம எந்த காலத்துலய்யா இருக்கோம்?''

‘‘..................’’

‘‘சரி... சரி... இந்த விஷயம் மீடியாவுல வந்துடாதபடி பாத்துக்குங்க. எருமை பலி - விசேஷ யாகம் - மத்திய மந்திரி தொடர்புன்னு விஷயம் வெளிய கசிஞ்சா அவ்வளவு பேரும் கேமராவோட வந்து நிப்பாங்க. கேள்வியா கேட்டு போலியா ஒரு பயங்கரத்தை உருவாக்கிடுவாங்க. அப்புறம் கேக்கவே வேண்டாம். ஒரு நாலு பேர் டி.வி.ல உக்காந்து பிரிச்சு மேயத் தொடங்கிடுவாங்க. அப்புறம் டாப்ல இருந்து நமக்குத்தான் டார்ச்சர் வரும். என்னவோ நாமதான் அந்த நாலு பேருக்கு நாற்காலி தூக்கிப் போட்டு உட்காரச் சொன்னோம்ங்கற அளவுக்கு டி.ஜி.பி. புலம்ப ஆரம்பிச்சிடுவார்...’’

பேசி முடித்து போனை டேஷ்போர்டு மேல் உள்ள ஸ்டாண்டில் வைத்தார். அப்படியே கண்ணாடி வழியாக வள்ளுவரையும், கணபதி சுப்ரமணியனையும் பார்த்தபடி தன் மீசையை நீவிக்கொண்டார்.

கணபதி சுப்ரமணியனிடம் ஒரு குறுகுறுப்பு.

‘‘என்ன சார்... பெருசா ஏதோ கான்ட்ரவர்சி போல இருக்கு?’’

‘‘ஆமாம் சார்... உங்கள கடத்தின பாவிங்க ஒண்ணும் லேசுப்பட்ட ஆளுங்களா இல்லை. பலி, பூஜை, யாகம்னு எல்லாம் பண்ணியிருக்காங்க போல இருக்கு!’’

‘‘அப்ப ஏதாவது கோரிக்கை கட்டாயம் இருக்கணுமே?’’ - என்று வள்ளுவர் இடையிட்டார்.

‘‘ஏதோ அபூர்வமான ஒரு விஷயத்துக்காகன்னு மட்டும் தெரியுது. யாகத்தை செல்போன் கேமராவுல படம் பிடிச்சி சிலருக்கு வாட்ஸ்

அப்ல அனுப்பியிருக்காங்க. அதுல சென்ட்ரல் மினிஸ்டரும் ஒருத்தர்...''

''மந்திரிகள் பதவிக்கு ஆபத்து வரக்கூடாதுன்னு யாகங்கள் செய்யறது சகஜம்தானே?''

''அதை ஏன் ரகசியமா செய்யணும்? அப்புறம் அதை தமிழ்நாட்டுல வந்து சென்னைக்குப் பக்கத்துல திருவாலங்காட்டு சுடுகாட்டுல வெச்சு எதுக்கு பண்ணணும்?''

''திருவாலங்காடு பழமையான தலமாச்சே?''

''சரி... ஏதோ யாகம் செய்தாங்கன்னு அதை விட்ருவோம். இவங்க எதுக்கு உங்களைக் கடத்தணும்?''

''அதான் புதையல் எடுக்கன்னு நான்கூட சொன்னேனே சார்...''

''உங்களுக்கு ஒரு உண்மை தெரியுமா சார்..?''

''என்ன சார்?''

''இந்த ஆக்சிடென்ட்டே கூட தற்செயலா நடக்கலை. அதுக்குப் பின்னால சூழ்ச்சி இருக்கற மாதிரி தெரியுது...''

''வாட்..?''

''ஆமாம் சார்... அவங்க நடத்தின அந்த யாகம், அப்புறம் உங்கள கடத்தினதுன்னு சகலத்தையும் அவங்களுக்கே தெரியாம வேற ஒரு குரூப் பார்த்துக்கிட்டே இருந்திருக்காங்க... அவங்கதான் மாடை குறுக்க விட்டு ஆக்சிடென்ட் பண்ணியிருக்காங்க!''

‘‘இதெல்லாம் எப்படி அதுக்குள்ள உங்களுக்குத் தெரிய வந்துச்சு ஆபீசர்?’’

‘‘இப்ப எங்க டிபார்ட்மென்ட் பெருசா நினைக்கறது ஏ.கே.47 துப்பாக்கியையோ... இல்ல, மாடர்ன் ரிவால்வர்களையோ இல்ல சார். எங்களோட முதல் நண்பனே சி.சி.டி.வி கேமராக்கள்தான்..!’’

‘‘ஓ... அப்ப எந்த கேமரா மூலம் உங்களுக்கு இதெல்லாம் தெரிய வந்தது?’’

‘‘அதெல்லாம் சீக்ரெட்... அவ்வளவு டோல்கேட் கேமராவுலயும் நீங்க பயணம் செய்த காரும், உங்களை ஃபாலோ பண்ண காரும் பதிவாகியிருக்கு சார்!’’

‘‘அப்ப அந்த குரூப்பை பிடிச்சிடலாம் இல்லையா?’’

‘‘பிடிச்சாதானே முடிச்சு அவிழும். இதுல உங்களை தீவிரமா கண்காணிக்கச் சொல்லி வேற உத்தரவு...’’

‘‘நான் என்ன அவ்வளவு தூரத்துக்கு ஆபத்தானவனா?’’

‘‘நீங்க ஆபத்தானவர் இல்லை சார்! ஆபத்துல ,மாட்டிடக்கூடாதுன்னுதான் இந்தக் கண்காணிப்பு. இப்ப நம்ம காரைக்கூட அந்த குரூப்பைச் சேர்ந்த யாராவது ஃபாலோ பண்ணிக்கிட்டே இருக்கலாம்.’’

‘‘என்ன சார் பீதியைக் கிளப்பறீங்க?’’

‘‘எச்சரிக்கறேன் சார். நடந்து முடிஞ்சது தினமும் வழக்கமா நடக்கற பல ஆக்சிடென்ட்கள்ல ஒண்ணு இல்லை. கிட்டத்தட்ட கொலை... இறந்தவங்களும் தப்பு செய்தவங்க. அதனாலதான் இதுக்குப் பின்னால பயங்கரமா ஏதோ ஒரு திட்டம் இருக்கற மாதிரி தெரியுது.’’

அந்த போலீஸ் ஆபீசர் சந்தானம் சொல்லச் சொல்ல, கணபதி சுப்ரமணியனுக்கு நிஜமாலுமே வயிற்றைக் கலக்கியது. வள்ளுவர் பக்கம் திரும்பியவர், ‘‘வள்ளுவரே... சார் சொல்ற மாதிரி நமக்கு ஆபத்தா? இல்ல, இது வழக்கமான போலீஸ்காரங்களோட சந்தேகமா? உங்க ஜோசியத்துல இதுக்கு எதுவும் விடை கிடைக்குமா?’’ - என்று கேட்டார். சந்தானமும் பின் பக்கம் திரும்பி ‘‘ஓ... இவர்தான் வள்ளுவரா?’’ என்றார்.

‘‘இவரைப் பத்தி நீங்களும் கேள்விப்பட்டிருக்கீங்களா?’’

‘‘வள்ளுவர்னு இப்ப யார் பேர் வச்சுக்கிறா! அதனால ஒரு தடவை கேட்டாலே மனசுல தங்கிடற பெயர் இது. கொஞ்சம் முந்தி யாரோ டிபார்ட்மென்ட்ல இந்தப் பேரைச் சொல்லி பேசினாங்க. ஆமா, நீங்க ஜோசியம் பார்ப்பீங்களோ?’’

‘‘அதானே இவங்கதொழிலே!’’

‘‘உங்களுக்கு எப்படி பழக்கம்?’’

‘‘நான் இவர்கிட்ட என் ஜாதகத்தைக் காட்டி ஜோசியம் பார்த்தேன். அப்ப ‘உங்களுக்கு கண்டம் இருக்கு’ன்னு சொல்லியிருந்தாரு. அதே போல விபத்து ஏற்படவும், கேள்விப்பட்டு பாக்கவே வந்துட்டாரு. இல்ல வள்ளுவரே..?’’

- கணபதி சுப்ரமணியன் புதிய செய்தி ஒன்றை எடுத்துக் கொடுத்து, ‘இதை வைத்து அப்படியே ஆமோதிப்பது போல பேசுங்கள்’ என்பது போல எடுத்துத் தர, வள்ளுவரும் ஆமோதித்தார்.

‘‘பரவால்லியே... எனக்கு புரமோஷன் எப்ப கிடைக்கும்னு சொல்ல முடியுமா உங்களால?’’ - என்று கேட்டார் சந்தானம்.

‘‘பிறந்த நாள், நேரம், இடம் மட்டும் சொல்லுங்க - நான் முயற்சி செய்து பார்க்கறேன்’’ என்றார் வள்ளுவர்.

‘சென்னை வீட்டை அடைய எப்படியும் அரை மணி நேரத்துக்கு மேலாகும். அதற்குள் அவரை வசப்படுத்தியது போலவும் இருக்கும்’ என்பது போல சந்தானத்திடம் வள்ளுவர் கேட்க, அவரும் விவரங்கள் கூறினார். வள்ளுவரின் ஆண்ட்ராய்டு போனில் சந்தானத்தின் ஜாதகமே உருவாகத் தொடங்கி விட்டது! கணபதி சுப்ரமணியனோ ‘ஒரு கோஷ்டிக்கு இரண்டு கோஷ்டிகள்’ என்று சந்தானம் சொன்ன அந்த கோஷ்டிகள் குறித்த பயத்திலேயே இருந்தார். ப்ரியாவும், வர்ஷனும் ஏட்டுக்கட்டை கம்ப்யூட்டரில் ஏற்றி முடித்திருப்பார்கள் என்றும் நம்பியவர் ‘காலப்பலகணியைத் தேடிடும் நம் பயணம் எப்படித் தொடங்கப் போகிறதோ, தெரியவில்லையே?’ என்று கலங்கிப் போயிருந்தார்.

ஆபீசர் சந்தானம் கூறியதைப் போலவே அந்த போலீஸ் காரை ஒரு ஐம்பது மீட்டர் இடைவெளியில் ஒருவன் ஹெல்மெட் அணிந்திருந்த நிலையில், சாதாரணமாக சாலையில் பயணிப்பவன் போல தொடர்ந்து கொண்டிருந்தான்!

வள்ளுவர் தன் ஆண்ட்ராய்டு போனில் சந்தானம் ஜாதகக் கட்டத்தை உருவாக்கி முடித்தார். அது தந்த செய்தி வள்ளுவரைத் திகைக்கச் செய்தது. சந்தானத்துக்கு ஆனாலும் அநியாயத்துக்கு அற்ப ஆயுள்! அதை தனக்குள் மறைத்துக் கொண்டவர் ‘‘சார்... உங்களுக்கு புரமோஷன் நிச்சயம்’’ என்றார்.

சந்தானத்திற்கு அதைக் கேட்க சந்தோஷமாயிற்று... காரும் நகரச் சந்தடிக்குள் நுழைந்து கொண்டிருந்தது.

* * *

அந்த மலைத்தலத்தில் திரும்பின பக்கமெல்லாம் அடர்வான மரங்கள். சாம்பிராணி புகை போட்டது போல பனி படர்ந்திருந்தது. அதனூடே ஒரு மூங்கில் கூடையில் அபூர்வமான மரங்கள் சிலவற்றின் பிசின் மற்றும் வேர்த் துண்டுகளைச் சேகரித்தபடியே நடந்து கொண்டிருந்தான் ஈங்கோய்!

சடை பிடித்த தலை, கருத்த உடம்பு, மதர்த்த தோள் பட்டை என்று பளியர் இனத்தின் ஒரு அக்மார்க் பிரதிநிதியாக விளங்கியவன், அங்கே மண்டைப்பாறை என்று அவர்கள் பேச்சு வழக்கில் அழைத்துக் கொள்ளும் பாறை மீது தன் பார்வையைப் பதித்தான். அங்கே பாறைமேல் வெள்ளை நிறத்தில் எந்த வகை இனம் என்றே தெரியாத விதத்தில் ஒரு பறவை வந்து அமர்ந்துகொண்டு, விரிந்த அந்த வனப்பகுதியைப் பார்ப்பதை அவன் கவனித்தான். அடுத்த நொடி அவனுக்குள் நந்தி அடிகள் நினைவுதான் வந்தது. அவர்தான் தன் குகைக்குள் அந்தப் பறவையை அப்படியே வரைந்து வைத்திருந்தார்!

36

ஒரு மனிதனின் உடலில் இருந்து உயிர் பிரிவது... அதன்பின் அது ஆத்மா என அழைக்கப்படுவது... அதற்கு வடிவமுண்டா? அதற்கு பசி, தாகம் எல்லாம் உண்டா? - இப்படி என்னுள் எழும்பிய பல கேள்விகளை நான் ஜோசப் சந்திரனிடமும் கேட்டேன். இம்மட்டில் ஜோசப் ஒரு அரிய விளக்கத்தை அளித்தார் என்றுதான் சொல்வேன்.

‘கணபதி சுப்ரமணியன்... நம்முடைய ஆய்வுகளிலும் தேடல்களிலும் நமக்கு அதிகம் கிடைத்தவை முதுமக்கள் தாழிகளும், அவர்களின் எலும்புக்கூடுகளும்தான். நாகரிக வளர்ச்சி இல்லாத அந்தக் காலத்திலேயே, இறந்து பிணமானவர்களை தூக்கி எறிந்து விடாமல் பூமிக்குள் புதைத்துள்ளனர் மனிதர்கள். இன்றுகூட நாம் அப்படியேதான் புதைக்கிறோம். ஆனால் அன்று ஒரு தாழிக்குள் உடம்பைப் புகுத்தி தாழியைத்தான் புதைத்தனர். இறந்துவிட்ட பிணத்தை அலட்சியமாகக் கருதாமல், அந்த உடம்புக்கு தங்களுக்குத் தெரிந்த விதத்தில் அவர்கள் தந்த மரியாதைதான் அது என்று தாராளமாகக் கூறலாம். அது மரியாதை மட்டுமல்ல... இறப்புக்குப் பிறகு இறந்தவர் என்றாவது ஒருநாள் எழுந்து வரலாம் என்று கூட தொடக்கத்தில் நினைத்திருக்கவும் வாய்ப்பு உள்ளது. பின்பு காலப்போக்கில் அறிவு வளர்ந்து, அம்மட்டில் ஒரு சடங்கும் உருவானது. இந்த விஷயத்தில் பார்சிகளைத் தவிர மற்ற மதத்தவர்கள் இறந்த உடம்பை குப்பை என்றும் மாமிசம் என்றும் கருதுவதில்லை. அதை மதிக்கப் போய்தான் சமாதி எழுப்புவது முதல், அங்கே அவர்களை நினைத்து அஞ்சலி செலுத்துவது என எல்லாமும் தோன்றியது.

ஒரு நெடிய காலம் கூடவே வாழ்ந்த ஒரு மனிதன், மரணம் என்கிற ஒன்றால் அறவே இல்லாது போகிறான் என்கிற விஷயத்தை ஒரு மனதால் ஏற்க முடியவில்லை.

வாழ்வு என்பது மிக நீண்ட காலகதி! உயிரின் பிரிவு என்பது சில நொடிகளில் நடக்கும் நிகழ்வு! அது எப்படி ஒரு நீண்ட காலகதி, ஒரு சில நொடிகளில் ஒன்றுமில்லாமல் போகும்? போகவும் முடியும்? இந்தக் கேள்வியில்தான் உயிரின் அந்த மறுபக்க மர்மமும் நமக்குள் விரிகிறது...' – என்று சொல்லிக்கொண்டே சென்றவர், 'எனக்கு பலமாக ஒரு கருத்து உள்ளது – இது என் தனிப்பட்ட கருத்து' என்றார். 'எதுவாக இருந்தாலும் கூறுங்கள்' என்றேன்.

'இது மிக ஏற்றத்தாழ்வுள்ள சமுதாயம். தொடக்கத்தில் இந்த ஏற்றத்தாழ்வு இருந்திருக்கும் என்று கருதுகிறீர்களா?' எனக் கேட்டார்.'நிச்சயம் இருந்திருக்க வாய்ப்பில்லை... ஏற்ற இறக்கம் என்பதே மனிதர்களின் எண்ணிக்கை மிக அதிக அளவு அதிகரிக்கும்போதுதான் தோன்ற முடியும். அடுத்தவர் மீது ஆதிக்கம் செலுத்த முனையும்போதுதான் தோன்ற முடியும்' என்றேன் நான். 'சரியாகச் சொன்னீர்கள்... இந்த ஏற்ற இறக்கம் என்பதுதான் பாவம் – புண்ணியம் என்கிற இரண்டாகவும் உள்ளது. உண்மையில் 'பாவம் என்றால் செயல், புண்ணியம் என்றால் விளைவு!' என்றே விளங்கிக்கொள்ள வேண்டும்.

எந்த ஒரு செயலுக்கும் பதில் விளைவு என்கிற ஒரு விஷயம் உண்டு. இந்த இரண்டும் இல்லாமல் ஒருவர் வாழமுடியாது. நற்செயலுக்கு நல்விளைவு; தீயசெயலுக்குத் தீயவிளைவு என்று இதைத் தெளிவாக்கிக் கொள்ளலாம். இந்த செயல் + விளைவுக்குப் பின்னேதான் மனிதனின் ஆத்மா சிக்கிக் கிடக்கிறது.

இதை இந்த இரண்டிடம் இருந்தும் மீட்பதுதான் எந்தச் செயலும் இல்லாத தவம். தவத்தில் மனிதன் நல்லதோ, கெட்டதோ எதையும் செய்வதில்லை. மாறாக இஷ்ட தெய்வ நினைவு மட்டும் கொண்டவனாக இருக்கிறான். எனவே அந்த நினைவுக்குரிய தெய்வத்தை தவத்துக்கான பரிசாக அடைகிறான். இவ்வாறு தவம் செய்யாதவர்களான செயல் மற்றும் விளைவுக்குரிய மனிதர்கள், தங்கள் செயல்பாட்டிற்கு ஏற்ற விளைவை அனுபவிக்கும் விதமாக பிறப்பெடுக்கிறார்கள். ஆத்மா அதற்கேற்ப பயணம் செய்கிறது. இம்மட்டில் ஆத்மாவுக்கு அறிவும் ஆற்றலும் இருந்தால் அல்லவா அது சாத்தியம்?'

– என்று ஜோசப் சந்திரன் கேட்ட கேள்வி என்னையும் சிந்திக்க வைத்தது. அவர் தொடர்ந்தார்... 'கணபதி! நம்மில் பிறக்கும்போதே எவ்வளவு ஏற்றத்தாழ்வு? ஏழை, பணக்காரன், கறுப்பு, சிவப்பு, ஒல்லி, குண்டு என்று ஒரு குழந்தை பிறக்கும்பொழுதே ஏற்றத் தாழ்வுடன் பிறக்க கடவுள் எப்படிக் காரணமாக முடியும்? கடவுள் ஏற்றத்தாழ்வுடனா படைப்பார்? அப்படிப் படைத்தால் நாம் அவரைக் கடவுள் என்று மதிப்போமோ?' – அடுத்து அவர் கேட்ட கேள்வியும் ஆணித்தரமாய் விளங்கிற்று!"– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அந்தப் பறவை ஈங்கோயை மிகவே கவனிக்க வைத்தது. நின்று கூர்ந்து பார்த்தான். அந்தப் பறவையும் சில நிமிடங்கள் அமர்ந்த நிலையில் தன் சிறகுகளை விரித்து படபடத்துக் கொண்டது. பின் வானில் ஏறிப் பறக்கத் தொடங்கிவிட்டது. ஈங்கோய் தன் மூங்கில் கூடையைத் தூக்கிக் கொண்டான். அது அவன் தலையில்

ஏறிக்கொள்ள, அவன் தோளில் ஒரு நூல் பை தொங்கியபடி இருந்தது.

அவன் அந்த வனப்பரப்பில் சற்றே நடந்து நடந்து உருவான ஒரு ஒற்றையடிப் பாதை போன்ற தடத்தில் நடக்கத் தொடங்கினான். நடக்கும்போது இடையூறு ஏற்படாதபடி வேட்டியை வீரகச்சமாக கட்டிக் கொண்டிருந்தான். அந்த நாளில் விளையாடும்போது மடித்துக் கட்டிக் கொள்வதையே வீரகச்சம் என்பார்கள். குறிப்பாக மல்யுத்தத்தின்போது வீரகச்சம்தான் தோது!

அவனது ஆடை மிக வெளுப்பாய் தூய்மையாக இருந்தது. வனவாசி ஒருவன் தூய வெள்ளாடையை உடுத்துவது ஒரு ஆச்சரியமான விஷயம். காரம் போட்டுத் துவைத்தால்தான் வெள்ளை தங்கும். ஈங்கோயின் மேனிமேல் நிறைய பச்சை குத்தப்பட்டிருந்தது. நெற்றியிலும் புருவ மையத்தில் சூரியன் போல் பச்சை ெபாறிக்கப்பட்டிருந்தது. அவன் தன் தலைமுடியை சிரசுக்கு மேலே கூம்பு போலாக்கிக் கட்டியிருந்தான். முனிவர்களின் ஜடாமுடி கோபுரம் போல அது இருந்தது. அவன் உடம்பு நல்ல வாளிப்போடு கட்டுமஸ்தாக காணப்பட்டது. சரியான உயரத்தில் சரியான சதைக் கட்டுகளோடு அவன் காணப்பட்டான்.

அவன் நடந்து செல்லும் வழியில் ஆங்காங்கே இன்று மனிதர்கள் அதிக அளவில் பயன்படுத்திவிட்டு வீசி எறியும் பேப்பர் கப்புகளும் கூல்ட்ரிங்ஸ் பாட்டில்களும் கிடந்தன. அதை எல்லாம் அவன் தன் தோளில் தொங்கும் பைக்குள் போட்டுக்கொண்டே நடந்தான்.

ஓரிடத்தில் மலைப்பாம்பொன்று தன் நடுவயிறு மிகப்பருத்த நிலையில் வரையாட்டுக் குட்டி ஒன்றை விழுங்கி விட்டு அதை ஜீரணிக்கப் போராடியபடி இருந்தது. ஈங்கோய் அதன் தலை

அருகேயே சென்று நின்றவனாக அதைக் கூர்ந்து பார்த்தான். அதுவும் தன் மாதுளை முத்து போன்ற விழிகளால் அவனைப் பார்த்தது. அது பன்னிரண்டு அடி நீளத்தில் இருந்தது. அதன் மேனிமேல் மஞ்சள், வெள்ளை, கறுப்பு எனும் நிறங்களில் பூ இதழ்களைக் கசக்கிப் போட்டதுபோல ஒரு தோற்றம். எண்ணெய் பூசியது போல ஒரு மினுமினுப்பு வேறு. அந்த நொடி அவனுக்குள் சிருஷ்டி குறித்த ஒரு எண்ணம் தோன்றியது. கூடவே நந்தி அடிகளும் அவன் மனக்கண்ணில் தோன்றினார்.

ஈங்கோயின் தலைச்சடையில் ஒரு காலத்தில் நிறைய ஈருகள் இருந்தன. அவை முற்றி பேனாகவும் ஆகிவிட்டிருந்தன. அதை ஈருவாளி எனும் மரச்சீப்பால் வாரி, சீப்பின் பல்லிடுக்குகளில் அதைச் சிக்கச் செய்து பின் அந்த இடுக்கை நசுக்கிட அந்த பேன் பட்டென்ற சப்தத்தோடு உடம்பு வெடித்துச் செத்துப் போகும். அவனுக்கு ஏனோ அந்த சப்தம் மிகப் பிடிக்கும். அதை ஒரு நாள் கவனித்த நந்தி அடிகள், ''அந்தப் பேன் உன்னை என்ன செய்தது? எதற்கு இப்படி அதை நசுக்கிக் கொல்கிறாய்? இதில் அதன் உடல் வெடிக்கும் சப்தத்தை ரசிக்க வேறு செய்கிறாயே...

பதிலுக்கு உன் உடம்பில் வெடிப்பு ஏற்பட்டு துன்பப்படுவாயே... அப்போது என்ன செய்வாய்?'' - என்று கேட்கவும் ஈங்கோய்க்கு சற்று அதிர்ச்சியாகி விட்டது. திருதிருவென விழித்தான். அப்போது சில பேன்கள் தரையில் ஓடத் தொடங்கின. அதில் ஒன்றை தன் ஆட்காட்டி விரல் நுனியால் ஒத்தி எடுத்த நந்தி அடிகள் தன் உள்ளங்கையில் விட்டு தன் நரைத்த தாடி நெகிழ கண்கள் மினுங்க பரவசப்பட்டுப் போனார். அவர் கைகளின் ரேகைக்கோடு கள் மேல் அந்த பேன் இப்படியும் அப்படியும் ஓடியது.

‘‘பாத்தியா..? வாழத் துடிக்குது இது! நம் வரைல இது எவ்வளவு சின்னது... ஆனா இதுக்குள்ளேயும் வாய், வயிறு, கை, கால்னு உறுப்புகள். பிரம்ம சிருஷ்டியை என்னன்னு சொல்றது?’’ - என்று கேட்டிருந்தார்.

‘‘ஆமாம் சாமி... இதனால எல்லாம் என்ன பிரயோஜனம் சாமி! இது வாழ்ந்து என்ன பண்ணப் போகுது?’’ என்று அப்போது தனக்குத் தோன்றியதைக் கேட்டான் ஈங்கோய். அப்போது ஒரு மெல்லிய கோபம் நந்தி அடிகள் முகத்தில் தென்படலாயிற்று.

‘‘என்ன ஈ... (அவர் இப்படித்தான் அழைப்பார்) நீயும் நானும்தான் பிரயோஜனப் பிறப்பா? இது இந்த பூமிக்கு பாரம்னு தோணுதா...?’’ - என்றும் கேட்டார். ஈங்கோய் மௌனம் காத்தான்.

‘‘இதெல்லாம் பொறக்கவே நாமதான் காரணம்! நம்ம செயல்பாடுகள்தான் காரணம். குறிப்பா நம்ம சித்தமும் அதுக்குள்ள அலையற எண்ணங்களும் காரணம்... உனக்கு சொன்னா புரியாது. நீ இன்னும் மனம் கட்டப் பழகலை... இப்பதான் சுவாசம் கட்டப் பழகியிருக்கே! நீ இன்னும் ரொம்ப தூரம் போகணும். சுருக்கமா ஒரு விஷயத்த சொல்லிடறேன்... புரிஞ்சிக்க முடிஞ்சா புரிஞ்சிக்கோ! நம் தலைக்கு மேல உயிர்கள் வாழறது ஒரு கர்ம அமைப்பு. உன் கபாலம் ஞான விழிப்போட இல்லை - பாவ புண்ணிய கர்மக்கட்டுக்குள்ள இருக்குன்னு அர்த்தம். நீ யோகத்துக்கு மாறும்போது அது தானா உன்னை விட்டுப் போய் உன் முடிக்கூட்டம் பிரபஞ்ச சக்தியை ஆகர்ஷிக்கற சக்திக் கரமா மாறிடும். தலைமுடியை சாதாரணமா நினைக்காதே.

உள்ள இருக்கறது உயிர் - மண்டைல இருக்கற உயிர்தான் மயிர். இதைக் கேசம்னு சொல்வாங்க. ரோமம்னும் சொல்வாங்க. கேசம்ங்கற

வார்த்தை சிவா, விஷ்ணு, பிரம்மாங்கற மூணு பேரோட கூட்டுறவுச் சொல். நீ மாணவனா என் கணிதவாடில படிக்கறவனா இருந்திருந்தா கல்பலகைல எழுதிக் காட்டி விளக்கியிருப்பேன். இல்லாமப் போயிட்டே... ப்ச்!''- அன்று அவர் ஒரு பேனைத் தொட்டு இப்படி எங்கெங்கோ போய்விட்டார். அதை எல்லாம் எண்ணியபடியே அந்த மலைப்பாம்பை விட்டு விலகி நடக்கத் தொடங்கிய ஈங்கோயின் நடை மிக வேகமாகி, மலையின் அடிவாரப் பரப்பை அடைந்தது.

அடிவாரத்தில் ஆங்காங்கே கண்டு கண்டாய் பாறைகள்... அவற்றில் எண்கள், எழுத்துகளின் பொறிப்பு! அடிவாரத்தில், அந்த மலை மேல் பொழியும் மழை நீரெல்லாம் வந்து தேங்கும் சுனைப் பரப்பொன்று... அதில் அல்லியும் தாமரைகளும் கலந்து வளர்ந்திருந்தன. அருகாமைப் பாறையில் முக்கோண வடிவில் தேன்கூடுகள் கட்டப்பட்டிருந்தன. சுனை நீருக்குள் கழுத்தளவு பாகம் மட்டும் ெவளித் தெரிய தன் நீண்ட தலை முடிக் கூட்டம் சுனை நீரில் மிதந்தபடி இருக்க, ஒருவகை தியானத்தில் இருந்தார் நந்தி அடிகள்.

ஈங்கோய் அவர் கண் விழிக்கும் வரை காத்திருக்கும் முடிவோடு எதிரில் ஒரு பாறை நிழலில் போய் குத்துக் காலிட்டு அமர்ந்து கொண்டான். கூடை அவன் அருகில் அமர்ந்தது!

* * *

பங்களாவுக்குள் நுழைந்த அந்த போலீஸ் வாகனம், வாட்ச்மேன் தங்கவேலு முகத்தில் சலன ரேகைகளை உருவாக்கிட, உள்ளிருந்து கணபதி சுப்ரமணியனும் வள்ளுவரும் அந்த போலீஸ் ஆபீசர்

சந்தானத்துடன் இறங்கினர். வள்ளுவரை மறுபடியும் பார்த்ததில் தங்கவேலுவுக்கு மேலும் அதிர்ச்சி.

“போச்சுடா… இந்த ஆள் விடமாட்டான் போலத் தெரியுதே…” என்று முணுமுணுத்தான். அப்படியே அந்த போலீஸ் கார் சந்தானத்துடன் திரும்ப வெளியேறத் தொடங்கவும், பாதி மூடிய கேட்டை அவசரமாகத் திரும்பவும் திறந்தான். வள்ளுவர் காரில் திரும்பிச் சென்ற சந்தானத்தையே பார்த்தபடி போர்ட்டிகோவில் நின்றிருக்க, கார் புகையைப் பரப்பியபடி மறைந்தது. தங்கவேலுவும் கேட்டை இழுத்து மூடினான்.

வள்ளுவர் அப்படிப் பார்ப்பதில் ஏதோ அர்த்தம் இருப்பது போலத் தோன்றியது கணபதி சுப்ரமணியனுக்கு…

“என்ன வள்ளுவரே… அப்படிப் பாக்கறீங்க?”

“ஹூம்.. என்னத்த சொல்ல? சுபமா எதுவும் கண்ணுல பட மாட்டேங்குது. காதுலயும் விழ மாட்டேங்குது. சில நேரம் நம்ம காலவெளி இப்படி அமைஞ்சிடுது” என்று புதிர் போலப் பேசினார். கணபதி சுப்ரமணியனுக்குப் புரிந்து விட்டது!

37

“ஜோசப் சந்திரனின் கேள்வி எனக்குள் பலவிதமான விஷயங்களில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இந்த உலகையும் அதில் நம்மை எல்லாமும் படைத்த கடவுள், எல்லா மதத்தவர்களாலும் மிகக் கருணையுள்ளவராகத்தான் உணரப்படுகிறார். அப்படி இருக்க, ஒரு பிறப்பை நமக்குத்

தரும்போதே அதில் ஏற்றத்தாழ்வை அவர் எப்படி தருவார்? ஆனால் ஏற்றத்தாழ்வோடுதான் பிறப்பே ஏற்படுகிறது.

பிறந்துவிட்ட எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்து விடுவதுமில்லை. எனவே ஏற்றத்தாழ்வுக்குப் பின்னால் கடவுள் இருக்க வாய்ப்பில்லை என்பதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டேன். ஜோசப் தன் சிந்தனையில் இன்னமும் பல படிகள் மேலே போகத் தொடங்கினார்.

‘கணபதி… இந்த உலகில் விஞ்ஞானம் என்று தனியாக இருப்பதாகக் கருதுவது கூட மடமை. இங்கே எல்லாமே விஞ்ஞானம்தான். விஞ்ஞானம் இல்லாமல் ஒரு அணு கூட அசைய முடியாது. ஆகையால் விஞ்ஞானமாக ஒன்று, விஞ்ஞானமற்று ஒன்று என இரண்டுவிதங்கள் இருப்பதாக எழும் எண்ணமே கூட தவறானது. எல்லாமே விஞ்ஞானம் என்று நான் கூறிடும்போது அதை ஏற்பதற்குச் சிரமமாக இருக்கும். சிரமமாக சிலருக்கு இருக்கிறது என்பதால் உண்மை பொய்யாகி விடாது’ என்றார்.

‘ஜோசப்… நாம் இப்போது ஒரு தெளிவான முடிவை எடுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

ஆனால் அதற்கு மாறாக நிறைய தர்க்க விவாதம் செய்து கொண்டிருக்கிறோம். கஞ்சமலை விஷயம் எனக்குப் புதிராகவே இந்த நொடி வரை உள்ளது. எனக்கு அம்மட்டில் தெளிவான புரிதல் தேவை. ஊனுடம்பு இல்லாமல் ஒரு உயிர் வசிக்க முடியுமா? அது தனக்கென ஆசாபாசங்கள் கொண்டு செயல்படுமா? இதற்கு சுருக்கமாக பதில் கூற முடியுமா?’ என்று நான் இறுதியாகக் கேட்டேன்.

'முயற்சிக்கிறேன்' என்ற ஜோசப் தொடர்ந்தார்... 'நம் வாழ்வு மிக பௌதீகமானது. புலன்களை ஆதாரமாகக் கொண்டது. முதலில் நாம் ஒரு திரவச் சொட்டாகத்தான் இருந்தோம். காலத்தால் பருவுடல் தோன்றி, அதுவும்கூட மரணத்தில் சிதை மாற்றம் அடைவது வரை நமக்கு எல்லாமே புரிகிறது. இம்மட்டில் முன்னும் பின்னும்தான் புரியாத புதிராக உள்ளது.

அதாவது நாம் திரவச் சொட்டாக இருப்பதற்கு முன், இறந்து சிதைந்து விட்டபின்... என்று இந்த இரு விஷயங்களில்தான் தெளிவான புரிதல் இல்லை. இம்மட்டில் நான் ஒரு தெளிவான முடிவுக்கு எப்போதோ வந்து விட்டேன். நிச்சயமாக நம் வாழ்வு ஒரு தொடர்ச்சியான விஷயமே... மரணத்துக்குப் பிறகு உயிரானது சுவேத உடம்பு எனும் ஒரு உடம்புக்கு ஆளாகிறது என்று உங்கள் புராணங்கள் வாயிலாக அறிந்தேன். அப்படி ஒரு உடம்பு இல்லாவிட்டால் நான் சார்ந்த மதத்து ஏசுநாதரும் உயிர்த்தெழுந்து புதுப்பொலிவோடு வந்திருக்க முடியாது.

எனவே, கஞ்சமலையில் சுவேத உடம்போடு சித்தர்கள் திரிகின்றனர். நாம் இந்த உடம்போடு நலமாக வாழ மரம் நடுவது, சுற்றுச்சூழலை நல்லவிதமாக வைத்துக்கொள்வது என்று செயல்படுவது போல, சுவேத உடம்புக்கும் நோக்கங்கள் இருக்கலாம். அதில் ஒன்றுதான் தங்கம் உள்ள பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பது' – எனக்கு ஒரு தெளிவான பதிலை ஜோசப் கூறிவிட்டார். அதை ஏற்பதும் ஏற்காததும் என் விருப்பம் என்றும் கூறிவிட்டார்.

அடுத்து அவர் கூறியதுதான் உச்சம். 'கணபதி.... இந்த உலகில் எல்லாமே ஒரு கணக்குக்கு உட்பட்டே தீர வேண்டும். இங்கே எல்லாமே கணக்கு. கணக்குதான் எல்லாம். ஒரு மரம் – அதன்

கிளைகள் – கிளைகளில் இலைகள் – அந்த இலைகளின் நரம்புகள் என்று எல்லாமே கணக்கு. கணக்கு என்பதோ சூத்திரங்கள் கொண்டது. எப்பேர்ப்பட்ட கணக்கிற்கும் சூத்திரம் இருந்தே தீர வேண்டும். அந்த சூத்திரம் மட்டும் தெரிந்துவிட்டால் நாம் கடவுளாகிவிட முடியும். அதன்பின் நமக்குத் தெரியாத ரகசியமே இந்த உலகத்தில் இல்லை' என்று கணக்கிடம் வந்து நின்றார்.

ஏதோ சொல்கிறார் என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால் அந்த கணக்கை வைத்து ஒரு மல்லிகைக் கொடியைக் காட்டி அதைச் சுற்றி வந்து கவனித்தவர், கால்குலேட்டர் எடுத்து ஏதேதோ கணக்கைப் போட்டுவிட்டு இறுதியாக என்னிடம், 'இப்போது இந்தக் கொடியில் 650ல் இருந்து 670க்குள் பூக்கள் இருக்கின்றன. எண்ணிப் பாருங்கள்' என்றார். பின் அவரே என் எதிரில் எண்ணினார். நம்புங்கள்... 663 பூக்கள் இருந்தன!'' – கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

கணபதி சுப்ரமணியனின் முகம் அந்தப் புரிதலைத் தொடர்ந்து மாறியது. ஆனால் எதுவும் பேசவில்லை. இருவரும் வீட்டுக்குள் நுழைந்தனர். பத்மாசினியும் அனந்தகிருஷ்ணனும் ஹாலிலேயே அமர்ந்திருந்த நிலையில் திரும்பினர். பத்மாசினி வள்ளுவரை வெறிப்பதுபோல பார்த்தாள். அப்படியே அனந்தகிருஷ்ணனும்!

வள்ளுவர் அவர்கள் எதிரில் மிக சகஜமாக சோபாவில் அமர்ந்தார்.

கணபதி சுப்ரமணியன் தன் அறை நோக்கிச் செல்லத் தொடங்கினார்.''நீங்க என்ன நினைக்கறீங்கன்னு எனக்குப் புரியுது. நடந்த எதுவும் உங்களுக்குப் பிடிக்கலை. நடக்கப் போறதும்

நல்லவிதமா இருக்கும்னு நீங்க நினைக்கத் தயாராயில்லை. நான் சொல்றது சரிதானே?''அவர்கள் மௌனத்தைக் கலைக்கவே இல்லை.

''பயப்படாதீங்க... இனி உங்க வரையில நீங்க வருத்தப்படற மாதிரி எதுவும் நடக்காது. இதை நான் ஒரு ஆறுதலுக்கெல்லாம் சொல்லலை... ஒரு ஜோசியமாவும் சொல்றேன்!''

''போதும்... நீங்களும் உங்க ஜோசியமும்! நாங்க நிம்மதியா சந்தோஷமா இருந்தோம். எப்போ என்ன நடக்கும்னு தெரியாத அளவு இப்ப குழம்பிப் போய் இருக்கோம்'' - பத்மாசினி படீர் என்று வெடித்தாள். வள்ளுவர் பதிலுக்கு எதுவும் பேசவில்லை. அப்படித்தான் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தவர் போல அவர்களைப் பார்த்தார்.

கணபதி சுப்ரமணியன் மாடியிலிருந்து திரும்பி வந்தபடி கேட்டார்... ''என்ன வள்ளுவரே! என் மருமக மனசு புண்படும்படி பேசிட்டாளா?''

‘‘அதெல்லாம் ஒண்ணுமில்லய்யா... நான்தான் புண்ணாகும்படி நடந்துக்கிட்டு வர்றேன்னு நல்லா தெரியுது!’’

‘‘நீங்க ஒண்ணு! இவங்கள்லாம் எல்லா விஷயத்துலயும் ரொம்ப மேம்போக்கானவங்க. நல்லா சாப்பிடணும், மேக்கப் போட்டுக்கணும், பெருமைப்பட்டுக்கணும். இதுக்கு எந்தக் குறையும் வந்துடக்கூடாது. இவங்க மொத்த வாழ்க்கையே நான் சொன்ன இந்த மூணு விஷயத்துக்குள்ளதான் அடக்கம். ஏதாவது பிரயோஜனமா சாதிக்கணும்ங்கற எண்ணமெல்லாம் கொஞ்சம்கூட கிடையாது. நீங்க வாங்க...’’

கணபதி சுப்ரமணியன் பதில் சொல்வதுபோல் ஒரு வாரு வாரினார். பத்மாசினி பதிலுக்கு அனந்தகிருஷ்ணனைப் பார்த்தாள். ‘இதற்கு நீங்கள் பதில் சொல்கிறீர்களா? இல்லை, நான் சொல்லட்டுமா’ என்பது போல் இருந்தது அந்தப் பார்வை.

‘‘அப்பா... என்ன இது உளறல்? இப்ப நீங்க பிரயோஜனமா எதை சாதிக்கப் போறீங்க?’’ - என்று அவள் பார்க்கவும் அனந்தகிருஷ்ணன் கேட்டார்.

‘‘அதை நான் சாதிச்சுக் காட்டினதுக்குப் பிறகு தெரிஞ்சிப்பீங்க...’’ என்றார் கணபதி சுப்ரமணியன்.

‘‘இப்பதான் உயிர் பிழைச்சு தப்பிச்சு வீட்டுக்கு வந்துருக்கீங்க. பாத்துப்பா...’’

‘‘என்னடா... மிரட்டாம மிரட்டறியா? வலி இல்லாம வலிமை வந்துடாதுடா...’’

‘‘அப்பா! நீங்க தேடற விஷயம் ஒரு மெட்டீரியலா இருந்தா கூட பரவாயில்ல. நடக்கலாம், நடக்காமலும் போகலாம்ங்கற மாதிரியான ஒரு ஜோசியப் புத்தகத்தை...’’

‘‘அது எதுவா இருந்தாலும் சரி... நான் முன் வெச்ச காலை பின் வைக்கறதா இல்லை!’’

‘‘எக்கேடோ கெட்டுப் போங்க... ஆனா அதுல என் பொண்ணை இழுக்காதீங்க!’’ என இடையிட்டாள் பத்மாசினி. கச்சிதமாய் ப்ரியாவும் வர்ஷனும்கூட வந்து நின்றனர்.

‘‘என்ன மம்மி... என் பேர் அடிபடுது?’’

‘‘அடிபடாம? நீ செய்யறதும் ஒண்ணும் சரியில்ல. வர்ஷன், நான் உன்னையும் சேர்த்துத்தான் சொல்றேன்!’’

‘‘புரியுது ஆன்ட்டி... இது ஒரு இன்ட்ரஸ்ட்டிங்கான அசைன்மென்ட். அப்புறம் நாங்க இதை தேடிப் போகல. இதுவாதான் தேடி வந்தது...’’

‘‘என்ன, ‘தேடி வந்தது... ஓடி வந்தது...’ன்னுக்கிட்டு? என்ன நடக்குதுன்னே தெரியாதபடி இதுவரை எத்தனை பேர் செத்துப் போயிருக்காங்க... அதைப் பார்த்துமா இதை விட்டு ஒதுங்கணும்ங்கற எண்ணம் உனக்கு வரலை?’’

‘‘சாரி ஆன்ட்டி... நீங்க இப்ப என்ன சொல்றீங்களோ, நாங்க அப்படியே நடந்துக்கறோம்...’’

‘‘அப்பா... இதை முதல்லயே சொல்றதுக்கென்ன?’’

‘‘சரி... இப்ப சொல்லிட்டேன். ஓகேயா?’’

‘‘குட்... என்னடி, நீ வாயைத் திறக்க மாட்டியா?’’

‘‘ஓ... நான் என் வாயால சொல்லணுமாக்கும்?’’

‘‘அப்ப நீயும் ஒதுங்கிக்கறேன்ங்கறே... சரிதானே?’’

‘‘இல்லன்னா உன் வாய் மூடாதே!’’

‘‘நான் எனக்காக பேசலடி... உன் நல்லதுக்குத்தான் பேசறேன். இதே உன் கேரியர் அசைன்மென்ட்டா இருந்து அதுக்காக ‘யு.எஸ்.போறேன்’னோ, இல்லை ‘சிட்னி போறேன்’னோ சொல்லியிருந்தா நான் ஏன் கவலைப்படப் போறேன்?’’

‘‘ஓகே... ஓகே.... நானும் வர்ஷனும் ஒதுங்கிக்கறோம். நாளைக்கே நீ சொன்ன மாதிரி எங்க கேரியர் அசைன்மென்ட்டுக்காக நாங்க டெல்லி போக முடிவு பண்ணிட்டோம். அதுக்கு நீ எதுவும் சொல்ல மாட்டியே?’’

‘‘ஐயோ... நாளைக்கு என்ன, இன்னிக்கே நீ கிளம்பு. இந்த வீணாப் போன பலகணி, தலகாணின்னு இந்த விஷயத்தை விட்டு நீ விலகினா போதும். மாங்காடு காமாட்சிக்கு நான் எலுமிச்சம்பழ மாலை சாத்தறேன்னு வேண்டிக்கிட்டது வீண் போகலை...’’

‘‘ரைட் ப்ரியா... ரைட் ஆன்ட்டி... நான் புறப்பட்றேன். சாரி அங்க்கிள்... சாரி வள்ளுவரய்யா... என்ன தப்பா நினைக்காதீங்க...’’- வர்ஷன் பேச்சோடு பேச்சாக புறப்பட்டான். வள்ளுவர் கணபதி சுப்ரமணியனைப் பார்த்தார்.

‘‘என்ன வள்ளுவரே பாக்கறீங்க? நீங்களும் புறப்படுங்க. இவங்க இப்படி கழுத்தறுப்பாங்கன்னு நான் எதிர்பார்க்கல. அந்த காலப்பலகணியைத் தேட இப்ப நம்ம சூழ்நிலைல இடமில்லை. என்னை வேற போலீஸ் கண்காணிச்சுக்கிட்டே இருக்கு. பத்தாக்குறைக்கு இந்தத் தோள்பட்டை காயம் வேற... என்னாலயும் இப்ப எதுவும் செய்ய முடியாதுன்னு ஆகிடுச்சு. ஆனா நான் இதை விடமாட்டேன். அது மட்டும் நிச்சயம்.’’

‘‘சரிங்கய்யா... அப்ப நானும் உத்தரவு வாங்கிக்கறேன்!’’ - வள்ளுவர் எழுந்து நின்று எல்லோரையும் பார்த்தார்.பத்மாசினி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.வள்ளுவரும் புறப்பட... ‘‘நான் போய் ரெஸ்ட் எடுக்கறேன்’’ என்று விலகிய ப்ரியா தன் அறைக்குள் நுழைந்த நொடியில் வர்ஷனுக்குத்தான் போன் செய்தாள்.

வர்ஷன் தன் பைக்கில் தெருவின் முனையில் போய்க்கொண்டிருந்தான். இயர்போனை காதில் மாட்டிக் கொண்டான். அப்படியே ஒரு பெரிய மரத்தை ஒட்டி பைக்கைக் கொண்டு சென்று நிறுத்தியபடியே பேசத் தொடங்கினான்.

‘‘சொல்லு ப்ரியா...’’

‘‘வீட்டுல அப்பா அம்மாவை சமாளிச்சு திசை திருப்பிட்டோம். டெல்லிக்கு போகப்போறதா சொல்லிட்டு நாம தாத்தாவோட விருப்பத்தையும் அவர் ஐடியாப்படியே நிறைவேத்தப் போறோம். அவர் வீட்ல இருந்துக்கிட்டே நமக்கு வழி காட்டுவார். அந்த ஏட்டுல இருக்கற அவ்வளவும் உன் பென் ட்ரைவ்ல இப்ப இருக்கு. இனிதான் நாம கவனமா நடக்கணும். நீ இப்ப வள்ளுவர் வீட்டுக்குப் போய்

உட்கார்ந்து கான்ஃபரன்ஸ் கால் மூலம் கூப்பிடு. இங்க நானும் தாத்தாவும் ஜாய்ன் பண்ணிக்கறோம்.’’

‘‘அப்ப வள்ளுவரும் புறப்பட்டுட்டாரா?’’

‘‘ஆமாம்... அவரை அவர் வீட்டுல போய் மீட் பண்ணு. கூட யாரும் இல்லாதபடி பாத்துக்குங்க. அப்புறம்... உனக்கு அந்த சதுர்வேதி போட்ட பணத்தை முதல் காரியமா அவன் அக்கவுன்ட்டுக்கே திருப்பி அனுப்பிடு!’’

‘‘இன்னும் பத்து நிமிஷத்துல அந்த வேலையைச் செய்துடுவேன். பை த பை, உன் தாத்தா தனக்கு நடந்த ஆக்சிடென்ட்டை ஒரு கொலை முயற்சின்னு சொல்லி அதுக்குப் பின்னால ஒரு கூட்டம் இருக்கறதா சந்தேகப்பட்டு நம்மகிட்ட பேசினார் இல்லையா?’’

‘‘ஆமா... அதுக்கென்ன?’’

‘‘ஒருத்தன் என்னை ஃபாலோ பண்ணி வந்துக்கிட்டே இருக்கான் ப்ரியா... அவன் யார் தெரியுமா?’’

‘‘யார்?’’- ப்ரியா பதற்றமாகக் கேட்டாள்.

‘‘வேற யாருமில்ல. உங்க தாத்தாவுக்கு உதவி செய்த அந்த பைக் ரைடர் சுகுமார்தான்...’’

‘‘சுகுமாரா..?’’

‘‘ஷாக்கா இருக்குல்ல...’’

‘‘பின்ன..?’’

‘‘உன் தாத்தா சந்தேகப்பட்டது சரி. ஒரு குரூப் ரொம்ப புத்திசாலித்தனமா நடக்கறதா நினைச்சுக்கிட்டு முட்டாள்தனமா நடந்துக்கிட்டு வர்றாங்க...’’

‘‘எதை வெச்சு சொல்றே?’’

‘‘அவங்க திட்டம் போலீசுக்கு தெரிஞ்சு, நமக்கும் தெரிஞ்சிடுச்சே...’’

‘‘அதனால?’’

‘‘என்ன அதனால... இவனை மிஸ்கைட் பண்ணிட்டு நாம நம்ம வேலையைப் பாக்கணும்...’’

‘‘வர்ஷன்... ஜாக்கிரதை! உன்கிட்ட இருந்து இப்படி ஒரு பதில் வரும்னு நான் நினைச்சுப் பார்க்கலை...’’

‘‘நானும் யதார்த்தமாதான் ப்ரியா கவனிச்சேன். அவன் பைக்கை மாத்தினாலும் ஹெல்மெட்டை மாத்தல... அது ஸ்பெயின்ல மட்டுமே கிடைக்கற ரேஸ் பைக் ஹெல்மெட்!’’

‘‘பாத்துடா... ஆமா எப்படி மிஸ்கைட் பண்ணப் போறே?’’

‘‘வீட்டுக்குப் போய் யோசிச்சிட்டு சொல்றேன். தாத்தாகிட்ட இந்த விஷயத்த சொல்லிடு!’’

‘‘ஷ்யூர்!’’- போனை கட் செய்த வர்ஷன் தன் ரியர் மிர்ரர் வழியாகப் பார்த்தான். தொலைவில் அவன் குறிப்பிட்ட அந்த ஹெல்மெட்டை அணிந்த பைக்காரன் நின்றபடி இருந்தான். அவனை கவனிக்காதவன் போல புறப்பட்டான் வர்ஷன்!

* * *

அந்த மலைக் குகையின் உள்ளே பாறைச்சுவற்றில் வரையப்பட்டிருந்த பறவை உருவை, ஈங்கோய் எனும் அந்தப் பளியன் முன் காட்டிக் கேட்டபடி இருந்தார் நந்தி அடிகள்.

‘‘ஈ... நல்லா பாத்து சொல்லு. இந்தப் பறவையையா நீ பார்த்தே?’’

‘‘ஆமாம் சாமி...’’

‘‘ஒண்ணா... ரெண்டா?’’

‘‘ரெண்டு சாமி...’’

‘‘சந்தோஷம். சாயா வாகினி வந்துட்டா. இந்த காலாலங்கார மலையோட பெருமைக்கும் சிறப்புக்கும் ஒரு சோதனை வரப்போகுது. இங்க சிலர் வரப்போறாங்க!’’ - என்ற அவர் முகத்தில் ஒரு இனம் புரியாத கவலை ரேகை!

38

ஜோசப் சந்திரனை நான் மிக ஆச்சரியமாகப் பார்த்தேன். சற்று முன்வரை ஒரு பகுத்தறிவாளராக, சக ஆய்வாளராக,

சிந்தனையாளராக என்று பல பரிமாணங்களில் எனக்குக் காட்சி தந்தவர், இப்போது புதிரான மனிதராகவும் காட்சி தர ஆரம்பித்தார்.

'எல்லாமே கணக்குதான்' என்று அவர் சொன்னதையும், அதை வைத்து அவர் ஒரு கொடியில் இருக்கும் பூக்களை முன்கூட்டியே கிட்டத்தட்ட சரியாகச் சொன்னதையும் நான் எண்ணிப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். 'இந்தக் கணக்கை எந்த சூத்திரத்தின் அடிப்படையில் போட்டீர்கள்' என்று கேட்டேன். 'அதை விளக்குவது கடினம்' என்றவர், 'நான் இந்த கணிதப் பயிற்சியில் பல வருடங்களாக இருக்கிறேன்' என்றார்.'விஞ்ஞானத்தை மறுக்கவில்லை. கணிதத்தையும் ஒப்புக் கொள்கிறீர்கள்... ஆனால் உங்களால் எப்படி அமானுஷ்யத்தை நேசிக்கவும் ஏற்கவும் முடிகிறது' என்று கேட்டேன்.

'விடிய விடிய கதை கேட்டுவிட்டு சீதைக்கு ராமன் சித்தப்பாவா? என்று கேட்டால் எப்படி இருக்குமோ, அப்படி இருக்கிறது உங்கள் பதில்' என்றார் ஜோசப்.

எனக்கு சற்று நிரடியது. அவர் என் முன்னால் ஒரு மேதையாக மாறி என்னை இகழ்வதுபோல் கூட உணர்ந்தேன். ஜோசப் சந்திரனும் புரிந்து கொண்டு பதில் கூறினார்.

'கணபதி... இந்த உலகில் ஒன்று எங்கேயும் இல்லவே இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த இல்லாத ஒன்றுக்கு நாம் நம் வழக்கப்படி 'எக்ஸ்' என்று பெயரிடுவோம். அந்த எக்ஸைப் பற்றி எங்காவது யாராவது ஒரு வார்த்தையாவது பேச முடியுமா?'

'அது எப்படி முடியும்? அதுதான் இல்லவே இல்லாத ஒன்றாயிற்றே?'

'நல்லது... நினைத்துப் பார்க்கவாவது முடியுமா?'

'நினைக்க முடிந்தால்தான் பேசிவிட முடியுமே?'

'என்றால், இல்லாத ஒன்றை நினைக்கவும் முடியாது; பேசவும் முடியாது என்பதுதானே சத்தியம்?''அதிலென்ன சந்தேகம்?''இப்போது நான் உங்களைக் கேட்கிறேன். ஒரு விஷயம் கால காலமாக பேசப்படுகிறதென்றால், அது ஏதோ ஒரு வகையில் இல்லாமல் பேசப்பட்டிருக்குமா?''நிச்சயமாக இருந்தாலன்றி பேசப்பட வாய்ப்பே இல்லை...''என்றால், காலகாலமாக பேசப்படும் அமானுஷ்ய விஷயங்களிலும் இதுதானே உண்மை?''ஆம்... இதுவே உண்மை!'

– அன்று இப்படி எங்களுக்குள் அமானுஷ்யம் குறித்தும், மனித உயிரின் போக்கு குறித்தும் பலவிதமான பேச்சுக்கள்! இறுதியாக நான் கஞ்சமலை தங்கம் குறித்து ஒரு கேள்வியை எழுப்பினேன். 'தங்கமோ, வைரமோ, மனிதர்களுக்கு அது பணமதிப்பும் அந்தஸ்துமுள்ள ஒரு பொருள். பூமியில் வாழ்பவர்கள் இதன்பால் பற்று வைத்து இதைப் பயன்படுத்த விழைவதில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை. ஆனால் அப்படி ஒரு தேவையே இல்லாத, இந்த உலோகத்தைப் பயன்படுத்த வழியுமில்லாத, சுவேத உடம்பு கொண்ட சித்தர்கள் எதற்காக இதைப் புதையல் போல பாதுகாக்க வேண்டும்? இதனால் அவர்களுக்கு என்ன கிடைத்துவிடும்?' – என்று கேட்டேன். அப்போது ஜோசப் சந்திரன் ஒரு அரிய செய்தியைச் சொன்னார்.

'சூட்சும வடிவில் திரியும் சித்தர்கள் இதுபோல் தங்கத்தை மட்டுமல்ல... பல அரிய மூலிகைகளையும், பல அரிய ஏடுகளையும் காவல் காக்கின்றனர். அது தெரியுமா உங்களுக்கு?' என்று கேட்டார்.''- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

நந்தி அடிகள் என்னும் அந்த சித்த புருஷரின் முகத்தில் பரவிய கவலை ரேகை ஈங்கோய்க்கு ஆச்சரியமளித்தது. அவன் பார்க்க அவர் கவலைப்பட்டதேயில்லை. அவன் வரையில் அவர் கவலையை வெற்றி கொண்டவர். கவலை ஒரு மனநோய் என்பவர்.

''ஒரு நல்ல சித்தன் என்பவனுக்கு அவன் உடம்பை விடவே மனம்தான் மிக பலமான ஒன்றாகும். ஏனென்றால் அவனுக்கு சில உண்மைகள் கசடறத் தெரியும். மேலே வீசப்படுகிற ஒரு கல் எப்படி எறிந்த வேகத்துக்கு மேலே சென்றுவிட்டு கீழே வந்து விழுமோ, எப்படி இதை யாராலும் மாற்ற முடியாதோ, அப்படியேதான் ஒவ்வொரு விஷயமும் ஒரு கணக்கோடு செயல்படுகிறது. எனவே எதையும் ஒரு மனிதன் மாற்ற முடியாது'' என்பார்.

''சாமி! புதுசு புதுசா விஞ்ஞானிங்க என்னென்னவோ கண்டுபிடிச்சிருக்காங்களே, இவங்கள்லாம் உங்களை மாதிரி நினைச்சிருந்தா அதையெல்லாம் கண்டுபிடிச்சிருப்பாங்களா?'' - என்று ஈங்கோய் அவரிடம் பதிலுக்குக் கேட்டதற்கு நந்தி அடிகள் திருப்பிச் சொன்ன பதில் அவன் வாயை அடைத்து விட்டது.

''ஈ! இங்க இருக்கிறதைத்தான் கண்டுபிடிக்க முடியும். இல்லாததைக் கண்டுபிடிக்கவே முடியாது.

எதை எதையோ கண்டு பிடிக்கறது இருக்கட்டும். அவங்களால அவங்க உடம்புல ஒரு முடி நரைக்கறதைத் தடுக்க முடியுமா? பசிக்காதபடி வயிற்றைக் கட்டிப்போட முடியுமா? நாளைக்கு என்ன நடக்கும்னு இன்னிக்கே சொல்ல முடியுமா?'' - என்று அவர் கேட்டதற்கு அவனால் பதில் சொல்லத் தெரியவில்லை. அப்படிப்பட்ட நந்தி அடிகள் இன்று கவலைப்படுகிறார். ஆச்சரியப்பட்ட ஈ, அவரிடம் அதைக் கேட்கவும் செய்தான்.

''சாமி, நீங்களா வருத்தப்படறீங்க?''

''என்ன ஈ... ஆச்சரியமா இருக்கா?''

''ஆமாம் சாமி... பட்சி வந்தது நல்ல விஷயம் இல்லீங்களா?''

''அப்படித்தான் சொல்லணும்!''

''இந்தக் காட்டுல எவ்வளவோ பட்சிங்க. இதுல சாயாவாகினி புதுசுன்னு சொல்லலாம். இந்தப் பட்சிக்கும் நீங்க கவலைப்படறதுக்கும் என்ன சாமி சம்பந்தம்?''

''நிறைய இருக்கு ஈ... நாலு திசைகள்ல ஈசானத்துல மேகம் திரண்டா பெருமழை! அதேபோல விடிவெள்ளிக்கு பக்கத்துல சப்தரிஷி மண்டலம் தெரிஞ்சா பூமியில ராஜ மரணம். தீயில விழுந்து பசு மாடு இறந்தா ஒரு தலைமுறையே பாதிப்புக்கு ஆளாகப் போறதுக்கு அறிகுறி... இப்படி பூமில நடக்கப் போற சம்பவங்களுக்கும் நடக்கற சம்பவங்களுக்கும் ஒரு தொடர்பு உண்டுப்பா...''

‘‘எல்லாமே ஒரு கணக்குன்னுதான் நீங்க எப்பவும் சொல்வீங்களே சாமி...’’

‘‘கணக்குல சமயத்துல தப்பு நடந்து, தப்புக் கணக்கு போடறதும் உண்டுதானே?’’

‘‘நீங்க என்ன சாமி சொல்றீங்க?’’

‘‘உன்கிட்ட என்னால இப்ப விளக்கமா பேச முடியாது. பேசினா உனக்குப் புரியவும் புரியாது. நீ உச்சி முகட்டுக்குப் போய் உக்காந்துக்கோ. நான் மணியை அனுப்பும்போது நீ கீழ வந்தா போதும். அங்க இருந்துக்கிட்டு எப்பவும் நாலா பக்கமும் பார். சிலர் இந்த காலாலங்காரகிரி நோக்கி வரப்போறாங்க. அவங்கள கிரி மேல ஏறவிடக் கூடாது.

அவங்கள பார்த்துட்டா நீ உடனே எனக்குத் தகவல் சொல்ல இறங்கி வா. நான் சொல்ற இந்த விஷயம் இன்னும் மூணு ராத்திரி, மூணு பகல்ல நடந்துடும். அதுவரை உனக்குப் பசியும் தாகமும் தெரியாம இருக்க நான் அமில பந்தன சூரணத்தையும் கார

சூடத்தையும் தர்றேன். கார சூடம் உன்னை சுறுசுறுப்பா வெச்சிருக்கும். தூக்கமும் வராது’’ - என்று அருகிலுள்ள குகை போன்ற கற்பாறை பிராந்தியத்துக்குள் நுழைந்தார். வெளியே முயல்கள் விளையாடியபடி இருந்தன. புறாக்கள் மேய்ந்து கொண்டிருக்க, நாய் ஒன்றும் அங்கே இருந்தது. ஈங்கோய் அதைப் பார்க்கவும், அது அருகில் ஓடி வந்தது.

‘‘மணி, ஏன் தூரவே நிக்கறே... கிட்ட வர்றதுக்கென்ன?’’ என்று கேட்டான் ஈ. அதன் வாலில் அசாத்திய ஆட்டம். கண்களில் ஒரு பளபளப்பு.... ஈர நாக்கில் ஒரு சீரான இளைப்பு. அதன் கழுத்தை வளைத்து வருடினான் ஈ. அதுவும் சுகமாய் ஈடு கொடுத்து இழைந்தது. அதன் காலில் மருந்துக்கட்டு போடப்பட்டிருந்தது. அதை கவனித்த ஈ, ‘‘அடடே... என்னடா ஆச்சு?’’ என்று கேட்க, ‘‘நான் சொல்றேன்’’ என்றபடியே வந்தார் நந்தி அடிகள். அவர் கையில் பீங்கான் குப்பிகளில் மூலிகை மருந்துகள்.

‘‘என்ன சாமி?’’

‘‘மலைப்பாம்பு வாயில மாட்டத் தெரிஞ்சான். நல்லவேளை, நான் பார்த்தேன். தூபம் போட்டு பாம்பை மயக்கி, அதன் வாயில இருந்து மணியை விடுவிச்சேன்.’’

‘‘சாமி... நான் கூட வழில ஒரு பாம்பை பாத்தேன். இப்படி எல்லாம் கண்ணுல அதுங்க படவே படாது...’’

‘‘உண்மைதான் ஈ... நம்ம காலாலங்கார கிரிக்கு பத்து மைலுக்கு அப்பால இருந்து எல்லாமே மாறிடிச்சு. ஆயிரக்கணக்கான தோகை மரங்களை இழந்துட்டோம். அறுபது மைலுக்கு அப்பால் வந்துருக்கற சிமென்ட் தொழிற்சாலையோட தூசு, இந்த கிரிக்குள்ள இருக்கற

அவ்வளவு குகைக்குள்ளயும் படிஞ்சிருக்குன்னா சுற்றுச்சூழல் ரொம்பவே கெட்டுப்போச்சுன்னுதானே அர்த்தம்?’’

‘‘ஏன் சாமி இப்படி எல்லாம் நடக்குது?’’

‘‘இப்படிக் கேட்டா என்னத்த சொல்ல... பூமில மாற்றம்ங்கறது ஏற்பட்டுக்கிட்டேதான் இருக்கும். அதனாலதானே அது சுத்திக்கிட்டே இருக்கு?’’

‘‘எப்பவும் உங்க பதில் எனக்குப் பாதிதான் புரியுது; மீதி குழப்பமாவே இருக்கு...’’

‘‘உனக்கு பாதி புரியறதே பெருசுப்பா! சரி... சரி... இந்தா, இதை எடுத்துக்கோ. நான் சொன்னது கவனத்துல இருக்கட்டும்.’’

- அவனும் அவர் தந்த குப்பிகள் இரண்டைக் கையில் எடுத்து தன் பையில் போட்டுக் கொண்டான். அவன் சுமந்து வந்த கூடையை அவர் எடுத்துக் கொண்டார். அவன் உச்சிப் பாறை நோக்கி செல்லத் தொடங்கவும், பார்த்தபடியே நின்றார். நந்தி அடிகளுக்கு புரத சக்தி அதிகமோ என்னவோ, உடம்பில் எல்லா பக்கங்களிலும் ஊட்டமாக முடி வளர்ந்திருந்தது. அதிலும் தாடை முடியான தாடியின் கூம்பிய முடிவுப் பகுதி அவர் தொப்புளைக் கடந்து விட்டிருந்தது. தலைமுடியும் கோபுரம் போல் காணப்பட்டது.

அப்போது வெள்ளை ஜிப்பாவும் வேட்டியுமாக ஒருவன் வந்தான். அவன் கையில் லேப்டாப் இருந்தது.

‘‘வா ஜீவா...’’

‘‘சாமி! கணக்குப் போட்டுட்டேன்...’’

‘‘இவ்வளவு சீக்கிரமாவா?’’

‘‘அதான் சாமி இந்த கம்ப்யூட்டரோட சக்தி. இது கூட கொஞ்சம் பழைய மாடல். போன வாரம் ஜப்பான்ல ரிஸ்ட் கண்ட்ரோல்ல இயங்கற ஸ்பேஸ் விசிபிள் கம்ப்யூட்டரே வந்தாச்சு சாமி...’’

‘‘அப்படின்னா?’’

‘‘இனி கம்ப்யூட்டர்னு சொல்லி இந்த மாதிரி ஒரு பெட்டியையே சுமக்கத் தேவையில்லை. கைல கடிகாரத்தைக் கட்டிக்கற மாதிரி ஒரு வளையத்தைப் போட்டுக்கிட்டு அதை அசைச்சா அதிகபட்சம் ஐந்தடி தூரத்துக்குள்ள சுவர் இருந்தா அதுல கம்ப்யூட்டர் திரை, சினிமா மாதிரி தெரியும். அதுவும் இல்லேன்னாலும் இதோ வெட்டவெளி... இதுலகூட தெரியும்!’’

‘‘அப்ப பார்வை குறைவானவங்களுக்கு இந்த நவீனம் வசப்படாதா?’’

‘‘அதுக்கும் எதையாவது கண்டுபிடிச்சிடுவாங்க சாமி.’’

‘‘சரி... நான் கொடுத்த கணக்கோட விடை என்ன?’’

‘‘அது பின்னத்துல வருது... வகுத்தா மிச்சம் விழுது. ஒத்தப் படையை இரட்டைப்படையால வகுத்தா மிச்சம் விழுந்துதானே சாமி தீரணும்?’’

‘‘அப்ப பின்னம் விழறதால தீர்வு காண முடியாதுன்னு சொல்றியா?’’

‘‘அதுதானே யதார்த்தம்..?’’

‘‘சரி... நீ ஊருக்குப் புறப்படு.’’

‘‘என்ன சாமி! பொசுக்குன்னு ஊருக்குக் கிளம்பச் சொல்லிட்டீங்க?’’

‘‘நீ இந்த மெஷினை நம்பி கணக்கு போடறவன். பிறர் போற வழியில போறவன்... இந்த கணிதவாடிக்கு பின்னம் இல்லாதவங்கதான் வேணும். அவங்களால மட்டும்தான் யுகக் கணக்கை சரியா போட முடியும். அது மட்டுமில்லை... பருவநிலை மாற்றம், பூமி சுழலும் வேகம், இதையெல்லாம் உணர இந்த மெஷினால முடியாது. நுட்பமான உணர்வு தேவை. பூ மலரும்போது கூட ஓசை எழும்பும். அதை நமக்கு இப்ப இருக்கற காதுகளால கேட்க முடியாது.

யோக உடம்பு நமக்கு இருந்தா அந்த சப்தத்தைக் கேட்க முடியும். உனக்கு இருக்கறது யோக உடம்பு இல்ல. நீ வென்னீர்ல குளிக்கறே... சோப்பு உபயோகப்படுத்தறே. தினமும் உனக்கு நீயே சவரம் பண்ணிக்கறே. செருப்பில்லாம எங்கேயுமே போறதில்ல. குகைக்குள்ள ஃபேன் வெச்சுக்க முயற்சி செய்தே... இப்படி நீ உடம்போட அடிமை ஆயிட்டே! நீ லோகாயதமா இந்த உலகத்தை வெற்றி கொள்ளலாம். யூனிவர்சிடில தங்கப்பதக்கமும் வாங்கி இருக்கலாம். ஆனா உனக்கு ஒரு பரிசா தரப்பட்ட இந்த வாழ்வை உன்னால வெற்றிகொள்ள முடியாது. இந்த பூமியில திரும்பத் திரும்ப பிறக்கற அமைப்புக்குள்ள நீ வசமா சிக்கிட்டே. நீ இந்த

கணிதவாடியோட எந்த ஒரு காலக்கணக்கையும் போட்டு சரியான விடை கூற முடியாது. எதுக்கு காலத்தை விரயம் பண்ணிக்கிட்டு! புறப்படு?''- அவரின் விளக்கம் அவனைக் கட்டிப் போட்டது. மௌனமாகப் புறப்பட்டான். சில அடி தூரம் நடந்த அவனிடம், ''இங்க வரும்போது செய்த சத்தியத்தை மறந்துவிடாதே. இந்த கணிதவாடி பற்றி யார்கிட்டயும் எப்பவும் நீ பேசக்கூடாது. கணிதவாடிக்கே இப்ப ஒரு சோதனையான காலகட்டம். உன்னால் அது அதிகமாக வேண்டாம்...'' என்றார் நந்தி.அவன் அதைக் கேட்டவனாக தொடர்ந்து மௌனமாக நடந்தான்.

* * *

இரவு மணி பத்தரை!

பத்மாசினி படுக்கை அறைக்குள் போய் கதவைத் தாழிட்டுக் கொண்டாள். காத்திருந்த ப்ரியா, பூனை போல நடந்து படிகளில் ஏறி தாத்தா அறைக்குள் நுழைந்தாள்.கணபதி சுப்ரமணியன் அறை ஜன்னல் முன் நின்று வெளியே பார்த்தபடி இருந்தார். ப்ரியா வரவும், ''வாடா குட்டி'' என்றார்.

''தாத்தா! நீ இப்படி கூப்பிடறதுதான் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்று அவர் வலது கையைப் பற்றினாள். இடது கை, மடக்கு தோள்பட்டையில் பிளாஸ்திரி போடப்பட்ட நிலையில் ஒரு தூலிக்குள் குழந்தை போலக் கிடந்தது.

கணபதி சுப்ரமணியன் ப்ரியாவை ஆழமாக ஊடுருவினார். அந்தப் பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள். ''என்ன தாத்தா... ரொம்ப ஃபீலிங்கோட இருக்கே போல இருக்கே?''

‘‘ஆமாம் ப்ரியா... நீ உன் அம்மா அப்பாக்கு ஒரே ஒரு பொண்ணு மட்டுமில்ல. எனக்கும் ஒரே பேத்தி...’’

‘‘ஒரு பொண்ணா இருந்தா, ஒரு பேத்திதானே இருக்க முடியும்?’’

‘‘உனக்கு எல்லாமே ஜாலி. எனக்கு இந்த விஷயத்துல உன்னை இறக்கி விடறோமேன்னு கவலையா இருக்கு!’’

‘‘தாத்தா! ரிவர்ஸ் கியர் போடாதே. சென்டிமென்ட்டை தயவுசெய்து மூட்டை கட்டு. நான் டி.வி.லயும் என் டேப்லயும் அதிகம் பார்த்தது அட்வென்ச்சரஸ் மூவிகளைத்தான். இதை நான் ஒரு நல்ல சான்ஸாதான் நினைக்கறேன்.’’

‘‘நல்ல சான்ஸ்தான்... ஆனா ஆபத்துக்கும் இதுல இடமிருக்கே?’’

‘‘வீட்டுக்குள்ளயே இருந்தா, ஆபத்து இல்லாமப் போயிடுமா? இரண்டு நாளா முத்தழகு ஆவியா வந்து சுத்தினப்ப இந்த வீடும் ஆபத்தானதாயிடிச்சே... அவ நினைச்சிருப்பாளா, தான் வேலை பார்த்த வீட்டுக்குள்ளயே ஆவியா சுத்துவோம்னு?’’

‘‘கரெக்ட்... இந்த விஷயத்தோட ஆபத்துக்கு முத்தழகு ஒரு நல்ல உதாரணம். அதுதான் எனக்கும் பயமா இருக்கு...’’

‘‘பயப்படாத தாத்தா! ஏதாவது ஆகியிருக்கணும்னா முதல்ல வள்ளுவருக்கு, அப்புறம் உனக்குன்னு, அது எப்பவோ நடந்து முடிஞ்சிருக்கணும். ஆனா உங்க இரண்டு பேரைத் தவிர மத்தவங்களுக்குத்தான் எல்லாம் நடந்தது. அதுவும் அவங்க பேராசைப்பட்டதால... இதுல தொடக்கத்துல இருந்தே நமக்கு எந்த ஆபத்து மில்லங்கறதுதான் உண்மை.’’

“உன்னோட வேகம், ஐ.க்யூ எல்லாமே எனக்கு பிரமிப்பா இருக்குடா. நான் ஐம்பது வயதுல இருந்த மாதிரி நீ இருபத்தி அஞ்சு வயசுல இருக்கே...”

“வயசைக் கூட்டிச் சொல்லாதே... அப்புறம், இந்த எமோஷன்லாம் இப்ப வேண்டாம். வர்ஷன் காத்திருப்பான். கான்ஃபரன்ஸ்ல பேச ஆரம்பிப்போம். அதிகபட்சம் ஒரு மணி நேரத்துல அந்த சுவடியில் இருக்கற குறிப்புகளைக் கொண்டு நாங்க எந்த திசை நோக்கிப் போகணும், அந்த காலப்பலகணி உள்ள இடம் எதுவா இருக்கும்னு எல்லாம் தெரிய வந்தாகணும். கமான் க்விக்!”

அவள் கான்ஃபரன்ஸ் காலை ஆன் செய்ய, அவர்களோடு வள்ளுவரும் வர்ஷனும் இணைந்துகொள்ள, வர்ஷன் முதல் விஷயமாகக் கூறியதில் ஒரு அதிர்வு.

“ப்ரியா... அந்த சுகுமாரை நான் மிஸ்கைட் பண்ணிட்டு வள்ளுவர் வீட்டுக்கு வந்தா, அவன் எனக்கு முந்தி இந்தத் தெருவுல நுழைஞ்சு, ஒரு டீக்கடைல நின்னு டீ குடிச்சிக்கிட்டிருக்கான்” என்றான். கணபதி சுப்ரமணியனின் கிருதாவை ஒட்டி வியர்வை ஓடத் தொடங்கியது.

39

ஜோசப் சந்திரன் என்னைப் பார்த்து அப்படிக் கேட்கவும், நான் ஆச்சரியமானேன். அவரே தொடர்ந்து கூறத் தொடங்கினார்.‘கணபதி... இந்த பூமியில் நீங்கள் முதலில் மலைகளின் சிறப்பைப் புரிந்துகொள்ளுங்கள். மலைகள் என்றால்

உயரமானவை, பசுமையானவை, குளிர்ந்த தன்மை கொண்டவை என்று மட்டும்தான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். உண்மையில் மலைகள் பூமியிலேயே மிக அதிக சக்தி படைத்தவைகளாக உள்ளன. அதனால் இந்த மலைகளை சித்தர்கள் தங்கள் வசிப்பிடங்களாக ஆக்கிக் கொண்டனர்.

இந்த மலைகளில், இயல்பான தட்பவெப்ப சூழல் கொண்டவை, அதிலிருந்து மாறுபட்டு விசேஷமான தட்பவெப்ப சூழல் கொண்டவை என்று இரண்டு விதங்கள் உண்டு. இந்த மாறுபட்ட தட்பவெப்ப சூழல் கொண்ட மலைகளில் வெளிப்படும் தாவரங்களில் சில விசேஷ சக்தி கொண்டவை. அவற்றையே 'கல்பமூலி' என்று அவர்கள் பெயரிட்டு அழைத்தனர்.

அந்த மூலிகைகள் அந்த இடத்தைத் தவிர வேறு எங்கும் வளராதவையும் கூட... காரணம், அங்கு நிலவும் தட்பவெப்பத்தின் நுட்பமான அளவுதான்.ஒரு மூலிகைக்குப் பெயரே 'மௌனமிட்டி'. இதற்கு சத்தமே துளியும் ஆகாது. இந்த தாவரம் உள்ள இடத்தில் நாம் நிலம் அதிர நடந்தாலே கூட போதும்...

இது சுருண்டு கொண்டு விடும். அந்த அளவு சத்த அதிர்வின் மிகச் சாதாரண டெசிபல் அளவைக்கூட தாங்காத அந்த தாவரம் முதல், தன் பூக்களில் உள்ள தேனைக் குடிக்க வரும் பறவையை தனக்கான உணவாகக் கருதி... அப்படியே பூவின் இதழ்களை மூடிக்கொண்டு தனக்குள் பறவையை அடக்கி, அது இறந்துவிட்ட நிலையில் தனக்கான உணவாக ஆக்கிக் கொள்ளும் புலால் உண்ணும் தாவரங்கள் வரை பலவிதமான தாவரங்கள் உள்ளன.

இவற்றைப் பற்றி நம் வேளாண்மைக் கல்லூரிகள் கூட பெரிதாக ஆய்வு மேற்கொள்ளவில்லை.சில நுட்பமான

தாவரங்களின் விதைகள் மிக அபூர்வமானவை. அந்த வகையில் சிறுநீர்ப்பை பாதிப்பை சரிசெய்து, அதை மீண்டும் இயங்க வைக்கும் ‘அகக்குளகரணி’ எனும் தாவரம் கிட்னி பாதிப்புக்கு ஆளானவர்களுக்கு அருமருந்து. இதன் விதைகளை பௌர்ணமி நாளன்று பிரம்ம முகூர்த்தத்தில் விதைத்து நீர் விடவேண்டும். ஏழாம் பௌர்ணமி இது பூக்கும். பூத்த நிலையில் இந்தச் செடியை அப்படியே பறித்து, அதன் வேரைக் கழுவி, பின் அரைத்து பால்விட்டுக் குடித்திட, கிட்னியின் இயக்கம் சீராகத் தொடங்கும்.

பூத்த பூவின் அடுத்த கட்டமே காய்... காய்க்குள்ளேதான் விதை இருக்கிறது. எனவே ஒரு செடியை விதைக்காக மட்டுமே வளர்த்து, இன்னொன்றை பூக்கும்போதே பறித்து விடுவது வழக்கம். இதனால் இது எப்பொழுதும் திட்டமிட்டு செயலாற்றுபவர்களுக்கே கிடைக்கும். வனத்தைப் பற்றிய பேரறிவு, பிரபஞ்சம் பற்றிய ஞானம், காலம் குறித்த கணக்கறிவு எனும் மூன்றும் உள்ள சித்தர்களுக்கே இது குறித்துத் தெரியும். பௌர்ணமி தவிர வேறு எப்போது விதைத்தாலும் இந்தச் செடி பெரிதாக எழும்பாது. இதை தேவதைத் தாவரம் என்பர். மருத்துவத்தின் கடவுள்களாக புராணத்தில் கருதப்படும் அஸ்வினி தேவர்களிடமிருந்து இதன் விதை பூமிக்கு வந்ததாகக் கூறுவர்...’

– இப்படி ஜோசப் சந்திரன் கூறிக்கொண்டே செல்லச் செல்ல எனக்குள் பிரமிப்பு.‘ஜோசப்... இந்த செய்திகள் எல்லாம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன? நமது ஆர்க்கியாலஜிக்கும் இதற்கும் சம்பந்தம் இருப்பது போலத் தெரியவில்லையே’ என்றேன்.‘நிலத்தோடுதான் நமக்கு உறவு. அது தொடர்பான அவ்வளவு ரகசியங்களையும் கண்டறிவதே நம் பணி நோக்கு. எனவே நான் நிறைய வாசித்தேன். அவ்வளவு ஏன்... ராமதேவர் என்கிற சித்தர் ‘யாக்கோபு’ என்று பெயர் மாறியவராக மக்கா,

மதினா பக்கமெல்லாம் போய், அங்கிருந்து பல மூலிகைகளைக் கண்டறிந்து கொண்டு வந்த செய்திகளைக் கூறினால் உங்களுக்கு இன்னமும் ஆச்சரியம் ஏற்படும்.

இவை பெரும்பாலும் ரகசியமானவை. ஆராயும் நமக்கே கூட முழுமையாக அகப்படாதவை. முழுவதுமாக நமக்குப் புரிய வேண்டுமென்றால் ஒரு சித்தர் நமக்கு முழுமனதாக உதவிட வேண்டும்' என்றார்.''- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

சுகுமார் பற்றி வர்ஷன் சொன்ன செய்தி கணபதி சுப்ரமணியனை கவலையில் ஆழ்த்த, ப்ரியாவும் ''இப்ப என்ன செய்யலாம்?'' என்று கேட்டாள்.

''என்ன செய்யலாம்னா... காலப்பலகணியைத் தேடத் தொடங்கின ஒரு கோஷ்டி கூண்டோட கைலாசம் போய்ட்ட நிலையில, அடுத்த கோஷ்டி சாதுர்யமா செயல்பட்டுக்கிட்டு இருக்குன்னு தெரியுது...''

''சாதுர்யமா செயல்பட்டா நீ எப்படி அவனைக் கண்டுபிடிச்சிருப்பே?''

''நான் கண்டுபிடிச்சது அவனுக்குத் தெரியாதே...''

''இப்பதானே அவனை மிஸ்கைட் பண்ணிட்டு வந்தேன்னு சொன்னே?''

''நான் மிஸ்கைட் பண்ணினதை அவன் புரிஞ்சிக்கலைன்னு நல்லா தெரியுது. அவன் என்னை மிஸ் பண்ணிட்டதா நினைச்சு நான்

எங்க போனாலும் வள்ளுவர் வீட்டுக்கு வந்தாகணும்ங்கறதை அனுமானிச்சு, அவர் வீடு இருக்கற தெருவுக்கு வந்து டீக்கடைலயும் நின்னுட்டான்...''

''அப்ப, நாம அவனைத் தெரிஞ்சிக்கிட்டோம்ங்கறது அவனுக்குத் தெரியாது. அப்படித்தானே?''

''நிச்சயமா?''

''அப்ப ஒண்ணு பண்ணுவோம். வள்ளுவர் வீட்டு பின்பக்கமா சுவர் ஏறிக் குதிச்சா காலி பிளாட் ஒண்ணு இருக்கு. போன தடவை நான் வந்தப்பவே கவனிச்சிருந்தேன். அதன் வழியா நீயும் வள்ளுவரும் கம்பி நீட்டிடுங்க. உங்களை அவன் அங்க மிஸ் பண்ணினா... அடுத்து அவன் இங்க என் வீட்டு முன்னாலதான் வந்து நிப்பான். அவன் நோக்கம் நம்மைத் தேட விட்டு பின் தொடர்ந்து வருவதுதான். கடைசியா நாம காலப்பலகணியை அடையும்போது நம்மகிட்ட இருந்து அதை அடைய அவங்க ஏதாவது திட்டம் வெச்சிருக்கலாம்.''

''உன் யூகமும் சரி... ஐடியாவும் சரி... நாம இங்க இன்னும் அந்தப் பலகணி பற்றின எந்த ஒரு குறிப்பையும் தொட்டுக்கூடப் பார்க்கல. அதுக்குள்ள நாம கட்டாயமா அதை கண்டுபிடிச்சிடுவோம்னு நம்பி ஒருத்தன் ஃபாலோ பண்றதை நினைச்சா உனக்கு வியப்பா இல்லை..?''

''வியப்பா மட்டுமில்லை... இந்த சுகுமாரும் இவனுக்குப் பின்னால இருக்கற கோஷ்டியும் நம்மைப் பத்தி முழுசா தெரிஞ்சவங்களாகவும் இருக்கணும்னு தோணுது!''

‘‘எதுவானாலும் சரி... இனி நாம இரண்டுல ஒண்ணு பாத்துடணும். முதல்ல பலகணி இருக்கற இடத்தைத் தெரிஞ்சுப்போம். அந்தக் குறிப்புகளை நீ படி... உன் தாத்தா கேட்டுக்கிட்டிருக்கார்தானே?’’

‘‘வர்ஷன்... கான்ஃப்ரன்ஸ்ல நான் மட்டும் எப்படி கேட்காம இருப்பேன். கேரி ஆன் யங்மேன்...’’

‘‘வெரிகுட் அங்கிள்... இனி எங்களுக்கு வேலை இல்லை, வள்ளுவருக்கும் உங்களுக்கும்தான்...’’

‘‘ரைட்! இதுக்கு முன்னால சொன்னபடி மண்டி போட்டு பதிமூணு பிராணாயாமம் செய்துட்டு அடுத்தடுத்து போவோம்...’’

‘‘ஓகே அங்கிள்... அங்க நீங்கதான் மண்டி போட்டு பிராணாயாமம் செய்யணும். வழிகாட்டு ஏடு உங்க கைலதான் இருக்கு...’’

‘‘வர்ஷன்... நீ பேசும்போதே நான் அதை செய்து முடிச்சு வழிகாட்டு ஏட்டோட அடுத்த பக்கத்துக்குப் போயிட்டேன்...’’

‘‘நல்லதும்மா... அதை நிறுத்தி நிதானமா படி!’’

‘‘சரிங்கய்யா... படிக்கறேன்!’’

‘‘படி... படி...’’ - வள்ளுவர் ஆர்வமானவராக இயர்போனை காதுக்குள் நன்கு அழுந்தவிட்டுக் கொண்டு கண்களை விரித்துக் கொண்டார்.

‘‘திசையதும் தென்கிழக்கு... அவ்வழி ஆழி தொட்ட நாடு வந்து, ஆடி தொட்டு நூறு நோக்கி, பாதி வழி வந்தக்கால் மீதி வழி அறிய ஏடதன் மறுபக்கம் காணுக பூதமுடன்...’’

- சற்று தடுமாற்றத்துடன் ப்ரியா அந்த ஏட்டின் வார்த்தைகளை வாசித்து முடித்தாள்.

‘‘திசையதும் தென்கிழக்கு... ஒன் மினிட் என் செல்போன்ல பாக்கறேன்... ஆங், இது மகாபலிபுரம் போற பக்கம், அவ்வழி ஆழி தொட்ட நாடு வந்துன்னா..?’’- வர்ஷன் பாதி விளக்கம், பாதி குழப்பம் என்று தலையைச் சொறிந்து கொண்டான்.வள்ளுவர் அதற்கு பளிச்சென்று பதில் கூறலானார்.

‘‘வர்ஷன்... ஆழின்னா கடல்... கடலைத் தொட்ட நாடுன்னா மகாபலிபுரமா இருக்கலாம். ஆனா இங்க மகாபலிபுரம் நிச்சயமா இல்லை. ஏன்னா மகாபலிபுரம்ங்கற பேர்ல ‘புரம்’ இருக்கு... ‘புரம்’னா அது ஒரு பகுதியைக் குறிக்கும்; முழுமையான நாட்டைக் குறிக்காது. ‘நாடு’ன்னே குறிப்பு இருக்கறதால ‘நாடு’ன்னு முடியற ஊர் ஏதாவது இருக்கா பார்... அதுவும் கடலோரமா கட்டாயம் இருக்கணும்...’’

‘‘ஒரு நிமிஷம்யா... ஆண்ட்ராய்ட் போன்ல இருக்கற கூகுள் எதுக்கு இருக்கு?. அதுக்குள்ள போய் அந்தப் பகுதி மேப்பை விரிச்சா முடிஞ்சது... இதோ தெரிய ஆரம்பிச்சிடிச்சு... மகாபலிபுரம், கல்பாக்கம், செய்யூர், இடைக்கழி நாடு... இடைக்கழி நாடு! அய்யா, அனேகமா இதுவாதான் இருக்கணும்... சரியா?’’

‘‘சந்தேகமே வேண்டாம்... இடைக்கழி நாடேதான். அது ஒரு குட்டி கேரளம்... போகட்டும், அடுத்த வரி என்ன?’’

‘‘ஆடி தொட்டு நூறு நோக்கி...’’

‘‘ஆடி தொட்டுன்னா ஆடி மாசத்தைக் குறிக்குதா?’’

‘‘இல்ல... இல்ல... ‘ஆடி’ன்னா கருவின்னும் ஒரு அர்த்தம் இருக்கு. கரெக்ட்... திசைகாட்டி கருவி! அதுல அங்க நாலு திசைகளுக்கு நடுவுல நின்னு அப்புறமா வட்ட வடிவ திசைகாட்டிக் கருவியில 360டிகிரி இருக்கறதா பாவிச்சு, அதுல பூஜ்யத்துல இருந்து நூறு டிகிரிக்குப் போய் அந்த டிகிரி காட்டற திசைன்னு அர்த்தம்...’’

‘‘வள்ளுவரே... இவ்வளவு குழப்பமாவா ஒரு இடத்துக்கு அட்ரஸ் சொல்றது... ஏன் இப்படி தலையைச் சுத்தி மூக்கைத் தொடணும்?’’

‘‘ரகசியம்னா அது இப்படி மறைவாதான் இருக்கும். இப்படி இருக்கும்போதே டெல்லி வரை விஷயம் தெரிஞ்சு ஒரு கோஷ்டிக்கு இரண்டு கோஷ்டி நம்மை குறி வெச்சுட்டாங்களே... இதுல ‘பளிச்’னு குறிப்பு இருந்தா அவ்வளவுதான்!’’

‘‘சரி, அடுத்த வரியைக் கேட்போம்... ப்ரியா, கமான்!’’

‘‘சொல்றேன் வர்ஷன்... நாம ரொம்பவே சீக்கிரமா கண்டுபிடிச்சுக்கிட்டு வரோம். எல்லாம் பிராணாயாமம் தந்த சக்தின்னு நினைக்கறேன்.’’

‘‘அவசரப்படாதே... அடுத்த வரிய சொல்!’’

‘‘பாதி வழி வந்தக்கால் மீதி வழி அறிய ஏடதன் மறுபக்கம் காணுக பூதமுடன்...’’

‘‘வள்ளுவரய்யா... நீங்கதான் சொல்லணும். பாதி வழி வந்தக்கால்னா எந்தப் பாதி வழி?’’

‘‘அது மட்டுமல்ல... மீதி வழி அறிய ஏடதன் மறுபக்கம் காணுக பூதமுடன்னா... பயமா இருக்கு வர்ஷன்!’’

ப்ரியா சற்று கிண்டலாக முணுமுணுக்க, வள்ளுவரிடம் முன் போன்ற ஒரு வேகமான பதிலில்லை. ஆழ்ந்த யோசனை அவர் முகத்தில்...

‘‘என்னய்யா... ஒண்ணும் பிடிபடலையா?’’

‘‘அதான்பா யோசிக்கறேன். இடைக்கழிநாட்டுல இருந்து நம்ம திசைகாட்டிக் கருவியைக் கொண்டு 100 டிகிரி காட்ற திசைல ஏதாவது பாதை இருந்தா, அது போய் முடியற தூரத்துல சரிபாதின்னு அர்த்தமா? இல்லை, வேற ஏதாவதான்னு யோசிக்கறேன்...’’

‘‘ஒருவேளை அப்படிப் பாதை எதுவும் இல்லைன்னா?’’

‘‘எதையும் இங்க இருந்து முடிவு செய்ய முடியாது. நாம இடைக்கழி நாட்டுக்குப் போய் அங்க ஊர் நடுவுல நின்னு வடக்கை மையமா வெச்சு, மற்ற திசைகளைத் துல்லியமாக்கி - அப்புறம் அந்த நிலைல நூறாவது டிகிரி காட்ற திசையைப் பார்த்துட்டு முடிவு செய்வோம்.’’

‘‘அப்ப போகப் போகத்தான் முடிவு செய்ய முடியுமா?’’

‘‘அதுதான் சுலபம் தம்பி...’’

‘‘எதுக்கும் அடுத்த வரியையும் அடுத்த பக்கத்தையும் பார்த்துடுவோமே...’’

‘‘கரெக்ட் வர்ஷன்... அடுத்த வரி ‘ஏடதன் மறுபக்கம் காணுக பூதமுடன்’னு இருக்கு. எந்த பூதமுடன்..?’’

‘‘நீ மறுபக்கம் பார்...’’- வர்ஷன் கூறிட, ப்ரியா மறுபக்கம் பார்த்தாள். எறும்புகள் வரிசையாக ஊர்வது போல எழுத்துக்கள் ஏதோ கோடு போட்டது போலத்தான் இருந்தன. ஒன்றுமே புரியவில்லை.

‘‘வர்ஷன்... ஆனாலும் பொடி எழுத்து! ஏதோ கோடு போட்ட மாதிரி இருக்கு... படிக்க முடியல.’’

‘‘அய்யா... என்னய்யா இது புதுக் குழப்பம்?’’

‘‘ஒரு குழப்பமுமில்ல... அந்தப் பொடி எழுத்தைப் படிக்கணும்னா ஒரே வழிதான் இருக்கு. அதுக்கு நமக்கு என்ன வேணும்?’’

‘‘பூதக்கண்ணாடியா?’’

‘‘அதேதான்... அதுதான் அந்த பூதம்...’’

‘‘வாவ்... இவ்வளவுதானா? இப்பவே பூதக் கண்ணாடி எடுத்துப் படிச்சா என்ன?’’

‘‘வேண்டாம். ஏட்டுல சொன்னபடி மிகச் சரியா நடந்துக்கிட்டா மட்டுமே அந்த காலப்பலகணியை நாம நெருங்க முடியும். இல்லன்னா இந்த முயற்சியில நமக்கெல்லாம் சித்தம் கலங்கவும் வாய்ப்பு உண்டு...’’

‘‘சித்தம் கலங்கன்னா... யூ மீன் பைத்தியம்?’’

‘‘ஆமாம்ப்பா...’’

‘‘பயமுறுத்தறீங்களேய்யா...’’

‘‘படிச்சது போதும். ப்ரியா நீ காலைல உன் கார்ல வர்ஷன் வீட்டுக்குப் போயிடு. காரை அங்க பார்க் பண்ணிட்டு, ஆட்டோவோ, கால் டாக்சியோ பிடிச்சு நேரா பீச் ரோட்ல உழைப்பாளர் சிலை கிட்ட வந்துடு. நானும் வர்ஷனும் அங்க இருப்போம். மணி ஒன்பதுன்னு வெச்சுக்கோ. வீட்ல டெல்லி போறோம்னு நம்ப வெச்சுடு - அது ரொம்ப முக்கியம்.’’- வள்ளுவர் சொல்லி முடித்தார். அடுத்து சுகுமார் கண்ணில் படாமல் பின் வழியாகத் தப்பிக்க வேண்டும்...

40

‘‘ஒரு சித்தர் நமக்கு உதவ வேண்டும் என்றால், அவர் இருப்பது தெரியவேண்டும்... இந்தக் காலத்தில் சித்தர்களைப் போய் எங்கே என்று தேடுவது? ஒருவேளை கொல்லிமலை, சதுரகிரி மலை போன்ற தலங்களுக்குச் சென்றால் கண்ணில் படுவார்களோ? என் மனதுக்குள் எழும்பிய கேள்விகளோடு நான் ஜோசப் சந்திரனைப் பார்த்தேன். அப்படியே, ‘கஞ்சமலை விஷயமாக என்ன செய்யலாம்?’ என்று கேட்டேன்.

‘இப்போதைக்கு விட்டு விடுவோம். ஆனால் அவ்வப்போது அங்கு போய் வருவோம். குறிப்பாக சித்ரா பௌர்ணமி இரவு கட்டாயமாகப் போய், அன்றைய நிலவொளியில் அந்த இடம்

எப்படி இருக்கிறதென்று பார்ப்போம். பௌதிகமாய் ஐந்து பூதங்களும் அங்கே சிறந்த நிலையில் மிக வலிமையோடு இருக்க வேண்டும். அடுத்து, தேவர்கள் அங்கு வந்து செல்லக்கூடும். நமக்கு விதியிருந்தால் அவர்களை நாம் பார்க்கலாம்' என்றார்.

'தேவர்களா... புராணங்களில் வருவார்களே, அவர்களா?' என்று நான் ஆவலாகக் கேட்டேன். 'ஆமாம்... ஏன் அவர்கள் வருவதை உங்களால் நம்ப முடியவில்லையா?' என்று அவர் என்னிடம் கேட்கவும், எனக்கு என்ன பதில் கூறுவது என்றே தெரியவில்லை. என் தயக்கமும் மௌனமும் அவருக்கு நான் நம்ப முடியாமல் தவிப்பதை உறுதிப்படுத்தி விட்டன.'ஜோசப்... நீங்கள் என்னை மிகவே ஆச்சரியப்பட வைக்கிறீர்கள்...' என்றேன். ஆனால் அவரோ, 'உங்களுக்கு அப்படித்தான் இருக்கும்' என்றார்.

இங்கே 'தேவர்கள்' என்று ஜோசப் குறிப்பிட்ட விஷயம், மேல்நாடுகளில் 'ஏலியன்கள்' என்று குறிப்பிடப்படுவதாக நினைக்கிறேன். எனவே 'ஏலியன்களைக் குறிப்பிடுகிறீர்களா?' என்று கேட்டேன்.

'ஏலியன்கள் ஒரு விஞ்ஞானக் கற்பனை. ஆனால் தேவர்கள் அப்படியல்ல. அவர்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் மிக அதிகமாக இருப்பதாக உணர்கிறேன்' என்றார் அவர்.'என்றால், ஒரே ஒரு தேவனையாவது இந்த பூமியில் யாராவது பார்த்திருக்க வேண்டுமே... இந்த மண்ணின் ஆன்மிகவாதிகள் கூட ஒரு தேவனை தாங்கள் பார்த்ததாக எனக்குத் தெரிந்து கூறியிருக்காத நிலையில், நீங்கள் எதை வைத்துக் கூறுகிறீர்கள்?' என்றேன் நான்.'இந்த பூமியின் இயக்கத்தை வைத்தும், இது ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருப்பதை வைத்தும் நான் உணர்ந்துகொண்ட விஷயம் இது. ஒரு பேரறிவு நிச்சயமாக

இருக்கிறது. அதை உங்களால் மறுக்க முடியுமா?' என்று கேட்டார் ஜோசப் சந்திரன்.

'மறுக்க முடியாதுதான்! எனக்கு வாய்த்த இந்த உடல்... இதனுள்ளிருந்து கொண்டு நான் பேசிடும் பேச்சு... எல்லாமே எனக்கு வியப்பான விஷயங்களே! இந்த உடம்பை நான் வடிவமைத்துக் கொள்ளவில்லை. என் தாய்மொழி, தாய் - தந்தையர், பிறந்த ஊர், இடம் என்று எதுவும் என் விருப்பம் இல்லை. எனவே, என்னைச் செய்த அந்த சக்தியை - நீங்கள் பேரறிவு என்கிற அந்த விஷயத்தை என்னால் எப்படி மறுக்க முடியும்?' என்று நான் கூறினேன்.

'இதை உணர்ந்தே சித்தர் பெருமக்கள் தங்களை வடிவமைத்த சக்தியைப் புரிந்துகொள்ள முயன்றனர். அவர்கள் இறுதியில் அதை உணர்ந்தனர். 'இந்த பஞ்சபூத பௌதிக சக்தியைத் துளியும் செலவழிக்காமல் கட்டுப்படுத்தும்போது அது பேராற்றலாக மாறுகிறது. அப்போது தெரியாததெல்லாம் தெரிகிறது' என்றனர்' - என்று சித்தர்களிடம் வந்து நின்றார் ஜோசப் சந்திரன்.

கஞ்சமலை தங்கம் குறித்த ஒரு ஆரம்பம், இப்படி ஞான விசாரமாக மாறும் என்று நான் நினைக்கவில்லை. குறிப்பாக அவர் எவ்வளவோ விஷயங்களைப் பேசியபோதிலும் நான் அதில் ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டேன். ஜோசப் சந்திரன் ஆய்வுத்துறையில் நிலத்தை மட்டும் தோண்டவில்லை; தன்னையும் சேர்த்துத் தோண்டி அதில் எங்கெங்கே போய் விட்டார் என்பதே அது! அப்போது நான் அவரிடம் ஒரு கருத்தை மிக அழுத்தமாய் முன்வைத்தேன்.

‘ஜோசப்... ஏதாவது ஒரு அமானுஷ்ய அனுபவத்திற்கு என்னை ஆட்படுத்த முடியுமா? அப்போதுதான் எனக்கு நம்பிக்கை வரும். அல்லாத பட்சத்தில் உங்கள் பேச்சு, அதன் பொருள் என்று எல்லாமே என் வரையில் கற்பனை என்றே கருத வேண்டியிருக்கும்’ என்றேன்.’’

- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

வர்ஷன் நகம் கடித்தபடியே யோசிக்க ஆரம்பித்தான்.

வள்ளுவர் ஒரு தோல் பைக்குள் தனது துணிமணிகளை எடுத்து வைத்துக்கொள்ளத் தொடங்கினார். வீட்டில் யாருமில்லை. ஊரிலிருந்து வந்திருந்த மருமகள், மனைவி மற்றும் பேரன் என்று எல்லோரும் திண்டுக்கல் பக்கமுள்ள சிறுமலைக்குப் போய்விட்டிருந்தனர்.வீட்டின் ஒரு மூலையில் கொத்தாக ‘இயேசு அழைக்கிறார்’ நோட்டீஸ் கிடந்தது. வீட்டுச் சுவற்றில் இந்துக் கடவுள்களின் படங்கள். வர்ஷன் அதை எல்லாம் மெல்லப் பார்க்க ஆரம்பித்தான். வியப்பு தோன்றியது அவனுக்கு.

வள்ளுவர் தயாரான நிலையில் வந்து நின்றார்.‘இப்போதே புறப்படுவோமா? இல்லை, விடிகாலை புறப்படலாமா?’ என்கிற மாதிரி பார்த்தார்.

‘‘அய்யா! இங்க என்னால தூங்க முடியாது. கொசுவும் நிறைய இருக்கு. நீங்க எப்படி தூங்கறீங்க...’’ - என்று கேட்டான்.

‘‘மனுஷன் ஒரு அற்புதமான விலங்குப்பா. எந்த சூழலுக்கும் அவன் செட்டாயிடுவான். நாமெல்லாம் ஆதி காலத்துல மரக்கிளைகள்ல படுத்துத் தூங்கினவங்கதான். அந்தப் பழக்கத்

தொடர்புலதான், இப்பவும் தூக்கத்துல சுருண்டு படுத்துக்கறோம். எனக்கும் இதெல்லாம் பழகிடுச்சு.''

''இது கிட்டத்தட்ட டார்வின் தியரி மாதிரி. டார்வின் தியரிய ஒத்துக்கிட்டா இந்தக் காலப்பலகணி, கடவுள்னு எதையும் யோசிக்கவே முடியாதுய்யா...''

''உண்மைதான். நம்ம மதத்தோட சித்தாந்தப்படி, மனுஷன் ஒண்ணும் குரங்குல இருந்தெல்லாம் வரலை. தொடக்கமே பூரணமான ஆரம்பம்தான். அதாவது மகாவிஷ்ணுதான் முதல் தொடக்கம். அப்புறம் அவரால உருவான பிரம்மா... அப்புறம் அவரால உருவான வேதம்... உயிர்கள்...''

''தொடக்கத்துலயே வேதம்ங்கற படிக்கற விஷயம் இருந்துருக்குன்னா, எழுத்து, மொழி எல்லாமும் இருந்துருக்கணும் இல்லையா?''

''நிச்சயமா! சரி... நாம விடியற வரை இப்படியே பேசிக்கிட்டிருக்க போறோமா? இல்ல, இப்பவே புறப்பட்டு வேற எங்கேயாவது போகப் போறோமா?''

‘‘நீங்க என்ன சொல்றீங்க?’’

‘‘எனக்கு எதுவானாலும் சரி...’’

‘‘நாம போற காரியம் வெற்றி கரமா முடியணும்னா, நாம நல்ல நேரத்துக்குள்ள தொடங்கணும். உங்க கணக்குப்படி இந்த இரவுல எது நல்ல நேரம்?’’

‘‘அப்ப நீ நல்ல நேரம், கெட்ட நேரம்னு காலத்தை இரண்டா பிரிச்சுப் பாக்கத் தொடங்கிட்டேன்னு சொல்லு!’’

‘‘எல்லாம் உங்களோட தாக்கம்தான்...’’

‘‘கொஞ்சம் இரு, சொல்றேன்...’’

வள்ளுவர் காலண்டர் அருகில் சென்று பார்த்துவிட்டு, பஞ்சாங்கத்தையும் எடுத்துப் பார்த்துவிட்டு, ‘‘சரியா நாலு மணி, எட்டு நிமிஷத்துக்குப் புறப்படுவோம். நம்ம பயணம் தடையில்லாம காலப்பலகணிகிட்டதான் முடியும்’’ என்றார்.

‘‘ஓ... அதுவரை பொழுதை எப்படிக் கழிக்கிறது?’’

‘‘ஒரு தூக்கம் போடுப்பா...’’

‘‘காலப்பலகணிய கண்ணுல பாக்கறவரை தூக்கம்ங்கறதெல்லாம் எனக்கு வராதுய்யா...’’

‘‘வாஸ்தவம்தான். மனசு அடங்காம தூக்கம் வராது. ஒரு நிமிஷம் இரு. உன்னைத் தூங்க வைக்கறேன்.’’

‘‘என்னய்யா... ஏதாவது மாத்திரை தரப்போறீங்களா?’’

‘‘அது எதுக்கு... உன் பிறந்த தேதி எது?’’

‘‘பதினாறு...’’

‘‘அப்ப நீ ஏழாம் நம்பர்காரன். ஏழுக்கு சந்திரன் மனோ மயக்ககாரகன். அவன் ஜாதகத்துல எந்த வீட்ல இருக்கான்?’’

‘‘நீங்க கேக்கறதே புரியலய்யா...’’

‘‘விடு. பிறந்த தேதிய சொல்... பிறந்த நேரம் - இடம் சொல்...’’

‘‘எனக்கு ஜாதகம் பாக்கப் போறீங்களா?’’
‘‘பொழுது போகணுமில்லையா?’’

‘‘அப்ப தூக்கம்?’’

‘‘தூங்குவே... அதுக்கும்தான்!’’

‘‘இப்படி நினைச்சப்ப எல்லாமா ஜாதகம் பார்க்கறது?’’

‘‘கணக்குதானேப்பா... அதை எப்ப போட்டா என்ன? நீ உன்னோட விவரங்களைக் கொடு...’’

‘‘அப்ப நாமெல்லாம் கணக்கு மட்டும்தானா?’’

‘‘அதுல என்ன சந்தேகம்?’’

‘‘எல்லாமேவா கணக்கு?’’

‘‘ஆமாம்பா...’’

‘‘இதை நம்ப எனக்கு சிரமமாயிருக்கு...’’

‘‘நான் இப்ப உனக்கு ஒரு ஆச்சரியமான கணக்கைச் சொல்லவா?’’

‘‘என்ன கணக்கு?’’

‘‘நம்ம நாடாளுமன்றமே இப்ப ராகுங்கற நாலாம் நம்பர் பிடிக்குள்ளதான் இருக்கு. தெரியுமா உனக்கு?’’

‘‘எப்படி?’’

‘‘ஆளுங்கட்சி எம்.பி.க்களின் எண்ணிக்கை 283... கூட்டினா நாலு வரும். அவங்க கூட்டணியான என்.டி.ஏ. கட்சிகளோட எம்.பி.க்கள் எண்ணிக்கை 337... கூட்டினா நாலு! அடுத்து எதிர்க்கட்சிக் கூட்டணி எம்.பி.க்களோட எண்ணிக்கை 58. கூட்டினா நாலு. மத்தவங்க 148... கூட்டினா நாலு!’’

‘‘நிஜமாவா?’’

‘‘சோதிச்சுப் பாத்துக்கோ...’’

‘‘இது ஏன் தற்செயலான ஒண்ணா இருக்கக் கூடாது...’’

‘‘கணக்குல தற்செயல், தகாத செயல்னு எல்லாம் கிடையாது. சரியா கணக்கு போட்டா, யார் போட்டாலும் ஒரே விடைதான்.’’

‘‘அது சரி... இதுக்கு என்ன அர்த்தம்?’’

‘‘ஒரே அர்த்தம்தான்... எது எப்ப நடக்கணுமோ, அது அப்ப நடந்துக்கிட்டிருக்கு!’’

‘‘ஒரு பெரிய விஷயத்தை இப்படி சாதாரணமா சொன்னா எப்படிய்யா?’’

‘‘எப்படிச் சொன்னாலும் அதுதான்யா சரியான பதில்!’’

‘‘சரி... இப்ப ராகுவோட பிடில இருக்குன்னு எதை வச்சு சொன்னீங்க?’’

‘‘நாலாம் நம்பர்தான் ராகுவோட எண்...’’

‘‘அப்ப அந்த கிரக ஆதிக்கம்தான் இந்த நாட்டை வழி நடத்துதா?’’

‘‘அப்படியும் சொல்லலாம்!’’

‘‘எவ்வளவு காலத்துக்கு?’’

‘‘வர்ற தேர்தல் வரைக்கும்தான்...’’

‘‘அப்படின்னா, அடுத்து ஐந்தாம் எண் ஆதிக்கம் வருமா?’’

‘‘அது தெரியாது...’’

‘‘சரி... இது நமக்குத் தெரிய வந்தது எதுக்காக?’’

‘‘அது எங்க தெரிய வந்தது? நாமதான் கூட்டிப் பார்த்து தெரிஞ்சிக்கிட்டோம்...’’

‘‘சரி... இதைத் தெரிஞ்சுக்கிட்டதால என்ன பயன்?’’

‘‘இந்தக் கேள்விக்கு சுலபமா பதில் சொல்லிட முடியாது. ராகு நிழல் கிரகம், பாம்பு கிரகம், பாவ கிரகமும் கூட...’’

‘‘அதனால..?’’

‘‘எதிர்பாராத விஷயங்கள்தான் நிறைய நடக்கும். தர்ம - நியாயங்கள் கொஞ்சம் சிரமப்படும்...’’

‘‘என்னய்யா பதில் இது... இந்த நாட்டுல எந்தக் காலத்துலய்யா தர்ம - நியாயம் நல்லா இருந்துருக்கு?’’

‘‘வர்ஷா... வரலாறு தெரியாம சராசரி மனுஷன் மாதிரி பேசாதே. நீ இப்ப வாழ்ந்துக்கிட்டிருக்கற இந்தக் காலமும், வாழ்க்கையும் வரப்ரசாதம். அந்தக் காலத்து மனுஷனுக்கு அவன் கால்களால நடக்க முடிஞ்ச தூரம்தான் அவன் உலகம்.

அவன் வாழற ஊர்ல விளையறது மட்டும்தான் உணவு. அவனைச் சுத்தி உள்ளவங்க மட்டுமே சுற்றம். இன்னிக்கு என்ன அப்படியா? இந்த நொடில நீ உலகம் பூரா தொடர்பு கொள்ளலாம். பணம் மட்டும் இருந்தா போதும்... எதையும் வாங்கலாம். உன் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் வேணும்னு உன் அந்தராத்மா

நினைச்சாதான் நீ அதுக்கு மெனக்கெடணும். வேற எதுக்கும் இங்க யாரும் சிரமப்பட இடமில்லை...''

- வள்ளுவர் பொங்கி வழிந்தார். வர்ஷன் திகைத்தான். ஆன்மிகத்திலிருந்து அப்படியே அவர் விஞ்ஞானத்துக்கு கியர் மாற்றிக்கொண்டு விட்டது போலத் தோன்றியது.

வெறித்தான்.

''என்ன பாக்கறேப்பா?''

''வார்த்தைக்கு வார்த்தை சரிய்யா... ஆனா எவ்வளவு பெரிய முரண்பாடு தெரியுமா உங்ககிட்ட?''

''முரண்பாடெல்லாம் இல்லப்பா! நான் நாலையும் பார்த்தவன். உன்னைவிட நாலு பங்கு கூடுதலா மூச்சு விட்டவன். என் அளவு யோசிக்கவோ, சிந்திக்கவோ உன்னால முடியாது.''

''அய்யா! பேசிக்கிட்டே என் ஜாதகத்தைப் பாக்க மறந்துட்டீங்களே...''

''அதுக்கு ஒரு பத்து நிமிஷம் ஆகும்!''

''தாராளமா எடுத்துக்குங்க... என் எதிர்காலத்த பத்தி சொல்லுங்க. நான் அதுக்குள்ள டீக்கடை வரை போய்ட்டு வர்றேன்...''

''அந்த உளவாளிய பாக்கவா?''

‘‘ஆமாம்... ஹெல்மெட்டை மூடிக்கிட்டு என்கிட்ட இருந்து தப்பிக்கிற அவன்கூட ஒரு சின்ன கண்ணாமூச்சி விளையாட்டு...’’

‘‘சரி, போய்ட்டு வா!’’

- அவர் கூற, வர்ஷன் வெளியே வந்தான். இரவு நேர அழுத்தம்... சில்வண்டு சப்தம்... தெருவிளக்கின் சலிக்கப்பட்ட அழுக்கு வெளிச்சம்... டீக்கடை மூடப்பட்டிருந்தது. சுகுமாரைக் காணவில்லை! ஆச்சரியமாகவும் அதிர்ச்சி யாகவும் இருந்தது. திரும்பித் திரும்பிப் பார்த்தான். எங்கும் யாரும் இல்லை. நாய் ஒன்று மெல்ல அருகில் வந்து ஏறிட்டது. அவனுக்கு எங்கே அது கடித்துவிடுமோ என்று அச்சமாக இருந்தது. அதைப் பார்த்தபடியே திரும்பி நடக்கத் தொடங்கினான். வள்ளுவர் வீட்டு வாசலுக்கு வந்து நிறுத்தியிருந்த கார் மேல் சற்று சாய்ந்தான்.

‘‘என்னப்பா... போன வேகத்துல வந்துட்டே?’’

- வள்ளுவர் குரல் உள்ளிருந்து கேட்டது.

‘‘அவன் இல்ல சாமி... போயிட்டான் போல இருக்கு!’’

‘‘விடு... நீ உள்ள வா! அப்புறம் உன் கட்டத்த என்னால பாக்க முடியல. பார்... கம்ப்யூட்டர்ல பவர் இல்ல... பேசாம நாம இப்ப படுப்போம். நாலு மணி ஆகட்டும். கிளம்பலாம்...’’ என்றார். அவனுக்கும் வேறு வழி தெரியவில்லை. வர்ஷன் உள்ளே சென்று கதவைத் தாழிட்டான். வெளியே அவன் கார் நிற்கும் இடத்திற்கு கச்சிதமாக ஒரு உருவம் வந்து நின்றது!

41

“ஜோசப்பிடம் நான், ‘ஒரு அமானுஷ்ய அனுபவத்திற்கு என்னை ஆளாக்க முடியுமா?’ என்று கேட்ட கேள்விக்கு அவர் எந்த பதிலையும் கூறவில்லை. மௌனமாக சிரித்தார். பின்னர் அதற்கொரு விளக்கம் அளிக்கத் தொடங்கினார்.

‘அமானுஷ்ய அனுபவங்கள் விண்ணிலிருந்து விழும் நட்சத்திரம் போன்றவை. நாம் பார்க்கும்போது நட்சத்திரம் விழாது. அது விழும்போது பார்க்க முடிந்தால் அதுவே அமானுஷ்யம்’ என்றவர், ‘எதற்கும் ஒரு முயற்சி செய்து பார்க்கலாம். அந்த அனுபவம் சித்திக்காவிட்டாலும் வேறு நல்ல அனுபவங்கள் நமக்கு சித்திக்கலாம். அதற்காக நாம் ‘காலாலங்கிரி’ எனும் மலைக்குச் செல்ல வேண்டும்’ என்றார்.

‘காலாலங்கிரியா..? புதிய பெயராக, கேள்விப்படாத ஒன்றாக உள்ளதே’ என்றேன்.‘ஆமாம்... ஆய்வு ஆய்வு எனத் திரியும் எனக்கே இப்போதுதான் தெரியும்... சதுரகிரி மலைச் சருக்கத்தில் எவ்வளவோ மலைகள் - அதில் ஒன்றுக்கு இந்தப் பெயர். ஆனாலும் இந்தப் பெயர் சிலருக்கே தெரியும். மற்றவர்கள் வரையில் அந்த மலைக்கு பதினெட்டு பேர் மலை என்பதாகும். சுருக்கமாய் ‘பதினெட்டார் மலை’ என்பார்கள்’ என்றார்.‘பதினெட்டு என்று வந்தாலே அங்கே ஒரு போராட்டம் வந்து விடுமே?’ என்றேன் நான்.

‘உண்மைதான்... பதினெட்டு என்கிற எண் ஒரு முழு முயற்சிக்கான எண். குறிப்பாக சன்னியாசிகளுக்கும், சித்தர்களுக்குமான எண்... ஆசையோடு வாழ்கிற நம்

போன்றவர்களுக்கெல்லாம் பதினாறுதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது' என்றார் ஜோசப்.'பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க என்று வாழ்த்துகிறார்களே... அந்தப் பதினாறா?' என்று கேட்டேன் நான்.'ஆமாம் கணபதி...

நமக்குப் பதினாறு பேறுகள்! கல்வி, செல்வம், ஆரோக்கியம், ஆயுள், புத்ர பாக்யம், பொன், நிலம், தைரியம், வீரம், புகழ், எண்ணியதை அடையும் சித்தி, பதவி, சொல்வன்மை, கருணை, நெல், அழகு' - இப்படி இந்தப் பதினாறைச் சொல்வார்கள். இவை அவ்வளவும் இருந்தால், ஒரு மனிதன் தான் எடுத்த மனுஷப் பிறப்பை நன்றாக அனுபவிக்க முடியும். இந்தப் பதினாறோடு ஞானம், வைராக்கியம் என இன்னும் இரண்டு சேரும்போது அது பதினெட்டு ஆகிவிடுகிறது. பதினாறு நமக்கு... பதினெட்டு சன்னியாசிகளுக்கு... அவர்கள் இந்தப் பதினாறையும் அப்படியே கடவுளுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு ஞானம், வைராக்கியத்தோடு வாழ்ந்து முக்தி அடைபவர்கள். அதனால்தான் பதினெட்டில் இல்லாத ஒரு ஆர்வம் பதினாறுக்கு...' என்றார்.

'அப்படி என்றால், பதினெட்டார் மலை எனப்படும் காலாலங்கிரிக்குள் பதினாறும் இருக்கிறது, பதினெட்டும் இருக்கிறது எனப் பொருளா?' என்று அடுத்து கேட்ட என்னை ஜோசப் மிக வியப்போடு பார்த்துவிட்டுச் சொன்னார்.'ஒரு கோணத்தில் அப்படித்தான்... ஆனால் காலாலங்கிரி மலை கணக்குக்குப் பெயர் பெற்ற ஒரு மலை. அங்கே எல்லாமே கணக்குதான். அங்கே எழுத்துக்களை விட எண்களுக்கே முக்கியத்துவம். இன்றைய மக்கள்தொகை எவ்வளவு என்பதிலிருந்து, இந்த வருடம் பெய்யும் மழை அளவு, நெல் அளவு எவ்வளவு என்பது வரை அங்கே கணக்கு உள்ளது.

அங்கே ஒரு சூரிய கடிகாரம் உள்ளது. ஒரு கல் சக்கரத்தின் மேல் சூரியக் கதிர்கள் பட்டு விழும் நிழல்தான் கடிகார முள். அதைக் கொண்டே நேரத்தைத் துல்லியமாகத் தெரிந்துகொண்டு விடலாம். ஒரு மிகப் பெரிய அறிவுப் பரம்பரை அங்கே வாழ்ந்துவிட்டுப் போயிருக்கிறது. அதன் மிச்சம் மீதியாக இன்னமும் சிலர் உள்ளனர். அங்கே குருநாதர்களின் அடிகளை ஒட்டி நடந்தே அறிவையும் ஞானத்தையும் பெற வேண்டும்.

எனவே, அங்குள்ளவர்களின் பெயரின் முடிவில் 'அடிகள்' என்ற வார்த்தை இடம் பெறும். அடுத்து, அவர்கள் பெரும்பாலும் சித்த நடைமுறை கொண்டவர்களாய் இருப்பதால் ஒன்று குருவின் பெயரை வைத்துக்கொள்வர்; இல்லாவிட்டால் காரணப் பெயரைக் கொண்டிருப்பர். அதிகாலை பிறந்தவர் என்றால் பிரம்ம அடிகள், பௌர்ணமியன்று பிறந்தவர் எனில் பூர்ண சந்திர அடிகள், இப்படி...'இப்படி ஜோசப் சந்திரன் காலாலங்கிரி பற்றிச் சொல்லவும் கஞ்சமலையும் அதன் பொன்னும் எனக்குள் பின்னே சென்று விட, காலாலங்கிரியும் அதன் கணக்கும் என்னுள் நிமிர்ந்து நின்றன!"

– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

இருளில் நின்ற அந்த உருவம், உட்புறமாய் எட்டிப் பார்க்க வேண்டி வாசல் கதவு வரை சென்றது. சாத்தியிருந்த கதவின் சாவித் துவாரம் வழியாக உள்ளே நடப்பதை பார்க்கத் தொடங்கியது.உள்ளே...

"அய்யா... வெளிய நடக்கற விஷயத்தை என்னால அனுமானிக்கவே முடியல. பெரிய மர்மமா இருக்கு. அந்த சுகுமார்

எங்க போயிருப்பான்னு தெரியல. ஒருவேளை காலைல வந்து பாத்துக்கலாம்னு முடிவு செய்து போயிருப்பானோ?’’

‘‘இருக்கலாம்... நீ படுப்பா! தூங்கினாதான் நல்லா யோசிச்சு செயல்பட முடியும். தூக்க கலக்கம் தப்பா சிந்திக்க வச்சுடும். அதுலயும் காலப் பலகணியைத் தேடுற விஷயம் ரொம்ப நுட்பமானது. நாம கவனமா செயல்படணும்!’’

‘‘உண்மைதான்... ஆனா மனசு அடங்கினாதானே தூக்கம் வர்றதுக்கு?’’

‘‘அடக்குப்பா! உள்ளங்கைல விரல் நுனிகளை மெல்ல பிடிச்சு விடு. காற்றை நல்லா இழுத்து மூச்சு விடு. தூக்கம் வரும்!’’

‘‘இது என்ன அக்குபங்ச்சர் முறையா?’’
‘‘கொஞ்சம் அப்படித்தான்...’’

‘‘எல்லா டாபிக்லயும் உங்களுக்கு நல்ல அறிவு இருக்கு. ஆனா ஓட்டு வீட்ல அழுக்கு வேட்டியும் சட்டையுமா நீங்க இருக்கறதுதான் ஏன்னு புரியல...’’

‘‘படுத்துக்கிட்டே பேசு... நீ என்ன சொல்ல வர்றே? கோடிக்கணக்குல சம்பாதிச்சு ஆடம்பரமா வாழற வாழ்க்கைதான் உன் வரை வெற்றிகரமான வாழ்வா?’’

‘‘ஆமாம்யா... கிடைச்சிருக்கற வாழ்க்கைங்கற இந்த வாய்ப்பை நல்லா அனுபவிக்கணும்னா, பணம் அதுக்குப் பெரிய தேவையா இருக்கே?’’

‘‘தப்புப்பா! பணம் நிறைய இருக்கற எல்லாரும் சந்தோஷமா இருக்கறதா நீ நினைக்கறது பெரிய தப்பு. மனுஷ மனசு ரொம்ப விசித்திரமானது. சந்தோஷத்தை அனுபவிக்க ‘தைரியம், தெளிவு, பிராப்தம்’ங்கற மூணுதான் ரொம்ப முக்கியம். இது ஒரு தினக்கூலிக்காரன் கிட்ட இருந்தாகூட போதும். அவன் சந்தோஷமா இருப்பான். நானும் சந்தோஷமானவன்தான்...

ஒரு சின்ன விஷயம் சொல்றேன்... கேட்டுக்கிட்டே தூங்கு. ஒரு கோடீஸ்வரன் இருந்தார் - அவர்கிட்ட ஒரு கார் டிரைவர் இருந்தார். இந்த கார் டிரைவருக்கு மாசம் பத்தாயிரம் ரூபா சம்பளம். திடீர்னு ஒரு நாள் அந்தக் கோடீஸ்வரர் ‘உனக்கு இனி மாசம் இருபதாயிரம் சம்பளம்’னார். அவன் சந்தோஷத்துல அப்படியே திக்குமுக்காடிட்டான். இரண்டு மாச சம்பளம் ஒரு மாசம் கிடைச்சா சந்தோஷமாதானே இருக்கும்!

அதே சமயம் அந்தக் கோடீஸ்வரர், தன் தொழில்ல அந்த வருஷம் நூறு கோடி ரூபாய் லாபம் எதிர்பார்த்தார். ஆனா,

தொண்ணூறு கோடிதான் கிடைச்சது. தொண்ணூறு கோடி கிடைச்சதுக்காக அவர் சந்தோஷப்படலை... பத்து கோடி கிடைக்காமப் போச்சேன்னு வருத்தப்பட்டார். வெறும் பத்தாயிரம் கூடக் கிடைச்ச காரணத்துக்காக சந்தோஷப்பட்டவன் இங்கு கொடுத்து வச்சவனா? இல்ல, பத்து கோடி குறைஞ்சு போனதுக்காக வருந்தினவர் கொடுத்து வெச்சவரா? யாரு?''

வள்ளுவர் கேட்க, வர்ஷன் ''கார் டிரைவர்தான்யா...'' என்றான்.

''அப்ப, இங்க சந்தோஷத்தை பணத்தோட அளவு தீர்மானிக்குதா... இல்லை, பாக்கற பார்வை தீர்மானிக்குதா?''

''பார்வைதான்...''

''பார்வைக்குத் தேவை தெளிவு... தெளிவுக்குத் தேவை தைரியம்... இந்த இரண்டுக்கும் தேவை பிராப்தம். அதாவது, நமக்கு கிடைக்கணும்ங்கற விதி!''

''உங்ககூட பேசிக்கிட்டிருந்தா நிறைய விஷயம் தெளிவாகும் போலத் தெரியுது!'' என்று கொட்டாவி விட்டான்.

''தூக்கம் வந்துடுச்சி. படு... கார் வெளியவே நிக்கட்டும். நாம பின்வழியா போயிடுவோம். அப்புறமா போன் பண்ணி காரை உன் வீட்ல யாரையாவது வந்து எடுத்துக்கிட்டு போகச் சொல்லிடு. நாம இடைக்கழிநாடு நோக்கிப் போற விஷயம் நம்ப நாலு பேரைத் தவிர யாருக்கும் தெரியக் கூடாது. இப்ப அதுதான் முக்கியம்...'' என்ற வள்ளுவரும் கண்களை மூடினார். வெளியே சாவித் துவாரம் வழியா கேட்டுக் கொண்டிருந்த உருவத்திடம் பெரிய அளவில் அதிர்ச்சி.

அப்போது, ‘‘யாருப்பா அது கதவுகிட்ட..?’’ என்று ஒரு கேள்வி. அது உள்ளே வள்ளுவர், வர்ஷன் காதிலும் விழுந்தது.

வெளியே தெருவில் இரவுக் காவலுக்குச் செல்லும் ஊர்க் காவல்காரன் ஒருவன் குரல் அது. அடுத்த நொடி அந்த உருவம் தெருவில் இறங்கி ஓட ஆரம்பித்தது.

‘‘டேய்! நில்லுடா... நில்லுடா...’’ என்று காவல்காரன் கத்துவதும் கேட்டது. வள்ளுவர் வேகமானார். எழுந்து வந்து கதவைத் திறந்தார். தெருவில் கையில் ஒரு தடியுடன் காவல்காரனின் ஓட்டம் தெரிந்தது.

வள்ளுவரைத் தொடர்ந்து வர்ஷனும் வெளியில் வர, காவல்காரன் ஓடிவிட்டுத் திரும்பி வந்தான்.

‘‘என்ன குமாரசாமி... யார் அது?’’

‘‘யாருன்னு தெரியல ஜோசியரே... உங்க வீட்டு வாசப்படிகிட்ட நின்னு சாவித் துவாரம் வழியா உள்ள பாத்துக்கிட்டு இருந்துச்சு ஒரு உருவம். எனக்கு பக்குன்னு ஆகிப்போச்சு. ‘யாருப்பா அது’ன்னு கேட்கவும் ஓட ஆரம்பிச்சிட்டான். கார் வேற வெளிய நிக்கவும் கார்காரனா இருக்குமோன்னு நினைச்சேன்!’’காவல்காரன் சொன்னது வள்ளுவரைக் கூர்மையாக்கியது.

‘‘வர்ஷன்... அந்த சுகுமாராதான் இருக்கணும். நாம பேசினதை கேட்டிருப்பான்னு நினைக்கறேன். நாம இடைக்கழி நாடு போகப் போற விஷயத்தைக் கேட்டிருந்தா, அவன் நேரா அங்க வந்துடுவான். ஒண்ணு சொல்றேன்... இனி யாரையும் திசை திருப்பற வேலையெல்லாம் செய்ய வேண்டாம். நாம நேர் வழில நம்ம சௌகர்யப்படி போவோம். தொடர்ந்து வர்றவங்க விதிப்படி என்ன

நடக்கணுமோ, அது நடக்கட்டும்!'' என வள்ளுவர் சொல்லும்போதே அந்த இரவு வேளையில் சிலர் தெருவில் ஓடி வருவது தெரிந்தது.

அவர்கள் தெருவில் நின்றபடி பேசிக் கொண்டிருந்த காவல்காரனைப் பார்த்ததும், ''குமாரசாமி! நீ இங்க இருக்கியா... அங்க ரயில்வே ட்ராக்ல ஒருத்தன் அடிபட்டு செத்துட்டாம்பா. உன்கிட்ட போன் இருந்தா முதல்ல சொல்லு. நாங்க போன் பண்ணா நாளைக்கு எங்க நம்பரை வச்சு நாயா அலைய விடுவாங்க. அதான் உன்னைத் தேடி வந்தோம்!'' என்றனர்.

''அது யார்னு தெரியலையா?''

''வயசுப் பையன்... போன் பேசிக்கிட்டே ஓடி வந்தான்! வண்டி வர்றத கவனிக்காம தண்டவாளத்தைத் தாண்டவும், அடிபட்டுட்டான். இருட்டுல எதுவும் தெளிவா தெரியலப்பா...''- அவர்கள் சொல்லவும் டார்ச் லைட்டை எடுத்துக்கொண்டு ஓடினான் வர்ஷன். வள்ளுவரும் உடன் ஓட, காவல்காரனும் ஓடினான்.

ரயில்வே ட்ராக் அருகே அவர்கள் சென்ற நொடிகளில் நாகர்கோயில் ஸ்பெஷல் ட்ரெயினின் அசுரப் பாய்ச்சல்! இருபத்தி நாலு கேரேஜ் இரும்பு வீடுகளும் கடந்து முடிய, டார்ச் லைட் வெளிச்சத்தில் நசுங்கிக் கிடந்த உருவத்தை நெருங்கிச் சென்று பார்த்தபோது வர்ஷனின் இதயம் ஒரு நொடி தீக்குளித்தது போலானது.

சுகுமார்தான் சின்னாபின்னமாகிக் கிடந்தான்! சற்று தூரத்தில் அவன் கைவசமிருந்து தெறித்து விழுந்திருந்த செல்போன் எந்த சேதமுமின்றி கிடக்க, அதன் திரையில் வெளிச்சம் தோன்றி வர்ஷனை நெருங்கச் செய்தது. சைலன்ட் மோடில் இருந்த அதனிடம்

அழைப்பு. திரையில் ‘சாவ்லா’ என்னும் பெயர். எடுத்த வர்ஷன், பெருமூச்சோடு ஆன் செய்து காதைக் கொடுத்தான்.‘‘சுகுமார்... ஆர் யூ ஹியரிங் மை வாய்ஸ்...’’ - என்று மறுபுறம் கேள்வி.

‘‘லேட்டர் ஐ வில் கால் யூ...’’ என்று வேகமாய் சொன்னவன், செல்லை அணைத்தான். பத்திரமாக தன் பாக்கெட்டில் அதைப் போட்டுக்கொண்டான். நிச்சயம் தன் குரலை அந்த நான்கு சொற்களை வைத்து அந்த சாவ்லா ‘இது வேறு ஆள்’ என்று நினைக்க வழியில்லை என்று கருதியபடியே கடந்து வள்ளுவர் அருகில் வந்தான்.

காவல்காரன் அப்போதுதான் வந்து சேர்ந்தவனாக, ‘‘டார்ச்லைட்டை கொடு தம்பி’’ என்று வாங்கிக்கொண்டு உடம்பு கிடந்த இடம் நோக்கிச் சென்றான்.

வள்ளுவர் மட்டும் வர்ஷனிடம், ‘‘தம்பி... நமக்கு இனி எந்தப் பிரச்னையுமில்ல. நம்மை யாராலயும் ஃபாலோ பண்ண முடியாது. காலப் பலகணியை நம்மைத் தவிர யாராலயும் நெருங்கவும் முடியாது. வா, நாம போவோம்...’’ - என்றார் மிக தைரியமான குரலில்!

வாட்ச்மேன் திரும்பி வந்தவனாய், ‘‘இவன்தான் ஓடினவன். இப்படி இந்த ராத்திரியில இங்க அடிபட்டு சாகணும்ங்கற இவன் விதிய நினைச்சாதான் ஜோசியரே ரொம்ப வருத்தமா இருக்கு’’ என்றபடியே தன் செல்போனில் போலீஸைத் தொடர்புகொண்டான்.

‘‘அய்யா! நான் திரிசூலம் பக்கமா காமராஜ் நகர்ல இருந்து பேசறேங்க. நான் காவல்கார குமாரசாமிதாங்க பேசறேன்...’’ என்று அவன் பேசத் தொடங்க... வர்ஷனும், வள்ளுவரும் வீடு நோக்கி

நடந்தனர். வர்ஷன் மெல்ல செல்போனை எடுத்து, ‘‘அய்யா... இதுல இருக்குய்யா நம்ம ஃபாலோ பண்றவங்க யாருங்கற விபரம். அவன் கைல இருந்த போன்தான் இது...’’ என்றான்.

‘‘இதை வச்சு என்ன பண்ணப் போறே தம்பி?’’

‘‘இதுல இருக்கற நம்பரை வச்சு யார் அவங்க, அவங்க அட்ரஸ்னு எல்லாம் தெரிஞ்சுக்கலாம். உள்ளே அவன் மெயிலைத் திறந்தா பல தகவல்கள் தெரிய வரலாம்!’’

‘‘அதுக்கு பாஸ்வேர்ட் தெரிய வேண்டாமா?’’

‘‘முதல் தடவை திறக்கத்தான் தெரியணும். ஒரு தடவை திறந்துட்டா அப்புறம் தேவையில்லை!’’ - என்றபடியே மெயில் பாக்ஸுக்கு சென்று திறந்தான். மெயில் ஆங்கிலத்தில் இருந்தது.

‘‘தம்பி... அதை அப்புறம் பாக்கலாம். நாம இப்பவே கிளம்பறது நல்லது. போலீஸ் வந்ததும் இங்க நம்மைத் தேடி வந்தா, தேவையில்லாத கால விரயம் ஏற்படலாம்!’’

‘‘நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். இந்த செல்போன்தான் ஒரு வகைல நாம போற பாதையைக் காட்டிக் கொடுக்கற கருவி. அதுவே இப்ப நம்ம கைல! இந்த தேடல்ல சுகுமார் அடுத்த பலி... பாவம்! நீங்க சொன்ன மாதிரி நமக்கு மட்டும்தான் காலப் பலகணியைத் தேட அனுமதி கிடைச்ச மாதிரி நான் ஃபீல் பண்றேன்!’’ என்றபடியே வீட்டிற்குள் நுழைந்தான் வர்ஷன். அடுத்த பத்தாவது நிமிடம் அவர்கள் புறப்பட்டுவிட்டனர்.

* * *

மறுநாள்!

இடைக்கழி நாட்டு மையப்பகுதி.நேரம், மதியம் பன்னிரண்டு மணி. காரில் இருந்து இறங்கிய வள்ளுவர், ப்ரியா, வர்ஷன் மூவரும் நாலாப்புறமும் பார்த்தனர். வர்ஷன் கையில் திசைகாட்டி... அதன் காந்த முள் துல்லியமாக வடக்கைக் காட்ட, அதைக் கொண்டு கிழக்கு, மேற்கு, தெற்கு திசைகள் தெளிவாகிட, வடக்குக்கு வலப்பக்க வாட்டில் மிகச்சரியாக நூறு டிகிரியில் ஒரு பாதை!

42

*"**கா**லாலங்கிரி மலை நோக்கிய எங்கள் பயணம் ஒரு அற்புதம் என்றே சொல்வேன். அந்த மலையில் கால் வைப்பதற்கு முன் சதுரகிரி சென்று அங்குள்ள சந்தன மகாலிங்கத்திடமும் சுந்தர மகாலிங்கத்திடமும் அருளைப் பெறுவது அவசியம் என்ற ஜோசப் சந்திரனை நான் வியப்புடன் பார்த்தேன்.*

அவருக்கும் புரிந்தது.'கணபதி, நான் ஒரு இந்துதான். ஜோசப் என்பது என் குருவின் பெயர். தொல்பொருள் இலாகாவில் ஒரு முத்திரை பதித்தவர் ஜோசப் டேனியல். அவர் நினைவாக நான் எனக்கு வைத்துக்கொண்ட பெயர்தான் ஜோசப் சந்திரன் என்பதாகும்.

ஜோசப் டேனியல் சார் ஒரு அனுபவக் களஞ்சியம். ஒரு கல்லைக் கொடுத்தால் அதன் வயதைக் கூறிவிடுவார். இன்றைய ஆர்க்கியாலஜி அசுர வேகத்தில் முன்னேறி விட்டது. மிகப் பழமையான கற்களை, எலும்புகளை, ஓடுகளை, எழுத்துக்களை

மற்றும் தடயங்களை அடையாளம் காண எனக்கு சொல்லித் தந்தவர் ஜோசப் டேனியல்.ஆகையால் நான் சந்தன-சுந்தர மகாலிங்கங்களை வணங்கவேண்டும் என்று சொன்னதைக் கண்டு ஆச்சரியப்படாதீர்கள். நாம் காலாலங்கிரி செல்ல இருப்பது வழிபாட்டுக்காக மட்டுமல்ல... யாராவது ஒரு சித்தரை சந்திக்கவும்தான்...' என்றார்.

'என்றால் அங்கே நிறைய சித்தர்கள் உள்ளனரா?' - என்று நான் கேட்டேன்.'சித்தர்கள் என்று சொல்லிக்கொண்டு நிறைய பேர் திரிகிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் சித்தர்களல்ல..! சித்தனுக்கு இலக்கணமே அவன் தன்னை சித்தன் என்று கூறவோ, பிறர் தன்னை சித்தன் என்று கருத இடம் தரவோ கூடாது என்பதுதான்' என்று ஜோசப் கூறவும் எனக்கு ஆச்சரியம். மேலும் அவர் தொடர்ந்தார்...

'சித்தர்களுக்கு ஒரு தெளிவு உண்டு. அதில் மிக முக்கியமான ஒன்று, பிறர் தங்களை நினைத்து வியப்பதோ... இல்லை, பெரிதாக மதிப்பதோ கூடாது என்பதாகும். இரண்டுமே மாயை சார்ந்தவை. எனவே, இப்படி மற்றவர்கள் தங்களைக் கருதுவதை அவர்கள் விரும்பமாட்டார்கள். அடுத்து... 'ஒருவன் ஒருவருக்குக் கடன் பட்டிராத நிலையில், அவருக்கு ஒன்றை வழங்கிவிட முடியாது' என்பதும் அவர்களுக்குத் தெரியும். அதனால் சமூகநலம், பிறருக்கு உதவுவது போன்றவற்றில் அவர்களுக்கு நம்பிக்கையோ விருப்பமோ கிடையாது' என்று அவர் கூறவும் எனக்கு அது ஆச்சரியமளித்தது. அதிர்ச்சியும் அளித்தது.

'சமூகநலத்தில் அக்கறை, பிறருக்கு உதவுவதில் நம்பிக்கை இல்லாதவர்கள் என்பதை எப்படி ஏற்பது?' என்ற என் கேள்விக்கும் ஜோசப் பதில் கூறினார்.

‘இந்து மதம், ‘காரணமில்லாமல் காரியமில்லை’ என்கிறது. எனவே இந்த உலகில் நடைபெறும் ஒவ்வொரு அசைவுக்குப் பின்னாலும் மிகச் சரியான காரணம் உண்டு. அதன் அடிப்படையில், ஒருவரின் இன்ப துன்பங்களுக்குப் பின்னாலும் காரண காரியமுண்டு. இந்தப் புரிதல் முதல் தேவை.

அடுத்து, யாராலும் எதையும் மாற்றிவிட முடியாது. அப்படி ஒருவர் மாற்றிவிட்டார் என்று யாராவது கருதினால், அது உண்மை கிடையாது. சாட்டையிலிருந்து விசையோடு விடுபட்ட பம்பரம், விசைக்கும், விழுந்த இடத்திற்கும், கூரிய முனைக்கும் ஏற்ப எப்படி ஒரு கணக்கெடுத்து சுழன்று பின் அடங்குகிறதோ, அப்படி ஒவ்வொருவர் பின்னாலும் ஒரு கணக்கு உள்ளது. எனவே, அவரவர் வாழ்வை அவரவர் வாழ்கிறார்கள். அதை மாற்றவோ கூட்டவோ குறைக்கவோ யாராலும் முடியாது என்பதே சித்தர்கள் உணர்ந்திருக்கும் விஷயம்.

எனவே, அவர்கள் தங்களையே ஒரு உலகமாகக் கருதி, தங்களுக்குள் தங்களைத் தேடி அறிந்து, பின் இயற்கையோடு கூடிக் கலந்து இருந்து, உலகின் மாயைக்கு இடம் கொடுக்காதபடி வாழ்ந்து முடிக்கிறார்கள். ரிஷிகளும் முனிவர்களும் இவர்களிலிருந்து சற்று வேறுபட்டு ‘கர்ம வினைப்பாடுகளை இறையருளால் மாற்ற முடியும்’ என நம்புபவர்களாக உள்ளனர். நம்மைப் போல பற்றும் பாசமும் கொண்டு வாழ்பவர்க்கெல்லாம் ‘வாழ்க்கை என்பது வாழ்வதற்கே!’

எனவே, மனிதன் அறம் சார்ந்த இல்வாழ்வும் புகழ் சார்ந்த உலக வாழ்வும் வாழ முற்படுவதில் தவறில்லை. ஒரு கட்டத்தில் மனமானது திருப்தியடைந்து எல்லாவற்றையும் அனுபவித்து

விட்டதாகக் கருதும். எதுவும் புதிதில்லை என்று தோன்றும். அப்போது அந்த வாழ்வை விட்டு விலகுவதும் சுலபமாக இருக்கும். அப்படி விலகி அதன்பின் யோக வாழ்வு வாழ்ந்து பிறவித் தளையிலிருந்து விடுபடலாம். இதுதான் நம் போன்றவர்களுக்கான இலக்கணம்.

இப்படி நம்முன் பலவித போக்குடையவர்கள் உள்ளனர். இவர்களில் சதுரகிரியில் தன்னை முன்நிறுத்திக் கொள்ளாத ஒரு சித்தனை நாம் சந்தித்தால் காலாலங்கிரியில் நமக்கு அவர் துணையால் நிறையவே அமானுஷ்ய அனுபவங்கள் ஏற்படலாம்' என்று முடித்தார் ஜோசப் சந்திரன்.''- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

வடக்கு திசையில் வலது பக்கத்தில் நூறு டிகிரியில் மிகச்சரியாக ஒரு பாதை இருந்தது. அது எங்கு சென்று முடிகிறது என்பது தெரியாமலே நீண்டிருந்தது. வர்ஷன் காரில் ஏறிக்கொண்ட நிலையில், காரின் மீட்டர் ரீடிங்கை கவனித்தான்.

அவன் பயன்படுத்தி வந்த அந்தக் கார் 76000 கி.மீட்டர்களைக் கடந்து ஒரு அளவில் நின்றபடி இருந்தது. அதைக் குறித்துக் கொண்டான்.

‘‘இங்க இருந்து இந்தப் பாதையோட முடிவு வரை போய்ப் பார்த்துட்டு, அது எவ்வளவு தூரமோ அதுல சரிபாதி தூரம் திரும்ப வருவோம். அப்படி வந்து நாம நிக்கற இடம்தான் இந்தப் பாட்டுக்கான பொருள்! அப்புறமா அங்க பூதக் கண்ணாடி உதவியோட நாம ஏட்டுல உள்ள அடுத்த பக்கத்தை அந்த இடத்துல நின்னு படிப்போம்’’ - என்றான்.

வள்ளுவரும் இதுதான் சரியான அணுகுமுறை என்று ஆமோதித்தார்.

காரும் புறப்பட்டது!

அது ஒரு மண்சாலை. இருபுறமும் அடர்வான முள் மரங்கள். அதனால் நிழலைக்கூட சரியாகத் தர முடியவில்லை. காரணம் அதன் கிளைகள் - இலைகள்! மரம் முழுக்க முட்கள் இருப்பதால் பறவைகள் வந்து தங்குவதிலும் இடைஞ்சல். அதைப் பார்க்கவும், ‘இதை அழித்து ஒழித்தால்தான் நீர் வளத்தைக் காப்பாற்ற முடியும்’ என்று பேசப்படும் விஷயம் வர்ஷன் நினைவுக்கு வந்தது.

‘‘ப்ரியா... எங்கே பார்த்தாலும் ஒரே முள்காடா இருக்கு. இது வளரணும்னு யாரும் எந்த முயற்சியும் செய்யல. இதுக்காக ஒருத்தர் விதை போட்டார்களா... இல்லை, உரம் போட்டார்களான்னு சொல்ல முடியுமா? ஆனாலும் எப்படி வளர்ந்திருக்கு பார்த்தியா? இதனால ஒரு பயனுமில்ல... ஆனா நிலத்தடி நீரை எல்லாம் உறிஞ்சிக்கிட்டும், காத்துல உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சியுமே இது வளர்ந்துடுமாம். அடுத்தவங்களை சுரண்டியும் அவங்ககிட்ட திருடியும் பிழைக்கற ஒரு சுயநலவாதிக்கும் இந்த மரத்துக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா?’’ - என்று தனக்குத் தெரிந்த விதத்தில் கேட்டான் வர்ஷன்.

‘‘ரொம்ப சரியா சொன்னே தம்பி... நம்ப மண்ணுல மரங்களை ‘விருட்சம்’னு சொல்வோம். அட்சம்னா கண்ணு... விருட்சம்னா ‘இந்த பூமிக்கே கண் மாதிரி’ன்னு அர்த்தம். கண்ணுக்கு இருட்டு ஆகாது. விருட்சத்துக்கும் அப்படித்தான். இங்க இருட்டுன்னா பொழுதை மட்டும் குறிக்கல. கசப்பான, தப்பான, வருத்தமான எல்லா விஷயங்களையும் அது குறிக்குது. ஒரு நல்ல விருட்சம் சுத்தி

இருக்கற தப்பான விஷயங்களை தான் எடுத்துக்கிட்டு, பதிலுக்கு நன்மையைச் செய்யும். அதனாலேயே நம்மவங்க விருட்சங்களை கடவுளா பார்த்தாங்க. கோயில்லயும் விருட்சத்துக்கு முதலிடம் கொடுத்தாங்க.

தலம், தீர்த்தம், விருட்சம், மூர்த்தின்னு ஒரு கோயிலுக்கான சிறப்புல விருட்சத்துக்கு முக்கிய பங்கு உண்டு. அதுல வேம்பு, வன்னி, ஆலம், அரசம்... இந்த நான்கும் ரொம்ப சிறந்தது. இதன் நிழல் கூட மருந்து. அரசமரக் காற்று, ஆலமர விழுது நுனி, வன்னி மர இலை, வேப்பங்கொழுந்து இந்த நாலோடும் தொடர்புல உள்ள ஒரு மனிதனை யாராலயும் வீழ்த்த முடியாதுன்னு சொல்வாங்க. அப்படி விருட்சங்களைக் கொண்டாடற இந்த நாட்டுக்குள்ளதான் இந்த விஷச்செடியும் புகுந்துடுச்சி. ஒருவிதத்துல இது மக்களோட கெட்ட எண்ணங்களையும் பேராசையையும் எதிரொலிக்குது. இது அதிகமா இருக்கற ஊர்ல மக்களும் சந்தோஷத்தோட இருக்க மாட்டாங்க. இது பாட்டுக்கு இருந்துட்டு போகட்டும்னு நினைக்கறவன் எப்படி பொறுப்புள்ள மனுஷனா இருப்பான். சொல் பார்ப்போம்?’’

- வள்ளுவர் வெகு அழகாகக் கேட்டார்.

அந்தப் பாதை ஒரு கோயிலை ஒட்டி முடிந்து விட்டிருந்தது. கார் மிகச் சரியாக அங்கு நின்றது. மீட்டர் ரீடிங்கில் ஒண்ணரை கிலோ மீட்டர் தூரம் வந்திருப்பதும் தெரிந்தது.

‘‘அய்யா! இதுக்கு மேல பாதையில்ல... இந்தப் பாதையோட நீளம் ஒண்ணரை கிலோ மீட்டர். கூடுதலா சில அடிகள் வேணா இருக்கலாம். இதுல சரிபாதி முக்கால் கிலோ மீட்டர். அதாவது 750 மீட்டர் தூரம். அப்படியே திரும்பி 750 மீட்டர் போய் நின்னா அதுதான் நாம ஏட்டுல படிச்சு தெரிஞ்சுகிட்ட இடம்’’ என்றான்.

‘‘நீ ரொம்பத் துல்லியமா இருக்கே... வண்டிய திருப்பு’’ - என்றார் வள்ளுவர்.

காரும் சிரமத்துடன் திரும்பியது. காரை அங்கே திருப்ப இட வசதியே இல்லை. இருந்தும் கொஞ்சம் கொஞ்சமாக திருப்பிக் கொண்டு மீட்டர் ரீடிங்கை பார்த்தபடியே வந்தான் வர்ஷன்.ப்ரியா பக்கவாட்டில் பார்த்துக்கொண்டே வந்தாள். உச்சி வெயிலின் உஷ்ணமான பிறாண்டல் காருக்குள் ஏ.சி.யின் கூலிங்கையே குறைத்து ப்ரியாவை புழுங்கச் செய்தது.இருபுறமும் முட்செடிகளின் கூட்டம்தான். அதற்கு அப்பால் பொட்டல் நிலம்... இடையில் ஒரே ஒரு இடத்தில் வேப்ப மரம் ஒன்று போனால் போகட்டும் என்று வளர்ந்திருந்தது. அதன் கீழ் ஆடு ஒன்று கட்டப்பட்டிருந்தது.

மிகச் சரியாக இண்டிகேட்டர் அந்த 750 மீட்டர் தொலைவு வந்து விட்டதைக் காட்டவும், காரை நிறுத்தினான் வர்ஷன். மூவரும் இறங்கினார்கள். வர்ஷன் வள்ளுவரைப் பார்த்தான். வள்ளுவர் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். பின், ‘‘அந்த ஏட்டை எடுத்து பூதக் கண்ணாடியால படி’’ என்றார்.கார் பானட் மேல் ஏட்டை வைத்து, கையில் கொண்டு வந்திருந்த பூதக்கண்ணாடி வழியாகப் படிக்க முனைந்தான் வர்ஷன்.

‘பாதி வழி வந்து நின்று மீதி வழி தேடி மனம்’ என்று ஒவ்வொரு வார்த்தையையும் பார்த்துப் பார்த்துப் படித்தான். வள்ளுவர் கூர்மையாக கேட்டுக்கொண்டே வர, ப்ரியா தன் டேப்லெட்டில் அதை எழுதிக்கொண்டே வந்தாள்.‘பாதி வழி நின்று, மீதி வழி தேடி மனம் சோதி வடிவாக வழி சோதி வழி தான்...’ என்று முதல் இரண்டு வரிகளை படிப்பதற்குள் அவனுக்கு வியர்த்துக் கிறுகிறுத்துவிட்டது. வள்ளுவரும் தொடர்ந்து படிக்கச் சொன்னார்.

‘சோதி வழி செல்லச் செல்ல ஆதிசிவன் குடில் மேதினியில் தான்... ஆதிசிவன் குடில் காவல் கொண்டவனின் பெயர் கூறி நின்றே காண் விண்ட இந்த ஏடு... அது காரும் ஒடு...’ - என்று ஒருவழியாகப் படித்து முடித்தான்.

‘‘அவ்வளவுதானா?’’

‘‘ஆமாம்யா! இனி படிக்கணும்னா அடுத்த பக்கம்தான்... அதையும் படிக்கவா?’’

‘‘வேண்டாம்... இந்த பாடலுக்கான பொருளை முதல்ல தெரிஞ்சிக்குவோம். எங்கே, முதல் வரிய சொல்லு...’’

‘பாதி வழி வந்து நின்று மீதி வழி தேடி மனம்
சோதி வடிவாக வழி சோதி வழி தான்...’

‘‘இதுக்கு அர்த்தம் என்னன்னா, ‘பாதி வழி வந்து நின்று’ன்னா இப்ப நாம வந்துருக்கற இடம்னு பொருள்! ‘மீதி வழி தேடி மனம்’னா... நாம் இப்ப அடுத்து எப்படிப் போறதுன்னு நினைக்கறோம் பார்... அதுதான்!’’

‘‘சோதி வடிவாக வழி சோதி வழிதான்னா?’’

‘‘சோதிங்கறது ஜோதிங்கற வெளிச்சத்தைக் குறிக்கற சொல். ஏடெழுதறவங்க வழக்குச் சொல்லையும் வடமொழி கலந்த சொல்லையும் பயன்படுத்தறது சகஜம். அந்த வகையில சோதி வடிவாகன்னா ஜோதி போல வெளிச்சமாக... அதாவது நம்ம மனசு வெளிச்சமா குழப்பமில்லாம செயல்படணும்னா அதுக்கு வழி சோதி வழிதான்...

அதாவது வெளிச்சத்தோட வழி... இங்க வெளிச்சத்தோட வழி எதுன்னா, சூரியனோட பாதை...'' - என்று அண்ணாந்து பார்த்த வள்ளுவர், ''உச்சி சூரியன் இப்ப மேற்கு நோக்கு சரிய ஆரம்பிச்சிட்டான்... நாம இங்க இருந்து மேற்கு நோக்கிப் போகணும்னு அர்த்தம்... அப்புறம் என்ன வரி படி!''

''சோதி வழி செல்லச் செல்ல ஆதிசிவன் குடில்...''

''அதாவது மேற்கே போகப் போக சிவன் கோயில்னு பொருள்... அப்புறம்?''

''மேதினியில் தான்... ஆதிசிவன் குடில் காவல் கொண்டவனின் பெயர் கூறி நின்றே காண் விண்ட இந்த ஏடு... அது காரும் ஓடு...''

''மேதினின்னா பூமின்னு பொருள்! அதாவது இந்த பூமியில ஆதிசிவன் கோயில் இருக்கற இடத்துல காவல் கொண்டவனின் பெயர் கூறி நின்றே காண் விண்ட இந்த ஏடுன்னா... அந்தக் கோயிலுக்குப் போய் அந்தக் கோயிலோட காவல் தெய்வம் யார்னு தெரிஞ்சுகிட்டு அதன் பிறகு இந்த ஏட்டைப் பார்க்கணும்னு பொருள்...''

- வள்ளுவர் விளக்கி முடித்தார்.

''அப்ப நாம இங்க இருந்து மேற்கு நோக்கிப் போகணும். அப்படி போற வழியில ஆதிசிவன் கோயில் வரும். அந்தக் கோயிலுக்குப் போய் அந்த கோயில் காவல் தெய்வம் எதுன்னு தெரிஞ்சிக்கிட்டு, அந்த காவல் தெய்வப் பேரை சொல்லிக்கிட்டே திரும்ப இந்த ஏட்டைப் பார்க்கணும். இல்லைங்களா அய்யா?''

- ப்ரியா சுருக்கமாக சொல்லி முடித்தாள்.

‘‘சரியா சொன்னேம்மா... சூரியன பாத்துக்கிட்டே மேற்கு நோக்கிப் புறப்படுவோமா?’’

‘‘மேற்கு நோக்கி நாம போகலாம் - பாதை இருக்கணுமே?’’

‘‘நீ இப்படிக் கேட்பேன்னு தெரியும்... அதோ பார் ஒரு பாதை!’’ - வள்ளுவர் காட்ட, அந்தப் பாதைக்கு நேர் மேல் ஒருமணிச் சூரியன்! வர்ஷனும் காரைக் கிளப்பினான்.ப்ரியாவிடம் புதிதாய் ஒரு சலனம்.

‘‘என்னம்மா சலனம்?’’

‘‘அய்யா, இது ஏற்கனவே எழுதப்பட்ட ஏடுதானே?’’

‘‘அதுல என்ன சந்தேகம்?’’

‘‘எழுதின எதுவும் மாறவே மாறாதுதானே?’’

‘‘நிச்சயமா மாறாது!’’

‘‘அப்ப ஒரு சந்தேகம்...’’
‘‘என்ன?’’

‘‘இந்த ஏடு யார் கைல கிடைக்குதோ அவங்கதானே படிச்சு அதன்படி நடக்க முடியும்...’’

‘‘ஆமாம்.’’

‘‘சென்னைல இது நம் கைல கிடைச்சது. அதனால நாம இவ்வளவு தூரம் வந்துருக்கோம். இதே ஏடு வேற ஊர்ல இருக்கற யாருக்காவது கிடைச்சா, அவங்களால எப்படி இந்த இடத்துக்கு வர முடியும்?’’

‘‘முடிவா நீ என்ன கேக்க வர்றே?’’

‘‘பொதுவா வழிகாட்ற ஏடு எல்லாருக்கும் பொதுவானதாதானே இருக்கணும். ஆனா இங்க அப்படி இல்லை. திசையும் தூரமும் இதுல பிரதானம்... அப்படி இருக்க, வேற ஊர்னு வரும்போது எப்படி இதே திசைல வர முடியும்?’’- ப்ரியா கேட்ட கேள்வி வர்ஷனையும் யோசிக்க வைத்தது. ஆனால் வள்ளுவர் சிரித்தார்.

43

‘‘ஆக மொத்தத்தில் அமானுஷ்ய அனுபவம் ஒன்றுக்கு நான் ஆளாக வேண்டுமென்றால், ஒரு உண்மையான சித்தரின் தொடர்பும் அவர் உதவியும் தேவை என்று ேஜாசப் சந்திரன் கூறியதை நான் ஏற்றுக்கொண்டேன். அமானுஷ்ய அனுபவத்துக்கான என் விருப்பத்தையும் தேடலையும் என் பணிசார்ந்த ஒன்றாகக் கருத முடியாது. அது என் தனிப்பட்ட விருப்பம்.

இதற்கு நடுவே பணி சார்ந்த தேடல்கள், ஆய்வுகள் ஒருபுறம் தொடர்ந்து கொண்டே இருந்தன. அந்த வகையில் மதுரையைச் சுற்றியும் புதுக்கோட்டையைச் சுற்றியும் உள்ள மலைகளில் சமணத் துறவிகள் வாழ்ந்திருந்ததோடு, அவர்கள் அங்கே மனிதன்

நிம்மதியாக வாழ்ந்திட பின்பற்றிய முறைகள் எல்லாமும் ஒவ்வொன்றாகத் தெரிய வந்தன.

குறிப்பாக சமணக் கல்வெட்டுகள் காணப்பட்ட அவ்வளவு மலைப்பகுதியிலும் வலிமையான நீராதாரம் கொண்ட குளங்கள் இருந்தன. அடுத்து, பாம்பு நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் சிரியாநங்கை மூலிகைச் செடிகள் வளர்க்கப்பட்டிருந்தன. வேகமாகவும் தானாகவும் உதிர்ந்துவிழும் நந்தியாவட்டை பூச்செடிகள், பன்னீர் மரங்கள் என்று வெண்ணிறப் பூக்கள் பூக்கும் தாவரங்களே மிகுதியாகக் காணப்பட்டன.

எங்கள் தேடலில் ஆடித் தொட்டி என்கிற அம்சம் குறிப்பிடத்தகுந்தது. நின்றிருக்கும் நிலையில் கீழே பார்த்தால் வட்டமாய் தண்ணீர் தேங்கி யிருக்கும். அதில் பாசி பூத்த நிலையில், தண்ணீரின் மேற்பரப்பில் நம் முகம் பளிச்சென்று தெரியும். அந்தத் தொட்டியைக் கண்ணாடியாகக் கருதி தலைமுடியை 'வபனம்' எனும் முடி நீக்குதலை சமணர்கள் செய்துகொண்டதை யூகிக்க முடிந்தது.

அடுத்து, அவர்களது கல் படுக்கைகள்... அதன் மேல் படுத்தபோது ஜில்லென்று இருந்தது. காற்றும் நன்கு வீசியது. மிகுந்த பூகோள அறிவோடும், விஞ்ஞான அறிவோடும் அவர்கள் அங்கே வாழ்ந்துள்ளனர். அவர்கள் வாழ்ந்த மலைப்பகுதிகளில் எண்ணெய்க்குழிகளும் காணப்பட்டன. இரவு நேரங்களில் தீப்பந்தங்களுக்குத் தேவையான எண்ணெய்க்காக எண்ணெய்க்குழிகள் உருவாக்கப்பட்டு, அதில் எண்ணெய் சேமித்து வைத்திருந்தனர். தாவர எண்ணெய்களைப் பயன்படுத்தியே அவர்கள் இரவுப் பொழுதைக் கழித்ததும் தெரிந்தது.

அப்படி வாழ்ந்த ஒரு சமூகம் இப்போது சுத்தமாக இல்லை. தடயங்களோ பல செய்திகளைச் சொல்லிக்கொண்டு இருக்கின்றன.எனது தொல்பொருள் ஆய்வில் மிக ரசமான ஒரு சம்பவத்தையும் நான் குறிப்பிட வேண்டும். வடகரை என்று ஒரு கிராமம். இந்த கிராமத்தில் வயலை ஒருவர் உழுதபோது கலப்பைக்ே கொழுமுனை தட்டி பெரும் புதையல் பானை ஒன்று கிடைத்தது.

விரல் அளவு பருமன் உள்ள ஐம்பொன்னால் ஆன பானைக்குள் ஏராளமான பொற்காசுகளும், நகைகளும் இருந்தன. அதில் ஒரு செப்புப் பட்டயமும் இருந்தது. அந்தப் பட்டயத்தில், ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பகுதியை ஆட்சி செய்த அரசன் ஒருவன் அந்தக் குடும்பத்துக்கு அந்த கிராமத்தையே சொந்தமாக எழுதிக் கொடுத்திருந்தான்.

‘நான்கு மால் எனப்படும் நான்கு திசைகளிலும் உள்ள ஈட்டி எறியப்படும் அளவிலான தூரம் வரை அவன் குடும்பத்துக்கு 1000 ஆண்டுகளுக்குச் சொந்தம் என்றும், மையமானது அந்த ஊர் சிவன் கோயில் கோபுரத்தின் உச்சி’ எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது கோபுர உச்சியில் நின்றுகொண்டு ஈட்டியை எறிய வேண்டும். நான்கு புறமும் இப்படி ஈட்டி எறிந்து, அது விழும் தொலைவைக் குறியிட்டு அளந்து கொடுப்பதோடு, அவன் குடும்பத்தின் விருப்பத்துக்கேற்பவே ஊர்த் தலையாரி நடக்க வேண்டும் என்று இருந்தது.

அதன்படி பார்த்தால் இன்றுகூட அந்த ஊர் முழுக்க அந்தக் குடும்பத்துக்கே சொந்தம். கிட்டத்தட்ட பதினைந்து ஏக்கர்

பரப்பளவு வருகிறது. இன்றோ உள்ளபடியே நிலத்தைப் பயன்படுத்தி உழுது பிழைக்கவேண்டிய ஒரு அவல நிலை அந்தக் குடும்பத்துக்கு! அந்த நபர் புதையல் தங்கத்தை தாசில்தாரிடம் ஒப்படைத்துவிட்டு, 'பட்டயப்படி ஊரைத் தங்கள் குடும்பத்துக்குச் சொந்தமாக்கித் தர வேண்டும்' என்று கூறி உண்ணாவிரதமெல்லாம் இருக்கத் தொடங்கிவிட்டார்.

அப்போது அந்தப் பட்டயத்தைப் படித்து பொருள் சொன்னது நான்தான். அந்தப் பட்டயம் இன்றுள்ள ஜனநாயக நடைமுறைச் சட்டங்களுக்கு செல்லுபடியாகாது என்று தெரிந்தும் அந்த நபர் விடாமல் முயற்சி செய்தார்!"- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

வள்ளுவரின் சிரிப்பு வர்ஷனையும் ப்ரியாவையும் கூர்மையாக்கியது.

"அய்யா... தப்பா எடுத்துக்காதீங்க. எனக்கும் இந்த சந்தேகம் உண்டு. இப்ப இந்த ஏடு நமக்கு மட்டும் வழிகாட்ற ஒண்ணாதான் எனக்குப் படுது. அப்படி இருக்க, இது எப்படி பொதுவாகும்?" - வர்ஷனும் கேட்டான்.

"சரியான கேள்வியைத்தான் கேட்டிருக்கீங்க! ஒரு விஷயத்த நல்லா புரிஞ்சிக்குங்க. எந்த ஒரு விஷயத்துக்கும் பார்வை ரொம்ப முக்கியம். பார்வைன்னா கண்ணால பாக்கறத மட்டும் நான் சொல்லல. மனசால பாக்கறதுங்கறதுதான் இங்க ரொம்ப முக்கியம். இதையே கொஞ்சம் மாத்தி 'ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு கோணத்துல பாக்கறது'ன்னும் சொல்லலாம். இந்தக் கோணமெல்லாம் தரைல நின்னு பாக்கும்போதுதான். அதேசமயம் பூமியில நாம்

வசிக்கும்போது பார்க்கும் பார்வைக்கு பாதி பார்வைன்னுதான் பேர்! அது ஏன்னு தெரியுமா உங்களுக்கு?’’

- வள்ளுவர் எங்கோ ஆரம்பித்து எங்கோ வந்தார்.

‘‘பாதி பார்வையா... என்னய்யா சொல்றீங்க?’’ - என்று மேற்கு நோக்கிய பாதையில் காரைச் செலுத்தியபடியே கேட்டான் வர்ஷன்.

‘‘ஆமாம்! பாதி பார்வைதான்... பாதி பார்வைகூட கிடையாது. ஒரு நேர்க்கோட்டுல பாக்கற அளவுக்கான பார்வைதான் உண்மைல மனிதப் பார்வை. இருந்தாலும் எதிர்ல ஒருவரைப் பார்க்கும்போது இட வலமா இரண்டு புறமும் உள்ளதும் தெரியும். நாம் அதை கவனிக்காம கவனிப்போம். நாம் எதை பாக்க விரும்பறோமோ, அதைத்தான் கூர்மையா பார்ப்போம். இப்ப நீ கூட ரோட்டை பாத்துக்கிட்டேதான் கார் ஓட்றே... அதேசமயம் இரண்டு பக்கமும் மரங்கள் இருக்கறதும் உனக்கு தெரியத்தானே செய்யுது...?’’

‘‘அய்யா, நான் கேட்ட கேள்விக்கும் உங்க பதிலுக்கும் என்னய்யா சம்மந்தம்?’’

‘‘நிறைய இருக்கு தம்பி... என் கேள்விக்கு நீ பதில் சொல்லிக்கிட்டே வா.’’

‘‘சரி, கேளுங்க...’’

‘‘இப்ப நீ எதிர்லதானே பாக்கறே?’’

‘‘ஆமா...’’

‘‘பின்னால பாக்கலதானே?’’

‘‘முன்ன பாக்கும்போது பின்னால எப்படிய்யா பாக்க முடியும்?’’

‘‘கரெக்ட்... இதைத்தான் நான் அரைப்பார்வைன்னு சொன்னேன். எப்பவும் பூமியில நாம் இருக்கும்போது இந்த அரைப்பார்வைங்கற அரை வட்டப் பார்வைதான் பார்க்க முடியும். பின்பக்கம் திரும்பிப் பார்க்கும்போது, நாம ஏற்கனவே பாத்துக்கிட்டிருந்த முன்பக்கம் மறைஞ்சிடும்...’’

‘‘இதுல நாம் புதுசா யோசிக்க என்ன இருக்கு?’’

‘‘என்ன தம்பி அப்படி கேட்டுட்டே... இதுக்குள்ள யோசிக்க எவ்வளவு விஷயங்கள் இருக்கு தெரியுமா?’’

‘‘என்னய்யா சொல்றீங்க?’’

‘‘நல்லா யோசி தம்பி... நாம பாக்கற பார்வையும் பாக்கற கோணமும் சரியான விதத்துல இருக்கணும்!’’

‘‘அய்யா... இந்த அரைப்பார்வை... சரியான கோணம்னு நீங்க சொல்றதெல்லாம் எதுக்குய்யா? புரியல எனக்கு!’’

‘‘அவசரப்படறியே தம்பி... இந்த சரியான கோணம்னா என்னங்கறத முதல்ல தெளிவுபடுத்திக்கோ... உன்னை நேருக்கு நேரா - குறிப்பா, முகத்துக்கு நேரா பாக்கும்போதுதான் நீ வர்ஷன். நான் உன்னை பின்பக்கமா பார்க்கும்போது - குறிப்பா தூரத்துல இருந்து பார்க்கும்போது - நீ வேற யாரா கூட இருக்கலாம்னு ஒரு தயக்கம் எனக்கு இருக்கும். உன் முகத்தை பாக்கறவரை அது தொடரும். இல்லையா?’’

‘‘அய்யா, இதெல்லாம் தெரிஞ்ச விஷயம். நீங்க பாயின்ட்டுக்கு வாங்க...’’

‘‘வரேன்... பாக்கறதெல்லாம் பார்வை ஆயிடாது. சரியான கோணத்துல பாக்கணும். அப்படியும் பூமியில யாரா இருந்தாலும் அரைவட்டப் பார்வைதான்.’’

‘‘அதனால...’’

‘‘ஆகாயப் பார்வைன்னு ஒண்ணு இருக்கு... இதை பறவைப் பார்வைன்னும் சொல்லலாம்...’’

‘‘அப்ப பறவைப் பார்வை வேணுமா?’’

‘‘இந்த மாதிரி புதிரான, ஒளிஞ்சிருக்கற விஷயங்களுக்கு பறவைப் பார்வை பார்க்கணும். பறவை பறந்துக்கிட்டே கீழே பார்க்கும்போது அதுக்கு பூமியோட எல்லா பாகமும் தெரியும். அதுல பாக்க வேண்டியத துல்லியமா பாக்க அதனால முடியும்...’’

‘‘பறவைக்கு அது சாத்தியம்... நமக்கு எந்த வகையில சாத்தியம்?’’

‘‘சாத்தியப்படுத்திக்கணும். பறவைப் பார்வை பார்க்க இப்ப பாக்கற பார்வையைப் பற்றின தெளிவு ரொம்ப முக்கியம்.’’

‘‘அப்ப இந்த ஒரு விஷயத்தை பறவைப் பார்வை பார்த்தா புரியுமா?’’

‘‘இப்பவே தெளிவா புரியறதாலதான் மேற்கு நோக்கி போய்க்கிட்டிருக்கோம். நீ கேட்ட கேள்விக்கும் பறவைப் பார்வைலதான் விடை இருக்கு.’’

‘‘நீங்களே அதைச் சொல்லிடுங்களேன்.’’

‘‘இந்த ஏடு மாறாத ஒண்ணு... இந்தக் குறிப்பை நாம எந்த இடத்துல இருந்து படிச்சாலும் இதுல உள்ள குறிப்பு காலப்பலகணி உள்ள இடம் நோக்கிதான் கூட்டிக்கிட்டு போகும். எப்ப இதை எப்படியாவது அடைய நினைக்கறவங்க விபத்துக்கு ஆளாகி இறந்து போறாங்களோ அப்பவே ஒரு சக்தி வழிநடத்துதுங்கறது உங்களுக்குத் தெரியலையா?’’

‘‘அதுதான் வியப்பா இருக்கு... வழி நடத்தற அந்த சக்தி எதுக்கு இப்படி நம்மை அலைய விடணும்? பேச விடணும்? அந்த காலப்பலகணியை தூக்கி நம்ம கைல கொடுத்துடலாமே? இல்ல, இடத்தை பளிச்னு காட்டிடலாமே...?’’

‘‘இப்படியெல்லாம்தான் பகுத்தறிவு கேட்கச் சொல்லும். தப்பு இல்லை. உன் கேள்விப்படி பார்த்தா, ஒரு தாய் பத்து மாசம் வயித்துல குழந்தையை சுமக்கத் தேவையே இல்லை. வயல்ல நெல் நாற்றும் வளரத் தேவையில்லை. முடிவான பயன் உடனே கிடைச்சா நல்லா இருக்குமேன்னு மனசு நினைக்கும். அதனால அப்படி எல்லாம் நடந்துடுமா?’’

- வள்ளுவர் கேள்விக்கு என்ன பதில் சொல்லறது என்று தெரியாமல் வர்ஷன் காரைச் செலுத்த, அவன் பாக்கெட்டில் இருந்த செல்போன் அதிர்ந்தது. அது காலை சுகுமார் வசம் இருந்து ரயில்வே ட்ராக்கில் தெறித்து விழுந்த அந்த செல்போன். ஒரு கையால் காரை டிரைவ் செய்தபடியே செல்போனை எடுத்து திரையைப் பார்த்தான். ‘சாவ்லா’ என்று இதற்கு முன்பு பார்த்த அதே பெயர். காரை வேகமாக ஓரம் கட்டினான். தீர்க்கமாய் பார்த்தவன், அதை கட் செய்துவிட்டு மெஸேஜ் பாக்ஸ் வழியாக சாவ்லாவுக்கு தகவல் தரத் தொடங்கினான்.

‘நானாக அழைக்கும் வரை என்னை அழைக்காதே. எல்லாம் நல்லபடி போய்க் கொண்டிருக்கிறது’ என்று ஆங்கிலத்தில் செய்தி அனுப்பியவன், செய்தி சென்றது தெரிந்த நொடி போனை ஸ்விட்ச் ஆஃப் செய்தான்.

‘‘இது அந்த சுகுமார் போன் இல்ல?’’

‘‘ஆமா... நடுவுல இந்த போன் பத்தின ஞாபகமே இல்லாம போயிடுச்சு. இப்ப போன் வரவும்தான் ஞாபகமே வந்தது...’’

‘‘சுகுமார்தான் செத்துட்டானே... அப்புறம் எப்படி போன் வருது?’’

‘‘இவனுக்கு சுகுமார் சாவு பத்தி தெரியல... போலீசுக்கே அது சுகுமார்ங்கறது தெரிய வருமாங்கறது சந்தேகம். முகம் அந்த அளவு சிதைஞ்சு போயிருந்தது. அனேகமா அன்க்ளைம்டு பாடியா அதை அடக்கம் பண்ணத்தான் வாய்ப்பு அதிகம்!’’

‘‘அதனாலதான் இப்ப சுகுமார் உயிரோட இருக்கற மாதிரியே செய்தி அனுப்பினியா?’’

‘‘ஆமாம். நம்மை ஃபாலோ பண்றவங்க யார்... அவங்க எப்படிப்பட்டவங்கன்னு நமக்குத் தெரியறவரை சுகுமார் உயிரோட இருக்கற மாதிரியே காட்டிக்கணும்.’’

‘‘இந்த போன் மூலம் அது சாத்தியமா?’’

‘‘இன்னிக்கு செல்போன் ஒருத்தன்கிட்ட இருந்தா போதும். அவனை ட்ரேஸ் பண்றது மட்டுமல்ல, அவன் எப்ப என்ன செஞ்சாங்கறது வரை கண்டுபிடிச்சிடலாம். கடவுள் குடியிருக்கற கோயில் கோபுரங்களை விட, செல்போன் டவர் இரும்பு கோபுரத்துக்குத்தான் இப்ப பூமியில மதிப்பும் சக்தியும் அதிகம் ப்ரியா. நமக்கு இப்ப தேவை செல்போனுக்குள்ள புகுந்து வெளிய வரத் தெரிஞ்ச ஒரு மேதை.’’

‘‘வர்ஷன்... இந்த சாவ்லா குரூப்பை தெரிஞ்சு என்ன செய்யப் போறோம்?’’

‘‘நம்மைப் பின்தொடர்ந்து வந்து நம்ம திறமையாலயும் உழைப்பாலயும் நாம கண்டுபிடிக்கப்போற ஒரு உலக அதிசயத்தை தன்வசப்படுத்திக்க நினைக்கற ஒரு குரூப்பை நீ அலட்சியப்படுத்தச் சொல்றியா ப்ரியா..?’’

‘‘அப்படிச் சொல்லலை நான். அவங்கள தெரிஞ்சுக்கிட்டு என்ன செய்யப் போறோம்ங்கறதுதான் என் கேள்வி.’’

‘‘அதுக்கு முந்தி காலப்பலகணியைக் கண்டுபிடிச்சு என்ன செய்யப் போறோம்ங்கறதும் முக்கியமில்லையா?’’

‘‘சரியா சொன்னே தம்பி... பலகணியை நாம இப்ப தேடி புறப்பட்டிருக்கறது பணத்துக்காகவோ... இல்ல, நம்ம தேவைக்காகவோ இல்லை. அது ஒரு அதிசயம். அதுக்குள்ள நாளைக்கு நடக்கப் போற சம்பவங்கள் எல்லாம் ரகசியமா புதைஞ்சு கிடக்குது. அதை நாம தெரிஞ்சுக்கிட்டு என்ன செய்யப் போறோம்ங்கறதுதான் உண்மைல நம் முன்னால் உள்ள கேள்வி...’’

- வள்ளுவர் வர்ஷன் கேட்ட கேள்வியை கூர்மைப்படுத்தினார்.

‘‘அய்யா... நம்மை ஒரு சக்தி வழி நடத்துதுன்னு சொன்னீங்க. அப்ப அந்த சக்தி நம் மூலமா காலப்பலகணியைக் கொண்டு இந்த உலகத்துக்கு ஏதாவது சொல்ல விரும்பலாம் இல்லையா?’’

‘‘வாஸ்தவம்தான்... காலப்பலகணி பத்தி நமக்கு தாக்கம் ஏற்பட்டு நாம இவ்வளவு தூரம் அதை நோக்கி வந்துட்டோம். எங்கோ மறைவா இருக்கற அது, ஒரு புதையல் போல மறைவாவே இருந்திருந்தா நம்மகிட்ட இந்த கேள்விக்கெல்லாம் இடமேயில்லை. எப்ப நாம ஒண்ணா சேர்ந்து நம்மைப் பின்தொடர்ந்து வர்றவங்களுக்குக்கூட தெரியாம இவ்வளவு தூரம் வந்துட்டோமோ, அப்ப நம்மை வழிநடத்தற சக்தியோட விருப்பப்படிதான் எதுவும் நடக்க முடியும். அது என்னன்னு போகப் போகத்தான் நமக்கே கூட தெரிய வரும். ஆகையால நாம தொட்டுத் தொட்டு போய்க்கிட்டு இருப்போம்...’’

‘‘அப்ப நாம இப்ப தேடற பலகணியை நம்ம மூலமா அபகரிக்கப் பாக்கற கோஷ்டி யாருன்னு நாம தெரிஞ்சுக்கத் தேவையில்லையா?’’

‘‘தெரிஞ்சிக்குவோம்... நாம தெரிஞ்சிக்கணும்ங்கறதாலதான் அந்த செல்போன் நம்ம கைல கிடைச்சிருக்கு...’’

‘‘அவங்க யாருங்கறது மட்டுமல்ல... அவங்களுக்கு எப்படி காலப்பலகணி பத்தி தெரிய வந்தது... இதைக் கொண்டு அவங்க எதை தெரிஞ்சுக்க விரும்பறாங்கன்னும் நாம தெரிஞ்சிக்கணும்!’’

‘‘அப்ப ஒரே வழிதான் இருக்கு... எனக்கு ரஞ்சித்னு ஒரு ஃபிரெண்ட் இருக்கான். செல்போன், கம்ப்யூட்டர்னு சகலத்துலயும் அவன் ஒரு எமன். அவனை நாம கூட்டு சேர்த்துக்கிட்டு செயல்படணும். இந்த செல்லை அவன்கிட்ட கொடுத்தா, அவன் இதோட மெமரிக்கு போய் சுகுமார் கான்டாக்ட் பண்ண நம்பர்களையும், அந்த நம்பர்களுக்குரிய அட்ரஸையும் கண்டுபிடிச்சிடுவான். ஒருபடி மேல போய், என்ன பேசிக்கிட்டாங்கன்னும் கண்டுபிடிச்சிடுவான். அவன் போலீஸ் இன்ஃபார்மராவும் இருக்கறவன்.

குறிப்பா சைபர் க்ரைமுக்கு வர்ற சவாலான பிரச்னைகளை சைபர் க்ரைம் ஆபீசர்ஸ் ரஞ்சித்தை வெச்சுதான் தீர்த்துக்கறாங்க.’’

‘‘தம்பி... நமக்கு இப்ப அந்தத் தம்பியைப் பாக்க எல்லாம் நேரமில்ல. நாம இப்ப நூல் பிடிச்ச மாதிரி போய்க்கிட்டிருக்கோம். நடுவுல திசை திரும்பக் கூடாது. திசை திரும்பவும் முடியாது. அவரை வேணும்னா நம்மள வந்து பாக்க சொல்லுங்க. அப்புறம் அவர் எந்த அளவு நம்பகமா நமக்கு உண்மையா இருப்பார்னும்

யோசிச்சிக்குங்க...’’- வள்ளவர் சொன்னதைக் கேட்டபடியே ரஞ்சித்துக்கு போன் செய்யத் தொடங்கினான் வர்ஷன்!

44

செப்புப் பட்டயத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு அந்த நிலம் அந்தக் குடும்பத்திற்கு உரியது என்று எழுதப்பட்டிருந்தது. ஒருவேளை அக்குடும்பத்தவர்களுக்கு வாரிசுகள் தோன்றாமல் அந்தக் குடும்பம் ஒரு கட்டத்தில் நின்றுபோகுமாயின், அந்த நிலம் கோயிலுக்குச் சேர்ந்துவிடும். ஆனால் இடைக்காலத்தில் என்ன நடந்ததோ, ஏது நடந்ததோ தெரியவில்லை...

அந்த பட்டயப்படி உள்ள நிலத்தில் யார் யாரெல்லாமோ வீடு கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தனர். அவர்களில் பலர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். பத்திரம் என்று அவர்களிடம் ஏதுமில்லை. சிலர் பத்திரம் வைத்திருந்தனர்.

என் ஆய்வில் நான் தெரிந்து கொண்ட பேருண்மை என்பது ஒன்றே... மனிதன் நிலங்களை வசப்படுத்த மிகவே போராடியிருக்கிறான். அரசனில் இருந்து ஆண்டி வரை இதற்கு விதிவிலக்கு இல்லை. அதிலும் நீர்வளம் சார்ந்த நிலங்களை மனிதன் மிகவேகமாக தன்வயப்படுத்தினான். மற்ற பூதங்களான காற்று, ஆகாயம், நெருப்பு என்னும் மூன்றும் தானாக வசமாகிவிடும் என்றும் அவன் நம்பியிருந்ததையே நான் என் ஆய்வுகளில் புரிந்து கொண்டேன்.

இதுபற்றியும் நானும் ஜோசப் சந்திரனும் விவாதம் செய்தோம். ஜோசப் இம்மட்டில் ஒருபடி மேலே போய் ‘தமிழனே

உலகின் முதல் நாகரிகக் குடிமகன்' என்றார். எப்படி என்று நான் கேட்கவும் விளக்கத் தொடங்கினார்.

'இவன் பூகோள அறிவு மிகுந்தவனாகவும் விளங்கினான். அதனாலேயே நிலங்களை இவன் பஞ்ச பூத சக்திக்கேற்ப முல்லை, மருதம், பாலை, நெய்தல், குறிஞ்சி என்று பிரிக்க முடிந்தது. அடுத்து மலைகளை இவன் சக்தி மிகுந்தவையாக உணர்ந்தே, அவற்றைப் பொதுமைப்படுத்த ஒரே வழி அங்கே ஆலயம் எழுப்புவதுதான் என்று அறிந்தான்.

அடுத்து இவன் தனக்கு மேலான சக்தி படைத்த சகலத்தையும் வெகு அழகாய் தன் வயப்படுத்தினான். அதில் யானையை ஒரு அங்குசத்தால் அடக்கியதும், கடல்மிசை பாய்மரப் படகு செலுத்தியதும், முத்துக் குளித்ததும், உலோக அறிவு பெற்று சக்கரங்கள் செய்ததும் மட்டுமல்ல... இவனே கால காலத்துக்குமான ஆவணமாய் கல்வெட்டு எழுத்து முறையைக் கண்டறிந்து அதை நடைமுறைப்படுத்தியவன்.

உலகமெங்கும் நான் பயணம் செய்துள்ளேன். தமிழன்தான் ஒரு சிறு கிராமக்கோயிலில்கூட கல்வெட்டினால் அதன் வரலாற்றைப் பதிவு செய்திருந்தான். அடுத்து பட்டயங்கள்... பிறகே பனை ஏடுகள். மிக உறுதியாக தன் சந்ததியினர் வரும் நாட்களில் இந்த மண்ணில் வாழ்வார்கள் என்று நம்பியதன் விளைவு இது. இந்த தூரப் பார்வையை நான் மேல்நாடுகளில் எங்கும் உணரவில்லை.

அடுத்து, பாரத நாட்டை விடுத்து பிற தேசங்களை கவனித்தவரையில், உடல் பலமும் அறிவுக்கூர்மையும் பெரிதாக இருந்தது. ஆனால் அறிவின் மேலான ஞானம் சார்ந்த ஒரு

தன்மையை எங்கும் என்னால் காணமுடியவில்லை. குறிப்பாக இங்கே குரு – சீடன் எனும் முறையும், குருவை கண்ணுக்கு தெரிந்த கடவுளாகக் கருதும் நிலையும் இன்றும் பலமாக இருந்து வருகிறது.

இந்த குரு – சீடன் முறை பாரத தேசத்துக்குப் பிறகு சீனாவில் இருக்கிறது. அதுகூட இங்கிருந்தே சென்றது. மேல்திசை நாடுகளில் இந்த முறையே இல்லை. இதனால் எழுத்தில் எழுதி வைக்க இயலாத, அல்லது கூடாத விஷயங்கள் அழிந்து போயின.

குரு – சீடன் முறை இருந்திருந்தால், குருவானவர் சீடனுக்கு உபதேசம் செய்துவிட்டுப் போயிருப்பார். அந்த சீடன் பின் குருவாகி தன் சீடனுக்கு உபதேசம் செய்துவிட்டுப் போயிருப்பான். சப்த வடிவில் அது மனதுக்குள் அழியாமல் வாழ்ந்தபடியே இருக்கும்' – என்று ஒரு நீண்ட விளக்கம் அளித்தார் ஜோசப் சந்திரன்.

இவ்வேளையில் நான் ஜோசப் சந்திரனிடம், 'அப்படி சப்த வடிவில் வாழும் விஷயங்கள் எவை?' என்று கேட்டேன்.'இதைத் தெரிந்துகொள்ள நமக்கு ஒரு குரு அவசியம். குறிப்பாக ஆன்மிக குரு மிக அவசியம். அடுத்து வித்தக குரு என்றும் ஒருவர் அவசியம். மற்ற குருநாதர்களிடம் ரகசியமாக ஒன்றைப் பேண எதுவுமில்லை. சொல்லப் போனால், மற்றவர்கள் ரகசியமாக எதையும் வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் அது பாவமாகும்' என்றார் ஜோசப் சந்திரன்.

முன்பு 'அமானுஷ்ய அனுபவத்தை உணர ஒரு குருநாதர் அவசியம்' என்றேன். இப்போது ரகசியமானதை உணரவும் ஒரு குருநாதர் தேவைப்படுகிறார். இதை நான் ஜோசப்பிடம் கூறவும்,

ஜோசப் சிரித்தபடியே 'அமானுஷ்யமும் ரகசியமானதுதானே? எனவே, சதுரகிரியில் அப்படி ஒருவர் நமக்குக் கிட்டுவாரா என்று பார்ப்போம்' என்றார்!''

– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

வர்ஷன் ரஞ்சித்துக்கு போன் செய்ய, ரஞ்சித்தும் அகப்பட்டான். ஸ்பீக்கர் போனில் எல்லோருக்கும் கேட்டது.

''ஹாய் வர்ஷன்...''

''ரஞ்சித்! எப்படிடா இருக்கே?''

''ஃபைன்... அப்புறம் நீ இப்ப எங்க இருக்கே?''

''சொன்னா பொறாமைப்படுவே... பரவாயில்லையா?''

''என்னடா... ஏதாவது ஃபாரின் கன்ட்ரில ஸ்பாவுல மசாஜ் பண்ணிக்கிட்டு இருக்கியா?''

''அய்யோ... செம ஐ.க்யூடா உனக்கு! எக்ஸாக்ட்லி...''

''அப்படி எங்கடா இருக்கே?''

''பட்டாயாவுல...''

''அங்கேயா?''

‘‘என்ன அங்கேயா? இப்ப எனக்கு மசாஜ் பண்ணிக்கிட்டு இருக்கறது யார் தெரியுமா?’’

‘‘வேண்டாம்டா! என்கூட ப்ரியா இருக்கா. அப்புறம் ஒரு கிரேட் மேன் இருக்கார்...’’

‘‘ஓ... ஓ... நல்லவேளை! இப்பவாவது சொன்னியே... இங்க ஒரு வயசானவர் - அதாவது நூறு வயசான ஒருத்தர் - மசாஜ்ல சும்மா பின்னி எடுக்கறார். வர்மப் புள்ளிகளை தூண்டியெல்லாம் விட்றார். சும்மா கிண்ணுன்னு இருக்கு...’’

‘‘எது கிண்ணுன்னு இருக்குன்னு எனக்குத் தெரியும்டா! போகட்டும். நீ எப்ப சென்னை வருவே...’’

‘‘நாளைக்கு வந்துடுவேண்டா... இது பேக்கேஜ் டூர்தான்! ஜஸ்ட் இருபத்தி ஏழாயிரம்! இதுல ஸ்டார் ஹோட்டல் ஸ்டேவுல இருந்து, பிரேக் ஃபாஸ்ட்டெல்லாம் அடக்கம். அப்புறம் கிரேட்மேன், கிரேட்மேன்னு நீ யாரைச் சொன்னே?’’

‘‘நீ சென்னைல இருந்தா இப்ப எனக்கு வசதியா இருக்கும். அந்த கிரேட்மேன் பத்தியும் நிறைய சொல்லலாம். ஆனா பட்டாயால பட்டைய கிளப்பிக்கிட்டு இருக்கற உன்கிட்ட இப்ப என்ன பேசறதுன்னே தெரியலையே..’’

‘‘நான் என்ன செய்யணும்? அதைச் சொல்...’’

‘‘ஒரு அநாமதேய செல்போன் என்கிட்ட இருக்கு. அதுக்குள்ள இருக்கற சகல விஷயங்களும் தெரியணும்.’’

‘‘இப்பதான் ராயபுரம் இன்ஸ்பெக்டர் இருதயராஜ் பேசினார். அவரும் உன்ன மாதிரியே பேசினார். அது ஒரு தற்கொலை செய்துக்கிட்ட போலீஸ் ஆபீசர் செல்போனாம். அதுக்குள்ள தற்கொலைக்கான விடை இருக்கலாம்னார்...’’

‘‘நீ எனக்கு பதில் சொல்!’’

‘‘யாரோடது... உனக்கெதுக்கு இந்த போலீஸ் வேலை..?’’

‘‘ரஞ்சித்... விளக்கமா நேர்லதான் என்னால சொல்ல முடியும். நான் இப்ப ஒரு த்ரில்லான ஒண்டர்ஃபுல் அசைன்மென்ட்ல இருக்கேன். எனக்கு உன் உதவி, சப்போர்ட் எல்லாமே வேணும்!’’

‘‘வில்லங்கமா ஏதாவது இருந்து என்னை கம்பி எண்ண வெச்சுட மாட்டியே?’’

‘‘நீ என்ன என் விரோதியா... நான் அப்படி நடந்துக்க?’’

‘‘விரோதிகிட்டதான் இப்ப மரியாதையா நடந்துக்கறோம். நண்பன்னா போட்டுப் பாத்துடறோம்...’’

‘‘ரஞ்சித்... இது ரொம்பவே பெரிய விஷயம். நடந்ததை, நடந்துக்கிட்டு இருக்கறதை எல்லாம் கேட்டா நீ ஆடிப் போயிடுவே...’’

‘‘என்ன? யாராவது பிரபல சினிமா நடிகையை எந்த ஹீரோவாவது பார்ட்டியில் வெச்சு ஆபாசமா வீடியோ எடுத்துட்டானா... அதை டவுன்லோடும் பண்ணிட்டானா - நான் டோட்டலா அதை எரேஸ் பண்ணணுமா?’’

‘‘தூத்தேறி... இப்படி எல்லாம் கூடவா நடந்துருக்கு?’’ - இடையிட்டாள் ப்ரியா.

‘‘ஓ... ப்ரியா! ஐ ஆம் சாரி. நீ இருக்கறதை மறந்துட்டேன். இதெல்லாம் ஒண்ணுமேயில்ல ப்ரியா! வாட்ஸ் அப்ல நான் அஞ்சு நிமிஷத்துக்கு ஒரு வீடியோ அனுப்பறேன்.

இலங்கை யுத்த களத்துல நடந்த ஒரு சித்ரவதை, தாலிபன்கள் கரகரன்னு கழுத்தை அறுத்து மனித ஆடுகளை வெட்டின சம்பவம், துபாய்ல ஒரு ஷேக் தன் வீட்டு வேலைக்காரியை விதவிதமா சித்ரவதை செய்ததுன்னு மூணே மூணு வீடியோவை மட்டும் பார்.

அப்புறம் தண்ணி அடிச்சாதான் உன்னால தூங்க முடியும்...’’

‘‘ஓ... புல் ஷீட்! இதை எல்லாம் பாத்துட்டு உன்னால மட்டும் எப்படி ரஞ்சித் பட்டாயாவுல மசாஜ் பண்ணிக்க முடியுது? உனக்கு

மசாஜ் பண்ற தாத்தாவுக்கு நூறு வயசுன்னு வேற அடிச்சு விட்றே... பதினாறு வயது ‘தத்தா’தானே உன்கூட இருக்கறது..?’’

‘‘ப்ரியா... ஐ ஆம் சாரி! நான் தேவையில்லாம பேசிட்டேன். அங்க உங்களுக்கு என்ன பிரச்னை...’’

‘‘நேர்ல சொல்றோம். எங்கள வந்து பாக்க முடியுமா?’’

‘‘ஷ்யூர்...’’

‘‘தேங்க்யூ ரஞ்சித்... இண்டியா வந்து லேண்ட் ஆன உடனேயே சொல். எங்க சந்திக்கறதுன்னு சொல்றோம்.’’

‘‘எங்கன்னா... நீங்க இப்ப சென்னைல இல்லையா?’’

‘‘ஆமாம்...’’

‘‘எங்க இருக்கீங்க?’’

‘‘இந்த நிமிஷத்துல செங்கல்பட்டு பக்கத்துல இருக்கோம்.’’

‘‘ரைட்... நான் லேண்ட் ஆனபிறகு கூப்பிட்றேன்.’’

- மறுபுறம் ரஞ்சித் போனை முறித்துக்கொள்ள, வர்ஷனும் சற்று வழிசல் சிரிப்போடு ப்ரியாவைப் பார்த்தான்.

‘‘இந்த வயசுல யாரும் ஒழுக்கமாவே இருக்க மாட்டீங்களாடா. பாய்ஸ்ல வர்ஜினே கிடையாதா?’’ - ப்ரியா கோபமானாள். அவளுக்கு பதில் கூறத் திணறியபோது அவள் போனில் அமட்டல். மறுபுறம் கணபதி சுப்ரமணியன்!

‘‘ஹாய் தாத்தா... நாங்க இப்ப ஒரு சிவன் கோயிலைத் தேடிப் போயிட்டிருக்கோம்...’’

‘‘எல்லாம் சரியா போய்க்கிட்டிருக்கா..?’’

‘‘இந்த செகண்ட் வரை ஒரு பிரச்னையுமில்லை. எல்லாம் தெளிவா இருக்கு - த்ரில்லாவும் இருக்கு...’’

‘‘ஜாக்கிரதை... நான் உடம்பளவுலதான் இங்க இருக்கேன். மனசளவுல உங்ககூடதான் இருக்கேன்...’’

‘‘அப்படியே இரு... மை டியர் மம்மி இப்ப எப்படி இருக்காங்க?’’

‘‘ரொம்ப நாளைக்குப் பிறகு இன்னிக்கு பாட்டு பாடி சாதகம் பண்ணினா. புது எலெக்ட்ரீஷியன் வந்து எல்லாத்தையும் பக்கா பண்ணி கொடுத்தான். என்னோட கேலரியைப் பாத்துட்டு உங்ககிட்ட நாகரத்தினக் கல் இருக்கா, கஜமுத்து இருக்கா, நரிப்பல் இருக்கான்னு ஆரம்பிச்சுட்டான். ‘நான் ஆராய்ச்சியாளன்பா, ஃப்ராடு பக்கிரி இல்லே’ன்னு சொன்னேன். பாத்தியா? ஒரு எலெக்ட்ரீஷியன் கூட மூடநம்பிக்கை சார்ந்த எவ்வளவு விஷயங்களால பாதிக்கப்பட்டிருக்கான்னு...’’

- கணபதி சுப்ரமணியன் யதார்த்தமாகப் பேச, அந்த சிவன் கோயில் பட்டையான காவிச் சுவர்களோடு கண்ணில் பட்டது. மதில் மேல் நான்கு முனைகளிலும் அமர்ந்திருந்த நந்தி அது சிவன் கோயில் என்பதை ஊர்ஜிதம் செய்தது.

‘‘தாத்தா! கோயில் வந்துடுச்சு... உள்ள போய் பாத்துட்டு அப்புறமா நானே போன் பண்றேன்...’’ - என்று போனை கட் செய்தாள். காரும் கோயில் முகப்பில் நின்றது. ஒரு பழைய பெயர்ப் பலகையில் ‘ஆதி சொக்கநாதர் சமேத விஜயாம்பிகை திருக்கோயில்’ என்று இருந்தது. ஏட்டில் இருந்த ‘அந்த ஆதிசிவன் குடில்’ என்பது ஒத்துப் போயிற்று. மூவரும் காரிலிருந்து இறங்கி உள் நடந்தனர்.

உள்ளே ஸ்பீக்கரில் தேவாரம் ஒலித்தபடி இருந்தது. அங்கும் இங்குமாய் சிலர் மட்டும் தென்பட்டனர். அந்தக் காலத்துக் கோயில். உட்புறத்தில் ஏராளமான வில்வ மரங்கள்! ஒரு ஓரமாக காவி வேட்டி துண்டுடன் ஒருவர் அமர்ந்து கொண்டிருந்தார்.

சாமியாரா, பிச்சைக்காரரா என்று அனுமானிக்க முடியாத இடைப்பட்ட தோற்றம். மூவரையும் அவரும் பார்த்தார். வள்ளுவர் அவரிடம் பேசத் தொடங்கினார்.

‘‘வணக்கம்... சாமிகிட்ட சில விஷயங்கள் பேசலாமா?’’

‘‘என்கிட்டயா?’’

‘‘ஆமாம்...’’

‘‘நீங்க என்ன அந்த அபிஷேகம் பண்ண வந்திருக்கறவங்களா?’’

‘‘அபிஷேகமா?’’

‘‘ஆமாம்... நம்ம கோயில் காவக்கார சாமியான கால பைரவருக்கு அபிஷேகத்துக்குக் கொடுத்தது நீங்கதானே?’’

‘‘ஓ.. இந்தக் கோயில் காவல் தெய்வம் கால பைரவரா?’’ - வள்ளுவர் கேட்ட விதமே அவருக்கு பதிலாகி விட்டது.

அவர் முகத்திலும் மாற்றம்.‘‘அந்த சந்நதி எங்க இருக்கு?’’ என்று கேட்டான் வர்ஷன். மௌனமாக திசையைக் காட்டினார் அந்த மனிதர்! சந்நதி தனியே தெற்கு நோக்கி பார்த்தபடி இருந்தது. சந்நதி முகப்பில் நல்ல கூட்டம். அன்று அஷ்டமி நாள், செவ்வாய்க்கிழமை வேறு!

வர்ஷன் வள்ளுவரைப் பார்க்க, வள்ளுவர் ஏட்டை எடுத்து படிக்கச் சொன்னார்! வர்ஷனும் தயாரானான். ஏட்டின் பக்கத்தில் எழுத்துகள் தெளிவாகவே தெரிந்தன!

‘காவல் தெய்வம் நோக்கும் பக்கம் நாவல் மரத்தின் நிழலில் இருக்கும் சேவல் கொடியோன் உடனுறை தரிக்கும் கோவில் மந்திரம் மற்றது உரைக்கும்!’- என்று அந்தப் பக்கத்தில் வரிகள்.

வள்ளுவர் உடனே பொருள் கூறத் தொடங்கினார்.‘‘காவல் தெய்வம் நோக்கும் பக்கம்னா, இந்த கால பைரவர் பார்க்கும் பக்கம்னு அர்த்தம். அதாவது தென்திசை! அந்த தென்திசையில் நாவல் மரத்துக்குக் கீழ இருக்கிற ‘சேவல் கொடியோன் உடனுறை தரிக்கும்’னா முருகனோட உடன் பிறந்தவர் இருக்கற இடம்னு ஒரு பொருள் உண்டு. அப்படின்னா அது விநாயகராதான் இருக்கணும். அந்த விநாயகருக்கான மந்திரமானது நமக்கு அடுத்தடுத்து சொல்ல வேண்டியதை சொல்லிடும்னு பொருள்’’ என்றார்.

‘‘அப்ப நாம் தென்திசைநோக்கி போறோம். அதாவது பிள்ளையாரைப் பார்க்க...’’ என்று அவர் விளக்கத்தை ரத்தினச் சுருக்கமாகக் கூறினான் வர்ஷன். சொன்னது போலவே புறப்படவும்

முடிவு செய்தனர். முன்னதாக ஆதிசொக்கநாதரையும் விஜயாம்பிகையையும் தரிசிக்க அவர்கள் தயாராயினர்.

‘‘அய்யா! என்ன இது... இப்படியே ஒவ்வொரு கோயிலுக்கும் போய்க்கிட்டே இருக்க வேண்டியிருக்கே?’’

என அயர்ச்சியோடு சொன்னாள் ப்ரியா.

‘‘என்ன... சோர்வா இருக்காம்மா?’’ என்ற வள்ளுவர், ‘‘பிள்ளையாரைத் தொட்டுத் தொடங்கற காரியம் நிச்சயம் நல்லவிதமா முடியும்மா. சொல்லப் போனா நம்ம பயணம் அங்கதான் உண்மையில தொடங்குது. அது மட்டுமில்ல... நாம இப்ப காலப்பலகணியை தேடற நோக்கத்துக்கும் அங்க நமக்கு விடை கிடைக்கலாம்’’ என்றார்.

வர்ஷனும் ஆமோதித்தான். பின் ஆதிசொக்கநாதரையும் விஜயாம்பிகையையும் தரிசித்தனர். திரும்பப் புறப்பட்டனர்.அவர்கள் தேடிய நாவல் மரத்தடி பிள்ளையாரும் நாவலூர் என்ற ஊரில் அறுபதாவது கிலோ மீட்டரிலேயே கிடைத்துவிட்டார். ஆனால் ஊர்முகப்பில் ஒரு மருத்துவ முகாம். காரில் வந்த மூவரையும் இறங்கச் சொல்லி, ஊருக்குள் போகும் முன் தடுப்பு ஊசி போட்டுக்கொள்ளச் சொன்னார்கள்.

‘‘எதுக்கு?’’

‘‘எபோலா வைரஸ் மாதிரி ஒரு கிருமி பரவினதுல இங்க நாவலூர்ல மட்டும் இதுவரை எண்பது பேர் இறந்துட்டாங்க... கிருமியும் வேகமா பரவிக்கிட்டு இருக்கு. இதுல இருந்து

பிழைச்சாலும் புண்ணியமில்லை. காது கேட்காம போயிடுது...’’ என்றார் டாக்டர் ஒருவர்.

பகீரென்றது மூவருக்கும்..!

45

“மௌனத்தத்தில் நாங்கள் எதைப் பற்றிப் பேசினாலும் முடிவில் அந்தப் பேச்சு ஒரு சித்தரிடம்தான் வந்து நின்றது. அதைத் தொடர்ந்து சதுரகிரி செல்லத் தீர்மானித்தோம். ஜோசப் இம்மட்டில் நமது துறை சார்ந்த எந்த ஒரு ஆயுதத்தையும் நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது என்றார். ‘இரவில் பார்க்க முடிந்த கேமரா, ஆபத்தில் இருப்பதை உணர்த்தும் க்ராக்கர்ஸ், விஷம் தோய்ந்த கத்தி, சத்தமில்லாமல் சுடும் துப்பாக்கி, சூரிய ஒளியில் சார்ஜ் ஆகி செயல்பட முடிந்த போர்ட்டபிள் ஆன்டெனா, மிக மட்டமான வெளிச்சத்திலும் படம் பிடிக்க முடிந்த வீடியோ கேமரா, ஒரு மெடிக்கல் கிட் பேக், இது போக ஒரு ஷோல்டர்பேக்கில் நூறு மீட்டர் உயரத்திற்கு ஏற உதவுகிற மலையேறும் சாதனங்கள், பூமியில் மூன்று மீட்டர் தூரம் துளையிட்டு உள் மண்ணை எடுத்துச் சேகரிக்க உதவுகிற போர் ட்ரில்லர்... இப்படி நாங்கள் வழக்கமான பயணங்களில் எடுத்துக்கொள்ளும் எந்த ஒரு உபகரணத்தையும் இம்முறை எடுத்து வரக்கூடாது என்று கூறிவிட்டார் ஜோசப் சந்திரன். மாறாக, ‘காவி வேட்டி கட்டிக்கொண்டு, ஷேவ் செய்யாமல் முடியை வளர்த்துக்கொண்டு, ஒரு யாத்ரிகன் போலத்தான் அந்த மலையை மிதிக்க வேண்டும்’ என்றார். மானசீகமாகவும் உருக்கமாகவும் சித்த தரிசனம் கிடைக்க பிரார்த்தனையும்

செய்துகொள்ளச் சொன்னார்.'வேஷம் போடச் சொல்கிறீர்களா?' என்று நான் திருப்பிக் கேட்கவும், அவருக்கு கோபம் வந்துவிட்டது.

'வேஷம் போடச் சொல்லவில்லை கணபதி... அசலான யாத்ரீகனாக மாறச் சொல்கிறேன். சித்தர்கள் வரையில் நாம் உண்மையாக இருந்தால் போதும். மற்றவை அவசியமில்லை' என்ற அவர் கருத்தை ஏற்க எனக்கு சிரமமாக இருந்தது.'அது எப்படி ஜோசப்... அந்த சித்தர்கள் பற்றி எந்த அனுபவங்களும் நமக்கு இல்லாத நிலையில், எப்படி அவர்கள்பால் பக்தி வைக்க முடியும்? கடவுள்மேல்கூட நாம் பூரண பக்தி வைப்பதில்லை. இன்னும் சொல்லப் போனால் பக்திக்கு இங்கே யாருக்கும் பொருளே சரியாகத் தெரியாது' என்றேன் நான். அதை ஜோசப் சந்திரன் மறுக்கவில்லை.

'நீங்கள் சொல்வதுதான் உண்மை... பக்தி ஒரு அற்புதமான விஷயம். அது மனிதனுக்கு மட்டுமே சாத்தியம். மற்ற உயிரினங்களுக்கெல்லாம் பசி, பாசம், பயம், சந்தோஷம் என்கிற உணர்வுகளே சாத்தியம். மனிதர்களில்கூட எல்லோருக்கும் அது சாத்தியமில்லை. பக்தி என்பது கல்வியைப் போன்றது. 'கல்வியின் அருமை ஒருவருக்குத் தெரிய வந்தபின் அவர் படித்துக்கொள்ளட்டும்' என்று நாம் மனிதர்களை விட்டுவிடுவதில்லை. குழந்தைப் பிராயத்திலேயே அழுதாலும், அடம் பிடித்தாலும், நாம் அவர்களை பள்ளிக்கு அழைத்துச் சென்று வற்புறுத்தியே கல்வி கற்க வைக்கிறோம். அதன்பின் அது பழக்கமாகிவிடுகிறது. அதன் மதிப்பு ஐம்பது, அறுபது வயதில்தான் ஒருவருக்குப் பூரணமாகத் தெரியவும் வருகிறது. இதே பாணியில்தான் பக்தியும் புகட்டப்படுகிறது. 'கடவுளைக் கண்ணால் பார்த்தபிறகு நான் பக்தி செலுத்துகிறேன்' என்று ஒருவர் கூறினால் அவரால் அவர் வாழும் நாளில் பக்தி

செலுத்தவே முடியாது. போலியாகவாவது பக்தி செலுத்தத் தொடங்கினாலே அம்மட்டில் அந்த அற்புதத்தால் மெல்ல பயன் பெற முடியும்' - என்று ஒரு நீண்ட விளக்கம் தந்தார் ஜோசப்.

கல்வியையும் பக்தியையும் ஒரு நேர்க்கோட்டில் வைத்து அவர் சொன்ன கருத்தை என்னால் மறுக்க முடியவில்லை. அதேசமயம் பெரிதாக எனக்குக் கடவுள் நம்பிக்கையும் இல்லை. நம் கண்ணெதிரில் தவறானவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வதையும் மிக நல்லவர்கள் கஷ்டப்படுவதையும் பார்க்கும்போது எப்படி கடவுள் இருப்பதாகக் கருதமுடியும்? அதேசமயம் பரந்த இந்த உலகம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், காற்று, மழை, இரவு, பகல் என்கிற அமைப்பை எல்லாம் பார்க்கும்போது இதெல்லாம் எப்படி தானாக வந்திருக்க முடியும் என்கிற கேள்வியும் எழும்பும்.

எனவே, கடவுள் நம்பிக்கை மற்றும் பக்தி சார்ந்த விஷயங்களில் நான் குழப்பமானவனே! கிட்டத்தட்ட என்னைப் போலவேதான் நான் எல்லோரையும் நினைக்கிறேன். இதில் ஜோசப் சந்திரன் மாறுதலாகக் காட்சி தந்தது எனக்கு ஆச்சரியமே! இ ்ந்த பக்தி விஷயத்தில் மட்டுமா... அவர் எல்லா விஷயங்களிலும் எனக்கு ஆச்சரியம் தருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.அதன்பின் யாத்ரிகர் கோலத்தில் நாங்கள் சதுரகிரி நோக்கிப் புறப்பட்டோம். ெதற்கே ராஜபாளையம் சென்று அங்கிருந்து குட்டி மலையாள தேசம் என்றழைக்கப்படும் வத்திராயிருப்பு எனும் ஊருக்குச் சென்று, பின் அங்கிருந்து தாணிப்பாறை எனும் மலையடிவாரப் பகுதிக்குச் சென்று, அங்கே இருந்து கையில் ஒரு கோலுடன் தோளில் தொங்கும் ஒரு பையுடன் நடந்தோம்.

ஜோசப் சந்திரன் மலையடிவாரத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிட்டார். நான் பாசாங்காக குனிந்து நிமிர்ந்தேன். அதன்பின் நடந்தோம்... எந்த இலக்கும் இல்லை - கால் போகும் போக்கு என்பார்களே அப்படி ஒரு போக்கு. சிறிது நேரம் கழித்துப் பார்த்தால் எங்களோடு ஒரு கறுப்பு நாயும் வந்து கொண்டிருந்தது! நாங்கள் ஓய்வெடுக்க ஏதாவது மரத்தடியில் அமர்ந்தால் அதுவும் அமர்ந்தது. ஒரு கட்டத்தில் ஜோசப் அந்த நாயைக் கும்பிட்டார்!"- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். அதன்பின் அவர்களுக்கு ஊசியும் போடப்பட்டது. கூடுதலாக நிலவேம்புக் கஷாயம் ஒரு பிளாஸ்டிக் தம்ளரில் தரப்பட்டது. அதைக் குடிக்கவும், உச்சியிலிருந்து பாதம் வரை ஒரு புரட்டு புரட்டியது அதன் கசப்பு. உடல் ரோமங்கள் அவ்வளவும் நிமிர்ந்துகொள்ள, சதைப்பகுதியை அனிச்சையாக ஒரு இறுக்கம் கவ்விக்கொண்டது.

வள்ளுவர் அவர்கள் அளவுக்கு சிரமப்படவில்லை. ஏதோ தேனீர் குடிப்பதைப் போலக் குடித்தார். பின் தீர்க்கமாக யோசிக்கத் தொடங்கினார். வர்ஷன் காரை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு நாவல் மரத்தடி பிள்ளையார் இருக்கும் பக்கமாக நடக்க, ப்ரியாவும் பின் தொடர்ந்திட வழியில் வீடுகளில் அங்கங்கே கொத்துக் கொத்தாக அமர்ந்திருந்தனர். அவையெல்லாமே சாவு வீடுகள்! பார்க்க கண்ணைக் கரித்தது.

வர்ஷனும் ப்ரியாவும் தங்கள் வாழ்நாளில் சாலைகளில் செல்கையில் அவ்வப்போது சவ ஊர்வலங்களைப் பார்த்துள்ளனர். ஆனால் வரிசையாகப் பார்ப்பது இதுதான் முதல்முறை. ப்ரியா

நடந்தபடியே வள்ளுவரை கவனித்தாள். அவர் முகத்தில் ஒரு விரக்திச் சிரிப்பும் தெரிந்தது.

‘‘அய்யா...’’

‘‘என்னம்மா...’’

‘‘பலமா யோசிக்கற மாதிரி தெரியுதே?’’

‘‘என் யோசனை எப்பவுமே பலமாதாம்மா இருக்கும். நீ கூட கொஞ்சம் முந்தி கேட்டே... எதுக்கு இந்த ஏடுங்க நம்மை ஊர் ஊரா சுத்த வைக்குதுன்னு..? அதுக்கு எனக்கு இப்ப விடை கிடைச்சிருக்கு. அதை நினைச்சேன். வேற ஒண்ணுமில்லை!’’

‘‘அந்த விடை என்னன்னு...’’

‘‘சொல்றேன். மனுஷன் எவ்வளவுதான் அறிவாளியா இருந்தாலும், இயற்கை அவனை அடக்க தொடர்ந்து யுத்தம் நடத்திக்கிட்டே இருக்குது...’’

‘‘இங்கு பாதிச்சிருக்கற எபோலா கிருமியை வெச்சு சொல்றீங்களா?’’

‘‘ஆமாம்மா... இப்ப இதுக்கு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிங்க போராடுவாங்க. மருந்தை கண்டும் பிடிச்சிடுவாங்க. அதேசமயம் புதுசா இன்னொரு கிருமி வந்து, தன்னோட வேலையைக் காட்டும். அப்புறம் அதுக்கு மருந்து கண்டுபிடிக்க ஒரு போராட்டம். ஆக மொத்தத்துல இயற்கையை மதிக்காம, அதை அனுசரிக்காம வாழ்ந்தாலே எப்பவும் போராட்டம்தான்! மனுஷன் செவ்வாய்க் கிரகத்துக்கு போய் என்ன புண்ணியம்? இதோ இந்த ஊர்ல செத்துட்டவங்களை காப்பாத்த முடியல, பாத்தியா?’’

‘‘நீங்க என்ன சொல்ல வர்றீங்கய்யா?’’

‘‘எப்படி வாழணும்னு நம்ம பெரியவங்க தெளிவா சொல்லிட்டுப் போயிருக்காங்கம்மா... அதன்படி வாழாம நாம இப்ப நம்ம நோக்கத்துக்கு வாழ்ந்துக்கிட்டிருக்கோம். அதுக்குக் கொடுக்கற விலைதாம்மா இந்த மரணங்கள்!’’

‘‘நீங்க விஞ்ஞான வசதிகளைக் கூடாதுங்கறீங்களா? இல்லை, அதை தப்பா பயன்படுத்தறோம்னு சொல்றீங்களா?’’

‘‘விஞ்ஞான வளர்ச்சி கூடாதுன்னு நான் சொல்வேனாம்மா? புராண காலத்துலகூட விஞ்ஞானம் இருந்து, அது வளர்ந்துகிட்டேதான்மா இருந்துருக்கு! என்ன, நம்ப முடியலையா..? விவரமா அப்புறமா சொல்றேன். இப்ப நம்ம வாழ்க்கைக்கு வருவோம்.

வாழ்க்கைங்கறது என்ன? அசைவுதானே? ஒரே மாதிரி அசைஞ்சா அதுவும் போரடிச்சிடுமே..? அதனால மாறி மாறி அசையறோம். ஆக, மாறிக்கிட்டே இருக்கறதே வாழ்க்கை! மாற்றம் நின்னா மனுஷனும் நின்னுடுவான். ஆகையால மாற்றம்தான் மாறாம நடந்துகிட்டு இருக்கு. இதுல நல்ல மாற்றம், கெட்ட மாற்றம்னு இரண்டு இருக்கு. இரவு - பகல், இனிப்பு - கசப்பு மாதிரி... அதுல நம்ம மாற்றம்ங்கறது கெட்ட மாற்றமாவே அதிகம் இருக்கு. அதாம்மா சிக்கலே!’’

‘‘வயசானவங்க எல்லாரும் இப்படித்தான் பேசறீங்க. நாங்க பாக்க உலகமும் சுயநலமாதான் இருக்கு. ஆனா அதுக்காக நல்லதே இல்லை... அது நடக்கறதே இல்லைன்னு சொல்லிட முடியுமா?’’

‘‘கரெக்டா சொன்னே! இப்ப நாம இந்த ஊருக்கு வந்திருக்கறது கூட நல்லது நடக்கணும்ங்கறதுக்காகத்தான். நல்லது செய்யத்தான் வந்துருக்கோம். இன்னிக்கு இந்த ஊரைத் தாக்கியிருக்கற கிருமி வேகமா பரவி நம்ம நாட்டையே தாக்க எவ்வளவு நேரமாயிடும். அதை அழிச்சாதானே ஊரும் உலகமும் ஆரோக்கியமா வாழ முடியும்!’’

‘‘அதுக்கு நாம என்ன செய்ய முடியும் அய்யா..?’’

‘‘என்னம்மா, இப்படிக் கேட்டுட்டே? நீ யாரோ, நான் யாரோ... அதோ முன்ன நடக்கற வர்ஷன் யாரோ! ஒரு நாள் இந்த காலப் பலகணி விஷயம் நம்மை சந்திக்க வெச்சது. அதைத் தொடர்ந்து எவ்வளவு சம்பவங்கள்? யோசிச்சுப் பாரு... அதுல ஒரு சம்பவத்தையாவது நீ யோசிச்சுப் பார்த்திருப்பியா? ஒவ்வொண்ணா நடக்குது. நாமளும் அதுல நடந்துக்கிட்டே போறோம். மலையேறும்போது பாதை வளைஞ்சு வளைஞ்சு போகும். பாதைன்னு

ஒண்ணு கண்ணுக்கே தெரியாது. ஆனா போகப் போகத் தெரியும். அப்படித்தானே நம்ம பயணமும்!''

''நீங்க எங்கேயோ தொடங்கி எங்கேயோ போயிட்டீங்கய்யா!''

''இல்லம்மா... தெளிவாத்தான் பேசிக்கிட்டிருக்கேன். நாம என்ன செய்ய முடியும்னு கேட்டியே... அதுக்குதான் பதில் சொல்லிக்கிட்டு இருக்கேன். சில மணி நேரம் முந்தி வர்ஷன் கூட ஒரு அழகான கேள்வி கேட்டதையும் நினைச்சுப் பார்... இந்த காலப் பலகணியை நாம பாத்து என்ன பண்ணப் போறோம்னு ஒரு கேள்விய கேட்டானே..? அதுக்கும் சேர்த்தே பதில் சொல்றேன்.

இந்த ஊர் சாவுகளுக்கும் சாகடிச்ச கிருமிக்கும் காலப் பலகணிக்கும் ஒரு தொடர்பு இருக்கு. அதை நாம பலகணியை நெருங்கும்போது தெரிஞ்சுக்குவோம்!''

''ஓ... பலகணில இதுக்கான மருந்து பற்றின குறிப்புகள் இருக்குமா?''

''இருக்கலாம்... ஆனா ஏதோ ஒண்ணு அதுல இருக்கு. ஏன்னா, இந்த பூமில மனிதன் இன்னும் பல நூற்றாண்டுகள் நல்லபடியா வாழ்ந்தாகணுமே?''

- வள்ளுவர் கூறி முடிக்கவும், நாவல் மரத்தடி பிள்ளையார் கோயில் வரவும் சரியாக இருந்தது. அழகான பிள்ளையார்! மரத்தடியில் கம்பீரமாகக் காட்சி தந்தார். வள்ளுவர் கண்கள் பனிக்க வணங்கத் தொடங்கினார். பிள்ளையாரைச் சுற்றி ஒருவரும் இல்லை. நாவல் மரம் காற்றில் அசைந்தபடி இருந்தது. தரையில் அதன் பழுப்பு இலைகள்!

சூரியன் அஸ்தமிக்கத் தயாராகிக் கொண்டிருந்தான்.

‘‘அய்யா... பிள்ளையார்கிட்ட வந்துட்டோம். ‘சேவல் கொடியோன் உடனுறை தரிக்கும் கோயில் மந்திரம் மற்றது உரைக்கும்’ங்கற ஏட்டுல வந்த வரிகளுக்கு ஏற்ப கோயில் மந்திரம் இப்ப நமக்குத் தெரியணும். ஆனா இங்க யாருமே இல்லையே..?’’ என்ற வர்ஷனைப் பார்த்த வள்ளுவர் நிதானமாகச் சொன்னார்... ‘‘பொறுமையா இரு வர்ஷன்! அதுக்கும் வழி தானா பிறக்கும். இந்த பிள்ளையாரைப் பார்... எவ்வளவு அழகு?’’

‘‘அய்யா! பிள்ளையாரே அழகுதான்யா. சின்னக் குழந்தையா இருக்கும்போது இருந்தே எனக்கு பிள்ளையார், அனுமார் இவங்கள ரொம்ப பிடிக்கும்...’’

‘‘சரியா சொன்னே... சின்னப் பிள்ளையா இருக்கும்போதே பக்தி நுழையணும்னுதான் இப்படிப்பட்ட வடிவங்கள் ஏற்பட்டன. உருவ வழிபாட்டுல இது ஒரு உளவியல்பூர்வமான வழிமுறை. அதுலயும் பிள்ளையார் ஒரு அற்புதம். பிள்ளையாரை நினைக்கும்போது அவ்வைப் பாட்டியும் ஞாபகத்துக்கு வருவாங்க. அந்தம்மா எழுதி வெச்சதும் ஞாபகத்துக்கு வரும். ‘அறம் செய விரும்பு, ஆறுவது சினம்’னு ஆனா, ஆவன்னாவைக் கொண்டே அவங்க சொன்ன கருத்தை கடவுள் மறுப்பாளர்களாலகூட மறுத்துப் பேச முடியாது. அவ்வளவும் அற்புதமான கருத்துக்கள்!

பிள்ளையார்கூட ஒரு அற்புதமான கருத்தைத் தோற்றம் மூலமாகவே சொல்றவர்தான். சின்ன கண்கள் கூர்மையா பாக்கணும்னு சொல்லுது. பெரிய காதோ கேட்கறதுதான் பெரிசுன்னு சொல்லுது. ஒரு கைல ஒடிஞ்ச கொம்பு... அதை வெச்சுதான் மகாபாரதம் எழுதினார். அது, ‘பேனாதான்டா உலகத்துல பெருசு’ன்னு

சொல்லிடுச்சு. மறு கைல கொழுக்கட்டை... உள்ளுக்குள்ள பூரணம்ங்கற இனிப்பு.

கூர்மையா கவனிச்சு, காது கொடுத்துக் கேட்டு, அறிவாளியா திகழ்ந்தா நீ பூரணம்ங்கற இனிப்பை அடையறது நிச்சயம் என்பதுதான் இந்தத் தோற்றம் சொல்லும் பொருள். இதை சிறு வயசுல இருந்தே பார்த்து பக்தியோட வணங்கும்போது மனசுலயும் ஆழமா பதிஞ்சிடுது...'' - என்று சொல்லிக் கொண்டே நடந்தவர், பக்கத்தில் கோயில் சுவற்றில் ஒரு மந்திரம் எழுதப்பட்டிருப்பதைக் கண்டார்.

'காலாலங்கிரி கல்லுடைத்து
லட்சியத்தோடு உனைப் படைத்த
பாலா சித்தர் பாதம் பணிந்தே
லட்சுமி கடாட்சம் பெறுவேனே
கணிப் பூட்டு இப்பாட்டு
சாவிலிருந்தே காப்பாற்றுமே!'

- என்கிற அந்த பாடல் வரிகளை வாசித்தவருக்கு திகைப்பு ஏற்பட்டது. வர்ஷனும் ப்ரியாவும் கூட புரிந்து கொண்டனர்.

''அய்யா... இதுதானா அந்தக் கோயில் மந்திரம்?' - என்று கச்சிதமாய் கேட்டாள் ப்ரியா.

''ஆமாம்... ஆனா இதை சரியா படிக்கணும். இதுல ஒவ்வொரு வரியோட முதல் எழுத்தும் பெரிய எழுத்தா இருக்கறத பாருங்க... அதை மேல இருந்து கீழ வாசிச்சா 'கால பலகணி சாவி'ன்னு ஒரு வார்த்தை கிடைக்கறதையும் பாருங்க...'' என்றார் வள்ளுவர்.

ப்ரியாவும், வர்ஷனும் அதைப் பார்த்து வியந்தனர். ‘காலப்பலகணி குறிப்பு சரி... சாவி என்கிற சொல் எதற்காக?’

அவர்களுக்குள் கேள்வி... எந்தப் பூட்டைத் திறக்க இந்த சாவி?

46

“ஜோசப் நாயைக் கும்பிட்டதைக் கண்டு எனக்கு எப்படி வியப்பு ஏற்படாமல் இருக்க முடியும்? அதன் எதிரொலியாக சிரித்தேன். ஆனால் ஜோசப் என் சிரிப்பை பொருட்படுத்தவில்லை. நாயை ஒரு மனிதன் போலக் கருதி, அதனுடன் பேசத் தொடங்கி விட்டார்.‘கறுப்பா! நீ வந்ததுல சந்தோஷம்... எனக்கு சித்த தரிசனம் கிடைக்கணும். ரொம்ப நம்பிக்கையோட வந்துருக்கேன். வழி காட்டுப்பா...’ என்றார். அதுவும் இளைப்பெடுக்க அவரைப் பார்த்து விட்டு, முன்னால் ஓடத் தொடங்கியது.

‘நாய்க்கு புத்தி உண்டு, அது மனிதன் சொல்வதைக் கேட்கும்’ என்பது நமக்குத் தெரியும். இங்கேயும் அப்படித்தான் நடப்பதாக எனக்குத் தோன்றியது. ஆனாலும் என்னுள் பலப் பல சந்தேகங்கள்.‘என்ன சார்... இந்த நாயை உங்களுக்கு முன்பே தெரியுமா?’ என்று கேட்டேன். ‘நான் இந்த மலைக்கே இப்போதுதான் முதல்முறையாக வந்திருக்கிறேன். அப்படி இருக்க, எப்படி கணபதி எனக்கு இந்த நாயைத் தெரிந்திருக்க முடியும்?’ என்று திருப்பிக் கேட்டார்.

அப்படியே, ‘நீங்கள் இப்படிக் கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியும்’ என்றவர், அதன் பின் நான் கேட்காமலே எனக்கு

விளக்கமளிக்கத் தொடங்கினார். அது ஒரு நீண்ட விளக்கம்!'கணபதி! இந்த சதுரகிரி மலை பூகோள ரீதியாக மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டி வருகிறது. நான் முன்பே மலைகள் பற்றியும், அவற்றின் சக்தி பற்றியும் கூறியிருக்கிறேன். தட்டையான நிலப்பரப்பின் தன்மைக்கும் சரிவான நிலப்பரப்பின் தன்மைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. மலைகளிடம் பஞ்ச பூத சக்தி மிக அதிகம். அதனால்தான் ஞானிகள் மலைகளைத் தங்கள் புகலிடமாக ஆக்கிக் கொண்டனர்.

தட்டையான நிலப்பரப்பில் வாழும் வாழ்க்கை வேறு... சரிவான நிலப்பரப்பில் வாழும் வாழ்க்கை வேறு..! சரிவான நிலப்பரப்பில் ஒரு பெரிய சமூக வாழ்வு வாழ முடியாது. வாழ முயன்றால் அந்த சரிந்த நிலம் தட்டையாகி விடும். ஊட்டியும் கொடைக்கானலும் அதற்குப் பெரிய சாட்சி.

இங்கே சதுரகிரி மலை, பஞ்சபூத சக்திகளை அபரிமிதமாகத் தன்னகத்தே கொண்டுள்ளது. உலகத்திலேயே - நன்றாகக் ேகட்டுக் கொள்ளுங்கள் - உலகத்திலேயே நெல்லை சீமை போல ஒரு பகுதியோ, தமிழன் கண்டறிந்த ஐவகை நிலங்களும் ஒருங்கே கொண்ட ஒரு பகுதியோ எங்கும் இல்லை. அந்த ஐவகையில் ஒரு வகைதான் இந்த மலைப்பகுதி.

நதி, அருவி, குளம், கடல், ஓடை என்று நீருக்கும் இங்கே ஐந்து தன்மை உண்டு. 'ஓடுதல், பாய்தல், தேங்குதல், பெருகிக்கிடத்தல், சிறுத்துக்கிடத்தல்' என்பவையே அந்த ஐவகைத் தன்மை. இந்த தன்மைகளுக்குப் பின்னே தனித்த ஒரு சக்தியும் உண்டு. இந்த ஐந்து வகை தன்மை கொண்ட நீரும் இந்த சதுரகிரியில் உள்ளது. ஒரு வட்டத்துக்கு ஆரம்பமும் கிடையாது; முடிவும் கிடையாது. அது திசையற்றது.

ஆனால் அதுவே சதுரம் என்றாகும்போது நான்கு நேர் திசைகளும் நான்கு குறுக்கு திசைகளும் வந்து, ஒரு அடையாளம் உருவாகி விடுகிறது. திசைகளுக்கென்று பிரத்யேக சக்தி உண்டு. உதிக்கும் திசை கிழக்கு, அஸ்தமிக்கும் திசை மேற்கு, அளிக்கும் திசை வடக்கு, அழிக்கும் திசை தெற்கு என்று அந்த சக்திகள் திசைக்கேற்ப உள்ளன.

இந்த நான்கு வகை சக்திகளும் சதுரகிரியில் மலைகளாகவே காணப்படுகின்றன. நான்கு மலைப்பகுதிகளுக்கு நடுவில் ஒரு சந்திப்புப் புள்ளி உண்டு. அது சமதளமாக இருந்தாலும், நான்கு மலைகளின் சக்தியையும் ஒன்றாகப் பெற்று, ஒரு கலவையாகி, ஒரு பிரத்யேக சக்தியை அது எதிரொலிக்கிறது.

சமூக வாழ்வை புறம் தள்ளி, மானுட வாழ்வை அழியாத வெற்றிக்குரியதாக ஆக்கிக்கொள்ளும் மீண்டும் பிறவாமைக்கு எது தேவையோ, அது அந்த சக்தி! ஒரு சக்தி இருப்பது கூட பெரிதல்ல. அதைப் பயன்படுத்தத் தெரிய வேண்டும். மின்சாரம் போன்றதே சக்தி. அதைக் கொண்டு விளக்கெரித்தல், மோட்டார்களை இயக்குதல் என்று பயன்படுத்திக் கொள்வதைப் போல் பயன்படுத்திக் கொள்வதில்தான் வெற்றி உள்ளது.

அதை இங்கே சாதித்துக் காட்டும் மனிதனே 'சித்தன்' எனப்படுகிறான். அந்த சித்தன் இந்த இயற்கை சக்தியைப் பாதுகாக்கவும் விரும்புகிறான். தோட்டத்தைப் பாதுகாத்திட ஒரு வேலியைப் போடுவது போல இங்கே பல பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அப்படி அந்த சித்தன் செய்த பாதுகாப்பில் முக்கியமானது, இந்த கறுப்பன் எனப்படும் நாய்...!'

– நடந்தபடியே ஜோசப் சந்திரன் சொன்ன விஷயங்கள் என்னைத் திரும்பவும் பிரமிப்பில் ஆழ்த்தின. நடந்து கொண்டே பேசிக் கொண்டதில் இவ்வளவு விஷயங்களா? இங்கே வருமுன் இந்த சதுரகிரி பற்றி ஒரு பெரிய தேடலை நிகழ்த்தி இதைப்பற்றித் தெரிந்துகொண்டே அவர் வந்துள்ளதை நான் புரிந்து கொண்டேன்.''– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

சாவி குறித்த கேள்வியோடு மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள, வள்ளுவர் திரும்பவும் பாடலைப் பார்த்தார். அப்போது ஒருவர் கோயிலுக்கு வந்தார்! அவர் கையில் ஒரு கூடை... துணி போட்டு மூடப்பட்டிருந்த அந்தக் கூடையோடு நெருங்கவும்தான், அவர் கோயில் குருக்கள் என்பது தெரிந்தது. அவரும் இந்த மூவரையும் வியப்போடு பார்த்தார்.

''நீங்கள்லாம் ஊருக்கு புதுசா தெரியறதே..?'' என்று கேட்கவும் செய்தார்.

''ஆமாம்... நீங்கதான் இந்த கோயில் குருக்களா?''

''ஆமாம்... இன்னிக்கு காலைல இருந்து பூஜையே பண்ணலை. ஊர் முழுக்க எழவா இருக்கும்போது சுவாமிக்கு எப்படி பூஜை பண்றது? இருந்தாலும் ஒரு காலமாவது பண்ணுவோமேன்னுதான் வந்தேன்!''

''நாங்க சென்னைல இருந்து வர்றோம். பிள்ளையாரை கும்பிடத்தான் வந்தோம். வந்த இடத்துல ஊரே வியாதியில இருக்கறத பார்க்க முடிஞ்சது. இதை நாங்க கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை!''

‘‘நாங்களும்தான்... இந்தக் கோயிலுக்கு தினசரி வந்து இந்த மந்திரத்தைச் சொல்லி எல்லாரும் வணங்கி வந்த வரைக்கும் ஒரு பிரச்னையும் இல்லை. எப்ப அதெல்லாம் கெட்டுப் போனதோ அப்பவே ஊருக்கும் சோதனைக் காலம் வந்துடுத்து...’’

‘‘நீங்க என்ன சொல்றீங்க... அப்படி என்ன இந்த மந்திரத்துல இருக்கு?’’

‘‘பாலா சித்தர்ங்கறவர் கட்டின கோயில் இது! காலாலங்கிரின்னு ஒரு மலை சதுரகிரி மலைக் கூட்டத்துகிட்ட இருக்கு. அந்த மலைல இருக்கற கல்லை எடுத்து செய்த பிள்ளையார்தான் இந்தப் பிள்ளையார்! இந்தப் பிள்ளையாரைச் செய்ய கல் எடுத்ததுல இருந்து, செதுக்கத் தொடங்கி இங்க கொண்டு வந்து பிரதிஷ்டை செய்த வரை ஒரு கணக்கு இருக்கு!

முகூர்த்த நேரத்துல ‘அபிஜித் முகூர்த்தம்’னு ஒண்ணு இருக்கு. அந்த முகூர்த்த காலமா பார்த்துப் பார்த்து செதுக்கின பிள்ளையார் இவர். அபிஜித் முகூர்த்த காலம்கறது வெற்றிகரமான ஒரு காலம்.

அதேபோல இந்தப் பிள்ளையாரை வணங்கிட்டு எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் வெற்றியும் நிச்சயம். அதனால நாடி ஜோசியத்துல இந்தப் பிள்ளையார் பற்றி நிறையவே குறிப்பு வரும். இங்க வந்து இவருக்கு வேண்டிண்டு, இந்தக் கோயில் பிரசாதத்தை மட்டுமே சாப்பிட்டுண்டு பிரார்த்தனை செய்துக்கறவாளுக்கு அவா பிரார்த்தனை நிறைவேறியிருக்கு.

சொன்னா நம்ப மாட்டேள்... மத்தியப் பிரதேசத்துல ஒரு மந்திரி. அவர் நன்னா தமிழ் பேசுவார். அப்படிப்பட்டவர் இங்க வந்து இந்த மந்திரம் சொல்லி பிரார்த்தனை பண்ணிட்டு போனார். தோத்துப் போய் காணாம போக வேண்டியவர், எப்படியோ ஜெயிச்சு திரும்ப மந்திரியாகிட்டார்னா பார்த்துக்குங்களேன்.''

குருக்கள் பேசப் பேச... வர்ஷனும் ப்ரியாவும் கோயில் தொடர்பு வடநாடு வரை நீண்டிருப்பதை கணக்காக மனதில் குறித்துக் கொண்டனர்.

‘‘ஆமா... இந்தப் பிள்ளையார் சிலைக்காக எதுக்கு காலாலங்கிரி மலைக்குப் போகணும்? பக்கத்துல இருக்கற நம்ம மகாபலிபுரம் போனா, அங்க எந்த சைஸ்ல வேணும்னாலும் கிடைக்குமே?''

‘‘அப்படியில்லை! காலாலங்கிரிக்கு ஒரு சிறப்பு இருக்கு. கிரகங்கள்ல புதன்ங்கற கிரகத்தோட ஆகர்ஷணத்தைக் கொண்டிருக்கற மலை அது. இது ரொம்ப பேருக்குத் தெரியாது. புதன்னா மதுரையையும் திருவெண்காட்டையும் தவிர வேற எதுவுமே யாருக்கும் ஞாபகம் வராது.

அடுத்து, அந்த மலையிலதான் அகத்தியர்ல இருந்து தொல்காப்பியர் வரை சித்த புருஷர்கள் தங்கியிருந்து தியானமும்

தவமும் செய்திருக்காங்க. அந்த மலையே கல்விக்கும் கணக்குக்கும் உரியது. அதனால புதாதிபத்யமுள்ள நேரத்துல அபிஜித் முகூர்த்தத்துல கல் எடுத்து, தொடர்ந்து முகூர்த்த நேரத்துல செதுக்கி, அதையும் ஒரு கணக்குக்கு உட்படுத்தி செதுக்கித்தான் இந்தப் பிள்ளையார் உருவாக்கப்பட்டார்.

நம் கையால அளந்து பார்த்தா, நாம் அவ்வளவு பேரும் எட்டு சாண் இருக்கறதும் ஒரு திட்டமிட்ட கணக்குதான். அதே போல இந்தப் பிள்ளையாரும், அவர் கையளவுல சரியா எட்டு சாண்தான் இருப்பார். இந்தப் பிள்ளையாரை இங்க பாலா சித்தர் பிரதிஷ்டை பண்ணக் காரணம் உண்டு. இந்தப் பகுதி மக்கள் கல்வியறிவில்லாம ரொம்பவே பின்தங்கியிருந்தாங்க.

அவர்கள் முன்னுக்கு வரவும் மிக அதிக காலம் தேவைப்பட்டது. தான் வாழும் காலத்தில் எல்லாருக்கும் கல்வி ஞானம் சித்திக்க அவர்தான் இந்தப் பிள்ளையாரை இங்க பிரதிஷ்டை செய்து, இந்த மந்திரத் துதியையும் எழுதி வெச்சார். இதைச் சொல்லி வழிபட்டா நல்ல சிந்தனை, ஞாபக சக்தி எல்லாம் ஏற்படும். இதை குரு வணக்கப் பாட்டாகவும், இறை வணக்கப் பாட்டாகவும், ‘ஒன்றுடைத்த ஈறு’ எனப்படுகிற வகையில் - அதாவது ஒன்றுக்குள் இரண்டாக உள்ள பாட்டாகவும் - அவர் பாடி வெச்சார்.’’

குருக்கள் பிள்ளையார் மீது காய்ந்து கிடந்த பூமாலைகளை அகற்றி, தான் கூடையோடு கொண்டு வந்திருந்த பூக்களை எடுத்துப் போட்டு, விளக்கேற்றி, ஊதுவத்தி கொளுத்தி வைத்து என்று செயல்பட்டபடியே இவர்களிடம் நீளமாகப் பேசினார்.வர்ஷனுக்குள் அவ்வேளை ஒரு சந்தேகம் எழுந்தது. ‘‘குருக்களே! புதன் கிரகத்தோட ஆதிக்கம் காலாலங்கிரி மேல இருக்குன்னு எப்படித் தெரிய வந்தது?’’

குருக்கள் திரும்பிப் பார்த்தார். பின், ‘‘அதெல்லாம் எனக்குத் தெரியாது அம்பி. பழனி மலை கூட செவ்வாயோட ஆதிக்கம் கொண்டதுன்னு சொல்றா! இதெல்லாம் ரிஷிகள், சித்த புருஷாள் சம்மந்தப்பட்ட விஷயம்...’’

‘‘புதன் ஆதிக்கம் இருந்தா கல்வி, கணக்கு சித்திக்கும்னு எதை வெச்சு சொன்னாங்க...’’ - அடுத்தும் கேட்டான் வர்ஷன்.

‘‘புதன் சிறப்பா இருந்தாதான் ஒருத்தன் நல்லபடியா படிக்க முடியும். பெரும்பாலும் கணக்கு போடற ஆடிட்டர்கள் எல்லாரும் புதானுக்ரகம் உள்ளவாதான்! அந்த கிரகத்தோட சக்தி நம்ப உடம்புல, மூளைல, அப்படித்தான் செயல்படறது. இதை சாதாரணமா ஜோசியக்காராளே சொல்லிடுவாளே...’’ என்றார் குருக்கள்.வர்ஷன் வள்ளுவரைப் பார்க்க, வள்ளுவரோ அந்த மந்திரப் பாடலைத் திரும்பப் பார்த்தார்.

‘‘இந்தப் பாடல்... இதிலுள்ள சொற்கள் எல்லாமே ரொம்ப சுலபமா புரியுது. ஒரு கவிதை எழுத முயற்சி செய்யற நபர் எழுதினது மாதிரி இருக்கு. கூடவே இதுல ஒரு புதிர் இருக்கு. ‘கணிப்பூட்டு இப்பாட்டு - சாவிலிருந்தே காப்பாற்றுமே’ன்னா என்ன பொருள்..? யாரை இது சாவுல இருந்து காப்பாற்றும்?’’ - ப்ரியாவும் கேட்கத் தொடங்கினாள்.

‘‘நாங்களும் இதைப் பத்தி யோசிச்சதுண்டு. கணிப்பூட்டு எதுன்னு தெரிஞ்சாதானே மற்ற விஷயங்களை நாம புரிஞ்சுக்க முடியும்?’’ - என்ற குருக்கள், ‘‘நீங்க எதுக்காக இந்தப் பாட்டு பத்தி யோசிச்சு இவ்வளவு மெனக்கெடணும்? சுவாமி தரிசனம் பண்ணிட்டு வேகமா புறப்படப் பாருங்கோ. அப்புறம் எங்க ஊரையே பாடாபடுத்தற அந்தக் கிருமி உங்களையும் ஏதாவது பண்ணிடப் போறது’’

என்றார்.வள்ளுவர் மட்டும் எதுவும் பேசாமல், வர்ஷனிடம் அந்தப் பாடலை போட்டோ எடுத்துக்கொள்ளச் சொன்னார். பின்னர், ‘‘எனக்கு எது தெரியணுமோ, அது தெரிஞ்சுடுச்சி தம்பி! நாம புறப்படுவோம்...’’ என்றார்.

‘‘உங்களுக்குத் தெரிஞ்சுடுச்சா..?’’

‘‘உம்...’’

‘‘என்ன... என்ன தெரிஞ்சது?’’

‘‘கார்ல போகும்போது பேசலாமே...’’

‘‘தாராளமா... அதே சமயம் இங்க இருந்து எங்க போகப் போறோம்ங்கறதும் ரொம்ப முக்கியமாச்சேய்யா!’’

‘‘நாம இப்ப சதுரகிரி நோக்கிப் போவோம். இங்கு இருந்து மதுரை. அப்புறம் அங்க இருந்து தெற்கு நோக்கி குற்றாலம் போற ரூட்ல போகணும். பூட்டு, சாவின்னு இரண்டு வார்த்தைகளுக்குள்ளதான் பொருள் இருக்கு. கைல இருக்கற ஏட்டை எடுத்துப் பார்த்தா நிச்சயம் இதுக்கு அர்த்தம் தெரிஞ்சிடும்...’’

- சொல்லிக்கொண்டே நடந்த வள்ளுவரை குருக்கள் அதிர்ச்சியோடு பார்க்க ஆரம்பித்தார். அதே வேகத்தில் ‘‘அய்யா... இருங்க! நீங்கதான் வள்ளுவரா?’’ என்றும் கேட்டார். வள்ளுவரிடம் ஆச்சரியம். ஆமோதித்தபடி தலையசைத்தார்.

‘‘என் தாத்தா சொன்னது ரொம்ப சரி... நீங்க கொஞ்சம் என் வீட்டுக்கு வர முடியுமா?’’

‘‘எதுக்கு?’’

‘‘உங்களப் போல ஒருத்தர் வருவார். வந்தா அவரைக் கூட்டிண்டு வா. அவர்கிட்ட நான் ஒரு பொருளை ஒப்படைக்கணும்னு என் தாத்தா சொன்னார்!’’

‘‘சரி, நான் வள்ளுவர்னு எதை வெச்சு தெரிஞ்சது?’’

‘‘மணிக்கட்டுக்கு மேலே பச்சை குத்தியிருக்கே! உங்க இனத்துல இந்த பச்சைய குழந்தையா இருக்கும்போது கோயில்ல வெச்சு குத்துவீங்கதானே?’’

- குருக்கள் கேட்க அப்போதுதான் வர்ஷனும் அவர் மணிக்கட்டுப் பகுதியைப் பார்த்தான். கோணல் மாணலாக அந்த பச்சை குத்தப்பட்ட எழுத்துக்கள் கண்ணில் பட்டன.

‘‘அது மட்டுமில்ல... வந்ததுல இருந்து மந்திரப்பாட்டு மேலயே குறியா இருந்தீங்களா, அதுவும் என்னை யோசிக்க வெச்சது!’’

‘‘சரி, உங்க வீடு எங்க இருக்கு?’’

‘‘பக்கத்துலதான். கொஞ்சம் இருங்க... அஞ்சு நிமிஷத்துலே பூஜையை முடிச்சிடறேன்!’’

‘‘நிதானமாவே பண்ணுங்க...’’ என்ற வள்ளுவர் நம்பிக்கையோடு வர்ஷன், ப்ரியாவைப் பார்க்க... அவர்களிடம் அடுத்த கட்ட ஆர்வம்!அதே சமயம் வெளியே சூரியனும் மேற்கில் மறைந்துவிட்ட நிலையில் இருள் சூழத் தொடங்கியது.காலாலங்கிரி மலை உச்சி!

*   *   *

ஈங்கோய் பாறை மேல் அமர்ந்திருந்த நிலையில் சூரியன் அஸ்தமிக்கவும், அவன் இறங்கி தீப்பந்தம் கொளுத்தத் தொடங்கினான். நாயும் அருகில் படுத்திருக்க எழுந்தது. குளிர் காற்றும் முகத்தில் அறைந்தது. நந்தி அடிகள் சொன்ன காலகட்டத்தில் பாதிக்குமேல் கழிந்து விட்டது. ‘இந்த இரவு வேளையில் இனி யாரும் வருவதற்கு வாய்ப்பில்லை. பொழுது புலர்ந்த பிறகுதான் இனி கண்காணிப்பைத் தொடர வேண்டும்’ என்று ஈங்கோய் நினைக்க, அருகில் ஒரு புதரில் பெரும் சலசலப்பு!

47

“ஜோசப்போடு அந்த மலைத்தலத்தில் நடந்தபடி இருந்தேன். எங்கள் பேச்சும் தொடர்ந்தது. அந்த நாயும் எங்களுக்கு முன்னும் பின்னுமாக நடந்தபடியே இருந்தது. சமதளத்தில் மட்டுமே நடந்து பழகியிருந்த எனக்கு, அந்த மலையின் முண்டும் முடிச்சுமான சாலையில் நடப்பது மிகவே சிரமமாக இருந்தது.

இன்றுள்ள மனிதர்கள்தான் நடப்பதே இல்லையே!நம் வரையில் கால்கள் என்பதே வீட்டினுள் நடமாடித் திரிய மட்டும்தானே? நான் சிரமப்பட்டு நடப்பதைக் கண்ட ஜோசப் என்னிடம், ‘கணபதி சுப்ரமணியன், உங்களால் இந்த மலையில் தொடர்ந்து நடக்க முடியுமா?’ என்று கேட்டார். கேள்வியிலேயே ஒரு அவநம்பிக்கை!‘இன்னமும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டியிருக்கும்?’ என்று கேட்டேன்.

‘யாருக்குத் தெரியும்? அது நாம் சந்திக்க விரும்பும் சித்தர் கையில் உள்ள விஷயம்’ என்றார்.‘அவர் எங்கே இருப்பார்?’‘தெரியாதே...’‘என்றால், இலக்கில்லாத நடையா இந்த நடை?’‘மேலோட்டமாகப் பார்த்தால் அப்படியேதான். ஆனால் உண்மையில் இதுவே இலக்குள்ள நடை.

ஆளைத் தெரியாது, பேரும் தெரியாது, இடம் தெரியாது, இப்படி எதுவுமே தெரியாது. ஆனால் இந்த தெரியாதுதான் நமக்குள் மிகப் பெரியது! அந்தப் பெரியதை நோக்கித்தான் இந்த நடை... இங்கே அந்தப் பெரியதைப் பார்த்து வரும் நம்பிக்கைதான் நமது ஒரே பலம்!’

‘ஜோசப்! நீங்கள் பேசுவதைப் பார்த்தால் உங்களையே ஒரு சித்தர் போல் எண்ணத் தோன்றுகிறது...’‘அப்படி எல்லாம் அவசரப்பட்டு என்னை சித்தராக்கி விடாதீர்கள். என்னால் பசி தாங்க முடியாது. தாகம் எடுக்கும்போது அதை அடக்கும் வலிமையும் கிடையாது. மசாலா வாசனையை நுகர நேரிடும்போது நாவில் எச்சில் ஊறுகிறது. இந்த வயதிலும் அழகான நிர்வாணப் படங்களைப் பார்க்க நேரிடுகையில் மனம் சலனப்படுகிறது. உடல் சார்ந்த ஒரு ஒடுக்கம் வரவேயில்லை.

ஆனால் மனதளவில் நான் மிகவே மாறுதல்களுக்கு ஆளாகியிருக்கிறேன். எதையும் நுட்பமாகப் பார்க்க இப்போது என்னால் முடிகிறது. சிக்கலான விஷயங்கள் புரியாவிட்டாலும், எப்படிச் சிந்தித்தால் அது புரிய வரும் என்று என்னால் யோசிக்க முடிகிறது.’‘என்றால், உங்களை அரைச்சித்தர் எனலாமா?’‘சித்தர்களில் அரை, கால், அரைக்கால் பதங்கள் எல்லாம் கிடையாது கணபதி சுப்ரமணியன். ஒருவன் சித்தனாகிவிட்டால் அவன் உடம்பு, மனது இரண்டையும் வெற்றி

கொண்டவனாகவே இருப்பான். ஒரு சித்தனால் காற்றை மட்டும் சுவாசித்து உயிர் வாழ முடியும். விஷத்தையே குடிக்க நேர்ந்தாலும், உடம்புக்குள் அது பரவுவதைக் கட்டுப்படுத்தி அதன் விஷத்தன்மையையே முறிக்கவும் முடியும். அவன் விரும்பினால் பறக்க முடியும். மிதக்க முடியும், கனக்க முடியும். இப்படி என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும்!'

'விஞ்ஞானபூர்வம் இதிலெல்லாம் உள்ளதா?'

'மெய்யான எல்லாவற்றுக்குள்ளும் விஞ்ஞான சம்பந்தம் எப்போதும் உண்டு கணபதி! விஞ்ஞான சம்பந்தம் இல்லாதது பொய் மட்டுமே!''என்றால், இந்த சித்த சக்திகளைக் கொண்டவர் ஒருவரைக்கூட நாம் பார்க்க இல்லையே... ஏன்?''நாம் பார்க்க அவர்கள் இல்லைதான்! ஆனால் அவர்கள் பார்க்க நாம் இருக்கவே செய்கிறோம்...''இது என்ன பதில் ஜோசப்..?''இதுதான் பதில்...' - என்ற ஜோசப் சுற்றி ஒரு பார்வை பார்த்தார். கருநொச்சி, கணையெருமை, உதிரவேங்கை, செங்கடுக்காய், ரோமவிருட்சம் என்று பலவித அபூர்வ மரங்கள் கண்ணில் பட்டன. காற்றும் குளிரக் குளிர வீசியது.

'இங்கே நம்மையும் அறியாமல் நாம் இழுத்து மூச்சு விடுவோம். எனவே நுரையீரல் விரிந்து கொடுத்து, ரத்தத்தில் ஆக்சிஜன் நிறையவே கலக்கும். தினமும் இதுபோல இந்த மலையில் நடக்க முடிந்தால் உலகிலேயே மிக ஆரோக்கியமான மனிதனாக நம்மால் வாழ முடியும்' என்று ஒரு விளக்கம் கொடுத்தார்.எங்களுக்கு முன்னால் ஓடியபடி இருந்த நாய், அப்போது திடீரென்று பக்கவாட்டில் புதர் ஒன்றுக்குள் புகுந்து மறைந்து போனது.

இங்கே தேங்கிய ஜோசப் சந்திரன், துணிந்து தானும் அந்தப் புதருக்குள் புகுந்தார். நானும் அவரைப் பின்தொடர்ந்தேன். பார்வைக்கு எதுவும் புலனாகவில்லை. எங்கும் ஒரே புதர்தான். நல்லவேளையாக நாய் குரைத்து, தான் முன்னே இருப்பதை உணர்த்தியது. சப்தம் வந்த திசை நோக்கி காலைத் தூக்கி வைத்து நடந்தோம். நடக்க நடக்க, அருவி ஒன்று கொட்டும் சப்தம் கேட்கத் தொடங்கியது!'- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

புதரின் சலசலப்பு ஈங்கோயை பரபரக்கச் செய்தது. தீப்பந்த வெளிச்சத்தில் அவ்வளவாய் பார்க்க முடியவில்லை. பாறை மேல் அமர்ந்திருந்தவன் எழுந்தான்.

''யாரது?'' என்று ஓங்கிக் குரல் கொடுத்தான்.

''நான்தான்யா...'' - என்றபடியே புதருக்குள் இருந்து வெளிப்பட்டாள் ஒரு பெண். அவள் இடுப்பில் ஒரு கூடையும் அதில் அவன் சாப்பிட கூழ் கலயத்தோடு குடுவை ஒன்றில் தண்ணீரும் இருந்தது.

அவள், அவனுடைய மனைவி பழஞ்சி.

''பழஞ்சீ..!''

''நானேதான்... கீழ சாமிய பாத்துட்டுதான் வரேன். 'இங்கே எங்க வந்தே'ன்னு ஆரம்பிச்சுடாதே...''

''கூடைல என்னா... கூழா?''

‘‘ஆமா... குடுவைல காச்சத் தண்ணி இருக்கு... ஆமா சாப்பிடுதியா?’’

‘‘பசி இல்லையே. சாமி பசிக்காம இருக்க தழைய கொடுத்துருக்காரே... ’’

‘‘பரவால்ல, சாப்பிடு!’’

‘‘சாப்ட்டா தூக்கம் வந்துடும். கண்ணு முழிக்க முடியாது...’’

‘‘ஆமா... யார் வந்துடுவாங்கன்னு இங்க இப்படி காவல் காக்கறே?’’

‘‘அதெல்லாம் எனக்கு என்ன தெரியும்? சாமி சொல்லிச்சு. வந்துட்டேன்.’’

‘‘அப்ப யாராச்சும் வரப்போறாங்கன்னு அர்த்தமா?’’

‘‘பொறவு... மனசுக்குள்ள சாகை தட்டியிருக்கும். அதுமட்டுமா? சாயா வாகினிங்கற பட்சி வேற வந்துடிச்சி. நான்தான் பாத்துட்டு சொன்னேன்...’’

‘‘அந்த பட்சி வந்தா என்ன?’’

‘‘அது வந்தாலே பெரிய மழை வரும். அழிவும் வரும். கூடவே லட்சக்கணக்கான பேர் சாகற மாதிரி வியாதியும் வரும். இத்தனை காலமா மனுஷக் கூட்டம் எவ்வளவு முன்னேறி இருக்கோ, அவ்வளவுக்கும் பின்னால போயிடும். குறிப்பா யாரெல்லாம் உசுரோட இருந்தா இந்த உலகம் பெருசா அழிவை சந்திக்குமோ அவங்க எல்லாம் செத்துப்போவாங்க...’’

‘‘இதை எல்லாம் உனக்கு யாருய்யா சொன்னா?’’

‘‘சாமிதான். அவர்கிட்ட கேட்டேன். அவர்தான் இதையெல்லாம் சொன்னாரு.’’

- ஊதல் காற்று முகத்தில் அறைந்திட, தீப்பந்த வெளிச்சத்தின் கீழ் அப்படியே அமர்ந்த நிலையில் பழஞ்சியிடம் ஈங்கோய் பேசிக்கொண்டிருந்தான். அந்த நாயும் அவனருகில் வந்து படுத்துக்கொள்ள, பழஞ்சி அதன் கால் கட்டைப் பார்த்தாள். அவள் பார்க்கவும் அவனே சொன்னான்.

‘‘மலையரவு இதை விழுங்கப் பார்த்துச்சு. இதுக்கு ஆயுசு கெட்டி. சாமி பாத்து அரவுகிட்ட இருந்து காப்பாத்திட்டாரு. ஆனாலும் காலை விழுங்கினதுல எலும்பெல்லாம் காயம்...’’

- அவன் கூற, பழஞ்சி நாயை நெருங்கி தடவிக் கொடுத்தாள். அதில் ‘நானிருக்கேன்’ என்னும் பரிவு. அப்படியே பேசினாள்.‘‘ஆமா... இங்க பட்டணத்தவங்க யாரும் வரக்கூடாதுன்னு சாமி ஏன் சொல்றாரு?’’

‘‘அதுவா... வாரவுக சும்மா இருக்க மாட்டாங்க. போட்டோ படம் புடிப்பாங்க. அதை ஊர்ல போய் காட்டுவாங்க. அதைப் பாக்கறவங்க இங்க வர ஆசைப்படுவாங்க. அப்படியே ஒண்ணு, ரெண்டுன்னு ஆரம்பிச்சு, அது ஒரு கூட்டமாயிட்டா..?’’

‘‘ஆனா என்ன? இந்த மலை தேஞ்சா போயிடும்?’’

‘‘இப்படி கேட்டால்லாம் எனக்கு பதில் சொல்லத் தெரியாது. நீ சாமிகிட்டயே கேட்டுக்க...’’

‘‘சரி, நீ கூழைக் குடி! நான் சுனைல தண்ணி கெடந்தா முகம் கழுவிக்கிட்டு வரேன். மேல கூடையோட ஏறுனதுல ஒரே வேர்வை...’’அவள் எழுந்து, பழக்கப்பட்டவள் போல குறிப்பிட்ட திசைப்பக்கம் செல்ல... அவன் தடுத்தான்.

‘‘ராத்திரி நேரத்துல சுனை பக்கம் போகாதே... வழுக்கி விழுந்தா காயப்படும்...’’

‘‘ஒண்ணும் ஆவாதுய்யா...’’ - அவள் பேசிக் கொண்டே சென்றாள். கோரைப் புதர்கள் காலை உரச தாண்டி நடந்தாள். இருளில் மாவு சலித்தது போல துளி வெளிச்சம். அது போதுமானதாக இருந்தது. அதன் பிறகு தட்டையான பாறைப்பகுதி... அதில் நடப்பது சிரமமாக இல்லை. அந்த தட்டைப் பாறையின் மையத்தில்தான் நீர் தேங்கி சுனை இருந்தது. சுனை நீரில் வானத்து நட்சத்திரங்கள்

ஜொலித்தன. அவள் ரசித்தபடியே அந்த சுனை நீரின் விளிம்பருகே சென்று நீரைத் தொட்டாள். சில்லிப்பு அவள் காது மடல்களை விறைக்கச் செய்தது. அதில் முகம் கழுவிக் கொண்டு நிமிர்ந்தவள் எதிரில் திகைப்பூட்டும் ஒரு காட்சி...

புலிக்குட்டி ஒன்றைத் தோளில் சுமந்துகொண்டு, கையில் தீப்பந்தம் ஏந்தியபடி ஒரு சித்தர் சென்றுகொண்டிருந்தார். பழஞ்சி, அவர் எங்கே போகிறார் என்று பார்த்தாள். அவர் மலைப்பாறைகள் ஊடாக நடந்து செல்ல, அவளையும் ஆர்வம் தொற்றியது. எழுந்தவள், அரவமில்லாமல் அவரைப் பின் தொடர்ந்தாள்.

அவர் சிறிது தூரத்தில் குகை போல் ஒரு பகுதிக்குள் நுழையவும், வெளிச்சம் மறைந்து போனது. பழஞ்சிக்கும் கண்ணைக் கரித்தது. தடுமாறிக்கொண்டு அந்த குகை வாசல் வரை சென்றவள், உள்ளே எட்டிப் பார்த்தாள். மிக நீண்ட ஒரு குகைப் பகுதி... உள்ளே பாறை இடுக்குகளில் தீப்பந்தங்கள் செருகப்பட்டு எரிந்தபடி இருக்க, ஒரு தாய்ப்புலி குகையின் தரையில் படுத்திருக்க, குட்டிகள் சில அதைச் சுற்றி... சித்தர் அப்பால் ஒரு பாறை மேல் அமர்ந்து கொண்டிருந்தார்.

புலிக் கூட்டத்தோடு சித்தரைப் பார்த்தவள் சற்று வெலவெலத்துப் போனாள். உள்ளே குகைச்சுவற்றில் நிறைய கல்வெட்டு எழுத்துக்கள்... உருவக் குறியீடுகள். பாய்மரக் கப்பல் போல் ஒரு படம், விமானம் பறப்பது போல ஒரு படம், கார் வாகனம் போல ஒரு படம், ஹீப்ரு முறையில் எண்களின் வரிசை, கோபுரச் சரிவு போல சரிந்து ஒரு எண்ணில் முடிந்திருக்கும் எண் வரிசை என்று அந்த குகைச்சுவர் முழுக்க அவள் கண்களில் என்னென்னவோ பட்டது.

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. உள்ளே செல்ல தைரியம் வரவில்லை. எதுவும் பேசாமல் திரும்பத் தொடங்கி ஈங்கோயிடம் வந்து சேர்ந்தாள்.

‘‘ஏ புள்ள... எங்க போயிட்ட? உனக்கு என்னவோ, ஏதோன்னு பயந்துட்டேன்.’’

‘‘நான் என்ன பாப்பாவாய்யா... அச்சப்பட!’’

‘‘சுனைல முகம் கழுவவா இம்புட்டு நேரம்?’’ - அவன் கேட்க அவளும் தான் பார்த்த காட்சிகளைச் சொல்ல ஆரம்பித்தாள்.

முடிவாக அவன், ‘‘புலிச்சித்தர் பின்னால போயி அவர் இருப்பிடத்தையே நெருங்கிட்டியா நீ?’’ - என்று கேட்டான்.

‘‘அவர்தான் புலி சாமியா?’’

‘‘ஆமாம்... நீ ஏன் புள்ள அங்க போனே?’’

‘‘சாமிங்கல்லாம் எங்க எப்படி இருப்பாங்கன்னு தெரிஞ்சுக்கதான். அதுலயும் புலிக்குட்டியோட போகவும் எனக்கு திக்குன்னுச்சு!’’

‘‘அவங்க நம்பள மாதிரி கிடையாது. இந்தக் காட்டுல பறக்கற காக்கா, குருவி கூட அவங்கள மட்டும் அன்னியமா நினைக்காது. அவங்ககிட்ட பாசம் காட்டும்.’’

‘‘அவங்ககிட்ட அப்படி என்ன இருக்குது?’’

‘‘ஏதோ இருக்குது... இல்லாட்டி நீ, நானுல்லாம் நந்தி சாமி சொல்றபடி நடப்போமா?’’

‘‘உண்மைதான்...’’

‘‘உள்ளார ஒரு தாய்ப்புலி குட்டி போட்டுருக்குது. சாமி அது கூடதான் இருக்காரு. புலிச்சாமி அபூர்வமாதான் வெளிய வருவாரு. நல்லவேளை, அவர் உன்னைப் பாக்கல...’’

‘‘பாத்துருந்தா?’’

‘‘என்னத்த சொல்ல... கொஞ்ச நாள் முந்தி ஒரு பட்டணத்துக்காரர் இங்க நந்திசாமி கூட இருந்தார், ஞாபகமிருக்குதா?’’

‘‘அவருக்கென்ன?’’

‘‘என்னவா? அவர் உன்ன மாதிரி சாமிய பாத்துட்டு அவர் பின்னாடியேதான் போனாரு. திரும்பி அவர் வரும்போது பேச்சு மூச்சே இல்லை. ‘புலி சாமி ஊதி அனுப்பிட்டாரு’ன்னு நந்தி சாமி சொன்னாரு.’’

‘‘ஊதி அனுப்பறதுன்னா?’’

‘‘சாமிகிட்ட ஒரு பொடி இருக்கு. அதைக் கைல கசக்கி முகத்துக்கு நேரா ஊதினா மயக்கம் வரும். கண்ணு முழிச்சா பழசு எதுவுமே நினைப்புக்கு வராது... அவரும் பொம்ம மாதிரிதானே திரும்பிப் போனாரு?’’

‘‘ஆத்தாடி... புலி சாமி அப்படியெல்லாமும் நடந்துக்குவாரா?’’

‘‘அவர் மட்டுமா? மயில் விசிறிச்சாமி, தண்டக்கோல் சாமி, முண்டகட்ட சாமின்னு இங்க நிறைய சாமிங்க. இவங்க ஒரு

மனுஷனை என்ன வேணா செய்வாங்க. பறக்க வைப்பாங்க படுத்தே கிடக்கும்படி செஞ்சுடுவாங்க. நம்ப கூட்டத்துல சிரிச்சிக்கிட்டே இருப்பானே உளியன்...''

''ஆமா...''

''உளியன இளியனா ஆக்குனதுல்லாமும் சாமிங்கதான்!''

''ஏன் அப்படி?''

''கேட்டா நம்ப நந்தி சாமி 'அவன் கணக்கு அப்படி'ம்பார்...''
''கணக்கா?''

''கணக்கேதான்...''

''புரியலையே..?''

''நமக்கெல்லாம் புரியாது. புரிஞ்சா நான் ஏன் இங்க காவல் காக்கணும். நீ ஏன் தலைய பிச்சுக்கணும். புரிஞ்சா நாமளும் சாமியாயிடுவோம்.''

''யோவ்... எனக்கு பயமா இருக்குய்யா...''

''போடி போ... பொசு கெட்டவளே! நம்ப சோலிய நாம பாத்துகிட்டிருந்தா நமக்கு ஒரு குறையுமில்ல புள்ள. மலையரவு வாயுல சிக்கின இந்த நாயையே காப்பாத்துன நம்ப சாமி... நம்பளதான் விட்றுவாரா?'' - பேச்சோடு பேச்சாக எழுந்து பாறை மேல் நின்று நாலாபுறமும் பார்த்துவிட்டு கீழ் இறங்கினான்.

‘‘ஆமா… விடிய விடிய இங்கதான் இருக்கப் போறியா?’’

‘‘ஆமா… யாரோ வரப் போறாங்க, அதான் சாமி கவனிக்கச் சொல்லியிருக்காரு’’ என்றவனுக்கு கூழைக் கலக்கிக் கொடுக்கத் தொடங்கினாள் பழஞ்சி. அவனும் உற்சாகமாகக் குடித்தான். அப்படியே நாய்க்கும் கலயத்து மூடியில் கூழை ஊற்ற, அதுவும் நக்கிக் குடித்தது. அப்போது பத்து பதினைந்து மைல் தொலைவுக்கு அப்பால் உள்ள மில் ஒன்றின் எட்டு மணிச்சங்கு ஒலிச் சப்தம் மிகத் தேய்ந்து வந்து காதில் ஒலித்தது!

* * *

எட்டு மணி.

திருச்சி காவிரி ஆற்றுப்பாலத்தின் மேல் வர்ஷனின் கார் விரைந்தபடி இருக்க, அவன் நண்பன் ரஞ்சித்திடம் இருந்து அழைப்பு. காரின் டச் ஸ்க்ரீனில் உள்ள ப்ளூடூத்தை ஆன் செய்யவும், காருக்குள் அவன் பேச்சை ஸ்பீக்கர்கள் அவ்வளவும் எதிரொலிக்கத் தொடங்கின.

‘‘வர்ஷன், எங்க இருக்கே?’’

‘‘அட் ப்ரசன்ட், திருச்சி காவிரி பாலம் மேல மூவிங்ல’’

‘‘எக்ஸலன்ட்! நான் இப்பதான் திருச்சி ஏர்போர்ட்ல இருந்து வெளிய வந்து டாக்சி பிடிச்சேன். கரெக்டா பிளான் பண்ணா நீயும் நானும் இன்னும் பத்து நிமிஷத்துல மீட் பண்ணிக்க முடியும்!’’

‘‘முடியும் இல்ல. முடியணும். நீ என்கிட்ட இருக்கற செல்போனை வாங்கி உள்ள பூந்து வெளிய வர்றே!’’

“ரைட்... நீ யார்கிட்டேயாவது வழி கேட்டு ஏர்போர்ட்ட நோக்கி வா... நான் காவிரி பாலத்த டார்கெட் பண்ணி வர்றேன். உன் கார் நம்பரைச் சொல்... என் கார் நம்பரை நோட் பண்ணிக்கோ.”

ரஞ்சித் கூற, வர்ஷனும் கூறிட, அடுத்த ஒன்பதாவது நிமிடமே சாலையில் நேருக்கு நேர் ஒரு புள்ளியில் இருவரும் ஓரமாய் காரை கிரீச்சிட்டு நிறுத்தி இறங்கினர். பக்கமாய் ஒரு தூங்குமூஞ்சி மரம். காத்திருந்தது போல் அதன் கிளையில் வந்து அமர்ந்தது அந்த சாயா வாகினி என்கிற பட்சி!

48

“அருவி சப்தம் நாங்கள் நடக்க நடக்க இன்னும் பெரிதாகக் கேட்கத் தொடங்கியது. ஜோசப் துளியும் பயமின்றி நடந்தார். அவர் வேகமாக நடப்பதால் நானும் நடந்தேன். நான் என் வாழ்நாளில் அதற்குமுன் பார்த்திராத விதம் விதமான தாவரங்கள் என் மேலே உரசின. சில தாவரங்களிடம் ஒரு விதமான பச்சை வாசனை! எனக்கு இந்தப் பயணம் புதிராகவும் குழப்பமாகவும் இருந்தது.

‘ஜோசப்... நாம் இப்படி எங்கே போகிறோம்? எனக்கென்னவோ நாம் முட்டாள்தனமாக நடப்பது போலத் தோன்றுகிறது’ என்று நடந்தபடியே பேசினேன்.

‘பேசாமல் வாருங்கள் கணபதி சுப்ரமணியன். என்னை உறுதியாக நம்புங்கள். நான் இந்த நாயை நம்புகிறேன்’ என்றார் அவர். நல்லவேளையாக சில நிமிடங்களில் அடர்வான

தாவரங்களிடமிருந்து மீண்டு, சற்று தட்டையான ஒரு நிலப்பரப்பை அடைந்து நின்றோம். அப்பால் அருவி நீரின் கும்மாளமான ஓட்டம். மாலைப்பாறைகள் இடையே ஒரு வழியை உருவாக்கிக்கொண்டு அருவி நீர் ஓடிக்கொண்டிருந்தது. மிகத் தூய்மையான நீர். எல்லாவிதமான மினரல்களும் உள்ள நீர். ஒரு குரூரமான பணக்காரனோ... இல்லை, மோசமான அரசியல்வாதியோ இந்த அருவி நீரைப் பார்த்தால் அப்படியே பாட்டிலில் அடைத்து லட்சக்கணக்கில் விற்று காசாக்கி விடுவார்கள் என்கிற ஒரு எண்ணம் எனக்குள் ஏற்பட்டது.

அந்த நேரத்தில் அப்படி ஒரு எண்ணம் தோன்றியது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. நகரத்தில் வாழும் என் வாழ்வு எனக்குள் ஏற்படுத்திய ஒரு தாக்கம் இது என்றே எனக்குத் தோன்றியது. அந்த அருவி நீரில் ஒரு சித்தர் சிலை போல நின்று குளித்துக் கொண்டிருந்தார். ஜோசப் அவரை எனக்குக் காட்டினார். அவரைப் பார்க்கவும் எனக்குள் ஒரு பிரமிப்பு. எங்களுக்கு வழிகாட்டிய நாய், அருகில் ஒரு பாறைமேல் ஏறிக்கொண்டு ‘வள் வள் வள்’ என்று ஏதோ சத்தியத்துக்குக் கட்டுப்பட்டது போல மூன்று முறை மட்டும் கத்தி விட்டு மௌனமாக நின்றது. அதன் எதிரொலியாக, கண்ணை மூடிக்கொண்டு குளித்தபடி இருந்த சித்தர் கண் திறந்தார். ஜோசப்பையும் என்னையும் பார்த்தார்.

ஜோசப் பணிவாக, ‘நமஸ்காரம் சாமி’ என்றார். சித்தரிடம் பதிலுக்கு எந்த உணர்வும் இல்லை. மிக ஆழமாக வெறித்தார். பிறகு அருவி நீரோட்டத்தை விட்டு விலகி தன் போக்கில் எங்கோ போகத் தொடங்கினார். ஜோசப் அவரைப் பின் தொடர்ந்தார். ஜாடை காட்டி என்னை பின் தொடரச் சொன்னார். அவர் திரும்பிப் பார்க்காமல் நடந்து சென்றது எனக்கு ஆச்சரியமே!

'சித்தர்கள் என்றாலே புரியாத புதிராக, குழப்பமாகத்தான் இருக்க வேண்டுமா' என்கிற கேள்வியோடு நான் ஜோசப்பை ஒட்டியே நடந்தேன். சித்தர் சில பாறைகள் மேல் ஏறிக் குதித்தவராய் ஒரு குகை போன்ற பாகத்துக்குள் சென்றார். நல்லவேளையாக வெளிச்சம் இருந்து, சகலத்தையும் எங்களால் பார்க்க முடிந்தது. அதேசமயம், இருட்டப் போவதையும் உணர்ந்தேன். இந்த இரவு இந்த குகையில்தான் கழியப் போவதாக எனக்குத் தோன்றியது.

குகைக்குள்ளே நிறைய விளக்குகள் எரிந்தபடி இருந்தன. தட்டையான பாறைகளில் ஆங்காங்கே கையளவு குழிகள் இருக்க, அதற்குள் நிரம்பியிருந்த எண்ணெயில் தடிமனான திரிகள் நின்றபடி தீபத்தை சுடர்விடச் செய்துகொண்டிருந்தன. நான் அப்போதுதான் அந்த சித்தர் ஒரு கோவணம் கூட கட்டியிராத நிர்வாணத்தில் இருப்பதை உணர்ந்தேன். ஜோசப் அவரையே பார்த்தபடி கை கட்டிக்கொண்டு நின்றார். எனக்கு அப்படி நிற்கத் தோன்றவில்லை. அந்த சித்தர் ஈர உடம்போடு ஒரு இடத்தில் கால் நீட்டி அமர்ந்து கொண்டு, முதுகை பின்புறம் பாறை மேல் சாய்த்துக் கொண்டார். அப்படியே, 'யார் நீங்கள்?' என்பது போலப் பார்த்தார்.

'சாமி! என் பேர் ஜோசப் சந்திரன். இவர் என் நண்பர்... பேர் கணபதி சுப்ரமணியன். நாங்கள் தொல்பொருள் இலாகாவுல வேலை பார்க்கிறோம். எனக்கு நிறையவே ஆன்ம விசாரம் உண்டு. அதனாலதான் உங்களைப் போல சித்தர் சாமிகளைப் பாக்க இந்த சதுரகிரி மலைக்கு வந்தேன்' என்று சித்தரிடம் ஒரு இன்ட்ரோவும் கொடுத்தார். அப்போதும் பதிலுக்கு சித்தரிடம் எந்த உணர்வும் இல்லை. 'சாமி... மனசு விட்டு உங்ககிட்ட நான் பேச விரும்பறேன். மனசுக்குள்ள நிறைய கேள்விங்க சாமி...'' – என்று

ஜோசப் தொடரவும், போனால் போகிறது என்று ஒரு சிரிப்பு சிரித்தார். பிறகு கை ஜாடை காட்டி உட்காரச் சொன்னார். உட்கார்ந்த இடத்திற்கு பக்கத்தில் மலைவாழைப்பழ தார் ஒன்று இருக்க, அதில் மஞ்சளும் பச்சையுமாக பழுத்த பழங்கள்! அதைக் காட்டி சாப்பிடச் சொன்னார். ஜோசப் மறுப்பு கூறாமல் நாலு பழத்தைப் பிய்த்து எனக்குத் தந்துவிட்டு தானும் நாலு பழத்தைப் பறித்து அப்படியே தோலோடு சாப்பிட்டார். அதைப் பார்த்த அந்த நிர்வாண சித்தரிடம் சற்று பலமான சிரிப்பு!" - கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அந்த சாயா வாகினிப் பறவையை அவர்கள் யாருமே கவனிக்கவில்லை. வர்ஷன் காரைவிட்டு இறங்கிய நிலையில் ரஞ்சித்திடம் கை குலுக்கி முடித்தான். பின்னாலேயே நின்ற ப்ரியாவை பார்த்து 'ஹாய்' என்றான் ரஞ்சித். வள்ளுவரும் காரைவிட்டு இறங்கி சோம்பல் முறித்தார். அப்படியே கம்பீரமாய் தெரிந்த மலைக்கோட்டையையும் பார்த்தார்.

"என்னடா... ட்ரிப் நல்லபடியா அமைஞ்சதா?"

"சூப்பர்... உன்னைத்தான் இப்படி நடுரோட்ல சந்திப்பேன்னு கொஞ்சம்கூட நினைக்கல!"

"அதாண்டா லைஃப்! இப்ப எனக்கும் ப்ரியாவுக்கும் லைஃப் பத்தின பார்வையே வேற. நிஜமா சொல்றேண்டா! இந்த பூமி, அப்புறம் இந்த இரவு பகல், அதுல நான், நீ எல்லாமே பிரமிப்பா இருக்கு..."

"நீ பேசறதே புரியல. தலைல அடிகிடி பட்டுச்சா?"

‘‘நீ இப்படித்தான் கேப்பே ரஞ்சித். ஆனா எங்க அசைன்மென்ட் என்னன்னு உனக்கு தெரிஞ்சா வாயப் பொளந்துடுவே...’’

- வர்ஷனும் ரஞ்சித்தும் அங்கலாய்ப்பாக பேசிக்கொள்வது ப்ரியாவைக் கிள்ளியது.

‘‘வர்ஷ்... மொக்க போடாம பாயின்ட்டுக்கு வா! நம்ம அசைன்மென்ட் பத்தி பேசற நேரமும் இது இல்ல. பேசற இடமும் இது இல்ல...’’ - என்று ப்ரியா காட்டிய கோபம் ரஞ்சித்தை மிகவே சிந்திக்க வைத்தது.

‘‘ரைட்... ரைட்...’’ என்ற வர்ஷனும் தன் பாக்கெட்டில் இருந்த செல்போனை எடுத்து ரஞ்சித் எதிரே நீட்டினான். அந்த ஆண்ட்ராய்டு போனை பார்த்த மாத்திரத்தில் ரஞ்சித்தும், ‘‘இது சீனா செட். ரொம்ப அட்வான்ஸ்டு டெக்னாலஜி செட்டுடா! ஆனா துளி வியர்வை உள்ளே இறங்கினாலும் போதும்... சண்டியாயிடும். ஆமா, இதுல உனக்கு என்ன தெரியணும்?’’ என்றான்.

‘‘எல்லாம்டா...’’

‘‘மெஸேஜ், மெயில், வாட்ஸ் அப், ஃபேஸ்புக்னு ஒரு சுரங்கமே இதுக்குள்ள இருக்கும். அதுல முக்காலே மூணு வீசம் தெண்டமோ தெண்டம். பர்ட்டிக்குலரா என்ன வேணும்னு சொன்னா எனக்கும் வேலை சுலபம்...’’

‘‘நீ சொல்றதும் சரிதான். இதுல வாய்ஸ் ஏதாவது ரெக்கார்ட் ஆகியிருக்கான்னு பார். அப்புறம் டெல்லியில் யார் கூடல்லாம் கான்டாக்ட் இருக்குன்னு தெரியணும்...’’

‘‘இப்படி மொட்டையா சொன்னா எப்படிடா? இது யாரோட செல்போன்... இதைக் கொண்டு நீ எதைக் கண்டுபிடிக்க விரும்பறே?’’

- ரஞ்சித் பாயின்ட்டாகக் கேட்க, வர்ஷன் ப்ரியாவைப் பார்த்திட, ‘நான் சொல்றேன்’ என்பது போல முன்வந்து பேசத் தொடங்கினாள் ப்ரியா.

‘‘ரஞ்சித்... தெரிஞ்சோ தெரியாமலோ நான், அப்புறம் வர்ஷன், இதோ இந்த வள்ளுவர் அய்யான்னு நாங்க மூணு பேரும் ஒரு அதிசயமான விஷயத்துல இறங்கி அதுல ரொம்ப தூரம் போயிட்டோம்’’ என்று ஆரம்பித்தவள், இறுதியாக நாவலூர் நாவல் மரத்தடி பிள்ளையாரை தரிசித்து அங்குள்ள பாடல் மூலம் சதுரகிரி நோக்கிப் போய்க் கொண்டிருப்பது வரை சொல்லி முடித்தாள்.

ரஞ்சித்திடம் பயங்கர பிரமிப்பு!

அவன் வந்த கால் டாக்சி டிரைவர் ஒரு சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு காரில் இருந்தபடியே பார்த்தான்.

‘‘என்னப்பா... பிரமிப்பா இருக்கா?’’

‘‘ஆமாம்! எனக்கு ஜோசியத்துல நம்பிக்கையும் ஈடுபாடும் உண்டு ப்ரியா. அதனால நீ சொன்னதைக் கேட்கவும் ஸ்டன்னாயிட்டேன். எனக்கு நம்ம நாடு, முன்னோர்கள் மேல எல்லாம் ஒரு மதிப்பும் உண்டு. நிச்சயமா இந்த காலப் பலகணி விஷயம் ஒரு அசாதாரண உண்மையா பொக்கிஷமாதான் இருக்கணும். இதை டெல்லிகாரன் எந்த நிலைலயும் கொண்டு போக விடக்கூடாது.

யு நோ... யுவான் சுவாங்னு ஒரு சீன யாத்ரீகர். காஞ்சிபுரம், மாமல்லபுரம்னு வந்துட்டுப் போகும்போது நம்ம களரி வித்தை, வர்ம

வித்தை, சிலம்பு வித்தை, யோக வித்தை, அப்புறம் பீதாம்பர ஜாலம், மகேந்திர ஜாலம்னு பல சங்கதிகளை மூட்டை கட்டி எடுத்துட்டு போயிட்டாரு. இன்ஃபாக்ட், ‘குரு வழிபாடு’ங்கறது உலகத்துலயே நம்ப இந்தியாவில மட்டும்தான். யுவான் சுவாங்குக்கு அப்புறம் போதி தர்மர் மாதிரி ஆட்கள் நம்ம விஷயங்களை அங்க கொண்டு போகவும், அங்கேயும் குரு வழிபாடு, குரு வணக்கம்லாம் உருவானது. சுருக்கமா சொல்லப் போனா எல்லா விஷயத்துலயும் உலகத்துக்கே மோஸ்ட் சீனியர் நாமதான். அதுலயும் தமிழர்களான நாமதான் மோஸ்ட் மோஸ்ட் மோஸ்ட் சீனியர்ஸ்...’’

- ரஞ்சித் உணர்ச்சிமயமாகி எங்கெங்கோ போய் விட்டான். மௌனமாக கவனித்துக் கொண்டிருந்த வள்ளுவர் நெருங்கி வந்தார்.

‘‘தம்பி... உங்க பேச்ச வெச்சே உங்கள என்னால புரிஞ்சிக்க முடிஞ்சது. கவனமா உங்க கடமையைச் செய்யுங்க. எங்களுக்கும் நேரமாகிடுச்சு. நாளைக்கு நாங்க சதுரகிரில இருந்தாகணும். பூச நட்சத்திரம் வேற வந்துடுச்சு. இந்த நட்சத்திர காலத்தில திட்டமிட்டு செயல்பட்டா எல்லாம் சுலபமா முடியும். அந்த நட்சத்திரத்தோட கால அளவு இருபத்தி மூணு மணி நேரம், பதினாறு நிமிடங்கள்தான்...’’

அவர் துரிதப்படுத்துவதை ரஞ்சித் புரிந்து கொண்டான்.

‘‘நல்லதுங்கய்யா! நான் எவ்வளவு சீக்கிரமா இந்த செல்போனுக்குள்ள இருக்கற விஷயங்களைக் கண்டுபிடிக்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் கண்டுபிடிக்கறேன். நீங்க உங்க பயணத்தைத் தொடருங்க...’’ என்றான்.

அடுத்த சில நொடிகளில் இருவர் காரும் அவரவர்க்கான திசைகளில் சீற ஆரம்பித்தன.

‘‘அய்யா! மதுரைக்குப் போய் இரவு தங்கிட்டு காலைல கிளம்பலாம். கொஞ்சம் ஓய்வும் ரொம்ப அவசியம்னு நினைக்கறேன்’’ என்ற வர்ஷனை ‘சரி’ என்பது போலப் பார்த்தார் வள்ளுவர். காரும் நான்கு வழிப்பாதையில் மதுரை நோக்கிச் சீறியது.

உள்ளே ப்ரியா, வள்ளுவரிடம் அந்தப் பாடல் குறித்து விவாதிக்க ஆரம்பித்தாள். ‘‘அய்யா... பிள்ளையார் கோயில் பாட்டை வெச்சு நீங்க சதுரகிரிக்குப் போகணும்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க?’’

‘‘அந்தப் பாட்டை வெச்சு மட்டும் இல்லம்மா! அந்தக் கோயில்ல கோபுரத்துல நாலு பக்கமும் சின்னதா சித்தர்கள் சிலாரூபமும் இருந்தது. நாலு பக்கமும் சித்தர்கள்னாலே அது சதுரகிரியைத்தான் குறிக்கும். அங்க போய்ட்டு நாம நம்ம வசம் உள்ள ஏட்டோட மற்ற பக்கங்களைப் பார்த்தா, நமக்கு வழி தானா தெரியும்...’’

‘‘அப்ப, இந்த மாதிரி சிற்பங்கள பார்த்தும் புரிஞ்சிக்கணுமா?’’

‘‘ஆமாம்மா! சிற்பங்களுக்கு பின்னாலயும் ரகசியம் இருக்கு. எழுத்துல எழுதி புரிய வைக்கறது ஒரு விதம். படங்கள் மூலமா உணர்த்துவது ஒரு விதம். சிற்ப பரிபாஷைல உணர்த்துவது இன்னொரு விதம்.’’

‘‘அப்ப இந்த ஏட்டை வெச்சு மட்டும் எதுவும் செய்ய முடியாது இல்லையா?’’

‘‘ஏடு பாதி... கூடு பாதிம்மா...’’

‘‘கூடா?’’

‘‘ஆமாம், இந்த உடம்பு ஒரு கூடுதானே?’’

‘‘உடம்பு ஒரு கூடுதான்... இது எப்படி?’’

‘‘காலப் பலகணியை நெருங்கும்போது உனக்கு யாரும் எதுவும் சொல்லத் தேவையே இல்லாம எல்லாம் புரிஞ்சிடும்மா...’’

வள்ளுவர் சொன்னதை ஆமோதிப்பது போல வெளியே வானில் பெரிதாய் இடி சப்தம். மழை வீச்சலாகப் பொழியத் தொடங்கியது. காரில் எஃப்.எம் ரேடியோவை ஆன் செய்த நேரம், மிகச் சரியாக செய்தி நேரமாக இருந்தது. வங்கக் கடலில் புயல் என்கிற தகவலும் தெரிய வந்தது.

‘‘அய்யா! இந்த மழைல நாம அந்தப் பலகணியை நெருங்கிடுவோமா?’’ என்று சற்று தளர்ச்சியோடு கேட்டான் வர்ஷன்.

‘‘தம்பி... எவ்வளவோ தடைகள்! ஆனாலும் நாம போய்க்கிட்டேதான் இருக்கோம். வழியிலயே உன் நண்பனைப் பாக்க முடிஞ்சதும் ஒண்ணும் தற்செயல் இல்ல.

நாம நமக்கே தெரியாம இயக்கப்பட்டுக்கிட்டு இருக்கோம். ஆகையால நாம நிச்சயமா பலகணியை நெருங்கி அதை எடுக்கப் போறது திண்ணம். ஏன் நான் இன்னமும் உயிரோட இருக்கேன்ங்கறதுக்கு விடையும் எனக்கு மலைலகிடைச்சிடும்மா...’’

- வள்ளுவர் மிகவே உணர்ச்சி வயப்பட்டு பதில் சொல்ல,அவரது கவனத்தைத் திருப்பியது கணபதி சுப்ரமணியனிடம் இருந்து வந்த அலைபேசி அழைப்பு.

‘‘அய்யா... எல்லாம் நல்லா போய்க்கிட்டு இருக்கா?’’

‘‘போய்க்கிட்டு இருக்குங்க. இரவு மதுரைல தங்கிட்டு காலைல கிளம்பிடுவோம். இலக்கு சதுரகிரி மலைங்க. அங்கதான் எங்கேயோ பலகணி இருக்குதுங்க.’’

‘‘சதுரகிரி மலைக்கா அப்ப போறீங்க?’’

‘‘அதுதான்யா சுவடில வந்த குறிப்புப்படி உள்ள இடம்...’’

‘‘நான் அங்க போயிருக்கேன். ஆனா பாதியில திரும்பும்படியா அப்போதைய சூழ்நிலை அமைஞ்சிடுச்சு...’’

‘‘அப்ப நீங்க இப்ப எங்ககூட வந்தா எங்களுக்கு உதவியா இருக்குமா?’’

‘‘அது தெரியாது... ஆமா பலகணி உள்ள இடம் துல்லியமா தெரிஞ்சிடுச்சா?’’

‘‘அது எப்படி தெரியும்... ஆனா வழிமாறாம போய்க்கிட்டு இருக்கோம்!’’

‘‘இங்க கடுமையான மழை வள்ளுவரே! அனேகமா இந்த மழைல சென்னை சர்க்கரை மாதிரி கரைஞ்சுகூட போயிடலாம்... வானிலை ஆராய்ச்சி மையத்துல இருந்து தகவல் வந்தது. வரிசையா ஏழு புயல்கள் இருக்குதாம்... பஞ்சாங்கமும் ஒத்து ஊதிக்கிட்டு இருக்கு. இப்ப பலகணி கிடைச்சா ரொம்ப உதவியா இருக்கும்...’’

- கணபதி சுப்ரமணியன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அந்த போன் தொடர்பு சட்டென்று கட்டானது. ஓடியபடி இருக்கும் காரின் முன்னே பெரும் இடி ஒன்று விழுவது, மூன்று பேருக்கும் பளிச்செனத் தெரிந்தது.

49

"அந்த நிர்வாணச் சித்தரின் சிரிப்பு கேலிச் சிரிப்பா... இல்லை, சந்தோஷச் சிரிப்பா என்று என்னால் தீர்மானிக்க முடியவில்லை. 'மன்னிக்கணும் சாமி! வாழைப்பழத்தை நான் தோலோட சாப்பிட்டது பசியினால மட்டுமில்ல... தோல்ல நிறைய சக்தி இருக்கறதாலயும் மட்டுமில்ல... அந்தத் தோலை ஒரு குப்பை மாதிரி இங்க வீசி எறியறது தப்புங்கற மாதிரி தோணிச்சு. அதான் சாப்பிட்டேன்!' என்று ஜோசப் சந்திரன் கூறவும்தான் அவர் நுட்பமான எண்ணம் எனக்கே புரிந்தது.

அந்த சித்தரும் சிரிப்பு அடங்கியவராக தொடர்ந்து பார்த்தார். எனக்கோ அவர் பொழுது அந்தக் குகைக்குள் எப்படிக் கழிகிறது என்றும், இவரால் எப்படி இப்படி ஒட்டுத்துணி கூட இல்லாமல் சுவாரஸ்யமாக வாழ முடிகிறது என்றும் கேள்வி எழும்பியது. சுருக்கமாகக் கூறுவதானால் ஜோசப் சந்திரனின் சிந்தனை ஒரு விதமாகவும், என் சிந்தனை அதற்கு எல்லா வகையிலும் நேர்மாறாகவும் இருந்தது. நான் அந்த சித்தரையோ, அவரின் சித்த வாழ்வையோ புரிந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கவே இல்லை. மாறாக, வாழத் தெரியாமலோ... இல்லை, வாழ முடியாமலோ அந்தக் காட்டுக்குள் அவர் இருப்பது போலத்தான் தோன்றியது. அவரோ வாயைத் திறந்து பேசவேயில்லை. ஒருவேளை அவர் ஊமையோ என்று கூட எனக்குத் தோன்றியது.

‘சாமி! எனக்கு நீங்க உபதேசம் செய்யணுங்க. எனக்கு விதி இருக்கறதாலதான் உங்களை தரிசனம் செய்ய முடிஞ்சதா நான் நம்பறேன். என்னை உங்க சீடனா நீங்க ஏத்துக்கணுங்க. கருப்பனை நான் நம்பினது வீண் போகலங்க. அவன் என்னை உங்ககிட்ட கொண்டு வந்து சேர்த்துட்டான்!’ என்று ஜோசப்தான் தொடர்ந்து பேசினார். ஆனால், அந்த சித்தரோ அந்தப் பேச்சில் ஒரு பாதிப்புக்கு ஆளானது போலவே தெரியவில்லை. அவரது மௌனம் தொடர்ந்தது.

‘சாமி! இப்படி மௌனமா இருக்கறதும் ஒரு பாஷைதான். ஆனா, மௌனத்தால பெரிய விஷயங்களைத்தான் புரிஞ்சுக்க முடியும். அவ்வளவு அறிவோ பக்குவமோ எனக்கு இல்லைங்க…’ – ஜோசப் அவர் மௌனத்தை உடைக்க முயற்சி செய்தார். ஆனாலும் அந்த சித்தர் லேசாகச் சிரித்தாரேயன்றி ஒரு வார்த்தை கூட பதிலுக்குப் பேசவில்லை. அதற்குமேல் என்ன சொல்லி அவரைப் பேச வைப்பது என்று ஜோசப் சந்திரனுக்கும் தெரியவில்லை.

அந்த சித்தர் ஒருக்களித்துப் படுத்துக்கொண்டார். அவரின் முதுகும், குந்தும் சதைப்பாகமும் நன்றாகவே தெரிந்தது. முதல் தடவையாக பார்க்கவும், அந்தக் காட்சி மனதை என்னவோ செய்தது. அருவருப்பு முதல் திகைப்பு, வெட்கம், பரபரப்பு என பலவித உணர்வுகள் தோன்றின. ஆனால் நேரம் செல்லச் செல்ல அந்த உணர்வுகள் சக்தி இழந்து, அவரின் தோற்றம் சகஜமான ஒன்றாக மாறுவதையும் நான் உணர்ந்தேன்.

வெளியே முற்றாக இருட்டிவிட்டது. அந்த சித்தர் எங்களை வெளியே போகச் சொல்லவில்லை. அதற்காக எங்களோடு பேசி

ஜோசப் விரும்பியது போல நடந்து கொள்ளவுமில்லை. ஜோசப்பும் ஏமாற்றத்தை உணர ஆரம்பித்தார். நான் அருகே சென்று காதைக் கடித்தேன். ‘இவர்கிட்ட நாம பேசித் தெரிஞ்சிக்க எதுவும் இருக்கற மாதிரி தெரியல. இவர் ஒரு மனநோயாளியா இருக்கக்கூட வாய்ப்பு இருக்கு. நாம பொழுது விடியவும் புறப்படுவோம். ஊருக்குப் போய் நம்ம வேலைய பார்ப்போம். இப்படி நாம வந்து இவர்கிட்ட வழிஞ்ச விஷயம் வெளிய தெரிஞ்சா – குறிப்பா நம்ம டிபார்ட்மென்ட் ஆட்களுக்குத் தெரிஞ்சா – நம்ம இரண்டு பேரையும் மரை கழண்ட கேஸாதான் நினைப்பாங்க!’ – என்றேன்.

ஜோசப் முதல்முறையாக என்னை மிகக் கடுமையாகப் பார்த்தார். பின், ‘அவர் பேசுவார்... இப்ப கூட பேசிக்கிட்டுதான் இருக்கார். அது உங்களுக்குப் புரியல. இது நமக்கு ஒரு சோதனை கணபதி சுப்ரமணியன்... இதை நாம வெற்றி கொண்டே ஆகணும்!’ என்றார்.

‘எனக்கு ராத்திரிப் பொழுதை இந்த இடத்துல எப்படிக் கடத்தப் போறோமோனு இருக்கு. இந்தக் குளிர், தனிமை, நடுவுல மிருகங்கள் ஏதாவது வந்தா அதை சோதனைனு நீங்க சொல்லுங்க. நான் ஒத்துக்கறேன். இவர் பேசறார்னு நீங்க சொல்றதை என்னால ஒத்துக்க முடியாது. மனுஷனுக்கு வாய்னு ஒண்ணு கொடுத்துருக்கறது சாப்பிட, பேச... இந்த இரண்டுக்காகவும்தான். இவர் சாப்பிட மட்டும்தான்னு நினைக்கறார் போல இருக்கு’ என்று என் கருத்தை நான் கூறினேன்.

அவர் காதில் நிச்சயம் விழுந்திருக்க வேண்டும். ஆனால், அவரிடம் அதற்கும் ஒரு பதிலும் இல்லை. இந்த மாதிரி ஊமை மற்றும் செவிடர்களால் மட்டுமே இருக்க முடியும். காது கேட்க

முடிந்த ஒருவரால் எப்படி எந்த எதிரொலிப்பும் இன்றி இருக்க முடியும்? இருக்க முடியும் என்றபோதிலும் ‘காரணம்’ என்று ஒன்று அதற்கு இருக்க வேண்டுமே?”

– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அந்த இடிச் சப்தம் சென்னையிலிருந்து செல்போனில் பேசிக் கொண்டிருந்த கணபதி சுப்ரமணியன் காதிலும் விழுந்தது.

“என்னய்யா... அங்கயும் மழையா? இப்படி இடிச்சப்தம் கேட்குதே?”

“ஆமாய் யா... கடும் மழை! இடிச் சப்தம் அஞ்சு நொடிக்கு மேல நீட்சி கொண்டதா இருக்கு... நிச்சயம் பிரளய மழை. இதுல பேரழிவும் நிச்சயம்!”

“வள்ளுவரய்யா... உங்க பயணம் நல்லபடி முடியுமான்னு எனக்கு சந்தேகமா இருக்கு!”

“ஆனா, எனக்கு சந்தேகமே இல்லைங்கய்யா... நீங்க பாகவதம் படிச்சிருக்கீங்களா?”

“அப்படின்னா?”

“சரிதான்... பாகவதம்ங்கறது கிருஷ்ண பரமாத்மாவோட கதையைச் சொல்ற புராணம். அதுல கிருஷ்ணர் ஜெயிலுக்குள்ள பிறந்து அவங்க அப்பாவான நந்தகோபரால இடம் மாறி யசோதையம்மா இருக்கற கோகுலத்துக்குப் போவார்.

அந்த ராத்திரில இப்ப பெய்துக்கிட்டிருக்கற மாதிரி அசுர மழை பெய்யும். ஆத்துல வெள்ளமும் கரை புரண்டு ஓடும். கும்மிருட்டுல நந்தகோபர் கிருஷ்ணனை ஒரு கூடைல வச்சு சுமந்துக்கிட்டு போவார். அப்ப மழை கிருஷ்ணன் மேல படாதபடி அஞ்சு தலை நாகம் படம் விரிச்சு குடையா தன் தலையை வச்சுக்கிட்டு கூட வரும். ஆத்து வெள்ளம்கூட இரு கூறா விலகி வழிவிடும். அதே மாதிரி எங்களுக்கும் ஒரு வழி பிறக்கும். அதுல நாங்க போய்க்கிட்டே இருப்போம்...''

''வள்ளுவரே... என்ன இது? துளிகூட நம்ப முடியாத ஃபேன்டஸியான ஒரு புராணக் கதையை உதாரணம் சொல்றீங்க! பாம்பு குடை பிடிக்கறதையும், ஆறு இரண்டாகி வழி விடறதையும் ஒரு விளையாட்டுக்குக் கூட ஒத்துக்க முடியாதே..?''

''அது உங்க விருப்பம்... நேரடியா இப்படித்தான் நடக்கும்னு நான் சொல்லலை! அதுக்குப் பொருள் என்னன்னா, பஞ்சபூதங்கள்கிட்ட இருந்து ஒத்துழைப்பு கிடைக்கும்ங்கறதுதான்!''

''அப்ப சுருக்கமா அப்படியே நேரா சொல்லியிருக்கலாமே... எதுக்கு இந்த மிகையான நம்ப முடியாத கற்பனை...'' - வர்ஷன் இடி, மழை, மின்னல் நடுவே காரைச் செலுத்தியபடி இருக்க, காருக்குள் ப்ளூ டூத் தயவில் ப்ரியாவும் வள்ளுவரும் உட்கார்ந்த இடத்தில் கேட்க முடிந்த விதத்தில் கணபதி சுப்ரமணியனின் கேள்வி இருந்தது.

''அய்யா... உங்களுக்கு வயசான அளவு உங்க சிந்தனைகளுக்கு வயசாகலை. அதான் இப்படி கேட்டுட்டீங்க! நான் சொன்ன புராணக் கதை பல ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு நடந்தது. அது நான் சொன்ன மாதிரி மிகையான கற்பனைனு நீங்க சொல்ற விதத்துல மட்டும் இல்லாம போயிருந்தா, இப்ப அதோட வடிவமே வேற மாதிரி

ஆகியிருக்கும். அவ்வளவு ஏன்... அந்தப் புராண வரலாறு ஒரு சில தலைமுறைகளைக் கூட கடந்திருக்காது. அழிஞ்சி கூடப் போயிருக்கும். ஆனா, இப்பவும் பாகவதம் அப்படியே இருக்குன்னா அதுக்குள்ள இருக்கற நீங்க மிகைனு நினைக்கற விஷயங்கள்தான்...'' - வள்ளுவர் சொல்ல வருவது ப்ரியாவுக்குப் புரிந்தது.

ஆனாலும் கணபதி சுப்ரமணியன் அதை மறுத்தவராக, ''வள்ளுவரே! அந்தப் பேச்சை விடுங்க. பார்த்துப் போங்க. அந்தப் பலகணி மட்டும் கிடைச்சுட்டா, அது போதும். இப்ப போய் நான் இப்படி இங்க கால் ஒடிஞ்சு கிடக்கறேனேனு என் மனசுதான் அடிச்சிக்குது. அந்தப் போலீஸ் ஆபீஸர் வேற அப்பப்ப நேர்ல வந்து என்கிட்ட எதையாவது பேசிட்டுப் போறாரு. அவர் என் மேல காட்டற அக்கறையைப் பார்த்தா, அவருக்குப் பெரிய அளவுல பிரஷர் இருக்கணும்னு நல்லா தெரியுது. குறிப்பா, டெல்லில இருக்கற அந்தச் சாமியாரால உங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்துடுமோன்னும் பயமா இருக்கு...''

''அதெல்லாம் எதுவும் ஆகாது. உங்களுக்கு நான் இப்ப சுருக்கமா ஒரு விஷயத்தைச் சொல்றேன். புரிஞ்சிக்க முடிஞ்சா புரிஞ்சிக்குங்க. அந்தக் காலப் பலகணியை நாம தேடலை... அதுதான் நம்மைத் தேடுது! உடனே காலப் பலகணி என்ன ஆறறிவுள்ள உயிரா... அதுக்கு அறிவிருக்கா... அதால செயல்பட முடியுமானு கேள்விகள் எழலாம். எழட்டும்! ஆனா நான் இப்ப சொன்னதுதான் சரியான விளக்கம். நாம அதைத் தேடலை. அதுதான் நம்மைத் தேடுது!''

''வள்ளுவரய்யா... என்னாச்சு உங்களுக்கு? இப்படிக் குழப்பினா எப்படி?''

‘‘குழம்புங்க... யோசிச்சுக்கிட்டே இருங்க. நான் அப்பப்ப பேசறேன். இப்ப ஓய்வெடுங்க. இங்க வர்ஷன் தம்பி ரொம்ப சிரமத்தோட காரை ஓட்டிக்கிட்டு இருக்காரு. நம்ம அரட்டை அவருக்கு இடைஞ்சலா ஆகிடலாம்...’’ - என்று போனை கட் செய்தார் வள்ளுவர்.

வெளியே மழை வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தது. காரை ஓட்டுவதே சிரமமாக இருந்தது. பக்கவாட்டு மைல் கல், நாற்பது கிலோ மீட்டர் தூரத்தில் மதுரை இருப்பதை உணர்த்தியது. நான்கு வழிப்பாதையாக இருப்பதால் அந்த மழையிலும் சற்று வேகமாகச் செல்ல முடிந்தது.

வள்ளுவரை ப்ரியா இப்போது பிடித்துக்கொண்டாள். ‘‘அய்யா... ‘நாம அதைத் தேடலை, நம்பளதான் அது தேடுது’ன்னு நீங்க சொன்னதைக் கேட்டு எனக்கு பயங்கர ஷாக்! நடக்கற ஒவ்வொரு விஷயத்தையும் பார்க்கும்போது, நீங்க சொன்னதுதான் சரின்னும் தோணுது!’’

வர்ஷன் அதைக் கேட்டு அதிர்வை முகத்தில் காட்டினான். அவன் அப்படி நினைக்காததே காரணம். அவளோ தொடர்ந்தாள்...

‘‘நானும் வர்ஷனும் இந்தப் பலகணி விஷயத்துல சம்பந்தமே இல்லாதவங்க. நீங்களும் என் தாத்தாவைத்தான் பாக்க வந்தீங்க. அவர்தான் இதைக் கண்டுபிடிக்கணும்னும் அப்ப ஒரு நிலை இருந்தது. நீங்க செத்துப் போயிடப் போறதா நம்பினீங்க. ஆனா, அப்படி நடக்கலை. தாத்தா அதைத் தேடி புறப்பட்டும் அவரால போக முடியலை. அவர் விரும்பினா கூட நம்மோட வர முடியாதபடி கால்ல அடிபட்டு ஓய்வெடுக்கும்படி ஆயிடிச்சு.

இறுதியில நீங்க, நான், வர்ஷன்னு மூணு பேர் இப்ப இந்தத் தேடல்ல இருக்கோம். ரொம்ப தந்திரமா இந்தப் பலகணி விஷயத்துல நடந்துக்க முயற்சி செய்த அவ்வளவு பேரும் இறந்துட்டாங்க. அந்தத் தந்திரமான செயலுக்கு உதவி செய்த என் வீட்டு வேலைக்காரிகூட இறந்து போய், ஆவியா நடமாடினதுதான் இதுல உச்சகட்டம்!

அந்த மரணம்தான் திரும்ப உங்களை எங்களோட இறுக்கமா கொண்டு வந்து சேர்த்தது. விஞ்ஞானத்துக்கு அப்பாற்பட்ட அவ்வளவையும் மூட நம்பிக்கையா மட்டுமே பார்த்த நானும் வர்ஷனும், முத்தழகு ஆவி அனுபவத்தால பெரிய மனமாற்றத்துக்கு ஆளானோம்.

நம் அறிவு, அனுபவம்... இதுக்கெல்லாம் அப்பாற்பட்ட சில விஷயங்களும் இருக்கு. அதைத் தெரிஞ்சிக்கணும்னா விஞ்ஞான அகந்தை கூடாதுங்கறது தெரிஞ்சுது. கிணறோட ஆழம் தெரியணும்னா அதுல இறங்கி மூழ்கிப் பார்த்து தெரிஞ்சிக்கற மாதிரி இந்த அனுபவங்களுக்கு ஆட்பட இதுல இறங்கினாதான் புரியும்ங்கற தெளிவும் எனக்கும் வர்ஷனுக்கும் ஏற்பட்டது. அதனாலதான் இந்த நொடி வரை ஒவ்வொரு அடியா வச்சு இதுல நாங்க உங்க கூட பயணம் செய்துக்கிட்டு இருக்கோம்.

கூட்டிக் கழிச்சுப் பார்த்தா, எந்த ஒரு விஷயமும் நாம நினைச்ச மாதிரி நினைச்ச திசையிலயே நடக்கல. ஆனா, அதுக்காக எதுவும் நடக்காமலும் போகல. அது பாட்டுக்கு நடந்துக்கிட்டே இருக்கு; அதுல நாமளும் நடந்துக்கிட்டு இருக்கோம். நீங்க சொன்ன மாதிரி அது காட்டற வழில நாம போய்க்கிட்டே இருக்கோம். ஆனா, நாமதான் தேடிப் போறதா நினைச்சுக்கறோம்!’’

ப்ரியா வெகு அழகாய் அவர் கருத்தை ஆமோதித்த விதம் வர்ஷனையும் ஒப்புக்கொள்ள வைத்தது.

‘‘ப்ரியா! ரொம்ப ஷார்ட் அண்ட் க்யூட்டா நீ நம்ம நிலையைச் சொல்லிட்டே. அதுதான் உண்மை. இந்த பூமில எவ்வளவோ கோடி பேர், ஆனா நம்ம மூணு பேருக்குத்தான் இந்த விஷயத்துல சம்பந்தம் உருவாகியிருக்கு. நிஜமா சொல்றேன், அந்தக் காலப் பலகணியை நான் இப்ப கடவுளாவே நினைக்கறேன். அது ஒரு சுவடிக் கட்டாவோ... இல்லை, நாஸ்டர்டாமஸ் நாலு வரில எழுதி வச்ச ப்ரடிக்ஷனாவோ... இல்லை, பரமபத வரைபடம் மாதிரி குறியீடுகளாலயும், சித்திரங்களாலயும் வருங்கால நிகழ்வுகளைச் சொல்றதாவோ இருக்கலாம். என் யூகப்படி பார்த்தா அது ஒரு புத்தகம் போன்ற அறிவுப் புதையல் எனப்படும் ஜடம். ஆனாலும் அதை சரஸ்வதி மாதிரி ஒரு தேவதை கைல இருக்கற விஷயமாத்தான் பாக்கறேன். அந்த சரஸ்வதிதான் நம்மை வரவழைச்சு வழிகாட்டிக்கிட்டு இருக்கணும்னும் இப்ப நினைக்கறேன்!’’

வர்ஷனும் தன் எண்ண அலைகளை சரஸ்வதி வரை கொண்டு சென்று நிறுத்தினான். சுவாரஸ்யமான அந்தப் பேச்சோடு மதுரை எல்லையைத் தொடவும் டோல் வரிக்கான பிளாக் தடை செய்தது. சென்னையில் இருந்து வரும் வழியெங்கும் டோல் வரியில் கட்டி வந்த தொகை அறுநூறு ரூபாயைக் கடந்திருந்தது.

அரசாங்கமே ஒரு ரவுடியாக மாறி தண்டல் வசூல் பண்ணுவது போல்தான் இருந்தது. கார் வாங்கும்போதே சாலை வரி என்று ஒரு பெரும் தொகையை அழுதும், இப்படி சாலையில் ஓட்டும்போது ஐம்பது கிலோமீட்டருக்கு ஒரு இடத்தில் ‘எடு... எடு...’ என்று அது

வசூலிப்பதை என்ன முயன்றும் நியாயப்படுத்திக் கொள்ள வர்ஷனால் முடியவில்லை.

ரோடு என்பது என்ன தொழிற்சாலை போல சம்பாதிப்பதற்கான களமா? ஒரு அரசாங்கமே இப்படிக் கொள்ளை அடிக்கலாமா? அதற்கு பராமரிப்புச் செலவு இருக்கிறது என்கிற அந்த ஒரு சின்ன நியாயம் இந்தக் கொள்ளையை நியாயப்படுத்திவிடுமா? ரோடு போட்டு பராமரிப்பது அரசாங்கத்தின் கடமை இல்லையா? வர்ஷனுக்கு பணம் கொடுக்கும்போது குமுறியது மனது. அந்தக் கூண்டில் அமர்ந்திருப்பவரிடம், ‘‘நான் நூறு சதவீத வயித்தெரிச்சலோட தர்றேன் இந்தப் பணத்தை... இதை வச்சுப் பிழைக்க நினைக்கற யாரும் நிச்சயம் நல்லவிதமா வாழ மாட்டாங்க. நாசமாத்தான் போவாங்க!’’ என்றான்.

பணத்தை வாங்கிக்கொண்டு ரசீது தருபவரோ, ‘‘இப்படிப்பட்ட குமுறல்களைக் கேட்டு புளிச்சுப் போச்சு சார்...’’ என்றார், ரசீது தந்தபடி.

வள்ளுவர் பெரிதாகச் சிரித்தார்.

‘‘என்னய்யா? என் வயித்தெரிச்சல் உங்களுக்கு சிரிப்பா இருக்கா?’’ என்று கேட்டான் வர்ஷனும்.

‘‘சிரிப்புல பல ரகம் இருக்கு தம்பி... அதுல ஒவ்வொண்ணுக்கும் ஒரு அர்த்தம் இருக்கு. நான் சிரிச்சது நம்ப கையாலாகாத் தனத்தை நினைச்சு... ஆனா, நாமதான் காலப் பலகணிங்கற ஒரு பொக்கிஷத்தையும் அடையப் போறோம். என்ன ஒரு முரண் பாத்தியா?’’ - என்றார்.

காரும் மதுரை நகர சந்தடிக்குள் ஒரு லாட்ஜைத் தேடி ஓடியபடியே இருந்தது!

* * *

அந்த இரவு நேரத்தில் டி.வி பார்த்துக் கொண்டிருந்தார் கணபதி சுப்ரமணியன். வெளியே மெயின் கேட்டை ஒட்டி ஒரு கார் வந்து நின்றது. மெர்சிடிஸ் பென்ஸ் கார். வாட்ச்மேன் தங்கவேலு யாரோ வி.ஐ.பி என்று விசாரிக்கக்கூடத் தோன்றாமல் கேட்டைத் திறந்தான். உள்ளே... அந்த டெல்லி சாமியாரான சதுர்வேதி!

50

“அந்த மலைக் குகைக்குள் இருந்தபோது எனக்குள் பல கேள்விகள். எனக்குக் குளிர் எடுக்க ஆரம்பித்து உடம்பும் என்னை மீறி நடுங்கத் தொடங்கியது. ஜோசப் சந்திரனும் நடுங்கினார். ஆனால் சமாளித்தார். நான் கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். இரவு மணி எட்டைக் கடந்திருந்தது. பொழுது விடிய பத்து மணி நேரம் இருக்கிறது. அதுவரை அங்கே அந்தக் குளிரில் எப்படி இருக்கப் போகிறோம் என்கிற அச்சம் ஏற்படத் தொடங்கியது.

திரும்பிச் செல்வதும் சாத்தியமில்லை. வேண்டுமானால் சருகுகளைக் கொளுத்திப் போட்டு குளிர் காயலாம். ‘நேஷனல் ஜியாக்ரஃபிக்’ சேனலில் நான் சில டாக்குமென்ட்ரிகளைப் பார்த்திருக்கிறேன். அதில் நெருப்பை உருவாக்க சிக்கி முக்கி கற்களைப் பயன்படுத்துவதில் இருந்து பல வழிமுறைகளைச் செய்வார்கள். குச்சி ஒன்றை முட்டி மோத விட்டு தயிர் கடைவது

போல் கடைந்து உராய்வினால் வெப்பத்தை முதலில் ஏற்படுத்தி, பிறகு அதில் நெருப்பைப் பிடித்து எரியச் செய்து குளிர் காய்வார்கள். அப்படிச் செய்ய வேண்டி வருமோ என்றுகூட எண்ணினேன்.

நான் இப்படி நினைத்த அதே நொடியில் அந்த அம்மண சித்தர் விசுக்கென்று எழுந்தார். அங்கே ஒரு பாறை இடுக்குக்குள் கைவிட்டு வெளியே எடுத்தபோது அவர் கையில் ஒரு சிறு மண் கலயம். அதை எடுத்து வந்து என் முன் நீட்டினார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஜோசப் இடையில் கை நீட்டி அந்தக் கலயத்தை வாங்கிக்கொண்டு பார்த்தார். அதில் ஒரு மனிதன் தன் உடம்பு முழுக்க பூசிக்கொள்ளும் அளவு களிம்பு போல ஏதோ இருந்தது.

ஜோசப் உடனே புரிந்து கொண்டவர் போல, ‘என்ன சாமி... இதை உடம்புல பூசிக்கவா?’ என்று கேட்டார். அவரும் ஆமோதிக்க, ஜோசப் உடனே எண்ணெய் பூசிக்கொள்வது போல கழுத்து, காது மடல், கன்னம், கைகள், கால்கள் என்று பூசிக்கொண்டு என்னையும் பூசிக்கொள்ளச் சொன்னார். அதன் வாசம் எனக்குப் பிடித்திருந்தது. அதனால் நானும் மறுக்காமல் பூசிக்கொண்டேன். சில நிமிடங்களிலேயே உடம்பு வெதுவெதுவென்று வென்னீருக்குள் இருப்பது போல ஆகி விட்டது. சுத்தமாய் குளிர் தெரியவில்லை. அடுத்த நொடி, ‘ஐயோ! இந்தக் களிம்பை மார்க்கெட்டிங் செய்தால் நாம்தானே கோடீஸ்வரன். ஊட்டி, கொடைக்கானல் போன்ற குளிர்ப் பிரதேசங்களில் பின்னி பெடல் எடுக்குமே இதன் வியாபாரம்’ என்று பணத்தின் பின்னாலேயே என் நினைப்பு போனது.

குளிர் பயம் போனதோடு, அந்த சித்தர் சாமியிடம் ஏதோ விஷயம் இருப்பதாகவும் நான் நம்பத் தொடங்கினேன். அதற்குள் அவர் திரும்ப எழுந்து போய் உள்ளங்கை நிறைய விபூதி போல் ஒன்றுடன் வந்தார். எங்கள் எதிரில் நின்றவர், ஜோசப் சந்திரனை மட்டும் உற்றுப் பார்த்தார். ஜோசப்பும் அவர் பார்க்கப் பார்க்க சிலை போலாகி விட்டார். நான் வேடிக்கை பார்ப்பவன் ஆனேன். ஒரு கட்டத்தில் ஜோசப்பை உற்றுப் பார்த்தவர், அந்த விபூதியை அவர் முகத்துக்கு நேராக ஊதினார். அடுத்த சில நொடிகளில் ஜோசப் கண்கள் செருக தூங்கத் தொடங்கினார்.

என்னிடம் அப்படி எல்லாம் அவர் நடந்துகொள்ளவில்லை. அருகில் நான் இருப்பதாக அவர் நினைக்கவில்லை என்று தோன்றியது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

அந்தக் குகையில் எனக்கு இருந்த பேச்சுத் துணை, ஜோசப் மட்டும்தான்! அவரையும் தூங்க வைத்து விட்டார். எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அவரையே பார்த்தேன்.

பின் அவரிடம், 'கேக்கறேனேன்னு தப்பா எடுத்துக்காதீங்க சாமி! இங்க நீங்க நடந்துக்கறது எதுவுமே எனக்குப் புரியல. இவரை வேற தூங்க வெச்சிட்டீங்க. எனக்கு இப்ப குளிர் தெரியல... என்னை ஏன் நீங்க தூங்க வைக்கல?' என்றும் கேட்டேன். பதிலுக்கு அவர் என்னை வரச்சொல்லி சைகை காட்டியவராக குகையை விட்டு நடந்தார். இருளில் அவரைப் பின்தொடர சிரமமாக இருந்தது. தட்டுத் தடுமாறி, 'நாம இப்ப எங்க போறோம்?' என்று கேட்டபடியே நடந்தேன்.

அவர் பேசவேயில்லை. அமைதியாக, ஆனால் வேகமாக நடந்தார். அவரைத் தொடர்வது எனக்கு மிகவே சிரமமாக

இருந்தது. என்வசம் இருந்த திசைமானியை பேன்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்துப் பார்த்து, அதன்மூலம் நான் கிழக்கு நோக்கி நடப்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டேன்.ஒரு கட்டத்தில் அவரைக் காணவில்லை.

மாறாக தீப்பந்தத்துடன் தோளில் ஒரு மூட்டையுடன் சிலர் நடந்து வரும் சப்தம் கேட்டது. அவர்கள் மலைப்பளியர்கள். அவர்கள் தோளில் மூட்டையில் இருந்தது, மலையில் விளைந்த ஜாதிக்காய்கள், மாசிக்காய்கள் மற்றும் பலாக்காய்கள்! அவர்கள் என்னைப் பார்த்து, 'என்ன சாமி! கீழ போகணுமா... வாங்க போகலாம்' என்றனர். எனக்கும் அந்த சித்தர் என்னைக் கழற்றி விட்டுவிட்டது புரிந்தது.''

– கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

சதுர்வேதியின் தோற்றமே கம்பீரமாக இருந்தது. நெற்றியில் தீற்றலான செந்தூரப் பொட்டு, பாகவதர் கிராப், தங்கத்தில் செய்த ஃபிரேமிலான கண்ணாடி, கழுத்தில் கலவையாய் ஸ்படிக மாலை, ருத்ராட்ச மாலை, அது போக பருத்த தங்கச் சங்கிலி...மேனிமேல் சந்தன வண்ணத்தில் பைஜாமா குர்தா. கை விரல்களில் ஏராளமான மோதிரங்கள். அதில் கோமேதகக் கற்கள் நிறையவே பதிக்கப்பட்டிருந்தன!

சதுர்வேதியோடு ஒரு வாளிப்பான இளம் பெண்ணும் காரிலிருந்து இறங்கினாள். அவள் வசம் ஒரு லெதர் பேக் இருந்தது. நீலநிற ஜீன்ஸ் பேன்ட், வெண்ணிறத்தில் முழுக்கை சட்டை - அதை முழங்கை வரை மடக்கி விட்டுக்கொண்டு மிடுக்காகத் தெரிந்தாள். மேலே மார்பு தெரியாதபடி சட்டைக் காலர் வரை பட்டன் போட்டிருந்தாள். அவள் பெயர் விபா!

யதார்த்தமாக வெளியே பார்த்த அனந்தகிருஷ்ணன், இருவரையும் பார்த்தபடியே வாசல்பக்கம் வந்தவராக நெற்றியைச் சுருக்கவும், ‘‘ஹல்லோ ஜி... மை நேம் ஈஸ் சதுர்வேதி. ஐ’யம் ஃப்ரம் டெல்லி. ஷீ ஈஸ் விபா... மை செகரட்டரி!’’ என்ற படியே சதுர்வேதியின் மோதிரக் கைகள் மிக ஸ்நேகமாக நீண்டன. அனந்தகிருஷ்ணனும் பதிலுக்குக் கை கொடுத்தார்.

‘‘நீங்கதானே மிஸ்டர் அனந்தகிருஷ்ணன்?’’

‘‘ஆமாம்... உங்களுக்கு எப்படித் தெரியும்?’’

‘‘ஒரு பிரபலமான ஆர்க்கியாலஜிஸ்ட்டோட ஒரே சன் நீங்க. உங்களை எனக்குத் தெரியாதா என்ன?’’

‘‘ஓ... நீங்க அப்பாவைப் பார்க்க வந்திருக்கீங்களா?’’

‘‘எக்ஸாக்ட்லி... அப்பாவுக்கு ஏதோ ஆக்சிடென்ட் ஆகிடுச்சுன்னு கேள்விப்பட்டேன். அதான் பாத்துட்டுப் போக வந்தேன்...’’

‘‘ஆமாம் சார்... இப்ப அப்பா ரெஸ்ட்ல இருக்கார். பை த பை, நீங்களும் ஆர்க்கியாலஜி டிபார்ட்மென்ட்டா?’’

‘‘கிட்டத்தட்ட அப்படித்தான்... ஆனா நான் அடிப்படைல ஒரு யோகி. ஹிமாச்சல்ல யோகா சென்டர் ஒண்ணை ரன் பண்றேன். உலகம் பூரா என் யோகா அமைப்பு செயல்பட்டுக்கிட்டு வருது. எனக்கு ராணி எலிசபெத்தெல்லாம் கூட ஸ்டூடன்ட்...’’

‘‘ஓ... வெரி கிரேட்! வாங்க, உள்ளே போய் பேசுவோம்...’’

அனந்தகிருஷ்ணன் அவர்களை ஹாலில் அமரச் செய்தார். சதுர்வேதி பார்வை வீட்டை ஊடுருவியது. பத்மாசினி சப்தம் கேட்டு ஹாலுக்கு வந்தாள். சதுர்வேதி எழுந்து நின்று அவளை வணங்கினார். பத்மாசினியை அந்த அளவுக்கு இதற்கு முன் யாரும் வணங்கியது கிடையாது. அவளுக்குள் லேசாய் திக்குமுக்காடல்!

‘‘மேடம், நீங்கதானே சிங்கர் பத்மாசினி..?’’

‘‘ஆமாம்... நீங்க?’’

‘‘நான் சொல்றேன் பத்மா. சார் பேர் சதுர்வேதி. பெரிய யோகி. டெல்லில இருந்து வந்துருக்காரு!’’

‘‘ஓ... அப்படியா?’’

‘‘பை த பை, உங்க பேர் இந்த தடவை பத்மஶ்ரீக்கு சிபாரிசு செய்யப்பட்டா, டெல்லில அதை ஒரு செகண்ட்ல ஓகே பண்ணிடுவேன். அதுக்கான ஃபார்மாலிட்டீசை முடிச்சு உங்க

பயோடேட்டாவோட அப்ளிகேஷனை ஃபார்வர்ட் பண்ணுங்க. மற்றதை எல்லாம் நான் பாத்துக்கறேன்....''

முழுமையாக மூன்று நிமிடம் கூட முடியவில்லை. பத்மாசினியை சதுர்வேதி கவிழ்த்துவிட, அவள் முகத்தில் ஒரே சந்தோஷம்.''பத்மஸ்ரீ பட்டம் அப்ப எனக்கு உறுதியா கிடைக்குமா?'' - என்று வாய்விட்டாள்.

''டெல்லில அதுக்கான கமிட்டில இருக்கற அவ்வளவு பேரும் என் சிஷ்யர்கள்தான்'' - சதுர்வேதியின் ஆங்கிலப் பேச்சும் அதை அவர் உச்சரித்த விதமும் அனந்தகிருஷ்ணனைக்கூட மயக்கத் தொடங்கியது,''என்ன சாப்பிடறீங்க?''

''பழரசம் எதுவா இருந்தாலும் ஓகே. காபி, டீ வேண்டாம். நான் உடம்பு விஷயத்துல ரொம்ப சீரியஸான நபர்.''- பத்மா உடனே உள்ளே செல்ல, அனந்தகிருஷ்ணன் எதிரில் அமர்ந்தவராக சதுர்வேதியைப் பார்த்துச் சிரித்தார்.

''ஆமாம்... எங்க மிஸ்டர் கணபதி சுப்ரமணியன்?''

''மாடில அவர் ரூம்ல இருக்கார். படுக்கையை விட்டு அப்படி இப்படி நகர முடியாது....''

''ஓ மை குட்நெஸ்... எதுக்காக இந்த வயசான காலத்துல சார் இப்படி காலை ஒடிச்சிக்கணும்?'' - சதுர்வேதி தெரியாதவர் போல கேட்க, பழரச டம்ளர்களோடு வந்த பத்மாசினி, ''அதை ஏன் கேட்கறீங்க? அவருக்கு, தான் ஒரு ஜேம்ஸ்பாண்ட்னு நினைப்பு. காலச் சக்கரத்தை கண்டுபிடிக்கறேன்னு வேண்டாத வேலைல ஈடுபடப் போக, கடைசில கால் ஒடிஞ்சது தான் மிச்சம்!'' பத்மாசினி

மிக இயல்பாகப் பேசவும், சதுர்வேதி முகத்தில் ஒரு வேகமான கூர்மை.

‘‘அது என்ன காலச்சக்கரம்?’’

‘‘அது... அது... இவ ஒருத்தி, அப்பாதான் ஏதோ உளறினார்னா இவளும் அதை நம்பிட்டா. அது ஒரு கற்பனையான விஷயம் மிஸ்டர் சதுர்வேதி’’ - என்ற அனந்தகிருஷ்ணன் பத்மாசினியைப் பார்த்து ‘வாயை மூடு’ என்பது போல ஜாடை செய்தார்.

‘‘கற்பனையான விஷயத்துல ஈடுபட கணபதி சுப்ரமணியன் ஒண்ணும் அனுபவமில்லாதவர் கிடையாது. இண்டியாவுலயே வெரி சீனியர் மோஸ்ட் பர்சன் இன் ஆர்க்கியாலஜி. அவரோட ‘சீக்ரெட் ஆஃப் ஸ்டோன்ஸ்’, என்னோட மதிப்பு மிகுந்த புத்தகங்கள்ல ஒண்ணு. அந்தப் புத்தகத்தைப் படிச்சதுக்குப் பிறகு பழைய பொருட்களுக்கு நான் கொடுக்கற மதிப்பே தனி. ஓகே... நான் அவரைக் கொஞ்சம் பாக்க முடியுமா?’’

‘‘வாங்க, அவர் ரூமுக்குப் போகலாம்...’’அனந்தகிருஷ்ணன் அவரோடு மாடிப்படி ஏறி கணபதி சுப்ரமணியன் அறைக்குள் நுழைந்தபோது, அவர் ஆழ்ந்த உறக்கத்தில். பக்கத்திலேயே அவர் சாப்பிட்ட மாத்திரைகளின் கிழிந்த ஸ்ட்ரிப்கள்!

‘‘அப்பா... அப்பா...’’ என்று அழைத்த அனந்தகிருஷ்ணன் ஸ்ட்ரிப்களை எடுத்துப் பார்த்தவராக, ‘‘வெரி சாரி சார்! அப்பா ஸ்லீப்பிங் டோசோட பெயின் கில்லர் டேப்ளட்ஸையும் போட்டுக்கிட்டு தூங்கிட்டார். நீங்க மார்னிங் வாங்களேன், பாக்கலாம்...’’

அனந்தகிருஷ்ணன் கூற, சதுர்வேதி முகத்தில் ஒரு வித ஏமாற்றம்! இருந்தும் சுதாரித்துக் கொண்டவராக, ‘‘இட்ஸ் ஓகே! நான் காலைலயே வந்து பாக்கறேன்...’’ என்று அந்த அறையை ஒரு பார்வை பார்த்தார். திரும்பித் திரும்பிப் பார்த்த படியே படிகளில் இறங்கினார்.

அவரது உதவியாளப் பெண்ணான விபாவும் சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். அப்படிப் பார்த்த வேகத்தில் அறைக்கதவின் பின்புறத்தில் ஒரு மைக்ரோ சிப்பை ஒரு கார்ட்டூன் ஸ்டிக்கர் போல ஒட்டவும் செய்தாள். அதை யாரும் கவனிக்கவில்லை.கீழே இறங்கிய நிலையில் மிக மிடுக்காக புறப்படுவதற்கும் தயாரானார் சதுர்வேதி.

‘‘ஓகே மிஸ்டர் அனந்தகிருஷ்ணன். நௌ ஐ’ம் லீவிங். மார்னிங் டைம்ல முடிஞ்சா வரேன். அப்பாவை கவனமா பாத்துக்குங்க. அவர் இண்டியாவோட சக்தி வாய்ந்த நூறு பேர்ல ஒருத்தர்!’’ - என்றார். அப்படியே ஆகாயத்தில் கையை விசைத்து ஒரு செம்பவழ மாலை ஒன்றை வரவழைத்து, அதை பத்மாசினிக்குத் தந்தார். ‘‘இந்த மாலை மானசரோவர்ல மட்டும்தான் கிடைக்கும். இது இருக்கற இடத்துல தோல்விங்கற வார்த்தைக்கே இடமில்லை. நான் வரட்டுமா?’’ - என்றார்.

பத்மாசினி மீண்டும் இன்பத் திணறலுக்கு ஆளானாள். அனந்தகிருஷ்ணனுக்கு அவரின் பேச்சு, செயல், பாடி லாங்குவேஜ் என்று சகலத்திலும் ஒரு கிறுகிறுப்பு தட்டி விட்டது.‘‘நீங்க அவசியம் காலைல வரணும். எங்க வீட்ல பிரேக்ஃபாஸ்ட்டும் எடுத்துக்கணும். நாங்க அதை பாக்கியமா நினைக்கறோம்’’ - என்றார்.

‘‘ஷ்யூர்... ஷ்யூர்...’’ - என்றபடியே அவர் கிளம்பி காரில் ஏற, வாசல் வரை சென்று கணவன் மனைவி இருவரும் வழியனுப்பி வைத்தனர்.

காருக்குள் தீவிர சிந்தனையோடு சதுர்வேதி அமர்ந்திருக்க, அவர் உதவியாளரான விபா சட்டை மேல் பட்டனை அவிழ்த்து விட்டுக் கொண்டாள். செழித்த மார்பின் மேல் காரின் ஏ.சி. பட்டதில் அவளிடம் சிலாகிப்பு. அதே சமயம் அவள் மேல் பாக்கெட்டில் டிரான்சிஸ்டர் போல் இருந்த பெட்டியில் கணபதி சுப்ரமணியனின் குரல் கேட்கத் தொடங்கியது.

‘‘ப்ரியா... மதுரைல ரூம் போட்டுட்டீங்களா?’’

‘‘யெஸ் தாத்தா... பசுமலை தாஜ் ஹோட்டல்லதான் தங்கியிருக்கோம். மலை மேலங்கறதால மதுரையை நல்லா பாக்க முடியுது...’’

‘‘நீ இப்ப ரசனையோட பேசறே ப்ரியா. ஆனா நம்மை நோக்கி ஆபத்து நெருங்கி வந்துடுச்சி!’’

‘‘தாத்தா... என்ன திடீர்னு ஆபத்து அது இதுன்னு உளர்றே?’’

‘‘உளறலே! அந்த டெல்லிக்கார சதுர்வேதி என்ன பார்க்க நேரா வீட்டுக்கே வந்துட்டான். நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கல. தூக்க மாத்திரை போட்டுக்கிட்டு தூங்கிட்ட மாதிரி நடிச்சு தற்காலிகமா சமாளிச்சிட்டேன். காலைல என்னை வந்து சந்திக்கப் போறதா சொல்லிட்டுப் போயிருக்கான். அவன் ஆட்களால பிரயோஜனம் இல்லைன்னு ஆகவும், நேரா கிளம்பி வந்துட்டான். உன் அம்மா, அப்பா இரண்டு பேருமே அவன் முன்னால ஃப்ளாட் ஆயிட்டாங்க!’’

‘‘ஐயோடா! தாத்தா... காலைல அந்த ஆள் வந்தா என்ன பண்ணுவே?’’

‘‘பேச முடியாதபடி நான் சமாளிச்சிடறேன். நீங்க சீக்கிரமா காரியத்தை முடியுங்க. நாளைய பகல் பொழுதில் நீங்க அந்த காலப் பலகணியை நெருங்கிட்டா போதும். நான் இவனை சமாளிச்சிக்கறேன். டாய்லெட் போற மாதிரி தனிமைப்பட்டு உங்ககூட நான் தொடர்புல இருந்துக்கிட்டே இருப்பேன்!’’

‘‘ஜாக்கிரதை தாத்தா! என் ஃப்ரெண்ட் ரஞ்சித் அந்த ஆக்சிடென்ட்ல செத்துப் போன சுகுமாரோட செல்போனைக் கொண்டு அவன் யார்? அவன் பின்னால யார் இருக்கான்னு எல்லாத்தையும் கண்டுபிடிச்சிடுவான். அதுல நிச்சயம் இந்த சதுர்வேதி இருப்பான்னு நினைக்கறேன்...’’

‘‘ஷ்யூர்... ஷ்யூர்... வேகமா செயல்படுங்க. ஆபத்து நம்மை விட்டு விலகல. இனிதான் நாம் ஒவ்வொரு அடியையும் கவனமா வைக்கணும்!’’

‘‘ஓகே தாத்தா... நீயும் தைரியமா இரு. நாங்க காலைல சதுரகிரிக்கு போயிடுவோம். அங்க அடிவாரத்துல நின்னுக்கிட்டு ஏடெடுத்து படிப்போம். கூடவே இருக்கற திசைகாட்டியும் பெண்டுலமும் சோழிகளும் எங்களுக்கு நிச்சயம் நல்ல வழியைக் காட்டும்...’’ப்ரியா பேசி முடிக்க, கணபதி சுப்ரமணியனும் செல்போனை அணைத்திட, சதுர்வேதி காரை ஜி.எச். நோக்கி செலுத்தச் சொன்னார். அதில் ஆயிரம் அர்த்தங்கள்!

51

“சதுரகிரி மலையை விட்டு பளியர்களோடு நான் அந்த இரவில் இறங்கத் தொடங்கினேன். எனக்கு மிக ஏமாற்றமாக இருந்தது. இனம் புரியாத வருத்தமும் ஏற்பட்டது. ஒரு மனிதன் உடலே சிதைந்து போகுமளவு தனக்கு ஏற்படும் விபத்தைக்கூட ஜீரணித்து விடுவான். யாராவது ஏமாற்றினாலோ, ஏமாற்றப்பட்டாலோ, அவனால் ஜீரணிக்கவே முடியாது.இந்த விஷயத்தில் ஒரு புழு பூச்சி கூட ஏமாற்றத்தை எதிர்த்தே செயல்படுவதுதான் விநோதம்.பொழுது விடியும்போது நான் பளியர்களுடன் அடிவாரத்தை அடைந்தேன். அவர்களிடம் துளியும் களைப்பில்லை. நானோ, கல்யாண வீட்டு வாசலில் கட்டப்பட்டு பின் தூக்கிப் போடப்பட்ட வாழை மரம் போல ஆகிவிட்டேன்.

அந்த சித்தரை நினைக்க நினைக்க கோபம்தான் வந்தது. ‘அம்மணக்குண்டி, ஊமை, திமிர் பிடித்தவன்’ என்று மனதுக்குள் வார்த்தைகள் தோன்றிட, உள்ளுக்குள் புலம்பினேன். ‘பாவம் ஜோசப்’ என்றும் நினைத்தேன். அதே வேகத்தில், ‘அவருக்கு இதெல்லாம் வேண்டும்’ என்றும் நினைத்தேன். அதன் பின் ஊர் திரும்பிய நான், திரும்ப என் பணிக்குள் சகஜமாக முயன்றேன்.

ஒருபுறம் கஞ்சமலை ரகசியமும், அந்தத் தங்க மர்மமும் நீடித்தபடியே இருந்தது. காட்டில் நான் பிரிந்த ஜோசப், அதன்பின் திரும்பி வரவே இல்லை. மாறாக அவரிடமிருந்து ராஜினாமா கடிதம் வந்ததாகக் கூறினார்கள். எனக்கு அது மிகுந்த திகைப்பாகி விட்டது. அவருக்கு மறை கழண்டுவிட்டது என்றும் அந்தச் சித்தர் ஏதோ செய்துவிட்டார் என்றும் எண்ணினேன்.

மனம் கேட்காமல் திரும்பிச் சென்று அவரைப் பார்க்க ஆசைப்பட்டேன். ‘யோவ் ஜோசப்... உனக்கு என்னய்யா ஆச்சு?’ என்று அவரைப் பார்த்துக் கத்தத் தோன்றியது. ஒரு நாள் கிளம்பிவிட்டேன். என் இலாகாவைச் சேர்ந்தவர்கள் என்னை மிகவே கேலியாகப் பார்த்துச் சிரித்தனர். ‘அந்த ஜோசப் ஒரு கிறுக்கன்... நீங்கள் கிறுக்கனாகப் போகிறவர்’ என்றனர்.‘நம் இலாகா வேலை என்பது மறைந்திருக்கும் காலப்பதிவுகளை கண்டுபிடிப்பதுதானே ஒழிய, மாய முடங்களை ஆராய்வதோ, அவற்றின் பின்னால செல்வதோ அல்ல’ என்றனர்.

அது ஒரு கோணத்தில் உண்மைதான்! இந்தக் கருத்தை நான் ஜோசப்பிடம் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். ஜோசப் அதற்கு சொன்ன பதிலும் வினோதமானது.

‘நம் இலாகாவால் சராசரி இந்தியக் குடிமகனுக்கு ஒரு பருக்கை சோறு கூட கிடைத்திருக்குமா? இது ஒரு அலங்கார இலாகா! நாம் நவீனமான பிணம் தோண்டிகள். குப்பைகளை சேகரிப்பவர்கள். ‘பிணம்’, ‘குப்பை’ என்றால் உலகம் மதிக்காது என்பதால் ‘மம்மிகள்’, ‘ஆன்டிக்ஸ்’, ‘சரித்திர காலச் சான்றுகள்’ என்று அவற்றுக்கு நாம் நவீன பெயர்களைச் சூட்டியுள்ளோம். இவ்வளவு நாளில் எவ்வளவோ கண்டறிந்துள்ளோம். இதனால் நம் குடும்பங்கள் அரசாங்கச் சம்பளத்தில் பிழைத்தன. மற்றபடி குறிப்படும்படியாக ஒரு நன்மையைச் சொல்லுங்களேன் பார்க்கலாம்..?’ என்றார் அவர்,‘என்றால், இந்த வேலையில் நீங்கள் ஏன் இருக்கிறீர்கள்?’ என்று கேட்டேன்.‘நான் நமது தேசத்தை ஒரு கலாசாரத் தலைநகராகப் பார்க்கிறேன் கணபதி சுப்ரமணியன். எனக்கு நமது கலாசாரம், மொழி – குறிப்பாகத் தமிழ்மொழி... நம் சான்றோர்களான திருவள்ளுவர், அவ்வைப்

பாட்டி, கம்பன் போன்றோர் எல்லாம் பிரமாண்டத்தின் பிரதிநிதிகளாகத் தெரிகின்றனர். உலகில் ஆயிரக்கணக்கான உயிரினங்கள். இதில் எழுதவும் பேசவும் முடிந்த மனிதன், மேலான உயிரினமாகத் தெரிகிறான். இந்த மேன்மை ஒரு நாள் ஒரு பொழுதில் வந்திருக்க வாய்ப்பே இல்லை. இவனுக்குப் பின்னே, இந்த உலகத்து உயிர்களுக்குப் பின்னே, ஏதோ இருக்கிறது; அல்லது யாரோ இருக்கிறார்கள். அதைக் 'கடவுள்' என்றும் 'இயற்கை' என்றும் ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டோம்.

அந்த ஒரு வார்த்தைக்குப் பின் உள்ள அல்லது அதனுள் ஒளிந்துள்ள பேரறிவை நான் காணவும், புரிந்துகொள்ளவும் விரும்புகிறேன். அதற்கு ஒருபுறம் பக்தி புரியச் சொல்கின்றனர். மறுபுறம் அதை அறவே மறுத்து, புத்தி புரியச் சொல்கின்றனர். பக்தி புரிந்தவர்கள் ராமாயணம், மகாபாரதத்தைத் தந்தனர். புத்தி புரிந்தவர்கள் ரேடியோ, டெலிவிஷன், டெலிபோன் என்று தந்தனர். இதில் புத்தி புரிந்தோர் தரும் விஷயங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. ஒரு டெலிபோன் முதலில் ஒரு சூட்கேஸ் அளவில் இருந்தது. இன்று தீப்பெட்டி அளவு சுருங்கி விட்டது. பக்தி புரிந்தோர் தந்ததில் மாற்றமே இல்லை.

நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், 'மாறிக்கொண்டே இருப்பது பெரியதா? மாறாதது பெரியதா?'- ஜோசப் இப்படி என்னைப் பார்த்துக் கேட்டார் அன்று. அதெல்லாம் நினைவுக்கு வர, அவரைத் தேடி திரும்ப சதுரகிரிக்குப் புறப்பட்டேன்!"- கணபதி சுப்ரமண்யனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

அரசு மருத்துவமனை நோக்கி காரை செலுத்தச் சொன்ன சதுர்வேதியை விபா கேள்வியோடு பார்த்தாள்.

‘‘என்ன பாக்கறே?’’

‘‘ஜி.எச்சுக்கு எதுக்கு இப்ப?’’

‘‘அங்கதானே அன் க்ளைம்டு பாடிகள் இருக்கும்?’’

‘‘ஓ... சுகுமாரோட உடல் அங்க இருக்கும்ங்கறது உங்க யூகமா?’’

‘‘யூகமில்ல... தீர்மானம்! எப்ப அவன் தொடர்பு அறுந்து போனதோ, அப்பவே நான் சந்தேகப்பட்டேன்!’’

‘‘உங்க யோக சக்தியால இதை முன்னாலயே உணர முடியலியா ஜி..?’’

‘‘நான் ஜெபம் செய்து பல நாளாச்சு. பூஜையும் தடைபட்டுப் போச்சு. என் குண்டலினி சக்தி, வசிய சக்தி... இதெல்லாம் இப்ப பெட்ரோல் இல்லாத கார் மாதிரி நின்னுக்கிட்டிருக்கு. இது நான் சொன்னாதான் உனக்குப் புரியுமா விபா?’’

‘‘சாரி ஜீ... அவசரப்பட்டுக் கேட்டுட்டேன். மன்னிச்சிடுங்க...’’

‘‘நான் உன்னை மன்னிக்கறது இதுவே கடைசி தடவையா இருக்கட்டும். என்கிட்ட பிரைம் மினிஸ்டரே ஆலோசனைதான் கேட்பார். கேள்வி கேட்க மாட்டார்...’’

‘‘ஐயோ... என்னை மன்னிச்சிடுங்க! ‘கேட்டால்தான் தெளிவு பிறக்கும்... கேளுங்கள்’னு நீங்க உங்க சொற்பொழிவு ஒண்ணுத்துல சொன்ன கருத்து காரணமாகவும், புரிஞ்சிக்கவும்தான் நான் கேட்டேன். உங்க மேல எனக்கு மற்றபடி எந்த சந்தேகமும் இல்லை!’’

- விபா அப்படிக் கூறவும், சதுர்வேதியிடம் ஒரு மென்மைத் திணறல். அதிலிருந்து மீள முயன்றவனாக ‘‘உனக்கு இன்னும் எதாவது சந்தேகம் இருந்தா அதை இப்பவே கேட்டுடு!’’ என்றான்.

‘‘இப்ப சுகுமார் பிணத்தைப் பார்த்து என்ன செய்யப் போறோம்?’’

‘‘அவன் இறந்ததை ஊர்ஜிதம் செய்துக்கப் போறோம். அவன் செல்போன் ப்ரியா, அப்புறம் அந்த வர்ஷனோட ஃப்ரெண்டான ரஞ்சித்கிட்ட போய்ச் சேர்ந்ததை கன்ஃபர்ம் செய்துக்கப் போறோம்!’’

‘‘பிறகு?’’

‘‘என்ன பிறகு? இந்தக் காலப் பலகணிக்காக ஒரு கோடி ரூபாய் இதுவரை செலவாகியிருக்கு. பல பேர் செத்தும் போயிருக்காங்க. களத்துல நானே கடைசில இறங்கும்படி ஆயிடிச்சு. அதனால இனி அடுத்து எடுத்து வைக்கற அடியை ரொம்ப கவனமா, சரியா வைக்கணும்!’’

‘‘அப்புறம்?’’

‘‘நீ திரும்பவும் கேள்வி கேட்கறே... நல்ல சிஷ்யைக்கு அழகு சொன்னபடி நடப்பதுதான். குருங்கறவர் கடவுளை விடவே பெரியவர். அப்படிப்பட்ட குரு சொன்னா நெருப்பிலகூட குதிக்கணும்!’’

‘‘ஜீ... நான் என்னையே உங்களுக்குத் தந்துட்டவ! என் இளமை, கன்னிமைனு இரண்டையும் காணிக்கையா தர முடியுமானு நீங்க கேட்ட அந்த நொடி நான் என்னை நிர்வாணமாக்கிக்கிட்டு உங்க விருப்பப்படி நடந்துகிட்டேனே..?’’

‘‘அது அல்ப காணிக்கை. அதைப் பெரிசா நினைக்காதே!’’

‘‘மன்னிச்சிடுங்க... நான் இனி ஒரு கேள்விகூட கேட்க மாட்டேன். நீங்க சொல்றதை மட்டும் கேட்பேன்!’’

‘‘கேள்... அதுதான் உனக்கு நல்லது. அப்படி நடந்தா மட்டுமே இந்த நாதவேத சதுர்வேதியோட முக்திக்குப் பிறகு என் இடத்துக்கு நீ வர முடியும். ஈ.எம்.டிங்கற எந்திர மந்திர தந்திர கேந்திரத்தோட ராஜகுருவாகவும் உன்னால திகழ முடியும்!’’

‘‘உங்க ஆசீர்வாதம் குருஜி!’’ - விபா ஓடும் காருக்குள் கைகூப்பி வணங்கவும் செய்தாள். அந்த நொடி கோபம் தணிந்த சதுர்வேதி, மிக உரிமையோடு அவள் மார்புப் பக்கம் கைவிட்டு அவளையும் இழுத்து, அவள் உதடுகளோடு இணைப்பு கொடுத்து, தன் பலத்தை எல்லாம் காட்டினான். அவளும் நெருப்பானாள்.

கார் டிரைவர் ஒரு ரோபோ போல காரை செலுத்திக் கொண்டிருந்தான்!

* * *

அரசு மருத்துவமனை!

இழுக்கப்பட்ட மார்ச்சுவரி பாடி கேரேஜில் முகம் சிதைந்த சுகுமார் உடல். ஐயாயிரம் ரூபாயை லஞ்சமாக வாங்கியிருந்த வார்டு ஸ்வீப்பர், குடி போதையோடு விபாவை ஒரு மார்க்கமாகப் பார்த்தான். குறிப்பாக, அவள் மார்புகளை... அவளும் 'அவன் பார்க்கட்டும்' என்பது போலவே நடந்துகொண்டு, அங்கிருந்தே செல்போனில் வெளியே காருக்குள் யாருக்கும் தெரியாதபடி அமர்ந்துகொண்டிருந்த சதுர்வேதியோடு தொடர்புகொண்டாள்.

''ஜி... சுகுமார் பாடியைப் பாத்துட்டேன். ரயில்ல அடிபட்டு செத்துருக்கான். செல்போன் மிஸ் ஆகியிருக்கு. இன்னும் ஒரு வாரம் வச்சிருந்துட்டு, ஒரு ஃபார்மாலிட்டி அனவுன்ஸ்மென்ட்டுக்குப் பிறகு புதைச்சிடுவாங்களாம்!''

''சரி... நீ புறப்பட்டு வா. உன்னை யாராவது அடையாளம் கண்டுக்கிட்டாங்களா?''

''இல்லை... நான் அஃபீஷியலாவே முயற்சி செய்யல. குறுக்கு வழில போனேன். அஞ்சாயிரம் செலவாச்சு!''

''அது ஒரு விஷயமே இல்லை. வருங்காலத்துல நான் நிகழ்த்தப் போற தனாகர்ஷண ஹோமத்துல ஆயிரம் கோடி ரூபா எரிஞ்சு சாம்பலாகப் போகுது. அமெரிக்க அதிபர் விரும்பினா டாலருக்கும் கூட அதுல இடமுண்டு!''

''கேட்கவே எக்ஸைட்டடா இருக்கு. உங்களால தவிர வேற யாராலயும் இப்படிச் செயல்பட முடியாது. நானும் வந்துடறேன்!''

‘‘சீக்கிரம் வா... அப்புறம் அந்த ஆர்க்கியாலஜிஸ்ட் ஏதாவது பேசி காதுல விழுந்ததா?’’

‘‘இதுவரை இல்லை...’’- அவள் பதிலோடு அந்த மார்ச்சுவரியைக் கடந்தாள். அப்போது அவள் கைபேசியில் அழைப்பு! அமெரிக்காவில் இருந்து என்பது திரை எண்களில் தெரிந்தது.

‘‘விபா... கேன் ஐ ஸ்பீக் நௌ?’’

‘‘யெஸ் டீன்ஸ்...’’

‘‘ஹவ் திங்க்ஸ் ஆர் கோயிங்?’’

‘‘எல்லாம் பக்காவா போய்க்கிட்டு இருக்கு. இங்க சதுர்வேதியே களத்துல இறங்கற நிலை உருவாயிடிச்சு!’’

‘‘சதுர்வேதியே என்ன சதுர்வேதியே... அவன் ஒரு இன்டர்நேஷனல் ஃப்ராடு!’’

‘‘அப்ப அவன விட்டு விலகிடட்டுமா?’’

‘‘என்ன விளையாடறியா... அவன் வரைல நீ எச்சரிக்கையா இருக்கத்தான் அப்படிச் சொன்னேன்!’’

‘‘டீன்ஸ்... உண்மைல அவன்தான் எச்சரிக்கையா இருக்கணும். நான் இல்ல. இந்த செகண்ட் அவன் என்னைத் தன்னோட நம்பர் ஒன் சிஷ்யையாதான் நினைக்கறான். நான் ஒரு 28 வயசு, அழகிப்

போட்டில ஜெயிச்சவளா மட்டும் இல்லாமப் போயிருந்தா இதுக்கெல்லாம் இடமேயில்லை!''

''கமிங் டு த பாய்ன்ட்... அவன் உலக அளவுல பாலிடிக்ஸ், பிசினஸ், ஸ்போர்ட்ஸ்னு எல்லாத்துலயும் ப்ரடிக்ஷன்ஸ் தர்றவன். 'தான் ஒருகடவுள்'னு அவன் இன்னும் அறிவிக்கல... அவ்வளவுதான் வித்தியாசம். அவன் பவருக்குப் பின்னால இருக்கற ரகசியத்தைக் கண்டுபிடிக்கறதுதான் உன்னோட அசைன்மென்ட்! அதுல நீ இன்னும் எனக்கு திருப்தியான ஒரு பதிலைச் சொல்லவே இல்லை... அதை மறந்துடாதே!''

''ஒரு பதில் என்ன? பல பதில்களைக் கூடிய சீக்கிரம் சொல்லப் போறேன் டீன்ஸ். 'இண்டியா'ங்கற நாடு முட்டாள்களோட தேசமோ, உங்க ஊர்க்காரங்க நினைக்கற மாதிரி பாம்பாட்டிகள் தேசமோ கிடையாது. இங்க பெரிய பெரிய ஞானிகள் வாழ்ந்துட்டுப் போயிருக்காங்க. ஒரு நாஸ்டர்டாம்ஸை வச்சிக்கிட்டு பீத்து பீத்துன்னு பீத்திக்கிறீங்களே... இங்கே ஒரு நாஸ்டர்டாம்ஸ் கூட்டமே இருக்கு.

அவங்க எழுதி வச்சிருக்கற காலப் பலகணியை அடையறதுதான் சதுர்வேதியோட லட்சியம்.அதுல 'அடுத்த அமெரிக்க அதிபர் யார்?'ங்கற கேள்விக்கான விடைல இருந்து 'அடுத்த வேர்ல்டு கப் கிரிக்கெட்ல இருந்து ஃபுட்பால் வரை யார் ஜெயிப்பாங்க'ங்கற விடை வரை எல்லாம் இருக்கு. பர்ட்டிகுலரா நீ எதிர்பார்க்கற 'லட்சக்கணக்கான மக்கள் ஒரே நாள்ல சாகப் போற நாடு எது?', 'அந்த நாள் எப்போ'ங்கற கேள்விக்கான விடை வரை எல்லாம் அதுல இருக்கு...''விபா நடந்தபடியே பேசியவளாக, தொலைவில் இருளில் நின்றபடி இருந்த சதுர்வேதி கார் நோக்கி நடந்தாள்!

52

‘‘**ச**துரகிரிக்குப் புறப்பட்ட நான், அதன் அடிவாரமான தாணிப்பாறை வரை தடையின்றி வந்துவிட்டேன். அதற்குப் பிறகு அங்கே இருந்து மேலே ஏறி, அந்த வனத்துக்குள் எந்த திசையில் செல்வது என்று தெரியாமல் நின்றேன். அப்போது பக்தர் ஒருவர் பக்திப் பழமாக என் எதிரில் அஞ்சுமலை வனத்துக்குள் நுழைந்துகொண்டிருந்தார். நான் அவரைத் தொற்றிக்கொண்டேன். அவர் பெயர் வள்ளிமுத்து. டக் செய்த பேன்ட் - ஷர்ட், சங்கிலி பூட்டிய மூக்குக் கண்ணாடி, தலையில் ஒரு ஜெர்மன் தொப்பி சகிதம் என்னைப் பார்த்தவர் வியந்தார்.

‘‘யார் சார் நீங்க? வனவிலங்குகளை ஒளிஞ்சிருந்து படம் பிடிக்கறவங்களா?’’ என்று கேட்டார். அவரிடம் என்னை அறிமுகம் செய்துகொண்டேன். நான் ஒரு ஆர்க்கியாலஜிஸ்ட் என்று ஒரு முறைக்கு இரண்டு முறை கூறியும் அவருக்குப் புரியவில்லை. என்னை ஒரு நியூமராலஜிஸ்ட் ஆகப் பொருள்படுத்திக்கொண்டு, ‘ஓ... காலாலங்கிரிக்கு வந்திருக்கீங்களா?’ என்று கேட்டார்.

அந்தப் பெயரை நான் அதற்கு முன் வரை கேள்விப்பட்டதே இல்லை. ‘காலாலங்கிரியா... அப்படின்னா?’ என்று கேட்டேன். ‘அப்ப நீங்க எதுக்கு வந்திருக்கீங்க? உங்களைப் பார்த்தா சுந்தர மகாலிங்கத்தையும், சந்தன மகாலிங்கத்தையும் வழிபட வந்த மாதிரி தெரியலையே?’ என்றார்.‘அது யார் சுந்தர மகாலிங்கம், சந்தன மகாலிங்கம்?’

‘அது சரி… இந்த மலையோட சாமியையே தெரியாமலா இவ்வளவு தூரம் வந்திருக்கீங்க?’‘நான்தான் முதல்லயே சொன்னேனே… என் நண்பரைத் தேடி வந்திருக்கேன்னு!’‘அட, ஆமாம்ல… அவர் கொடுத்து வச்சவர்!’‘கொடுத்து வச்சவரா? 80 ஆயிரம் ரூபாய் வரை சம்பளம் வாங்கறவர்… அதை விட்டுட்டு கரன்ட் கூட இல்லாத இந்தக் காட்டுல சிக்கிக்கிட்டவர் கொடுத்து வச்சவரா?’

‘என்ன பெரிய எண்பதாயிரம்… சுண்ணாம்பு! இந்தக் காட்டுல திரியற ஒரு சித்தன் பார்வை நம்ம மேல படறதுங்கறது, இந்த உலகமே நமக்குப் பரிசா கிடைச்சதுக்கு சமமுங்க. நானும் பல வருஷமா என் நட்சத்திரம் அன்னிக்கு இந்த மலைக்கு வர்றேன். ஒரு சித்தர் சாமி என் கண்ணுல பட்டதில்லை!’

‘அவங்களோட சேர்ந்து உடம்புல துணிகூட இல்லாம வாழறதா வாழ்க்கை?’’

‘இல்லியா பின்னே? பசி கிடையாது, தாகம் கிடையாது. உடலில் இருந்து எந்தக் கழிவுகளும் வெளியே வர்றது கிடையாது… இது எவ்வளவு பெரிய விஷயம்?’

‘இட்ஸ் இம்பாசிபிள்… எந்த ஒரு உயிரினத்தாலும் நீங்க சொல்ற மாதிரி மட்டும் வாழவே முடியாது’ – நான் இப்படிச் சொல்லவும், அவர் என்னை முறைத்தார்.

‘என்ன முறைக்கறீங்க! எனக்குப் பதில் சொல்லுங்க’ என்றேன்.

‘உங்ககிட்ட பேசறதுல பிரயோஜனம் இல்லீங்க! நீங்க சாமி இல்லைங்கற கோஷ்டி மாதிரி தெரியுது. உங்களுக்கு விளக்கம் தர முயற்சிக்கறதும் வேஸ்ட்’ என்றார்.

‘நான் நாத்திகனும் இல்லை, ஆத்திகனும் இல்லை. அதே சமயம் அறிவுள்ள மனுஷன். நீங்க சொல்ற மாதிரி வாழற ஒருத்தரை எனக்குக் காட்டுங்க. அப்புறமா நான் நம்பறேன். நீங்களே அப்படி ஒரு சித்தரைப் பார்க்காதப்ப எதை வச்சு உங்க வார்த்தையை நான் நம்பறது?’

‘ஐயா... நான் பாக்கலதான். ஆனா, பாத்தவங்க சொன்னதைக் கேட்டுருக்கேன். அதே சமயம் பல அற்புதங்களுக்கு நான் ஆளாகியிருக்கேன். நான் டாக்டர்களால கைவிடப்பட்ட ஒரு எய்ட்ஸ் நோயாளி. உடனே என்னை பொம்பள பொறுக்கியா நினைச்சுடாதீங்க. ஒரு போலி டாக்டர் ஒரே ஊசியால பலருக்கு ஊசி போடப் போய் எனக்கு வந்த கொடுமை அது!

நான் நாலஞ்சு வருஷம் வாழ்ந்தா அதிகம்னு சொன்னாங்க. ஒரு ஆச்சரியம் போல இதைச் சொன்ன டாக்டரெல்லாம் செத்துட்டாங்க. நான் இருக்கேன். அதுவும் எப்படி? இப்ப என்னை டெஸ்ட் பண்ணிட்டு ‘அன்னிக்கு உனக்கு ஹெச்.ஐ.வி இருக்குன்னு சொன்னதுதான் தப்பு. தப்பான ரிப்போர்ட்டை வச்சு உன்னை நோயாளினு சொல்லிட்டாங்க’னு புரண்டு போய் பேசறாங்க. என்னை இந்த மலையும் இதுல விளையற மூலிகைகளும் குணப்படுத்துனத ஒத்துக்க மாட்டேங்கறாங்க. நான் இதைச் சொன்னா, ‘அதுக்குக் காரணமான சித்தர் சாமிங்களக் கூட்டிகிட்டு வா... நம்பறோம்’னு சொல்றாங்க!’ – அவர் பேசப் பேச எனக்குத் திகைப்பு...”

– கணபதி சுப்ரமண்யனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

காருக்குள் இருந்த சதுர்வேதி, விபா போனில் பேசியபடி காரை நெருங்குவதைப் பார்த்தான். அவளும் காரை நெருங்கியதும் பேச்சை முடித்துக்கொண்டு போனை தனது ஹேண்ட் பேக்கில் போட்டவளாக பின் கதவைத் திறந்து அவனருகில் அமர்ந்தாள். காரும் புறப்பட்டது.

‘‘யார் டியர் போன்ல?’’

‘‘என் அங்க்கிள் ஜி...’’

‘‘அங்கிளா?’’

‘‘ஆமாம்... டெல்லில பிசினஸ் பண்ணிக்கிட்டிருக்காரே, சோம்லால் குப்தானு...’’

‘‘ஓ... என்னவாம்?’’

‘‘சும்மா கர்ட்டசி கால்தான் ஜி. ‘சுவாமிஜியை தரிசனம் பண்ணணும், எப்ப அறிமுகப்படுத்தப் போறே’ன்னு கேட்டார். உங்ககிட்ட கேட்டுட்டு சொல்றதா சொன்னேன். எப்ப அவரை வரச்சொல்லட்டும் ஜி?’’ - விபா மிகச் சரளமாகப் பொய் சொன்னாள். அப்படிச் சொல்ல ஒரு திறமை கடந்த திறமை வேண்டும். சதுர்வேதி முகத்திலும் புன்னகை.

‘‘சொல்றேன்... அந்த கணபதி சுப்ரமண்யன் ஏதாவது பேசினது மாதிரி தெரிஞ்சதா?’’

‘‘இல்லஜி... இந்த நைட் டைம்ல சான்ஸூம் இல்ல. நிச்சயம் பொழுது விடியவும் பேசுவாங்க. அது நம்ம காதுல விழாமப் போகாது!’’

‘‘மைக்ரோ சிப் ஸ்டிக்கரை சரியா ஒட்டினேதானே?’’

‘‘அப்படி ஒட்டாம போயிருந்தா அவர் பேசினது காதுல விழுந்துருக்குமா ஜி?’’

‘‘திரும்ப கேள்வி கேக்கறே... கணபதி சுப்ரமண்யன் சராசரி மனுஷன் இல்லை. ஃபாரீன் புக்ஸெல்லாம் படிக்கறவன். ஸ்டிக்கரை அவன் சந்தேகப்பட்டா, எல்லாமே கெட்டுடும்!’’

‘‘ஸாரி ஜி! இனிமே கேள்வி கேட்க மாட்டேன். ஸ்டிக்கரை கதவோட பின்பக்கம்தான் ஒட்டியிருக்கேன். அது அந்த ஆள் கண்ணுலயே முதல்ல படாது. ஆனா, பாத்ரூம்ல போய் செல்போன்ல பேசினா புண்ணியமில்ல!’’

‘‘எனிவே... இவ்வளவு தூரம் நமக்கு விஷயம் தெரிய வந்ததே பெருசு. இந்த அசைன்மென்ட்ல நான் யாரையெல்லாம் இறக்கி விட்டேனோ, அவ்வளவு பேரும் செத்துட்டாங்க. இந்த ஒரு விஷயமே அந்தக் காலப் பலகணி எவ்வளவு சக்தி மிக்கதுங்கறத காட்டிடுச்சு. எப்பாடு பட்டாவது அதை நான் நெருங்கியே தீரணும்!’’

‘‘நாமன்னு சொல்லுங்க ஜி...’’

‘‘நான்னாலே நீயும் அதுக்குள்ள இருக்கே விபா. ரைட்... டிரைவர்கிட்ட மதுரை நோக்கி போகச் சொல்லு...’’

‘‘அப்ப அவங்கள நாம ஃபாலோ பண்ணப் போறோமா?’’

‘‘டெஃபனட்லி... பலகணி வரை அவங்களைப் போக விட்டு, கடைசில அவங்களைப் பின் தள்ளிட்டு அதை நாம அடைஞ்சிடணும்!’’

‘‘நினைச்சேன்... பை த பை, ஒரு சந்தேகம் கேட்கட்டுமா?’’

‘‘தாராளமா கேள்...’’

‘‘அப்புறம் என்ன கேள்வியா கேட்கறேன்னு வருத்தப்படக் கூடாது.’’

‘‘வித் மை பர்மிஷன், நீ எவ்வளவு கேள்வியும் கேட்கலாம்!’’

‘‘இந்தப் பலகணியை தேடிப் போன எல்லாரும் செத்துட்டாங்கனு தெரியுது. நாமளும் அதைத்தான் தேடறோம். நமக்கு எதுவும் ஆகாதா?’’

‘‘நல்ல கேள்வி. என் கழுத்துல இருக்கற இந்த ருத்ராட்ச மாலை, ஒரு முகம் கொண்டது. ஆயுள் விருத்தி ஹோமம் செய்து நான் அணிஞ்சுகிட்டது. இது இருக்கற இடத்துல எமன் வரவே முடியாது. அப்புறம், அபூர்வமான விஷயங்களை எல்லாம் அடையற ஜாதகம் என்னோட ஜாதகம்! பெரிய பெரிய அதிகாரத்துல உள்ளவங்களையே ஆட்டி வைக்கற ஜாதகம். அவ்வளவு ஏன்..? வரப்போற சித்திரை இருபத்தி ஏழாம் தேதியில இருந்து நான்தான் இந்த உலகத்தோட நடமாடும் மனிதக் கடவுள். ஜெகத்குரு! நான் சொன்னது நடக்கும். கேட்டது கிடைக்கும்!’’

‘‘உங்களுக்கு சரி... எனக்கு?’’

‘‘இதுவும் நல்ல கேள்வி... உன்னையும் காப்பாத்தத்தான் நான் பிரம்மச்சர்யத்தை கைவிட்டு உன்கூட கூடினேன். கலவியில மட்டும்தான் ஆணும், பெண்ணும் அதிக அளவு உடம்பாலயும் மனசாலயும் ஒண்ணாகறாங்க. இப்போ நீயும் நானும் விடற மூச்சோட நீளம், நாலு அங்குலம்தான். தாம்பத்ய உறவு சமயத்தில் அது அறுபது அங்குலத்துக்கும் மேல... அப்படின்னா நீ எனக்குள்ளயும், நான் உனக்குள்ளயும் எவ்வளவு தூரம் கலந்திருப்போம்னு யோசிச்சுப் பார்!’’

‘‘அதனால?’’

‘‘எனக்கான எல்லா நன்மையும் உனக்கும்தான்! ஈ.எம்.டி கேந்தராவோட சிவன் நான்! பார்வதி நீ...’’ - சதுர்வேதி தன் காம வெறியை வெகு அழகாக நியாயப்படுத்தினான். ஆனால், மனதுக்குள் ‘நீயும் செத்து ஒழிவதே எனக்கு நல்லது’ என்றும் கூறிக்கொண்டு சிரித்தான். விபா அதை அப்படியே எதிரொலித்தாள். ‘மை டியர் சதுர்வேதி... சரியான சமயத்துல நான் விலகி உன்னை மரணத்துல

தள்ளிடுவேன். காமவெறிக்கு அங்குலக் கணக்கு சொல்லியா சமாளிக்கறே?' என்று தனக்குள் கருவிக்கொண்டாள்.

நான்கு வழிச்சாலையில் அந்தப் படகுக் கார் தாம்பரத்தைக் கடந்து வேகமெடுக்கத் தொடங்கியது.விடியும் வரை காரில் அமர்ந்து பயணிப்பது என்பது சாபத்தோடு சேர்ந்த ஒன்று. சாபத்தை வரமாக மாற்ற விரும்பி, ஒரு மேல்நாட்டு மது பாட்டிலை எடுத்தவன் ரசித்துக் குடித்தான்.

'கடவுள் குடிப்பாரா?' - விபா கேள்வியோடு பார்த்தாள்.

''என்ன பாக்கறே... கடவுள் காரணமில்லாம மதுவைப் படைக்கல. தேவலோகத்துல இந்திரனே பெரிய குடிகாரன்தான். அங்க இதுக்கு சோம ரசம்னு பேர்!'' என அதற்கும் ஒரு விளக்கம் கொடுத்தான் சதுர்வேதி.

'நீ எப்படா அங்க போய்ப் பார்த்தே' என்ற அடுத்த கேள்வி யோடு விபா ஊடுருவினாள். ஆனால் போதை சதுர்வேதியை தன் வசம் எடுத்துக்கொள்ள, டிரைவரிடம் டீசலுக்கும் டோல்கேட்டுக்கும் பணம் கொடுத்துவிட்டு, ''வழில எங்க விருப்பமோ அங்க சாப்பிட்டுக்கோ. விடியும்போது மதுரைல இருக்கணும்!'' என்று கூறியவள், மீதியிருந்த மதுவை தானருந்தத் தொடங்கினாள். உடம்பு மெல்ல... இருந்தும் இல்லாமல் போகத் தொடங்கியது!

விடிந்துவிட்டது!

பாறை மேல் மல்லாந்து கிடந்த ஈங்கோய் கண் விழித்தான். அவன் மனைவி பழஞ்சீ இரவே அங்கிருந்து போய் விட்டிருந்தாள்.

அருகில் இருந்த நாயும் எழுந்து நின்று பார்த்தது. காலைக்கடன் அவனை மறைவிடம் நோக்கிச் செலுத்தியது. அடுத்த அரை மணி நேரத்தில் மேலிருந்து கீழ் இறங்கினான். நந்தி அடிகளை காலாலங்கிரி கிழக்கு வாயிலில் கண்டான்.

அடிகள் துளசி மாடத்தைச் சுற்றிக்கொண்டிருந்தார்.நாயோடு வந்து நிற்பவனைப் பார்த்தார்.

‘‘என்ன ஈ... இறங்கிட்டே?’’

‘‘கடன் கழிக்க இறங்கினேன் சாமி. ராத்திரி எனக்குத் தெரிஞ்சு கண்ணுக்கு எட்டுன தொலவு யாரும் வரலை சாமி!’’

‘‘தெரியும்... ஆனா இனி வர வாய்ப்பிருக்கு...’’

‘‘அப்ப சரி சாமி... நான் திரும்ப மேல ஏறிடறேன்!’’

‘‘சாப்பிட்டுட்டுப் போ...’’

‘‘அதான் மருந்து இலை தந்தீங்களே சாமி... அதனால பசியில்லை!’’

‘‘பழஞ்சீ வந்து கூழ் கொடுத்து குடிச்ச போல இருக்கே?’’
‘‘ஆமா சாமி!’’

‘‘கடன கழிக்கும்போதே மருந்து இலையோட சக்தில பாதி வெளியேறியிருக்கும். அதனாலதான் சாப்பிட்டுட்டுப் போகச் சொன்னேன்!’’

அவன் சற்று பிரமிப்போடு அவரைப் பார்த்தான். இவருக்கு எல்லாமே தெரிந்திருக்கிறது... எப்போதும் ஆச்சரியமூட்டுகிறார். உணர்ச்சிவயப்படவே மாட்டேன் என்கிறார்! அவனுக்குள் அவர் குறித்த எண்ணங்கள்.

‘‘ஆமா... பழஞ்சீ புலிச்சாமி குகை பக்கம் போனாளோ?’’ - நந்தி அடிகள் அடுத்து கேட்க, அவன் தலை மௌனமாக அசைந்து ஆமோதித்தது.

‘‘அது தப்பு... அவகிட்ட சொல்...’’

‘‘சொல்லிட்டேன் சாமி!’’

‘‘நல்லது... நீ புறப்படு...’’ - அவன் விலகிட, யதார்த்தமாக தலையை உயர்த்தியவருக்கு சுற்றி வளைத்து நிற்கும் மலையின் ஒரு உச்சி பாகத்து பாறை மேல் புலிச்சித்தர் நின்றுகொண்டு அவரை கை அசைத்து அழைப்பது தெரிந்தது.அடுத்த ஐந்தாவது நிமிடம் அவர் எதிரில் இருந்தார் நந்தி அடிகள்!

‘‘நந்தி... இப்படி உட்காரு!’’

‘‘பரவால்ல குரு!’’

‘‘நான் வரச்சொன்ன காரணத்தை சொல்ல விரும்பறேன்!’’

‘‘உத்தரவு குரு...’’

‘‘நான் அடங்கப் போறேன்...’’

‘‘குரு...!’’

‘‘என்ன இது... லௌகீக மனுஷ பாவனை?’’

‘‘எனக்குள்ளயும் அது இன்னும் கொஞ்சம் மிச்சம் இருக்கு போல!’’

‘‘புரிஞ்சா போதாது... முற்றுமா நீக்கிக்கணும். எது நடந்தாலும் அது மாற்றம். அவ்வளவுதான்! மாறாதது எதுவுமே கிடையாது!’’

‘‘வாஸ்தவம்தான்...’’

‘‘அப்புறம் இந்த மலையே மாறப் போகுது!’’

‘‘மலையேவா?’’

‘‘ஆமாம்... காவலால இனி பயனில்லை. ஈங்கோயை அவன் எல்லைக்குத் திருப்பி அனுப்பிடு!’’

‘‘உத்தரவு சாமி...’’

‘‘கடிகாசலத்துக்கு பூஜை செய். அது ரொம்ப முக்கியம்!’’

‘‘இன்னிக்கு இரவுல இருந்து ஊழித்தாண்டவம் ஆரம்பம். திரிகோணமலைக்கும் மகேந்திரகிரி மலைக்கும் நடுவே தொடங்கப் போற புயல், மொத்த தென்பகுதியையே கழுவித் துடைக்கப் போகுது!’’

‘‘இயற்கையை நாம தடுக்க முடியாதா சாமி?’’

‘‘தினமும் இந்த பூமில 700 கோடிப் பேர் பாவம் செய்யறாங்க. நூறு பேர்கூட சுயநலமில்லாம புண்ணியம் செய்யறதில்லை. அப்புறம் எப்படி முடியும்?’’

‘‘அப்ப புண்ணியம் மட்டுமே செய்யற நம்ம மலை சாமிங்களுக்கான நியாயம் எது சாமி?’’

‘‘மனிதர்களுக்குத்தான் பூமி மட்டும் வாசஸ்தலம். அந்த மனித நிலையை வெற்றிகொண்ட நமக்கெல்லாம்தான் மேல இன்னொரு உலகம் இருக்கே. அங்க நுழைய நம்மால மட்டும்தானே முடியும்?’’

‘‘அங்க எனக்கு இடம் இருக்கா சாமி?’’

‘‘வெள்ளம் வரும்போது தப்பிச்சா அது இல்லை. அதுல சிக்கினா நீயும் அங்கதான் வந்து நிப்பே!’’

அவர் சொல்லும்போதே பெரிய இடிச் சப்தம் கேட்கத் தொடங்கியது!

53

‘‘வள்ளிமுத்துவும் நானும் பேசியபடியே நடந்தோம். உண்மையில் எனக்கு இலக்கே இல்லை. அந்த நிர்வாண சாமியாரின் குகை எந்தப் பக்கம் இருக்கிறது என்றும் தெரியவில்லை. முன்பு ஒரு நாயின் பின்னால் புதர்களுக்குள் புகுந்து புகுந்து போனதால் திக்கு, திசை தெரியவில்லை. ஆனாலும் என் மனதுக்குள் ஒரு நம்பிக்கை. ‘அன்று நான் சந்தித்த

நாய் மீண்டும் வரக்கூடும். மனிதர்களிடம் பேசுவது போலவே அதனிடம் பேசி அதை வழிகாட்டச் சொல்வோம்' என்றெல்லாம் மனதுக்குள் நினைத்தபடி அவரோடு நடந்தேன். அவரோ சித்த புராணம் படித்தபடியே வந்தார். 'இது அபூர்வமான மலை. இங்க வரக் கொடுத்து வச்சிருக்கணும். விதி இருந்தாதான் வருவோம். வந்துட்டு போனா நல்லது நடக்கும். ஆனா ஆயிரக்கணக்குல மக்கள் வந்து இந்த மலையை நாசப்படுத்தறாங்க.

வன இலாகாக்காரங்க ஒரு பக்கம் சந்தன மரங்களை காவல் காக்கறதா கூத்தடிக்கிறாங்க. இதை எல்லாம் கடந்துதான் இங்க சித்தருங்க வசிக்கறாங்க' என்றவரிடம், 'இன்றைக்கு என் நண்பரைப் பார்த்தால் எனக்குப் போதும். அவர் மிக வசதியாக வாழ்ந்தவர். தூங்கும்போது தலைக்கு மட்டுமே இரண்டு, மூன்று தலையணை வைத்துக்கொள்வார். இந்தக் காட்டில் அவர் எப்படித் தூங்குகிறாரோ தெரியவில்லை'என்றேன்.

'நகரச் சூழல்ல நீங்க இப்ப வாழுற வாழ்க்கைதான் உயர்ந்ததுங்கற மாதிரியே பேசறீங்க. இங்க முதல்ல மனுஷ சஞ்சாரமே கிடையாது. அப்பப்ப ஆயிரக்கணக்குல வந்தாலும், கோயில் வரைக்கும்தான். ஆனா இந்த மலைக்காடு அதை எல்லாம் விட பெரிசு. சித்தருங்க விலகிப் போயிடுவாங்க. சுத்தமான தண்ணி, காத்து, பச்சிலை, பழங்கள்னு எல்லாமே இங்க உயர்ந்த தரம். உடம்பு எப்படி இருக்கும் தெரியுமா?' என்று என் கேள்விக்கு தனக்குத் தோன்றிய விதத்தில் பதில் கூறினார் அவர்.

மேலே செல்லச் செல்ல குளிரத் தொடங்கியது. ஒரு கட்டத்தில் எனக்கு உடல் நடுங்க ஆரம்பித்தது. காய்ச்சல் வரும் போல் கூட தோன்றியது. அப்போது அவர், 'அதோ... அந்த

மலையைத்தான் 'காலாலங்கிரி'ன்னு சொல்வாங்க. அங்க ஒரு ஆசிரமப் பள்ளிக்கூடம் இருக்குது. அங்க எல்லாரையும் சேர்த்துக்க மாட்டாங்க...' என்றார்.'என்ன இது? புதுமையா இருக்கே... இந்த மலைல ஒரு பள்ளிக்கூடமா... அதுல ரெஸ்ட்ரிக்ஷனா?' 'நீங்க வேற... இந்த விஷயம் யாருக்கும் தெரியாது. நான் அடிக்கடி வந்து போறதால தெரிஞ்சிக்கிட்டேன்!' 'இப்ப அந்தப் பள்ளிக்கூடத்தைப் போய்ப் பார்க்க முடியுமா?''

'முயற்சி பண்ணிப் பாருங்க. எல்லோராலேயும் அங்க போக முடியாது. அங்க ஒரு பாறை இருக்கு. அது மேல ஏறி நின்னு 'சிவாய நம'ன்னு சொல்லிக்கிட்டே இருக்கணும். லட்சம் தடவைக்கு மேல ஒரே மனசா சொன்னா, ஒரு சாமியார் வந்து 'என்ன விஷயம்'னு கேப்பாரு. நாம பள்ளிக்கூடத்துல சேர்ந்து ஜோசியமும், காலக் கணக்கும் படிக்க விரும்பறதை சொல்லணும். அவர் உத்துப் பார்ப்பாரு, முகக்குறிப்பு அவருக்கு சரியா இருந்தா கூட்டிப் போவாரு. இல்லாட்டி முகத்துல ஊதுவாரு. நாம பேசாம திரும்பத் தொடங்கிடுவோம்...'

'இது என்ன? ஏதோ சினிமா கதை மாதிரி இருக்கு...''அது சரி... இந்த சினிமால்லாம் ஒரு நூறு வருஷம் கூட ஆகாத விஷயம். ஆனா நான் சொல்றது பல நூறு வருஷ சமாச்சாரம்!''ஆமா... அது என்ன காலக்கணக்கு?''அது தெரியாது... ஆனா அங்க இருக்கற சில சாமிங்க நாளைக்கு என்ன நடக்கும்னு முன்னாடியே சொல்லிடுவாங்க. சொன்னதும் அப்படியே நடந்திருக்கு!''உங்களுக்கு ஏதாவது சொல்லியிருக்காங்களா?'

'எங்க... என்னாலதான் அவங்கள பாக்க முடியலையே?'

'அப்ப இதெல்லாம் மட்டும் எப்படித் தெரியும்?'

‘பாத்தவங்க சொன்னதை வெச்சு சொல்றேன்!’

‘பாத்தவங்க பொய் கூட சொல்லலாம் இல்லையா?’

‘பொய் சொன்னா அது பலிக்குமா?’

‘அப்ப அவங்க சொல்லி என்னவெல்லாம் நடந்துருக்கு?’‘நிறைய நடந்துருக்குங்க. இப்ப நீங்க கேட்கவும் உடனே எனக்கு சொல்லத் தெரியல!’

‘சரி, நான் உங்கள ஒண்ணு கேட்கலாமா... வருத்தப்பட மாட்டீங்களே?’‘நீங்கள்லாம் சந்தேகப் பேர்வழிங்க. நம்பிக்கையை விட ‘ஏமாந்துடுவோமோ’ங்கற பயம் அதிகம் உள்ளவங்க. இதை நான் முதல்லயே புரிஞ்சுக்கிட்டேன். குறிப்பா நீங்களும் உங்க நண்பரும் வந்து, அவர் இங்கேயே இருந்துட, உங்கள சித்தர் சாமி ஏறக் கட்டுனதை கேட்டதுமே புரிஞ்சிக்கிட்டேன்!’

அந்த வழிப்போக்கரான வள்ளிமுத்து சொன்ன பதிலுக்குள் ஒரு கேலி அப்பட்டமாகத் தெரிந்தது. அப்படி அவர் கூறவும், ‘இவரிடம் மேற்கொண்டு பேசுவதில் பயனிருக்குமா’ என்று எனக்குத் தோன்றியது. இருந்தும் கேட்க நினைத்த கேள்வியை கேட்கத் தொடங்கினேன்.

‘நாளைக்கு நடக்கறத முன்கூட்டியே சொல்லக்கூடிய சக்தி படைச்ச இவங்க, சுனாமி வரப்போறத பத்தி ஏன் முன்னாலயே சொல்லல? பல ஆயிரம் பேரை காப்பாத்தியிருக்கலாமே? இப்படிப்பட்டவங்க எதுக்கு இப்படி மலைல திருடங்க மாதிரி

ஒளிஞ்சிக்கிட்டிருக்கணும்? சமுகத்துக்குள்ள இருந்துக்கிட்டு சமுகத்துக்குப் பயன்படும்படியா நடந்துக்கலாமே?'

என் கேள்வியால் அவர் கோபப்படுவார் என்று கருதினேன். ஆனால் அந்த நபர் சிரிக்க ஆரம்பித்து விட்டார்!- கணபதி சுப்ரமண்யனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

மழை வரும் அறிகுறிகள் தெரியத் தொடங்கி, வீசும் காற்றும் வேகமெடுக்கத் தொடங்கியது. நந்தி அடிகள் முகத்தில் ஒரு வாட்டம் தோன்றி விட்டது. அதை கவனித்த அந்த புலிச்சாமி என்கிற சித்தர்,

''என்ன நந்தி... இந்தக் காடும் வனமும் அழியப்போறது உனக்குப் பிடிக்கலையா?'' என்று கேட்டார்.

''நல்லா இருக்கறது அழியறத எப்படி சாமி விரும்ப முடியும்?''

''இங்க வாழ்ந்தும் உனக்கு இன்னும் மாய விடுதலை கிடைக்கல. கொஞ்சம் பற்று ஒட்டிக்கிட்டுதான் இருக்கு!''

''அதை நான் மறுக்கல சாமி. நான் தவமிருந்த நேரத்தவிட, இந்த காலாலங்கிரியை சுத்தி வந்து பாத்துக்கிட்ட நேரம்தானே அதிகம்?''

''பேச்சுல 'நான்... நான்...'னு நிறைய வருது. போகட்டும், விடு! நான் சொன்னது மாற்றத்தை... அதை அழிவா புரிஞ்சிக்கிட்டு வருத்தப்படறே! பூமிக்குள்ள விதை அழிஞ்சு, மருவிதான் தாவரமா உருவாகுது. நம்ம உடம்புல பழைய செல் அழிஞ்சு புது செல் உருவாகி நாமளும் மாறிக்கிட்டே இருக்கோம். ஆகாசத்துல கோள்கள் நொடிக்கு நொடி மாறிக்கிட்டிருக்கு. ஓடற ஆத்துல தண்ணியும் ஒரு இடத்துல நின்னுடறதில்ல. அது ஓடாத குளத்துலகூட, நாம உணர முடியாத அளவு அந்த தண்ணி நிறம் மாறிக்கிட்டுதான் இருக்கு.

ஒவ்வொரு நொடியும் உலகம் முழுக்க மாற்றம் நடந்துக்கிட்டே இருக்கு. இதுக்கு பேர்தான் வாழ்க்கை. உனக்கு இங்கிலீஷ்லயும் சொல்றேன். Life is Motion. ‘என்ன, சித்தன் இங்கிலீஷ் பேசறான்’னு ஆச்சரியப்படாதே. நான் இந்த நூற்றாண்டுல பிறந்தவன்தானே?’’

‘‘நீங்க சொல்ல வர்றது புரியுது சாமி... இந்த உடம்பை விட்டு ஆத்மா பிரியப் போற தருணம் வந்துடுச்சின்னு தெரிஞ்சுக்கிட்டேன். வீட்டைப் பிரிஞ்சு ஊருக்குப் போற மாதிரி ஒரு விஷயம்தான் இதுவும். அதுக்குத் தகுந்த மாதிரி பருவநிலையும் மாறிடிச்சு. இந்த சூழ்நிலைல எனக்கு ஒரே ஒரு சந்தேகம் மட்டும் மிச்சமிருக்கு. அதுக்கு என்கிட்ட பதிலுமிருக்கு. இருந்தாலும் என் குருவான உங்ககிட்ட நான் மேலும் தெளிவு படுத்திக்க விரும்பறேன்...’’

‘‘தாராளமா கேள்!’’

‘‘இந்த மாற்றத்தால காலப் பலகணியும் அழிஞ்சிடுமா?’’

நந்தி கேட்ட கேள்வி புலிச்சாமியை சற்று சிந்திக்க வைத்தது. மற்ற கேள்விகளுக்கு வேகமாய் பதில் சொன்ன மாதிரி இதற்கொரு பதிலை வேகமாய் கூற முடியவில்லை. சற்று சிரித்தார்.

‘‘இந்த சிரிப்புக்கு என்ன அர்த்தம் சாமி?’’

‘‘எதுக்கு இந்தக் கேள்வியை இப்ப கேட்டே?’’

‘‘காலப் பலகணி ஒரு அற்புதம். திருக்குறள், ராமாயணம், மகாபாரதம், பைபிள், குரான் மாதிரி... காலம் கடந்து வாழும் ஒரு அதிசயம். அது அழிஞ்சிட்டா மற்ற அழியாத விஷயங்களும் அழிஞ்சிடுமோன்னு தோணிச்சு!’’

‘‘இதுக்கு நான் விளக்கமாகவே பதில் சொல்றேன்... காலப் பலகணிங்கறது பல சித்தர்களோட ஞான திருஷ்டி. அவங்க தூரப்பார்வை பார்த்து கணக்கு போட்டு எழுதி வெச்ச உழைப்பு அது. ஆயிரத்து எட்டு ஏடு கொண்ட இந்த பூமி உருண்டைய பத்தின கால ரகசியம் அது. இன்னிக்கு தங்கம், வெள்ளியை திருடர்களுக்கு பயந்து லாக்கர்ல வைக்கற மாதிரி அது இங்க இருக்கு. லாக்கர்னா சாதாரண பூட்டு சாவியைக் கொண்டிருக்காது; திருடர்களால நெருங்கவும் முடியாது. மீறி நெருங்க முற்பட்டா அங்க பண்ணியிருக்கற ஏற்பாட்டுப்படி எச்சரிக்கை மணி ஒலிக்கும். உடனே காவக்காரங்க ஓடிவந்து, திருடங்களை பிடிச்சிடுவாங்க. அதே மாதிரி சித்தர் பெருமக்களும் இந்த மலையையே காலப் பலகணி லாக்கர் ஆக்கி, இதுக்கு விசேஷமான பூட்டும் போட்டிருக்காங்க. இதை உரியவங்க வந்துதான் திறக்க முடியும். மற்றவங்க வந்தா அழிஞ்சு போற மாதிரி ஒரு ஏற்பாட்டை செய்திருக்காங்க. அந்த விதத்துல இப்ப ஒரு கூட்டம் காலப் பலகணி நோக்கி வந்துக்கிட்டு இருக்கு. அதுல அழிய வேண்டியவங்க அழிஞ்சு போக, உரியவங்க கைல இது போய் சேர்ந்துடும். இப்படித்தான் நீ குறிப்பிட்ட திருக்குறள், ராமாயணம், மகாபாரதம், பைபிள், குரான் எல்லாமே காலம் கடந்து கைமாறிக் கிட்டிருக்கு. அணுகுண்டால உலகமே அழிஞ்சு போனாலும், ஒருத்தன் அதுல தப்பிச்சு இதை எல்லாம் காப்பாத்தி அடுத்த சந்ததிக்குக் கொண்டு போயிடுவான்!’’

‘‘உங்க பதில் கொஞ்சம் ஆறுதலா இருக்கு சாமி. காலப் பலகணி வருங்காலத்துல எங்க போகும், எப்படி காப்பாத்தப்படும்னு சொல்ல முடியுமாசாமி?’’

‘‘தெரிஞ்சு என்ன பண்ணப் போறே? இதனால உனக்கு ஒரு பயனும் கிடையாது. விடை தெரிஞ்ச எனக்கும் ஒரு பயனும்

கிடையாது!''

''மனசுல இருக்கற குழப்பம் நீங்கறதும், ஒரு சந்தோஷம் ஏற்படறதும் பயனில்லையா சாமி?''

''அற்ப சந்தோஷத்துக்கு ஆசைப்படாதே...''

''இதுவா அற்ப சந்தோஷம்?''

''முடியப் போற கட்டத்துல இருக்கோம் நாம். புது உலகத்துக்கு அடுத்து போகப் போறோம். இந்த அற்ப சந்தோஷம் சார்ந்த விஷயங்களுக்கு நேரத்தை செலவழிக்கறத விட்டுட்டு, இறை சிந்தனைக்கு இடம் கொடு. தியானத்துல அமரு. 'நான்... நான்...'னு இந்த தேகத்தைக் குறிப்பிடற சிந்தனையை அழி. மாயை நிறைந்த விளையாட்டு மைதானம்தான் இந்த பூமி. இந்த மைதானம் ஒரே சமயத்துல ஒருத்தருக்கு வெற்றியையும் இன்னொருத்தருக்கு தோல்வியையும் தரும். சில சமயம் இரண்டு பேருக்கு எதுவும் தராம, டிரா பண்ணி கண்ணாமூச்சியும் காட்டும். இங்க விளையாடறவங்களுக்குத்தான் வெற்றி, தோல்வி. வேடிக்கை பாக்கறவங்களுக்கு இந்த இரண்டும் ஒரு பாவனை. வேடிக்கை பார்க்க ஆள் இல்லேன்னா விளையாட்டும் நடக்காதே? அதனால்தான் விளையாடறவங்க, வேடிக்கை பாக்கறவங்கன்னு இரண்டுபிரிவு.

விதிகளுக்கு உட்பட்டு இந்த விளையாட்டு நடந்தாதானே பாக்க நல்லா இருக்கும். அப்ப அந்த விதியை அமல்படுத்த ஒருத்தர் தேவையில்லையா? அவர்தான் நடுவர். அவர் விதிப்படி நடக்கச் செய்வார். விதி மீறினா குற்றம். விதிப்படி நடந்தாதான் வெற்றி, இல்ல தோல்வி. இந்த வெற்றி, தோல்விகூட யாருக்கும் நிரந்தரமில்லை.

ஒருமுறை ஜெயிக்கறவன் மறுமுறை தோப்பதும், தோத்தவன் அடுத்த முறை ஜெயிக்கறதும் வாடிக்கை. ஒருத்தரே ஜெயிச்சாலும் சுவாரஸ்யம் ஒரு கட்டத்துல போயிடும். அதனாலதான் வெற்றி, தோல்வி மாறி மாறியே வரும். இதுல உண்மையில் நல்லது தோல்விதான். தோல்வியால வரும் வலிதான் வலிமையா மாறுது. வெற்றி மமதையாதான் மாறும். இதெல்லாத்தையும் ஒன்றுபடுத்தி ‘எல்லாம் மாயை’ன்னு எளிமையா சொல்றோம்.

ஆனாலும் இதெல்லாமேகூட மொழியா மட்டுமில்லாம எண்ணாகவும் இருக்கு. இதுல மொழி சந்தோஷம், துக்கம் இரண்டையும் தரும். எண் இருக்கே, இது மட்டும்தான் நியாயம் தரும். மொழி பல மொழியா மாறும். எண் அப்படி மாறாது. உலகம் முழுக்க ஆயிரக்கணக்கில மொழிகள் இருக்கு. ஆனா எங்கேயும் ஒண்ணு, ரெண்டு, மூணு பொதுவாதான் இருக்கு.

ஒன்று மாறிக்கிட்டே இருக்கறது; இன்னொண்ணு மாறவே மாறாதது. மாறாததுதான் பெரியது, வலிமையானது... அந்த வலிமை மிக்கதைப் பயன்படுத்தி உருவாக்கினதுதான் காலப் பலகணி. இப்ப வரப்போற மழையும் காற்றும் இந்த மலையையே கூட மாற்றிடும். ஆனா மாறாத எண்களால் கணக்காக்கப்பட்ட காலப் பலகணி, தன்னை இதுல இருந்துதானே பாதுகாத்துக்கும். அது நம்மைவிட வலியது. சொல்லப்போனா அதை என்னைப் போன்ற ஒரு சித்தர் கூட்டம்தான் உருவாக்கியது.

உனக்கு நான் இப்ப ஒண்ணு சொல்றேன்... மனிதன் அழிந்து போவான். புண்ணியன், பேயன்னு மாறியும் போவான். சித்தன் அழிவில்லாதவன். ஆகையால சித்தன்னாலே கணக்கன்னுதான் அர்த்தம். கணக்கு எப்பவும் கச்சிதமா வேலையை செய்யும். இவ்வளவு தூரம் நான் உனக்கு சொல்லக் காரணம், நீ காலப் பலகணி

பற்றி திரும்ப நினைச்சு கவலைப்பட்டு, அதன் காரணமா தியானத்தை விட்டுடக்கூடாதுன்னு தான். நான் எவ்வளவுதான் சொன்னாலும் உனக்குன்னு ஒரு கணக்கு இருக்கு. அதை என்னாலயும் ஒண்ணும் பண்ண முடியாது. அது நல்ல கணக்கா இருக்கறதாலதான் நான் உன்கூட பேசி விளக்கம் கொடுத்து உன் மனதை தெளிவுபடுத்திக்கிட்டிருக்கேன்.

போ... போய் ஒட்டிக்கிட்டிருக்கற கொஞ்ச நஞ்ச கர்மப் பதிவுகளையும் இறை நினைப்புங்கற சோப்பால சுத்தம் செய். இனி பேச்சு பெருசு கிடையாது. மௌனம்தான் பெருசு!''- புலிச்சாமி சித்தர் சொன்ன அதே வேகத்தில் திரும்பினார். நந்தி அடிகளிடமும் ஒரு அசாத்தியதெளிவு!

* * *

மதுரை!

காலேஜ் ஹவுசில் டிபன் சாப்பிட்டு முடித்த நிலையில் வர்ஷன், ப்ரியா, வள்ளுவர் என்று மூவரும் கொண்ட கார் ராஜபாளையம் உள்ள திசை நோக்கி ஓடத் தொடங்கியது. அதே நேரம் மதுரையின் எல்லையிலுள்ள டோல்கேட்டில் கப்பம் கட்டிக் கொண்டிருந்தான் சதுர்வேதியின் டிரைவர்.

அவன் முகத்தில் கலக்கம்! தொடர்ந்து ஓட்டிக்கொண்டிருக்கிறான்.

எவ்வளவு பணம் கேட்டாலும் விபா தந்து விடுவதால், 'இந்த பார்ட்டியை விட்டுடக் கூடாது' என்கிற ஆசை அவனிடம். அவன் ஆசைக்கு ஈடு கொடுக்க உடம்பால் முடியவில்லை. எனவே சாலையோர ஹோட்டல் ஒன்றில் காரை நிறுத்திவிட்டு, முகம் கழுவச்

சென்றான்.

அப்போது கண் விழித்த சதுர்வேதியும் கதவுக் கண்ணாடி வழி பார்த்தான். அவனுக்குள் அப்போது புதிதாக ஒரு எண்ணம். திரும்பி விபாவையும் பார்த்தான். மார்பகங்கள் வழிந்தவளாய் கோணலாகக் கிடந்தாள்.

விசுவாமித்திரனையே மண்ணைக் கவ்வச் செய்த காமம், சாதாரண தந்திரக்கார சதுர்வேதியை மட்டும் விட்டு விடுமா? டிரைவர் இல்லாத தருணத்தைப் பயன்படுத்தி அவள் மேல் விழுந்து ஆக்கிரமிக்க ஆரம்பித்தான். அவள் கண் விழித்தவளாய், ‘‘ஜி! என்ன இது காலைலயே?’’ என்று முனங்கினாள்.‘‘தாகம் எடுக்கும்போதெல்லாம் தண்ணி குடிக்கறதில்லையா?’’ என்றான் சதுர்வேதி.

‘‘ப்ளீஸ்’’ என்று விலக முற்பட்டவள், ‘‘மதுரை வந்துட்டோமா?’’ என்றாள்.

‘‘வந்துட்ட மாதிரிதான் தெரியுது. ஹோட்டல் பெயர்ப் பலகைல பார் ‘டெம்பிள் சிட்டி’ங்கற வார்த்தையை!’’

‘‘நீங்க தூங்கவும் நானும் நல்லா தூங்கிட்டேன்!’’

‘‘இப்ப உடம்பு கொஞ்சம் ஃப்ரெஷ்ஷா இருக்கு. பாவம் டிரைவர், அவனை இங்கேயே கழட்டி விட்டுடு. இனி நீதான் கார் டிரைவர்!’’

‘‘புரியுது... ஒரு பெரிய பொக்கிஷத்தை நெருங்கற நேரம் வந்தாச்சு. மூணாவதா ஒருத்தர் கூட இருக்கறதும் நமக்கு

நல்லதில்லதான்!’’

அப்போது கச்சிதமாக முகம் கழுவிக்கொண்டு டிரைவரும் வந்து நின்றான். அவன் வசம் 5000 ரூபாயை நீட்டிய விபா, ‘‘நீ சென்னை திரும்பிடு. இனி நான் பாத்துக்கறேன்’’ என்றாள்.

அவனுக்கு சற்று திகைப்பு. ‘‘மேடம்! கடைசி வரை வர்றேன் மேடம். முதலாளி காரைக் கொடுத்து கடைசி வரை உதவியா இருக்கச் சொன்னார் மேடம்.’’

‘‘தெரியும். ஆனா சாமி ஒரு நல்ல காரியத்துக்கு மூணு பேரா போகக் கூடாதுன்னு நினைக்கறார். உன் முதலாளிகிட்ட நான் பேசிக்கறேன். சாமியோட சென்னை சிஷ்யரான அவருக்கு, சாமி எது சொன்னாலும் அதுல ஒரு அர்த்தமிருக்கறது தெரியும், நீ பயப்படாதே!’’

அவன் அதற்குமேல் பேசாமல் நகர, விபா காரிலிருந்து இறங்கி சோம்பல் முறித்தாள். காபி குடிக்கவும் ஆசைப்பட்டாள். ஆனால் சதுர்வேதி தன்னை யாரும் பார்ப்பதை விரும்பாதவன் போல் காருக்குள்ளேயே இருந்தான். அவனுக்கும் சேர்த்து அவளே முகம் கழுவ மினரல் வாட்டர் முதல் சகலமும் வாங்க ஹோட்டல் நோக்கி நடந்தாள்.

‘‘டிபன் நல்லா இருந்தா பார்சல் வாங்கிடு’’ என்றான் சதுர்வேதி.

விபா ஹோட்டலுக்குள் நுழைந்த விதம், சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களை ஒரு உலுக்கு உலுக்கியது. அரைத் தூக்கத்தில் அங்க நெளிவுகளை வெளிப்படுத்தியபடி இருந்த அவளை பலரும் வெறிக்க, அவள் மேலாடைக்குள் பதுங்கிக் கிடந்த கைபேசியிடம்

கரகரப்பு. வேகமாக எடுத்து இயர் எய்ட் ப்ளக்கை காதில் செருகியவளாக காலியான மேஜை ஒன்றன் முன் அமர்ந்தாள்.கணபதி சுப்ரமண்யன் பேசுவது காதில் விழத் தொடங்கியது.

‘‘ப்ரியா குட்டி! இப்ப எங்க இருக்கீங்க?’’

‘‘மதுரையை விட்டுக் கிளம்பிட்டோம் தாத்தா...’’

‘‘எல்லாம் நல்லா போய்ட்டு இருக்கா?’’

‘‘பிரமாதமாக போய்க்கிட்டிருக்கு. சதுரகிரி அடிவாரம் போய் அங்க வழிகாட்டி ஓலையை எடுத்து, அடுத்த திசையையும் இடத்தையும் துல்லியமா கண்டுபிடிச்சிடுவோம்...’’

‘‘அப்ப இன்னிக்கு காலப் பலகணியை பாத்துடுவீங்கன்னு சொல்!’’

‘‘உன் வாக்கு பலிக்கட்டும். ஆனா வழியெல்லாம் மழை. வானமும் மூடிக்கிட்டிருக்கு. மதுரை லோக்கல் எஃப்.எம்ல மூச்சு விடாம பேசற ஒரு பொண்ணு, ஒரு பெரிய புயல் மழை இருக்குன்னு சொல்லிக்கிட்டே இருக்கா...’’

‘‘புயலும் மழையும் நம்ம கையிலயா இருக்கு? நீங்க ஜாக்கிரதையா போங்க. எங்க எவ்வளவு மழை பெய்தாலும் சதுரகிரில பாதிப்பிருக்காது. அது தெய்வீகமான இடம். அங்கதான் என் ஃப்ரெண்ட் ஜோசப் சந்திரனும் இருக்கார். அவரைத் தேடிப் போய் நான் பட்ட பாடும் கொஞ்ச நஞ்சமில்ல. அங்க அவரை நீங்க பாக்க முடிஞ்சா அது ரொம்பவே உங்களுக்கும் உதவியா இருக்கும்...’’

‘‘டோன்ட் ஒர்ரி தாத்தா... கொஞ்ச நேரத்துல ரஞ்சித் கிட்ட இருந்து எங்களுக்கு அந்த டெல்லி சாமியார் பத்தின தகவல்களும் தொடர்புகளும் தெரிஞ்சிடும். சுகுமார்ங்கற உன்னைக் காப்பாத்தின அந்த நபர்கிட்ட இருந்து கிடைச்ச செல்போனை வச்சே ரஞ்சித் எல்லாத்தையும் கண்டுபிடிச்சிடு வான். ஆகையால பலகணி கிடைச்ச பிறகு நாம எச்சரிக்கையாவும் இருக்க முடியும்.’’

‘‘வெரிகுட்... நீ சொன்ன மாதிரி அந்தப் பலகணிதான் உங்களையும் வழி நடத்திக்கிட்டிருக்கு. தைரியமா செயல்படுங்க. நல்லதே நடக்கட்டும். வள்ளுவர் எதைச் சொன்னாலும் கேட்டு அதன்படியே நடங்க. என்ன வள்ளுவரே, நான் சொல்றது சரிதானே?’’

அதைக் கேட்ட வள்ளுவரும் பேசினார்.

‘‘ரொம்ப சரிங்க... எனக்கென்னவோ எங்களை தந்திரமா இப்பகூட யாரோ ஃபாலோ பண்ணிக்கிட்டு வர்ற மாதிரி தோணுது. என் உணர்வு சரியான்னு ஒரு பேப்பர்ல எழுதி பெண்டுலத்தை வெச்சி நான் தங்கி இருந்த அறைக்குள்ள சோதனை செய்து பார்த்தேன். பெண்டுலம் ‘சரி’ன்னு நான் எழுதின பேப்பர் மேல ஆடி நின்னது. தப்புங்கற பேப்பர் மேல ஆடவேயில்லை!’’

‘‘அப்படியா?’’ கணபதி சுப்ரமண்யன் அதிர்ந்தார்.

அந்த ஹோட்டலுக்குள் ‘‘என்ன சாப்பிடறீங்க?’’ என்று கேட்க வந்த சர்வர் முன்னால் விபாவும் அதிர்ந்தாள்!

54

“வள்ளிமுத்துவின் சிரிப்பு எனக்கு கூச்சத்தோடு கோபத்தையும் உண்டாக்கியது. அதைக் கண்டுகொள்ளாமல் வள்ளிமுத்து எனக்கு பதில் கூறினார்.‘ஐயா! நீங்க கேட்ட இதே கேள்விய நானும் சித்தர்சாமிகிட்ட கேட்கணும்னுதாங்க இருக்கேன். ஆனா இந்தக் கேள்வியை சித்தர் சாமிங்ககிட்ட கேட்டு, அதுக்கு அவங்க பதில் சொன்னதா ஒருத்தர் சொன்னாருங்க. அதை நான் சொன்னா உங்களால புரிஞ்சுக்க முடியுமான்னு தெரியல!’

‘சரி, எதுக்கு கேலியா சிரிச்சீங்க?’

‘சிரிக்காம என்னங்க பண்றது... சிகரெட் பிடிச்சா உடம்புக்குக் கேடுனு நல்லா தெரியும். ஆனா புகைக்கு அடிமையானவங்க, பிடிக்காம இருக்காங்களா? சாராயம் குடிச்சாலும் ஆபத்துதான். யாரு இப்ப குடிக்காம இருக்கா? திருடறது, பொய் சொல்றதுன்னு எல்லாமே பாவம். நாட்டுல திருட்டும் பாவமும் நடக்காம இருக்குதா?’

‘என் கேள்விக்கும் உங்க கேள்விகளுக்கும் என்ன சம்பந்தம்?’

‘சரிதான்... எல்லாம் தப்புன்னு பளிச்னு தெரிஞ்சிருந்தும் தப்பு நடக்கற ஊர்தானே இது?’

‘அதனால?’

‘சித்தர் சாமிங்க இதனாலதான் மனுஷங்களோட இல்லாம இந்த மலைக்கு வந்துட்டாங்க!’

‘சரி... அங்கயே இருந்து திருத்தக் கூடாதா?’

‘இந்த மக்கள்கிட்டதான் ரெண்டாயிரம் வருஷமா திருக்குறள், ஆத்திச்சூடி, விதுர நீதினு நல்லதைச் சொல்ற புத்தகமெல்லாம் நிறைய இருக்கே... திருந்திட்டாங்களா?’

‘அப்ப வெறுத்துப் போய் காட்டுப் பக்கம் வந்துட்டாங்களா?’

‘விருப்பு, வெறுப்புல்லாம் அவங்களுக்கு இல்லீங்க... அவங்கவங்க சரியாயிட்டா ஊரும் உலகமும் தானா சரியாயிடும்ங்கறது அவங்க நம்பிக்கை. அதனால நாம நம்ம வழிய பாப்போம்னு வந்துட்டாங்க!’

‘சரி... பெரிய அழிவுகள்ல இருந்து அப்பாவிகளை மட்டுமாவது காப்பாத்தலாமே. அப்ப ஊருக்குள்ள வரலாமே?’

‘அதுக்குத்தான் ஒரு ஏற்பாடு செய்திருக்காங்க!’

‘அது என்ன ஏற்பாடு?’

‘காலாலங்கிரியே அதுக்காகத்தான் இருக்காம்!’

‘புரியும்படி சொல்லுங்க!’

‘காலாலங்கிரிங்கறது காலக்கணக்கு சொல்லித் தர்ற இடம். அங்க மொழிப்பாடமே கிடையாது. எல்லாமே கணக்குப்

பாடம்தான்!’

‘அந்தக் கணக்குப் பாடம் எதுக்கு?’

‘அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க. நானும் அங்க போய் ‘என் மக கல்யாணம் எப்ப நடக்கும்?’, ‘என் மகனுக்கு வேலை எப்ப கிடைக்கும்?’, ‘நான் எப்ப சாவேன்’னு இப்படி நிறைய கேள்விகளுக்கு பதில் தெரிஞ்சுக்க விரும்பறேங்க. ஆனா, என்னால எல்லையையே தாண்ட முடியல!’

‘எல்லைன்னு நீங்க எதைச் சொல்றீங்க?’

‘நான் ஒரு பாறை சொன்னேனே, அதைத்தாங்க! அங்க நீங்க ‘சிவாயநம’னு சொல்லிக்கிட்டே நிக்கணும். சித்தர் சாமிங்க வந்து கூட்டிப் போனாதான் உள்ள போக முடியும்!’

‘பாறையைத் தாண்டி நாமளா போனா?’

‘சிலர் போயிருக்காங்க. ஆனா அவங்க யாரும் அப்புறமா உயிரோட இல்லீங்க...’

‘யாராவது கொன்னுட்டாங்களா?’

‘சேச்சே... ‘சித்தன் தயவின்றி எத்தர் எவர் வந்தாலும் கத்தரிப்பாகும் அவர் வாழ்வு’னு அந்தப் பாறை மேல கல்வெட்டுலயே பொறிச்சு வச்சிருக்குங்க...’

‘எல்லாமே விநோதமா இருக்குதே… போகட்டும்! உள்ள போய்ட்டு வந்தவங்களால எதாவது நல்லது நடந்திருக்குதா?’

‘நடக்காம..? ஆனா ஒட்டைவாய் ஆசாமிங்ககூட உள்ள போய்ட்டு வந்ததும் மாறிடறாங்க. எப்பவும் சிரிச்சுக்கிட்டே இருக்காங்க. கொஞ்சம் எந்திரன் மாதிரியும் நடந்துக்கறாங்க!’

‘எந்திரன் மாதிரின்னா?’

‘மெஷின் மாதிரிதான். துளியும் சிரிக்காம ‘உம்’முன்னே இருப்பாங்க. அதுல ஒருத்தர் சுனாமி வரப் போறதை முன்கூட்டியே சொன்னாரு. ஆனா யாரும் நம்பலை. நடந்த பிறகு ஒத்துக்கறாங்க…’

’வள்ளிமுத்து எல்லா கேள்விகளுக்குமே கச்சிதமாக பதில் கூறினார். எனக்குள்ளேயும் காலாலங்கிரிக்குள் நுழையும் வேட்கை, ஜோசப் சந்திரனைத் தேடுவதை மீறி தலைதூக்கியது!’’ – கணபதி சுப்ரமண்யனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து…

விபா எதற்காக அதிர்ந்தாள் என்று சர்வருக்குத் தெரியவில்லை. ஆனால், அவன் அவளைப் பார்த்து அதிர்ந்தான். அவள் ஒட்டுக் கேட்டபடி இருக்க, போனில் கணபதி சுப்ரமண்யன் - வள்ளுவர் பேச்சு தொடர்ந்து கொண்டிருந்தது.

‘‘வள்ளுவரே… உங்க பிரடிக்‌ஷன் இதுவரை தப்பானதே இல்லைன்னா இப்பவும் நீங்க எச்சரிக்கையா இருக்கறதுதான் சரி!’’

‘‘எப்பவும் எச்சரிக்கையோடதானே இருக்கோம். எச்சரிக்கையா இருக்கறதோ, இல்லாததோ இப்ப பிரச்னை இல்லை. குறிப்பா, எங்களுக்கு இல்லவே இல்லை. பாவம், பின்தொடர்ந்து வந்துக்கிட்டிருக்கறவங்க!’’

‘‘அவங்களுக்காக நீங்க ஏன் கவலைப்படறீங்க?’’

‘‘சாகப் போறாங்களே... எப்படிங்க கவலைப்படாம இருக்க முடியும்?’’

‘‘ஓ... உங்களுக்கு அந்தக் கவலையா? நான் கவலைப்படத் தயாரில்லை வள்ளுவரே! சுயநலமுள்ள அவங்க இருக்கறத விட சாகறதே நல்லது...’’

‘‘நீங்க சொன்னாலும் சொல்லாட்டாலும் அப்படித்தான் நடக்கப் போகுது. இருந்தாலும் என் மனசுதான் கேட்க மாட்டேங்குது!’’ வள்ளுவரும் கணபதி சுப்ரமண்யனும் பேசுவது விபாவை அங்கேயே சாகச் செய்துவிடும் என்றுகூடத் தோன்றியது.

‘‘மேடம்! என்ன சாப்பிடறீங்க?’’ - திரும்ப இடையிட்டான் சர்வர். இம்முறை கலைந்தவள், ‘‘ஒரு நெய் ரோஸ்ட்!’’ என்று மிக வேகமாக அவனைக் கத்தரித்தாள்.

திரும்பப் பேச்சைத் தொடர்ந்தார் கணபதி சுப்ரமண்யன். இம்முறை அவர் தீர்க்கமாகப் பேசுவது போல் தோன்றியது.

‘‘வள்ளுவரே! அந்த சதுரகிரில காலாலங்கிரினு ஒரு இடம் இருக்கு. நான் அங்க போக முயற்சி செய்தேன். ஆனா முடியல. என்

நண்பர் ஜோசப் சந்திரன்ங்கறவர் அங்கதான் இருக்காரு.

அந்தக் காலாலங்கிரிலதான் காலப் பலகணி இருக்குன்னு நீங்க சொல்லும்போது எனக்கு குபீர்னு வேர்த்துடுச்சு. நான் அப்ப ரொம்ப நாத்திக எண்ணங்களோடவும் அவநம்பிக்கையோடவும் இருந்தேன். அது கூட நான் அங்கே போக முடியாம போனதுக்குக் காரணமா இருக்கலாம். இப்பவும் என்னால உங்க கூட வரமுடியாததை நினைச்சா ரொம்ப கஷ்டமா இருக்கு. எனக்கு இல்லாத விதி என் பேத்திக்கு இருந்தா போதும். அது அவளோட பாக்கியம்!''

''கவலைப்படாதீங்க... நல்லதே நடக்கும். அதே சமயம் இயற்கை எப்படிப்பட்ட சக்தி படைச்சதுன்னு நிரூபிக்கப் போற நாட்களாதான், இனி வரும் நாட்கள் இருக்கும்!''

''இங்கயும் வானம் மூட்டமாதான் இருக்கு. சென்னையைக் கடல் விழுங்கினா ஆச்சரியப்பட மாட்டேன். தாம்பரம் வரை மூழ்கிப் போய் இப்ப திருவல்லிக்கேணி இருக்கற மாதிரி பெருங்களத்தூர் சென்னையின் கடலோரப் பகுதியா மாறலாம்னு கூட தோணுது!''

''ரொம்பவே பயப்படறீங்களே... அப்படியெல்லாம் ஆகாது. அதுக்குத்தான் நாங்க போறோம். ப்ரியா கண்ணு சொன்ன மாதிரி நாங்க அதைத் தேடலை. காலப் பலகணிதான் எங்களைத் தேடுது. தைரியமா இருங்க!''

பேச்சை முடித்தார் வள்ளுவர். விபாவும் காதிலிருந்து இயர் ப்ளக்கை வெளியில் எடுத்தாள். 'அவர்கள் பேசிக் கொண்டபடி பின்தொடரும் நாங்கள் இறந்து விடுவோமோ! எவ்வளவோ ரகசியமாகத் தொடர்ந்தும் அந்த வள்ளுவர் யாரோ தொடர்கிறார்கள் என்று கச்சிதமாகக் கூறிவிட்டாரே..?'

விபா தனக்குள் கேள்விகளில் மூழ்கினாள். நெய் ரோஸ்ட் வந்தது. பிய்த்து வாயில் போட்டாள். ருசிக்க முடியவில்லை. சதுரகிரி, காலாலங்கிரி என்று மலைப் பெயர்கள் மனதுக்குள் பளிச்சிட்டன.

‘அங்கே போய்ச் சேர்ந்ததும் எப்படியாவது சதுர்வேதியை சிக்க வைத்து விட்டு நாம் தப்பி விட வேண்டும். இங்கே இப்போதே தப்பிக்க நினைத்தாலும் முடியாது. இவன் விட மாட்டான். சரியான தருணத்துக்குக் காத்திருக்க வேண்டும்!’ அவளுக்குள் சரமாரியாக எண்ண ஓட்டங்கள். பசி மறந்தது. நெய் ரோஸ்ட்டில் பாதியை வைத்துவிட்டு அப்படியே எழுந்தாள்.

சதுர்வேதியைச் சந்தித்து காதில் விழுந்ததைக் கூறி அவன் என்ன செய்கிறான் என்றும் பார்க்கத் தோன்றியது! ஒரு ஐந்நூறு ரூபாயை தண்ணீர் டம்ளர் கீழ் பில் பணமாக வைத்து விட்டு காரை நோக்கி நடக்கத் தொடங்கினாள்!

* * *

மதுரை - ராஜபாளையம் நான்கு வழிச்சாலை! தார்ச்சாலையில் நிறையவே குண்டு குழிகள். மையத்தில் சரியாக வளர்ந்திராத அரளிச் செடிகள்.

ஒருவேளை ரோடு போட முற்பட்டால் கான்ட்ராக்டர் காட்டில் பண மழைதான் என்று அந்தப் பள்ளங்களைப் பார்த்தபோது வர்ஷன் நினைத்தான். ப்ரியா சாலையைப் பார்த்தபடியே…

‘‘வர்ஷ்… உன் ஃப்ரெண்ட்கிட்ட இருந்து போன் வரவே இல்லையே…’’ எனும்போதே சென்னையில் இருந்து ரஞ்சித் போன் செய்தான்.

ப்ரியா உற்சாகமானாள். காருக்குள் அவன் குரல் ஸ்பீக்கரில் சத்தமாகவே கேட்டது.

‘‘ஹாய் வர்ஷன்...’’

‘‘சொல்லு ரஞ்சித்... எல்லாத்தையும் கண்டுபிடிச்சிட்டியா?’’

‘‘நான் இப்ப சைபர் க்ரைம் டிபார்ட்மென்ட் கம்ப்யூட்டர் ஆபரேட்டரோட சாட்டிலைட் டிவைசர்கிட்டதான் இருக்கேன்.அந்த சுகுமார் அதிகம் டெல்லிக்குதான் பேசியிருக்கான். அவன் பேசினது சதுர்வேதிங்கற சாமியாரோட பி.ஏ.கிட்ட. அந்த பி.ஏ. இந்த சுகுமாருக்கு நிறைய பணத்தை இம்மீடியட்டா நெட்ல ட்ரான்ஸ்ஃபர்லாம் பண்ணியிருக்கான். பல லட்சங்கள், ஏன் கோடிகள் கூட இருக்கலாம். கை மாறியிருக்கு! ஏதோ ஒரு பெரிய அசைன்மென்ட் நடுவுல இருக்கு. அனேகமா அரசியல் தலைவர்களைக் கொலை செய்வது, கலகத்தை உருவாக்குறதுனு ஏதாவது இருக்கணும்.

அந்த சதுர்வேதி எது சொன்னாலும் சொன்னபடி நடந்துடுமாம். அவனுக்கு அரபு நாடுகள்ல பல ஷேக்குகள் கூட கஸ்டமர்ஸ். அவனோட நெட்வொர்க் உலக அளவிலானது. ‘ஈ.எம்.டி. கேந்திரா’னு ஒரு அமைப்புக்கு அவன்தான் தலைவர். ஈ.எம்.டி.க்கு எனக்கு சரியா விளக்கம் தெரியல. அவனை சிலர் ரொம்பவே சந்தேகமும் படறாங்க. குறிப்பா, பத்திரிகைக்காரங்க சிலருக்கு அவன் மேல சந்தேகம் இருக்கு. தன்னைப் பத்தி புகழ்ந்து எழுதச் சொல்லி நிறைய பேருக்குப் பணம் கொடுப்பானாம். அதனாலேயே பாதி பத்திரிகைக்காரங்களுக்கு அவன் ஒரு சராசரி மனுஷன்ங்கற

சந்தேகம்!'' - ரஞ்சித் விவரித்தபடியே செல்ல, கத்தரித்தாள் ப்ரியா.

''ரஞ்சித்... இந்த சதுர்வேதி கூட அவன் பேசின விபரம் கிடைக்குமா..?''

''அது கிடைக்காது. ஆனா இனி சதுர்வேதி யார்கூட பேசினாலும் டேப் பண்ணச் சொன்னா பண்ணிடுவாங்க!''

''ரைட்... வேற ஏதாவது முக்கிய தகவல் உண்டா?''

''நிச்சயமா... அந்த சதுர்வேதியோட நம்பரை வச்சு அவன் எங்க இருக்கான்னு பாத்தோம். அவனும் இப்ப மதுரைகிட்டதான் இருக்கான். உங்க நம்பருக்கும் அவன் நம்பருக்கும் நடுவுல ஒரு 30 கி.மீ கூட இருக்காது!''

ரஞ்சித் சொன்னது ப்ரியாவை அதிரச் செய்ய, உடனே வள்ளுவரைப் பார்த்தாள். அவர் சற்றுமுன் சொன்னதுதான் எவ்வளவு பெரிய உண்மை!

''ப்ரியா... ஜாக்கிரதை! அவன் ஏதோ ஒரு விதத்துல நீங்க போற இடத்தைத் தெரிஞ்சுகிட்டு உங்களை ஃபாலோ பண்ணிக்கிட்டு வர்றான். அவனப் பத்தின இன்னும் பல செய்திகளை நான் கலெக்ட் பண்ணிடுவேன்.

அவன் போட்டோவை நெட்ல போய் எடுத்து வாட்ஸ் அப்ல அனுப்பறேன். அவனைப் பாத்தா சுதாரிக்க உதவியா இருக்கும். அவன் யாரையாவது உத்துப் பார்த்தா, அவனால அப்படி பார்க்கப்பட்டவங்க அவன் சொல்றதை எல்லாம் கேப்பாங்களாம். பத்திரிகைக்காரங்க இதுபத்தி எழுதியிருக்காங்க. இது ஒருவித

மெஸ்மரிசம். நீங்க ஜாக்கிரதையா இருக்கணும்! நான் இன்னும் கொஞ்சம் தகவல்கள் சேரவும், திரும்பக் கூப்பிடறேன்!'' - ரஞ்சித் பேச்சை முடித்தான்.

ப்ரியா வள்ளுவரைப் பார்க்க, ''பயப்படாதேம்மா! அவன் அனுப்புன அம்புகள் எல்லாம் சாகவும், அவனே களத்துல இறங்கிட்டான். அவனுக்கும் அதே முடிவுதான் ஏற்படும். நாம நம்ம வேலையை சரியா செய்வோம். வர்ஷன், நீ கொஞ்சம் வேகமா காரை ஓட்டு!''-என்றார்..வள்ளுவர்.

* * *

பரபரப்பாக காருக்குத் திரும்பிய விபா, கணபதி சுப்ரமண்யன் பேத்தி ப்ரியாவோடு பேசியதை எல்லாம் சொல்லி முடித்திட, சதுர்வேதியிடம் விக்கிப்பு.

''ஜி! அந்த வள்ளுவரும் உங்களைப் போலவே ஒரு பிரடிக்டர் மாதிரிதான் தெரியுது!'' - என்றாள் அலட்டலே இல்லாமல்!

55

*''**கா**லாலங்கிரிக்குள் சென்று பார்த்துவிட நான் முடிவெடுத்து வள்ளிமுத்துவிடமே வழி கேட்டேன். அப்போது ஒருவன் தலையில் பானையுடன் எங்களைத் தாண்டினான். அவனை 'எலே ஏ' என்று வள்ளிமுத்து அழைத்து நிறுத்தினார். அவனும் நின்று திரும்பினான்.*

'பானைல என்ன தண்ணியா?'

'பதநீர் சாமி...'

'கொஞ்சம்தாயேன்...

''கையை நீட்டுங்க...'

அவன் மறுபேச்சில்லாமல் பதநீர்ப் பானையை சரித்து வள்ளிமுத்து குடிக்கச் செய்தான். எனக்கும் தாகமாய் இருந்ததால் நானும் ஆசைப்பட்டேன். தயக்கமின்றி எனக்கும் அதை குடிக்கத் தந்தான்.அப்படி ஒரு பானத்தை நான் என் வாழ்நாளில் பருகியதே இல்லை.

'வத்ராயிருப்பு தென்னப் பதனி இது... வத்ராயிருப்பு தமிழ்நாட்டு கேரளாவாச்சே. வற்றாத இருப்புதான் வத்திராயிருப்புனு வழக்குச் சொல்லாச்சு. அதுல ராஜ மரமா பாத்து ஏறி இறக்குன பதனி இது' என்று விளக்கம் கொடுத்தார் வள்ளிமுத்து.'தென்னையில் ராஜ மரம் என்று ஒரு ரகமா? கேள்விப்பட்டதே இல்லையே...' என்றேன்.'ராஜா மாதிரி உயரம், அழகு, பலம்னு எல்லாம் உள்ள மரத்தை 'ராஜ மரம்'னு அடையாளப்படுத்திச் சொல்வோம். இது வட்டார வழக்கு! தென்னைதான் சூரியனோட நெருக்கமான மரம்.

நம்ம தலை மேல விழற சூரியக் கதிருக்கும் தென்னை மேல விழற கதிருக்கும் வித்தியாசம் இருக்கு. இந்த மரம்தான் கல்லடிபடாது; பறவைகளும் பெருசா கூடு கட்டாது. மட்டையை ெவட்ட வெட்ட துளிர்க்கும். பூமித் தண்ணியை தன் நீண்ட உடம்பு வழியாக பம்ப் செட் ேமாட்டார் மாதிரி மேல தூக்கிட்டு வந்து சொம்புல அடைச்ச மாதிரி தேங்காய்ல தேக்கும். அதை இளநீர்னு சொல்வோம்.

இளநீர், தேங்காய்... இது மட்டுமேகூட போதும். ஒரு மனுஷன் ஆரோக்கியமா வாழ போதுமான உணவு இது. இந்தத் தேங்காய்க்கு மூணு கண்ணு. அதனால இது சிவனுக்குச் சமம்.

இதை உடைக்கும்பாது ஏற்படுற சப்தம், தப்பான அதிர்வுகளை சரியான அதிர்வா ஆக்கிடும். அதாவது நம்மைச் சுத்தி திருஷ்டிங்கற விஷயம் இருந்தா, அது தப்பான அதிர்வு. அதை நம்ம உடம்போட 'ஆரா'வுல பாக்க முடியும். அந்த திருஷ்டியை இது அதிருஷ்டியா – அதாவது நமக்குப் பயன்படற அதிர்ஷ்ட விஷயமா மாத்திடும்! ஏன்னா, வெளியுலகம் பார்த்திடாத – சூரியன் தீண்டாத – மேல இருந்து மழையா வராம, கீழ இருந்து மேல வந்த தண்ணி இளநீர் மட்டும்தான். இது உடையும்போது தெறிக்கறதுல ஏற்படற சப்தம் சுப சப்தமா மாறிடுது. அதனாலதான் நல்லதுக்கு சூறைக்கா உடைக்கற பழக்கம் உருவாக்கப்பட்டது. அதை முச்சந்தியில செய்யும்போது மூன்று வழில ஒரு வழியால நம்ம திருஷ்டி தெறிச்சு ஓடிடும். இப்படி தென்னையைத் தொட்டு மட்டுமே பேச நிறைய விஷயமிருக்கு. இதுல பதநீர்ங்கறது இளநீருக்கும், கள்ளுக்கும் இடைப்பட்டது. பதமான நீர்தான் பதநீர். இதுதான் காலாலங்கிரி சாமிங்க விரும்பிக் குடிக்கற நீர். சிறுநீரகப் பையை சுத்திகரிச்சு, கணையத்தை பலப்படுத்தி, உடம்புல வெப்பத்தை சமப்படுத்தறதுல இதுக்கு இணை இல்லை!'

– வள்ளிமுத்து தென்னை மரத்துக்குக் கொடுத்த வியாக்கியானம் என்னை வியக்க வைத்தது. அதில் மிக முக்கியம், பூமியில் இருந்து நாம் பெறும் நீர் இளநீர்... மற்ற நீரையெல்லாம் ஆகாயம் வழங்க, அதை ஆறு, குளம் மூலமே பெறுகிறோம். இங்கே பூமி, பாத்திரம் மட்டுமே எனும் விஷயம்தான்.அந்த 'ஃ' என்பவனிடமே வள்ளிமுத்து என்னை இணைத்து, 'இவர் காலாலங்கிரிய பாக்கணுமாம்... கூட்டிப் போ!' என்றிட, அந்த 'ஃ' என்னை ஒரு மாதிரி பார்த்தான்.

'என்னப்பா பாக்கறே?' என்றேன்.

'நான் எல்ல வரைதான் கூட்டிப் போவேன். உள்ள வர உங்களுக்கு விதி இருக்கணும்ங்க!' என்றான்.

'அது என்ன விதி?'

'சித்தர் சாமிகளே வந்து கூட்டிக்கிட்டு போனாதான் நீங்க உள்ள போக முடியும். அங்க இருக்கவும் முடியும்...'

'ஓ... ஒரு பாறை மேல நின்னு 'சிவாயநம'னு எத்தனையோ தடவை சொல்லணும்னு சொன்னாங்களே... அந்த மாதிரியா?'

'அதேதான்...'

'மீறி உள்ள வந்தா?'

'உங்க ஆயுசு முடியணும்னு இருந்தா வருவீங்க....அவ்வளவுதான் அதுக்கு அர்த்தம்!' 'இதெல்லாம் சும்மா பீலா... நான் நம்ப மாட்டேன்; பயப்படவும் மாட்டேன்...' என்று சொல்லிவிட்டு, அவனோடு காலாலங்கிரி மலையின் முகப்பு வரை சென்றேன். பிரார்த்திக்க வேண்டிய பாறையையும் நின்று பார்த்தேன். சிரிப்புதான் வந்தது.''- கணபதி சுப்ரமண்யனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

விபா சொன்னதைக் கேட்ட சதுர்வேதி முகத்தில் பலத்த சிந்தனை.

''என்ன ஜி... வள்ளுவரை உங்களோட ஒப்பிட்டுச் சொன்னது வருத்தம் தருதா?''

''கொஞ்சம் வருத்தம்தான்! ஆனா, இந்த வள்ளுவனாலதான் டெல்லில இருக்கற எனக்கு இந்த காலப் பலகணி பற்றியே தெரிய வந்தது!''

''அது எப்படி ஜி?''

‘‘ஜோதிடக்கலை உலகம் பூரா பரவி இருந்தாலும், இந்தியாதான் அதோட தாயகம். வராகமிகிரர், கமலமுனி, பாஸ்கர பட்டர்னு பலரால வளர்ந்ததுதான் ஜோதிடக்கலை. இதுல தமிழ்நாட்டுல உள்ள சித்த பரம்பரைதான் மோஸ்ட் சுப்பீரியர்ஸ். குறிப்பா போகர், புலிப்பாணி, இடைக்காடர்னு மூணு பேரும், கோள்களோட பேசற அளவு ஞானத்தோட இருந்தவங்க. இதுல இடைக்காடர் என்பவர் ஆடு, மாடு மேய்க்கற ஆள். ஆனா, கூர்மையான பார்வை உள்ள மனிதர். இரவுல ஆகாயத்துல தெரியற நட்சத்திரக் கூட்டத்தைப் பார்த்தே, பூமில நடக்கப் போறதைச் சொல்ற அளவுக்கு ஞானி...’’

‘‘இதெல்லாம் இப்பவும் சாத்தியம்தானே?’’

‘‘எல்லாமே சாத்தியம்தான்! ஆனா, அதுக்கு ஒரு வழிமுறை இருக்கு. குருநாதரால மட்டுமே அதை சொல்லித் தர முடியும்!’’

‘‘விஞ்ஞானக் கண்டுபிடிப்பெல்லாம் தனிமனிதர்களோட விடா முயற்சியால வந்ததுதானே?’’

‘‘விஞ்ஞானத்தை இதோட முடிச்சு போடாதே... இது விஞ்ஞானத்துக்கு தாத்தா...’’

‘‘அப்ப அவங்கல்லாம் எப்படிக் கத்துக்கிட்டாங்க... அவங்களுக்கு யார் குரு?’’

‘‘குருங்கறவர் ஒரு மனிதனாதான் இருக்கணும்னு இல்லை. ஒரு சிலந்தி வலை பின்னுது... நம்மால முடியுமா?’’

‘‘முடியாது...’’

‘‘காக்கா, குருவியெல்லாம் கூடு கட்டுது... நம்மால முடியுமா?’’

‘‘நமக்குத்தான் அவசியமேயில்லையே ஜி...’’

‘‘கேட்டதுக்கு மட்டும் பதில்!’’

‘‘முடியாதுதான்...’’

‘‘அப்ப... நம்மால முடியாததை முடிக்கற ஒரு சிலந்தியும், குருவியும் கூட நமக்கு குருதான்!’’

‘‘சரி... அந்த வள்ளுவர்கிட்ட வாங்க!’’

‘‘அவன்கிட்ட பரம்பரை பரம்பரையா வந்துக்கிட்டிருக்கற ஜோதிடக்கலை இருக்கு. கூடுதலா வாஸ்து, நிமித்தம்னும் அவனுக்கு அனுபவம் அதிகம்!’’

‘‘சரி... அதனால?’’

‘‘ஒருத்தரோட சாகற நொடியை சரியாச் சொல்ல முடிஞ்சவன் அவன்...’’

‘‘அதனால?’’

‘‘அப்படிச் சொல்லி அதன்படியே செத்தும் போன ஒருத்தரோட மனைவி மூலமா அவனப் பத்தி தெரிய வந்தது. டெல்லில இருக்கற அரசியல்வாதிகளைப் பத்தி நான் உனக்கு சொல்ல வேண்டியதேயில்லை. நூத்துல தொண்ணூறு பேருக்கு தன் வெற்றியும், அதனால வந்த பதவியும் தொடருமான்னு கேள்வி. ஆளுங்கட்சிக்கு தோக்கக் கூடாதுங்கற கவலை... எதிர்க்கட்சிக்கோ ஜெயிச்சே தீரணும்ங்கற வெறி... இதுக்கு நடுவுல வியாதியால

பிரச்னை, பிள்ளைகளால பிரச்னை, பக்கத்து நாடுகளால பிரச்னைனு நிறைய! இதுதான் எல்லாரையும் என்னை மாதிரி காலஞானிகள்கிட்ட அனுப்பி வைக்குது. அந்த சமயத்துல எனக்குப் போட்டியா வந்தவன்தான் இந்த வள்ளுவன்!''

''இப்ப எனக்குப் புரியுது... ஆமா, இந்த காலப் பலகணி பத்தி எப்படித் தெரிய வந்தது?''

''காலப் பலகணியை இவனோட தாத்தா ஏற்கனவே பார்த்து பலன்களையும் குறிச்சுக்கிட்டு வந்துட்டார். அதை வச்சு இவன் சொன்ன கணிப்புகள், அப்படியே நடந்தது. உடனே இவன் மேல ஆழமான கவனம் விழுந்தது. அப்ப மந்திரி பதவில இருந்த ஒருத்தர், 'ஜோதிடத்துல எப்படி இப்படிச் ெசால்ல முடியுது'னு கேட்கவும், 'இது நான் சொன்னதில்லை, பலகணி சொன்னது'னு வள்ளுவன் மெல்ல பலகணியைத் தொட்டுப் பேசினான். மந்திரி விடுவாரா? 'அந்தப் பலகணி எங்க இருக்கு'னு கேட்டதுக்கு, 'எனக்கே தெரியாது. அதைப் பத்தி சிந்திக்கறதும் நல்லதில்ல... அதப் பார்க்க விதி இருந்தா எல்லாம் தானா நடக்கும். இல்லன்னா அதைப் பத்தி யோசிக்கறவங்க செத்துடுவாங்க... இதுவரை அப்படித்தான் நடந்துக்கிட்டு வருது'ன்னும் சொன்னான்.

மந்திரி பயந்து என்கிட்ட வந்து, 'இப்படி ஒரு விஷயம் கேள்விப்பட்டேன்... உண்மையா இருக்க முடியுமா'னு கேட்டார். நான் அப்பதான் வள்ளுவனப் பத்தியும், பலகணி பத்தியும் தெரிஞ்சுக்கிட்டேன். இவன் மேல குறி வச்சேன். அதோட விளைவுதான் ஒரு தகரப் பெட்டில இருந்த குறிப்பு ஏடுகள், சோழிகள், திசைமானி, ஸ்படிக பெண்டுலம்... இத்யாதி... இத்யாதிகள்!

அதையெல்லாம் வச்சு நானே பலகணியை அடைய விரும்பினேன்.

ஆனா வள்ளுவன் ஆர்க்கியாலஜிஸ்ட் கணபதி சுப்ரமண்யன் பக்கம் திரும்பிட்டான். அது நான் எதிர்பார்த்திடாத திருப்பம்!’’

‘‘திருப்பத்துக்கே திருப்பம் தர்ற உங்களுக்கே திருப்பமா?’’

‘‘விபா! ஒரு விஷயத்தை நல்லா புரிஞ்சுக்கோ! சன்யாசத்துல பிரம்ம சன்யாசி, விஷ்ணு சன்யாசி, சிவ சன்யாசினு மூணு ரகம் உண்டு. பிரம்ம சன்யாசிகள் ஒரு வழில குருநாதரைக் கொண்டு உருவாகறவங்க. விஷ்ணு சன்யாசிகள் குடும்ப உறவோட உடம்பு அடங்கின நிலைல சன்யாசத்துக்கு வர்றவங்க. சிவ சன்யாசிகள் தன்னிச்சையா சித்தர்களா திரியறவங்க. இந்த ரகத்துல நான் விஷ்ணு சன்யாசி.

இந்த விஷ்ணு சன்யாசி சந்தோஷமா எல்லா சுகங்களையும் அனுபவிச்சி முடிச்சிட்டு அப்புறம்தான் ஆன்மிக உலகத்தோட ஆழமான பகுதிக்குப் போவான். நானும் அப்படிப்பட்டவனே! ஆனா, அந்தப் பலகணி சிவ சன்யாசிகளால உருவாக்கப்பட்டது. எனக்கு அது தானா வசப்படாது. வசப்பட்டாலோ, அதன்பின் என்னை விட்டு அது எங்கேயும் போகாது!’’

‘‘சரி, முடிவா என்ன சொல்லப் போறீங்க?’’

‘‘சொல்ல என்ன இருக்கு... அதை அடையற முயற்சியில ரொம்ப தூரம் வந்துட்டோம். நிறைய உயிர்ப்பலிகளையும் கொடுத்தாச்சு. இதுல உயிரே போனாலும் பின்வாங்கக் கூடாது...’’

‘‘அப்ப வள்ளுவன் சொன்னபடி உயிர் போனாலும் போயிடுமா?’’

‘‘நிச்சயம் போகும்... சராசரி மனுஷனா இருந்தா? நான்தான் அதைக் கடந்தவனாச்சே..?’’

‘‘இருந்தாலும் உங்களால இப்ப சரியா எதையும் கணிக்க முடியறதில்லையே ஜீ!’’

‘‘அதுக்கு நான் புலனை அடக்கணும். அக்னி வளர்த்து ஆஹுதி கொடுத்து தேவ சக்திகளை வசப்படுத்தணும். இந்த மாதிரி நிறைய இருக்கு...’’

‘‘இப்ப என்ன செய்ய உத்தேசம்?’’

‘‘முதல்ல அவங்கள நெருங்குவோம். என்னப் பத்தி தெரிஞ்சி இனி புட்டுப் புட்டு வைக்கப் போற அந்த ரஞ்சித்ங்கறவனை நான் பலி கொடுக்கறேன்! முதல்ல கமிஷனருக்கு போன் போடு...’’

‘‘போட்டு?’’

‘‘சைபர் க்ரைம்ல ஒரு கறுப்பு ஆடு, ஒரு சாதாரண மனுஷனுக்கு உதவிக்கிட்டு இருக்கு. குறிப்பா, என்னைப் பத்தி தெரிஞ்சுக்க பாக்கறான்னே சொல்லு. அப்படியே அந்த ரஞ்சித் ஒரு எதிர்க்கட்சிக்காரன், ஆத்திகவாதிகளுக்கு எதிரானவன்னும் ஒரு பிட்டைப் போடு!’’

‘‘இப்ப ரஞ்சித்தைக் கொல்றதா முக்கியம்?’’

‘‘நான் போனே பேச முடியாதபடி பண்ணிட்டானே? பேசினா அது ரெக்கார்ட் செய்யப்படுமே! இப்பகூட மத்திய மந்திரிகள் அந்தரங்கமா பேசலாம். ஏதாவது கேட்கலாம். என் பிரைவசியே போயிடுச்சே?’’

‘‘புரியுது... கமிஷனர்தான் சரியா நடவடிக்கை எடுக்கணும். எடுப்பாரா?’’

‘‘அதுக்கு டெல்லில நம்ம மினிஸ்டருக்கு பிரஷர் கொடு. எல்லாம் தானா நடக்கும்!’’

‘‘அப்புறம்..?’’

‘‘நாம இரண்டு பேருமே உருமாறணும். நான் என் தாடி முடியில இருந்து சகலத்தையும் நீக்கிக்கறேன். ஒரு காட்டுவாசி போல என்ன மாத்திக்கறேன். நீயும் ஒரு காட்டுவாசிப் பெண்ணா மாறிடு...’’

‘‘அவங்கள பின்தொடரும்போது அடையாளம் தெரிஞ்சிடாம இருக்கவா?’’

‘‘ஆமா...’’

‘‘அதுக்குள்ள அவங்க ரொம்ப தூரம் போயிடுவாங்க. குறிப்பா மலைக்குள்ள இறங்கிட்டா டவர் கிடைக்காது. போன்ல பேச முடியாது. அதனால நம்பளாலயும் அவங்க இருக்கற இடத்தை ட்ரேஸ் பண்ண முடியாது!’’

‘‘அப்ப கார்ல போய்க்கிட்டே மேக்கப் போட்டுக்குவோம். ஒரு கடைல ரேசர், அப்புறம் உனக்கு புடவை வாங்கிக்க...’’

‘‘உத்தரவு ஜி! தப்பா எதுவும் ஆயிடாம இருந்தா போதும்...’’

‘‘ஆகவே ஆகாது. நான் அந்தப் பலகணியை அடையாம விடமாட்டேன். நீ முதல்ல போன் போட்டு நான் சொன்னதைச் செய்து முடி. அப்புறம் காரை எடு. அவங்கள அதிகபட்சம் 100 மீட்டர் தூர

அளவுல நாம நெருங்கித் தொடர்ந்துகிட்டே போகணும். உம்... ஜல்தி!’’

சதுர்வேதியின் புத்திசாலித்தனத்தை ஒருபுறம் வியந்தபடியே விபா முதலில் டெல்லிக்கு போன் செய்தாள். பின் கமிஷனருக்கு! அப்படியே காரில் வேகமானாள். வழியில் ஒரு கடையில் ரேசரை வாங்கியவள், துணிக்கடையில் நூல் புடவையாகப் பார்த்து வாங்கிக்கொண்டாள். அதையெல்லாம் கட்டிப் பழக்கம் இல்லை அவளுக்கு. அதைக்கூட எப்படியாவது கட்டிக்கொண்டு விடலாம். முகத்தின் பளபளப்பை, க்ரீமும் எண்ணெயும் பூசி உருவாக்கிய மினுமினுப்பை, பியூட்டி பார்லருக்குப் போய் ட்ரிம் செய்துகொண்ட புருவங்களை என்ன செய்வது? அப்படியே விட்டுவிட வேண்டியதுதான்!

கார் பறந்துகொண்டிருந்தது.

சாலையோரமாக மொபட்டில் பயணிக்கிற மேலுக்கு சட்டைகூட போட்டிராத ஒரு விவசாயிகூட செல்போனில் பேசியபடி சென்று கொண்டிருக்கக் கண்டாள். டீக்கடை ஒன்றில் பாட்டுச் சத்தம் காதைக் கிழித்தது. வழியெங்கும் ஃப்ளக்ஸ் போர்டுகளில் பூப்பெய்திய பெண்கள் சிலரும், காலமாகிவிட்ட சிலரும் சிரித்தனர்.

அது என்னவோ தெரியவில்லை. இறந்துவிட்ட அவ்வளவு பேர் படங்களுக்கு மேலும் ‘இமயம் சரிந்தது’ என்றே எழுதப்பட்டிருந்தது. வேடிக்கையாக இருந்தது விபாவுக்கு... விஞ்ஞானக் கரும்பை சக்கையாகப் பிழிந்து பயன்படுத்துபவன்தான் தமிழன். ஆனால், விஞ்ஞானத்துக்காக எதையும் செய்ய மாட்டானோ?அந்தக் கார் பயணத்தில் இப்படி எல்லாம் விபாவுக்குள் கேள்விகள். சதுர்வேதியோ, ‘மரணம் என்று ஒன்று வந்தால் அதில்

விபாவை சிக்க வைத்து தான் தப்பித்துவிட வேண்டும்' என்பது போலவே யோசித்தபடி இருந்தான்.

* * *

நிற்காதபடி ஒரு மழை தொடங்கிப் பெய்தபடி இருந்தது. அதனால் சாலையில் பெரிய நடமாட்டமில்லை. முக்கியமாக கார் ஓட்டுபவர்கள் வரையில் கிலி மூட்டும் நாய்களின் நடமாட்டமில்லை. எனவே வர்ஷனால் காரை வேகமாய் செயல்படுத்த முடிந்தது.அது தாணிப்பாறையில்தான் முடிந்து நின்றது. இனி அங்கிருந்து நடந்துதான் செல்ல வேண்டும்.காருக்குள்ளேயே வள்ளுவர் அந்த பெட்டி சமாசாரங்களை எடுத்தார். வர்ஷன் காரை விட்டு இறங்கி சற்று மழையில் நனைய விரும்பினான். ப்ரியாவுக்கும் அந்த நனைதல் தேவைப்பட்டது. வள்ளுவரும் புரிந்தது போல் இறங்கினார். நனைந்தார்கள். இனி குளிக்கத் தேவையில்லை!

''போதும்... காருக்குள்ள உக்காந்து துவட்டிக்கிட்டு வழியப் பார்ப்போம்'' என்றார் வள்ளுவர்.அவ்வாறே செய்தனர். வள்ளுவர் எப்போதும் வைத்திருக்கும் விபூதியை எடுத்து பரபரவென நெற்றியில் பூசிக்கொண்டு, தன் குலதெய்வத்தையும் முன்னோர்களையும் பிரார்த்தனை செய்துகொண்டார்.பிறகு ஏட்டின் அடுத்த பக்கத்தைப் படிக்கத் தொடங்கினார்.

அப்போது ஒரு அதிசயமும் நடந்தது. முன்பு படித்து முடித்த ஏடுகள் அவ்வளவும் ஈரம் படவும் அப்படியே அழிந்து போனது! தண்ணீரின் ஒரு சிறுதுளிகூட போதும், அந்த ஏட்டின் எழுத்துக்கள் அழிந்துவிடும் என்பது வள்ளுவருக்குப் புரிந்துவிட்டது. கூரிய எழுத்தாணி கொண்டு வெட்டெழுத்தாய் எழுதாமல், மூலிகை மசி கொண்டு கொட்டெழுத்தாய் அது எழுதப்பட்டிருப்பதைப் புரிந்துகொண்டவர் அதற்குப் பின்னாலும் ஒரு சூட்சமம் இருப்பதை உணர்ந்தவராக ''சிவ சிவா'' என்றார் சிலிர்ப்போடு...

‘‘என்னய்யா... திடீர்னு ‘சிவசிவா’ங்கறீங்க?’’

‘‘ஒண்ணுமில்ல! காலம் நம்மை ஆட்டி வைக்கறதையும், நாமளும் ஆடுறதையும் நினைச்சேன். என்ன ஒரு கணக்கு... என்ன ஒரு கணக்கு...’’ - என்று சிலிர்த்தார்.

‘‘சரிய்யா! ஏடு என்ன சொல்லுது?’’

‘‘இரும்மா பாத்துடறேன்...’’ என்று பார்க்க முனையும்போது வர்ஷனை ரஞ்சித் போனில் கூப்பிட்டான். வள்ளுவரும் தேங்கினார். ரஞ்சித் பேசினான்.

‘‘வர்ஷா ஜாக்கிரதைடா! அந்த சதுர்வேதி எப்படியோ என்னைக் கண்டுபிடிச்சிட்டான்டா. ராத்திரி 12 மணி சுமாருக்கு க்ரைம் பிராஞ்ச் போலீஸ் கமிஷனர் சிவில் டிரஸ்ல ஆபீஸ் வந்துட்டார். நல்லவேளை, அப்ப நான் டீ குடிக்க வெளியே போயிருந்தேன். என் ஃப்ரெண்ட் ஒருமாதிரி பேசி கமிஷனரை சமாளிச்சிட்டான். ‘சதுர்வேதிங்கறவரையே தெரியாது.... யார் சார் அவர்’னு கேட்டு கமிஷனரையே முட்டாளாக்கிட்டான். வேற வழியில்லை அவனுக்கு... ஏன்னா, எனக்கு அவன் இல்லீகலாதான் உதவி செய்துக்கிட்டு இருக்கான். ஆனாலும் அந்த இல்லீகலுக்குப் பின்னால ஒரு லீகலான விஷயமும் இருக்கு. நிஜத்துல அவன் சதுர்வேதி பத்தி நிறைய தெரிஞ்சி வச்சிருக்கறவன். அவன் ஒரு ஆன்மிக வியாபாரின்னு நல்லா தெரிஞ்சவன். அதனாலதான் எனக்கு உதவி செய்தான்!’’ என்று மூச்சு விடாமல் பேசிட, வர்ஷன், ப்ரியா, வள்ளுவரிடம் திகைப்பு.

‘‘சரிடா... இப்ப என்ன செய்யப் போறே?’’

“அவன் போனே பேசலடா... சுதாரிச்சிட்டான். அவனை இனி ட்ரேஸ் பண்றதும் கஷ்டம். போன்ல இருக்கற அவன் சிம்மை கழட்டிட்டான். அதனால அவன் இருக்கற இடத்தைக் கண்டுபிடிக்க முடியல. ஆனா, நிச்சயமா உங்களுக்கு ரொம்ப சமீபத்துலதான் இருக்கணும்!”

“அப்படியும் இருக்கலாம். நாங்க இப்ப சதுரகிரி அடிவாரத்துல இருக்கோம். மழை பின்னி எடுத்துக்கிட்டு இருக்கு. இனி எங்க கைல எதுவுமில்லை. ஏடு காட்ற வழில போகப் போறோம். மற்றதெல்லாம் தானா நடக்கக் கூடும்!”

“இங்க சென்னைலயும் பேய் மழை! தெருவுல முழங்காலுக்குத் தண்ணி ஓடிக்கிட்டு இருக்கு!”

“ஓகே ரஞ்சித்... நீ ஜாக்கிரதையா இரு. மாட்டிக்காதே!”

“நான் மாட்டமாட்டேன்டா. மாட்டணும்னா ராத்திரியே மாட்டியிருப்பேன். அந்த சதுர்வேதி எமகாதகன். அவன நாம ட்ரேஸ் பண்ண செல்போன் இருக்கு. நம்மை அவன் எப்படி... குறிப்பா, என்னை அவன் குறிவச்சதுதான் எப்படின்னு தெரியல!” - ரஞ்சித் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவர்கள் காரைக் கடந்து காட்டுவாசிகள் வேடத்தில் சதுர்வேதியும், விபாவும் ஒரு கூடையோடு போயினர்!

56

“நான் சிரித்ததைப் பார்த்த அந்த ஃ என்பவன், ‘சாமி! இப்படி சிரிச்ச ரொம்ப பேரை நான் பாத்துட்டேங்க. அப்புறம் அவங்க பட்ட பாட்டைப் பார்த்து நான் சிரிச்சிருக்கேன்’

என்றான்.

அந்த பதில் என்னைக் கொஞ்சம் மிரட்டவே செய்தது. இருந்தும் என் பகுத்தறிவு, ‘அவனை விடக் கூடாது’ என்றது. ‘யப்பா... நான் ஏன் சிரிச்சேன்னு தெரியாம பேசாதே. இந்தப் பாறை மேல நின்னு நான் ‘சிவசிவா’ன்னா சித்தர் வந்து கூட்டிப் போவார்னு சொன்ன பாரு... அதுக்காக சிரிச்ேசன். ‘சிவசிவா’ன்னு சிவ பக்தர்கள்தான் சொல்வாங்க. அதுக்காக ‘ஒரு லட்சம் தடவை அதை விடாம சொல்லணும்’னு ஒரு அளவுகோல் வச்சதெல்லாம் ரொம்ப தப்பு.

எக்ஸிபிஷன் பாக்க வர்றவங்க கட்டணம் வசூலிக்கற மாதிரிதான் இதுவும். இதுக்கு பேசாம ‘இவ்வளவு பணம் கொடுங்க’னு சொல்லிடலாம். பக்திங்கறது இயல்பா உருவாகணும். இப்படி நிர்ப்பந்தப்படுத்தி வர வைக்கக்கூடாது...’என் கருத்துக்கு அந்த ஈயும் பதில் கூறினான். ‘அய்யா... இங்க எல்லாமே கணக்குங்க! ஒரு லட்சம் தடவைங்கறதும் கணக்குங்க. நான்கூட உள்ள இருக்கற சாமிகிட்ட ‘இது என்ன கணக்கு சாமி’னு கேட்டேன். அதுக்கு சாமி, ‘ஒரு லட்சத்துக்கு எவ்வளவு பூஜ்ஜியம்னு உனக்குத் தெரியுமா’னு கேட்டாரு. ‘தெரியாது சாமி’ன்னேன். ‘அஞ்சு பூஜ்ஜியம்’னு சொன்னாரு. ‘சரி சாமி! அதுக்கென்ன’னு கேட்டேன்.

‘அந்த அஞ்சு பூஜ்ஜியமும் பஞ்ச பூதங்களைக் குறிக்குது. ஒரு பூதத்துக்கு ஒரு பூஜ்ஜியம்னு கணக்கு. அந்தப் பாறை சாதாரண பாறை கிடையாது... அதுல இரும்புக் கனிமம் இருக்கு. கனிமப்பாறை மேல் சூரிய வெளிச்சம் படும்ேபாது வெப்பம் அதிகமா இருக்கும். அந்த வெப்பத்தைத் தாங்கி மனசை ஒருநிலைப்படுத்த நிறைய ஆத்மசக்தி தேவை. அது குறைவா

உள்ளவங்களால இந்த காலாலங்கிரி கணக்கைப் படிச்சுப் புரிஞ்சுக்க முடியாது.

ஊர் உலகத்தைப் பொறுத்தவரை அஞ்சோடு மூன்றைக் கூட்டினா எட்டு வரும். ஆனா, இங்க மட்டும் ஒன்பது வரும். இது தப்புக் கணக்கும் கிடையாது; அது எப்படினு தெரிஞ்சிக்கவும் புரிஞ்சுக்கவும் சூட்சம அறிவு வேணும். சூட்சம அறிவு யாருக்கு இருக்கும்னா, தன் உடம்புல உள்ள அஞ்சு பூதத்தையும் சம பலத்துல வச்சிருக்கிறவனுக்குத்தான் இருக்கும்'னு சொன்னாரு.

லட்சம் தடவை சொல்ல முடியாம சில ஆயிரம் தடவை சொல்லிட்டு 'போதும்டா சாமி'னு திரும்பிப் போனவங்க பலர் உண்டு. 'மீறிப் போனா என்னாயிடும்'னு உள்ள போனவங்க யாருமே அதன் பிறகு வாழலை. நான்லாம் சாமியால தீட்சை கொடுக்கப்பட்டு இந்த காலாலங்கிரில சேவை செய்யறவன். சாமிங்க பேச்சுக்கு மறு பேச்சு பேச மாட்டோம்' என்று ஒரு பெரிய விளக்கமே கொடுத்தான். நான் அதன் பிறகு மிகவே யோசித்தேன். அப்போது வனத்துறை அதிகாரி ஒருவர் என்னைத் தேடிக்கொண்டு வந்தார். 'சார்! நீங்கதானே கணபதி சுப்ரமண்யன்' என்று கேட்டார். நான் ஆச்சரியத்தோடு தலையசைக்க, 'சார், உங்களுக்கு பத்மஸ்ரீ விருது கொடுத்திருக்காங்க. உங்க வீட்ல இருந்து எனக்குத் தகவல் வந்தது. நீங்க இந்தக் காட்டுக்குள்ள எங்க இருந்தாலும் உடனே கூட்டிக்கிட்டு வரச் சொல்லி கவர்னர் ஆபீஸ்ல இருந்தே போன் வந்தது. போகலாமா?' என்று கேட்டார்.

எனக்கு ஒருபுறம் மகிழ்ச்சி; ஒருபுறம் தடுமாற்றம். நான் தயங்குவதைக் கண்டவர், 'காலாலங்கிரிக்கு போய் சாமிகளைப் பாக்கணுமா?' என்று கேட்டார். 'ஆமாம்... ஒரு ஆய்வாளனாக எனக்கு இது மிக அவசியம். ஆனால் இதன் பின்புலத்தில் ஒரு த்ரெட் இருப்பது போல் எனக்கு தோன்றுகிறது' என்றேன்.

‘அச்சுறுத்தல் எல்லாம் எதுவுமில்ல சார். தொடக்கத்துல நான் கூட அப்படி நினைச்சிருக்கேன். காலாலங்கிரி சாமிங்க ரொம்ப நல்லவங்க. ‘எப்ப மழை வரும்’, ‘எப்ப நல்லா வெயில் அடிக்கும்’னு எங்களுக்குச் சொல்லி விடுவாங்க. ஒரு தடவை கூட பொய்யானதேயில்லை. அதே போல அவங்க சொன்ன பல விஷயங்கள் அப்படியே நடந்திருக்கு.

குறிப்பா கும்பகோணத்துல பிஞ்சுக் குழந்தைகள் தீயில கருகி இறந்த சம்பவத்துக்கு முதல் நாள் அவங்கள்ல ஒருத்தர் ஒத்தக்கால்ல நின்னு தவம் செய்தார். ‘எந்த வரத்துக்காக சாமி இப்படி நிக்கறீங்க’ன்னு கேட்டேன். ‘நீயெல்லாம் நல்லா இருக்கணும்ங்கறதுக்காக’ என்றார். எனக்குப் புரியல... அதே சமயம் ஐம்பது, அறுபது, எழுபதுனு எண்ணிக்கையை மட்டும் கூட்டிக்கிட்டே போனார். கடைசியா அவர் ஒரு எண்ணை மட்டும்தான் சொன்னார். அதே அளவு குழந்தைகள் இறந்தும் போனாங்க. நான் அப்புறமா சாமிகிட்ட கேட்டேன். ‘எல்லாம் கருவுலயே உயிரை அழிக்கறதால வந்த வினை. அந்த பாவமெல்லாம் ஒண்ணா சேர்ந்து இப்படி ஆகிடுச்சு’ன்னார். ‘யார் தப்பு பண்ணாங்களோ, அவங்கதானே தண்டனை அனுபவிக்கணும். இந்தக் குழந்தைங்க என்ன பாவம் செஞ்சாங்க’ன்னு நான் கேட்டேன்.

‘இதுக்குப் பின்னால ஒரு கணக்கு இருக்குப்பா! உனக்குச் சொன்னா புரியாது’ன்னார் சாமி. நானும் அதுக்குப் பிறகு எதுவும் பேசலை. அவங்ககிட்ட பேச முடியாது சார். ‘ஒரு சாதாரண கை தட்டுக்கு கூட ஒரு எதிர்வினை இருக்கு. அந்த சப்த அதிர்வு வெளில பரவி வானத்துல மேகம் வரை போய் மழை பெய்யும்போது ஒரு துளி கூடவோ அல்லது குறையவோ காரணமா இருக்கு’ன்னார் அந்த சாமி. என்னால மறுக்கவும் முடியல; ஏத்துக்கவும் முடியல. அதே சமயம் அவங்களால எந்தப்

பிரச்னையுமில்ல. சொல்லப் போனா நன்மைகள்தான். ஆனாலும் எனக்குள்ள இந்த மலையும் இங்குள்ள சாமியார்களும் சித்தர்களும் புதிரானவங்கதான்' என்றார். எனக்கு கிடைத்த பத்ம விருதை எண்ணியபடியே, ஜோசப் சந்திரனைப் பார்க்காமலே நான் திரும்பினேன்."

– கணபதி சுப்ரமண்யனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

சதுர்வேதியும் விபாவும் செல்வதை அவர்கள் சரியாக கவனிக்கவில்லை. ஆனாலும் வள்ளுவர் உடல் மின்சாரத்தைத் தொட்டது போல தூக்கி அடித்தது. அப்போது அவர் கையில் ஏடும், பெண்டுலமும் இருந்தது. அந்த அதிர்ச்சியில் கையிலிருந்த சோழிகள் சிதறின. வள்ளுவர் காரினுள் சிதறிய சோழிகளை எடுத்து பெட்டிக்குள் போட்டார்.

அவர் அதிர்ந்ததை ப்ரியா கவனித்தாள்.

"அய்யா! என்னய்யா ஆச்சு?" என்று தலையைத் துவட்டியபடியே கேட்டாள்.

"ஒண்ணுமில்லம்மா... சமயங்கள்ல உடம்புல வர்மப்புள்ளி மேல அடிபடும்போது உடம்புல மின்சாரம் பாய்ந்த மாதிரி இருக்கும். அப்படி இருந்தது!" என்றார்.

"இப்ப நீங்க எங்கேயும் அடிபட்டுக்கலையே..?" என்று திரும்பவும் கேட்டாள் ப்ரியா.

"அடிபட்டாலும் அப்படி ஆகும். துஷ்ட சக்திகள் கடந்து போனாலும் அப்படி ஆகும்மா!"

"எங்களுக்கு எதுவும் ஆகலையே..?"

‘‘உடம்புல யோக உடம்பு, போக உடம்புனு இரு வகை. யோக உடம்பா இருந்தாதாம்மா அதை உணர முடியும்!’’

‘‘அப்படின்னா இங்க ஏதாவது கெட்ட சக்தி கடந்து போனதா? இந்த மழைல யாரோ ரெண்டு பேர்தான் போனாங்க...’’

‘‘விடும்மா! இந்தப் பேச்சு பேசப் பேச கிளை விடும். நமக்கு அதுக்கு நேரமில்லை. நாம வந்த இடத்துல மழைல நனைஞ்சு சுத்தமாயிட்டோம். பஞ்சபூத உடம்புக்கு தலை நனையறதுதான் கணக்கு. நதி, கடல், குளம், அருவின்னு நான்கு வித நீர் நிலைகள்ல ஒரு மனுஷன் குளிக்கும்போது, அவன் உடம்புல பெரிய மாற்றங்கள் ரொம்ப நுட்பமா ஏற்படுது. நதில கால் முதல்ல நனையும், கடல்லயும் குளத்துலயும் கூட கால்தான் நனையும். அருவில மட்டும்தான் தலை முதல்ல நனையும். இதனால உடம்புல உள்ள சக்கரங்கள்ல ஒரு வேகம் உருவாகும். எங்கேயும் முதல்ல தலையை நனைச்சுட்டுத்தான் உடம்பை நனைக்கணும். மழைல இயல்பாவே அது நடந்துடுது. இந்த நிலைல மனசை ஒருமுகப்படுத்தறது சுலபம். உடம்பு ரொம்பவே ஒத்துழைக்கும்.

நாம இப்ப மனசை ஒருமுகப்படுத்தி பிரார்த்தனை செய்வோம். வந்த காரியம் நல்லவிதமா முடியணும். ‘எந்தப் பாவங்களையும் தெரிஞ்சும் தெரியாமலும் நாங்க செய்துடக் கூடாது’னு உருக்கமா பிரார்த்திப்போம். நாம நம்ம பயணத்தோட இறுதிக் கட்டத்துக்கு வந்துட்டோம். வர வைக்கப்பட்டோம்னும் சொல்லலாம். என் கைல உள்ள ஏடுல ரெண்டு ஏடு மட்டும்தான் இருக்கு. அது என்ன சொல்லுதோ, அதன்படி நடப்போம். முதல்ல பிரார்த்தனை...’’ என்று அவர்களைப் பார்க்க, அவர்கள் இருவரும் தயக்கத்தோடு கைகளைக் கூப்பினர்.

‘‘கை கூப்பாம பிரார்த்திக்கக் கூடாதானு கேட்கலாம். கை

கூப்பும்போது வலது, இடது இரண்டும் சேர்ந்து, பிரமிடு போல ஒரு மேல்நோக்கின கூர்மை வந்துடுது. அந்தக் கூர்மைக்கு நல்ல விஷயங்களை ஆகர்ஷிக்கற சக்தி உண்டு. கோயில்ல வணங்கும்போது கை கூப்பறது இதை வச்சுதான். பெரிய மனிதர்களை வணங்கும்போது, அவங்களோட நல்ல விஷயங்களை நம் கைகள் ஆகர்ஷிக்குது. அதனால தயங்காம கூப்புங்க.

அப்படியே உருக்கமா பிரார்த்தனை செய்யுங்க. இஷ்ட தெய்வத்தையோ, இல்ல... ஒரு ஈ, எறும்பையோ கூட நினைச்சு செய்யலாம். மண்ணால் செய்யப்பட்ட பொம்மைல எந்த பாகத்தைத் தொட்டாலும் மண்ணைத் தொட்டதாதான் பொருள். அது போல நாம எதை நினைச்சாலும் அதுல இறை சக்தி இருக்கு!'' என்று ஒரு புதிய கோணத்தைக் காட்டினார். அந்த பிரார்த்தனை இரண்டு நிமிடங்கள் நீடித்தது. அடுத்து ஏட்டை எடுத்துப் பிரித்தார். அதில் பாடலாய் வரிகள்... எறும்பு ஊர்வது போல எழுத்துக்கள்!

வள்ளுவர் காரின் கூரையில் உள்ள மைய விளக்கின் கீழ் அந்த ஏட்டைப் படிக்கத் தொடங்கினார். ப்ரியாவும் வர்ஷனும் தங்கள் செல்போனில் அதை பதிவு செய்து கொள்ளத் தயாராயினர்.

'வருணாபிஷேக வேளை, கிரியடி வாயு மூலை - ஆங்கே சரணார விந்த தேவி அரனோடு சேர்ந்த பாகதிசை நோக்கி மனதார நாமம் சொல்லி, மலை மீது நாலு காதம் வருஷனொடு பிரியாவும் வள்ளுவனும் நடக்க உயிரெழுத்தில் நான்கதை கொண்டவனால் உதவி உதிரம் சிந்தக் கிட்டும். உந்தி வரும் வெள்ளமதும் அள்ளிச் சென்று காட்டும் - காலாலகிரி வாழும் நூலான பலகணியும் கோடிக்கணக்கில் நாடிக்கணக்காய் நான்கது மட்டும் நானிலம் நோக்கும். மற்றதை காலம் காக்கும். சந்திர நந்தி என்பானும் வந்தே விந்தியம் நோக்கிட பலகணியும் செல்லும் ஈதென்ன கணக்கென்றே ஈத்துவக்கும் நெஞ்சம் ஐந்தும் மூன்றும் கூட்டினால் எட்டும் கூடினால் ஒன்பதும் வருவதே மாயம். ஞானியர்

காயமே அறியும் இம்மாயம். அரிஅர சிவசிவ ஓம் ஓம்!’

- வள்ளுவர் வரிவரியாக அழகாய்ப் படித்து முடித்தார். அவ்வளவும் செல்போனிலும் ரெக்கார்ட் ஆகியது.

‘‘வள்ளுவரே... நீங்க படிச்ச பாட்டுல நம்ம பேரெல்லாம் கூட இருக்கே! எப்படி வள்ளுவரே?’’ என்று கேட்டான் வர்ஷன்.

‘‘அதான் இந்த ஏட்டோட சிறப்பு. என் தாத்தா இங்க வந்து காலப் பலகணியைப் பார்த்தபோது, இங்க இருக்கற யாரோ ஒரு சித்தரோ, இல்ல சாமியாரோதான் இதைக் கொடுத்திருக்கணும். அப்பவே இன்னிக்கு நாம இங்க வரப் போறதை அவர் கணக்குப் போட்டுப் பார்த்து எழுதிட்டார்னா, அவருடைய தீர்க்கதரிசனத்தை என்னனு சொல்றது?’’ - வள்ளுவர் வியந்தார்.

‘‘வள்ளுவரே! இது எப்படி சாத்தியம்? லாஜிக் ரொம்பவே இடிக்குதே?’’ - வர்ஷன் தனக்குள் தோன்றியதைக் கேள்வியாகக் கேட்டான்.

‘‘பூமியோட இரவு பகல் மாதிரிதான் தம்பி லாஜிக்கும் மேஜிக்கும். பாக்க முடிஞ்சா லாஜிக், முடியாட்டி மேஜிக்! ஆனா பூமி இரவுலயும், பகல்லயும் அப்படியேதான் இருக்கு!’’

‘‘இந்த பதில் எனக்குப் புரியல...’’

‘‘போகப் போக தானா புரியும். எல்லாத்தையும் கேள்வி கேட்டு மட்டும் புரிஞ்சிக்க முடியாது. ரத்தமும் சதையுமா அனுபவிக்கும்போது பல ரகசியங்கள் தானா புரியும். அப்படிப் புரியறதை எல்லாம் விளக்கிச் சொல்ல முடியாது. ‘அது மாதிரி... இது மாதிரி’னு உதாரணம் காட்டித்தான் பேச முடியும். நீ இப்ப இந்தக் கேள்விகளை எல்லாம் கேட்காதே! நாம இந்த ஏட்டில் உள்ளபடி

இதைப் புரிஞ்சிக்கிட்டு நடக்க முனைவோம். ‘வருணாபிஷேக வேளை, கிரியடி வாயு மூலை - ஆங்கே சரணார விந்த தேவி அரனோடு சேர்ந்த பாக திசை நோக்கி’ங்கற ஆரம்ப இரண்டு வரிகளுக்கு பொருள் என்னனு பார்ப்போம். வருணாபிஷேகம்னா மழை... இப்ப மழை பெய்துக்கிட்டிருக்கு... அடுத்து கிரியடி வாயு மூலை... அதாவது ‘இந்த மலை அடிவாரத்தின் வாயு மூலை’னு இதுக்கு பொருள். வாயு மூலைங்கறது வடமேற்குப் பகுதியைக் குறிக்கும். அனேகமா இந்த இடமாத்தான் இருக்கணும்... இருங்க, அதையும் பாத்துடுவோம்’’ என்று திசைமானியைப் பார்த்தார்.

மிகச் சரியாக அது வடக்கு திசையைக் காட்டியது. அதை வைத்து வடமேற்கைத் துல்லியமாக அனுமானிக்க முடிந்தது. ‘‘இந்த இடம்தான் தம்பி! காலம் நம்ம மூணு பேரையும் இந்தப் பாடல் வரிகளின்படியே அழகா கொண்டு வந்து நிறுத்தியிருக்கு. இங்க இருந்துதான் நாம் பயணத்தைத் தொடங்கணும். எந்தப் பக்கம்ங்கறது ரொம்ப முக்கியம். அதை அடுத்த வரிகள் சொல்லுது. ‘சரணார விந்த தேவி அரனோடு சேர்ந்த பாக திசை நோக்கி...’ ஈசன்தான் அம்மா பார்வதிக்கு தன் இடது பகுதியைக் கொடுத்தவன். அப்ப நாமும் இடது பக்கம் போகணும். இப்ப இங்க இருந்து நாம போகப் போற திசை முடிவாயிருச்சா?’’ - என்று வள்ளுவர் கேட்க, ப்ரியா முகம் சுளித்தாள்.

‘‘என்னம்மா... இவ்வளவு விளக்கமா சொல்லியும் முகம் சுளிக்கறே?’’

‘‘பல கேள்விகள் இங்க உருவாகுது அய்யா. முதல்ல வர்ஷன் கேட்ட கேள்விக்கே நீங்க சரியா பதில் சொல்லலை. ‘போகப் போக புரிஞ்சிப்பே’ன்னுட்டீங்க. அதாவது பரவாயில்லை. இங்க வாயு மூலைன்னா வடக்கும் மேற்கும் சந்திக்கற இடம். இங்க இடதுபக்கம்னா, மேற்கு பார்க்க நாம நிற்கும்போது இடது பக்கமாங்கறது முக்கியம் இல்லையா? அடுத்து, எதுக்கு இப்படி

தலையைச் சுற்றி மூக்கைத் தொடணும்? பளிச்னு வேற அடையாளக் குறிப்புகளை குழப்பமில்லாம சொல்லலாமே?’’ - ப்ரியா கேட்க, வள்ளுவர் அவளை ஆனந்தமாகப் பார்த்துச் சிரித்தார்.

‘‘பரவால்லம்மா! நீ சரியான கேள்வியைத்தான் கேட்டுருக்கே... நீ எங்க கேக்காம போயிடுவியோன்னு நான் கூட எனக்குள்ள தவிச்சேன். இதுக்கு விடை சொல்லணும்னா நாம இப்ப அந்த நாவலூர், நாவல் மரத்தடி பிள்ளையார் கோயில் மந்திரப் பாட்டு கிட்ட போகணும். அது உனக்கு ஞாபகமிருக்கா?’’

ப்ரியா அடுத்த நொடி செல்போன் திரையில் புகைப்படமாய் எடுத்து வைத்திருந்த அந்த பாடல் வரிகளைத் தன் போன் கேலரிக்குச் சென்று எடுத்து படிக்கத் தொடங்கினாள்...

'காலாலங்கிரி' கல்லுடைத்து லட்சியத்தோடு உனைப் படைத்த பாலா சித்தர் பாதம் பணிந்தே லட்சுமி கடாட்சம் பெறுவேனே கணிப்பூட்டு இப்பாட்டு சாவிலிருந்தே காப்பாற்றுமே!’ - இந்தப் பாட்டுதானேய்யா?’’

‘‘இதேதான்... இதுல கணிப்பூட்டு இப்பாட்டுங்கற வரிக்கு நாம அப்ப அர்த்தம் கண்டுபிடிச்சோமா?’’

‘‘இல்லன்னுதான் நினைக்கறேன். நீங்க அந்தக் கோயில் கோபுர சிலைகளை வச்சே ‘அடுத்து நாம போக வேண்டிய இடம் சதுரகிரி’ன்னு சொல்லிட்டீங்க!’’

‘‘அருமை... அருமை... அப்ப சொல்லத் தேவைப்படலை. இப்ப பொருள் சொல்றேன். இதுதான் அந்தக் கணிப்பூட்டு. அதாவது விடையை கணிச்சிப் பூட்டி வச்சிருக்காங்க. நாமதான் அந்தப் பூட்டைத் திறக்கணும். நீ என்ன கேட்டே? வடமேற்கு மூலையில் நாம நிக்கறோம். இப்ப வடதிசை பார்த்து நிற்க இடது பக்கம் போகணுமா?

இல்லை, மேற்கு திசைப் பார்த்து நிற்கும்போது வரும் இடது பக்கம் போகணுமானுதானே?’’

‘‘ஆமாம்!’’

‘‘இந்தக் கேள்விக்கு பெண்டுலம் பதில் சொல்லிடும். வட திசை, மேற்கு திசைனு ஒரு பேப்பர்ல எழுது. பேப்பர் பேனா இல்லன்னா உன் ஒரு கையை வடக்காவும் ஒரு கையை மேற்காவும் வச்சுக்கோ... நீட்டு கையை. வலது கையை என்னனு நினைச்சே?’’

‘‘வடக்கு திசை...’’

‘‘அப்ப இடது கை மேற்கு திசை. சரிதானே?’’

‘‘சரிய்யா!’’

அவர் பெண்டுலத்தை இரு கைகளின் உள்ளங்கை பரப்புக்கு மேல் தொங்க விட்டார். இடது கை மேல் பெண்டுலம் ஆடியது. வலது கை மேல் அப்படியே நின்றது.

‘‘அம்மாடி... மேற்கு பார்த்து நிற்கும்போது நமக்கு எது இடதுபுறமோ அந்தப் பக்கம்தான் நமது திசை. அதாவது இந்தப் பக்கம்!’’ என்று காருக்குள் அமர்ந்துகொண்டே திசையைக் காட்டினார்.

‘‘சரிய்யா! இப்படி ஏன் தலையை சுத்தி மூக்கைத் தொடணும்!’’

‘‘ஒரு பேச்சுக்கு சொல்றேன்... நான் உங்ககூட இருக்கேன். என் அனுபவம் உங்களுக்குப் பயன்பட்டுக்கிட்டு இருக்கு. இது வேற யார் கைலயாவது கிடைச்சா? குறிப்பா, அந்த சதுர்வேதி கைல கிடைச்சு அவன் இங்க வந்திருந்தா, இவ்வளவு நுட்பமா இதை உணர்ந்திட

முடியுமா? மறைவா பூட்டி வச்சதாலதானே பாதுகாப்பா இருக்கு?’’

‘‘உங்க பதில்ல பாதிய ஒத்துக்கறேன். பாதி இப்பவும் புரியல. நம்ம பேரே இதுல இருக்குன்னும்போது, நாமதான் வரப் போறோம். அப்புறம் இது எப்படி சதுர்வேதி கைக்குப் போக முடியும்? நாமதான் இங்க வரப்போறோம், அடையப் போறோம்னு தெளிவா இருக்கற விஷயத்துக்கு எதுக்கு இவ்வளவு பூடகம்?’’

ப்ரியாவின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று வள்ளுவர் யோசித்தபோது கணபதி சுப்ரமண்யனிடமிருந்து அழைப்பு.

‘‘ஹாய் ப்ரியா குட்டி! நான் பேசறது கேட்குதா?’’

‘‘கேட்குது தாத்தா! நாங்க இப்ப சதுரகிரி மலை அடிவாரத்துல, அதோட வடமேற்கு பாகத்துல இருக்கோம். மழை கொட்டிக்கிட்டிருக்கு. காருக்குள்ள இருந்துதான் பேசறோம். இங்க இருந்து எந்தப் பக்கம் போகணும்னும் தெரிஞ்சிடுச்சு. வள்ளுவர் மட்டும் இல்லன்னா நிச்சயம் இதெல்லாம் தெரியவே வராது. இன்ஃபாக்ட், ஏட்டுல எங்க மூணு பேர் பெயர்கூட இருக்குது. அதாவது, இது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விஷயம்...’’

‘‘ஆமாம்! அதனாலதான் அந்த மலைக்கு நான் ஒரு முறைக்கு இருமுறை போயும் என்னால நெருங்க முடியல. அப்புறம், ஒரு முக்கியமான விஷயம்! அந்த சதுர்வேதி இங்க என்னைப் பாக்க வந்த விஷயம் உங்களுக்கு ஏற்கனவே தெரிஞ்சிருக்கும். நான் அவன்கூட பேசாம தூங்கற மாதிரி நடிச்சு தவிர்த்ததும் தெரியும். அந்த ராஸ்கல் என் ரூமுக்கு வந்தப்ப ஒரு மைக்ரோ வாய்ஸ் ரிசீவர் சிப்பை என் ரூமோட கதவு பின்னால ஒட்டிட்டுப் போயிட்டான். இங்க இருந்து நான் உங்களோட பேசறத எல்லாம் இதன் மூலம் ஒட்டுக் கேட்டிருக்கான்.

கொஞ்சம் முந்தி என்னைப் பார்க்க வந்த ஒரு போலீஸ் ஆபீசர் கிட்ட வயர்லெஸ் போன் இருந்தது. அது இப்ப ரொம்ப அட்வான்ஸா உருவாக்கப்பட்ட போன்! அது இந்த மாதிரி உளவு பார்க்கும் ரிசீவர் பக்கத்தில் வந்தா, ரெட் சிக்னல் சவுண்டோட அணைஞ்சு எரியுமாம். அவர் என் அறைல இருந்து யார்கூடவோ பேசினார். அப்ப சப்தம் வந்தது.

உடனே அவர் என்னை முறைச்சுப் பார்த்து, ‘என்ன சார்! உங்க அறைல வாய்ஸ் ரிசீவர் இருக்கா? இப்ப நான் பேசினதை யாரோ கேட்டுக்கிட்டிருக்காங்க’ன்னார்! எனக்கு பக்குனு ஆயிடிச்சு. ‘சத்தியமா எனக்கு எதுவும் தெரியாது’ன்னேன் அவர் நம்பாம ரூமை சல்லடை போட்டு சலிச்சப்ப, கதவு பின்னால ஒரு ரூபா சைஸுக்கு அந்த ரிசீவர் ஒட்டப்பட்டிருந்தது. அதை அப்பவே கால்ல போட்டு நசுக்கி சிதைச்சுட்டோம். நானும் ‘இது சதுர்வேதி வேலையாதான் இருக்கணும்’னு சொன்னேன். அவர் நம்பியும் நம்பாமதான் போனார். அவர் போகவும் நான் உடனே தொடர்பு கொள்றேன். எனக்கென்னவோ, உங்களுக்குத் தெரிஞ்ச அவ்வளவும் நாம பேசப் பேச அந்த சதுர்வேதிக்கும் தெரிஞ்சிக்கிட்டே இருந்திருக்கு. இப்ப நாம பேசற இந்த விஷயத்தைத் தவிர...’’ - என்றார்.

அதைக் கேட்ட ப்ரியா வாயடைத்துப் போனாள்.

வர்ஷன் மட்டும், ‘‘அந்த சதுர்வேதி சாமியாரா? விஞ்ஞானியா?’’ என்று கேட்க, வள்ளுவர் ப்ரியாவைப் பார்த்தார். ‘‘ப்ரியா! ‘எதுக்கு இவ்வளவு பூடகம்’னு கேட்டியே... இப்ப புரியுதா? நமக்கு இருக்கற அளவு அதே பலம் எதிரிக்கும் இருக்கு... பார்த்தியா?’’வள்ளுவர் கேட்கவும், ப்ரியாவிடம் ஒரு ஆழ்ந்த மௌனம். கூடவே முதல்முறையாக ஒரு அபார பிரமிப்பு. இருந்தும் இங்கேயும் ஒரு கேள்வி.‘அந்த எதிரி பற்றியும் இதில் குறித்திருக்கலாமே... அந்த சதுர்வேதி பற்றி ஒரு வார்த்தைகூட இல்லையே?’ என்பதுதான் அந்தக் கேள்வி.

57

“நான் சென்னை திரும்பி விட்டேன். பத்மஸ்ரீ விருது பெற்றமைக்காக எனக்கு வாழ்த்துகள் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. வீடு தேடியும் பலர் வந்து வாழ்த்திச் சென்றனர். பத்திரிகைக்காரர்கள் பேட்டி கண்டனர். தொல்பொருள் ஆய்வுத்துறையைச் சேர்ந்த ஒருவர் கூட அதுவரை பத்மஸ்ரீ விருது பெற்றதில்லை என்றும், எனக்கே முதன்முதலாக வழங்கப்பட்டதாகவும் அறிந்தேன்.

ஒரு பாராட்டு விழாவில் எனது அனுபவங்களையும், ஆய்வுகளையும் ஒரு நூலாக எழுத வேண்டும் என்கிற வேண்டுகோளை மாநில கவர்னரே முன் வைத்தார். அப்படி நான் எழுதினால் ஆங்கிலத்திலும் அதை மொழிபெயர்த்து வெளியிடுவதாக ஒரு பதிப்பாளரும் அந்த மேடையிலேயே முன் வந்தார். எனக்கும் எழுதும் விருப்பம் நிறையவே இருந்தது. ஓய்வுக்குப் பிறகு முழுமுனைப்போடு எழுதுவது என்கிற முடிவுக்கு வந்தேன்.

அதற்கான குறிப்புகளைத் தயார் செய்துகொள்ளத் தொடங்கினேன். காரில் பயணிக்கும்போதும், உறங்கச் செல்லும்போதும், சதா ஆய்வு நூல் குறித்தே சிந்தனை செய்தேன். அப்படியே என் பணிக் காலத்தை ரீவைண்ட் செய்தும் பார்த்தேன். என் தொடக்கம் அத்தனை பிரகாசமானதாக இல்லை. ஆனால், போகப் போக நான் நிறைய வரலாற்றுத் தொடர்புகளைக் கண்டறிந்தேன் எனலாம்.

என் ஆய்வில் தலையானதாக நான் கண்டறிந்தது மூன்று பேருண்மைகளைத்தான்! இந்த நாட்டில் வாழ்ந்த அரசர் பெருமக்களும் அவர்கள் காலமும் வினோதமானது. பெரும்பாலும் அரசர்கள் ‘ஒருவரைப் பார்த்து ஒருவர்’ என்றே செயல்பட்டனர். கோயில் கட்டுவது, கல்வெட்டுகளை உருவாக்குவது, பட்டய

வடிவமைப்பு போன்றவை வடநாட்டிலிருந்து – குறிப்பாக, ஆரவல்லி மலைத்தொடரில் வாழ்ந்த சமண மதத்தவர்களிடமிருந்து – ஒரு கொடையாகத்தான் நமக்குக் கிடைத்ததாக எனக்குத் தோன்றுகிறது.

அவர்கள் எங்கிருந்து அதைக் கற்றனர் என்று தெரியவில்லை. அங்கேயிருந்து மாமல்லபுரம் வழியாக – அதாவது பல்லவர்கள் வழியாக அது சேர, சோழ, பாண்டிய மண்டலங்களை அடைந்தது என்பேன். இங்கே அதைச் செம்மையாகப் பயன்படுத்திக் கொண்டவர்களில் ராஜராஜ சோழனுக்கு பிரதான இடமுண்டு. அதே சமயம், இங்கேயும் சமணர்கள் ஆலயங்களை எழுப்பினர். மலைப்பாறைகளைப் பிளந்து, அதன் கற்களில் எழுப்பப்படும் ஆலயங்கள், அந்த மலையைப் போலவே காலாகாலத்துக்கும் உறுதியோடு இருக்கும் என்று அவர்கள்தான் கண்டறிந்தனர். அது மட்டுமல்ல, மலைக்கற்களில் பல ரகங்கள்! அதில் சில ரகங்களுக்கு ஒலியைக் கிரகித்து தக்க வைத்துக்கொள்ளும் ஆற்றல் இருப்பதையும் அவர்கள் கண்டறிந்திருந்தனர். அப்படிப்பட்ட கற்களால் கருவறைகளை உருவாக்கினர்.

அந்தக் கருவறைக்குள் ஒலியானது உருவாக்கப்படும்போது, அழியாமல் அது எதிரொலித்தபடியே இருக்கும் என்பதே ஒரு பேருண்மையாகும். இதை நாம் பூரண அமைதியான சூழலில் – குறிப்பாக யோகம் புரிந்து மனதின் அவ்வளவு சலனங்களையும் அடக்கும்போது மட்டுமே உணர முடியும். புலன்களை அடக்குவதில் பெரிதும் வல்லமை கொண்டிருந்த அவர்களே என் வரையில் ஆறாம் அறிவை அதிகம் பயன்படுத்தியவர்கள். கடுமையான உழைப்பாளிகளாகவும் அவர்கள் திகழ்ந்ததை மறுக்க முடியாது.

எனது ஆய்வில் நான் இரண்டாவதாக உணர்ந்தது, நமது நாகரிகத்தை… இன்று ஆயிரம் ஊழல்கள் இருப்பினும் சட்டம் – ஒழுங்கு ஒரு கட்டுப்பாட்டில்தான் உள்ளது. அது மட்டும்

இல்லாமல் போனால், மனிதர்கள் வெகுவிரைவில் மிருகங்களாகி, மனித இனமே கூட முற்றாக அழிந்து விடலாம். அவ்வாறு நடக்கக் கூடாது என்றால் சட்டம் ஒழுங்கு அனைவருக்கும் பொதுவாக மிக பலமானதாக இருந்தே தீர வேண்டும். இதில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் இனத்தவர்கள் உறுதியாக இருந்ததை நான் உணர்ந்தபோது பெருமிதம் எழுந்தது.நம் தொன்மைதான் உலகிலேயே முதன்மையானது. நாமே முழு முதல்குடியாக இருக்க வேண்டும் என்கிற என் கருத்து உறுதியானது. தூக்கு தண்டனை, தலையை வெட்டிக் கொல்லும் முறை, காராக்கிரகவாசம், பணிக்கைதி முறை என்று பல தண்டனை முறைகள் நம்மிடம் இருந்துள்ளன.

இதில் பணிக்கைதி முறையில்தான் கைதிகளைப் பயன்படுத்தி குடவரைக் கோயில்கள், மலைக்கோயில்கள் பல ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதும் என் கருத்து. கைதியைக் கலைஞனாக மாற்றிய நம் நாகரிகம் எனக்கு பிரமிப்பளிக்கிறது. மூன்றாவதாக மொழியறிவும், அதை நூல்களாக்கி பாதுகாத்து வந்ததும்தான்! எழுத்தாணியைக் கண்டறிந்து, அதைக் கொண்டு பனை ஓலையில் எழுதியது அசாதாரணம். இனி வரும் காலங்களில் கம்ப்யூட்டர்கள் நம் மொழி அறிவால் விளைந்தவற்றைப் பாதுகாத்திடும். அதே அளவு அவை கரப்ட் ஆகி, வைரஸால் அழிந்து போகவும் வாய்ப்பு மிகவே உண்டு. இதை வைத்துப் பார்க்கும்போது, பனை ஓலைகள் கம்ப்யூட்டரை விடவே மேலானவையாக இருப்பதை என்னால் உணர முடிந்தது!"

– கணபதி சுப்ரமண்யனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

ப்ரியாவின் கேள்விக்கு வள்ளுவர் பதில் கூறவில்லை. மாறாக, "பேசினது போதும். கேள்வி கேட்டதும் போதும்... பல கேள்விகளுக்கு நமக்கு பதில் கிடைச்சாச்சு. சில கேள்விகளுக்கு பதில் இனிமேல் கிடைக்கலாம். ப்ரியா, வர்ஷன்... உங்க இரண்டு பேருக்கும்

இப்ப நான் சொல்றேன். இனி பேச்சே கூடாது. காலப் பலகணி நம் வசப்படுற வரை, நாம வேகமா செயல்படணும். இந்தப் பாடல் வரிகள்தான் நமக்கு வழிகாட்டி... நம்முடைய எதிரியைப் பற்றி நாம கவலைப்பட வேண்டாம். எதிரினு ஒருவன் இல்லேன்னா, நாம தேடற விஷயத்தோட மதிப்பே நமக்குத் தெரியாமப் போயிடும். நமக்கு

வரம் தர்ற தேவர்களுக்கே அசுரர்கள்னு எதிரிகள் இருக்கும்போது, நமக்கு இல்லாமப் போயிடுவாங்களா என்ன? ஆகையால நாம நம்ம வேலையைப் பார்ப்போம். மற்றதெல்லாம் தானா நடக்கும்.

இப்ப பாடல் வரிகளான, ‘மனதார நாமம் சொல்லி மலை மீது நாலு காதம், வருஷனோடு பிரியாவும் வள்ளுவனும் நடக்க, உயிரெழுத்தில் நான்கதைக் கொண்டவனால் உதவி உதிரம் சிந்தக் கிட்டும்’ங்கற வரிகளுக்கு ஏற்ப என்ன நடக்குதுன்னு பார்ப்போம். புறப்படுங்க...’’ என்றவர், காரை விட்டு இறங்கினார்.

வர்ஷனும் ப்ரியாவும் ஜெர்கின் கோட் அணிந்து, உள்ளே மழையில் நனையாதபடி தங்கள் செல்போனை ஒரு பாலித்தீன் தாளில் சுருட்டி அடைத்துக் கொண்டிருந்தனர். எதற்கும் இருக்கட்டும் என்று பேனாக்கத்தி, மினி டார்ச், பிளாஸ்திரி, சல்லாத்துணி என

முதலுதவி அயிட்டங்களையும் எடுத்து வைத்திருந்தனர். வர்ஷனின் முதுகில் ஜிப் பேக்குக்குள் அவை பத்திரமாக இருந்தன. வள்ளுவர் முன் செல்ல, இருவரும் பின் தொடர்ந்தனர். மலையில் மழை பொழியும்போது நடப்பதில் உள்ள சிரமம் அப்போதுதான் அவர்களுக்குத் தெரிய வந்தது. வானில் கருங்கும்மென்று மேகக் கோட்டை... காற்றே இல்லாத சீரான மழை... மலை உச்சியில் பொழியும் நீரெல்லாம் ஒன்று திரண்டு கீழே சரிவை நோக்கி வர வர, நீரின் அளவு கூடிக் கொண்டே போய் வெள்ளம் பாய்வது போல் ஒரு தோற்றம்.

அவர்கள் மூவரும் நடப்பதை ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒளிந்திருந்து பார்த்த சதுர்வேதியும் விபாவும், சீரான இடைவெளியில் பின் தொடரத் தொடங்கினர்!

காலாலங்கிரியில் ஓங்கி வளர்ந்திருக்கும் மருத மரத்தை ஒட்டிய பரப்பில் நந்தி அடிகள் வந்து நின்றிட, அங்கு பயிற்சி பெற்று வரும் மற்றவர்கள் எல்லாமும் அவர் முன், மைதானத்தில் கூடும் மாணவர்களைப் போல கூடி நின்றனர். அவர்கள் வள்ளலார் போல வெண்ணிற ஆடையைத் தலை வரை இழுத்து மூடியவர்களாகக் காணப்பட்டனர். கைகளில் ஏட்டுக் கட்டுகள் இருந்தன. சிலர் மரப்பெட்டிகளைத் தலையில் சுமந்தபடி நின்றுகொண்டிருந்தனர்.

மழை சீராகப் பெய்தபடி இருந்தது! நனைவதைப் பற்றி யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. நந்தி அடிகள் அவர்கள் முன்னால் பேசத் தொடங்கினார்...

‘‘காலாதித்தர்களுக்கு வந்தனங்கள்! ஆதித்தன்னா சூரியன்னு ஒரு பொருள் உண்டு. காலாதித்தர்கள்னா ‘காலத்துக்கும் அழியாததை படைக்கப் போகிறவர்கள்’னு பொருள். இங்க வர முடிஞ்ச எல்லாருமே காலாதித்தர்கள்தான். ராசிக் கட்டத்துல ஆறில் ராகுவும்

பன்னிரெண்டில் கேதுவும் இருக்கப் பிறந்தவர்களே காலாதித்தர்களாக ஆக முடியும்.

இப்படி ஒரு அமைப்பு கொண்டவர்களுக்கு மறுபடியும் ஒரு பிறப்பு கிடையாது. மனிதப் பிறப்புங்கற விளையாட்டுல ஜெயிச்சு, வெற்றிங்கற முக்தியை நோக்கியதுதான் காலாதித்தர்களின் பயணம். நம் ராசிக் கட்டத்தில் எட்டில் மறைந்த புதனோடு குருங்கற கிரகம் கூடப் போய், கணக்குப் போடும் ஆற்றல் நமக்கு வந்ததுனு சொல்லலாம். இது பள்ளி, கல்லூரில போடுற பாடக்கணக்கு இல்ல... ஞானக் கணக்கு. அந்த கணக்கின்படி நம் வாழ்வு இந்த கிரியில இன்றோடு முடிகிறது. இந்த கிரியும் உருமாறப் போகிறது. இப்ப பெய்யத் தொடங்கியுள்ள மழை குறைந்தது இன்னும் மூன்று தினங்கள் நீடிக்கும். இதோட அளவை இங்க யாரெல்லாம் கணிச்சிருக்கீங்க..?''

- நந்தி அடிகள் அவர்களைப் பார்த்துக் கேட்க, எல்லோருமே கைகளை உயர்த்தி ''நூற்றி நாற்பது அங்குலம்'' என்றனர். ''எனக்கு வந்த விடையும் அதுவேதான்... மழைக்கு, கோள்கள்ல சுக்கிரன்தான் பிரதானம். நிலப்பிரதானன் செவ்வாய் - மொத்த காரணன் சந்திரன் - அடுத்து சூரியன்! இந்த நான்கு கோள்களைக் கணிச்சு, இதுக்கு முன் கடந்த ஆண்டு இதே மாதம் பெய்த மழை அளவை முன் மாதிரியா வச்சு இப்ப கணக்கு போட்டுப் பார்த்ததுல வந்த விடைதான் இந்த 140 அங்குல அளவு! சரிதானே?'' - நந்தி அடிகள் ஒரு ஆசிரியர் போலவே கேட்க, அவர்களும் ஆமோதித்தனர்.

''நல்லது... இது ஆபத்தான அளவு. கிட்டத்தட்ட ஆறடி உயர மனிதர்கள் ஒருவர் மேல ஒருவர் நிற்க அவர்கள் தலை வரை தண்ணீர் நிரம்பப் போற ஒரு காலகட்டம் இது. நம் வரையில் எதுவும் அழிவில்லை. எல்லாமே மாற்றம். நாமும் மாறப் போறோம். நம் மாற்றத்துல மரணம் ஒரு மாற்றம்னா, இடம் மாறுவதும் ஒருவித மாற்றம். இப்ப எது வேணா நடக்கலாம்.

நாம போட்டுப் பார்க்கக் கூடாத கணக்கு, நமக்கான மூச்சுக் கணக்கு. அதனால நமக்கு அடுத்து என்ன நடக்கும்னு தெரியாது. தெரியாத அந்தப் பயணம் தொடங்கட்டும். எல்லோரும் இந்த கிரிக்கு ஒரு வந்தனம் சொல்லிப் பிரிவோம். நம் அடுத்த இலக்கு விந்தியம்! புராணக் கதைகளின்படி, சூரியனையே மறைக்குமளவு உயர்ந்து வளர்ந்த மலை அது. அகத்திய முனிவரால் அது சீரானதா புராணம் சொல்லுது. அங்க நாம சந்திப்போம். உங்க வசமுள்ள ஏடுகள், உங்க உழைப்பால உருவானவை. அவற்றை கூடியவரை காப்பாத்திக்கிட்டு விந்திய மலை மையப் புள்ளியிலுள்ள சூரிய முகட்டில் எல்லாரும் சந்திப்போம். எல்லாரும் புறப்படுங்க...'' - நந்தி அடிகள் பேசி முடித்தார்.

'சபாஷ்' என்பது போல ஒரு மின்னல் வெட்டும் இடிச் சத்தமும் வானில் ஓடின. மௌனமாகக் கலைந்தவர்கள், தங்களுக்கு உள்ளே வர அனுமதியளித்திட்ட சிவநாமம் சொன்ன பாறை இருந்த பகுதி வழியாக சதுரகிரி வனப்பகுதிக்குள் புகுந்து வெளியேறத் தொடங்கினர். எவரிடமும் வேகமாகத் தப்பித்து விடும் பதற்றம் இல்லை; அதற்காக நிதானமும் இல்லை. 'நடப்பது நடந்தே தீரும்' என்று பக்குவப்பட்டவர்கள் போல அவர்கள் நடந்தனர். மரப்பெட்டி தலைமேல் இருக்க, சிலர் நடந்த விதம் பார்க்க அழகாய் இருந்தது.

நந்தி அடிகள், தான் நின்று பேசிய இடத்தில் நின்றுகொண்டே இருந்தார். அவருக்குத் தெரியும், தான் எப்போது அங்கிருந்து புறப்பட வேண்டும் என்பது. அவர் பார்வை நாலாபுறமும் ஆராய்ந்தது. தலைக்கு மேல் ஒரு சாக்கைப் போர்த்திக்கொண்டு ஒரு பாறை மேல் ஈங்கோய் நின்றபடி இருந்ததைப் பார்த்தார். நந்தி அவனை அழைக்காமல் அவனருகே சென்றவராக, ''நீ இன்னுமா இந்த மலைய விட்டுப் போகல?'' என்று கேட்டார்.

''மனசே வரமாட்டேங்குது சாமி...'' என்றான்.

அவர் சிரித்தார். அப்போது மலைச் சரிவில் நீரோட்டம் அதிகரித்து, சிறிய ரக பாறைகள் உருள ஆரம்பித்திருந்தன. அதைக் கவனித்தவர், ஒரு பெரிய பாறையின் கீழ் போய் ஈயோடு நின்றுகொண்டார். மழையளவு கூடிவிட்டது தெரிந்தது!

‘‘சாமி! என்னக் கேட்கறீங்களே... நீங்க போகலையா?’’ என்று கேட்டான் ஈங்கோய்.

‘‘நீயும் சரி, நானும் சரி... போகத்தான் போறோம். அதே சமயம், நம்மை நோக்கி ஒருத்தருக்கு அஞ்சு பேர் வந்துக்கிட்டு இருக்காங்களே!’’ என்றார்.

‘‘அஞ்சு பேருங்களா... யாருங்க சாமி அது?’’

‘‘இங்க நாம இப்படி நிக்க ஒரு கணக்கு இருக்கற மாதிரியே, அவங்க வரவும் ஒரு கணக்கு இருக்கு ஈ!’’

‘‘அழியற இந்த நேரத்துல எதுக்கு வர்றாங்க சாமி..?’’

‘‘சில அழியாத விஷயங்களைத் தெரிஞ்சுக்கவும் புரிஞ்சிக்கவும்தான்...’’

‘‘எது அழியாத விஷயம் சாமி?’’

‘‘அதைப் பேச இது நேரமில்ல ஈ!’’

‘‘அப்ப, இவங்க வருவாங்கன்னுதான் என்னை மேல நின்னு கவனிக்கச் சொன்னீங்களா?’’

‘‘ஆமா!’’

‘‘வர்ற இவங்களுக்கு எதுவும் ஆகாதா சாமி?’’

‘‘இது உனக்குத் தேவையில்லாத விஷயம்...’’ நந்தி சொன்ன பதில் ஈக்கு சற்று சங்கடத்தைத் தந்திருக்க வேண்டும். தோராயமாக அப்போது மணி மாலை நான்கிலிருந்து ஐந்துக்குள் இருக்கக்கூடும். சலித்தது போல மிக சன்னமான வெளிச்சம் மட்டுமே மிச்சமிருக்க, அந்த நேரத்தில் ‘‘ஈஷ்வரா...’’ என்று ஒரு குரல் கேட்டது.

குரல் வந்த திக்கு நோக்கி நந்தியும், ஈயும் ஓடினார்கள். சப்தம்தான் கத்தினவரை அடையாளம் காட்ட உதவியது. மிக நெருங்கிச் சென்று பார்த்தபோது, வள்ளுவர், ப்ரியா, வர்ஷன் ஆகிய மூவரும் எதிரில் நின்றிட, சதுர்வேதி மீது ஒரு பாறை விழுந்து கிடக்க, அவன் சிக்கி சக்கையாகிப் போயிருந்தான்! உடல் முழுக்க பாறையின் கீழ் கிடக்க, முகத்துக்கு மட்டும் ஒரு பாதிப்புமில்லை. அவன் கடைசிக் குரல்தான் ‘ஈஷ்வரா!’

உடன் வந்த விபா என்னவானாள் என்றும் தெரியவில்லை. ரத்தச்சகதியான அந்த இடத்திலிருந்து ஐந்து பேரும் விலகிச் சென்று ஒரு சமதளமான நிலத்தில் நின்றனர். வள்ளுவர் நந்தி அடிகளைக் கைகூப்பி வணங்கினார்.

‘‘வந்தனம் சாமி...’’

‘‘வணக்கம், நமஸ்காரம்னு சொல்லாம ‘வந்தனம்’னு இந்தக் காலாலங்கிரி வழக்கப்படி சொல்றீங்களே... நீங்க?’’

‘‘உதிரமுத்து வள்ளுவன்... முன்ன என் பாட்டன் வந்தார், இப்ப பேரன் நான் வந்திருக்கேன்...’’

‘‘இவங்க?’’

‘‘ப்ரியா, வர்ஷன்... தொல் பொருள் ஆய்வாளர் கணபதி சுப்ரமண்யனோட பேத்தி இவ...’’

‘‘ஓ... என் அருமை நண்பர் கணபதி சுப்ரமணியன் பேத்தியா?’’

‘‘அப்படின்னா என் தாத்தாவை உங்களுக்குத் தெரியுமா?’’ - அந்த மழை நனைதலிலும் ப்ரியா வேகமாகக் கேட்டாள்.

‘‘நல்லா தெரியும்மா... நானும் உன் தாத்தாவும்தான் முதல்ல இந்த மலைக்கு வந்தோம். அப்ப என் பேர் ஜோசப் சந்திரன்...!’’ - அவர் தன் பூர்வாசிரமப் பெயரைக் குறிப்பிடவும் மூவரிடமும் பெரு வியப்பு.

‘‘தாத்தா உங்களப் பத்தி சொல்லிக்கிட்டே இருப்பார். உங்கள நாங்க பார்ப்போம்னு கொஞ்சமும் எதிர்பார்க்கல. இவர் யார்..?’’

‘‘இவர் பேர் ஈங்கோய்... ‘ஈ’னு சுருங்கக் கூப்பிடுவோம்...’’ நந்தி அடிகள் ‘ஈ’யைப் பற்றி கூறிய நொடி, ‘உயிரெழுத்தில் நான்கதை கொண்டவனால் உதவி உதிரம் சிந்தக் கிட்டும் - உந்திவரும் வெள்ளமதும் அள்ளிச் சென்று காட்டும்’ எனும் பாடல் வரிகள் வள்ளுவர் நினைவுக்கு வந்திட, திபுதிபுவென வெள்ளமும் வரத் தொடங்கியது.

‘‘எல்லாரும் கையைக் கோர்த்துக்குங்க. கூடிய வரை ஒண்ணாவே தப்பிக்க முயலுவோம். அப்புறம் நம்ம கணக்கோட விடைப்படி நடக்கட்டும்...’’ என்றார் நந்தி. ‘அப்புறம் கடவுள் விருப்பம்’ என்று சொல்லாததுதான் ஆச்சரியம்! கீழே முழங்கால் அளவுக்குத் தண்ணீர் ஓடத் தொடங்கியது. அதில் சதுர்வேதியின் உடல் மூழ்கி, ரத்தத் திப்பிகள் மிதந்து வந்தன.

‘‘அனேகமா இறந்தது சதுர்வேதியாதான் இருக்கணும்... தாடி, மீசை இல்லாததால சிறு குழப்பம் எனக்கு!’’ - என்றான் வர்ஷன்.

‘‘அவனேதாம்ப்பா... அவன்கூட வந்த ஒரு பொண்ணு எங்க போனாளோ? இனி நாம அவங்களப் பத்தி கவலைப்பட வேண்டாம். பாடல் வரிகள் அப்படியே பலிச்சிக்கிட்டு வருது...’’ - எனும்போதே மலையின் ஒரு பாகம் உடைத்துக்கொள்ள, பெரும் வெள்ளநீர் அவர்களை அப்படியே அள்ளிக்கொண்டு போனது. அதில் ஐந்து பேருமே பிரிந்தனர்.

ப்ரியா மட்டும் தன்னந்தனியே மூச்சுத் திணறலோடு உருண்டு கொண்டிருந்தாள். அவள் முதுகுப் பைக்கு ஒரு பாதிப்புமில்லை. ஓரிடத்தில் பாறை ஒன்றைப் பற்றிக்கொண்டு எழுந்தாள். அங்கே ஏற்கனவே நந்தியும் ஒதுங்கியிருந்தார். கை பிடித்து அவளை மேலே தூக்கி, பாறை மேல் நிறுத்தினார். பின்பக்கமாக ஒரு குகை. அந்தக் குகை முகப்பில் சூரிய சந்திரர்கள் சின்னம் பொறிக்கப்பட்டிருக்க, ப்ரியாவை ‘‘உள்ள வாம்மா...’’ என்று அழைத்தார் நந்தி.

‘‘வர்ஷனையும் வள்ளுவரையும் காணோமே’’ - என்றாள் ப்ரியா.

‘‘அவங்க எங்கேயாவது ஒதுங்கியிருப்பாங்க, இதுதான் காலப் பலகணி உள்ள குகை. இதைத் தேடி வந்தா ஒரு அர்த்தம். தானா வந்தா ஒரு அர்த்தம். நானேகூட இப்பதான் வந்திருக்கேன். நாம ரெண்டு பேருமே தானாதான் வந்திருக்கோம். பக்கத்துல புலிச்சித்தரோட குகை இருக்கு. அதெல்லாமும் மூழ்கிப் போச்சு. நீ வேகமா வா உள்ளே. பலகணி என்னாச்சுன்னு பார்ப்போம்...’’

நந்தி அடிகள் எனப்படும் ஜோசப் சந்திரன் தாவித் தாவி பாறை மேல் நடக்க, ப்ரியாவும் நடந்தாள். இருள் கண்களை சரிக்கவும், பின்புற பேக்கைக் கழற்றி, ஜிப்பைத் திறந்து ஒரு ஓரமாய் வைத்திருந்த டார்ச் லைட்டை எடுத்து ஆன் செய்தாள். வட்டமாய் விழுந்த வெளிச்சத்தில் உள்ளே நான்கைந்து புலிகள் முட்டிக் கொண்டு நிற்பதுதான் முதலில்

தெரிந்தது.

ப்ரியாவுக்கு பகீரென்றது!

பக்கத்தில் பரந்த மலைப்பாறைச் சுவர்... சமதளம் போல மேடு பள்ளம் இன்றி! அதில் வட்டமாக கல்வெட்டு போல் பொறிக்கப்பட்ட பலவித குறிப்புகள், குறியீடுகள், உருவங்கள்! நடுவில் குடைந்தது போல ஒரு மாடம். அதனுள் பருமனாய் ஒரு ஏட்டுக்கட்டு. அதனருகே ஒரு அகல் விளக்கு அந்த நிலையிலும் அணையாமல் எரிந்து கொண்டிருந்தது.

ப்ரியாவின் டார்ச் ஒளி காட்டிய அந்த அதிசயம் அவளை வாய் பிளக்க வைக்க... ‘‘அதுதாம்மா காலப் பலகணி! இந்த பூமியோட ஜாதகம்னும் இதை சொல்லலாம். மொத்தமா 1008 ஏடுகள் கொண்ட கட்டு. இதுல ஒவ்வொரு கண்டத்துக்கும்னு குறிப்பிட்ட ஏடுகள் இருக்கு. பரத கண்டத்துக்கான ஏடுகள்லதான் நம்ம பாரத தேசத்தோட நடப்புகள் எழுதப்பட்டிருக்கு. இதைப் பார்க்க ஒரு கணக்கு, படிக்க ஒரு கணக்கு இருக்கு. போ - போய் உன் கையால எடு. சீக்கிரம்...’’

நந்தி அடிகள் குரல் உள்ளே எதிரொலியோடு கூடி ஒலித்தது. ப்ரியாவும் டார்ச் ஒளி கை கொடுக்க, அந்தப் பாறைச் சுவரை ஒட்டி மெல்ல நடந்து மாடத்தை நெருங்கி அந்தப் பலகணி ஏட்டை வலக்கையில் எடுத்தாள்! அந்த நொடியில் பூகம்பம் வந்து விட்டது போல மலையே குலுங்கியது. ஏட்டுக்கட்டில் சில ஏடுகள் மட்டும் அவள் கையில் தங்கிட, கட்டானது நழுவிக் கீழே விழுந்தது. அதைப் பாய்ந்து பிடித்த நந்தி அடிகள், அப்படியே வழுக்கிக்கொண்டே வெளியேற, ப்ரியா ஸ்தம்பித்தாள்!

58

“என் ஆய்வு என்பது ‘பழமைதான் மேலானது’ என்று கூறுவதற்கானதல்ல... பழமையும் மேலானது என்பதே என் கருத்து. இதனூடே இன்னொரு உண்மையும் இழையோடுகின்றது. எப்போதும் எல்லாமே மாறிக்கொண்டே இருக்கிறது. மாற்றம் இல்லாத நாள் என்று ஒரு நாள்கூட இல்லை. இந்த மாற்றம் மட்டுமே மாறாதது என்பதை நாமும் அறிவோம். அப்படிப்பட்ட இம்மாற்றம் என்பது காலத்தை ஒட்டியதாகவும், காலம் தீர்மானிப்பதாகவுமே உள்ளது. ஆகையால் இனி வரும் நாட்களிலும் அப்படியே எல்லாம் நிகழப் போவதை நாம் உணர வேண்டும்.

மாறாமலே ஒன்று இருக்கிறது என்றால் அது வளராமல் நின்றுவிட்டது என்றோ அல்லது அதை ஏதோ ஒரு விதத்தில் சமூகம் புறக்கணித்துவிட்டது என்றோ நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். ‘பழைய இலக்கியங்கள் திருக்குறள், ஆத்திச்சூடி, ராமாயணம் போன்றவை மாறாமல் அப்படியேதானே உள்ளன’ என்று சிலர் கேள்வி கேட்கலாம். அதன் கருத்து மாறவில்லை... எழுத்தும் மாறவில்லை. ஆனால் அதன் வடிவம் மை எழுத்தில் இருந்து கம்ப்யூட்டரின் ஒளி எழுத்துக்கு மாறிவிட்டது.

மிகப் பெரிய அதன் வடிவம் ஒரு சிறு ஃபைல் என்றாகிவிட்டது. அப்படி அது மாறினாலே அதனால் காலம் கடந்து வாழ்ந்திட முடியும். இவ்வேளையில், கஞ்சமலையில் நான் மேற்கொண்ட ஆய்வு ஒரு முடிவை எட்டாமல் பாதியில் நின்றுவிட்டதை குறிப்பிட வேண்டும். ஜோசப் சந்திரன் ஒரு ஆய்வாளர் எனும் நிலையில் இருந்து சித்தபுருஷராக தன்னை மாற்றிக்கொண்டுவிட்ட நிலையில், அதன் பின் அவர் எங்கு

போனார், என்ன ஆனார் என்பதும் தெரிந்திடாத நிலையில், அவரின்றி அந்த ஆய்வை நான் மேற்கொள்ளவில்லை.

ஒவ்வொரு சித்திரை பௌர்ணமி நாளின் போதும் நான் கஞ்சமலையை நினைத்துக் கொள்வேன். கஞ்சமலை என்பதே தங்கமலை என்பதன் மாற்றம்தான் என்பர். காஞ்சனம் என்றால் தங்கம் என்றுதானே பொருள்? எனவே, காஞ்சனமலை என்பதே காலப்போக்கில் திரிந்து கஞ்ச மலையாகியிருக்க வேண்டும். மேலோட்டமாக இரும்பும், நுட்பமாக தங்கமும் அங்கே நிச்சயம் உள்ளது. இதைக் கண்டறிந்திட ஒரு விஞ்ஞானியாகவோ, ஆய்வாளனாகவோ மட்டும் இருந்தால் போதாது. மேலான சித்தனாகவும் இருக்க வேண்டும். எனக்கு வாய்ப்பு கிடைத்தும் அந்த வாழ்க்கைக்குள் நான் செல்லவில்லை. செல்ல முடியவில்லை. இப்போது கூட பத்ம விருது கிடைத்த அந்த நாளையும் காலாலங்கிரி மலை முகப்பில் உள்ள அந்த சிவநாமக் கற்பாறையையும் நான் நினைத்துப் பார்க்கிறேன். அது ஜோசப் சந்திரனுக்கு வழிவிட்டது. என்னை திருப்பி அனுப்பிவிட்டது! இன்று அங்கே காலாலங்கிரி இருந்த தடயமே இல்லை. ஒரு மழைவெள்ளம் அந்த மலையையே புரட்டிப் போட்டுவிட்டது!" – கணபதி சுப்ரமண்யனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

தன் வசமுள்ள அந்தச் சில ஏடுகளை ப்ரியா தன் முதுகுப்புறத்து பேக்குக்குள் வைத்துக் கொள்ளவும் முனைந்தாள். அவ்வளவு நீர்ப்பெருக்கிலும் அந்த பேக்கின் மேல் பகுதிதான் நனைந்திருந்தது உள் பாகத்துக்குள் நீர் செல்ல வழி இல்லாதபடி அது தயாரிக்கப்பட்டிருந்தது. ஜிப்பை விலக்கி உள்ளே அந்தப் பனை ஏடுகளை அவள் மிகப் பதமாக ஒரு பாலித்தீன் கவருக்குள் வைத்தவளாக திரும்ப ஜிப்பை மூடினாள். ஒரு பாறை மேல் நின்றுகொண்டு இதனை அவளால் செய்ய முடிந்தது. அந்தப் பதட்டமான சூழலில் ஒரு நம்பிக்கை மட்டும் அவளிடம் பெரிய

அளவில் இருந்தது. நிச்சயம் தனக்கு எதுவும் ஆகிவிடாது என்கிற நம்பிக்கைதான் அது.

சுற்றிலும் நீரின் பாய்ச்சல்!

மழையும் சீராக பெய்தபடியே இருந்தது. ஒரு கட்டத்தில் தான் நின்றிருக்கும் பாறையையும் நீர் மூழ்கடித்துவிடும் என்று தோன்றியது. இறுதியில் அப்படியே ஆயிற்று. அவள் நின்றிருந்த பாறை மெல்ல ஆட ஆரம்பித்தது. ஹோ வென்ற இரைச்சலில்

வள்ளுவரும், வர்ஷனும் என்னவாகியிருப்பார்கள் என்கிற கேள்வியும் எழும்பியது. அதனூடே அந்தப் பாறை உருளத் தொடங்கவும் ப்ரியாவும் அதை விட்டு நீரில் குதித்து அதன் போக்கிற்கு போகத் தொடங்கினாள்.

நல்லவேளையாக ஒரு பருத்த மரத்தின் கிளை இடையில் அகப்பட, இறுகப் பிடித்துக் கொண்டாள். அப்படியே அந்தக் கிளை மேல் படுத்து மெல்ல ஊர்ந்து மேலான ஒரு கிளை பாகத்தின் மேல் ஏறி அங்கே வாட்டமான ஒரு இடத்தில் உட்கார்ந்துகொண்டாள்.

அவளுக்குக் கீழே வெள்ளம் மிரட்டலாகப் பாய்ந்தபடியே இருந்தது. அவள் கற்பனை கூட செய்திராத காட்சி. வானத்துக்கு கோபம் வந்து அது பூமியோடு சண்டை போட்டால் பூமி என்னாகும் என்பதற்கு ஒரு சாட்சி போல அது இருப்பதாகத் தோன்றியது. இப்போதெல்லாம் சற்று வித்தியாசமான காட்சி என்றாலே கூட செல்போனில் படம் பிடிக்கும் ஒரு வழக்கம் உருவாகிவிட்ட நிலையில் அந்த வெள்ளத்தையும் படம் பிடித்துக் கொள்ள அவளுக்கு விருப்பமாக இருந்தது. அதே சமயம் கவிழ்ந்து வரும் இருட்டு அது சாத்தியமில்லை என்று உணர்த்தியது. இரவுப் பொழுதை எப்படிக் கழிக்கப் போகிறோமோ என்று அச்சமாகவும் இருந்தது. வர்ஷனும் வள்ளுவரும் என்னாகியிருப்பார்கள்? நந்தி அடிகள் கூட என்னைப் போலவே எங்காவது ஒதுங்கி தப்பித்திருப்பாரா? இல்லை, வெள்ளம் அவரை ஏதாவது செய்திருக்குமா?

‘ஹோ’வென்று வெள்ளநீர் அந்த மலைப்புரத்துச் சரிவில் பாய்ந்தபடி இருக்க, மரத்தின் மேல் அமர்ந்திருந்தவளுக்குள் கேள்விகள் முட்டி மோதிக் கொண்டிருக்க, அவள் அமர்ந்திருந்த மரக்கிளை ஒரு முறை யாரோ குலுக்கியது போல குலுங்கியது. இந்த மரமும் பெயர்ந்து விழுந்து அடித்துச் செல்லப்படப் போகிறதோ என்று அச்சத்தோடு நினைத்தாள். ஆனால், எதிரில் வர்ஷன்தான் அவளைப் போலவே நீரில் மூழ்கிய நிலையில் உள்ள கிளையினைப் பற்றியிருந்தான்.

மங்கி விட்ட வெளிச்சத்தில் அவனது சிவப்பு ஜெர்கின் மட்டும் பார்வையில் பதிவானது. ‘‘வர்ஷா…’’ என்றாள் மிக வேகமாய். அவனும் அதைப் பற்றிக்கொண்டே அண்ணாந்து பார்த்திட ப்ரியா தெரிந்தாள். அடுத்த சில நிமிடங்களில் அவளைச் சமீபித்தவன் அது மரக்கிளை என்பதையும் மறந்து அவளை இறுக்கமாக இழுத்து அணைத்தான். அவளுக்கும் அது பெரிய தேவையாக இருந்தது.

அந்த அணைப்புக்கு நடுவில் இருவரிடமும் பேச்சே இல்லை. பல நிமிடங்களுக்குப் பிறகே ப்ரியா பேசத் தொடங்கினாள்.

‘‘வர்ஷா... வாகா என் பக்கத்துல உக்காரப்பாரு. இருட்டிடிச்சு. நாம இந்த மரக்கிளைலதான் பொழுதைக் கழிச்சாகணும்னு நினைக்கறேன்’’ என்றாள். அவனும் சிரமப்பட்டு அவளுக்குப் பக்கத்தில் வாகாய் உட்கார்ந்து காலைத் தொங்கவிட்டான். தொடைப் பரப்பில் பேன்ட் கிழிந்து ரத்தம் வழிந்தபடி இருந்தது. ப்ரியா முதுகுப் பக்கத்து பேக்கை முன்பக்கமாய் கொண்டுவந்து டார்ச்சை எடுத்து அடித்து அவனைப் பார்த்தாள். அப்படியே ‘‘வள்ளுவரய்யா என்ன ஆனார்?’’ என்று கேட்டாள்.

‘‘தெரியல ப்ரியா... நான் உன்ன பார்த்தது, இந்த மரத்து மேல உட்கார்ந்துகிட்டிருக்கறதே கூட நிஜமா இல்ல கனவாங்கற மாதிரி இருக்கு...’’

‘‘எனக்கும் அப்படித்தான் இருக்கு. ஆனா, நம்ம உயிருக்கு எந்த ஆபத்தும் வராதுனு உறுதியா தோணுதுடா. ஏன்னா என் கைல காலப்பலகணியோட சில ஏடுகள் இருக்கு!’’

‘‘சில ஏடுகள்னா மற்ற ஏடுகள்லாம்...?’’

‘‘அது ஜோசப் சந்திரன்ங்கற நந்தி அடிகள்கிட்ட இருக்கு. என் கண் எதிர்ல அந்த ஏடுகளோட அவரை வெள்ளம் அடிச்சிக்கிட்டுப் போனதை பார்த்தேன்...’’

‘‘அப்ப அவரும் நிச்சயம் உயிரோடதான் இருப்பார் இல்லையா?’’

‘‘இதுவரை நடந்ததை வச்சு பார்த்தா அப்படித்தான் நினைக்கத் தோணுது. வள்ளுவரய்யாவும் தப்பிட்டா ரொம்ப நல்லா இருக்கும்...’’

‘‘அய்யாவுக்கு நிச்சயமா எதுவும் ஆகாது. ஆகவும் கூடாது. அவராலதான் இவ்வளவு தூரம் நம்மால வர முடிஞ்சது. நம்மளை ஏமாற்ற எவ்வளவோ திட்டம் போட்டும் சதுர்வேதியால எதுவும் பண்ண முடியலை பார்த்தியா? கடைசியில அவன் இங்க நசுங்கிச் சாகணும்னு விதியில இருக்கும்போது அதை யாரால மாற்ற முடியும்?’’

‘‘விதி... இந்த இரண்டு எழுத்து வார்த்தையைத்தான் நான் இப்ப ரொம்பவே சிந்திக்கிறேன். என்ன ஒரு வலிமையான சொல் இல்ல..?’’

‘‘உலகத்துலயே வலிமையான முதலும் முடிவுமான சொல் இது மட்டும்தான். நீயும் நானும் சென்னைல இருந்திருந்தா இப்ப டி.வி பாத்துக்கிட்டு இருப்போம். இப்படியா ஒரு மலை மேல வெள்ளத்துக்கு மேல ஒரு மரத்துல உட்கார்ந்துகிட்டிருப்போம்?’’

‘‘சரியாச் சொன்னே வர்ஷன்... இருந்தாலும் கேட்கறேன். இந்த ராத்திரி நமக்கு எதுவும் ஆயிடாதுதானே? கீழ பார்... முந்தி கால்கட்டை விரலை உரசிக்கிட்டு தண்ணீர் போனது. இப்ப முழங்காலுக்குப் போகுது!’’

‘‘தைரியமா இரு... நம்முடைய தேவை இப்ப அதுமட்டும்தான்...’’

‘‘ஆமா, டைம் இப்ப என்ன இருக்கும்?’’

‘‘இரு பாக்கறேன்...’’ வர்ஷன் தன் ரேடியம் வாட்டர்புரூஃப் டிஜிட்டல் கடிகாரத்தைப் பார்த்தான் மணி ஏழாகியிருந்தது. மணி ஏழு!

சென்னையில் கணபதி சுப்ரமண்யன் இல்லத்துக்குள் மழைக் கோட்டெல்லாம் தண்ணீர் சொட்ட வீட்டுக்குள் நுழைந்திருந்தார் அந்த

போலீஸ் அதிகாரி. கணபதி சுப்ரமண்யனின் போர்டிகோவில் கிட்டத்தட்ட கணுக்கால் தண்ணீர் இருந்தது. நல்ல வேளை அங்கிருந்து மூன்றடி உயரத்தில் இருந்தது கணபதி சுப்ரமண்யனின் பங்களா.

மழை நீர் உட்புக வாய்ப்பு இல்லாத நிலையில் அந்த அதிகாரி நனைந்துவிட்ட தன் ஷூக்களை கழற்றி விட்டவராக உள் நுழையவும், ஹாலில் அனந்தகிருஷ்ணனும் பத்மாசினியும் தவிப்போடு அமர்ந்திருந்தனர். பத்மாசினி ப்ரியாவுக்கு போன் செய்து பார்த்து நாட் ரீச்சபிள் என்கிற வார்த்தையையே பதிலாகப் பெற்றிருந்தாள். அதிகாரியை அனந்தகிருஷ்ணன் ஏறிட்டார்.

‘‘என்ன சார்... மழை நேரத்துல கூடவா எங்கப்பாவை விடமாட்டீங்க. என்ன விஷயம்?’’

‘‘ஒண்ணுமில்ல, முக்கியமான ஒரு என்கொயரி இருக்கு...’’

‘‘அதான் எல்லாம் முடிஞ்சு போச்சே... இன்னும் என்ன சார் என்கொயரி?’’

‘‘எதுவும் முடியலை சார்... இப்பதான் எல்லாம் புரியவே தொடங்கியிருக்கு. பை த பை உங்ககிட்டயும் ஒரு கேள்வி இருக்கு எனக்கு... உங்க டாட்டர் டெல்லி போயிருக்காங்கனு தானே சொன்னீங்க?’’

‘‘ஆமா... அதுல என்ன சந்தேகம்?’’

‘‘வெரி சாரி... அவங்க டெல்லிக்குப் போகல... இங்க தெற்குப் பக்கமா சதுரகிரி மலைப்பக்கம் போயிருக்காங்க!’’

‘‘வாட்..?’’

‘‘சார், உள்ளதானே இருக்கார்?’’

‘‘ஆமாம்... அதுசரி, என் மகள் சதுரகிரி மலைப்பக்கம் போனானு எதை வச்சி சொல்றீங்க?’’

‘‘எங்களுக்குன்னு ஒரு நெட்வொர்க் இருக்கும்போது இதைச் சொல்றதா கஷ்டம். பை த பை இங்க உங்க வீட்ல நாங்க பார்த்த வாய்ஸ் ரிசீவர் மைக்ரோ சிப் மார்க்கெட்ல கிடைக்காத ஒண்ணு. சி.பி.ஐ அப்புறம் ‘ரா’ மாதிரி அமைப்புல உள்ளவங்க மட்டுமே பயன்படுத்துற ஒண்ணு அது. டெல்லில ‘ரா’ உளவுப்பிரிவைச் சேர்ந்த கிலானிங்கற நபரோட சிப் அது. அதை உங்க அப்பாவோட பெட்ரூம்ல நாங்க எதிர்பார்க்கவேயில்லை. அதுக்குக் காரணம் இங்க வந்துட்டுப் போன சதுர்வேதியும் அவரோட உதவியாளப் பெண்மணி விபா விஸ்வநாத்தும்தான். குறிப்பா, விபா கிலானிகிட்ட இருந்து வாங்கிட்டு வந்து இங்க உங்க அப்பாவோட அறைக்குள்ள வச்சு அவர் பேசற பேச்சை ஒட்டுக் கேட்டிருக்கா. உங்க அப்பாவால அந்த சதுரகிரி மலைக்குப் போய் அங்க ஒரு தேடல்ல ஈடுபட முடியல. தனக்கு பதிலா உங்க மகளை அனுப்பியிருக்காரு. கூடவே, உங்க மகளோட நண்பரும் வயசான வள்ளுவரும் போயிருக்காங்க. எல்லா டோல்கேட்லயும் அவங்க போன கார் CCTV கேமராவுல பதிவாகியிருக்கு. உள்ள அவங்க இருக்கறது கூட சில இடங்கள்ல தெளிவா இருக்கு!’’

‘‘சரி சார்... இவங்க சதுரகிரிக்குப் போனது அவ்வளவு பெரிய விஷயமா... அதை இவ்வளவு டீப்பா கவனிச்சது எதுக்காக?’’

“என்ன மிஸ்டர் அனந்தகிருஷ்ணன். அவங்க அந்தப் பக்கம் எதுக்கு போனாங்கனு உங்களுக்குத் தெரியாதா..? ஏதோ ஜோதிடக் குறிப்புகள் கொண்ட ஒரு ரகசிய ஏட்டைத் தேடி அவங்க போக விரும்பினது உங்களுக்குத் தெரியாது..?”

“இப்ப நீங்க சொல்றவரை சத்தியமா தெரியாது சார். அவ எங்கப்பாவோட ஆராய்ச்சி சம்பந்தமான விஷயத்துல ஈடுபடக்கூடாதுனு சொல்லி டெல்லிக்கு அனுப்பிட்டதாத்தான் நாங்க நம்பிக்கிட்டிருக்கோம்!”

“வெரி சாரி... அவங்க மழை வெள்ளத்துல சிக்கி காணாமப் போயிட்டாங்க. உயிரோட இருக்க வாய்ப்புகள் ரொம்ப கம்மி. இதை எதை வச்சு சொல்றேன்னா அந்த சதுர்வேதிங்கற சாமியாரும் அங்க பலியாகிட்டார். அவரோட உதவியாளர் விபா விஸ்வநாத் உயிர் தப்பி வந்து தகவல் சொன்னாங்க. இங்க சென்னைல மட்டும் வரலாறு காணாத மழை இல்ல. அங்கேயும்தான்! அந்த மலைல காட்டாறுகள் மிக அதிகம்!”

அந்த அதிகாரி சொல்லச்சொல்ல, பத்மாசினிக்கு தலையைச் சுழற்றிக்கொண்டு மயக்கம் வர ஆரம்பித்தது. தட்டுத் தடுமாறிக்கொண்டு கணபதி சுப்ரமண்யனும் வந்து நின்றார்!

59

“காலாலங்கிரி மழை வெள்ளத்தால் அழிந்து வேறு வடிவம் எடுத்தது போலவே பல கிரிகள் – அதாவது மலைகள் தங்கள் வடிவத்தை மாற்றிக்கொண்டுள்ளன. மலைகள் மட்டுமா? பூமியின் எல்லா பாகங்களுமே மாறிக்கொண்டுதான் இருக்கின்றன. மாற வேண்டும்... இல்லாவிட்டால் தேக்கநிலை தோன்றி வளர்ச்சி இல்லாமல் போய்விடும். இதில் என்னை பிரமிக்க வைக்கும் ஒரு

விஷயம், சூரிய உதயமும் அஸ்தமனமும்தான்! இத்தனை ஆயிரம் ஆண்டுகளில் ஒரு நாள் கூட சூரியன் சரியான நேரத்துக்கு உதிக்காமல் இருந்ததில்லை; பூமியின் சுழற்சியிலும் சிறு பிசகு இல்லை. ஆனால், இந்த பூமியில் வாழும் நாம் இதுபோல துளியும் பிசகில்லாமல் ஒரு காரியமாவது செய்திருப்போமா? இதனால்தான் 'உதிக்கும் முன் விழிப்பவனை மதிக்கும் இந்த உலகு' என்கிற சொலவடை வந்திருக்குமோ என்றுகூட தோன்றுகிறது. தேடல் மிகுந்த என் வாழ்வில் நான் புரிந்துகொண்டதெல்லாம் ஒன்றுதான். 'முழுமையான நம்பிக்கை என்றும் தோற்காது' என்பதே அது. ஒரு துளி சந்தேகமிருந்தாலும், விதி அதைக் கொண்டு நம்மோடு விளையாடத் தொடங்கி, தான் வெல்லப் பார்க்கும்.

இந்த முழுமையான நம்பிக்கையை நாம் ஒன்றின் மேல் எப்படி வைக்கிறோம் என்பதில்தான் எல்லாமே உள்ளது. நாம் எதையும் கொண்டு செல்ல முடியாது, நம் உடல் உட்பட...! சாலைகளில் நாம் காணும் ஒவ்வொரு இறுதி ஊர்வலமும் நமக்கு இந்தப் பாடத்தை போதிக்கிறது. இருந்தும், நாம் காலகாலத்துக்கும் வாழப் போவது போல கனவு காண்பதும் சொத்து சேர்ப்பதும் பெரும் விந்தைதானே?

எனது இந்த நூல் மூலமாக நான் அறிவுறுத்த விரும்பும் ஒரு விஷயமும் இருக்கிறது... ஆன்மிகத்தைக் காப்பாற்ற கோயில், குளங்கள் இருப்பது போல, சரித்திரத்தைக் காப்பாற்ற எல்லா ஊர்களிலும் அந்த மாவட்ட வரலாற்றைச் சொல்லும் – குறைந்தபட்சம் அந்த ஊர் வரலாற்றைச் சொல்லும் ஒரு மியூசியம் கட்டாயமாக இருக்க வேண்டும்.

அதில் கல்வெட்டுகளோடு, பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் இடம்பெற வேண்டும். பள்ளி மாணவர்கள் ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் ஒரு முறையாவது அங்கு வந்து செல்ல வேண்டும். மாணவப் பருவத்தில் பார்க்கும்

காட்சிகள் மனதை விட்டு அகலாது. இந்த வரலாற்றுப் பார்வை மனதை விசாலமாக்கும். வாழ்க்கையைப் பற்றிய பார்வையில் மாற்றங்களை உருவாக்கும். அகந்தையை அழிக்கும். உண்மையை உணர்த்தும். மாறிக்கொண்டே போகும் மனித நாகரிகத்தில் மாறுவது, மாறாதது என்கிற இரு விஷயங்களையும் வரும் காலத்தில் வருபவர்கள் சிந்திக்க இது உதவும்.வெள்ளத்தில் பெருவெள்ளம், காலவெள்ளமே! அதில் அடித்துச் செல்லப்படுபவை பலவீனமானவை. பலமானவை காலத்தோடு சேர்ந்து நிலைத்து நின்று ஒரு கட்டத்தில், அவையே 'காலம்' என்றாகி விடும்.

திருவள்ளுவர் ஆண்டு என்று நாம் கூறுவதும் அந்த விதத்தில்தானே?''- கணபதி சுப்ரமணியனின் ஆய்வுக் கட்டுரையிலிருந்து...

கணபதி சுப்ரமணியனைப் பார்த்த போலீஸ் அதிகாரி சற்றுத் தடுமாறினார். அதற்குள் அனந்தகிருஷ்ணன், மயங்கி விழுந்த பத்மாசினியை தண்ணீர் தெளித்து எழுப்ப முயன்றார். அவளும் மலங்க மலங்க கண்விழித்தாள். விழித்த வேகத்தில் அனந்தகிருஷ்ணனைக் கட்டிக் கொண்டு, ''என்னங்க! எனக்கு பயமா இருக்குங்க... உங்க அப்பா செஞ்சது கொஞ்சம்கூட சரியில்லீங்க...'' என்று விம்மினாள். அனந்தகிருஷ்ணனும் அப்பாவை எரிப்பது போலப் பார்த்தார்.

அந்த போலீஸ் ஆபீஸர் கணபதி சுப்ரமணியனை மதிப்பாகவும் மரியாதையாகவும் பார்த்தார். அப்படியே, ''நிக்காதீங்க சார்... உட்காருங்க! நானே உங்க ரூமுக்கு வர்றதா இருந்தேன்'' என்றார்.

''நீங்க பேசினதை எல்லாம் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன் சார். என் பேத்திக்கு எதுவும் ஆகாது. அவ நாளைக்கே ஜம்முனு கைய வீசிக்கிட்டு வரப் போறத நீங்க பார்ப்பீங்க... பை த பை, நீங்க என்கிட்ட பேச வேண்டிய விஷயம் ஏதாவது பாக்கி இருக்கா?'' -

கேட்டபடியே சோபாவில் அமர்ந்தார் கணபதி சுப்ரமணியன்.

‘‘அந்த சதுர்வேதி சம்மந்தமாதான் சார் பேச வந்தேன். அவருக்கு சதுரகிரி மலைக்குப் போகணும்ங்கறது நெடுநாள் ஆசையாம். அப்படித்தான் அவர் அந்த மலைக்குப் போயிருக்காரு. இதைத்தான் விபா சொல்றாங்க. ஆனா, இங்க உங்க அறையில கிடைச்ச வாய்ஸ் ரிசீவர் கருவி அவங்க ஒரு பிளானோட - அதாவது, உங்க பேத்தியைப் பின் தொடர்ந்து போனாங்கனு சொல்லுது. அதுதான் உண்மையும் கூட! அப்படிப் போன இடத்துல சதுர்வேதி இறந்துட்டாரு. இந்தம்மா தப்பி வந்துட்டாங்க. இந்த வாய்ஸ் ரிசீவரை நான் இங்க கண்டுபிடிச்சு அழிச்சது தெரியாம, என்கிட்டயே சதுர்வேதி இறந்துட்ட தகவலைச் சொன்னாங்க. அவங்க நோக்கம், சதுர்வேதி இறந்த தகவலை இம்மீடியட்டா உலகம் முழுக்க சட்டபூர்வமா தெரியப்படுத்தறதுதான். அவர் இறப்பு ஒரு விபத்துன்னும் பதிவாகணும்ங்கறாங்க. அது உண்மையா இருந்தாலும், அவங்க இரண்டு பேருமே உங்க பேத்தியை ஃபாலோ பண்ணினதுதானே உண்மையிலும் உண்மையான காரணம்?’’

‘‘சரி... அதுக்கென்ன இப்ப?’’ - கணபதி சுப்ரமணியன் சற்று அலட்சியமாகவே கேட்டார்.

‘‘என்ன சார் சாதாரணமா இப்படிக் கேட்டுட்டீங்க? உங்க பேத்தியும் அவங்க நண்பரும் கூடவே வள்ளுவரும் இந்தக் கடுமையான மழை வெள்ளத்துக்கு மத்தியில எதுக்கு சார் அந்த சதுரகிரிக்குப் போகணும்?’’

‘‘சரி! அவங்க ஒரு தேடலோடதான் போனாங்க... இப்ப என்ன அதுக்கு?’’

‘‘அதுக்கும் இறந்துட்ட சதுர்வேதிக்கும் சம்மந்தம் இருக்கா இல்லையா?’’

‘‘நிறையவே இருக்கு... என் பேத்தியை நான் அனுப்பினது காலப் பலகணியைக் கண்டுபிடிக்க! சதுர்வேதிக்கு இந்த மாதிரி நாளைக்கு நடக்கப்போறதை முன்னாலயே சொல்ல முடிஞ்ச விஷயங்கள்தான் தேவை. அதனால அவன் அந்த விபாங்கற பெண் உதவியோட அவங்கள தொடர்ந்து போய், கடைசில நசுங்கி செத்தும் போயிட்டான். அதே சமயம் தப்பிட்ட அந்த விபா ஒண்ணும் லேசுப்பட்டவ இல்லை. அவகிட்ட ஜாக்கிரதையா இருங்க!’’

‘‘அதை நாங்க பாத்துக்கறோம். ஒளிவுமறைவில்லாம பளிச்சுனு பேசிட்டீங்க... நன்றி! அது என்ன காலப் பலகணி? நிஜமா அப்படி ஒரு பிரெடிக்ஷன் மேட்டர் இருக்கா?’’

‘‘இல்லாமதான் வரிசையா பலபேர் செத்துப் போனாங்களா?’’

‘‘ஓ... அப்ப அதுதான் உங்க பேத்தியையும் வள்ளுவரையும்கூட சாகடிச்சிருக்குமோ?’’

‘‘நிச்சயமா இல்லை! சுயநலமா தேடிப் போறவங்களும் அதைக் கொண்டு எதையாவது பண்ண நினைக்கறவங்களும்தான் செத்துப் போவாங்க. நான் அதைத் தேடலை... என்னைத்தான் அது தேடி வந்தது. அதே போல என் பேத்தி கூட எனக்காகத்தான் போயிருக்கா. இந்தக் காலோட நான் எப்படிப் போக முடியும்?’’ அவர்கள் இருவரும் பேசிக்கொண்டது அனந்தகிருஷ்ணனையும் பத்மாசினியையும் மேலும் கோபப்படுத்தியது.

‘‘அப்பா! இவர் இவ்வளவு சொல்றாரு. நீங்க கொஞ்சம்கூட பதற்றப்படாம பேசறீங்களே... எப்படிப்பா முடியுது உங்களால?’’ என்று அனந்தகிருஷ்ணனும் கத்தினார்.

‘‘தலைக்கு மேல வெள்ளம் போயிடிச்சு. இனி சாண் போனா என்ன, முழம் போனா என்ன..? அனந்தா! நீ என்னதான் கார்ப்பரேட் மேனா இருந்தாலும், ஒரு பெண்ணுக்கு அப்பாவா-உணர்வுரீதியாதான் அதிகம் யோசிக்கறே! லுக், ப்ரியா உனக்கு மகள்னா எனக்குப் பேத்தி. என் பேத்திய நான் ஒரு ஆபத்தான விஷயத்துல இறக்கி விடுவேனா?’’

‘‘விட்டுட்டீங்களேப்பா..?’’

‘‘வாஸ்தவம்தான்! நாளைக்கு அவ காலப் பலகணியோட வந்து நிக்கும்போது, உலகமே அவ சொல்றத கேக்கும்போது, இப்படி நீ பயந்தோ பதற்றப்பட்டோ பேச மாட்டே. பெருமைதான் படுவே...’’

‘‘மண்ணாங்கட்டி பலகணி... என் பொண்ணு மட்டும் வராம போகட்டும். உங்கள அப்பான்னுகூட பார்க்க மாட்டேன்!’’-அனந்தகிருஷ்ணன் பிரஷர் எகிறப் பேசியது, அந்த போலீஸ் அதிகாரியையும் சற்று அதிரச் செய்தது.

‘‘அப்படி என்ன சார் அதுல இருக்கு... இது எப்படி சார் டெல்லில இருந்த அந்த சதுர்வேதிக்குத் தெரியும்?’’ - போலீஸ் அதிகாரி மெல்லிய குரலில் கேட்டார்.

‘‘என் பேத்தி வரட்டும் சார்... எல்லாத்துக்கும் உங்களுக்கு நான் விரிவா பதில் சொல்றேன். நீங்க இப்ப புறப்படுங்க! உங்ககிட்ட ஒரு வேண்டுகோள் மட்டும் வச்சுக்கறேன். இந்த விஷயத்துக்குள்ள நீங்க தயவுசெய்து வராதீங்க. குறிப்பா, அந்த விபா உங்களை தன் விருப்பத்துக்கு ஆட்டி வைக்க நிறைய சான்ஸ் இருக்கு. அவ

பேச்சைக் கேட்காதீங்க. கேட்டா நீங்களும் சாக நேரலாம். அவ இனி தன்னை அந்த சதுர்வேதியோட ‘எந்திர மந்திர தந்திரா’ங்கற அமைப்போட தலைவரா பிரமோட் பண்ணிக்குவா. என் பேத்தி உயிரோட, அந்தப் பலகணியோட வரும்போது, உங்க மூலமாவே கூட அதை அபகரிக்க முயற்சி செய்யலாம். அது மட்டும் அவ வசப்பட்டுட்டா, சதுர்வேதி சாதிக்க நினைச்சதை அவ சாதிச்சிடுவா.

அமெரிக்க பிரசிடென்ட் ஒபாமாவுக்கே போன் பண்ணி, ‘இந்தத் தேதில நீ தடுக்கி விழுவே... இந்தத் தேதில காய்ச்சல்ல படுப்பே... இந்தத் தேதில உன் ஐம்பது ஸ்டேட்ல ஒரு ஸ்டேட்ல கேத்ரினா புயல் மாதிரி ஒரு புயல் வரும்’னு சொல்லி கலக்கி எடுப்பா. அப்புறம் விபாதான் உலகத்தோட தலையெழுத்தை எழுதறவனு மாறிடும். ஆனா அப்படி எல்லாம் நடக்காது; நடக்கவும் போறதில்லை. நடக்கணும்னு இருந்தாதான் சதுர்வேதி செத்தே போயிருக்க மாட்டானே!’’ - கணபதி சுப்ரமணியன் பேசிய விதம் அந்த அதிகாரியை மிரட்டிற்று. கலங்கிய முகத்தோடு பார்த்தார்.

‘‘திரும்பவும் சொல்றேன்... அவ பேச்சைக் கேட்காதீங்க! இங்க ஆழம் பார்க்கவும் வராதீங்க. அப்படி நடந்தா நிச்சயம் உங்களுக்கு ஆபத்து இருக்குனு அர்த்தம். நான் மூடநம்பிக்கையில இதைச் சொல்லல... நடந்ததை எல்லாம் வச்சுத்தான் சொல்றேன்... நீங்க புறப்படலாம்!’’ என்றவரை வெறித்தபடியே கிளம்பினார் அந்த போலீஸ் அதிகாரி.

கணபதி சுப்ரமணியனும் அனந்தகிருஷ்ணன், பத்மாசினியை வெறித்தபடியே, ‘‘போடா... போய் நிம்மதியா தூங்கு! நாளைக்கு இதே நொடி நிலையே வேற...’’ என்றார். அனந்தகிருஷ்ணனால் எதுவும் பேச முடியவில்லை.வெளியே தான் வந்த காரில் ஏறிய அந்த போலீஸ் அதிகாரி, கணபதி சுப்ரமணியனின் வீட்டை விட்டு

வெளியேறிய நொடியில் காரின் பின்புறமிருந்து விபா எழுந்தாள். ‘‘என்ன சொன்னார் கணபதி சுப்ரமணியன்?’’ - என்றும் கேட்டாள்.

அந்த அதிகாரி சிரித்தார்.

மழை வலுத்து விட்டிருந்தது. சாலையைப் பார்த்து ஓட்டுவது சிரமமாகவும் இருந்தது.

‘‘என்ன சார், எதுவும் பேச மாட்டேங்கறீங்க! ப்ரியாவும் கூடப்போனவங்களும் செத்துட்டாங்கனு சொன்னீங்களா? அப்பதான் அவங்க உயிரோட இருந்தா அதை நாம தெரிஞ்சுக்க முடியும்னு சொன்னேனே!’’

‘‘மேடம்... அவர் உங்கள நார் நாரா உரிச்சிட்டார். உங்க பிளானை அப்படியே சொன்னார். அவங்க உயிரோட இருக்கறதா நூறு சதவிகிதமில்ல... அதுக்கும் மேல நம்பறார். எல்லாத்துக்கும் மேல, இந்த விஷயத்துல சுயநலத்தோட ஈடுபடுற யாரும் உயிர் பிழைக்க முடியாதுன்னும் சொன்னார். என்னையும் வார்ன் பண்ணார்!’’

‘‘அப்ப அவங்க அந்தப் பலகணியை எடுத்துக்கிட்டு வருவாங்க! இல்லை... இல்லை... வரப் போறாங்க. ஆம் ஐ ரைட்?’’

‘‘அவர் அப்படித்தான் உறுதியா நம்பறார். நாங்க அதுல இறங்கல. எங்களைத்தான் அது இழுத்துடிச்சின்னும் சொல்றார்!’’

‘‘அவர் என்ன வேணா சொல்லிட்டுப் போகட்டும். அவங்க அந்த காலப் பலகணியோட வந்துட்டா அதை விடக்கூடாது. செங்கல்பட்டு டோல்கேட்லயே அவங்கள மடக்கிப் பிடிச்சுடணும். ஒரு போலீஸா உங்களுக்கு அது சுலபம்... வண்டிய செங்கல்பட்டுக்கு

விடுங்க!''

''இவ்வளவு நடந்திருக்கு... உங்களுக்கு பயமா இல்லையா மேடம்?''

''என்ன நடந்துச்சு? எனக்கு எதுவும் நடக்கலையே... நடந்திருந்தா அந்த சதுர்வேதி மேல விழுந்த பாறை என் மேலயும் விழுந்திருக்கணுமே?''

''அஃஃப்கோர்ஸ்! ஆனா, அந்த ஆர்க்கியாலஜிஸ்ட் பேச்சு என்னை ரொம்பவே யோசிக்க வைக்குது மேடம்...''

''யு ஃஃபூல்! சதுர்வேதி விபத்துல இறந்துட்டதா சொல்லி நான் ஈ.எம்.டியோட பிரசிடென்ட் ஆயிட்டா, டெல்லியே என் கைல. உங்களை எல்லாம் சர்வ சாதாரணமா டி.ஜி.பி லெவலுக்கு கொண்டு போயிடுவேன்!''-ஆவேசமாக விபா கூறிய அந்த நொடி, சாலையோர மின் கம்பம் ஒன்று மழைநீரின் அரிப்பில் சரிந்து, மெல்ல ஊர்ந்தபடி இருந்த காரின் மேல் விழ, கார் அப்படியே நொறுங்கியது. உள்ளேயும் மழைநீர் வேகமாக நுழைந்து உள்பாகம் நிரம்பத் தொடங்கியது. விபாவிடமும் சரி, அந்த போலீஸ் அதிகாரியிடமும் சரி, பேச்சு மூச்சு இல்லை!

மறுநாளுக்கும் மறுநாள்!

''அம்மா... பாப்பா வந்தாச்சு!'' என்கிற வாட்ச்மேன் தங்கவேலுவின் குரல் கேட்டு அசுரப் பாய்ச்சலோடு வாசலுக்கு வந்தாள் பத்மாசினி. அனந்தகிருஷ்ணனும் ஓடி வர, 'ப்ரியாவும், வர்ஷனும்' ஓட்டி வந்த கார் போர்ட்டிகோவில் தேங்கி நின்றது. கணபதி சுப்ரமணியனும் காலைக் கெந்தியபடி வந்து நின்றார்.

காரிலிருந்து இருவரும் இறங்கினர். பத்மாசினி ஓடிப் போய்

கட்டியணைத்து கண்ணீர் விட்டவளாக, மார்பு குலுங்க அழுதாள். அனந்தகிருஷ்ணன் தன் அப்பாவை சற்றுக் கழிவிரக்கமாகப் பார்த்தார்.

‘‘அம்மா! எங்களுக்கு எதுவும் ஆகலம்மா... விஆர் வெரி வெரி பிளஸ்டும்மா. அழாதே...’’ என்று பத்மாசினியின் கண்ணீரைத் துடைத்தாள் ப்ரியா.

‘‘அம்மா... ரெண்டு நாளா உங்களுக்காக வாசலையே பாத்துக்கிட்டிருக்கோம்மா... உங்க போனும் எடுக்கல. எங்க நிலையக் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க!’’ என்றான் தங்கவேலு. அனந்தகிருஷ்ணனும் வந்து அணைத்துக்கொண்டார். ப்ரியா அவர்களிடம் இருந்து விலகி நேராக கணபதி சுப்ரமணியனைத் தேடிச் சென்று தானாக அவரைக் கட்டிக்கொண்டாள்.

‘‘என் நம்பிக்கை வீண் போகலம்மா’’ என்றார் அவர் மெல்லிய குரலில்.

‘‘கொஞ்சம் வீண் போயிடுச்சுன்னுதான் தாத்தா சொல்லணும்’’ என்றவளை அதிர்ச்சியோடு பார்த்தார்.

‘‘என்னம்மா? வள்ளுவரைக் காணோம்! ஒருவேளை அவருக்கு ஏதாவது..?’’

‘‘தெரியலை தாத்தா! நாங்க தப்பிச்சதே பெரும்பாடு. இவ்வளவு மழைலயும் வர்ஷன் காருக்கு எந்தச் சேதமுமில்லை. அதே சமயம் வள்ளுவரையும் பாக்க முடியலை எங்களால...’’

‘‘அப்ப அதைத்தான் கொஞ்சம் வீண் போயிடுச்சுன்னு சொன்னியா?’’

‘‘இல்ல தாத்தா... அந்தக் காலப் பலகணியை எடுத்தும் புண்ணியமில்லை. சில ஏடுகள்தான் என் வசமாச்சு. மிச்சம் உங்க நண்பர் ஜோசப் சந்திரன் வசம் சிக்கி, அவரை வெள்ளம் இழுத்துக்கிட்டுப் போயிடிச்சு. அவரும் என்ன ஆனார்னு தெரியல!’’

‘‘ஓ... நீ ஜோசப் சந்திரனை பார்த்தியா? அவர் உன்னைத் தெரிஞ்சிக்கிட்டாரா?’’

‘‘நல்லாவே தெரிஞ்சிக்கிட்டார். ஆனா, ஓயாம பெய்யற மழைக்கு நடுவுல சாவகாசமா எல்லாம் பேச முடியல தாத்தா. நடந்ததெல்லாம் ஏதோ கனவு மாதிரி இருக்கு!’’

‘‘இது நிஜமான கனவும்மா... உள்ள வா! அந்த ஏடுகளை முதல்ல சாமி சன்னதில வை. ஒரு நல்ல காபி குடி. டிரஸ் சேஞ்ச் பண்ணு. மத்த விஷயங்கள உட்கார்ந்து பேசுவோம்!’’ என்ற கணபதி சுப்ரமணியனை அனந்தகிருஷ்ணன் அணைத்தபடி உள்ளே அழைத்துச் சென்றதே, அவர் தன் தந்தையை சரியாகப் புரிந்து கொண்டுவிட்டதை உணர்த்தியது.

ப்ரியாவும் உள்ளே நுழைந்தவளாக, தன் முதுகுப் பையைத் திறந்து, பலகணி ஏடுகளை பாலித்தீன் தாளோடு சேர்த்து எடுத்து, பத்மாசினியால் வழிபடப்படும் அம்பாள் விக்கிரகம் முன் வைத்தாள். பிறகு உடை மாற்றிக்கொண்டு வரச் சென்றாள். வர்ஷனுக்கு அனந்தகிருஷ்ணன் தன் பெர்முடாஸ் ட்ரவுசர் ஒன்றையும் டி-ஷர்ட்டையும் தந்து, போட்டு வரச் செய்தார். ப்ரியாவும் வந்தாள். காபியும் வந்தது. குடித்தனர். அநாவசியப் பேச்சே இல்லை. ‘ஒரு சக்தி வழிநடத்திக் கொண்டிருக்கிறது’ என்கிற உணர்வும் அதன் லயமும் அவர்களை எல்லாம் பெரிய அளவில் மாற்றிவிட்டிருந்தது.

கணபதி சுப்ரமணியனும் ஹாலில் வந்து அமர்ந்தார். பளிச்சென்று வீடு முழுக்க விளக்குகள் எரிந்து மின் விசிறியும் சுழன்றது.

‘‘மூணு நாள் கழிச்சு இப்பதாம்மா கரன்ட் வந்துருக்கு... இதுகூட ஒரு நல்ல சகுனம்தான்!’’ என்றார் அனந்தகிருஷ்ணன். டி.வியும் உயிர் பெற்று சென்னை வெள்ளக் காட்சிகளைக் காட்டிற்று. அதில் ‘போலீஸ் அதிகாரி மரணம்’ என்று தங்கள் வீட்டுக்கு வந்துசென்ற அதிகாரியின் புகைப்படத்தைக் காட்டவும், விக்கித்தாள் பத்மாசினி. அடுத்து விபாவின் படமும் காட்டப்பட்டது. அனந்தகிருஷ்ணன் தன் தந்தையை முதல் தடவையாக மிக மதிப்பாகப் பார்த்தார்.

‘‘ஒழிய வேண்டிய எல்லாரும் ஒழிஞ்சிட்டாங்க. ரகசியம் ரகசியமாவே இருக்கு. இப்போதைக்கு இங்க இருக்கற நமக்கு மட்டும்தான் இது தெரியும். வள்ளுவர் இல்லாததுதான் பெரிய வருத்தம்!’’ என கணபதி சுப்ரமணியன் சொல்லும்போதே ‘‘அய்யா’’ என்றபடி வள்ளுவரும் உள்ளே நுழைந்தார். அனைவரும் அப்படியே உறைந்தனர்.

‘‘வாங்க! இப்பதான் சொல்லி வாய் மூடினேன். வந்துட்டீங்க... ரொம்ப சந்தோஷம்!’’ என்றார் கணபதி சுப்ரமணியன்.

‘‘அய்யா! உங்கள நாங்க அங்க தேடாத இடமில்லை...’’ என்றாள் ப்ரியா.

‘‘வெள்ளத்துல நான் ஒதுங்கின இடம் அப்படிம்மா. அப்புறமா சிலரால காப்பாற்றப்பட்டு, எப்படியோ சென்னை வந்து சேர்ந்தேன். நீங்க எப்ப வந்தீங்க?’’

‘‘இப்பதான்யா... ஒரு அரை மணி நேரம் கூட ஆகலை!’’

‘‘என் வாழ்க்கையில இப்படி ஒரு மழைய பாத்ததே இல்லம்மா... இதுல நாம திரும்ப ஒண்ணா சேர்ந்ததுதான் ஆச்சரியம். எனக்கு ஏதாவது ஆகியிருந்தா கூட பரவால்ல. சின்ன வயசுல உங்களுக்கு எதுவும் ஆகிடக் கூடாதுனு நான் ரொம்பவே வருத்தப்பட்டேன். மனசுக்குள்ள பிரார்த்தனையும் செய்துகிட்டேன். அது வீண் போகல’’ என்று பெருமூச்சு விட, ப்ரியா ஓடிப் போய் அந்தப் பலகணி ஏடுகளை எடுத்து வந்தாள்.

‘‘என்னம்மா இது?’’

‘‘காலப் பலகணி ஏடுய்யா...’’ என்று மலையில் அது தன் வசப்பட்ட விதத்தை அப்படியே கூறினாள். அதைக் கேட்டவர், முதல் தடவையாக பெரிதும் உணர்ச்சிமயமானார். பிறகு கைகளைக் கூப்பி நெஞ்சுருக பிரார்த்தனை செய்துகொண்டார்.

‘‘அய்யா! இதுல என்ன எழுதியிருக்குனு படிக்கட்டுமா?’’ என்று லென்சும் கையுமாகத் தயாரானாள் ப்ரியா.

‘‘அதை இப்படிக் கொடும்மா! நீ வாசிக்காதே, வாசிக்கறதுதான் எங்க தொழில். நீ நீண்ட நாள் வாழ வேண்டியவ!’’ என்று அவளிடமிருந்து பெற்று அந்த ஏடுகளைப் பார்த்தார். ஆயிரத்து எட்டு ஏடுகளின் கடைசி நான்கு ஏடுகள் அவை. மேலே தமிழ் எழுத்தால் ஆன எண் வரிசைக் குறிப்பு 1005, 1006, 1007, 1008 என்று காட்டிற்று.

‘‘துல்லியமா உன் கைல கடைசி நாலு ஏடு மட்டும் சிக்கி இருக்கும்மா. இதுல ஒரு ஏட்டுக்கு நாலு வரினு மொத்தம் 16 வரிகள் இருக்கு. படிக்கறேன் கேளுங்க!’’ என்று படிக்கத் தொடங்கினார்.

"கூற்றிடும் ஏடு இதும் ஏந்திழை கைமாறும்
கைமாறும் அந்தக்கால கிரியழிந்து நாரவழி
நந்திமகன் விந்தியம் சென்றிட
உந்தியே அவன் காப்பான் மீதமதை..
நாவலத்து அவலம் நீங்க,சீந்தல் கொடியோடு
ஆவகத்து ஐந்தும் சேர்த்து ஜோதிலிங்க பூமியிலே
நோயகற்றும் மிருத்யுஞ்சய வேள்வி செய்ய
காயம் பற்றும் கிருமியதும் உயிரணையும்
ஈதிதனை இருபாறொரு நாளில் வள்ளுவனும் செய்தக்கால்
பாரத்தின் பாதைக்கோர் பங்கமில்லை.
வாழ்விதில் பூதங்கள் ஐந்து, அறிவது ஆறு
சொல்லாகிய பேச்சும் ஏழு... ஈதாலே உருவது எட்டு.
எட்டுவதும் அறிவாயின் பிறப்பு நீளும்,ஞானமெனில் வானம்
ஐந்தும் மூன்றும் கூட்டினால் எட்டு, கூடினால் ஒன்பது
கூட்டுதல் புணவர்வாம்-கூடுதல் வளர்வாம்!
கூடுதலில் அரவாணம் உறுவதே முக்தி.
பக்தியும், பகுத்தறி சக்தியும் அதற்கான யுக்தி.
-தசகண்ட கணிதன்

வள்ளுவர் நிதானமாகப் படித்து முடித்தார். அனைவரும் மௌனமாகக் கேட்டபடி இருக்க, வள்ளுவர் விளக்கமாகச் சொல்ல ஆரம்பித்தார்...

"கூற்றிடும் ஏடு இதும் ஏந்திழை கைமாறும், கைமாறும் அந்தக்கால் கிரியழிந்து நாரவழி, நந்திமகன் விந்தியம் சென்றிங்கற முதல் மூணு வரிக்கு பொருள் சொல்றேன். ஏந்திழைங்கறது இங்க ப்ரியா. இந்த ஏடு ப்ரியா கைக்கு வரவும். கிரியான மலை அழிஞ்சு, தண்ணி வழியா நந்தியான ஜோசப் சந்திரன் விந்திய மலைக்குப் போயிடுவார்னு பொருள். அதுதான் நடந்திருக்கு! 'உந்தியே அவன் காப்பான் மீதமதை'ன்னா அந்த மீதி ஏடுகளை இனி அவர் காப்பாத்திடுவார்னு பொருள். அவரப் பத்தி கவலைப்பட வேண்டாம் இனி...

அடுத்து, 'நாவலத்து அவலம்'னா நம்ம நாட்டோட அவலம்- அதாவது நோய். நாவலூர்ல நாம பார்த்தோமே அந்த நோய்! அது பரவினா மனித சமூகமே அழிஞ்சிடும். அழியக் கூடாதுன்னா சீந்தல் கொடிங்கற மூலிகைத் தாவரத்தைக் கொண்டு ஆவகத்து ஐந்தும்ங்கற பசுவோட பஞ்சகவ்யம் சேர்த்து மிருத்யுஞ்சய வேள்வி செய்யணும். அப்ப எழற புகையால வான் வழியா பரவிக்கிட்டிருக்கற கிருமி அழியும். இதை 12 ஜோதிர்லிங்க தளங்கள்ல செய்யணும். யார் செய்யணும்னும் சொல்லியிருக்கு. கூடவே 21 நாள்ல நான் செய்யணும்னும் சொல்லியிருக்கு. அப்படி செய்தக்கால் பாரதத்தின் பாதைக்கோர் பங்கமில்லை.

சொல்லப்போனா இதுக்காகத்தான் நான் சாகாம உயிரோடயே இருக்கேன். தமிழ்நாட்டுல ஜோதிர்லிங்க தலம் ராமேஸ்வரம். அங்க போய் இதை நான் முதல்ல செய்துட்டு மற்ற 11 தலங்கள் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மத்தியப் பிரதேசம்னு வடபகுதியில இருக்கு, அங்க எல்லாமும் போய் செய்யணும். அந்த வேள்விப் புகைதான் மருந்து.

அடுத்து பொதுவான கருத்து, எல்லோருக்குமான கருத்து சொல்லப்பட்டிருக்கு. நம்ம உடம்புல பூதங்கள் அஞ்சு இருக்கு. ஆறாவது அறிவு; ஏழுதான் பேச்சு, இந்த ஏழைக்கொண்டு நாம் எட்டுவது செயல்பாடு. அதாவது அஞ்சு பூதம், அறிவு, எண்ணம், செயல்ங்கற மூணும் கூட்டினா எட்டு: கூடினா ஒன்பது. ஒன்பதுங்கறது இங்க கடவுளைக் குறிக்கும். நம் அறிவும் எண்ணமுமான செயல்பாடு ஒன்பதாகிய இறைவனை அடைவதாக இருக்கணும். அதைத்தான் 'கூடுதலில் அரவாணம் உறுவதே முக்தி'ங்கற வரி சொல்லுது.

அரவாணம்ங்கறது ஆணும் பெண்ணுமற்ற நிலை, அரவாணிகள் நிலை. கடவுள் நிலையும் அதுதானே? பக்தியும், பகுத்தறி சக்தியும் அதற்கான யுக்தி... அதாவது இதை பக்தியாலயும் புரிஞ்சுக்கலாம்.

கடவுள் மறுப்பான பகுத்தறிவு சக்தியாலயும் புரிஞ்சுக்கலாம். இந்த இரண்டும்தான் யுக்தி. அதாவது வழி, நான் சொன்னது புரிஞ்சிச்சா?

வள்ளவர் சொல்லி முடிக்க, அனைவரிடமும் ஆழ்ந்த மௌனம். பின் மௌனத்தை உடைத்துக் கொண்டு ப்ரியா பேசலானாள்.

"அய்யா.. இதுக்காகத்தான் நீங்க எங்க தாத்தாவைப் பாக்க வந்தீங்களா? நான் உங்களோட சேர்ந்தேனா?"

"ஆமாம்மா..எது எப்ப நடக்கணுமோ அப்ப நடக்கும்ங்கறதும் இதுதாம்மா!"

"என்ன ஒரு கணக்கு...இதை எப்படிக் கணிச்சாங்க?"

"அதுக்குப் பேர்தான் தவம்!"

"நாலு ஏடே இவ்வளவு சொன்னா, மற்றதுல எவ்வளவு இருக்கும்?"

"உலகத்துக்கே அதுல விடை இருக்கும்மா. அதனாலதான் அது ஆசையில்லாத மனிதர்களால பாதுகாக்கப்பட்டும் இருக்கு. எப்ப பயன்படணுமோ அப்ப பயன் படுது. தன்னை பயன் படுத்த நினைக்கறங்கள அது அவங்க போக்குல போய் அழிக்கவும் செய்யுது. 'அழிக்கறது'ங்கற வார்த்தை கூட தப்பு.. 'மாற்றுது'ங்கறதுதான் சரி.." வள்ளுவர் சொல்லி முடிக்க, ஏட்டிலுள்ள எழுத்துக்கள் தானாக அழியத் தொடங்கின!

வள்ளுவரும் ஒரு கும்பிடு போட்டவராக 'புறப்படறேன்' என்றார். மௌனமாக கணபதி சுப்ரமணியன் விடை கொடுத்தார். வர்ஷன் வேறு ஒரு உலகில் இருந்தான். புறப்பட்டுவிட்ட

வள்ளுவரிடம், "அய்யா! நிறைய கேள்விகள் இருக்குய்யா.." என்றான்.

"எல்லாத்துக்கும் பதிலும் இருக்கு. 21 நாட்கள் கழிச்சு எனக்கு விதியிருந்தா வந்து சொல்றேன் தம்பி.." என்று அவரும் புறப்பட்டார். அனந்த கிருஷ்ணனும் பத்மாசினியும் "நமக்கு மேல ஒரு சக்தி இருக்குங்குறது இதுதாங்க" என்று கூறி சிலிர்த்தனர்.

"இல்ல! எல்லாமே கணக்கு.. சரியா போடத் தெரியணும். போடத் தெரிஞ்சா ஈவு விழாம விடையும் சரியா வரும். போடத் தெரியணும். அதுலதான் எல்லாம் இருக்கு!" என்றார் கணபதி சுப்ரமணியன்.

ஆமோதித்தது சுவர்க்கடிகாரம். அதனிடம் ஒன்பது பெண்டுல சப்தங்கள்!

முற்றும்

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in